உ

கணபதிதுணை.

வித்யாபாநு.

கோநகர்க்
கற்பகவிநாயக கலாசாலையினின்றும் வெளிவரும்
ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக" திருக்குறள்.

Vol. IX. 1917-ஷு. தொகுதி ௯.

நள ஷு தைமீ முதல்
பிங்கள ஷு மார்கழிமீ வரை.

பத்திராதிபர்கள்:
மோ. வெ. கோவிந்தராஜையங்கார்,
அரு. ராம. சுப்பிரமணியன்செட்டியார்.

கோநகர்.
...னை வைசியன் அச்சியந்திரசாலை.
1918.

உ

பொருளடக்கம்.

உ

கணபதி துணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."—திருக்குறள்.

தொகுதி.	நள-வரு தை-மீ	பகுதி.
9	1917 பிப்ரவரி.	1

கடவுள் வணக்கம்.

"முருகார் மலர்த்தாம முடியோனை யடியார் முயற்சித்திறம்
திருகாமல் விளைவிக்கு மதயானை வதனச் செழுங்குன்றினைப்
புருகூதன் முதலாய முப்பத்து முக்கோடி புத்தேளிரும்
ஒருகோடி பூதேவ ருங்கை தொழுங்கோவை யுறவுன்னுவாம்."

(மகாபாரதம்)

"நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை
சுடரா யெல்லாம்
வைத்திருந்த தாரகமா யானந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச்
சிந்தை செய்வாம்."

(தாயுமானவர்.)

நமது பத்திரிகை.

இப்பேருலகில் வழங்கிவரும்பாஷைகள் எண்ணிறந்தனவாகும். அவற்றுள் இலக்கணம் அமையப்பெருதனவும், அமைந்தும் முற்றுப் பெருதனவுமான பாஷைகள் பல நீங்க, இலக்கணவரம்பு பெற்ற பாஷைகள் சிலவேயாம். அச்சிலவற்றுள்ளும் ஆரியமும் தமிழுமே மேம்பட்டுள்ளனவெனக் கற்றுணர்ந்த பெரியோர்களாற் கருதப் பெறுகின்றன. வடநாடுகளில் ஆரியம் அலங்காரங்களுடன் உலவிவருதல் போலத் தென்னுடுகளிலும் தமிழ் பற்பல அணிகள் பெற்றுலவி வருகின்றது.

ஆரியம் போலவே தமிழும் பல கற்ற பண்டிதர்களாலும் பலமுற்ற மன்னர்களாலும் ஆதரிக்கப்பெற்று, லௌகிக வைதிகவுண்மைகளைத் தெள்ளிதின் உணர்த்தக்கூடிய அரிய பெரியநூல்கள் பல இயற்றப்பெற்று விரிந்து கிடக்கின்றது. அந்நூல்கள் பலவாயிருப்பினும், பெரும்பாலும் செய்யுள்களாலியற்றப் பெற்றுள்ளமையின், யாவரும் அநுபவிக்கக் கிட்டாத அரும் பொருளனவாயிருக்கின்றன. இக்குறையை நீக்கவென்றே பல அறிவாளிகள் முன்வந்து வசனநூல்களை எழுதியுதவுகின்றனர். இப்படியுதவக் கருதிய பெரியோர்கள் பலர் இருப்பினும், அவர்கள் யாவரும் தமது அநுபவங்களையும் ஆராய்ச்சிகளையும் அபிப்பிராயங்களையும் ஒவ்வொரு நூலின் வழியாகவே வெளிப் படுத்தித் தந்துதவ வேண்டும்; அது, பொருளினருமையால் இயலாத காரியமாகிறது. ஆகலின், இது போன்ற பத்திரிகைகள் அநேகம் வேண்டப் பெறுகின்றன.

உலகினுள்ளே ஆருபிரத்துக்கு அதிகமாகவே பத்திரிகைகள் உலவி வருவனவாயினும், நந்தமிழ் நாட்டில், தோன்றியழிந்தன

பலபோகச் சிலவே நிலவி வருகின்றன. அவற்றுள்ளும் அமிழ்தினு மினிய நந்தமிழ் மொழியில் வெளிவருவன மிகச்சிலவேயாம். உற்ற பாஷையாகிய தாய்ப்பாஷையினால், ஒரு நாட்டில் கருத்துக்கள் வெளியேற்றப் படாமல், மற்றைப்பாஷைகளால் வெளியேற்றப் படின், அந்நாடு நாகரிகத்தில் செழித்துயர்வதற்கு மார்க்கமிராது. ஆகையினால் தமிழில் வசன ரூபமாக வெளிவரும் பத்திரிகைகளே தமிழ்மக்கள் யாவருக்கும் எளிதிற் பயனளித்து, நம் நாடு நாகரிகத்திலுயர்ந்து ஒற்றுமையைப் பெறுவதற்குத் தக்க ஊன்றுகோல்களாகும்.

அந்தவிதமான பத்திரிகைகளுள் நம் பாநு, தோன்றிய பல வாண்டுகளாக அநேகவிதமான ஆராய்ச்சிகளாலும் பெரியோரது அநுபவங்களாலும் நந்தமிழ்நாட்டு மக்கட்குப் பேருதவி புரிந்திருக்கிறது. இது தமிழ் மக்கள் யாவரும் உணர்ந்ததே. எனினும், இடையே இரண்டு வருஷகாலம் வாரம் இருமுறையில் வெளி வந்துலவிய நம் பாநு, இனி முன்போலவே மாதம் ஒருமுறையாக வெளிவெளிப் பல மேதாவிகளினுடைய அருமைத்திருவாக்கினின்று எழும் அரிய உபந்நியாஸங்களையும் ஆராய்ச்சிகளையும் அநுபவங்களையுமே மிகவும் ஸாரதமமாகத் திரட்டிக் கொடுத்து நேயர்களது மனதைப் பூரித்துக் களிக்கச்செய்ய, இந்தத் தைமாதம் முதல் தொடங்கியிருக்கிறது.

நந்தமிழ்நாட்டில் தற்காலம் தமிழ்ப்பாஷையை வளர்ப்பதற்கென்றே கங்கணம் கட்டிக் கொண்டு முன்னேறியிருக்கிற நாட்டுக் கோட்டை நகர வைசியசிகாமணிகள், ஆங்காங்கு ஏற்படுத்தியிருக்கும் கலாசாலைகளிலும் சபைகளிலும் நிகழ்ந்துவரும் அரிய பெரிய உபந்நியாஸங்களையும் அவ்வப்போது விவரமாக வெளிப் படுத்துவதற்கு இந்த மாதாந்தப் பத்திரிகையே ஒரு தக்க கருவியாக விருக்கிறது.

இந்நாட்டின் தமிழ்வளர்ச்சிக்குக் காரணஸ்தரான மகிபாலன்பட்டி வித்வான். மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் ஒருமுறை தங்கள் அபிப்பிராயத்தை எமயிடத்தில் சொல்லியுள்ளபடி, இந்தப்

பத்திரிகையால் (பிறமததூஷணையின்றி) ஹிந்து மதங்களின் உயர்வும் தமிழ் பாஷையின் வளர்ச்சியும் நம்மவர்களின் கூட்டுறவும் நாளடைவில் பெருக்கமடைந்து வரும் என்பதற்கு அநுகுணமாகவே, இந்தப் பத்திரிகையும் இதற்குத் துணையான தனவைசியன் அச்சியந்திரசாலையும் மஹாதேவ முருகப்ப செட்டியார் அவர்களால் தங்களது அன்பு ததும்பிய உள்ளத்துடன், இந்நகர்க் கலாசாலைக்குப் பாத்தியமாக ஏற்றுக் கொள்ளப் பெற்றுச் செவ்வனே நடை பெறத்தொடங்கியிருக்கின்றன.

அருட்பெருஞ்சோதி அவர்களது உள்ளத்திலேயே எக்காலும் குடிகொண்டெழுந்தருளியிருந்து, எண்ணங்களைத் தவறாது நிறைவேற்றுவிப்பதை நாம் அடிக்கடி அநுபவமுறையில் கண்டிருக்கின்றோமாகலின், அச்சோதியின் திருவருளால் இந்நன்முயற்சியும்வளர்ந்து பரந்து மலர்ந்து யாவருக்கும் பலனளிக்கும் என்பது திண்ணம்.

சுபமஸ்து.

வித்தை விரும்பு.

இது நந்தமிழ் மூதாட்டியார் அருமைத் திருவாக்கினின்றும் எழுந்தது.

நாம் அடையவேண்டிய நான்காவது பயனாகிய வீடு பேற்றினுக்கு அத்யந்த ஸாதகமாகவுள்ளது ஞானமேயாகும். ஒருவனுக்கு ஞானத்தின் உயர்வே அறத்தின் வழியை உறுதிப்படுத்தும். கல்வியிற் பெரியாரும் "அறிவின் மேலதன்றோ அறத்தாறுதான்" என்று கூறியருளினர். எனவே, ஆத்மா உயரும் சார்புபெற அறத்தின் மேம்பாடும், அது மேம்பட அறிவின் பெருக்கமும் வேண்டற்பாலனவாம்.

ஒருவரது மனம் நல்லதொன்றைப் பற்றிப்பேறுவிடின் அறிவு வளராது. ஆகலின் அறத்தினை எய்துதல் அருமையாகிவிடும். இது பற்றியே நமது மூதாட்டியார் வித்தை விரும்பு என்று, மனத்தினிடத்தில் விருப்பத்தை யுண்டுபண்ண வேண்டுமென்றார்கள். மனது விரும்பவே ஞானம் தோன்றும். வித்யாபாநு உதயமாகவே அவித்யாந்தகாரம் ஒழிந்துபடுமன்றோ?

வித்தையும், பரவித்தை அபரவித்தை என்னும் இரு பிரிவாகி லௌகிக வைதிக ஞானங்களை வற்புறுத்துகின்றது. அவற்றுள் லௌகிகஞானம் உடலுக்குறுதியையும் வைதிகஞானம் உயிருக்குறுதியையும் பயப்பனவாம். படிப்படியாக உயர்ந்து ஏறவேண்டிய ஒரு ஆத்மாவுக்கு இவ்விரண்டு அறிவும் வேண்டற்பாலன. ஏனெனில், உடலுக்குறுதியான நூல்களிற் பயின்று அவற்றுக்குத்தக நடந்துவராவிடின், உடல் ஒரு வழிப்படாமல், பகுத்தறிவில்லாத பறவை விலங்குகள் போலப் பேண்டிராற் சுகங்களுய்ப்பான் பெரியதோ ரிடும்பைபூண்டு, உண்டிராக் கிடக்கும்போதே உடலுக்கே கரைந்து நைந்து என்று பெரியார் கருதியபடி, உடலுக்கேயெக்காலமும் உழைக்கவேண்டிவரும். அப்போதுதான் காமாதிகள் வலியுறும். அங்ஙனன்றி, லௌகிக நூல்களிற் பயின்று அவற்றின்படி நின்று, விலக்கியன ஒழித்து விதித்தன செய்து வருவானாயின், உடலைத் தக்கபடியாகத் தான் கருதியுள்ள தருமத்தில் ஏவுந்திறமையைப் பெற்றவனாவான். சரீரமே தருமத்தைச் சாதிப்பதற்குத் தக்கதொரு கருவியன்றோ? இப்படி ஒருவன் தன் உடலுக்குத் தான் வசமாகிவிடாமல், உடலைத் தனது வசமாக என்று எப்போது செய்துகொள்கிறானோ, அன்றே அப்போதே வீடென்று பெரியாரும் பணித்துள்ளார்கள். அப்படியல்லாது, வைதிக நூல்களில் எத்தனை விதங்கள் தாம் கற்கினும் கேட்கினும் மனம் ஒடுங்காது. அஃது ஒடுங்காததாக யானெனும் அகந்தைதான் எள்ளளவும் மாறாது. அப்போது வைதிகஞானம் நிலைபெறாமல் விழலுக்கிறைத்த நீராகிவிடும். இதனாலேதான் ஔவையார் வித்தை விரும்பு என்றுப் பொதுப்படக் கூறினார்கள் போலும்.

உலகில் அறிவுடைய பலரால் இயற்றப்பெற்று நிலவுகின்ற நூல்களுள் பல அறத்தினை ஆக்குவனவாகவும் பல பொருளினைப் பொருத்துவனவாகவும் பல இன்பத்தினை இசைப்பனவாகவும் விளங்குகின்றன. இவை ஒவ்வொன்றும் மற்றொன்றினைப் பற்றுக்கோடாகப் பற்றியே யமைந்துள்ளனவாம். பொருளில்வழி அறமும் இன்பமும் நன்கு எய்தப் பெறாமையும், பொருளிருந்தும் அறமில்வழி இன்பம் நுகரப் பெறாமையும், அறத்தினுக்கும் பொருளினுக்கும் இன்பமே விச்ராந்தி ஸ்தானமாகவிருத்தலால், இன்பம் பெறாதவழி அவ்விரண்டும் பயன்பெறாமையும் அநுபவத்தில் காணப்படுகின்றன.

வைதிகவுணர்ச்சியால், தன்னையும் தலைவனையும் உணரப்பெற்ற ஒருவனே, ஏனைய லௌகிக வுணர்ச்சியில் உறுதிபெற்றுத் தான் கற்ற பலவிதமான கேள்விகளும் பயன்பெறுமாறு கருதித் தனக்கும் பிறர்க்கும் நன்றி செய்யத் துணிகிறான். ஏனெனில், தலைவனை அறிந்த அவன் அத்தலைவன் எங்கும் வியாபித்துள்ள தன்மையைத் தவமுதிர்ச்சியால் அறிந்து, ஏனைய ஜீவர்களும் அத்தலைவனது ஸம்பந்தம் பெற்றவர்களே யெனத் தெளிந்து, அவர்களிடம் அன்பு செலுத்துகிறான். அது தருமத்தை மலர்த்தி அவன் அனுபவிக்க வேண்டிய அந்தமில் பேரின்பப் போகக்கனியை அளிக்கின்றது. இந்தப் பழக்கம் பெண்பாலர்க்கும் ஒத்ததேயாகும். பெண்கள் ஒழுங்காகக் குடும்பத்தினை நடத்தவேண்டியபடி கல்வி கேள்விகளிற் பழகியிராவிடின், புருஷனுக்கு அன்பு ஜனித்தல் அருமையாகும். அன்பு அரும்பாவிடின் அருள் முதிராது. அது முதிராதாயின் தருமம் மலரத் தடைபடும். படவே போகக்கனி பழுத்தல் அரிதேயாகும்.

எனவே, ஆண் பெண் இருபாலார்க்கும் ஒழுக்கத்தின் உயர்வைத் தரும் கல்வி கேள்விகளே வேண்டப்பெறுவன என்பது பெற்றோம். அத்தகைய விவரங்களைத் தரும் பத்திரிகைகளே உலகுக்குறுதி பயப்பனவாகும். ஆகலின், மேற்குறித்த விசேஷங்களுடன் கூடிய பல மேதாவிகளது அறிவுடன் நமது வித்யாபாநு மாதந்தோறும் உதயமாகி யுலகில் நிறைந்துள்ள அஞ்ஞானவிருளைச் சிதைக்குமாறு திருவருளைச் சிந்திக்கின்றோம்.

நமது மாணவரின் தற்காலக் கல்விமுறையைப் பற்றி ஸ்வாமி விவேகாநந்தரின் அபிப்பிராயம்.

"நாம் நமது பாலியவயது முதல் நம்பிக்கைக்கு மாறுபாடான கல்வியையே பெற்று வருகிறோம். நமது படிப்பின் முறையால் நாம் நாமல்லவென்பதைக் கற்றுவருகிறோம். மஹான்கள் நமது நாட்டில் அவதரித்து அரிய பெரிய காரியங்களை ஸாதித்திருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள நமக்கு அவகாசமே ஏற்படுகிறதில்லை. நமக்கு ஆகவேண்டிய வழிகளில் நாம் கற்பிக்கப் படுகிறதேயில்லை. நமது கைகளையும் கால்களையும் நாம் எப்படி உபயோகித்துக்கொள்ளவேண்டுமென்று நாம் அறிகிறோமில்லை; ஆங்கிலேயர்களினுடைய மூதாதைகளைப்பற்றிய எல்லா விவரங்களையும் அறிந்துகொள்ளுகிறோமேயன்றி நம்மவரைப் பற்றி நாம் அறிந்து கொள்ளக் கவனம் செலுத்துகிறோமில்லை."

"நமது சர்வகலாசாலைச் சங்கம் நம்மவரைக் கேவல குமாஸ்தாக்களாக மாற்றுவதற்குத் தகுந்ததொரு இயந்திரமாகவிருக்கிறதேயன்றி வேறன்று. நம்மவர்களில் எத்தனை பெயர் நமது வேதத்தினிடத்தும் வேதஸாரமான கீதையினிடத்தும் சிரத்தை வைத்திருக்கிறார்களென்று எண்ணிப் பாருங்கள்! எண்ணிப் பார்த்தால் துக்கிக்கவேண்டியே வரும். வேதத்தை ஒரு புராதனமான பாடல் என்றும், கீதையை மத்தியில் செய்யப்பட்டதொரு இடையீடு என்றுமே அறிவர். இந்தியாவுக்கு வெளியிலுள்ள தேசங்களைப் பற்றிய விஷயங்களை மாத்திரம் நெட்டுருவேற்றியேனும் அறிந்து கொள்ள முயல்கிறார்களேயன்றி, தமது மூதாதைகளின் ஒரேமுதலை முறைவரையிலுமாவது அறிந்துகொள்ள முயல்கிறார்களில்லையே! எங்ஙனம் ஈரேழுதலைமுறையை அறிவர்!!"

"நாம் விரும்பிக்கற்கவேண்டுவன யாவையெனின், ஐரோப்பிய சாஸ்திரமுறையை நமது வேதாந்தக்கொள்கையுடன் பொருத்தி, பிரமசர்யத்தை நமக்கு உற்றவிரதமாகக்கொண்டு நமது பூர்வீக ஆசாரத்தில் உள்ளசிரத்தையைக் கைவிடாமல் கற்றுவரவேண்டுவதே. இதே ஒருவனை மனிதனாக்கும். கழுதையும், குதிரை

யும் கட்டிப்புரண்டதால் வரும் தீமையை விளக்கும் கதை முதலியவைகளாற் கல்விகற்பிக்கத் தொடங்குவதை விடுத்து, நமது பூர்விகரது தருமங்களையும் அவர்கள் கற்பித்துள்ள நீதிகளையும் அவர்களது உத்தம சரிதங்களையும் சிறிது சிறிதாகக்கொடுக்கும் பாடங்களையே கற்பிக்கத்தொடங்கவேண்டும்."

"உபாத்தியாயர்கள், மாணவனுக்குக் கற்பிப்பதாலேயே, அவனைக்கெடுத்துவிடுகிறார். ஒவ்வொரு சிறுவனிடத்திலும் பெரியவரிடத்திலும் அறிவு இருக்கின்றது என்றும், அது தன்னைத்தூண்டுவதற்கோர் துணையையே விரும்புகின்றதென்றும் வேதாந்தம் முறையிடுகிறது. அதனைத்தூண்டிவிடவேண்டியதே உபாத்தியாயருடைய பொறுப்பாகும். ஆனால் அதைத்தூண்டும்போது, தாம் பொறுமையாக இருந்து தமது காரியத்தைச் சிறுகச்சிறுகச் செய்துவரல்வேண்டும். அப்படிச்செய்துவரின் மாணவர் தமது அறிவைத் தக்க வழிகளில் பிரயோகித்துவளர்த்துக்கொள்வர். அப்போது அவரது கைகால் முதலிய அவயவங்கள் தக்கவழியிற்செல்லும். அன்றே இந்துமதப்பயிர் வேரூன்றுகிறது. உயர்தரப்படிப்பைப் பற்றி அதிகமாகக்கவனிக்க இயலாவிடினும் யாதேனும் தொழிற் கல்வி அவசியம் கற்பிக்கப்படவேண்டும். அதனால் அவர் தொழுதுண்டுவாழும் தொழிலைத்தேடிப்புகாமல் தமது கால்களில் தாமே நிற்கமுயல்வர்."

"மாணவர் எப்போதும் நல்லொழுக்கமுடையவோர் நல்லறிவாளரது மேற்பார்வையிலேயே இருந்துவரல்வேண்டும். அப்போதுதான் பரோபகாரமும் தன்மறுப்பும் நல்லொழுக்கமும் பழகிவரும். எதுவரையில் த்யாகிகளாகிய யோகிகள் நம்மவர்க்கு ஆசிரியராக இருந்து வந்தார்களோ, அதுவரையில்தான் இந்தியாசெழித்திருந்தது. அவர்கள் மறைந்துவிட அல்லது குறைந்துவிடவே இந்து தருமமும் மறைந்து ஒழுக்கமும் குறைந்துவிட்டன. ஆகையால் த்யாகிகளாகிய யோகிகள் நமது நாட்டில் நல்லொழுக்கத்துடன் பெருகிவரல்வேண்டும். அப்படி அவர்களது பெருக்கத்தை நாம் விரும்புவோமாயின், நமது மாணவர்க்கு, நாம் மேலே சொல்லிவந்தபடியான முறையிலேயே கல்விகற்பிக்கத் தொடங்கவேண்டும்."

* ஒழுக்கமும் கல்வியும்.

கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த பெரியோர்களே!

இந்தமகா ஸபையிலே, முன்காலத்தில் ஒழுக்கம் கல்வியென்னும் இரண்டினாலும் ஒப்புயர்வற்று விளங்கிய பீஷ்மரின் ஞாபகார்த்தமாக இப்பொழுது கொண்டாடப்படுகிற புண்ணியதினமாகிய இந்த ரதஸப்தமியிலே, அவ்விரண்டினாலும் மேம்பட்டு விளங்குகின்ற கனம் அக்கிராஸனாதிபதியவர்களின் முன்னிலையிலே, 'ஒழுக்கமுங்கல்வியும்' என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசும்படியான பாக்கியம் எனக்குக் கிடைத்ததற்காக மகிழ்ந்து, இப்பாக்கியத்தை யெனக்குத் தந்த இச்சபையார்க்கு நன்றி செலுத்தி, நான் எடுத்துக்கொண்டவிஷயத்தை என் அறிவுக்கெட்டிய அளவிற் சுருக்கமாகப் பேசி முடிக்கின்றேன். பிழை பொறுத்தருளுதல் பெரியோர் கடன்.

ஒழுக்கமுங்கல்வியும்:—ஒழுக்கமாவது—நூல்களிலே தர்மம் வருணத்திற்கும் நிலைக்கும் தகப்பட்டவாறு ஒழுகுதல். கல்வியாவது—தாம் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். இவ்விரண்டையும் மனிதர்களுக்கு இரண்டு கண்ணென்னலாம். மனிதர் ஆயுளுள்ளளவும் இவ்விரண்டையுமே கைக்கொண்டு நிற்கவேண்டும். இக்கருத்தைப் பற்றித் திருவள்ளுவநாயனாரும் ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் "ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம், உயிரினும் ஓம்பப் படும்." எனவும், கல்வி என்னும் அதிகாரத்தில்

* இது தேவகோட்டை வைசிய சிவானந்த ஸபையின் நான்காம் வருஷக் கூட்டத்தில், டிப்டிகலெக்டர் ராய்பகதூர் T. N. சிவஞானம்பிள்ளையவர்களின் அக்கிராசனத்தில் (29-1-17ல்) கோனாபட்டுக் கற்பக விநாயக வித்யாசாலைத் தலைமையாசிரியர் பண்டித. அ. கோபாலையரவர்கள் செய்த பிரசங்கத்தின் ஸாராம்சம்.

"பாதாணும் கடாமால் ஊராமல் என்ஞெருவன், சாந்தனையும் கல்லாதவாறு." எனவுங் கூறினர். இவ்விரண்டும் உயிர்க்கு உற்ற துணையாய் நின்று, இம்மைக்குரிய புகழ் புண்ணியங்களைத் தந்து, மறுமையினும் உயிரோடு தொடர்கின்றன. இவற்றை, "பரிந் தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித், தேரினும் அஃதே துணை", "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்கு, எழுமையும் ஏமாப் புடைத்து." என்னுந் திருக்குறள்களால் அறியலாம்.

உலகத்தில் ஒழுக்கம் கல்வி யென்னும் இவ்விரண்டும் வித்தும் மரமும்போல ஒன்றற்கொன்று ஆதாரமாயிருக்கின்றன. அஃதெவ்வாறெனில், திருக்குறளிலே, "மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்." என்றதனாலே, பிராமணர்கள் வேதத்தை மறந்தாலும் நல்லொழுக்கத்தை விடாது கைப்பற்றி நிற்கவேண்டும் என்பது பெறப்படுகின்றது, எனினும் இக்குறளின் கருத்து 'ஓதுதலையும் மறக்கலாகாது' என்பதும், 'எல்லாவருணத்தாரும் நல்லொழுக்கத்தினின்று தத்தமக்குரிய கல்வியைக் கற்கவேண்டும்' என்பதும் ஆம். இக்கருத்தை இக்குறளின் உரையிலே, "மறந்தவழி இழிகுலத்தானுமாகலின், மறக்கலாகாதென்னுங் கருத்தால், மறப்பினும் என்றார். சிறப்புடை வருணத்தையெடுத்து மொழிந்தமையின், இஃது ஏனைய வருணங்கட்குங் கொள்ளப்படும்." என்னும் அழகிய இரண்டுவாக்கியங்களாலே, ஆசிரியர் பரிமேலழகர் விளக்கியிருக்கின்றார். இனி, "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க வதற்குத் தக." என்றதனாலே, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள்களை உணர்த்தும் நூல்களைச் சந்தேக விபரீதம் நீங்கக் கற்று, அங்ஙனம் கற்றபின்பு அக்கல்விக்குத் தக்கவண்ணம், அந்நூல்கள் சொல்லுகின்ற நெறியின்கண்ணே நிற்கவேண்டும் என்பது பெறப்படுகின்றது. எனவே இவ்விரண்டு குறளாலும், முன் சொன்னவண்ணம் ஒழுக்கம் கல்வியென்னும் இரண்டும் ஒன்றற்கொன்று ஆதாரமாயிருக்குந் தன்மை புலனாம்.

இவ்விரண்டும் உயர்ந்தனவேனும், இவற்றில் ஒன்றற்கொன்று சிறிதும் வேறுபாடு இன்றோ எனின்,—உண்டு: கல்வி கற்காவிடின்

அந்தந்த வருணத்துள்ளே சிறிது தாழ்வுமாத்திரம் ஏற்படும். ஒழுக்கத்தைக் கைவிடிலோ, வருணமே மாறிப்போம். ஒரு பிராமணன் வேதமோதாவிடினும் நல்லொழுக்கத்தைக் கைவிடாதிருந்தால், அவன் ஸத்பிராமணனாகாவிடினும் பிராமண கோஷ்டியினின்றும் விலக்கப்படமாட்டான். வேதமோதியிருப்பினும் ஒழுக்கத்தைக் கைவிடின், பிராமணகோஷ்டியினின்றும் நீக்கப்படுவான். இவற்றை "ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம், இழிந்த பிறப்பாய் விடும்." (குறள்), "ஞானமா சாரம் நயவா ரிடைப்புகழும், ஏனைநால் வேதமிருக்குநெறி— தான்மொழியிற், பாவநிறை சண்டாளர் பாண்டத்துக் கங்கைநீர், மேவுநெறி யென்றே விடு." (நீதிவெண்பா) என்னுஞ் செய்யுள்களாலறியலாம். இங்கே சொல்லியவை, நமதுபழைய சாஸ்திரங்களையும் ஆசாரங்களையும் நம்புகிற இங்குள்ள ஆஸ்திகர்களுக்கு ஒவ்வுமேயன்றி, நவீன ஆசாரச் சீர்திருத்தக் காரர்களுக்கு ஒவ்வா. அவர்களை நம்மாற் சீர்திருத்தவும் முடியாது.

இனி, முன்காலத்துக் கல்வியொழுக்கங்களையும் இக்காலத்துக் கல்வி யொழுக்கங்களையும் ஆராய்வோம்.—முன்னாளிலே ஏழு வயதிற் கல்விகற்கத் தொடங்கி 24 வயது வரையிற் பிரமசரியத்தை யனுஷ்டித்துக் குருகுலவாசஞ் செய்து கல்விகற்றார்கள். (48 வயது வரையிற்பிரமசரியம் அனுஷ்டித்த காலமும் உண்டு). அதற்கு மேலே இஷ்டப்பட்டபொழுது குருவின் அனுமதிபெற்று விவாகஞ் செய்து கொண்டு இல்லறத்தை நன்கு நடத்தி அரோக திடகாத்திரர்களாய் வாழ்ந்திருந்தார்கள். இதனை நமது சாஸ்திரங்களாலும் புராண இதிகாசங்களாலும் அறியலாம். அக்காலத்தில், க்ஷத்திரியர்கள் மட்டும் 16 வயதிலிருந்தே மணம் புரியும் வழக்கம் அனுஷ்டித்தார்கள். ஸ்ரீ ராமபிரானுக்கு 16 வயதிலே சீதாகலியாணம் நடந்ததாக இராமாயணம் கூறும். தமிழ் நூல்களாகிய திருக்கோவையார் முதலிய கோவைகளிலும், தொல்காப்பியத்திலும் காந்தருவ விவாகத்திற்குக் காலவரையறை இப்பதினாறு வயதே கூறப்பெற்றிருப்பினும், தொல்காப்பியத்திலே ஏனைய மணங்களுக்கு 24-க்கு மேற்பட்ட வயதே கூறப்பெற்றிருக்கின்றது. அக்காலத்தில் அந்தணர்கள் சற்றேறக்குறைய ஏழு முதல் 24 வயது வரை

யிலுள்ள 18 வருஷகாலம் முறையாக வேதசாஸ்திரங்களைக் கற்று இல்லறத்திற் புகுந்து, பொருளாசையின்றி ஓதுவித்தல் மந்திரிகளாயிருந்து அரசர்க்கும் குடிகளுக்கும் இதஞ்செய்தல் முதலிய லோகோபகாரமான காரியங்களையே மேற்கொண்டு வாழ்ந்து வந்தார்கள். இவர்களுக்குத் தவமே தனமாம். ஏனைய வருணத்தார்களும் அவ்வாறே தத்தமக்குரிய கல்வி கற்றுத் தொழில்களை மேற்கொண்டு இனிது நடத்திவந்தார்கள். அதனால், இவ்வுலகம் செழித்து வாழ்ந்தது.

மேலும், அக்காலத்தில் இத்தேசத்திலே தமிழ்க் கல்வியும் தமிழ் மூவேந்த ரெனப்பட்ட சேரசோழபாண்டியர்களால் ஆதரிக்கப் பெற்று உன்னத நிலையை அடைந்திருந்தது. உத்தர தேசத்திலிருந்து இவ்விடம் வந்த அந்தணர் பலரும் இத்தமிழ் மொழியை முற்றக் கற்று லோகோபகாரமாக நூல்களும் உரைகளு மியற்றித் தந்திருக்கிறார்கள். ஒரு பாஷையை முற்றக் கற்றிருப்பின் மற்றொரு பாஷையைச் சற்றேறக் குறைய ஐந்து வருடத்திற் கற்றுவிடலாமாதலால், அவர்களுக்கு அது சுலபமாயிருந்தது. வடமொழியாளராகிய அவர்களே இவ்விடம் வந்து தமிழைக் கற்று அவ்வண்ணம் போற்றியிருப்பார்களாயின், அக்காலத்தில் இங்கேயே பிறந்து வளர்ந்த தமிழர்கள் எவ்வண்ணம் போற்றியிருக்க வேண்டும்!

முற்காலத்தில் தமிழர் தமிழ்நெடுங்கணக்குப் (அரிச்சுவடி) பயின்ற பிறகு சட்டம் எழுதும் முறையிலே இரண்டெழுத்துப் பெயர், மூன்றெழுத்துப் பெயர் முதலியனவாகப பெயர்களை யெல்லாம் எழுதப் படிக்கக் கற்று, அதன் பின்னர் ஆத்திசூடி கொன்றைவேந்தன் முதலிய இலகுவான நூல்களைத் தொடங்கி, முறையாக இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்து, தத்தமக்குரிய ஒழுக்கத்தில் நின்று, தொழில்களைச் செய்து, இகபரசாதனங்களையடைந்து வந்தார்கள்; எளிதிற் கற்று மனப் பாடம் செய்வதற்கும், அப்பாடம் என்றும் மறவாதிருத்தற்கும் ஏற்றவாறு முன்காலங்களில் அரிய பெரிய நூல்களெல்லாம் செய்யுள் ரூபமாகவே செய்யப் பெற்றன. பழைய முறைப்படி ஒருசிறுவன் தமிழ்கற்கத் தொடங்கினல் 10, 15 வருஷங்களுக்குள் நன்கு கற்றுத்தேர்ந்து

விடுவான். அதன் பின்னரும் அவன் சாஸ்திரக்கல்வி, தொழிற் கல்வி முதலியவற்றைக் கற்றுக் கற்றவண்ணம் ஒழுகுவான். ஆசிரியர்களும் பிரதிப்பிரயோஜனத்தை யெதிர்பாராமல் லோகோபகாரத்திற்காகவே யுழைத்துக் கல்விபுகட்டுவார்கள். அதனால் ஆசிரியர்க்கும் மாணாக்கர்க்கும் மனவொற்றுமையும் பரஸ்பர அன்பும் குடிகொண்டிருந்தன. ஆசிரியர் கல்வி போதிக்கும் பொழுதே ஒழுக்கத்தினையுஞ் சேர்த்துப் போதித்துக் கொண்டு வந்ததனால், அப்பொழுது இத் தமிழ்நாடானது கல்வி ஒழுக்கம் என்னும் இரண்டாலும் மேம்பட்டு விளங்கிற்று. சிற்பம் நெசவு முதலிய கைத்தொழில்களும், பலவகை வியாபாரங்களும், அயல்தேசத்தார் ஆச்சரியப்படும் வண்ணம் இங்கே நிகழ்ந்தமையால், இந்நாடு மிகவுஞ் செழிப்புற்றது.

பின்னர்க்காலத்திலேதான் நம் நாட்டுக்கல்வியும் ஒழுக்கங்களும் மாறுபட ஆரம்பித்தன. பிராமணர்களிற் பெரும்பாலார் வேதமோதுதலை மறந்து அன்னியபாஷைகளைக் கற்கத்தொடங்கினர். குழந்தைகளைப் படிப்பிக்கவேண்டிய 7-வயதிலேயே விவாகம் செய்விக்கத்தொடங்கினர். படிப்பைநிறுத்தி விவாகந்தொடங்கவேண்டிய 25-வது வயதிற்குள்ளே விவாகமாகித்தீரவேண்டுமென்னும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இக்காலத்தில் ஒருவனுக்கு 25வயது ஆகிவிட்டால் அதன்பின்னர் விவாகமாதல்அரிதென்னலாம். எனவே படிப்புக்குத்தடையாயுள்ள பாலியவிவாகம் இந்நாட்டில் நிலைத்துவிட்டது. வேதமோதலையும் சாஸ்திரங்கற்றலையும் மறந்து பாலியவிவாகஞ்செய்யவே, குருகுலவாஸம் என்பதே இன்னதென்று தெரியாது போயிற்று. இதனால் பெரிதுபொருடைய ஸகவாஸமும் அதன்பயனாக நாம் அடையத்தக்க ஒழுக்கம் கல்வியென்பவையும் நமக்குக் கிட்டாமற்போயின. அந்தக்காலத்தில் ராஜ ராஜாக்களுடைய பிள்ளைகளுங்கூடக் குருகுலவாசஞ்செய்து குருவை வழிபட்டுக் கல்விகற்று ஒழுக்கத்திலும் மேம்பாடுற்று விளங்கினர். இதனை இராமாயணம் முதலிய இதிகாஸ புராணங்களினாலே அறியலாம். விசுவாமித்திரர் ஜனகரது சபையிலே ஸ்ரீராமலக்ஷ்மணர்களுடைய குலமுறையைச்சொல்லிவரும்பொழுது,—

"நிறையோடு மாசிறைஞ்சுஞ் செறிகழற்காற் றசாதனும்
பொறையோடுந் தொடர்மனத்தான் புதல்வரெனும் பெயரோன்
உறையோடு நெடுவேலா யுபநயன விதிமுடித்து
மறையோடு வித்திவரை வளர்த்தானும் வசிட்டன் காண்."

என்று, அவர்கள் சக்கிரவர்த்தி திருக்குமாரராயிருந்தும் குருகுல வாசஞ்செய்து வஸிஷ்டமகாமுனிவரிடத்திலே கல்விகற்றதனாலுண் டாகிய பெருமையை யெடுத்து ஜனகருக்குக்கூறினர். ஜனகரும் கல்வியொழுக்கங்களினாலே மேம்பாடுற்று, 'ஞானஜனகர்' என்று யாவரும் சொல்லும்படி விளங்கினவர். அதனால் ஸ்ரீராமபிரானு டைய ஞானமுதலியவற்றையறிந்து பெண்கொடுக்கத்துணிந்தார்.

இந்தக்காலத்திலோ, இவையெல்லாம் பழங்கதையாய்விட்டன. பெண்கொடுப்பவர் பார்ப்பதெல்லாம், பையன் ஆங்கிலம்படித்திருக் கிறானா? பணங்காசுண்டா? துடுக்காக வார்த்தை பேசுகிறானா? என்பனவாதியாகச்சிலவாம். இவையிருந்துவிட்டால் (கலியாணத் திற்காக) உபநயனஞ்செய்வித்து உடனே பெண்ணைக் கொடுத்துவிடு வார்கள். இது எவ்வளவு அனர்த்தமான காரியம்!

இனி, இக்காலத்திற் கல்விகற்பிக்கப்படும் முறையைச் சிறிது கவனிப்போம். பிராமணர்கள் வேதசாஸ்திரங்களை அனாதரவு செய் யினும், தருமவான்களாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் அங் கங்கே ஏற்படுத்தியுள்ள வேதசாஸ்திர பாடசாலைகளாலும், புதுக் கோட்டை ஸம்ஸ்தானத்தின் ஆதரவினாலும், காருண்யம்பொருந்திய நமது பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் ஆதரித்துவருகிற திருவையாற்று ஸம்ஸ்கிருத காலேஜ் முதலிய சிலவற்றாலும், அவை முற்றிலும் ஒழிந்துபோகாமற் சிறிது ஜீவித்திருக்கின்றன. ஆங்கிலங்கற்கத் திரவியமின்றிப் பரமஏழையாயிருக்கும் பிள்ளைகளிற்சிலரே இப் பாடசாலைகளிற் படிக்கவருபவர். இப்பாடசாலைகளிற் போஷணை கொடுத்துப்படிப்பித்தும், இப்படிப்பினாலே அதிகமான திரவிய சம்பாத்தியத்திற்கு வழியின்மையால், ஏழைப்பிள்ளைகளிற்பலரும் இதற்குவாராமற் பிச்சையெடுத்தேனும் ஆங்கிலங்கற்கப் புகுகின் றனர்.

தேசபாஷையாகிய தமிழோ, தன்னையாதரிப்பாரின்றித் தளர் கின்றது. முன்னே இதனை ஆதரித்துவந்த சைவமடாதிபதிகள்

கைவிட்டனர். பெருந்தனவந்தர்களாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் நன்கு ஆதரிக்கவில்லை. பெரும்பாலும் தங்கள்பிள்ளைகளுக்கு எண்சுவடிவந்தால், படிப்புமுற்றிலும் வந்துவிட்டதாக எண்ணிப் படிப்பைநிறுத்தித் தங்கள் தொழிலைச் செய்யும்வண்ணம் இரங்கூன் முதலிய இடங்களுக்கு அனுப்பிவிடுகின்றனர். ஒரு பாஷையேனும் பிழையற எழுதப்படிக்கப் பயிலாதவர்க்கு உலகஞானமும் தொழின்முறையும் எப்படித்தெரியும்? தொழில்செய்வதற்கும் கல்விவேண்டுவது அவசியம். கல்வியில்லாத சிலர்க்கு இலட்சக்கணக்காகப் பணம் விருத்தியாகிறதேயெனின், அது அவர்களுடைய சாமர்த்தியத்தினாலன்று. உலகத்தார் அதனை அதிருஷ்டம் என்பர். அவ்வதிருஷ்டத்தினாலே காரியகாரர்கள் புத்திசாலிகளாகவும் யோக்கியர்களாகவும் ஏற்பட்டுப் பணத்தைவிருத்திசெய்கின்றனர் என்றுசொல்லவேண்டும். அவ்வாறு விருத்திசெய்தும், உடையவர்க்கும் அவர்பிள்ளைகளுக்கும் படிப்பின்மையால் பின்னொருகாலத்தில் அத்திரவியம் துர்விநியோகப்பட்டுவிடும். கல்வியில்லாதவரைக் கெடுப்பதற்குத் திரவியமும் ஒருசத்துருவாகும். பாலியத்தில் நல்ல ஸகவாஸமும் கல்வியும் ஏற்படாவிடின், பிள்ளைகள் கெட்டஸகவாஸத்தை மேற்கொண்டு, பெற்றோர்க்கடங்காமல் தங்கள் செல்வங்களையெல்லாம் வீணே செலவழித்து விடுவர். இதனை நாம் பிரத்தியட்சமாகச் சிலவிடங்களிற் பார்க்கிறோம்.

மற்றைச்சாதியார்களும் தாய்மொழியை அனாதரவுசெய்கின்றனர். தமிழை ஆதியிலிருந்து ஒழுங்காகக்கற்பிக்கக்கூடிய பள்ளிக்கூடங்களைக்காணோம்; சில இடங்களிலே தமிழபிமானிகள்சேர்ந்து அத்தகைய கல்விச்சாலைகளை ஏற்படுத்தமுயலினும், அவை காலகதியினாலே மாறுபட்டு ஆங்கிலபாடசாலைகளாகப் பரிணமிக்கின்றன. ஆங்கிலபாடசாலைகளிலோ, எல்லாப்பாடங்களும் நமக்கு அன்னிய பாஷையாகிய ஆங்கிலத்தின் மூலம் கற்பிக்கப்படுதலால், நமது பாஷை அலட்சியம் செய்யப்படுகிறது. இம்முறை தகுதியற்றதென்று மேதாவிகள் பலரும் நினைத்து இதனைநீக்க முயல்கின்றனர்.

டில்லி நகரில் சென்ற திங்கட்கிழமை கூடிய வித்தியாதிகாரிகளின் கான்பரென்ஸில் காருணியம்பொருந்திய நமது ராஜப்பிரதி

நிதியாகிய லார்டு செம்ஸ்போர்டு துரையவர்கள் வித்யாசாலைகளின் அதிகாரிகளாகிய துரைமார்களைப்பார்த்துக் கூறியுள்ள சிலவாக்கியங்கள் நம் மனத்தையுருக்குகின்றன. அவையாவன:—

"நம்முடையதேசத்தில் கலாசாலைகளில் நமக்கு அன்னிய பாஷையில் உயர்தரக்கல்வி கற்பிக்கப்பெறின், நாம் எவ்விதம்படித்து விருத்தியடைந்திருக்கக்கூடும் என்பதைப்பற்றி உங்களைக்கேட்பதோடு என்னையே நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நாம் இளைத்துப்போய், படிப்பேவேண்டாமென்று வெளியேறியிருப்போம். இந்தியாவில் இப்படிப்பட்ட கொடியமுறை அனுஷ்டிக்கப்பட்டுவந்தும், இந்தியச் சிறுவர்கள் மனத்தைரியத்துடனும் ஊக்கத்துடனும் கஷ்டங்களையெதிர்த்துக் கல்வி பெற்றுவருவதைக் கவனிக்கும்போது என்மனம் பரவசமடைகின்றது. இந்தக்கெடுதலான முறையை இரண்டுவிதமாக நீக்கலாம்."

என்பனவைகளே.

மேலும், ஆங்கில கலாசாலைகளிலே நமது மதாசாரங்களுக்குச் சிறிதும் ஒவ்வாத நடையுடைபாவனைகள் அனுஷ்டிக்கப் படுதலாலும், நமது மதக்கல்வி நன்கு போதிக்கப் பெறாமையாலும், மாணாக்கர்களின் ஒழுக்கம் கெடுகின்றது. இக்கலாசாலைகளிலே முன்காலத்திருந்த அன்போடுகூடிய குருசிஷ்யமுறை யின்மையால், உபாத்தியாயர்கள் கேவலம் சம்பளத்திற்கு வேலைசெய்கிறவர்களாக மதிக்கப் படுகிறார்கள்.

மேலே சொன்னவாறெல்லாம் நமது கல்வி ஒழுக்கம் என்னும் இரண்டுங் கெடுதலால் நம் ஆயுளுங்குறைகின்றது. நம்பாட்டனார்க்கிருந்த பலமும் ஆயுளும் பிதாவுக்கில்லை; பிதாவுக்கிருந்த அவ்வளவும் நமக்கில்லை. இக்குறைகளை ஒருவாறு நீக்கவெண்ணிப் பல பெரியோர்கள் சேர்ந்து காசியிலே, 'இந்துயூனிவர்ஸிடி' ஸ்தாபித்திருக்கின்றனர். அதன் பயனை இனி நாம் அறியலாம். அத்தகைய கல்வி ஸ்தாபனங்கள் பல இனி யேற்படக் கூடும். இவை நிற்க, முற்கூறிய பலகாரணங்களாலும் நமது தேசபாஷையாகிய தமிழின் பெருமை குன்றிவரவும், அது செய்த தவப்பயனாக அவதரித்த வள்ளலாகிய ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவரவர்கள் இற்றைக்குப் பதினைந்து வருஷங்களின் முன்னே ஸ்தாபித்த மதுரைத் தமிழ்ச் ச

கத்தினாலும், சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் மகாமகோபாத்தியாய வே. சாமிநாதையரவர்கள் முதலிய மகோபகாரிகள் சிலராலும், அது இன்னும் ஜீவித்திருக்கின்றது. அவர்களுக்கும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தை இப்பொழுது பரிபாலித்துவருகிற மகான்களுக்கும் இத்தமிழுலகம் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது.

மதுரைத்தமிழ்ச்சங்கத்துக் கலாசாலையிலே சிலபிள்ளைகளுக்கு மாத்திரம் மேற்படிப்புச் சொல்லிக்கொடுக்கப்பெறுதலால், ஆரம்ப முதலே தமிழ்க் கல்வியை முறையாகப் புகட்டக்கூடிய கல்விச்சாலைகள் பல நமது தேசமெங்கும் ஏற்படவேண்டும். அவற்றிற் படிக்கும் பிள்ளைகள், மதுரைத்தமிழ்ச்சங்கத்துப்பரீக்ஷைகளுக்கும் மாட்சிமைதங்கிய பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் தமிழ்ப் பட்டப் பரீக்ஷைகளுக்கும், போய்த்தேறும் வண்ணம் அவர்களுக்கு ஆங்கிலமும் உபபாடமாகக் கற்பிக்கப் படவேண்டும். உபாத்தியாயர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள நவீனக் கொள்கை (அலட்சியபுத்தி) மாறிப் பழைய குருசிஷ்யமுறை ஏற்படவேண்டும். இவையெல்லாம் சித்திக்கும்வண்ணம், இச்சபையாரும் இது போலவே பலவூர்களிலும் இப்பொழுது ஏற்பட்டுவருகிற மற்றைச்சபையார்களும், ஊக்கத்துடன் முயலவேண்டும். அவ்வாறு முயன்றால், நமது தேசத்துக் கல்வியும் ஒழுக்கமும் மறுபடியும் மேன்மையடைந்து விளங்கும் என்பது நிச்சயம். அவ்வாறு மேன்மையடையும்பொழுது தமிழ்ச் சர்வகலாசங்கமும் ஏற்படக்கூடும். நம் எண்ணங்களெல்லாம் நிறைவேறும் வண்ணம் ஈசன் திருவருள் பெருகுக. இவ் வைசிய சிவானந்தசபை நீடுவாழ்க.

விடாமுயற்சி.

விடாமுயற்சி யென்னும் இத்தொடர்மொழி ஒருவன் தான் கருதிய காரியம் முடியுமளவும் அது முடியும் பொருட்டு இடைவிடாது ஊக்கத்தோடு செய்யுந் தொழிலெனப்

பொருள்படும். அத்தொழில், தான் பெற்ற நற்பொருள் தன்னை விட்டகலுவதாயிருந்தால் அதனையகலாதிருக்கும்படி செய்தற்கண்ணும், புதிதாகப் பெறவேண்டிய சிறந்தபொருளைப் பெறுதற்கண்ணும் நிகழும். இங்ஙனம் நிகழுதல், ஜீவகோடிகளாகிய நம்மெல்லோரிடத்தும் ஒப்பமுடிந்ததேயெனினும், இடையே அக்காரியங்கள் முடிவதற்குத்தடங்கல் எவையேனும் ஏற்படின், அவற்றிற்கெல்லாம் மனம் தளராது, அவற்றையெல்லாம் பொறுத்து, மேற்சென்று காரியங்களை முடித்தல் சிலருக்கே முடிவதாகும். இத்தகைய சிலரே எல்லா நலன்களும் பெறுதற்குரியார். இதுகருதியே "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" எனவும், "முயற்சி திருவினையாக்கும்" எனவும் பெரியோர் கூறியிருக்கின்றனர். சரீரப்பிரயாசைக்குப் பயப்படுபவரும், பசியைப் பொறுக்கவேண்டிய சமயத்து அதனைப்பொறுக்கும் ஆற்றலில்லாதவரும், எது எப்படியானாலும் நித்திரைக்குச் சிறிதும் பங்கம்வரக்கூடாது எனக்கருதுபவரும், பிறர் தீங்குசெய்வாராயின் அதற்கு என்செய்வது எனக்கவலைப்பட்டு அத்தீமைக்கு மிகுதியும் அஞ்சுபவரும், நல்லகாரியம் ஒன்றைச்செய்ய நேரும்பொழுது 'இது காலமல்லாதகாலம், பிறகு பார்த்துக் கொள்வோம்' என்று அதைச்செய்தற்குப் பின்வாங்குபவரும், அறிவில்லாத சிலரால் செய்யப்படும் பரிஹாஸம் சிறுபொழுதே நிகழ்வதாயிருக்க அதனுக்கிரங்குவோரும் ஆகியஇவரெல்லாம் விடாமுயற்சியைக் கைக்கொண்டு கருதியகாரியங்களைச்சாதிக்கும் ஆற்றலில்லாதவராவர் என்பது பெரியோர்களுடைய உண்மையான அபிப்பிராயமாகும். இனி, தாம் கருதிய நற்காரியத்தை முடிக்கும் ஆற்றலுள்ளவர் யாவரெனின், "மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார் எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார், செவ்வி-யருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்" என்ற பெரியாருபதேசத்தைப் பின்பற்றி நடப்பவரேயாவரென்க.

ஆனால், "விதியினை யாவரே வெல்லு நீர்மையார்", "வருந்தியழைத்தாலும் வாராத வாரா", "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி தொகுத்தார்க்குந் துய்த்தலரிது", "விதியின் பயனேபயன்" என்பனவாதியாக வரும்வாக்கியங்கள் ஊழின்சிறப்பை வலியுறுத்

துதலால், முயற்சியாலாம் பயன் ஒன்றுமில்லை யென்பர் ஒருசாரார். அவர்கள், ஸ்ரீமார்க்கண்டேய மஹரிஷி, தமக்கு வயது பதினறே யென்பதாக விதிக்கப்பட்டிருக்கவும் தமது உலையாமுயற்சியாற் பக்திமுதிர்ச்சிபூண்டு, கடவுள் வழிபாடென்னும்பெறலருந் தொழில் கொண்டு, தம் ஊழையும்புறங்கண்டு, உயிரைக்கொண்டுபோவதற்கு வந்த யமனையும் உதைபுண்டு செல்லும்படிசெய்து, என்றும் பதினறுவயது இயைந்து வாழும்பேற்றைப்பெற்றனர் என்னும் விருத்தாந்தத்தையுற்று நோக்கவேண்டும். மேலும் உத்தமமான கற்பைத்தாங்கி மேம்பட்ட சாவித்திரி என்னும் பெண்மணியின் சரித்திரமும் உற்றுநோக்கற்பாலதாம். அது யாதெனில், சத்தியவான் என்ற பெயரால் வழங்கப்படும் சித்திராசுவனுக்குக் கலியாணமான ஒருவருஷத்திற்கெல்லாம் நிச்சயமாக இறப்பு வருமென்பதனை நாரதமஹரிஷியால் உணர்ந்தும், சாவித்திரியானவள் அச்சித்திராசுவனையே மணக்கவிரும்பி மணந்தனள்; மணந்து ஒருவருஷம் முடிவதற்கு நாலுநாளிருக்க, தான் அன்னபானுதி ஆகாரங்களின்றி உறக்கமற்று மனதை ஒருநிலைப்படுத்தித் தன்கணவன் நீண்டஆயுள் பெறுதற்கான விரதத்தைக்கொண்டாள். நாலாநாள் யமன்வந்து சித்திராசுவன் உயிரைத்தன் வழக்கப்படி பற்றிச்செல்ல, அவனை விடாளாய் இவளும்பின்பற்றிச்சென்றனள். யமன் இவளைப்பார்த்து, வழியின் கடுமையைக்கூறி இவளை மட்டிலும் திரும்பிப்போம்படி சொல்ல, இவள் கணவனுயிரை மீட்டாலன்றிப் போகேனென உறுதிபூண்டுஅவனைப்பின்றொடர்ந்து, அவனால் முதலாவதாக-குருடாய்க்கிடந்த தன்மாமன் மாமியாரிருவரும் கண்கள் பெறும்படியாகவும், இரண்டாவதாக- முன் மாமன்தோற்ற இராஜ்யத்தை மீட்டும் அடையும்படியாகவும், மூன்றாவதாக- புத்திரபாக்கியமில்லாத தன் தந்தை நூறு புத்திரர்களைப் பெறும்படியாகவும் மூன்றுவரங்களைப் பெற்றும் பின்னரும் விடாதுதொடர்ந்து சென்றாள். அதைக் கண்ட யமன் இவள் விடாமுயற்சிக்கு மிக மகிழ்ந்து, 'இனி எவ்வரமாயினுங்கேள், தருவேன்' என்றுகூற, சாவித்திரி தேவியானவள் இதற்குமுன் மூன்றுவரந்தரும்போதெல்லாம் 'உன்கணவனுயிரைத் தவிர வேறு எதையுங்கேள்' என்றயமன் வாயினல் 'கணவனுயிரைத்

தவிர' என்றவார்த்தைகள் நீக்கப்பட்டு, 'எவ்வரமாயினும் கேள் தருவேன்' என்று சொல்ல நேர்ந்த என்பாக்கியமே பாக்கியம் என்று முன்னையினும் மிக முகமலர்ந்தவளாய், "என்கணவனுயிரைத் தர வேண்டும்; இவ்வரமே யான் தங்களை வேண்டுவதாகும்" என்றாள். யமனும், இவள் விடாமுயற்சிக்கும் பதிபக்திக்கும் இரங்கி அங்ஙனமே தந்து, "உத்தமியே! உன் கணவன் நாலாயிரம் வருடம் சுகஜீவியாய் உலகத்தை அரசாண்டு நூறுபுதல்வர்களையும் பெற்றுப் பின்னர்ப் பேரின்பப்பெருவாழ்வும் அடைவன்" எனஅநுக்கிரஹித்துச் சென்றனன் என்பதாம். இவற்றால் "விதியின் பயனே பயன்; அன்றி, விடாமுயற்சியாற்கிடைக்கும் விசேஷமான பயன் கிடையாது" என்று வாதிக்காமல் யாவரும், "தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன், மெய்வருத்தக் கூலி தரும்" என்றும், "ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித், தாழா துஞற்று பவர்" என்றும் வருபவற்றி னுண்மைப் பொருளுணர்ந்து இடையறாத முயற்சி பூண்டால், எல்லா நலனும் எய்துவர் என்பது பெறப்படும்.

நிற்க, ரயில் தந்தி ஆகாயவிமானம் முதலான ஜனசௌகரியப் பொருள்கள் சோம்பேறிகளாற் கண்டு பிடிக்கப் படவேயில்லை; விடாமுயற்சியுள்ள மஹாமேதாவிகளாலேயே கண்டுபிடிக்கப்பட்டன. "ஆக்க மதர்வினாய்ச் செல்லும் அசைவிலா, வூக்க முடையா னுழை" என்னுந் தேவர் வாக்கு ஈண்டுச் சிந்திக்கத் தக்கதாகும். "முயன்று வினை யைந்-தலைநாக நன்மணியும் பெறலாமித் தரணியிலே" என்பதும் விடாமுயற்சியின் பயனைத் தெரிவிப்பதாகும். இன்னும் எத்துணை விரித்துக்கூறப்புகினும், இவ்விஷயம் அத்தனைக்கும் இடங்கொடுக்குமாதலின் விரிவஞ்சி இதனை இம்மட்டோடு நிறுத்தி, முடிவாக நம்மெல்லோருக்கும் நல்லவிஷயங்களில் விடாமுயற்சி அவசியம் வேண்டற்பாலதென்பதனை மட்டும் பன்முறையும் வற்புறுத்திக்கூறி இதனைப் பூர்த்தி செய்கின்றேன். இதுவரை கூறியவற்றுள் நேர்ந்த பிழைகளைப் பொறுக்குமாறு வேண்டுகின்றேன்.

மணிவாசகன்.

விவசாயம்.

சப்பாத்துக்கள்ளி அல்லது நாகதாளியின் சில உபயோகங்கள்.

இக்கள்ளியானது நமதுதேசத்தில் பலபாகங்களிலும் படர்ந்து ஏராளமான நிலங்களை மூடிக்கொண்டிருப்பதால், இதைக் கிருஷிகர் அவர்களுக்குக் கெடுதியை உண்டாக்கும் பொருட்டு ஓர் சாபத்தினால் உண்டானபூண்டென்று எண்ணுகிறார்கள். சில இடங்களில் விவசாயத்துக்கு லாயக்கான நிலத்தில், இதுபாவி மூடிக்கொண்டிருப்பதால் அந்நிலங்கள் கிருஷிக்கு உபயோகமற்றதாய்த் தற்காலத்தில் ஆய்விட்டன. அநேககிராமங்களுக்குச் சமீபமாயுள்ள குத்துச்செடிகள்வளரும் குறுங்காடுகளில், இச்செடிகளுக்கு ஊடேயிருக்கும் காலி நிலங்களில், ஜனங்களுக்கு பிரயோஜனப் படக்கூடிய புல் பூண்டு செடிகள் முதலியவைகளும் அக்காலி இடங்களில் முளைக்கா வண்ணமாய் இதுவளர்ந்து, மூடிக்கொண்டிருப்பதால், அவ்விடங்கள் உபகாரப்படாம லிருக்கின்றன. அநேககிராமங்களில் வழிபாட்டைகளுக்குச் சமீபமாய் இதுபடர்ந்து வருஷா வருஷம் ஜாஸ்தியாகிக் கொண்டு வருவதால், இப்பாட்டைகளும் வழிகளும் அநேகமாய் விஸ்தீர்ணத்தில் குறுகிக்கொண்டே வருகின்றன. புறம்போக்கு நிலங்களில், இவைகள் ஏராளமாய் வளர்ந்து மூடிக்கொள்வதால், அந்நிலங்கள் எந்த வேலைக்கும் பிரயோஜனமற்றுப் போகின்றன. இந்நாகதாளிப் புதர்களுக்கு மறைவில் போய் ஜனங்கள் மலஜலங்கள் கழிப்பதால், அவைகள் இதை ஜாஸ்தி வீரியமாய் வளரச் செய்வதோடு அக்கிராமத்திற்கு சுகாதாரக் குறைவு உண்டு பண்ணுகிறது. ஆகையால் இந்தராக்ஷஸப் பூண்டைக் கிராமாந்தரங்களிலிருந்து எப்படி நிர்மூலமாக்குவதென்பது, கிருஷிகர் ஆலோசனைசெய்து கவனிக்க வேண்டிய விஷயங்களில் ஒன்றாயிருக்கிறது. இங்குமங்கும் இவ்விராஜதானியில் சில இடங்களில்

சில தாலூகாபோர்டார்களும், ஜில்லா போர்டார்களும் இப்பூண்டை நிர்மூலப்படுத்தப்பிரயத்தனங்கள் செய்து கொண்டிருந்தபோதிலும், எல்லாக் கிராமங்களி லிருக்கும் விவசாயிகளும் இவ்விஷயத்தில் ஒத்தாசை செய்தாலொழிய, இதை விசேஷமாய்த் தொலைக்க சாத்தியப் படமாட்டாது.

கோயம்புத்தூர் ஜில்லாவின் சிலபாகங்களில் இந்நாகதாளியை அப்புறப்படுத்தி மண்ணுடன் கலந்து மக்கவைத்து எருவுக்கு லாயக்காகும்படிச் செய்தபின் கம்பு சோளம் கேழ்வரகு முதலிய பயிர்களுக்குப் புன்செய்களிலும், தோட்டக்கால் நிலங்களில் ராகி மிளகாய் புகையிலை கோதுமை வாழை கரும்பு முதலிய இறவைப் பயிர்களுக்கும் எருவாய் உபயோகப் படுத்துகிறார்கள். ஆனால் எல்லாக் கிருஷிகரும் இம்முறையைக் கையாடுகிறதில்லை. கிருஷிகர் பயிரிடும் நிலங்களுக்குள் மூலைமுடக்குகளில் இந்நாகதாளிவளர்ந்திருந்தாலும் அல்லது வெளியிலிருந்து தங்கள் நிலத்துக்குள் பரவி வந்து கொண்டிருந்தாலும் அச்சமயங்களில் தான் இதை அநேகமாய் அப்புறப்படுத்தி மண்ணுடன் மக்கவைத்து எருவாய் உபயோகிக்கப் பிரயத்தனப் படுகிறார்கள். சிலகிருஷிகர் தங்களுடைய நிலங்களுக்குச் சமீபத்தில் சப்பாத்துக்கள்ளி ஏராளமாய் அகப்பட்டால் அதைவெட்டிஎருவுக்கென்றே சேகரித்து மக்கவைக்கிறார்கள். ஆனால் இந்த வழக்கம் எவ்வளவு தூரம் கையாட வேண்டுமோ அவ்வளவு தூரம் கையாடப் படவில்லை. என்றாலும், கிருஷிகர் தங்களுடையநிலங்களைச் சீர் திருத்துவதற்காக நாகதாளிப் புதர்களுக்குக் கீழே படிந்திருக்கும் மண்ணை (கள்ளிமண்ணை) வண்டிகளில் ஏற்றிக்கொண்டுபோய் நிலங்களில் கொட்டும் வழக்கத்தைக் கையாடுகிறார்கள். புறம்போக்குகளிலும் குளக்கரைகளிலுமுள்ள இம்மண்ணை அடித்துக் கொண்டுபோக மண்கிரயம் கிடையாது. மண் அடித்துக்கொண்டுபோகவேண்டிய இடம் அரை மைலுக் குள்ளிருக்குமாகில் நாகதாளிப் புதர்களை வெட்டி அப்புறப் படுத்தி விட்டு, அப்புதர்களுக்கு அடியில் படிந்திருக்கும் மண்ணை வெட்டி அப்புறப் படுத்தி, வண்டியில் ஏற்றிக்கொண்டு போவதற்கு வண்டி ஒன்றுக்கு அணா 2 தான் செலவாகும். இப்போது கூலி

யாட்களுக்குக் கூலி அதிகரித்துக் கொண்டுவருவதால் ஒரு வண்டிக்குக்கூலி ஜாஸ்தியாகிக் கொண்டே வருகிறது. நாகதாளிப் புதர்களுக்கு அடியில் படிந்திருக்கும்மண்ணானது நிரம்ப எருச்சத்துள்ளது. ஏனென்றால், காற்றில் அடித்து வரும் இலை சருகு முதலியவைகளும் மற்ற இந்திரியவஸ்துக்கள் அடங்கியபொருள்களும் காற்றினால் அடிபட்டுப் புதரினால் தடுக்கப்பட்டு இவைகளின் அடியில் மக்குவதனால், எருச்சத்து ஜாஸ்தியாகிறது. நாகதாளியிலேயே நூற்றுக்கு 60 பாகம் இந்திரிய வஸ்து இருக்கிறதென்று டாக்டர் லேதர் துரையவர்கள் ரசாயனப் பரீக்ஷைசெய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வளவு இந்திரிய சத்துள்ள நாகதாளியை அப்புதர்களுக்கு அடியில் படிந்திருக்கும் எருச்சத்து அடங்கிய மண்ணுடன் சேர்த்து மக்கவைத்தால், அப்படி மக்கின பொருளில் எருச்சத்து ஜாஸ்தியிருக்கு மென்பதில் சந்தேகமில்லை. நமது நிலங்களில் அநேகமாய் இந்திரிய வஸ்து குறைந்திருக்கிற தென்றே சொல்ல வேண்டும். இப்பேர்ப்பட்ட நிலங்களுக்கு நாகதாளியை அதன்கீழ் படிந்திருக்கும் எருச்சத்துள்ள மண்ணுடன் கூட்டி மக்கவைத்து அதை எருவாய் உபயோகப் படுத்தினால், அதிக அநுகூலத்தை உண்டாக்கும். இப்படி நாகதாளியை மண்ணுடன் மக்கவைத்து எருவாக உபயோகிப்பதால், கிருஷிகருக்கு இலேசாய் எரு அகப்படுவதுடன் அநேக விஷயங்களில் தற்காலம் கெடுதியே உண்டுபண்ணிக் கொண்டிருக்கும் இந்த ராக்ஷஸப் பூண்டும் தொலைய ஏதுவாகிறது.

நாகதாளியை மக்கவைத்து எருவாக்க அடியில் சொல்லும் முறைகளைக் கையாடிச் சித்திபெறலாம்:—

(1) ஆறு அடி அகலமும் 3 அல்லது 4 அடி ஆழமும் நமக்கு வேண்டிய அளவு நீளமும் உள்ள பள்ளங்களை சாரல் மழைகளுக்குப் பின்னும், காலமழைக்கு முன்னும் தோண்டித்தயாராய் வைத்திருக்கவேண்டும். மழைக்காலங்களில் கிருஷிகருக்கு வேலை ஒழிந்திருக்கும் சமயங்களில், நாகதாளிப் புதர்களைவெட்டி அப்புறப் படுத்தி இக்குழிகளில் நிரப்பி, இக்குழிகளிலிருந்து எடுத்தமண்ணால் மூடிவிடவேண்டும். சில நாளைக்குள் குழிகளுக்கு உள்ளிருக்கும் சப்பாத்துக்கள்ளி சற்று மக்கி அமுங்கும். அக்காலத்தில் அப்

புறப்படுத்திய சப்பாத்துக்கள்ளிகளின் அடியிலிருக்கும் மண்ணை வெட்டி, இந்த அழுகிய இடங்களில் போட்டு நிரப்பவேண்டும். நல்லமழைகள் பெய்யும் இடங்களில் இது ஒரு வருஷத்துக்குள் மக்கிப்போய் எருவாகும். ஒரு வருஷத்துக்குள் சப்பாத்துக்கள்ளிகளில் இருக்கும் முட்கள் மக்கி இருக்காவிட்டால், இன்னொரு வருஷம் அப்படியே வைத்திருந்தால் அம்முள்ளுகள் நன்றாய் மக்கிவிடும்.

(2) மழைகள் குறைவாய்ப்பெய்யும் இடங்களில் கிருஷிகருக்குச் சாவகாசமிருக்கும்போதெல்லாம் நாகதாளியை வெட்டி எங்கெங்கே சௌகரியமாயிருக்குமோ அவ்விடங்களில் குவித்துக்காய விடவேண்டும். அதன்மேல் காய்ந்த புல் சருகு கூளம் முள் முதலியவைகளை குவியல்கள்மேல் பரப்பி நெருப்புவைத்தால் முட்கள் அநேகமாய்ப் பொசுங்கிப்போகும். இச்சமயத்தில் இக்குவியல்களின்மேல் நாகதாளிப் புதர்களுக்கு அடியில் படிந்த மண்ணைக் கொண்டுவந்தாவது அல்லது அக்கம்பக்கத்தில் அகப்படக்கூடிய மண்ணைச்சேர்த்தாவது மேலேபோட்டுமூடி உள்ளிருக்கும்வஸ்து மக்கும் வரை வைத்திருந்தால், இரண்டு மூன்று வருஷங்களில் நிலங்களுக்கு எருவாக உபயோகிக்கக்கூடிய ஸ்திதியில் வந்துவிடும்.

(3) மேற்சொல்லிய இரண்டு விதங்களும் செய்யப்போதிய இடமில்லாவிட்டால், மாடுகள் கட்டிச் சுண்ணாம்பு அறைக்கும் ஆலைகளைப்போல் அமைத்து, சுண்ணாம்புக்குப் பதிலாய் நாகதாளியைப் போட்டுச்சுண்ணாம்பைப்போல் அரைத்தால், நாகதாளியில்தண்ணீர் அதிகமாயிருப்பதால், அரைமணிநேரத்துக்குள் நன்றாய் அரை பட்டுக்கொளகொளவென்று ஆகிவிடும். அதை மண்வெட்டிகொண்டு அப்புறப்படுத்திக் குழிகளில்போட்டு அதன்மேல் மண்கொட்டிமூடி வைத்திருந்தால், ஜல்தியாய் மக்கி எருவாய்விடும். முட்களும் நீட்டமாய் நிற்காமல் படுத்திருக்குமாதலால், அவைகள் தைக்காது. இப்படித் தயார்செய்தால் ஆறுமுதல் எட்டுமாதத்துக்குள் இது எருவாய் உபயோகிக்க லாயக்காகிவிடும்.

மேலேசொன்ன உபயோகத்தைத் தவிர நாகதாளி வேறுவித மாயும் உபயோகமாகும். நாகதாளியை நறுக்கி வேகவைத்து அப்

புறப்படுத்தியபின் இருக்கும் தண்ணீரைச் சுண்ணாம்புடன் கலந்து வெள்ளையடிக்க உபயோகப்படுத்தலாம். இப்படி வெள்ளையடித்த சுண்ணாம்பு சுவர்களில் ஒட்டிக்கொள்ளுகிறதேதவிர மேலே ஒட்டுகிறதில்லை. ஒருபாளை அல்லது சட்டியில் ஈகதாளியை சிறுசிறு துண்டுகளாக வெட்டிப்போட்டு அது நிறையத்தண்ணீர் ஊற்றிச் சுமார் 3 மணிநேரம் வரையில் நன்றாய்க்கிளறி வேகவைத்து, அது ஆறினபின், அதிலிருக்கும் வெந்த தண்ணீரை வடிகட்டி, வெள்ளையடிக்கத் தயார்செய்திருக்கும் சுண்ணாம்பு அல்லது கோபிக்கு-150 பாகம் சுண்ணாம்பு ஜலத்துக்கு ஈகதாளியின் வெந்து வடிந்த தண்ணீரை ஒருபாகம் ஊற்றிக்கலந்து வெள்ளையாவது அல்லது கோபியாவது அடித்தால், அவைகள் ஜாஸ்திநிறமாயிருப்பதோடு சுவரிலும் நன்றாய் ஒட்டிக்கொள்ளுகிறது. சுவர்களில் ஜனங்கள் சாய்ந்தாலும், அது துணி முதலியவைகளில் ஒட்டிக்கொள்வதில்லை. சாதாரணமாய்ச் சுவர்களின்பக்கத்தில் உட்கார்ந்து, அதிற்சாய்ந்துகொள்ளும் வழக்கமுடைய நமது இந்திய வீடுகளில், புதிதாய் வெள்ளையடித்திருக்கும் சுவர்களின்மேல் சாய்பவர்களுடைய துணியிலாவது உடம்பிலாவது ஒட்டாமலிருப்பது ஒரு பெரிய அனுகூலம்.

J, செல்வரெங்க ராஜு.
விவசாய உதவி டைரக்டர்.
ஸென்ட்ரல் டிவிஷன்.

குறிப்பு:—இவைகளை எருவாக உபயோகிப்பதில் தென்னம்பிள்ளைகளை வைக்கிற குழிகளில், மணலுடன் கலந்து நீர் அருந்தலாகவுள்ள விடங்களில் வைத்தால், தென்னம்பிள்ளைகள் பட்டுப்போகாமல் ஈரத்தை வேர்களில் காத்து நன்றாய்க் கிளம்பும். இதை மன்னார்குடி தாலூகாவிலுள்ள ஆடுகள் தின்று ஜீவிக்கின்றன. மேற்படி ஆடுகளுக்கு அங்கு நல்ல புல் எப்பொழுதும் கிடைப்பதில்லை. சப்பாத்துக்கள்ளியில் இருக்கும் முள் அதன் வாயில் குத்தியும் அதைப்பாராட்டாது அந்த வாயில்லா ஜீவன் இதையே ஜாஸ்தி ஆகாரமாக உட்கொள்வதை நாம் அநேகதடவைகளில் பார்த்திருக்கிறோம்.

சு. மீ.

ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகள் சரித்திரம்.

பக்திரஸம் பெருகப் பெருகப் பாடப்பெற்றனவாகி, இன்றைக்கும் நந்தமிழ் நாட்டிலுள்ள பெரும்பாலாரையும் சிவபிரானுடைய திருவருளுக்குப் பாத்திரராக்குவிப்பன, தமிழ் வேதங்களான தேவாரங்களே யாகும். இவை தேவதேவனாகிய பரமேசுவரனுக்குப் பூமாலைகள் போலணிவிக்கப் பெற்ற பாமாலைகளாகத் தொடுக்கப்பெற்றனவாகலின், அப்பெயர் பெற்றன போலும். இத்தேவாரங்களே நந்தமிழ் நாட்டிலும்மனைய நாடுகளிலும் சிவபக்தியைப் பரவச்செய்து சைவமதத்தினை வளர்த்துக் கொண்டிருக்கின்றனவென்று சொன்னாலும் இழுக்காகாது என்று எண்ணுகிறேன். இவ்வரிய பெரிய அருட்பாக்கள் நமது ஸமய குரவர்களால் பாடப்பெற்றனவேனும், அவை ஒருங்கு சேரத் திரட்டப்பெற்று அளிக்கப்பெற்றிராவிடின், அவற்றின்பெருமையையும் அருட்பெருஞ்சோதியின் கருணையையும் நாம் அறிந்துகொள்வது துர்லபமாகவே முடிந்திருக்கும். ஆகலின், அவற்றைத் திரட்டிக் கொடுக்கும் செயலான இப்பேருதவியைச் செய்துயர்ந்தவராகிய பெரியவரது சரித்திரத்தையே இங்கு எழுத எடுத்துக்கொண்டிருக்கிறேன். இவரே நமது நம்பியாண்டார் நம்பிகள். இவர்கள் தேவாரப் பாக்களாகிய தமிழ் வேதங்களைத் தொகுத்தமை பற்றி, இவர்களுக்குத் தமிழ்வ்யாஸர் என்னும் ஒரு அருமைப் பெயரும் வழங்கி வருகின்றது. இவரைப்போலவே வைணவத்திலும் ஸ்ரீமந் நாதமுனிகள் என்பார் ஆழ்வார்களது ப்ரபந்தங்களைத் தொகுத்துள்ளார்கள்.

உலகில் உத்தமமான சாஸ்திர உண்மைகளென்று சொல்லப்பட்டுவரும் அரிய பெரிய விஷயங்களையெல்லாம் ஆராயப் புகுந்தால், அவைகள் ஆச்சரியமானவும் உலகவிசித்திரமானவுமான ஆரம்பங்களையே கொண்டிருக்க நாம் அறிகிறோம். பெரிய பெரிய நதிகளெல்லாம் ஆச்சரியமான சிறிய இடங்களிலிருந்து தோன்றிப் பிறகு, லோகபாவனமான பெரியதோற்றத்தை யடைந்திருப்பன போலவே, இவ்விஷயங்களும் இருக்கின்றன. அப்படியே நம் முயிர்க் குறுதிதரும் அருமைத்தேவாரத் தொகுப்பினது பிறப்பும், ஒரு சிறு பிராமணச் சிறுவராகிய நம்பியாண்டார் நம்பிகளிடமிருந்து வெளிப்பட்டிருக்கக் காண்கிறோம். பூதிஸாதன முறையாகிய சைவமதத்தை அவலம்பித்துயர்ந்து, திருவாரூரிலிருந்து ஆண்டுவந்த ஸ்ரீ அபயதுலசேகரசோழன், பரமசிவ பக்தியில் ஆழ்ந்து ருசித்துதித்துத் தாமடைந்துள்ள இன்பத்தையும் முக்திப்பேற்றையும் உலகினர்க்குக் கைம்மாறு வேண்டாதுதவினவர்களாகிய ஸ்ரீ அப்பர் சுந்தரர் சம்பந்தர் ஆகிய பெருவள்ளலார்களுடைய அருமைத் திருவாக்குகளினின்றும் எழுந்த பக்திரஸப்பாடல்களின் சிலவற்றைத், தமது ஸபைக்கு விஜயஞ்செய்யும் பல சைவத் திருவாளர்களினுடைய வாக்கிலிருந்து கேட்டுக்கேட்டானந்தித்துக் கொண்டிருந்தான். ஒருநாள் அவற்றையெல்லாம் ஒருசேரத் தொகுக்கவேண்டும் என்ற ஆசை அரசனுக்குதித்தது. பிறகு, தன்னாலியன்றவரையில் முயன்றும் அது கைகூடாமற் போயிற்று. அதனால் அரசன் மனோவியாதிகொண்டு மயங்கினவனாகவே இருந்தான். அவனது மயக்கத்தைத் தீர்த்து மனோவ்யாதியைப் போக்கினவர் நமது நம்பிகளேயாவர். அவர்களைப்பற்றித் தெரிந்தவரையில் சுருக்கமாக இங்கே குறிக்கத்தொடங்குகின்றேன்.

நம்பிகளது குடும்பவரலாறும் பால லீலைகளும் நமக்கு அதிகமாகத் தெரியாவிடினும், அவரது இளம்பிராயத்தில் நடந்துள்ளதோர் அற்புதச்செயல் நமக்குத் தெரிந்து கொள்ளக்கிடைத்திருக்கிறது. இஃது ஒன்றே இவரது சரித்திரத்திலிருந்து அறிந்து கொள்ளவேண்டியவைகளில் முக்கியமானதாகும்.

இவர்கள் ஆதிசைவர்களுடைய குலத்தில் உற்பவித்தவர்கள். இவர்களது பிதா, நாரையூரில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளி

யிருக்கும் பொள்ளாப்பிள்ளையார் என்று திருநாமம்பூண்ட ஸ்ரீ கணேசப் பெருமானை அர்ச்சித்துக் கொண்டுவரும் பாக்கியம் பெற்றவர். இந்தப்பாக்கியம் இவருக்குப் பரம்பரையாகக் கிடைத்த தொன்றாகும்.

நமது நம்பிகள் உலகமுறைப்படி உபநயனவிதியினால் பரிசுத்த ராக்கப்பட்டிருந்தபோது, ஒருநாள் பிதா, தான்வழக்கப்படிச் செய்யவேண்டிய கணேச பூஜையைச் செய்யும்படித்தமது புத்திரருக்குக் கட்டளையிட்டுத், தாம் அயல் கிராமத்திற்குச்சென்றார். பிறகு நம்பிகள் மிகக் களிப்புடன், அந்தக்கைங்கரியத்தைச் செய்தருளுவதாக ஒப்புக்கொண்டு, தமது அந்தப்பால்ய வயதிலும் ஊரா ரெல்லாரும் ஆச்சரியப்பட, மிகுந்த பக்தி விநயத்துடன் நிவேதனம் முதலியவற்றைத் திருக்கைகளிலேந்திக்கொண்டு கோயிலுக்குட்சென்று, விதிப்படி வணக்கம்புரிந்து, பூஜையை நியமத்துடன் செய்து முடித்தார்கள். பூஜை முடிந்தவுடன், தாம் கொண்டுவந்திருந்த நைவேத்யங்களை ஸ்வாமியின் திருமுன்வைத்து, அவற்றை யமுதுசெய்தருளும்படி மிகுந்த பக்தியுடன் வேண்டினார்கள். கணேசப்பெருமான் வாளாவிருந்தனர். நம்பிகளோ, பின்னும் பின்னும் வேண்டினர், ஸ்வாமியோ வழக்கமில்லாதவர் போலவே, நம்பிகளது ப்ரார்த்தனையைத் தலைக்கட்டிக்கொடாமலே இருந்து விட்டார். நம்பிகள் வருந்தி, 'தமது பிராயச்சிறுமையால் தம்மைப் பார்த்தரல்லாராக ஸ்வாமி நிராகரித்து விட்டார்' என்று எண்ணி யெண்ணி மிகவும் கவன்று, பொறாதவர்களாகி, 'ஸ்வாமி பூஜைக்கு அர்ஹனல்லாத நான், இருந்தென்ன இறந்தென்ன'வென்று நிர் மானித்து, தமக்கு நேரிலிருந்த ஒரு கற்றூணில் தமது சிரசினை மோதிக்கொள்ள ஆரம்பித்தார்கள். உடனே ஸ்வாமி, அவருடைய பக்திக்கும் உறுதிக்கும் கட்டுப்பட்டவராகிப் பிரஸந்நராய், அவரது விருப்பப்படியே அவர்கொண்டுவந்து சமர்ப்பித்திருந்த நைவேத்யங்கள் யாவற்றையும் உட்கொண்டு அவரை மகிழ்வித்தார்.

நம்பிகள், மிகவும் ஸந்தோஷங் கொண்டு, அன்றுமுதல் பரிசுத்தமான நைவேத்யங்களை ஸ்வாமிக்குத் தவறாமல் ஸமர்ப்பித்து வந்து, அவரது பரமகருணைக்குப் பாத்திராகித் தாமும் பக்தியில்

மூழ்கித்தம் உடல் பொருள் ஆவி மூன்றும் அக்கணேசப் பெருமானதெனவே நினைத்து, அவரைத்தமது பரமாசாரியனாகக் கொண்டு, அவரது திருவருளால் யாவும் கற்க முயன்றார்கள். ஸ்வாமியும், ஸம்மதி கொடுக்க, அன்றுமுதல் நம்பிகள், பள்ளிக்குப் போவதை நிறுத்தி விட்டார்கள். யாவரும் ஆச்சரியப்படும்படி நமது நம்பிகள் வெகு விரைவில் பலசாஸ்த்ர பாரங்கதராக விளங்கினார்கள். இந்த விதமான படிப்பின் முதிர்ச்சியும் பக்தியின் பெருக்கமும் தோன்றவே, அப்போது அவர்கள், ஸ்வாமி மேல் ஸ்தோத்ரமாக முப்பது செய்யுட்களடங்கிய இரட்டைமணிமாலை என்னும் க்ரந்தத்தைச் செய்தருளினார்கள்.

இவர்களது ஆச்சர்யகரமான இச்செயல்களெல்லாம், அபயகுல சேகரசோழனது செவிகட்கெட்ட, தான் மிகுந்த பக்திமானாயினும், அந்தஆச்சர்யச்செயல்களில் நம்பிக்கைகொள்ளாதவனாகி, ஒருமுறை பரீக்ஷிக்க வேண்டுமென்றே, தான் நாகையூருக்கு நேரேசென்று நம்பிகளைக்கண்டு, தனக்கு நேரிலே ஸ்வாமியைநைவேத்யஸ்வீகாரம் செய்யச் செய்யும்படி கேட்டுக்கொண்டான். நம்பிகளும் ஸம்மதித்துக் கொண்டார்கள். அரசனுடைய கட்டளையால் அபரிமிதமான பழவகைகளும் பக்ஷ்யவகைகளும் நைவேத்யமாக ஸமர்ப்பிக்கப்பெற்றன. நம்பிகளும் பூஜையைச் செய்து முடித்து, அமுது செய்தருளும்படி, ஸ்வாமியை மிகுந்த வணக்கத்துடன் ப்ரார்த்தித்தார்கள். ஸ்வாமியும் தமதுபக்தரது மனதைத் திருப்தி செய்வதற்கும், அரசனது ஸந்தேஹத்தை பொழிப்பதற்கும் திருவுள்ளங் கொண்டு தமது துதிக்கையை நீட்டி, அங்குச் சேர்த்து வைக்கப்பட்டிருந்த நைவேத்திய மெல்லாவற்றையும் மூன்று முறையாகக் கிரஹித்து அமுது செய்தருளினர். அரசன், ஆச்சரியமும் நடுக்கமும் கொண்டு, நம்பிகளின் பாதங்களில் வீழ்ந்து, தான் கொண்ட அற்பவெண்ணத்துக்காகத் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டான். நம்பிகளும் அவனுக்கு அருள் செய்தார்கள். அரசனும் அன்று முதல் தனது ஆசாரியராகக் கொண்டு அவரை வழிபட்டு வந்தான்.

இப்படி யிருக்க, ஒருநாள் இம்மஹான் மூலமாகவே சிதறிக் கிடக்கும் தேவாரங்களைத் தொகுத்து வெளிப்படுத்த முயலவேண்டு

மென்று ஒரு எண்ணம் உதித்தது. அந்த அபிப்பிராயத்தை நம்பிகளிடம் சொல்லிப் பிரார்த்திக்க, நம்பிகளும், அவனது பிரார்த்தனையை நிறைவேற்றுவதாக வாக்களித்தார்கள். உடனே திருக்கோயிலுட்சென்று கணேசப் பெருமானது திருவருளை வேண்டிநிற்க, அப்போது அவர்களது உள்ளத்தில் ஒருகாட்சி தோன்றிற்று. அஃதாவது—தேவாரப்பாக்கள், சிதம்பரத்திலுள்ள சித்ஸபைக்குப் பின்னுள்ள ஓர் அறையில், இருப்பதாகக் கண்டதே. இதுமாத்ரமன்றிப் பலநாயன்மார்களது சரித்திரச் சுருக்கங்களையும் ஸ்ரீகணேசப் பெருமானுடைய திருவருளாலேயே பெற்றுக்கொண்டார்கள்.

உடனே, அரசனுக்குத் தெரிவித்து, அவனுடனே கனகஸபையாகிய சிதம்பரத்துக்குச்சென்று, அங்குள்ள தில்லைமூவாயிரம்பிராமணர்களைத் திருப்தி செய்யும் பொருட்டாகவே, ஸ்ரீநடராஜப் பெருமான் பேரில் எழுபது பாடல்கள் பாடிச் சூட்டினார்கள். என்றாலும், அம்மூவாயிரவரும் அவரது வேண்டுகோட்குச் செவிகொடுக்கவில்லை. அரசன் வற்புறுத்திக் கேட்டபோதும், அந்தத் தீக்ஷிதர்கள் "தேவாரங்களைத் திருவாய்மொழிந்தருளிய அம்மூவரே வந்து கேட்டாலொழிய அவை அங்கிருந்து வெளியேற்றப்படமாட்டா" வென்று சொல்லிவிட்டனர். உடனே அரசன் அவர்களைக் கோபியாமல், அந்த மூன்று ஆசாரியர்களையும் உத்ஸவ கோலத்துடன் நாட்டிய சபைக்கு நேரே எழுந்தருளப் பண்ணுவித்துத், தீக்ஷிதர்களை வேண்டி நிற்க, அவர்களும் ஆஸ்திகர்களாதலால், ஸந்தோஷங்கொண்டு அரசனுக்கு அவற்றை அளிக்க ஸம்மதித்தனர். உடனே அவைகள் வெளியே கொண்டு வரப்பெற்றன. உடனே, அந்த ஏடுகளை மூடியிருந்த மண்ணையும் அழுக்கையும் ஒதுக்கவே அவற்றிற் பெரும்பாகம் செல்லரித்திருக்கக் கண்ட அரசன், தனது ப்ரயத்னங்கள் எல்லாம் வீணானது தெரிந்து துக்கித்தான். எனினும், அங்குள்ள எல்லார் செவியிலும் விழும்படி ஓர் அசரீரியான வாக்கு எழுந்து, 'அரசே! இந்தக் காலத்துக்கு வேண்டியவளவே பத்திரப்படுத்தப்பட்டு, மற்றவை எம்மாலேயே மறைக்கப்பெற்றுள்ளன. இவற்றைக் கொண்டு பூதிஸாதனத்தைப் பூர்த்தி செய்வாய். கவலைப்படாதே' என்றுசொல்லி அவனைக் களிக்கச் செய்தது. பிறகு அரசன், அவற்றைத் தொகுக்

தருளும்படி நமது நம்பிகளைப் பிரார்த்திக்க, அவர்களும் அப்படியே செய்தார்கள்.

ஸ்ரீஞானசம்பந்தப் பெருமானது திருப்பாசுரங்கள் மூன்று திருமுறைகளாகவும், வாகீசரது பாசுரங்கள் மூன்று திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்திகளது பாசுரங்கள் ஒரு திருமுறையாகவும் கோக்கப் பெற்றன. பின்னர் எட்டாவதாக மணிவாசகப் பெருமானுடைய அருளிச் செயலும், திருமூலரது திருமந்திரம் பத்தாவதாகவும் சேர்க்கப் பெற்றன. திருமாளிகைத் தேவர் முதலிய எண்மருடையபாசுரங்களை ஒன்பதாவதாகக்கோத்தார்கள். கடைசியில் பதினொன்றாவது திருமுறையாக திருவாலவா யுடையார் முதலிய பதினொருவருடையவும் நம்பியாண்டார் நம்பிகளுடையவுமான பாசுரங்கள் கூட்டப் பெற்றன.

இதன்மேல், நமது நம்பிகள், பொள்ளாப் பிள்ளையார் அநுக்கிரஹித்த வண்ணமாக, பல நாயன்மார்களுடைய வைபவங்களையும் சுருங்கச் சொல்லி, அந்தாதித் தொடையாக எண்பத்தொன்பது பாசுரங்களைச் செய்தருளினார்கள். இந்த நூலே, பக்திக் கடலாகிய சேக்கிழார் ஸ்வாமிகள் தொண்டர் புராணம் செய்தளிக்கத் தக்கதொரு முதனூலாக இருந்ததென்பர். நாயன்மார் பலருள், நமது நம்பிகட்கு, ஸ்ரீ ஆளுடைப்பிள்ளையாகிய ஞானசம்பந்தப் பெருமானிடமே பக்தி பெருகியிருந்ததென்பர். நம்பிகள், வேதநெறியும் சைவத்துறையும் தழைத்தோங்க வந்தவதரித்த ஸம்பந்தமூர்த்திகள் பேரில் தனித்தனியாக ஆறுக்ரந்தங்கள் அருளிச் செய்திருக்கின்றார்கள். திருநாவுக்கரசுகட்கும் ஒரு ஏகாதசமாலை பாடியருளியிருக்கிறார்கள்.

இவைகள் இவ்வண்ணம் தொகுக்கப்பட்டனவேனும், அவற்றைத் தக்க பண்ணுடன் ஓதவல்லாரைக் காணாது, நம்பிகளும் அரசரும், மிகமலிவுற்றுப்பின்னர் செய்தவிசாரணையில், திருநீலகண்டப் பெரும்பாணரது வமிசத்தில் உதித்துள்ள ஒரு பெண்ணரசிக்கு, இவற்றைப் பண்ணுடன் ஓதும்முறை வழிவந்துளது என்று தெரிந்துகொண்டு, அந்த அம்மை வாழ்ந்திருந்த கிராமத்துக்குச்

சென்றார்கள். அக்கிராமம் எருக்கத்தம்புலியூர். அஃது இப்போது சிதம்பரம் தாலூக்காவைச் சேர்ந்த ராஜேந்திரபட்டணமாக இருக்கிறது. அரசன் உடனே அங்குச்சென்று, அந்த அம்மையை மிக்க மரியாதையுடன் பல்லக்கில் ஏற்றிக் கனகஸபைக்கு அழைத்துவந்து ஸ்ரீ நடராஜப்பெருமானது ஸந்நிதியில் ஓதும்படி வேண்டினான். அம்மையும் அங்ஙனமே ஓதிவர, அரசனது ஆணைபால், சிலசைவர் அதனைக்கவனத்துடன் ஏற்றுத் தங்கள் பரம்பரையில் அந்தப்பண் முறையைப் பரவ விட்டனர். இச்சைவர்களே இப்போது ஓதுவார் களென்று அழைக்கப்படுகிறார்கள் என்பர்.

இப்படியாக, நமது நம்பிகள், பின்னர்த் தேவார ரக்ஷகர் என்னும் நாமத்தையும் பெற்றார்கள். அவர்கள், மேலேசொல்லியுள்ளபடி பலவிதமான பக்திக்ரந்தங்களைச் செய்துள்ளார்கள். அவர்கள் இரட்டைமணிமாலை அந்தாதி விருத்தம் மும்மணிக்கோவை உலா-ட்டாலை கலம்பகம் தொகை முதலிய அநேக திவ்யப்ரபந்தங்களைப்பாடியருளியிருக்கின்றார்கள். வடமொழியில் அவர்கள்யாதும் செய்திருப்பதாகத் தெரியவில்லை.

பெரிய புராணமுடையாராகிய சேக்கிழார் ஸ்வாமிகள், நமது நம்பிகள் பாடியருளிய திருத்தொண்டர் திருவந்தாதியையே தமக்கு முதனூலாகக்கொண்டுத் தொண்டர் புராணம் செய்துள்ளாரென்பர். ஆகையால் நம்பிகள் சேக்கிழார் பெருமானுக்கு முற்காலத்தவரெனவே கருதற்கு இடமிருக்கிறது.

சீராருந் திருமுறைகள் கண்டதிறற் பார்த்திபனு
மோராரு மிறைவனையு மெழிலாரு நம்பியையு
மாராத வன்பினுட னடிபணிந்தக் கருள்விரவச்
சோராத காதன்மிகுர் திருத்தொண்டர் பதந்துதிப்பாம்.

சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்.

காரைக்குடி "ரீடிங்ரூம் அண்டு யூனியன் கிளப்" நான்காவது வருஷபூர்த்திக்கொண்டாட்டம்.—இது தைமீ கஉ (21-1-17) இதற்கென்று அலங்காரம்செய்திருந்த காவணத்தில் விமரிசையாக நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு அக்கிராஸனாதிபதியாக வந்திருந்த திருச்சிராப்பள்ளி ஸப்ஜட்ஜ் ஸ்ரீமத் A. S. பாலசுப்பிரமணிய ஐயர் B. A. B. L. அவர்களை இவ்வாசகசாலையின் மெம்பர்களும் ஏனையோருமாகக் காலை 9மணிக்குப் பாண்டுவாத்தியங்களுடன் ஸபைகூடுமிடத்திற்கு அழைத்துவந்து, அக்கிராஸனத்தில் அமர்த்தினார்கள். கடவுள்வாழ்த்துக்கூறி வந்தனோபசாரப்பத்திரமும் படித்தானபின்னர், அக்கிராஸனாதிபதியவர்கள் எழுந்து செய்த முகவுரைப்பிரசங்கம் யாவரும் பாராட்டத்தக்க அரியபல விஷயங்களை அடக்கிக்கொண்டிருந்தது. அவற்றுள் முக்கியமானவை (1) புராதன தருமமும் குலதருமமுமாகிய ஸனாதன தருமத்தை இனியேனும் யாவரும் கைப்பற்றி நடந்து முன்னேறவேண்டும். (2) நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் இதுவரையிலிருந்ததுபோலிராமல் தங்கள் சமூகத்துச் சிறுவர்களுக்கு இனிப்பொதுக்கல்வியையும் வியாபாரக்கல்வி மற்றைத்தொழிற்கல்விகளையும் நன்கு போதிக்கவேண்டிய ஏற்பாடுகளைச்செய்யவேண்டும். (3) நகரத்தார் வியாபாரங்களில் ஏஜண்டுகளையே நம்பிவிட்டுவிடாமல் தங்கள் நேர்ப்பார்வையைச் செலுத்திவரவேண்டும். (4) இவர்களுக்குள் முன்னிருந்த ஜாதியொற்றுமை (எளியாரை வலியார் தாங்கி உயர்த்துவது, கச்சேரியேறாமை முதலியன) மறுபடியும் ஏற்படவேண்டும் என்பனவாம்.

அதன் பின்னர் மதுரை பிரபல வக்கீல்களுள் ஒருவரும், மதுரைத்தமிழ்ச்சங்கத்துக் கௌரவ காரியதரிசியாகி அதன் வளர்ச்சிவிஷயத்திற் கண்ணுங் கருத்துமாயிருந்து வருபவருமாகிய Mr. T. C. ஸ்ரீனிவாஸ ஐயங்கார் B. A. B. L. அவர்களாலும், திருநெல்வேலி Mr. வைரவநாதன் பிள்ளையவர்களாலும் முறையே நாட்டுக்கோட்டையார்களின் வியாபாரமுறை, கைத்தொழில் என்னும் விஷயங்கள் அழகாகப்பேசப்பெற்றன.

மாலையில் பக்தி, ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சர்சரித்திரம், இராஜவிசுவாசம், சேக்கிழார் பெருமை என்பவற்றை முறையே புதுக்கோட்டை காலேஜ், ஸம்ஸ்கிருத பண்டிதர் ஸ்ரீ இராமசாமி ஐயங்கார். ஷை காலேஜ் உதவியுபாத்தியாயர் ஸ்ரீ M. சிதம்பர ஐயர் B. A., மதுரை T. C. ஸ்ரீனிவாஸய்யங்கார்,

B. A. B. L. சென்னை ஸ்ரீ வஸிஷ்டபாரதியார் ஆகிய நால்வரும் பிரஸிங்கித்தார்கள். 5 மணிக்குமேல் டீ பார்ட்டி (Tea party) நடந்தது.

இராத்திரி வீணைக்கச்சேரியும் கதாகாலக்ஷேபமும் நடைபெற்றன. இராஜ வாழ்த்தும் மங்களவாழ்த்தும் பாடப்பெற்று உபசாரங்களுடன் ஸபைபூர்த்தியாயிற்று.

கோநகர் ஞானசம்பந்த நற்சபை.—இதன் மாதாந்தரக்கூட்டம் தைமீ ௰௨ (26-1-17) பிற்பகல் 4 மணிக்குக்கூடிற்று. உள்ளூர் டாக்டர். ஸ்ரீமத் S. A. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் அக்கிராசனம் வகிக்க, க, வி. கலாசாலை உதவியுபாத்தியாயர் ஸ்ரீ அம்பலவாணபிள்ளையவர்கள் திருநீலகண்ட நாயனார் சரித்திரத்தையும்; வித்தியாபாநு பத்திராதிபரும், கம்பராமாயணப்ரசாரகருமாகிய ஸ்ரீ M. V. கோவிந்தராஜஐயங்காரவர்கள் சீதாகலியாணத்தையும்; சொக்கலிங்கம்புத்தூர் மா. வா. வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ ரெ. இராமமூர்த்திஐயரவர்கள் கம்பராமாயணத்திற் சில குறிப்புகள் என்பதனையும்; பலவான்குடி சி. வி. வித்தியாசாலைத்தலைமையாசிரியர் ஸ்ரீ வீ. குமாரவீரய்யரவர்கள் நன்றியறிதல் என்பதனையும்; சிதம்பரம் ஸ்ரீவைத்தியலிங்கசாமியவர்கள் அமர்நீதிநாயனார் சரித்திரத்தையும் முறையே அழகாகப் பிரஸங்கித்தார்கள். இராத்திரி 8மணிக்கு சபைபூர்த்தியாயிற்று.

தேவகோட்டை வைசியசிவானந்தசபை.—இதன் நான்காம் வருஷபூர்த்திக்கொண்டாட்டம் தைமீ ௰௬, ௰௭, ௰௮ (1917ஆ ஜனவரிமீ 28, 29, 30,) தேதிகளில் மிகவும் விமரிசையாய் நடைபெற்றது. இதற்காக அழைக்கப்பெற்றிருந்த வித்வான்களிற் பெரும்பாலாரும் பிரபுக்களும் வந்திருந்தார்கள். சென்ற மூன்று வருஷோத்ஸவங்களைப்பார்க்கிலும் இவ்வருஷோத்ஸவத்தில் ஸபையலங்காரமும், போஜனவசதிகளும் மற்றையேற்பாடுகளும் நன்றாக அமைந்திருந்தன. சபையின் நிரந்தர அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் ராம. மெ. சித. வயிரவன்செட்டியாரவர்களும், மற்றும் இச்சபையின் ஸம்பந்தம்பெற்ற கனதனவான்களும் நகமுஞ் சதையும்போல ஒற்றுமையாயிருந்து ஊக்கத்துடனே காரியங்களை நிர்வகித்தார்கள்.

மூன்றுநாளிலும் சாயங்காலம் 3மணிக்குமேற் சபைகூடிற்று. சுமார் 800 க்குமேற்பட்ட புருஷர்களும், 200 க்குமேற்பட்ட ஸ்திரீகளும் பிரசங்கங்களைக்கேட்க ஆவலோடு வந்திருந்தார்கள். 3 நாளும் சபை ஜனங்களால் நிரம்பியிருந்தது. டிப்டிகலெக்டர் ஸ்ரீமத் ராய்பகதூர் T, N. சிவஞானம்பிள்ளைய

வர்கள் மூன்றுநாளும் அக்கிராசனம்வகித்து மிகவும் சிறப்பாக நடத்தினார்கள். முதனாள் ஞாயிற்றுக்கிழமை மூன்றுமணிக்கு வாத்திய கோஷங்களுடன் அக்கிராஸநாதிபதியவர்கள் ஸபைக்கு வரவேற்கப்பட்டார்கள். கடவுள் வாழ்த்தும் இராஜவாழ்த்தும், தேவாரதியருட்பாக்களும், இக்கரத்தரும.வித்தியாஞானோதய சங்கத்தின் நிர்வாகத்தில் நடைபெறும் வைசியமித்திரன் பெண்பாடசாலையின் மாணவிகளாலே பாடப்பெற்றன. ஸபாநாயகரின் வரவேற்பு உபசாரபத்திரத்தைக் காரியதரிசி ஸ்ரீமான் நாக. ஆ. ராம. நாகப்பசெட்டியாரவர்களும், வருஷாந்தர அறிக்கைப்பத்திரத்தைக் காரியதரிசி ஸ்ரீமான் உ. ராம, உ. மு. சுப. இலட்சுமணஞ் செட்டியாரவர்களும் வாசித்தார்கள். இதன்மேல் ஸபாநாயகர் சுருக்கமான முகவுரை கூறினர்.

முதனாளில் எழு உபந்நியாசங்கள் நடைபெற்றன, அவையாவன,— (1) கல்வி-முற்கூறிய வைசியமித்திரன் பெண்பாடசாலையின் மாணவி ஞானம்பாள். (2) ஜீவகாருண்ணியம்—ஷை மாணவி அலமேலு (3) மூர்த்தியுபாசனை—திருநெல்வேலி ஸ்ரீ சங்கரமூர்த்தி முதலியாரவர்கள் (தேவகோட்டை சிவாகம சித்தாந்தபரிபாலனசங்கசைவப்ரசாரகர்.) (4) யாழ்ப்பாணம் ஸ்ரீ. வ. மு. இரத்தினேசவரையரவர்கள் எழுதிய "நன்மை நாடல்" என்னும் வியாசம்—சபையின் அங்கத்தினரில் ஒருவராகிய ஸ்ரீ. தி. அ. சு. அ. இராமநாதன்செட்டியாரவர்கள். (5) பிராணாயாமம்— சபையின் அங்கத்தினருள் ஒருவராகிய ஸ்ரீ அரு. லெ. நா. லெ. நாராயணன் செட்டியாரவர்கள். (6) கம்பன்— மதுரை ஹைகோர்ட்வக்கீல் ஸ்ரீ T. C. ஸ்ரீனிவாஸ ஐயங்காரவர்கள். (7) நட்பு—மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்க அக்கிராசனாதிபதி ஸ்ரீ. ம. கோபாலகிருஷ்ணையரவர்கள். (8) பெண்மக்கட்குரிய படிப்பு—மதுரை விவேகோதயம் பத்திராதிபர் ஸ்ரீமதி வி பாலாம்பாள் அம்மாள்.

இப்பிரசங்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ருசியுள்ளனவாயிருந்தன. (பின்னிரண்டு நாளும் இவ்வாறேயாம்.) ஸபாநாயகரவர்கள் ஒவ்வொரு பிரசங்கத்திற்கும் சுருக்கமான அபிப்பிராயங்கூறினார்கள்.

இரண்டாநாளில் ஒன்பது பிரசங்கங்களும், மூன்றாநாளில் ஐந்து பிரசங்கங்களும் நடைபெற்றன. அவையாவன — இரண்டாநாள் (1) பொதுவிஷயக்குறிப்புகள்— புதுக்கோட்டையைச்சேர்ந்த போசம்பட்டி சர்க்கார் ஸ்கூல் ஹெட்மேச்சர் ஸ்ரீ ஆர். மீனாட்சி சுந்தரமையரவர்கள். (2) பெரியாரைத்துணைக்கோடல்—திருவையாற்று ஸம்ஸ்கிருத காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. சந்தானமையங்காரவர்கள். (3) மனிதவாழ்க்கையும் அதன்பயனும்—பலவான்குடி சி. வி. வித்தியாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ குமாரவீரையரவர்கள். (4) புலவர் மனத்தூய்மை—காரைக்குடி தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ S. சிதம்பரையரவர்

கள். (5) பக்தி—காரைக்குடி அஷ்டாவதானம் ஸ்ரீ சாமிநாதையரவர்கள். (6) ஜீவகாருணியம்—சபையின் அங்கத்தினருள் ஒருவராகிய ஸ்ரீ பள. வெ. சு. இலட்சுமணஞ்செட்டியாரவர்கள். (7) ஒழுக்கமுங் கல்வியும்—கோனாபட்டு க. வி. கலாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ பண்டித அ. கோபாலய்யரவர்கள். (8) கடவுள்—பாளையங்கோட்டை நாட்டுக்கோட்டை வைசியம் பத்திராதிபர் ஸ்ரீ. ப. சொ. ஆண்டியப்பபிள்ளையவர்கள். (9) நாளைக்கு ஆகட்டும் என்ற நமது வழக்கம்–போசம்பட்டி ஸ்ரீ ஆர். மீனாட்சிசுந்தரஐயரவர்கள்; மூன்றாநாள் (1) சிவஞானசொரூபம்–தேவகோட்டைப் போஸ்டுமாஸ்டர் ஸ்ரீ கலியாணசுந்தரமையரவர்கள். (2) இயம நியமம்–திருநெல்வேலி ஸ்ரீ ப. சிதம்பரநாத பிள்ளையவர்கள் (3) மேன்மக்கள்– புதுவயல் ஞானப்பிரகாசசபைக் காரியதரிசி ஸ்ரீ. வீ. ஆர். சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள். (4) மெய்யுணர்வு–சொக்கலிங்கம்புத்தூர் மா. வா. வித்தியாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ ரெ. இராமமூர்த்தியையரவர்கள். (5)இல்லறம்–கண்டனூர் ஸ்ரீ. தெ. அரு. சித. இராமநாதஞ்செட்டியாரவர்கள்.

இரண்டாநாளிற் பிரஸங்க முடிவதற்கே அதிகநேரம் ஆய்விட்டதனால் ஸபாநாயகரவர்கள் அபிப்பிராயக்கூறுவதை நிறுத்திவைத்திருந்து மூன்றாம் நாளிற்சேர்த்துச் சுருக்கமாகக்கூறி முடிவுரையுங் கூறினார்கள். முடிவுரையில் முக்கியமானவை—தேவகோட்டையிலுள்ள சீமான்களும் சீமாட்டிகளும் கல்விகற்பதற்காக ஒரு துரையையும் துரைசாணியையும் அதிகத்திரவியங் கொடுத்தாவது தருவிக்கவேண்டுமென்பதும், தேவகோட்டையிலே ஒரு ஹைஸ்கூல் உடனே ஏற்படுத்தவேண்டுமென்பதுமாம். 'இப்பொழுது நடைபெறுங் கொடியயுத்தத்தில் நமது சக்கிரவர்த்திக்கு ஜயமுண்டாகவேண்டும்.' என்னும் பிரார்த்தனையை இராஜப்பிரதிநிதியவர்களுக்கும்; 'சென்னைச்சர்வகலாசங்கத்தினால் இப்பொழுது அனுதாவு செய்யப்பட்டிருக்கும் தேசபாஷைக் கல்வியை இனிக்கட்டாயப் பாடமாகவைக்க ஏற்பாடுசெய்யவேண்டும்' என்னும் பிரார்த்தனையைச் சென்னை கவர்ண்மெண்டுக்கும் தந்திமூலம் தெரிவிக்கும்வண்ணம் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இரண்டாவது தீர்வானத்தை பிரேரணைசெய்தவர், சபையின் போஷகர்களுள் ஒருவராகிய ஸ்ரீமான்—அரு. லெ. நா. லெ நாராயணன் செட்டியாரவர்கள். இத்தீர்மானம் முதல் தீர்மானத்தைப்போலவே மிகவும் முக்கியமானதென்பதைப்பற்றிச் சுருக்கமாகவும் அழகாகவும் பேசினார்கள். இத்தகையாராது நன்முயற்சியே ஸபைகளின் வளர்ச்சிக்குக்காரணமாகும். பின்னர், வந்தனோபசாரங்களுடன் இராஜவாழ்த்தும் கடவுள்வாழ்த்தும் பாடப்பெற்று, சபை நன்குநிறைவேறியது.

இராயவரம் சாரதாவிலாசஸபை.— இதன்மாதாந்தக்கூட்டம் தைமீ ௰௫ உ (29-1-17) பிற்பகல் 3½ மணிக்குமேல் நடைபெற்றது. சோளங்கிபுரம்

சைவசித்தாந்த சரபம் ஸ்ரீமத். சிவ. அருணகிரிமுதலியாரவர்கள் அக்கிராசனம் வகிக்க, உளளூர் வித்தியாசாலை மாணவர் சேஷையர் என்பவர் 'வித்தை' யென்பதனையும்; காஞ்சிபுரம் ஸம்ஸ்கிருதவித்வான் ஸ்ரீ மீனாட்சிசுந்தர திட்சிதரவர்கள் பக்தி யென்பதனையும் பற்றிப் பிரசங்கித்தார்கள். இரவு 8½ மணிக்குச்சபை பூர்த்தியாயிற்று.

பலவான்குடி மணிவாசக சங்கம்.

நள ஆ தை மீ உரு உ

திருவருட்பேற்றால் இன்று நம்மணிவாசக சங்கத்தின் மாதாந்தக்கூட்டம் கூடிற்று. கோநகர்க், கற்பகவிநாயக வித்தியாசாலைத்தலைமையாசிரியர் பிர்ம்மஸ்ரீ பண்டித அ. கோபாலையரவர்கள் தலைமைவகித்து அழகிய முன்னுரை கூறியபின், கோநகர்க் கற்பகவிநாயககலாசாலை உதவியுபாத்தியாயர் பிரம்மஸ்ரீ ஆழ்வாரையங்காரவர்கள் ஈகை யென்னும் விஷயத்தையும்; சிதம்பரம் ஸ்ரீமத் வைத்தியலிங்கசாமிகள் திருஞானசம்பந்தசாமிகள் சரித்திரத்தையும்; தேவகோட்டை ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகரவர்கள் கேள்விமுயல் என்னும் விஷயத்தையும் தக்க நூற்பிரமாணங்களோடு மிகவழகாக யுபந்நியசித்தார்கள். தேசிகரவர்கள் இடையிடையே தமிழ்மறையோதி மனங்குளிரச்செய்தார்கள். முடிவில் தலைவரவர்கள், உபந்நியாசங்களின் அபிப்பிராயங்களைக்கூறி, மேற்சொன்ன ஈகை சிவனடியார்தன்மை கல்வி கேள்வியுடைமை என்னும் மூன்றிற்கும் உதாரணமாயிருந்த ஸ்ரீமான் பாண்டித்துரைச்சாமித் தேவரவர்கள் தமிழ்ச்சங்கத்தைநிறுவிய விவரத்தையும், சங்கமாணவர்களையும் வித்துவான்களையும் அன்போடாதரித்தபெருங்கருணையையும், அத்தேவரவர்கள்தமிழினிடத்துக் கொண்டிருந்த உண்மையான நல்லெண்ணமே இப்பொழுது பலவிடங்களிலும் செந்தமிழ்ச்சபைகளும் கலாசாலைகளும் அவற்றை ஆதரிக்குஞ்சீமான்களும் தோன்றினமைக்குக் காரணமென்பதையும், இன்னும் இவைவிருத்தியாகும் என்பதையும் தம்மனுபவவாயிலால் எடுத்து மொழிந்து முடிவுரை கூறினமை கேட்டோர் வியக்கத்தக்கதாயிருந்தது. வந்தனோபசாரங்கூறி ஆசந்தனிகள் வழங்க சங்கம் இனிது நிறைவேறிற்று. சண்முகநாதன்.

வர்த்தமானங்கள்.

காசி ஹிந்து யூனிவர்ஸிடி.

இதனது கோர்ட் என்னும்சபைக்கு ஸ்ரீ பாலகங்காதர திலகரவர்களையும் ஒரு மெம்பராக மேற்படி யூனிவர்ஸிடிக்கு நன்கொடைசெய்தவர்கள் தேர்ந்

தெடுத்திருக்கின்றனர். இந்தக்கோர்ட் 'என்னும் சபைக்கு 30 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர்.

ராவ் பகதூர் A. C. பிரணதார்த்திஹர ஐயர்.

இவர் காலஞ்சென்ற ராவ் பகதூர் M. ரங்காச்சாரியாரவர்களுக்குப் பதிலாக புஸ்தகப்பதிவு ரெஜிஸ்டராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். இவர் கல்வியிலாகாவில் இஸ்பெக்டராகவிருந்து நல்ல பேரெடுத்து பென்ஷன் பெற்றிருப்பவர்.

ஓர் ஆலயத்திருப்பணி.

தஞ்சாவூர் ஜில்லாவில் திருவாலக்குடி யென்னும் ஒரு திவ்விய க்ஷேத்திரமிருக்கின்றது. இதிலுள்ள ஆலயத்தில் பள்ளத்தூர் ஸ்ரீமத் S. M. A. இராமசாமி செட்டியார் அவர்கள் திருப்பணி செய்து வருகின்றனர். இத்திருப்பணி முடிய 10 வருஷம் பிடிக்குமாம். இதற்கு 6 லட்சம் ரூபாய் பிடிக்குமாம். இவ்வாலயத்திற்கருகே ஒரு ரெயில்வேஸ்டேஷனை ஷை திருப்பணிக்காக ஏற்படுத்த அவர் முயற்சிசெய்துவருகின்றனர், அதற்காக 4000 ரூபாய் கொடுக்கவுமுடம்பட்டிருக்கின்றனர். திருவாலக்குடியென்பது நன்னிலம் வெட்டாறு என்னும் ரயில்வே ஸ்டேஷன்களுக்கு நடுவேயிருக்கின்றது.

திருவாங்கூர் மகாராஜாவின் ஷஷ்டிபூர்த்திக் கொண்டாட்டம்.

திருவாங்கூர் மகாராஜாவின் ஷஷ்டி பூர்த்திகாலத்திற்குப் பரோடா மகாராஜாவும், மைசூர் மகாராஜாவும், கொச்சி புதுக்கோட்டை இராஜாக்களும், திவான் பகதூர் ராஜகோபாலாசாரியார் அவர்களும், ஸ்ரீமான் V. P மாதவ ராயரும், ஸ்ரீமான் கிருஷ்ணசாமி ராவ் அவர்களும் விஜயஞ் செய்வார்களென்று தெரிகின்றது.

ஒரு கோடியே ஐந்து லட்சம் போர்வீரர்.

அமெரிக்கா ஐக்கிய மாகாணத்துத் தேசக்காப்புக் கமிட்டியார் இந்தக்ஷணத்திலும் தகுதியுடையவராக ஒரு கோடியே ஐந்து லட்சம் போர்வீரர் சண்டை செய்யத் தயாராயிருக்கின்றனரென்று மதிப்பிட்டிருக்கின்றனர்.

துப்பாக்கி வைத்துக்கொள்ள உத்தரவு.

ஐக்கியமாகாணத்துக் கவர்ன்மெண்டார் கொள்ளைக்கூட்டத்தார் செய்யும் உபத்திரவங்களினின்றும் தப்புவதற்காக ஸக்கேல் என்னுமூரில் வசிக்கும் ஹிந்துக்களும் சிக்கியர்களுமாயுள்ள 49 பேர்க்கும் 39 மகம்மதியர்களுக்கும் பெரிய துப்பாக்கி அல்லது கைத்துப்பாக்கி வைத்துக்கொள்ளலாமென்று உத்தரவு கொடுத்திருக்கின்றனர்.

பாடசாலைகளில் மதபோதனை.

லண்டனில் சில வாரங்களுக்குமுன் ஒரு மீட்டிங் நடைபெற்றது. அதில் பலர் ஒவ்வொருபாடசாலையிலும் ஒவ்வொரு மதபோதகர் அவசியமாகவிருக்க வேண்டுமென்றும், மதபோதனையில்லாத கல்வியால் பயனொன்றுமில்லை என்றும் பேசினார்கள். இந்தியாவிலுள்ள பாடசாலைகளில் மதபோதனையில்லாதிருப்பதை நம்மனோர் பெரிதுங் கவனித்தல்வேண்டும்.

ஒரு விசித்திரமான செப்பளின்.

கான்ஸ்டென்ஸ் என்னும் ஏரிக்கருகேயுள்ள பிரெடெரிக் ஷேவனென்னுமிடத்தில் ஒரு செப்பளின் கட்டப்பட்டிருக்கிறது. அது சப்தமில்லாது செல்லுமாம். அதனை ஒருவிதமான காகிதத்தால் மூடிவிடலாமாம். அப்போது அது கண்ணுக்குப் புலப்படாதாம்.

ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமி பூஜை சிவன் கோயிலில் கூடாதாம்.

தூத்துக்குடியிலுள்ள சங்கரராமேசுவர கோயிலில் அக்கோயிலதிகாரிகளுள் சிலர், ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளின் விக்கிரகமொன்று வார்த்து வைத்துப் பூசை நடத்திவரவேண்டுமென்று முயற்சிசெய்து வருகின்றனர். மற்றதிகாரிகள் அவ்வாறு செய்தல் கூடாதென்று தடுத்து சப்கலெக்டருக்கு ஆட்சேப மனு ஒன்றனுப்பியிருக்கின்றனர்.

இந்துக்களை ராணுவத்திற் சேர்த்தல்.

பஞ்சாப் மகாணத்துக் கவர்ன்மெண்டார் பஞ்சாப்பிலுள்ள படித்த வகுப்பாரிலிருந்து ராணுவச்சேவகத்திற்குத் தகுதியானவரைத் தேர்ந்தெடுத்து ஒரு படைசேர்க்க வேண்டுமென்று உத்தரவு செய்திருக்கின்றனர்.

வங்காளக் கவர்னரின் வாக்கு.

வங்காளக்கவர்னராகிய லார்ட் கார்மைகேலவர்கள் சமீப காலத்திற்குள் தமது பதவியினின்றும் நீங்கிச்செல்லுகின்றார். அவர் சென்றவாரத்தில் டாக்கா நகரிலிருந்து புறப்பட்டபோது டாக்கா ஜனசமூகத்தினர் பலர்கூடி அவர்க்குப் பிரிவு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்தனர். அப்போது கவர்னரவர்கள் பேசியதாவது இந்தியாவின் முன்னேற்றத்தை வற்புறுத்துதற்குரிய சமயம் எனக்கு வாய்க்குமாயின், இந்தியாவில் கிடைத்துள்ள அநுபோகத்தைக் கொண்டு இந்தியாவின் முன்னேற்றத்திற்கு வேண்டியதைச்செய்ய ஆதரவாயிருப்பேனென்று நீங்கள் நிச்சயமாக நம்பலாமென்று கூறினர்.

ஒருவரது பட்டம் ரத்து செய்யப்பட்டது.

பம்பாய் மாகாணத்திலுள்ள ஸாரனைச்சேர்ந்த மகம்மது இஸ்மேயில் வடாப்டுல்லா பிஹாஜி என்பவர் கான்சாகிப் பட்டம்பெற்றிருந்தார். அவர் தவறாக நடந்தமைபற்றி அப்பட்டத்தைக் கவர்ன்மெண்டார் ரத்துசெய்து விட்டனர்.

தீர்க்கதரிசனஞ் சொல்லுமோரு சிறுவன்.

இராமநாதபுரம் ஜில்லா கமுதியென்னு மூர்க்கடுத்துள்ள ஒரு கிராமத்தில் வசிக்கும் சுமார் 16 வயதுள்ள ஒரு கிறிஸ்தவச்சிறுவன் சனிவாரந்தோறும் இரவில் எண்ணெயிட்டு முழுகிப் படுத்துக்கொள்ளுகிறானாம். அப்போது தீர்க்கதரிசனம் (குறி) சொல்லுகிறானாம். அவன் அது சொல்லும்போது அவனுடம்பு கட்டைபோல் உணர்ச்சியில்லாமலிருக்கின்றதாம்.

பருவ நிலை.

சித்திரையும் வைகாசியும் இளவேனிற் காலமென்றும் ஆனியும் ஆடியும் முதிர்வேனிற் காலமென்றும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிற் படித்தோம். இது பல நூற்றாண்டுகளின் முன்பு சரியாக இருந்தது. பஞ்சாங்கக் கணக்குத் தவற்றினால் பருவகாலத்தையும் தவறாக்கி விட்டோம். இப்போது, இளவேனிற் காலம் பங்குனிமாதம் 8 தேதியில் பிறந்து விடுகிறது. ஆதலால் நம்மவர் அயன, விஷு காலங்களில் செய்யும் ஸ்நாநம் தானம் முதலிய வைதிகக் கிரியைகளெல்லாம் ஷை புண்ணியகாலங்கள் கழிந்து மூன்று வாரங்களுக்கப்பால் தவறாக நடந்து வருகின்றன. அயன, விஷுக்களை நேராகத் தெரிந்து பஞ்சாங்கத்தில் வருஷப்பிறப்பைச்சரியானநாளில் வைத்தால், பருவக் கணக்கும் நேராகும். காலநிலையை ஹிந்துக்கள் பலவிதத்திலே மறந்திருக்கிறார்கள். உடனே செம்மைப் படுத்திக்கொள்ளும் திறமையை நமக்குத் தேவர்களும் ரிஷிகளும் அருள் செய்க. சு. மி.

உ

கணபதி துணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."—திருக்குறள்.

தொகுதி.	நள-ஹு மாசி-மீ	பகுதி.
9	1917 மார்ச்சு.	2

கல்விமுறையில் சீர்திருத்தம்.

நமது பாநுவின் முந்தின சஞ்சிகையில், நமது மாணவரது கல்வியின் ஒழுக்கைப்பற்றிய ஸ்வாமி விவேகானந்தரின் அபிப்பிராயத்தை ஒருவாறு குறித்துள்ளோம். அன்றியும், தற்காலம் நடந்து வரும் கல்விமுறையில் அவர்களுக்கு இருந்த வெறுப்பையும் தெரிவித்திருந்தோம்.

நமது முன்னவர்கள் அக்காலத்தில் பெற்றுக்கொண்டிருந்த கல்விமுறையையும், அதனால் அவர்களும் நம் நாடும் அடைந்திருந்த பெருமையையும், தற்காலக் கல்விமுறையால் சிலருக்குமாத்திரம் ஏகதேசப்பிரயோஜனம் தெரிவதன்றி ஏனையோர் பயன் சிறிதும் பெறாது பெரு நஷ்டத்தையும் அடைந்து வருகின்றார் என்னும்

உண்மையையும் நமது நேயர்கள் நன்கு ஆராய்ந்து உணரவேண்டியது. தற்காலக் கல்விமுறையால் சிறிது பிரயோஜனத்தைப்பெற்று, அதனால் பெருநஷ்டத்துக்கு ஆளாகிறவர்கள் யார்? அவர்கள் எதன் நிமித்தம் இந்த வீண் முயற்சியில் நுழைந்து வருந்துகிறார்கள் என்பதைச் சிறிது கவனிப்போம்.

தமது தேசாசார குலாசாரங்களாகிய ஆர்யாசாரங்களை முற்றும் இழந்தேனும், தமது பிதிரார்ஜித சொத்துக்களை இழந்தேனும் தங்களது சுகவாசஸ்தலமாகிய கிராமங்களைவிட்டுப்பெரிய பட்டணங்களில் குடியேறி, தங்களது புத்திரர்களை ஆங்கிலமுறையில் கல்வி பயிற்றி நடை உடை ஊண்முதலிய ஆசாரங்களை ஆங்கிலமுறைக்கே திருப்பி, எங்ஙனமேனும் அரசாளும் வகுப்பினரோடு உறவு பெறுவதே தமது கடைப்பிடியாகக் கொண்டுள்ள சிலரே அவராவர். அவர்கள் தாங்கள் கெடுவதன்றித் தமது உறவினர்களையும் வம்சத்தினரையும் சிறுகச் சிறுகத் தம் நாட்டினரையும் கெடுக்கப் பிரயத்தனப்படுபவராக ஆகின்றார்கள். இவர்களை முதன்மையாக நமது பூர்விகக் கல்வி முறையை யழித்தவர்கள் என்று எண்ணுவதற்கும் இடமுண்டாகிறது. ஆனால், இந்த முறையை யழித்ததனால் இவர்கட்குப்பயன் யாதுமில்லையோவென்றால்:—உண்டு; நாம் முன்னே சொல்லியுள்ளபடி, அரசாளும் வகுப்பினரோடு கலந்துத்தாமும் அம்முறையிலேறி, தற்கால லௌகிகப் பயன்களுள் சிறிது பெற்று இறுமாப்படைவதேயாகும். இந்தமுறை தொற்று வியாதிபோல் பலரையும் பற்றிவிட்டதனால், பல பெற்றோர்கள், தமது புத்திரர்களின் ஆங்கிலக்கல்வியின் நிமித்தம், தங்களது ஆஸ்திகளை இழந்து பாடுபடுகின்றனர். யாதும் நீண்ட பிரயோஜனத்தைத் தராமலே இந்த ஆங்கிலப்படிப்புமுறை, சில வருஷங்களாக நமது நாட்டில் குடியேறி, நமது பூர்விக ஆசாரங்களைத்தனது வாயிலிட்டுக் கொண்டு, இப்போது முற்றும் விழுங்கவும் எதிர்பார்க்கிறது.

இந்த முறையில் புகுந்து இறுமாந்திருக்கும் சில ஸ்வகாரிய துரந்தரர்களை நீக்கிவிட்டு இம்முறையில் நுழைந்த மற்றவர்களைக் கீழ்வரும் சில கேள்விகளைக்கேட்டுப்பார்ப்போம்.

1. ஆங்கிலப்படிப்பு முறையினால் ஆஸ்திக அறிவு முதிர்கிறதா?

2. அன்றி, நமது பழைய முறையைவிட, இம்முறை மாணவர்களது குணத்தையுயர்த்துகின்றதா?

3. அன்றி, பூர்விக முறையில் அடங்கியிருந்த உயர்ந்த கொள்கைகளைவிட மேலான கொள்கைகளை நமக்கு கற்பிக்கின்றதா?

இக்கேள்விகள் மூன்றனுக்கும் அவர்கள் "இல்லை" யென்னும் விடையையே தருவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆயின், ஏன் இதனுள் நுழைகிறீர்கள் என்றால், "இம்முறை அரசாங்கத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. உண்டியும் உடையும் கிடைக்க அநுகூலமாயிருக்கின்றது" என்றே குறிக்கின்றனர்.

ஆகையினால் இம்முறையைத் திருத்தி நமது பூர்விகமுறையைப் புதுக்க வேண்டுமென்பதே நமது வேண்டுகோள். இதுவே கற்றறிந்த பல பெரியோரது தேர்ந்த கொள்கையுமாகும். "ஆனால், இந்த முறையினால் நாட்டுக்கு யாதொரு பயனுமில்லையா?" என்னுங் கேள்வியொன்று பிறக்கலாம். அதனைப்பற்றி யாலோசிக்குங்கால், இந்த முறைப்படி படிப்பேறிய பலரில் விடாது முயன்றேறிய சிலரே, அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்று வாழ்கிறார்கள்; எனினும், அவர்களால் நாட்டுக்கு ஆகவேண்டிய நன்மைகள் எதிர்பார்த்தபடி அடைவிக்கப்படுவதில்லை. இந்த விஷயத்தை எழுதும்போது எமக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது அது பின் வரும்.

ஒருகால், நாம் எமது நண்பரான சித்திரிகர் ஒருவர் வீட்டுக்குச் சென்றிருந்தபோது, அங்கு அவரால் எழுதப்பட்டு வைத்திருந்த சித்திரங்கள் பலவற்றுள் ஒன்றினைக்கண்டு மிகவும் வியக்கவேண்டியிருந்தது. அஃது என்னவெனில்:—கூறுவோம்.

காபி அரைக்கும் யந்திரம்போன்றதோர் பெரிய யந்திரம். அதற்கு ஒரே ஒரு பெரிய சக்கரம் உளது. காபிமுதலானவற்றைப் போடுவதற்கான ஒரு பெரிய வாயுள்ளது. அந்தவாய் மிகவும் உயரத்தில் இருக்கிறது. அந்தவாயில் கொண்டுபோய்க் கொட்டக்கூடியபடி கீழேயிருந்து பெரிய ஏணிமரம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் உள்ள பல ஜாதியார்களும் தங்கள் தங்களது குழந்தைகளை எடுத்துக்கொண்டு;

அந்த ஏணிமரத்தின்மேல் ஏறி, அந்தப் பெரிய வாயினுள் போட்டு விடுகின்றனர். பிறகு, அறைபட்டு மாவாக விழும் வாயின் கீழே அநேக விதமான பாத்திரங்கள், நிமிர்த்தும் கவிழ்த்தும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒவ்வொன்றுக்கும் வியாபாரம், கைத்தொழில், சாஸ்திரம், தத்வம், சித்திரம், யுத்தம், கப்பலோட்டல், சர்க்கார் உத்தியோகம், வக்கீல், உபாத்திமைத்தொழில் என்ற நாமங்கள் இடப்பட்டிருக்கின்றன. அவைகளுள் சர்க்கார் உத்தியோகம், உபாத்திமைத்தொழில், வக்கீல் என்றநாமமிட்ட பாத்திரங்களே மாணவர்களால் நிரப்பப்பட்டு நிமிர்த்திவைக்கப்பட்டும், மற்றவை கவிழ்க்கப்பட்டும் இருக்கின்றன. அந்தச் சித்திரத்தின் கீழ் இந்தியக்கல்வி முறையந்திரம் என்று எழுதியிருக்கிறது. அந்த யந்திரத்தின் சமீபத்தில் நின்று ஒரு இந்திய கனவானும் ஒரு ஐரோப்பிய கனவானும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியர் கன்னத்தில் ஒரு கையை வைத்துக்கொண்டு துக்க முகத்துடன் நிற்கிறார். ஐரோப்பியர் பரிஹஸித்துச் சிரித்துக் கொண்டிருக்கிறார்."

இதனைக்கண்டவுடன் எமக்குத் துக்கமும் ஆச்சரியமும் அடங்காமல் வந்தன. நமதுநாடு முன்னேற வழியில்லாமையைப்பற்றிய துக்கமும், இவ்வளவு அதிசயமான சித்திரம் முதலியவற்றைச் செய்யும் சமர்த்துள்ள இந்தியரை நாம் பெற்றிருக்கின்றமையைப் பற்றிய ஆச்சரியமுமாகும்.

இதனால், மாணவருக்கு ஆங்கிலம் போதிப்பதில் எமக்கு அதிருப்தி இருப்பதாக நேயர்கள் கொள்ளமாட்டார்களென்று எண்ணுகிறேன். ஆங்கிலம் அவசியம் கற்றுக் கொடுக்கப்பட வேண்டியது. அது நமது ராஜபாஷை அன்றியும் ஒவ்வொருவருக்கும் தமது பாஷைத்திறமையுடன் பிறபாஷைகளில் ஏதொன்றிலேனும் தேர்ச்சி பெற்றிருந்தால் தான், இதர தேசவொழுக்க முறை முதலியவற்றைத் தெரிந்துகொண்டு, தமது தற்காலநாகரிக ஏற்றத்துக்குத்தக்கபடி அவசியமான சில விஷயங்களை மாற்றிக் கொள்ளலாகும். அவற்றுள் ராஜபாஷையை அவசியம் கற்க வேண்டியதே. ஆயின் நமது கொள்கையென்ன? ஆங்கிலமுறை நமது மாணவர்க்கு நமது தேசத்து முன்னேற்றத்தை உத்தேசித்துக் கூடாதென்பதுவே. ஏனெனில், அம்முறையினால் நமது

மாணவர் நடை உடை பாவனைகளில் மாறிவிடுகிறார்கள். மாணவர்கள் மாறுவதென்பது தேசம் மாறுவது என்று அர்த்தமல்லவா?

ஆகையினால், ஆங்கிலப் படிப்பையும் உபபாடமாக வைத்துக்கொண்டு, முக்கியமாக நம் தேசபாஷையிலேயே மற்றவையெல்லாம் கற்றுக்கொடுக்கப் படவேண்டும். கல்விமுறையின் முக்கியநோக்கம், நமது மாணவர்க்கு நமது தேசாசாரம், குலாசாரம், நமது வேதக்கொள்கை, நமது வைத்யக்கொள்கை, நமது தேசசரித்திரம், நமது தேச பன்னரின் சரித்திரம், நீதிசாஸ்திரங்கள், அவற்றுக்கு நமது புராணக் கதைகளிலிருந்தே உதாரணங்கள், தொழிற்க. வி பலசாஸ்திரக் கல்வியாகிய இவை போன்றவைகளாக இருக்கவேண்டும். அந்தநோக்கத்துக்கு வேண்டிய ஸாதனங்கள் சில நமது தேசபாஷையில கிரந்தரூபமாக ஏற்பட்டிராவிடின், இதர தேச பாஷைகளிற் சிறந்த பாண்டித்யமுடையவராகித் தேசபாஷையிலும் தேச முன்னேற்றத்திலும் அபிமானமுமுடைய நம்மவரிற் சிலரைக் கொண்டு அவரவர்க்குக் கைவந்த சாஸ்திரங்களில் தெளிவும் நயமும் உள்ள நடையுடன் கூடிய கிரந்தங்களை இயற்றச்செய்து, மாணவர்க்குப் புகட்டவேண்டும். அதிகாரமுறைக்கு வேண்டிய பயிற்சிகளுக்காக ஆங்கிலத்தையும் தகுந்தபடி கற்பிக்கவேண்டும். ஆனால் நீதி தெய்வங்கொள்கை முதலிய உயர்ந்த கொள்கைகட்கு உதாரணங்களெல்லாம் நமது நூல்களிலிருந்து நம்முன்னோரது ஒழுக்கங்கள் காட்டப்பெறல் வேண்டும். இந்த முறையைப் பின்பற்றி நடந்து வந்ததனாலேயே ஜப்பான்தேசம் நாகரிகத்தில் முன்னேறி இதர தேசங்களுடன் இப்போது ஸமானமாகத் தோள் கொட்டிக் கொண்டு நிற்கிறது. அங்ஙனமன்றி இப்போதிருக்கும் ஆங்கிலமுறையையே, எத்தனையாண்டு பழகிவந்தாலும், நாடுநாடாவதற்கு மார்க்கமிராது. ஏனெனில்:—நமது முன்னோர்களது சரித்திரம் கற்றுக் கொடுக்கப் பெறாத தன்மையினால் நமது நாட்டுக்கொள்கைகளும் மனோபலமும் அழிந்துவிடுகின்றன. அந்யபாஷையிலேயே மிக்கப் பழக்கம் கொண்டு விடுவதனால், நமது நாட்டுக்குடிகளுடன் பழகுவதற்கு இயலாமலும், அதனால் அவர்களது சுகதுக்கங்கள் கவனிக்

கப் படாமலும் கழிகின்றன. நாட்டுக்குடிகள் தமது மேட்டுக்குடிகளால் கவனிக்கப்படாமல் போகவே, அவ்வேழைகள் தமது விவசாயம் தொழில் இவற்றைக் கைவிட்டு அடிமைகளாக மாறிவிடுகின்றனர். தேஹபலமுள்ள வரையில் அடிமைகளாக இருந்து பிறகு கிழப் பருவத்தில் பிச்சைக்காரர்களாகக் கிளம்பி விடுகிறார்கள். இந்தச் சிறுபழக்கம் சில பாலியர்களையும்பற்ற, அவர்களும் பிச்சைக்காரர்களாகக் கிளம்பி, சோம்பேறிகளாக மாறிவிடுகிறார்கள். பிறகு இது அவர்கட்கு ஜாதித் தொழிலாகவும் ஆகிவிடுகிறது. ஆகலின், மேட்டுக்குடிகள் தம் நாட்டுக்குடிகள் விஷயத்தில் கவனம் செலுத்தாவிடின் நம் நாடு அடிமை நாடாகவே எப்போதும் இருந்துவிடும் என்பதற்குத் தடையென்ன?

ஆகையினால், ஆங்கிலம் படித்து அறிவிற்சிறந்த பெரியோர்களே! நாட்டின் நன்மையைக் கோரும் நன்மனத்தோரே!! கல்விமுறையைக் கருதுகின்ற கனதனவான்களே!!! நந்தமிழ் பாஷையின் உயர்வில் உறுதிகொண்டுள்ள நாட்டுக்கோட்டை வைசியமணிகளே! உங்கள் உங்களது தேஹம் மனம் பொருள் இவற்றினது செலவின் வழியை நம் நாட்டுக்கல்விமுறையிலேயே செலுத்த முன்வாருங்கள். கல்விமுறையாலன்றி மற்று எந்த முறையாலும் நந்நாடு செழித்து ஏறாது. தாழ்ந்த குடிகட்குத் தக்கமதிப்பு விவசாயத்திலும் தொழில்களிலும் உண்டானால் அல்லாமல், நாடு அடிமைத் தனத்தினின்றும் நீங்காது. நமது தேசத்திலேயே விளைந்து நமது தேசத்திலேயே வளர்ந்து நமது தேசத்திலேயே அழிந்தாலல்லாமல், நமது தேசப்பொருள்களால் நமது தேசப்பொக்கிஷம் நிறைந்திராது. இதரதேசப் பொருள்களால் நமது தேசம் வாழ்வில் உயரும் என்பது, நினைக்கவும் கூடாதகாரியம். இதரதேசப்பொருள்களை நம்பியிருந்த நாம் இப்போது இந்த மஹாயுத்தம் காரணமாகப் படும் கஷ்டங்களை அறிந்துகொள்ளக்கூடாத இந்தியனும் உண்டா? நமது விளைபொருள்கள் இதரதேசங்கட்குச்சென்று திரும்பிவராமல், அவைகள் இங்கேயே நமக்கு வேண்டிய பொருள்களாக மாற்றப் பட்டாலன்றோ, நமது குடிகட்குக் கொள்வதிலும் கொடுப்பதிலும் ஊ?

யம் தோன்றும். அன்றுதானே நாடு பசியாமல் இருக்கும். ஆகலின், நம் நாட்டு நோக்கத்துக்கு மாறுங்கள். கல்விமுறையை மாற்றுங்கள். நமது பெண்களையும் நம் கல்விமுறையிலேயே பழக்குங்கள். இதுவே சமயம். இதுவே நற்காலம். இந்த அரசரே நாம் கோரிய வண்ணம் கொடுக்கும் அரசர். இவர்காலமேலேயே நாம் நல்வாழ்வு பெற்று நாட்டில் செழித்திருக்கலாகும். ஆகையினால் தன்மறுப்பும் தேசாபிமானமும் பாஷாபிமானமும் குலாபிமானமும் வேதாபிமானமும் தேவாபிமானமும் கொள்ளுங்கள். பாரதமாதா அருள் செய்யக் காத்திருக்கிறாள். பாரத புத்திரர்களில் அநேகரும் தன் மறுப்புக் காட்டி உழைத்து வருகிறார்கள். அவர்கள் கைதூக்கிவிடுகிறார்கள். உங்களது முயற்சியையும் எதிர்பார்க்கிறார்கள். ஆகலின் முந்துங்கள். இறைவன் அருள்புரிக. பத்திராதிபர்.

தந்தை சொன்மிக்க மந்திரமில்லை.

இதன் பொருள்— பிதாவினுடைய சொல்லைப் பார்க்கினுஞ் சிறந்தபயனைத் தரத்தக்க மந்திரம் ஒருவனுக்கு எந்த நூலினும் இல்லை என்பதாம். இதனால் மந்திரமானது தன்னை ஜபித்தவருக்குத்தக்க பயனைத்தரும் என்பதும், அம்மந்திரத்தினுஞ் சிறந்த பயனைப் பிதிருவாக்கிய பரிபாலனம் தருமென்பதுங் கொள்ளக்கிடக்கிறது. மந்திரங்களிருத்தற்கு நிலைகளம் நூல்களே யாதலினாலும், அந்நூல்களும் எண்ணிறந்தவாகலானும், எந்த நூலினும் இல்லையெனவருவித்துக் கூறப்பட்டது. மந்திரங்கள் ஒவ்வொன்றற்கும் ஒவ்வொரு சக்தியே யிருத்தல்கூடும். ஒன்றற்குரிய மந்திரம் மற்றொன்றற்கு உரித்தாகாது. தந்தை சொல்லாகிய மந்திரமோவெனில், எல்லா நலன்களையும் ஒருங்கே தரவல்லதாகும். தன்னைப் பெற்றவன் தந்தையெனப்படுவன். இத்தந்தை தன் மகனுக்கு எவ்வாற்றானும் நன்மையே பொருந்தவேண்டும் தீமையொழியவேண்டும் என்னுங்கருத்துடையனாயிருப்பன். ஆதலால் அத்தந்தை கூறுஞ் சொற்களும் பிள்ளைக்கு ஹிதம் பயப்பனவேயாகும். மந்திரங்கட்கு ஒன்றை ஆக்குதற்கும் அழித்தற்கும் வல்லமையிருக்கின்றவாறுபோலச் சொற்களுக்கும் ஆக்கவும் அழிக்கவும் வல்லமையுண்டு. இதனை,

"நிறைமொழிமாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" என்னுந்திருக்குற

ளுக்கு உரையெழுதுமிடத்து "நிறைமொழி" என்பதற்கு "அருளிக் கூறினும் வெகுண்டுகூறினும் அவ்வப்பயனைப்பயந்தேவிடும் மொழி' எனப்பரிமேலழகியார் கூறியிருக்தலால் உணர்க. இதனல் சொல் மந்திரமாமாறுபெறப்பட்டது. தாம்படைத்த பொருளைக் கேடுறு வண்ணம் தக்கபடி பாதுகாத்தனர், அதனிடத்து மிக்க அபி மானத்தைச் செலுத்துதலும் உலகியற்கை. அப்பொருளினும் பார்க்கப்போற்றப்படுவர்புதல்வர். ஆகலானன்றே திருவள்ளுவரும் "தம்பொருளென்ப தம்மக்கள்" என்றார். பெருநிதிபடைத்தோ ரும் புத்திரபாக்கியத்தைபடைந்தாலன்றி மகிழ்வதில்லை "பிள்ளை யில்லாத பாக்கியம் நான் பெற்றிருந்தென்ன சிலாக்கியம்" எனவும்,

"படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி.
இட்டுந் தொட்டுங் கௌவியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லதாம் வாழு நாளே" எனவும்,

"மக்களின்—ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை" எனவும் கூறப்பட்டிருக்கின்றமையாற் புதல்வரே எல்லாப் பொருளினுஞ் சிறந்த பொருள் எனக்கருதப்படுவர். அப்புதல்வர்க்குத் தந்தை யாராலாராய்ந்து கூறப்படுஞ் சொற்கள் உறுதி பயப்பனவே யாமென்பதொருதலை. லோகபிதாவாகிய கடவுளின் சொற்களென்று கருதப்படுகின்ற வேதாகமங்கள் சொல்லுவனவற்றை நாம் அங்கி கரித்து அவற்றின் படியே நடந்தால் நன்கு மதிப்பிற்கும் திரு வருளுக்கும் ஆளாகலாம். நடவாவிடில் உலகநிந்தைக்கும் கடவு ளின் கோபத்திற்கும் பாத்திரமாகவேண்டும். ஆதலால் கடவுள் நம்மை உய்வித்தற்பொருட்டு அருளியவற்றை அலக்ஷியமாகக்கருது தல் கூடாது. அவ்வாறே தந்தையார் கூறுவனவற்றையும் அங்கி கரிக்கவேண்டியதவசியத்திலும் அவசியமாகும். (தொடரும்.)

மணிவாசகன்.

இளங்கோவடிகள்

உலகம் யாவையும் படைத்து, அளித்து, அழிக்கும் பரமகாருணிகியான பகவானுடைய சிறந்த அவதாரங்களையும், திருவிளையாடல்களையும் தாங்கினமையால் புண்ணிய பூமியாகிய இப் பரதகண்டத்தின்கண் உள்ள புராதன இராஜ்யங்களில் சேர, சோழ, பாண்டிய நாடுகள் தென் இந்தியாவில் விளங்கிய முக்கிய தேசங்களாகும். இம்மூன்று மண்டலங்களையும் அரசாண்டவர்கள் சேரர், சோழர், பாண்டியர் எனப்படுவர். இம்மூவரில் ஆதியில் வைத்து எண்ணப்பட்ட சேரரே மற்றைய இருவரிலும் முன்னாளில் பெருமை பெற்று, இற்றைக்கு 2150 வருஷங்களுக்கு முன் விளங்கிய மௌரிய சக்கிரவர்த்தியும், இந்திய சரித்திரங்களில் முதல்வனும் ஆகிய அசோகன் காலத்தில் கேரள புத்திரர் என்றழைக்கப் பெற்று, தென்னாட்டில் பிரபலம் பெற்று விளங்கினர். இவர்களின் பழமையை உட்கொண்டே "பண்டைக் காலந்தொட்டு மேம்பட்டு வரும் குடிகள் இம்மூவேந்தரும்" என்று பரிமேலழகரும் கூறியிருக்கின்றார். இச்சேரவமிசத்தரசரைச் சிறப்பிக்கும் சங்கநூல்கள் புறநானூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு முதலியனவாம். இச்சேரவமிசமாகிய கடலில் உதித்த ஜீவரத்நமும், ஐந்து பெருங்காவியங்களுள் ஒன்றாய், வையகதலத்தினரின் ஆதிகாவியமும் ஆகிய சிலப்பதிகார ஆசிரியரும், தாம் இன்பமுறாமல் உலகம் இன்பமுறச் செய்த மஹாத்துமாவாகிய இளங்கோவடிகளின் சரித்திரம் தமிழபிமானிகட்குப் பெருவிருந்தாகும்.

௨ நாடு, நகரம், பிதா, பிதாமகன் முதலியவர்—சேரநாடு என்பது கருவூர்தாலுகா (திருச்சிராப்பள்ளி) கோயமுத்தூர் சேலம்

நீலகிரி ஜில்லாக்களும், மைசூர் ராஜ்யத்தின மலைபகுதயும மேற்குத் தொடர்ச்சி மலைநெடுக உள்ள கடற்கரைப் பக்கங்களுமாகும். இச்சேரமண்டலத்தின் தலைநகரம் வஞ்சிமா நகரமாகும். இவ்வஞ்சிக்குக் கருவூர் என்பதும் ஒரு பழம்பெயர். "நெடுந்தேர்க் கோதை—திருமாவியனகர்க் கருவூர் முன்றுறை" என்ற அகப் பாட்டால் அறியலாம். இவ்வஞ்சிநகரம், திருவஞ்சைக்களம் அன்று; திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த "கருவூரே" என்று ஸ்ரீமாந். மூ. இராகவையங்கார் அவர்கள் "சேரன்—செங்குட்டுவன்" என்ற நூலில் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க சிறந்த ஆதாரங்களுடன் காட்டி யிருக்கிறார்கள். இந்நகரத்தை வளஞ்செய்யும் நதி "ஆன் பொருநை" என்பது, "வஞ்சிப்புறமதில் அலைக்கும் கல்லென் பொருநை" என்னும் புறப்பாட்டடியால் விளங்கும். இந்நதியின் பெயர் இப்பொழுது ஆம்பிராவதி என வழங்குகின்றது. இம் மூதூரின் மத்தியில் செம்பொன் மயமான சிறுமேருவைப் போல இவ்வரசர்களின் அரண்மனை பிரகாசித்தது. இதனுள் கொலுவிருக்கை மண்டபமும், மந்திராலோசனை மண்டபமும், நடனசாலைகளும் பிறவும் சிறந்து விளங்கின. இவ்வரண்மனைக்கு "இலவந்திகை வெள்ளிமாடம் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இக்காலத்தில் சேர ராஜ்யத்தைச் செங்கோல் செலுத்திய அரசன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பவன்; "வடவருட்கும்வான்தோய் நல் லிசைக், குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன்" என்று கூறியுளர். இச்சேரலாதன் தன்னுயிர் போல் மன்னுயிர் காப்பவன்; குடிகளுக்கு ஏற்படும் ஐந்து பயம் தீர்த்து அரசாள்பவன்; இமயம் வரை படையெடுத்துச் சென்று அம்மலைமேல் விற்கொடி பொறித்த செம்மல்; தமிழகம் முழுவதையும் ஒருகுடைக்கீழ் வைத்தாண்ட அண்ணல்; தன்னுடன் பொருதற்கு வந்த ஆரிய அரசரை வணங்கச் செய்த வீரன்; யவன அரசரைச்சிறைப்பிடித்து அக்கால வழக்கின் படி நெய்யை அவர் தலையில் சுடச்சுடப் பெய்து, அவர் கைகளைப் பின் கட்டாகக் கட்டி, விலையுயர்ந்த வயிரங்களையும், ஆபரணங்களையும் கப்பமாகப் பெற்று, வஞ்சிநகரத்தினர்க்கு உவந்து உதவிய

வள்ளல்; குமட்டூர்க் கண்ணனூர் என்ற சங்கப் புலவரால் பாடப் பெற்ற புகழோன்; பதிற்றுப்பத்தின் 2—ம் பத்தின் நாயகன், உதியஞ் சேரல் என்ற சேர அரசனுக்கு வெளியன் வேண்மான் மகள் நல்லினி வயிற்றுப் பிறந்த தோன்றல்.

3 மாதா சகோதரர் வரலாறு.—இச்சேரர் பெருந்தகையாகிய இமயவரம்பனுக்கு மனைவியர் இருவர். அவருள் 1. சோழன் மணக்கிள்ளி மகள்—நற்சோணை 2. வேளாவிக்கோமான் பதுமன் மகள் பதுமன்தேவி. இவ்விருவரில் முதல் மனைவியும் பட்டமஹிஷியுமாகிய நற்சோணையிடத்து உதித்த புதல்வர் இருவர். அவருள் 1. செங்குட்டுவன் 2. இளங்கோ அடிகள். இரண்டாவது மனைவியாகிய பதுமன்தேவி யிடத்தில் உதித்த மக்கள் இருவர். அவருள் 1. களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் 2. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். ஆகவே நெடுஞ்சேரலாதன் புத்திரர் நால்வரில் இளங்கோவடிகள் கோட்பெருந்தேவி வயிற்றுதித்த இளவரசர். இக்காரணத்தால் இவர்க்கு இளங்கோ எனப்பெயர். இவர் சகோதரர்கள் மூவரையும் பற்றிய விவரமான வரலாற்றைப் பதிற்றுப்பத்து 4, 5, 6, ம் பத்துப்பதிகங்களால் நன்கு அறியலாம். மன்னர் மன்னனாகிய செங்குட்டுவனைப் பற்றிய முழுவரலாற்றையும் சேரன்—செங்குட்டுவன் என்னும் நூலில்பரக்கக் காணலாம். இனி இளங்கோவின் அருமை பெருமைகளை ஆராய்வோம்.

4. கல்விப் பயிற்சி:—நெடுஞ்சேரலாதன், மக்கள் நால்வரையும் தான் அடையக் கூடிய நான்கு புருஷார்த்தமென எண்ணிப்பேணி, தக்க பருவத்தில் வில்வித்தை, ஆயுதப் பயிர்ச்சி, யானையேற்றம், குதிரை யேற்றம், முதலிய அரசவித்தைகளையும், சுக்கிர நீதி, சாணக்கிய நீதி, கௌடில்லியம் முதலிய அரசநீதி நூல்களையும் பாஷையாகிய அமிழ்தினுமினிய தமிழ்பாஷையில் உள்ள சங்க நூல்கள் தொல்காப்பியம் முதலிய இலக்கிய இலக்கணங்களையும், இசை நூல்கள் நாடக நூல்கள் முதலியவற்றையும் தக்க ஆசிரியரை நியமித்துக் கற்பித்து வந்தார். பிறவிச் செல்வமுடைய பிள்ளைகளும்

ராஜ்யாதிகாரச் செல்வத்தைச் சிறப்பிக்கும் கல்விச் செல்வத்தின் பலதுறைகளிலும் திறமை படைந்து, உருவிலும் திருவிலும் கலையிலும் வலியிலும் ஒத்ததன்மையராய் ஒத்தகுணத்தினராய், இவர்க்குநிகர் எவரும் இலர் என்று கூறப்பெறுமைப் பெற்றுச் சிறந்து விளங்கினர். (தொடரும்)

V. T. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்,
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்.
மஹாராஜா கலாசாலை,
புதுக்கோட்டை.

சிவகைங்கரிய நிகழ்ச்சியும் சிவாலய கும்பாபிஷேக மகிழ்ச்சியும்.

இப்புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திற் சிறந்து விளங்கும் இப் பாண்டிவளநாட்டின்கண்ணே, மூர்த்தி ஸ்தலம் தீர்த்தமென்னும் மூன்றானும் உயர்ச்சிவாய்ந்த புராதன க்ஷேத்திரங்களுள் ஒன்றாகிய "வீரவனம், அளகை" யாதிபலநாமங்கள் பெற்ற சாக்கைப்பதியில், ஸ்ரீ உமாம்பிகா ஸமேத ஸ்ரீ வீர சேகரப்பெருமான் தம் பரிவாரங்களுடன், வீற்றிருந்தருள்கின்ற திருவாலய மானது, சோழபாண்டிய மகாராஜாக்களாலும், சிவகங்கை ஜமீன்தார்களாலும், தேவகோட்டை புதுவயல் வீரசேகரபுரம் முதலிய பல நகரவைசியர்களாலும், மாத்தூர் கோவில் ஞனத்தூர் பிரிவு நகரத்தார்களாலும் இன்னும் வினைய அபிமானிகளாலும் செய்யப்பெற்ற பிரதிஷ்டைகளும், அர்த்தமண்டபம் மகா மண்டபம் முதலிய மண்டபங்களும், இராஜகோபுர மாதிகோபுரங்களும், தீபங் களும், கட்டைகளும், வெள்ளிமயவாகனங்களும், ஸ்வர்ணமய அங்கிகளும், இரத்தினாபரணங்களும், உற்சவங்களும், உடையதாயும்; மற்றும் அன்னசத் திரம் வேதபாடசாலை சாஸ்திர வித்தியாசாலை குருபூஜைமடம் பசுமடம் வேதாந்தமடம் முதலிய கட்டிடங்களால் சூழப்பெற்றதாயும், விளங்குகின்ற தென்பதை யாவர் பலரும் அறிவர். முக்கியமாகப் புதுவயல் நகரவைசியர் ஒவ்வொருவரும் தத்தமக்கேற்றவாறு மேற்படி ஆலயத்தில் தானதர்மங்கள் செய்துவரும் பெரும்பாக்கியத்தைப் பெற்றவர்களாகவே யிருந்துவருகின்றார்கள். இத்தலத்திலுள்ள சிவாலயத்துக்கும், அதன் வாயுதிசையிலுள்ள ஸ்ரீ மெய்யய்ந்த ப்ர

நாயகியின் ஆலயத்துக்கும் அவசியமான திருப்பணிகளைச் செய்து அஷ்டபந்தன, மகாகும்பாபிஷேகம் செய்ய எம்பெருமானது திருவருளை முன்னிட்டுக் கூடிய சுமார் 300 புள்ளிகள் நிறைந்த புதுவயல் நகரவைசியர்கள் நிர்ப்பந்தமின்றித் தத்தம் அபிப்பிராயப்படிக்குத் தக்க தொகைகளை மாத்திரமே வாங்குவதென்ற நோக்கத்துடன், சுமார் ரூ. 22,000 சேகரித்து ஷை ஆலயங்களிலுள்ள பழுதுகளைச் செப்பனிட்டுத் தட்டோடு போடத் தொடங்கி, அதில் அரைப்பாகமும், இரண்டு மூன்று கோபுரங்கட்குச் சுதைவேலைகளும் நடந்துகொண்டிருக்கும் பொழுது, கும்பாபிஷேக சுபதினம் ஸமீபித்துவிட்டபடியால், அத்திருப்பணியைப்பற்றி ஆலோசிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன், நகரத்தாரனைவரும் நாளது நளவருஷம் ஐப்பசி மாதத்தில் ஓர்கூட்டம் கூடினார்கள். அதில் தற்காலம்வரை நடந்துகொண்டிருக்கின்ற திருப்பணிகட்குச் செலவான தொகை போக மிகுதியிருக்கும் ரூ 15000 த்தாச்சில்வானத்தில் பாக்கிப் பணிகளும் பூர்த்தியாகி கும்பாபிஷேகமும் செய்விக்கத் தொகைபோதாதாகலின், அதனை விரிவாகச்செய்ய மேலும் ரூபாய் சேகரிக்கவேண்டுமென்று பேசப்பட்டது. இங்ஙனம் கும்பாபிஷேகம் விமரிசையாகச்செய்யப்படவேண்டின், பின்னும் பொருள்சேகரிக்கவேண்டுவது ஆவசியகமேயென எல்லோராலும் ஒற்றுமையுடன் அங்கீகரிக்கப்படவே, அவ்வாறு பொருள்சேகரிக்கும் முறையில், ஸமீபத்தில் நகரசௌக்கியங்கட்காக ஓர் பளுவான வரி வசூலிக்கப்பட்டிருப்பதால், இதற்கும் நிர்ப்பந்த வரியேற்படுத்தி ஸாதாரண ஜனங்களுக்குக் கஷ்டம் நேரும்படிசெய்யாமல், முன் இப்பணிக்குச்சேகரித்ததுபோலவே, அபிப்பிராயவரியேற்படுத்துவதுதான் உசிதமாகுமென்று ஒரு சாரார் வற்புறுத்திப்பேசினார்கள். ஈசுவர காரியமாயிருத்தலினாலே, யாரும் எந்தவரியையும் நிராகரிக்கப் போவதில்லையென்றும், மதிப்புவரியே வைத்துச்சேகரித்தல் சுலபமாயிருக்குமென்றும் ஒருசாரார் வற்புறுத்திப்பேசினார்கள். இப்படியாக, இவ்விஷயத்தில் அபிப்பிராயபேதங்கள் உண்டாயின. உண்டாகவே, பாக்கிப்பணி முடித்துக் கும்பாபிஷேகம் நிகழ்த்தவேண்டுவதே இதன் முக்கியாம்சமெனக்கொண்டு மீதியிருக்கிற தொகைக்குள் எல்லாப்பணிகளையும் பூர்த்திசெய்து கும்பாபிஷேகத்தை நடத்தும்படியாகவும், அது சம்பந்தமான பணிகட்கு ஏனையோரும் கூட இருந்து கைங்கரியம் செய்து சிறப்பிப்பார்களென்றும் சொல்லி, பெ. ப. வி., எ. மு. இவ்விருவரிடத்திலும் கணக்கு, தொகை முதலிய யாவற்றையும் ஒப்புவித்துவிட்டார்கள். இவ்வாறு முன்னேற்காக ஒப்புவித்ததும் பின்னேற்காது ஏற்றுக்கொண்டதும் ஈசுவர ஸங்கற்பத்தின் உறுதியை விளக்கிற்று. (அப்பெரும்பாரத்தைத் தாங்கிய) திருப்பணிப்பொறுப்பு வாய்க்கப் பெற்றோர் இருவரும் எம்பிரான் பணியிற் கண்ணுங்கருத்துமாயிருந்து பாக்கியிருந்த மண்டப ரிப்பேர்கள், தட்டோடு போடல், கோபுரங்களின் சுதைவேலை

கள், வர்ண வேலைகள், முதலியவைகளும், இவ்வண்ணமே, ஸ்ரீ உய்யவந்த நாயகியினுடைய கோபுர சுதைவேலைகளும், தட்டோடுபோடல் முதலிய திருப்பணியாவும் பூர்த்தியாக, சுமார் ரூ 5000 வரையில் செலவிட்டு பக்காவாய்ச் செய்து, மிகுந்த சுறுசுறுப்புடன் முடித்துக் கும்பாபிஷேக கைங்கரியத்தைச் செய்ய எத்தனிக்குங்கால், முன், நகரக்கூட்டத்தில் தீர்மானித்தபடி, இக்கைங்கரியத்துக்கு ஒத்தாசையாக உடன் வந்திருந்து நடத்த, நகரவையினர்களில் பெரும்பாலார் தாமதமாயிருத்தலைநோக்கி, இத்தகைப் பெருங்காரியங்கட்கு எல்லோரும் சரீரசிரமத்தைக்கருதாமல் வந்திருந்து செய்தாலல்லது, அக்காரியங்கள் சிறப்புறுதல் அரிதாமெனநினைந்து, ஷை இருவரும், தைமீ 3ேயில் ஒரு கூட்டம் கூட்டிவைத்து, அதில், முன் சொல்லியபடி எல்லோரும் கூட இருந்து கும்பாபிஷேகத்தைச் சிறப்பிவிக்க வேண்டுமென்று, கேட்டுக் கொள்ள, அவ்வமயம் வந்திருந்தவர்கள் அவ்வண்ணமே செய்வதாக இணங்கிக் கூட்டத்தைப்பெருக்கிக்கொண்டார்கள் பின்னர், அதுபோல், சிவகைங்கரியங்களைச் செய்யும் பெரும்பாக்கியம் நமக்கு எப்பொழுது நேருமென்று எதிர்பார்த்திருந்த ஒவ்வொருவரும் அன்று முதலே, அக்கைங்கரியத்தைக் கோயில் வாரியாக ஒப்புக்கொண்டு பேருக்கத்துடன் நடத்திவந்தார்கள்,

பொருட்செலவையும், தேகசிரமத்தையும் சிறிதும் எதிர்பாராத திருப்பணிப்பொறுப்பாளர் இருவரும், கும்பாபிஷேக தரிசனார்த்தம்வரும், அந்தணர் சைவர்கள், வைசியநகரத்தார்கள், ஜமீன்தார், இராஜாங்க உத்தியோகஸ்தர்கள், கோயிலூர் ஸ்வாமிகள், மற்றுமுள்ள பக்தசிரோமணிகள் முதலிய அனைவர்க்கும் அவரவர்க்குத் தக்கவாறு போஜன வஸதியாதிகளும், யாகசாலை, தண்ணீர்ப்பந்தர், முக்கிய ஸ்நானங்களும் செவ்வனே செய்யப்படவேண்டுமென்று எண்ணி, நகரத்தார்களின் நல்லாலோசனையுடன் அவற்றிற்கான ஏற்பாடுகளை, பின்னும் விசாலித்துக்கொண்டு வழக்கம்போல் பிற ஊர் நகரத்தார்களையும் இக்கும்பாபிஷேக ஸம்பந்தமான வேலைகள் பலவற்றுள் ஒவ்வொரு கைங்கரியத்தை ஒவ்வொரு நகரத்தார் ஏற்றுக்கொண்டு செய்து சிறப்பிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அவர்களும் அவ்வண்ணமே நிறைவேற்றுவிப்பதாக ஒப்புக்கொண்டார்கள். இவை இங்ஙனமாக, இக்கைங்கரியத்தின் பாத்திய அளவைப்பற்றி, மனோராஜ்யம் செய்துகொண்டு உள்ளூரில் அநேகம் புள்ளிகளிடம் சென்று தாரதம்மியமான போதனைகளாப் பலவாறு புகட்டி அக்கைங்கரியங்களைக் கைக்கொள்வதில் சிறிதுகாலம் தாமதித்தல் செய்யவேண்டுமென்று மன்றாடினர் சிலர். அதை காரணமாக, ஒப்பந்தங்கள் பேசிக்கைபொப்பங்களும் வாங்கினர் சிலர். பிறநகரங்களிலும் சென்று முயற்சிக்க விரும்பினர் சிலர். மகிழ்ந்தவரும் சிவகைங்கரியங்களைக் கண்ணுற்றிருந்தார் சிலர். ... பார்த்திருந்தார் சிலர். கைங்கரிய காலம் [illegible]

சீர் தூக்கித்தெளிந்த முன்னோர் கையொப்பமிட்டதால், சிவகைங்கரியங்களை மேற்கொண்டாரும் சிலர். இவ்வாறான சுமார் 130 புள்ளிகளும் இத்திருப்பணியில் மேன்மேலும் சுறுசுறுப்பைப்பெருக்கும் காரணஸ்தராயினரென்பதாக அறிந்து செய்யவமைந்ததுபோல, கிரியைகளும் வழுவாத கும்பாபிஷேக பத்திரிகையில் வெளியிட்டபடி, அநுக்ஞை விக்னேசுவரபூஜை கடஸ்தாபனாதிகள் சிரத்தையோடு சாஸ்திரோக்தமாக நடத்தப்பெற்று, நாளது ௵ தை௴ 30௳ ஆதிவாரம் ஹஸ்த நக்ஷத்திரம் உதயாதி நாழிகை 7½க்குமேல் 9க்குள் ஸ்ரீ உமாம்பிகாஸமேத ஸ்ரீ வீரசேகரநாதர்க்கும், கணேசாதி பரிவார தேவதைகட்கும், ஸ்ரீஉய்யவந்த நாயகிக்கும், பக்தகோடிகளனைவரும் தரிசித்து ஆனந்திக்க, மகாகும்பாபிஷேகம் நன்கு நிறைவேறியது.

இச்சிவகைங்கரியத்தில் ஊக்கத்தைத் தூண்டியவர்க்கும் செய்தவர்க்கும் ஏனைய சிவநேயச்செல்வர்கட்கும் தெய்வீகமான அஸந்தர்ப்பங்கள்கூட நேரமார்க்கமில்லாத இப்பெரிய தெய்வ வைபவத்தில் மனுஷ்யயத்ன இடையூறுகள், கதிரவன் முன் இருள்போல விலகுமென்பதைப் பிரத்தியட்சமாகக் காண்பிப்பனபோல், கும்பாபிஷேகம் செய்து கொண்டிருக்கும் தருணத்தில் உபய கருடன்கள் தரிசனந்தந்து அனைவரையும் அகமகிழ்வித்தன.

மகாபிஷேகம் செய்து பூர்த்திபெற சற்றுத்தாமதித்தமையால், மாலை 6மணிமுதல், முறையே ஸ்ரீமான் சிவகங்கை ஜமீன்தாரவர்களாலும், தேவகோட்டை கண்டனூர் கோட்டையூர் அளகாபுரி பள்ளத்தூர் அரிமளம் கீழச்சிவல்பட்டி தெற்குவட்டகை முதலாகிய பல ஊர் நகரத்தார்களாலும் ஸ்வாமிக்குப் பட்டுகள் சாத்தப்பட்டன.

அழகாக அலங்கரிக்கப்பட்ட தண்ணீர்ப்பந்தரில் கும்பாபிஷேக தினத்துக்கு முதனாளிரவில், ஞா. பி. கலாசாலை ஆசிரியர் ஸ்ரீமத் C. துரைசாமி தேசிகரவர்களால் பக்க வாத்தியங்களுடன், ஸ்ரீ சேரமான் பெருமாணாயனார் சரித்திரமும், கும்பாபிஷேக தினத்தன்று மாலை ஷை ஞா. பி. ஸபையின் 2வது-ஆவது 8வது மாதக்கூட்டப் பிரஸங்கங்களும் செவ்வனே நடைபெற்றன

அன்றிரவு பஞ்சமூர்த்திகளும் ஸ்ரீ உய்யவந்த நாயகியும் ரிஷபமாதி வெள்ளிவாகனங்களில், வேதபாராயண தேவாரபாராயண நாமாவளி பஜனை கோஷ்டிகளுடன் நானாவித வாத்தியங்கள் கோஷிக்கவும் பல்வகை விசித்திர வாணக்காட்சிகள் பொருந்தவுமாக திருவீதிப்பவனியும் சிறப்பாய் நிறைவேறியது.

இக்கும்பாபிஷேக மஹோத்ஸவத்துக்கு ஸ்ரீமான் சிவகங்கை ஜமீன்தாரவர்களும், ஸப்ஜட்ஜ் முன்சீப் முதலிய ப்ரமுகஸ்தர்களும் விஜயஞ்செய்திருந்தது குறிப்பிடத்தக்கதே.

இம்மஹோத்ஸவத்தை முன்னிட்டு வந்திருந்த ஜனங்களெல்லாருக்கும் தேகாரோக்கியத்துக்கேற்ப சுத்த ஜலம் முதலிய வஸதிகளும், பொதுஜனபரோபகாரிகளின் ரக்ஷணார்த்தம் போலீஸாரின் பெரும்பாதுகாப்பும், நகரத்தார்களால் நியமிக்கப்பட்ட காவற்காரர்களின் நற்பாதுகாப்பும் அமைந்திருந்தது மிகவும் மெச்சத்தகுந்தது

இவ்வைபவத்தைக் கண்ணுற்ற ஜனங்களின் ஸங்கியை சுமார் 30,000 த்துக்கு மேற்பட்டிருந்தமாதலால், இதன் விமர்சையைப்பற்றி இனி விரித்தெழுதல் மிகையாகும்.

நகரத்தாரால் கொடுக்கப்பட்ட ரூ. சுமார் 15000க்கு மேல் பின்னும் சுமார் ரூ. 18000 வரையில் இத்திருப்பணிப் பொறுப்பாளர் இருவராலும் விநியோகப்படுத்தப்பட்டிருக்கக்கூடுமென்று மதிப்பிடப்படுகிறது.

இச்சிவ கைங்கரியத்தை நன்கு நிறைவேற்றிய புதுவயல் அதிநகரவைசியர்களும், அன்புடன் வந்து தரிசித்த அடியார்களும், எம்மையாளும் சக்கிரவர்த்தியும் மும்மைப்பயனுமெய்தி நீடூழியாளுமாறு எல்லாம்வல்ல இறைவனது திருவருளைப் பிரார்த்திக்கின்றோம். உண்மைநன்குரைப்போன்.

மதிப்புரை.

நமது புண்ணிய பூமி:-இது காசி கே. எஸ். முத்தையாஅவர்களால் இயற்றப்பெற்றது. இது புண்ணிய ஸ்தலயாத்திரிகர்களின் பொருட்டு இயற்றப்பெற்றுள்ளது. இதனுள் காசி. பூரி (ஜகந்நாதம்) கயா, பிராயகை, அயோத்தி, ஹரித்வாரம், குருக்ஷேத்திரம். மதுரா (Muttra) கோகுலம், பிருந்தாவனம், திருத்தணி, திருப்பதி, காளஸ்த்தி, பண்டரிபுரம். நாசிக் (பஞ்வடி) முதலான பல க்ஷேத்திரங்களுக்குப் போகும் மார்க்கங்களும் இறங்கவேண்டிய ரயில் ஸ்டேஷன்களும் விவரமாகக் காட்டப்பட்டிருப்பதுடன், அந்தந்தக்ஷேத்ரங்களின் புராதன நவீன சரித்திரப்பகுதிகளும் நன்கு எழுதப்பெற்றுள்ளது. பலசித்திரப் படங்கள் அழகாகக் காட்டப்பெற்றுள்ளன. இதன் விலை அணா 12தான். இதனையியற்றியார் இவற்றைத் தொகுத்து எழுதி யச்சிட்டுள்ள சிரமத்திற்கும், இப்போதுள்ள காகிதப் பஞ்சத்தினாலுண்டான சிரமத்திற்கும், இந்த விலை மிகவும் குறைவானதென்றே சொல்லலாகும். புஸ்தகமும் கையில் வைத்துக் கொள்ளக்கூடிய அளவு சிறிதாகவும் அழகாகவும் இருக்கிறது. தத்துவங்களைப் போல் 96 பக்கங்கள்கொண்டது. இதனை வாங்கிப் படித்து 96-பக்கங்களையும் கடந்தவர், தத்வாதீதனை எம்பிரானை இருதயகுகையில் என்றும் வைத்து ஆராதித்துவரும் ஆயர் என்பதில் யாதும் ஸம்சயமில்லை.

காலஞ்சென்ற
ஸ்ரீமான் S. இராதாகிருஷ்ணையர் B. A., F. M. U.

இத்தமிழ்நாட்டுப் பெரியோர்களுள் ஒருவராகிய இவரது சரித்திரம் படிப்பவர்களுக்கெல்லாம் ஊக்கத்தைக் கொடுத்துக் கல்வியில் ஆசையைப்புகட்டிச் சோம்பேறிகளையும் முயற்சியுள்ளவர்களாக்கும். ஆதலால், அதனை எனக்குத்தெரிந்தவளவு சுருக்கி யெழுதுகின்றேன். இது இவர் தம்பியாகிய (புதுக்கோட்டை ஸ்டேட் டிரெஷரி ஆபீஸரும், முதல் கிளாஸ் டிப்டி மாஜிஸ்ட்ரேட்டுமாயிருந்து பென்ஷன் பெற்றிருக்கிற) ஸ்ரீமான் S. நாராயணஸாமி ஐயர் M. A. அவர்களாலும், இவர்களுக்கு நெருங்கிய பந்துவாகிய வக்கீல் M. இராமஸ்வாமி ஐயர் B. A. அவர்களாலும் எனக்குக்கிடைத்த குறிப்புகளையும், சென்ற 9 வருஷகாலமாக நான் நேரிற் பழகியறிந்தவற்றையுங் கொண்டு எழுதப் பெறுகின்றது.

'புதுக்கோட்டை ராதா கிருஷ்ணையர்' என்று உலகப்பிரசித்தி பெற்ற இப்பெரியார், தஞ்சாவூர்ஜில்லா ஐயம்பேட்டைக்கடுத்த சூலமங்கலம் என்னுங் கிராமத்தில் ஓரேழைப் பிராமண குடும்பத்தில் 1861வரு நவம்பர்மீ 28உக்குச்சரியான துர்மதிவரு கார்த்திகைமீ ௰௩உ பிறந்தார். இராஜப்பையர் என்ற சீதாராமையர் என்பது இவர் தகப்பனார் பெயர். இந்தச்சீதாராமையர் தம்மூத்த குமாரராகிய இவரை ஐந்துவயதில் அக்ஷராப்பியாசம் பண்ணுவித்து அக்காலத்து முறைப்படி அவ்வூரி லிருந்த ஒரு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிக் கிரந்த அரிச்சுவடி முதல் அமரம்வரையுள்ள பாடங்களை 10 வயதிற்குள்ளே படிப்பித்துவிட்டுப் பரகதியடைந்தார். அவர் காலஞ்சென்ற 2 மாதத்திற்குள் அவர் மனைவியின் காலமுஞ் சென்றுவிட்டது.

10 வயதிலேயே பெற்றோர் இருவரையு மிழந்த இராதாகிருஷ்ணையர், பின்னர்த் தரங்கம்பாடிக்குப்போய், அங்கே வக்கீலாயிருந்த சிறியதகப்பனார் இராமஸ்வாமி ஐயருதவியால் இங்கிலீஷ் ஸ்கூலிற் சேர்ந்து ஒருவருஷம் படித்துவிட்டு, 1873 ம்ஞூத்தில் கபிஸ்தலம் என்னும் ஊருக்குப்போய் அவ்வூர் மூப்பனாரால் ஸ்தாபிக்கப்பெற்ற மிடில் ஸ்கூலிற் சேர்ந்து இரண்டு வருஷம் வாசித்தார். இங்கே வாசிக்கும்பொழுது ஒருமுறை இதற்குத்தென்மேற்கே ஆறேழு மைல் தூரத்திலுள்ள தமது ஊராகிய சூலமங்கலத்திற்குப் போய்த் திரும்பினார். அது மாரிக்காலமாதலால் தம்மூர்க்கும் கபிஸ்தலத்திற்கும் இடையிலுள்ள இரண்டாறுகள் திடீரென்று பெருக்கெடுத்து இவரை நேரே வடகரை செல்ல வொட்டாமல் தடுத்து விட்டன. வெள்ளம் வடியும் வரையில் ஊரிலே தங்கிவிட்டால் பாடம் தவக்கப் பட்டுப்போம். இதனையோசித்த இராதாகிருஷ்ணையர் 12 வயதுச்சிறு பிள்ளையாயிருந்தும், படிப்பிலுள்ள அக்கரையினாலே எப்படியும் ஆறுகளுக்கு அக்கரை போகவேண்டுமென்றெண்ணி, தம்மூரிலிருந்து நேர்மேற்கே போய்த் திருவையாற்று ரஸ்தாவிலுள்ள பாலங்களின் வழியே ஆறுகளைக்கடந்து, மறுபடி கிழக்கே திரும்பிச்சென்று கபிஸ்தலம் சேர்ந்தார். இதில் ஒன்றுக்கு மூன்றுபங்கு நடை அதிகமாயினும் படிப்பிலிருந்த ஆசையினாலே அதனை லட்சியஞ் செய்யவில்லை.

இவ்வண்ணம் ஊக்கத்தோடு இரண்டு வருஷம் படித்துவிட்டுக் கபிஸ்தலம் ஸ்கூல் ஹெட்மாஸ்டருடைய சிபாரிசின் பேரில் 1875ஞூ கும்பகோணம் காலேஜில் ஐந்தாவது வகுப்பிற் சேர்ந்து, இரண்டு வருஷம் படித்து 1877-ம் வருஷ ஆரம்பத்தில் நடந்த மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் சென்னை ராஜதானிக்குள் இரண்டாவதாகத்தேறி, ஸர். டி. மாதவராவ் பிரைஸ் என்றுசொல்லப்படும் வெகுமதி ரூ 50ம், எப். ஏ. பரீக்ஷைக்குப் படிக்க ஸ்காலர்ஷிப்பும் பெற்று, அங்கேயே படித்து 1879-ம் வருஷ ஆரம்பத்தில் எப். ஏ. பரீக்ஷையிலுந்தேறினார். இப்பரீக்ஷைக்குப்போன ஸமயத்தில் இவருக்கு உடம்பு அசௌக்கியமானமையால் முதலாவதாகத் தேறிப்பரிசுபெற இயலவில்லையாயினும், இவரது புத்திநுட்பத்தை யறிந்த காலேஜ் உபாத்

திபாயர்கள் "நெஞ்சுற அருங்கலைகள் கற்குமவர் தம்மளவில் நேய நிகழாதவர்கள் யார்" என்று வில்லிபுத்தூராழ்வார் கூறியவண்ணம் மனங்கசிந்து இவரை அங்கேயே வைத்துக்கொண்டு அன்புடன் படிப்பித்தார்கள். இவரும் அவ்வாறே மேலும் இரண்டுவருஷம் படித்து 1881-ம்வரு ஜனவரிமாதத்தில் பீ. ஏ. பரீக்ஷைக்குப் போய் பிரஸிடென்ஸிக்குள் இரண்டாவதாகத்தேறிப் பட்டம் பெற்றார். அச் சமயத்தில் இங்கிலீஷ்ப் பரீக்ஷாதிகாரியாகிய மிஸ்டர் போர்ட்டர் துரையவர்கள், இவரது இங்கிலீஷ் பாஷை ஞானத்தைப்பற்றி இவரை நிரம்பக் கொண்டாடினார்.

இவ்வாறு கல்விகற்றுத் தேர்ந்தபிறகு வேலைக்குப்போக உத்தேசம் பண்ணினார். அச்சமயம் புதுக்கோட்டைக் காலேஜானது ஹைஸ்கூலாயிருந்தது. அதற்கொரு உதவிபுபாத்தியாயர் வேண்டியிருந்தமையால், கும்பகோணம் காலேஜ் பிரின்ஸிபாலாயிருந்த மிஸ்டர் T. கோபாலராவ் அவர்கள், தம்மாணாக்கராகிய இவரைத்தேர்ந்தெடுத்து, திவான் சேஷையா சாஸ்திரிகளுக்குச்சிபார்சு செய்து அனுப்பினார்கள். அதனால் இராதாகிருஷ்ணையர் 1881-வரு மார்ச்சு மாதத்தில் (19 ஆகி 20-வது வயது) புதுக்கோட்டைக்கு வந்து மகாராஜா ஹைஸ்கூலில் இரண்டாவது உதவியுபாத்தியாயர் வேலையை யொப்புக்கொண்டு சிலமாதம் பார்த்துப் பிறகு முதலுதவியுபாத்தியாயரானார். அதன்பின் 1882-ம் வருஷத்தில் ஷை ஹைஸ்கூல் காலேஜாக மாறிற்று. அதிலும் முதலுதவியாகவே யிருந்துவந்த நம் ஐயரவர்கள் 1895-வரு ஜூலை மாதத்தில் பிரின்ஸிபால் வேலையை யொப்புக்கொண்டார்கள். அதனையொப்புக்கொண்டு மிகவுந்திறமையுடன் பார்த்து வரும்பொழுது, 1897-ம் வருஷத்தில் சென்னைராஜாங்கத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாளர் (Tamil Translator to Government) வேலை காலியானதால் அதனை இவர்க்குக் கொடுக்க வேண்டுமென்று மதராஸ் கவர்ன்மெண்டு சிக்ரெட்டேரிக்குச் சிபார்சு செய்து, திவான் சேஷையா சாஸ்திரிகள் கும்பகோணத்திலிருந்து 1897 வரு அக்டோபர்மீ 28உ அனுப்பியகடிதத்தில் எழுதியதாவது:—

"* * * இவர் (பீ. ஏ. பரீக்ஷைக்குத்) தமிழை உபபாஷையாக எடுத்துக் கொண்டார். ஆனால் சாவகாசகாலங்களில் பிரத்தியேகமான பயிற்சியால்

அந்தப்பாஷா ஞானத்தை மிகவும் விருத்தி செய்து கொண்டார். தமிழ்ப் பாஷையிலுள்ள இலக்கிய இலக்கணங்களின் விஸ்தாரமான சரித்திரங்களில் இவருடைய பிரக்ஞை மிகவும் விசாலமா யிருக்கிறது. அப்பாஷையில் பூர்த்தி யான பாண்டித்தியம் பெற்ற ஒரு பண்டிதருக்கு ஒரு வழியிலுங் குறைந்த வரல்லை. இவருடைய தமிழ்வாசகங்கள் அநேகபள்ளிக்கூடங்களில் பாட புத்தகங்களாக வைக்கப்பெற்றிருக்கின்றன. இவருடையவசனநடை எளியகம் பீரமான கதியுள்ளதா யிருக்கிறது. * * * இவர் தமிழில் பிரதான பரீக்ஷக ராகவும், மிகவும் தகுதியுள்ளவராகவும் இருந்திருக்கிறார். மேலே கூறியவை களெல்லாம் அந்த (Tamil Translator) வேலைக்குண்டான முக்கிய வுரி மைகள். இவருடைய பண்டித லட்சணங்களுக்குண்டான பொதுவுரிமை கள் மிகவும் மேம்பாடுள்ளவைகள். இவர் அங்ககணித சாஸ்திரப் பிரக்ஞையு டன் பிறந்தவர். இவரது கணக்குப்புத்தகம் இதுவரைவழுபதிப்பாகி, இந்தியா முழுவதிலும் பரவியிருக்கிறது. இவராற் செய்யப்பட்ட பீஜகணிதம் (Algebra) லண்டன் ஸர்வகலாசாலைப் பரீக்ஷைகளுக்கு (Intermediate Text-book) நடத்தா பாடபுத்தகமாக ஒப்புக்கொள்ளப்பெற்று, கேம் பிரிட்ஜ் ஸர்வகலாசாலைக் கென்று கியாதிபெற்ற புத்தகப்பிரசாரகர்களால் ஒரேகாலத்தில் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் அனுஷ்டானத்திற்குப் பிரகசப் படுத்தப்பட்டது. பின்னும் இவர்களாலேயே, ஸமக்ஷேத்திர திரிகோண சாஸ்திரத்தில் (Plane Trigonometry) ஒருபுத்தகத்தை இங்கி லாந்திலும் இந்தியாவிலும் உள்ள ஸ்கூல்களின் உபயோகத்திற்காக வெளி வரச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார். இவருடையவேலை கள் ஐக்கியமாகாண (United States)வாசிகளாலும் மெச்சிக்கொள்ளப்பெற் றன. இவர்சென்னைச் சர்வகலாசாலைக் கணிதஉதவிப்பரீக்ஷகராக அநேக வருஷ காலம் இருந்தார். இவர் 'செனொபன்' (xenophon) என்னும் புத்தகத்திற்கெழு திய இங்கிலீஷ் வியாக்கியானம் மெஸ்ஸர்ஸ்-ஸ்டோன்-டாட்ஸன் முத லியவர்களைப் போன்ற ஆங்கில பண்டிதர்களாலே வியந்து பாராட்டப் பெற் றது. இவர் மேற்சொன்னவாறு கணிதஞானமுடையரா யிருப்பதுடன் இங்கி லீஷ்பாஷை ஆராய்ச்சிகளில்தேர்ச்சியடைந்தபண்டிதராகவும்இருக்கிறார். அவ் விஷயத்தில் அவருடைய ஆராய்ச்சிகள் விசாலமாயும், சூட்சுமமாயும் இருந்து வருகின்றன. மொழிபெயர்ப்பாளர் வேலையை இவர் அபேக்ஷிப்பதானது அதி கச்சம்பளத்தை யுத்தேசித்தன்று; 250-க்கும் 300-க்கும் உள்ள வித்தியாசம் ரூ50 தான்; இதொருபெரிதன்று. இவருடைய அந்தரங்கஅபிப்பிராயம் தமக்கு விசேஷபிரக்ஞையுள்ள சாஸ்திரங்களிலல்லாமல, இன்னும் இதரசாஸ்திரங்களி லும் தொடர்ந்த ஆராய்ச்சிக்குப்போதுமான அவகாசங் கிடைக்கவேண்டு மென் பதேயாம். இவருடையமுயற்சி பலிக்கக்கூடிய அதிருஷ்டத்தைப் பெறுவாரா

யின் இவர் ஸம்பூர்ணமானமுதல்தரமொழிபெயர்ப்பாளராக இருப்பார். காலேஜ் பிரின்ஸிபல் உத்தியோகம் இவருடைய எல்லாக் காலத்தையும் சக்தியையும் குறையச் செய்கிறது. * * * ''

இவ்வளவும் அக்கடிதத்தின் ஒருபாகமேயாம். மற்றைப்பாகத்தில் மற்றுஞ்சில முக்கியமான காரணங்களாலும் அவ்வேலை மிஸ்டர் இராதாகிருஷ்ணையருக்கே கொடுக்கப்பட வேண்டுமென்று காட்டப்பட்டிருந்தது. உலகப்பிரசித்திபெற்ற சேஷையா சாஸ்திரிகள் அவ்வளவெழுதியும் அவ்வேலை இவருக்கின்றி மற்றொருவருக்குக் கொடுக்கப்பெற்றது. அதுவும் புதுக்கோட்டைக்காலேஜின் அதிருஷ்டம் என்றே சொல்லவேண்டும். 1882 ல் இது காலேஜானது முதல் 13½ வருஷம் முதலுதவிபாகவும்; அப்பால் 1912ம்-ளு ஜூலை மீ வரையில் 17 வருஷம் ப்ரின்ஸிபலாகவும் வேலைபார்த்து உழைத்துக் காலேஜை முன்னுக்குக் கொணர்ந்தவர் இவரே. 1881-ளுத்தில் ஹைஸ்கூலாயிருந்தபொழுதும், இவர் 9மீ வேலைபார்த்திருத்தலால், புதுக்கோட்டை மகாராஜா ஹைஸ்கூலைக் காலேஜாக்கி, 31¼ வருஷம் அல்லும் பகலுமாக வுழைத்து, அதனை இப்பொழுதிருக்கும் உன்னதஸ்திதிக்குக் கொணர்ந்துவைத்த மகான் இந்தராதாகிருஷ்ணையராவர். இவர் இடையே ஏழெட்டு வருஷகாலம் புதுக்கோட்டை ஸ்டேட் கல்வியிலாகா டைரெக்டர் வேலையையும் சேர்த்துப் பார்த்திருக்கிறார். 1899-ல் இவர், சென்னைச் சர்வகலாசாலைச் சகாக்களில் ஒருவராகி F. M. U. என்னும் பட்டம் பெற்றார். அதற்கு முன்னும்பின்னுமாக அநேக வருஷகாலம் ஷை யூனிவர்ஸிடியில் B. A., M. A. வகுப்புகளுக்குப் பரீக்ஷாதிகாரியாயிருந்திருக்கிறார். மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பரீக்ஷைகள் ஏற்பட்டபிறது அவற்றிற்கும் இவர் பரீக்ஷாதிகாரியாயிருந்திருக்கிறார். இவரிடத்தில் மாணாக்கர்களுக்கும் மேலதிகாரிகளுக்குந் தக்க மதிப்புண்டு.

இவ்வண்ணம் 20-வது வயது முதல் புதுக்கோட்டையிலேயேயிருந்து 31¼ வருஷம் வேலைபார்த்தபிறகு 1912 ளு ஜூலை மாதத்தில் (ரூ. 300 சம்பளத்தி லிருந்து ரூ. 150) பென்ஷன் பெற்றுக் கொண்டார். அதன் பின்னரும் ஷை ஸ்டேட்டுக்கு மிகவும் உபயோகமான வேலைசெய்ப ஆரம்பித்து, 'புதுக்கோட்டை ஸம்ஸ்தான

சரித்திரம்' 'ஸ்டேட்மானியூல்' என்னும் இரண்டு புத்தக மெழுதி வெளியிடலானார். அவற்றுள் ஸம்ஸ்தான சரித்திரம் அச்சாகி விட்டதென்றும், ஸ்டேட்மானியூல் அச்சிலிருக்கிறதென்றும், அவ்விரண்டுங் கூடியசீக்கிரத்தில் வெளிவருமென்றும் தெரிகிறது. மேலும் இவர், இக்காலத்துத் தமிழை வளர்க்க வந்த தாய்போல் விளங்குகின்றவரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்து உபஅக்கிராஸனாதிபதியும் ஆண்டிப்பட்டி ஜமீந்தாருமாகிய ஸ்ரீமான் பேத்தாச்சி செட்டியார் அவர்களின் பொருளுதவி கொண்டு, ஒருகமிட்டி ஸ்தாபித்து தமிழ் நூல்களின் வரலாறு (History of Tamil Literature) என்னும் புத்தகம் எழுதிவெளியிட ஏற்பாடு செய்து வந்தார். இடையிடையே மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகையிற் சிற்சில ஆராய்ச்சிகள் வெளியிட்டதுமுண்டு. இவரிடமிருந்த பிரதான குணங்களாவன:—

1. விடாமுயற்சி—இவர் மேற்கொண்ட காரியத்திற்கு எத்தனை யிடையூறுவரினும் அவற்றை லட்சியஞ் செய்யாமல் முயன்று காரியசித்தி பெறுவார். இது இளமையிற் கபிஸ்தலத்திற்கு ஆறு தாண்டிச் சென்றமை முதலியவற்றாற் புலனும்.

2. கல்வியில் விருப்பம்—இவர் சரித்திர முற்றிலும் இக்குணமே மேம்பட்டு விளங்கும். ஆகனல், ஆங்கிலம் கணக்கு சரித்திரம் தமிழ் ஸம்ஸ்கிருதம் ஸங்கீதம் என்னும் பலவற்றையும் முறைபடக் கற்றுப் பண்டிதரானார். ஒன்றைக் கற்கத்தொடங்கி விட்டால் அது முடியும்வரை இவர் மனம் சொல் செயல் என்னும் மூன்றும் அதிலேயே சென்றுகொண்டிருக்கும். தாம் யாரைச் சந்தித்தாலும் அவரிடம் அது விஷயமாகவே பேசுவார். ஒருபுத்தகத்தை யெடுத்தால் அதனை ஐயந்திரிபறக் கற்றபின்னரே மற்றொன்றை யெடுப்பார். நல்ல ஞாபகசக்தியுடையவராதலால், பிறருக்கு அருமையான காரியம் இவருக்கு லேசாயிருக்கும். 31 வது வயது வரையிற் சங்கீதமென்பது இன்னதென்றும் அறியாதிருந்த இவர், ஒருமுறை ஸ்நேகிதரொருவராற் பரிகசிக்கப் பெற்று, அன்றைக்கே அதனைத்தொடங்கி 3 மாதத்திற்குள் 50 கீர்த்தனம் பாடக்கற்றார். அப்பால், ஸங்கீத ரத்னாகரம், இசைநுணுக்கம் முதலியசங்கீத சாஸ்திரங்களையெல்

லாம் ஆராய்ந்து ஒரு புத்தகம் எழுதினர். (அது இன்னும் அச்சிடப்பெறவில்லை.) 'தீக்ஷிதர் கிருதி' என்று வழங்கும் கீர்த்தனைகளைச் செய்து தமிழ்நாட்டுக் குதவிய தீட்சிதர் வம்சத்திற் பிறந்த (எட்டையபுரம் ஸம்ஸ்தான வித்வான்) சுப்பராம தீட்சிதரவர்கள் எழுதியச்சிட்ட 'ஸங்கீதஸம்பிரதாய ப்ரதர்சினி' என்னும் புத்தகத்தின் முகவுரையில் 'இரத்னாகரம் முதலான ஸங்கீத லட்சணசாஸ்திரங்களை ஆராய்தலில் எனக்கு மகா-ள-ள-ஸ்ரீ இராதா கிருஷ்ணையர் செய்தஉதவி எப்பொழுதும் நினைக்கத்தகுந்ததாயிருக்கிறது' என்று எழுதுவார்களாயின், இவரது ஸங்கீத சாஸ்திரப் பயிற்சியைப் பற்றி என்னென்றுரைப்பது!

3. உண்மை—இவர் விளையாட்டுக்கேனும் பொய் பேசாதவர். ஸ்நேகிதர்களிடத்திலாவது பந்துக்களிடத்திலாவது தம்மிடத்திலாவது பிழைகண்டால், உள்ளதை உள்ளவாறே சொல்லிவிடுவார்.

4. பரோபகாரம்—பரோபகார சிந்தை இவரிடங் குடிகொண்டிருந்தமையால், படிப்பவர்க் கெல்லாம் மனமாரப் போதிப்பார். வேண்டியவர்களுக் கெல்லாம் புத்தகமுங் கொடுத்துத் தம்மாலியன்ற தானதருமங்களும் செய்து வந்தார்.

5. இராஜபக்தி—புதுக்கோட்டை யரசரிடத்தும் இந்தியசக்கிரவர்த்தி யிடத்தும் பக்திபூண்டிருந்ததுடன், இப்பொழுது நடக்குங் கொடிய யுத்தம் பிரிட்டிஷார்க்கு வெற்றியுடன் முடிவடைய வேண்டு மென்று பிரார்த்தித்துச் சூலமங்கலம் பெருமாள் கோவிலில் நித்தியார்ச்சனையும் செய்வித்து வந்தார்.

6 தெய்வபக்தி—தினந்தோறுங் கோயிலுக்குப் போய்வருவது இவரது வழக்கம். சிற்சில பாராயணங்களும் பஜனைகளும் தவறாமற் செய்து வந்தார். இவை போன்ற பல நற்குணங்களும் இவரிடம் விளங்கின.

இத்தகைய பெரியாராகிய இராதா கிருஷ்ணையர், சென்ற இரண்டு வருஷகாலமாகத் தம் அருமைக் குமாரனது படிப்பையும் மற்றுஞ்சில சௌகரியங்களையும் உத்தேசித்துத் தஞ்சாவூரில் வசித்து வந்து, சென்ற ஜனவரிமீ 24உ (நளஸு தைமீ Cஉ.) 15

வயதுள்ள தம் அருமைக்குமாரனையும் மனைவியையும் தம்பி முதலிய சுற்றத்தார்களையும் விட்டுப்பிரிந்து பரகதி யெய்தினர். இவர் நல்லவராதலால் இவரது ஆத்மா சாந்தியடைந்திருக்கும். இவர் பிறவிச் செல்வரல்லராயினும் தம் குமாரனுக்கு வேண்டிய அளவு பொருள் தேடிவைத்திருக்கிறார். இனி இவர் குடும்பத்தைக் கடவுள் இரட்சிப்பாராக.

அ. கோபாலையன்.

புதுக்கோட்டை

ஹிஸ் ஹைனஸ் மகா-ள-ள-ஸ்ரீ மகாராஜா அவர்கள் காலேஜ்

லேட் பிரின்ஸிபால்

ஸ்ரீமான் S. இராதாகிருஷ்ணையர் B. A., F. M. U.

அவர்கண்மீதியற்றிய

சரமகவி மாலிகை.

பத்திரிகை மூலமதா வுடலுயிரெல் லாம்பதைக்கப் படித்தே னந்தோ
எத்தினத்து மித்தினந்தா னென்கொடிய தினமறியே னெனக்கு மோது
வித்தகுரு ராதாகிருஷ்ணையனித்த வுலகத்தை விடுத்தா னம்ம
இத்தரணி வாழ்க்கையிதே யெனவிறந்து மோதுவித்தா னென்ன சொல்வேன்.

கலைமடந்தை யோதுகின்ற ளெனுங்கூற்றுக் கிலக்கியமா யாங்கள் காணத்
தலைபெடுத்த னாண்முதலின் னாளளவு மோதுவதே சாலக் கொண்டா
யுலையடுத்த மெழுகெனவென் னுயிருருக வுடலிருக்கு முராந்தா னென்னோ
முலைகொடுத்த மாதாவிற் கலைகொடுத்த தாதாநீ முதன்மை யன்றோ. 2

ஒருமைந்தன் வேம்பனைநீ பிரிந்தவன்மை யுணரவல்லே முன்பா லோத
வருமைந்தர் கரும்பனையார் பலர்கடமை நீபிரிந்த வகைதா னென்னே
தருமந்தா னோவிதையா வறியாமைத் திறனல்யான் சாற்று கின்றே
னருமந்த பிள்ளையினு மினிதுங்காலோ விட்டன்று மந்தக் காடே. 3

கன்னிகா மென்னெழுத்திற் கருதரிய பாண்டித்யக் கலைப்பூண்டோய்
மன்னிகமா காதந்த வானுலகந் தனக்கென்றோ வல்லை சென்றாய்
யென்னரிதாங் கலைமுழுது மிவ்வுலகத் தேயுணர்ந்தா யெங்கே சென்றும்
புண்ணிடந்தா னென்னவினி யாதுணர்வாய் போதவிறை புதைமாலை. 4

கற்றமிழில் வடமொழியி லாங்கிலத்தி லொருப்புலமை கடந்திருந்தாய்
கொற்றவர்கள் புகழுமெங்கள் குருமணியே குருவினைப்போற் குவலயத்தே
பெற்றினியாங் காணவலம் பிரிந்துபய ரெய்துவைப்பேம் யாங்களிங்கே
யுற்றற்ற விட்டனைக் கண்டகம் யாதுகொலோ வொளிர்வான் போந்தே. 5

உருவெடுத்த சத்தியமே யெக்காலு மனத்தொல்செய லொருங்கே காட்டும்
பெருநடத்தைப் பெருமானே யெத்திசையும் பரவவளர் பெரிய கீர்த்தித்
திருவளர்த்த கோமானே யென்பலடைப்பா னிவண்விட்டு வீடு சென்றாய்
தருக்கோர்த்த காவன்னால் பிரிந்துயர் மனத்திடைபே சகிக்கொணாதே. 6

துக்கமார் பலவளமுங் குலவுதஞ்சை நாடதனைச் சார்ந்த குல
மங்கலமா நகர்தன்னிற் புகழுடனே தோன்றியெங்கண் மன்னர் மன்னன்
றொங்கிவளர் புதுக்கோட்டைக் காலேஜிற் பெரும்புலமை புரிந்துநின்று
மெங்கணின்றும் யாமைப்பிரிந்தாயினியினின்றன் முகமலரையினிக் காண்பேமோ. 7

சென்னைகலா சங்கமதாரைத்தமிழ்ச்சங் கத்திற்கோர் திலகம் போன்றாய்
தன்னிகரி லாப்புலவர் சிகாமணியே கற்றடங்குந் தகைமை மேலோய்
புன்னுடைய பெருமையெலா மின்னவெனவுரைக்கவல்ல பான்மை புன்போ
மன்னுலகிற் காணுமின் னியற்பெருமை கண்டிருந்து மடங்கேயன்றோ. 8

பன்னூற்க ளியற்றிபுல மிளுக்களித்த பண்டிதரே பரிவான் முன்னம்
தென்னூற்றி ரட்டினுக்கோ ரிணையிலா யிசைத்தாப் பொன்னியரத்துப்
பன்னொரு ஜெனவரியில் விருபாகுன் மிற்காக்கிப் பதவி பெற்றாய்
பெண்ணையை யாதுயரம் யாரிடத்தி லெடுத்தியம்பு வேமே. 9

பிரிந்தகடையென் றெக்கொத்தே யித்துனைநா னம்பனம் பித்தற்றிப் பின்றென்
பிரிந்திலைப் பிரிந்திலைப் பெயரையென்றன் மனத்தாதியிபா தெரிந்து
இருந்தனையிருப்பிடமயானினியுமிம்மேதையை நீயெடுக்கிருத்தியவைப்பவன்
மருந்தனைய குணமெலாத் தரநாதிரிங்கேபுமாம் கெங்கு மகத்துதாவிக்கொவ்வே. 10

சென்னை,
23—1—17.

[illegible]

ஒழுக்கத்தின் உயர்வு.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"—திருவள்ளுவர்.

கடவுள் மனிதரைப் படைத்து, அவர் முயற்சியால் தன்னை த்யானித்து தன் அறிவையும் பெற்று தன்னோடு கலக்கவும் வழி கொடுத்திருக்கிறார்.

ஆன்மா, தனது துச்சிலாகிய உடலின் வசப்பட்டுச் சில சமயங்களில் மிருகாம்சமான காமாதிகளில் உழல்வதாயினும், கடைசியாக எந்த விதத்திலேனும், தனது தலைவனான அருட்பெருஞ் சோதியுடன் கலக்கவேண்டியதேயாகும்.

ஆன்மா உடலினின்றும் தனித்திருக்கும் இயல்புடையது. உடலில்லாமலும் அது வசிக்கக்கூடும்.

ஆன்மா அழியாதது. அஃது இந்த உடலை, தனது யாத்திரையின் வாசஸ்தானங்களில் ஒன்றாகக் கொண்டுள்ளது.

ஆன்மா ஒரு தேகத்தைப் பற்றியிருப்பதானது, அடிக்கடி உடல் விட்டு உடல் பாய்வதற்கன்று. தனது நீண்ட யாத்திரையில் தன்னுடைய தர்மத்தை உயர்த்திக்கொண்டு கடவுளைக் கிட்டுவதற்காகத்தான்.

ஆகையினால் பிராணாயாமாதிகளினாலாவது, ஆன்மா தனது இவ்வுடலுடன் கூடிய வாழ்நாளைப் பெருக்கிக்கொண்டிருந்து தனது தர்மத்தைத் திருத்திக்கொள்வதில் நோக்கமுள்ளதாக இருக்கவேண்டும்.

இனியொருதாய் வயிற்றில் பிறந்துழலாது இருக்க முயல்வதே மோக்ஷம் என்று குறிக்கப்படுகிறது. அதற்காக ஆன்மாவானது, பரோபகாரம் ஜீவகாருண்யம் கண்ணியம் ஸத்யம் இவற்றில் அடிக்

கடி பழகிவரவேண்டும். இவைகள் தாம் கடவுளினுடைய நிவிருத்தி மார்க்கச் சட்டத்தின் படிகளாகும்.

மோக்ஷமென்பது பாபத்திலிருந்து விடுபடுதலும் புண்ணிய ரூபனான கடவுளுடன் ஒன்றுபடுதலுந்தான். இவை இரண்டும், உயர்ந்த மதக்கொள்கைகளில் நம்பிக்கைகொண்டு, நமது அறிவிற் சிறந்த பெரியோர் ஏற்படுத்தியிருக்கும் ஒழுங்குகளின்படி ஒழுகி வருதலாலே மாத்திரம் ஸித்திபெறுமல்லாமல், அதிகாரத்தினாலாயினும் ஆடம்பரத்தினாலாயினும் கிட்டுவவன்று.

ஒழுக்கம் என்பது, நாம் நம் பொருட்டும் பிறர்பொருட்டும் நடந்துகொள்ள வேண்டிய படியைக்காண்பிப்பதேயாகும். மதக் கொள்கைகள், நாம் கடவுளுடன் கலந்து வாழவேண்டியபடியைக் காண்பிக்கின்றன. ஒழுக்கமானது, நாம் பொய்பேசப்படாதென் றும், அக்ரமவழியில் புகப்படாதென்றும், ஜீவஹிம்சை செய்யப் படாதென்றும், யாரும் யாவையும் மனம் வருந்தும்படியான செய்கையை நினைக்கவும் கூடாதென்றும், நம்மால் கூடிய அளவு அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும் என்றுமே குறிக்கின்றது. மதக்கொள்கைகள், ஆன்மா அவசியம் கடவுளைச்சேரவேண்டிய வழிகளைத்தேடிக்கொள்ள வேண்டுமென்றும், கடவுளிடத்தில் எப்போதும் எவ்விஷயத்திலும் பிரியத்துடன் இருக்கவேண்டுமென் றும் கற்பிக்கின்றன. ஒழுக்கத்தினால் உயர்ந்துள்ள ஆன்மா வினையே, மதக்கொள்கைகள், கடவுளின் மார்க்கத்தில் ஏற்றிச் செல்லும். ஆகையினால் மதக்கொள்கைகள் கடவுளுக்கும் ஆன் மாவுக்குமுள்ள சம்பந்தத்தை விருத்திசெய்து கொண்டு போகின்றன.

ஆன்மா உடலில்வசிக்கும்போது கலக்கம் பெறுவதும் கலக்க முறுவதும், வருந்தியிருப்பதும் வாழ்ந்து இருப்பதும், அல்லது இப் பிறப்பில் தேடிக்கொண்ட வழியினால் அன்று. அதன் முன்வினைக் கிணங்கக்கடவுளால் நியமிக்கப்பட்ட அதனது பிரகிருதியின் காரி யங்களேயாகும். இந்த முறைகளை ஆன்மா அநுபவித்தே வர வேண்டும். எனெனில்:—இவைதாம் கடவுள் நமக்கு அளித்திருக்

கும் பிரவிருத்திமார்க்கச் சட்டங்களாகும். உடலானது பிரவிருத்திமார்க்கத்துக்கான பிரகிருதியின் அம்சங்களாலும், நிவிருத்திமார்க்கத்துக்கான கடவுளின் திவ்யாம்சங்களாலுமே உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் நாம் சேதனாசேதன வஸ்துக்களின் சேர்க்கையுடன் கூடி வாழ்ந்து வருகிறோம். ஆனால், நமது அறிவின் ஏற்றத்தால் அசேதனாம்சங்களைக் கழித்துச் சேதனாம்சங்களைப் பற்றிக்கொண்டே கடவுளின் படியில் ஏறவேண்டும். இதுவே நிவிருத்திமார்க்கம் என்பது. பிரவிருத்தியம்சங்களைத் தள்ளி நிவிருத்தியம்சங்களைப் பற்றுவதற்கு மனிதனே உரியவன். ஏனெனில்:—இவனே "புல்லாய்ப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாய்ச், செல்லாநின்ற வித்தாவர சங்கமத்துள், எல்லாப் பிறப்பும் பிறந்" திறந்திறுதியில் பொல்லா வினையும் போக்கிக் கொளவிப் புனிதப்பிறவி எடுத்துளான். இவனே பிரகிருதியினுடைய பரமபுத்திரன். இவனுக்கே ஜீவகாருண்யமென்பது இன்னதென அறிந்துகொள்ளப்படும். இந்த ஜீவகாருண்யமே ஒழுக்கத்துக்கு வித்தும் எருவும் விளைவுமாகும்.

ஆன்மா, ஒருடலைவிட்டு மற்றொருடலைப் பெறும்போது, முந்தின உடலில் தான் பெற்ற அநுபவத்துடனே உழைக்க ஆரம்பிக்கின்றது. ஆயினும் இடையிடையே மிருகாம்சங்களான பல பிரவிருத்திகளுடன் கூடியே இந்த உடலைத் தொழிகின்றது. இந்தப் பிரவிருத்திகளே, ஆனந்தலோகத்தின் படிகளில் ஏறவிடாமல் தடுக்கின்றன. அப்போதுதான், மனிதனுக்கென்று கூடிய கடவுளாது திவ்யாம்சலேசமாகிய பகுத்தறிவு மந்திரிஸ்தானத்திலிருந்து இவனுக்கு ஆதரவு காட்டுகின்றது.

இந்த அறிவின்வழி நிற்றலாலே, ஆன்மா தனது தர்மத்தில் உயர்ந்து, தனது யாத்திரையை முடித்து, ஒப்புவபெற நோக்குகிறான். அப்போது பரிசுத்தமான அறிவுடன் விளங்குகிறான். அதுவே கடவுளறிவு. அந்த அறிவுடன் எங்கிருப்பினும், பொதுநோக்கும் அருளுருவமும் பெற்று யாவர்க்கும் தெய்வமென விளங்குகின்றான்.

சுகம் துக்கமென்பன, முன் பிறப்பில் ஆன்மா அநுபவித்துப் பழகியுள்ள செயல்களின் பயன்களாகவே முடிகின்றன. ஒவ்வொரு

ஜீவனும், முன் பிறப்பினின்று தன்னுடன் கொண்டுவந்துள்ள அநேக பல முறைகளையே இப்பிறப்பில் மனமொழி மெய்களால் செய்து காட்டுகிறான். இப்பிறப்பில் தனது இயற்கையான பக்குவத்தினால் விருத்திமார்க்கத்தில் ஏறமுயல்வதே இவனுடைய தர்மவிருத்திக்குச் சாட்சியாகும். இந்த ஆன்மதருமம் பெருகிவந்தால் யாத்திரையும் முடிவுபெறும். பிறகு, மற்றொரு தாய்வயிற்றில் பிறக்க வேண்டிநேராது.

ஆகையினால், எதனையும் ஆன்மவிருத்திக்கு அநுகூலமாகவே செய்துகொள்க. ஆன்மதருமவிருத்தியைபக்கோரி மனமொழி மெய்களாற் செய்யப்படும் எக்காரியமும் பிறர்க்கு நன்மைசெய்யுமே யன்றி யொருகாலும் தீமையைத்தராது. இதுவே வேதமார்க்கம். இதுவே புராணக்கருத்து. இதுவே பெரியோரது கொள்கை. இதுவே கடவுளுக்குத் திருப்தி. இதுவே சாந்தியென்பதுமாம். நித்யானந்தவாழ்வு என்பதொன்று உள்ளது உண்மையானால், அஃது இதனைக்காட்டிலும் வேறாகாது. அப்போதுதான் கடவுள் இருக்குமிடமெல்லாம் நாமும் இருப்போம். கடவுள் இல்லாத இடமில்லையாகையால், நாமில்லாத இடமும் இலதாகிவிடும். அப்போது தான் ஒழுக்கத்தின் உயர்வு விழுப்பத்தைப் பெற்றதாகும்.

பத்திராதிபர்.

விவசாயம்.

கொளுஞ்சி விதை சேகரிக்கும் விதமும், அதை விதைக்குமுன் செய்யவேண்டிய பக்குவமும்.

விவசாய டிபார்ட்டுமெண்டார் கிருஷிகருக்கு சிபார்சு செய்யும் அநேக பசுந்தாள் உரப்பயிர்களில் கொளிஞ்சிப்பயிர் ஒன்று. "கொளிஞ்சி நெல்காட்டும்" அல்லது "கொளிஞ்சி குலைகாட்டும்" என்று வழங்கும் பழமொழி தமிழ் ஜில்லாவிலுள்ள எல்லா கிருஷிகருக்கும் சாதாரணமாய் தெரிந்தவிஷயம். தற்காலம் சாதாரண

மாய்க் கிருஷிகர் எருவுக்காக வாங்கும் இலைதழைகளின் விலை ஜாஸ்தியாகிக்கொண்டிருப்பதுமல்லாமல் தழை எருக்கள் தங்களுக்கு வேண்டும்போது சுலபமாய் கிடைக்கக்கூடாமலிருக்கிறது. ஆகையால் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் பசுந்தாள் எருப்பயிர்களை கிருஷிகர் தங்களுடைய நிலங்களிலேயே விளைவித்து பலனடைதல் மெத்த சரியான விஷயமென்று போதிக்கிறார்கள். டிபார்ட்மெண்டார் சிபார்சு செய்யும் அநேகவித பசுந்தாள் உரப்பயிர்களில் வடிகால் வசதியுள்ள ஒருபோக நஞ்சை நிலங்களுக்கு கொளிஞ்சிப்பயிர்தான் பிரத்திறமானது. இக்கொளிஞ்சி மிகச் சிறந்ததென்ற விஷயத்தை உத்தேசித்து திருநெல்வேலி ஜில்லாவைத்தவிர மற்ற தமிழ் ஜில்லாக்களில் இக்கொளிஞ்சி விதைக்கு மெத்த கிராக்கி ஏற்பட்டுவிட்டது. இது காரணத்தினால் திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து இதர ஜில்லாக்களுக்கு வருஷாவருஷம் ஏராளமான கொளிஞ்சிவிதை ஏற்றுமதியாகிறது. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ளவர்களைப்போல் இதர ஜில்லாவிலுள்ள கிருஷிகரும் இக்கொளிஞ்சிவிதை சேகரிக்காததினால் நாளுக்குநாள் திருநெல்வேலிஜில்லாவில் இவ்விதைக்கு பிரியம் ஜாஸ்தி உண்டாகிக் கொண்டிருக்கிறது. இதர ஜில்லாக்களிலுள்ள கிருஷிகருக்கும் இவ்விதை சேகரிக்கும் விதம் தெரிந்துவிட்டால் யாதொரு கஷ்டமில்லாமல் கொளிஞ்சிவிதை அங்கங்கே கிடைக்கும். திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து வருஷாவருஷம் தருவித்துக்கொள்ள வேண்டிய அவசியமும் நேரிடாது. கொளிஞ்சிவிதை சேகரிக்கும் முறையில் யாதொரு கஷ்டமுமில்லை. அதை எளிதில் எல்லாரும் சுலபமாய் கைபாடக்கூடியதுதான். கொளிஞ்சிச்செடிகளில் சாதாரணமாய் மார்ச் ஏப்ரல் மாதங்களில் புஷ்பம் பிடித்து ஜூன் ஜூலை மாதங்களுக்குள் காய்பிடித்து விதை முற்றியிருக்கும். முற்றின நெற்றிலிருந்து சூரிய உஷ்ணத்தினால் நெற்று வெடித்து விதைகள் செடிகளுக்கு அடியிலும் பக்கத்திலும் கொட்டிவிடும். இவ்விதம் கொட்டுண்டிருக்கும் விதைகளை திருநெல்வேலி கிருஷிகர் மண்ணுடன் கூட்டிப்பெருக்கி அப்பால் மண்ணைச் சல்லடைகளால் அப்புறப்படுத்தித் தனி விதைகளை மாத்திரம் வேறே எடுத்துக் கட்டிவைப்ப

துண்டு. இந்தவிதை சேகரிக்கும் மாதங்களில் சாதாரணமாய் கூலிச்சிற்றாள்களுக்கும் வேலைஜாஸ்தியகப்படாதாகையால், அவர்கள் இவ்விதை சேகரிப்பதில்சிரத்தைஎடுத்துச் சேகரிப்பது சாதாரணம். அப்படிச்சேகரித்த ஒருபடிவிதைக்கு பதிலாக ஒருபடி நெல்லைக்கூலியாக வாங்கும் வழக்கமுமுண்டு. மேலேசொன்னமாதிரி விதை சேகரிக்க எல்லாவிடங்களிலும் சௌகரியப்படமாட்டாது. ஏனென்றால் செடிகளின் கீழிருக்கும் மண் இளகலாயும் மணல்வாட்டாயும் இருக்கும்பட்சத்தில் விதைகளைகூட்டிப்பெருக்கி எடுக்கக் கஷ்டப்படும். இவ்விதையை மேல்குறித்தமாதிரியன்றி வேறுவிதத்திலும் சேகரிக்கலாம். கொளிஞ்சிச் செடிகளில் காய்பிடித்துக் காய்முற்றி வெடிக்கும் பருவத்திற்குச் சில நாட்களுக்குமுன் அக்காய்களையும் நெற்றுகளையும், சாதாரணமாய் மொச்சக்காய், காராமணிக்காய்களை முற்றியிருக்கும் சமயத்தில் பொருக்கி எடுப்பதுபோல், இக்கொளிஞ்சிக்காய்களையும் உருவிச்சேகரிக்கலாம். சாதாரணமாய் ஒரு கூலிப்பெண் 16படி நெற்றுக்களை ஒருநாளில் உருவிச் சேகரிக்கக் கூடும். அதிலிருந்து குறைந்தது ஒருபடி விதை அகப்படக் கூடும். இப்படி முற்றின காய்களையும் நெற்றுகளையும் பொருக்கி அதை இரண்டுநாள் காயப்போட்டுவிட்டால் வெயிலில் மேல்தோல் வெடித்து விதைகள் கீழேகொட்டுண்டுபோம். ஆகையால் மேற்குறித்த இரண்டு விதங்களில் எந்தவிதம் சௌகரியமாய் காணப்படுகிறதோ அந்தவிதம் கையாடிக் கொளிஞ்சிவிதையை, சேகரிக்கும் வழக்கத்தை மற்றஜில்லாக்களிலும் அனுஷ்டித்துவிட்டால் திருநெல்வேலி ஜில்லாவைப்போல தூரமான ஜில்லாக்களிலிருந்து விதை வருஷாவருஷம் தருவிக்கவேண்டிய அவசியம் நேரிடமாட்டாது. விதையும் அங்கங்கே புதிதாயும் சேகரித்துக் கொள்ளலாமென்ற நிச்சயமுமிருக்கும்.

கொளிஞ்சி விதைகளை வாங்கும் கிருஷிகர்கள் தாங்கள் வாங்கினவிதை சரியானபடி முளைக்கவில்லையென்றும் தங்களுக்கு அனுப்பியவிதைகள் நல்லதல்லவென்றும் சிலவேளைகளில் முறையிடுகிறார்கள். விதைகள் முளையாமலிருப்பது அனேகமாய் விதை பழுதினால் மாத்திரமல்ல. விதைகளை விதைக்குமுன் பக்குவப்படுத்தி

விதையாததற்கு இதற்கு முக்கியகாரணம். கொளிஞ்சி விதையின் மேல்தோல் புரையானது மிகவும் கெட்டியாயிருக்கும்படியானமுடையதாதலால் அக்கெட்டித்தோல் மெதுவடைந்து அந்தவிதையிலுள்ள முளை வெளிவர வெகுநாளாகிறது. ஆகையால் விதை ஜல்தி முளைக்கவேண்டுமானால் கெட்டியாயிருக்கும் மேல்தோலை மெதுவடையச்செய்யும் பக்குவங்களைக் கையாடவேண்டியதவசியம். இப்பக்குவங்கள் விதைவிதைக்கு முன்னமே விதைகளுக்குச் செய்யவேண்டும். கொளிஞ்சி விதை சீக்கிரமாய் முளைக்கும்பொருட்டு அநேகவிதங்களில் விதையை பக்குவப்படுத்தும் வழக்கங்களிருக்கின்றன. அவைகளில் சாதாரணமாய் கையாடக்கூடியதும் சுலபமானதும் சில இதனடியில் குறிக்கப்பட்டிருக்கின்றன:—

(1) விதைகளைக் கொளிஞ்சி செடிகளிலிருந்து மண்ணுடன் கூட்டிப்பெருக்கி வந்தவுடன் விதையுடன்கலந்த மண்ணை முதலில் போக்காமல் அத்துடன் கொஞ்சம் செம்மண்கலந்து அதைக் கல்லுரலிலாவது, மர உரலிலாவது நெல் குற்றுவதுபோல் உலக்கைகள் கொண்டு லேசாய் சற்றுநேரம் குற்றி, விதையின் மேல் தோல் சற்று உராஞ்சியிருப்பதுபோல் காணும்வரை குற்றி எடுத்து அதிலுள்ள மண், கருப்புவிதைகள், பொக்கு விதைகள் முதலானவைகளை செவ்வையாய் போக்கி விதையைக் காயப்போட்டு பத்திரப்படுத்திவிதைக்கவேண்டும்.

(2) செடிகளின் அடியில் தரை கெட்டியாயிருக்குமிடங்களிலிருந்து சேகரித்த கொளிஞ்சி விதையை கொஞ்சம் நெல்பதருடன் சமபாகம் கலந்து முன்சொன்ன முறைப்படி குற்றி எடுத்துப்பதரை தூற்றிவிட்டு நல்ல விதைகளை அப்புறப்படுத்தி வெயிலில் காயப்போட்டு வைத்திருந்து விதைக்கவேண்டும்.

(3) வரகு தானியத்திலிருக்கும் உமியை அப்புறப்படுத்த உபயோகிக்கும் திருகையில் இந்த கொளிஞ்சி விதையையும் போட்டு வரகு அரிசி எப்படித் தயார் செய்கிறார்களோ, அதேப்பிரகாரம் லேசாய் திருகையை சுற்றி விதையின் தோல் உராஞ்சின சமயத்தில் அவ்விதைகளை அப்புறப்படுத்தி சுத்தப்படுத்தி பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு விதைக்கவேண்டும்.

(4) விதைகளை ஏராளமாய்த் தயார் செய்யவேண்டிய காலங்களில், விதைகளைப் பருமண்ணுடன் கலந்து ஒரு கெட்டியான களத்தில் விதைகளை லேசாய்ப் பரப்பி அதன்மேல் சற்று வைக்கோலைப் பரப்பி அதன் பேரில் மாடுகள் கொண்டு நெல்லுக்குத் தாம்பு கட்டி அடிப்பதுபோல் சற்று நேரம் தாம்பு அடித்தால் விதைகளின் மேல் தோல் சற்று உராஞ்சிப்போகும். அதை எடுத்து ஒப்படிசெய்து பந்தோபஸ்து செய்து விதைக்கவேண்டும்.

இப்படி மேற்குறித்த எந்த விதத்திலாகிலும் ஒரு விதத்தில் விதைகளைப் பக்குவப்படுத்தி விதைத்தால் விதைகள் நன்றாய்ப் புளைக்குமென்பதில் தடையில்லை. எந்த விதத்தில் விதைகளை பக்குவப்படுத்தும்போதும் விதைகள் நசுங்கிப்போகாமலும் விதைகளின் மேலிருக்கும் கெட்டித்தோல்மாத்திரம் சற்று உராஞ்சிப் போகும்படிக்கும் செய்யவேண்டியது தவிர விதைகள் நசுங்கிப் போகும்படி செய்யக்கூடாது. மேற்சொன்னபிரகாரம் செய்வதின்கருத்துவிதைகளின் மேலிருக்கும் கெட்டியான மேல்தோல் சற்று மெதுவடைவதற்குத்தானே தவிர வேறொன்றிற்குமல்ல.

J, செல்வரெங்க ராஜு.
விவசாய உதவி டைரக்டர்.
சென்ட்ரல் டிவிஷன்.

பத்திரிகைபாராயச்சி.

---

(1) ஒப்பந்தக்கூலிமுறையை ஒழித்துவிடச் சென்னையில் பொதுக்கூட்டம்.

தீர்மானம்.

இத்தேசத்திலிருந்து ஒப்பந்தத்தின்மேல் கூலிவேலை செய்யப்போகிறவர்களின் சன்மார்க்கத்துக்குப் பாதகமாயிருப்பதும், இத்தேசத்துக்கே அவமானத்தைக்கொடுக்கப்படுகிறதாகக் கருதப்படுகிறதுமான ஒப்பந்தமுறை இன்னும் அநுஷ்டானத்திலிருந்து வருகிறதைத் உத்தேசித்து, இத்தேசத்து ஜனங்கள் எல்லோரும் பீதியடைகிறார்கள் என்பதை இந்த மீட்டிங்கில் கூடியுள்ள

சென்னைவாசிகள் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் இந்தியா மந்திரிக்கும் மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறதாகவும், லண்டனில் இவ்விஷயமாய்க் கூடப் போகிற கான்பரென்ஸ் மே-மாதம் 31-தேதிக்குள் கூடித்தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொண்டாலும் தெரிவித்துக் கொள்ளாவிடினும் அந்தத்தேதிக்கு அப்புறம் இந்தமுறை அனுஷ்டானத்தில் இருக்கக் கூடாதென்று கேட்டுக்கொள்ளுகிறதாகவும்,

2. லண்டனில் இவ்விஷயமாய் நடக்கப்போகிற கான்பரென்ஸின் மெம்பர்களில், இந்தியப்பொது ஜன அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் சபைகளால் தெரிந்தெடுக்கப்பட்ட இந்தியர்கள் போதுமான வரையில் இருக்கும்படி செய்யவேண்டுமென்றும்,

3. அந்தக்கான்பரன்ஸ் சிபார்சு செய்யும் ஏற்பாட்டைப் பரிசீலனை செய்து, இந்தியப் பொதுச்சபைகள் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்குமுன், இந்தியாகவர்ண்மெண்டார் அந்த ஏற்பாட்டை அங்கீகரிக்கக்கூடாதென்றும்,

4. அடுத்தமேமாதம் 31 தேதிவரையில் ஒப்பந்தக்கூலிகள் சேர்க்கப்படுவார்களாகில், ஒழுங்காக விவாகமானவர்களாயிருந்தாலொழியத் தனி ஆண் தனிப்பெண்களாயிருக்கக் கூடாதென்றும், அவர்கள் செய்துகொடுக்கும் ஒப்பந்தத்தின் ஷரத்துகள் என்னவென்று அவைகள் சுயபாஷையிலேயே தெரிவிக்கப்படவேண்டுமென்றும் இந்த மீட்டிங் கேட்டுக்கொள்ளுகிறது.

ஸ்ரீமான் காந்தியின் உபந்நியாசம்.

ஒப்பந்தக்கூலி முறையைத் தடுப்பதைப்பற்றி ஆட்சேபனைகள் செய்துத் தீர்மானம் செய்யக் கராச்சியில் கால் கத்தா ஹாலில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. இரண்டாயிரம் இந்தியர்களுக்கு மேல் அச்சபையில் வந்திருந்தார்கள். ஸ்ரீமான் காந்தி அக்கூட்டத்தில் பிரசன்னமாயிருந்த சபையில் உபந்யாசம் செய்தார். கனம் ஹரிச்சந்திர விஷ்ணு தாசும் ஒரு பிரசங்கம் செய்தார். பின் ஒப்பந்தக்கூலி முறையை ஒழிக்கவேண்டுமென்று தீர்மானங்கள் செய்யப்பட்டன.

---

(2) காகிதப்பஞ்சமும் சேட்டும்.

காகிதப்பஞ்சத்திலிருந்து சமாளித்து வெளிக்கிளம்புவதற்காக இங்கிலாந்திலே முயற்சி செய்யப்படுவதை இங்கே அவசியம் குறிப்பிடவேண்டும்.

தெருக்களிலே ஒட்டப்படும் பெரிய விளம்பரங்களின் அளவு இவ்வளவுதான் இருக்கவேண்டுமென்பதாகவும், சாமான்களின் விற்பனையைப்பற்றிய விளம்பரங்கள் பிரசுரிக்கப்படக் கூடாவென்பதாகவும், இங்கிலாந்திலே வியாபார இலாகா அதிகாரிகள் உத்தரவு செய்திருக்கிறார்கள். இங்கிலாந்திலே பல பத்திரிகைகள் தங்களது விலையை ஏற்றிவிட்டனவென்பது நேயர்களுக்குத் தெரியும். சிலமாதாந்த சஞ்சிகைகளோ தங்களது விலையை 7 அணாவாக உயர்த்திவிட்டனவென்று அறிகிறோம். இது இப்படியிருக்க, லண்டன் நகரிலே ஜெனரல் போஸ்டாபீஸ் ஓர் இலாகாவிலிருந்து மற்றோர் இலாக்காவுக்குக் கடிதம் எழுதியனுப்பும்போது அக்கடிதத்துக்குப் போடப்படும் கவர் (மேல் உறை) சுத்தமாய் உபயோகமற்றுப்போகும் வரையில் திரும்பத்திரும்ப உபயோகிக்கப்படவேண்டுமென்று உத்தரவாகி, அவ்விதமே அநுஷ்டானத்திலிருப்பதாகத் தெரியவருகிறது. இவ்விதம் காகிதத்துக்குப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதையும், காகிதத்தில் செட்டுக்காட்டப்படுவதையும் அனைவரும் கவனிப்பார்களென நம்புகிறோம்.

சுதேசமித்திரன்,

வைத்தியக் குறிப்புகள்.

ஆமணக்கெண்ணெயின் வாசனையை மறைக்கும் வகை.

ஆமணக்கெண்ணெய்க்குள்ள துர்வாசனை பலருக்கும் மனவெறுப்பை யுண்டுபண்ணுகிறது. இவ்வாசனையை அடக்குவதற்குத்தகுந்த உபாயத்தை தி நர்ஸ் (The Nurse) என்னும் பத்திரிகை இங்ஙனம் கூறுகின்றது.

"ஒரு டோஸ் ஆமணக்கெண்ணெயில் அதற்கு ஸமான அளவில் பாலைக் கலந்து வாசனைக்காக மிளகுப்பொடியும் உப்பும் சேர்த்து உட்கொண்டால் துர்வாசனையே தெரியாது. எண்ணெயில் பாலைச் சூடாகச்சேர்க்கவேண்டும். ஆமணக்கெண்ணெயை வெறுப்பவர் இவ்வாறு செய்தால், அவர்கள் எண்ணெயைப் பருகுவதாகவே உணரமாட்டார். எலுமிச்சம்பழச்சாற்றை இவ்வெண்ணெயிற்சேர்த்து உட்கொண்டால் நல்லவாசனையாகவும் ருசியாகவும் இருக்கும்."

கற்பூரத் தைலம்

தலையிலும் வஸ்திரத்திலும் உண்டாகிற பேன்களை அழிப்பதற்கு இப்போது நாகரிக வைத்தியர்கள் கற்பூரத்தைலத்தைத் தாராளமாய் உபயோகிக்கின்றனர். பேன்களைமாத்திரமல்ல; ஈறுகளையும் சிறிய முட்டைகளாக ஆகக்கூடிய நுண்ணிய ஜீவாணுக்களையும் அழிப்பதற்கு இத்தைலம் மிகவும் சிறந்தது. இதனை உபயோகித்தால் எவ்விதக்கெடுதியும் (சர்மத்திற்காவது மயிர்களுக்காவது) உண்டாவதில்லை. பேன்களும் ஈறுகளும் சுலபமாகச் சரீரத்திற்குக் கெடுதியை உண்டுபண்ணுவதுடன், சில வியாதிக்குக்காரணமான நுண்ணுயிர்களையும் ஒருவரிடமிருந்து மற்றவரிடத்திற்குத் தொற்றவைப்பதால், அப்பூச்சிகளை ஒழிப்பதற்கு இத்தைலத்தை நமது வைத்தியர்களும் உபயோகித்துப்பார்த்து, அதன் பலனை வைத்திய கலாநிதிக்கு எழுதியனுப்புவார்களாக.

சாமந்தித்தைலம்

சீமைச்சாமந்தியிலிருந்து இறக்கப்படும் தைலம் இங்கிலீஷ் மருந்துக்கடைகளில் கிடைக்கும். ஆயில் ஆப் சாமோமைல் (Oil of chamomile) என்று ஆங்கிலத்தில் பெயர். இத்தைலத்தை வெகு நாட்களாகத் தொந்தரவளித்துவரும் சக்கிருமலில் மார்பின்மேல் தடவி வருவது நலம்:—Practical medicine.

நாட்டு அக்ரோட்.

ஸம்ஸ்கிருதத்தில் ஆக்ஷோடகம் என்று கூறப்படும் இவ்வழகிய மரம் தென்னிந்தியாவில் அநேகம் பிரதேசங்களில் காணக்கூடியது. இது கோடைக்காலத்தில் செழித்துப் புஷ்பிக்கும்.

இதன் வித்திலிருந்து ஒருவித எண்ணெய் எடுக்கலாம். இந்த எண்ணெயை அரைப்பலம் எடை உட்கொண்டால் நன்கு விரேசநமாகும்; கற்குடலாயிருந்தால் இரண்டு பலம் வரையில் உட்கொள்ளலாம். வயிற்றில் சங்கடமுண்டாகாமல் வெகு ஸுகமாகப் பேதியாகும். இவ்வித குணத்தினால் ஆமணக்கெண்ணெயைக் காட்டிலும் இது விசேஷித்ததென்று நம்பலாம். அர்ச்சஸ் என்னும் மூலரோகத்தினாலும், வேறு காரணங்களாலுண்டாகும் மலபந்தத்தினாலும் கஷ்டப்படுபவர் அக்ரோட் வித்தின் எண்ணெயை அவசியமான ஸமயங்களில் உபயோகித்து வருவது நலம்.

வைத்திய கலாநிதி.

கடிதங்கள்.

சபை நிகழ்ச்சிக் குறிப்புகள்.

புதுவயல் ஞானப்பிரகாச ஸபை.

ஸ்ரீ பரமேசுவரனது திருவருளால், சிறுநடைபெற்றுவரும் இந்த ஸபையின் 2-வது ஞு 8-வது மாதாந்தக் கூட்ட தினமாகிய நாளிது நள ஞு தைமீ 30உ ஆதிவாரத்தன்று, ஷை புதுவயல் நகரத்துக் கடுத்த ஸ்ரீ வீரவன க்ஷேத்திர மென்னும் சாக்கோட்டைப் பதியிலுள்ள ஸ்ரீ உமாம்பிகாஸமேத ஸ்ரீ வீரவனேசுவரரது திருவாலய அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக மஹோற்சவமாதலின், ஞா. பி. ஸபைக் கூட்டமானது ஷை சாக்கோட்டையில் நூதனமாக அமைக்கப் பெற்ற தண்ணீர்ப் பந்தரில் மாலை 2½ மணிக்கு குன்றக்குடி பிர்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகளவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் கூடிற்று. முதலில் பிர்மஸ்ரீ தலைவரவர்கள் முகவுரை மொழிந்தவுடன் (1) அறிவு (2) ப்ராசீனமும் நவீனமும் (3) ஒற்றுமை (4) சிவோபாஸனை (5) பிறப்பினருமை (6) கம்பராமாயணம் (உலகம் யாவையும் என்னும்) முதற் செய்யுளாராய்ச்சி என்னும் இவ்வரியவிஷயங்கள் முறையே, (1) (பலவான்குடி) ஸ்ரீமான் ராம. கு. இராமஸாமி செட்டியாரவர்கள் (2) (போசம்பட்டி) பிர்மஸ்ரீ மீனாட்சிசுந்தரமய்யரவர்கள் (3) (முறையூர்) ஸ்ரீமான் சுப. குமரப்ப செட்டியாரவர்கள் (4) (கொத்தமங்கலம்) பௌராணிகர். ஸ்ரீமான். சிவ. அருணகிரி முதலியாரவர்கள் (5) (கண்டனூர்) ஸ்ரீமான். தெ. அரு. சித. இராமநாதன் செட்டியாரவர்கள். (6) (காரைக்குடி) பிர்மஸ்ரீ M. V. கோவிந்தராஜ ஐயங்காரவர்கள் என்னும் இவ்வறிவாளர்களால் தெளிவாக உபந்யஸிக்கப் பெற்றன. இவ்வுபந்யாஸ நிகழ்ச்சிக் காலத்தில் ஸ்ரீமான் சிவகங்கை ஜமீன்தாரவர்கள் விஜயம்செய்து கும்பாபிஷேக வைபவத்தைப் பற்றியும் புதுவயல் நகரத்தார்களைப் பற்றியும், ஞானப்பிரகாச ஸபையைப்பற்றியும் சிறப்பித்துப் பேசினார்கள். பிரதி உபந்யாஸ முடிவிலும் பிர்மஸ்ரீ தலைவரவர்கள் தமது அரிய அபிப்பிராயங்களை விளக்கமாகக் கூறினார்கள். பின்னர், அனைவர்க்கும் வந்தனோபசாரங்கூறி ஹாரசந்தன தாம்பூலாதிகள் வழங்கப் பெற்று மங்கள கரகோஷத்துடனே மாலை 9 மணிக்கு ஸபை நன்கு நிறைவேறியது. சுபம்! சுபம்!! சுபம்!!!

போதுநலம் நாடுவோன்.

கோநகர்ஞானசம்பந்தநற்சபை.

இதன் மாதாந்தரக் கூட்டம் மாசிமீ ௰௪௳ (25—2—17) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4½ மணிக்குக் கூடிற்று. கடவுள் வாழ்த்துக் கூறியவுடன் உடுப்பி பரமஹம்ஸ ஸ்ரீ பாலசுப்பிரமணியஸ்வாமிகள் அக்கிராஸனத்தமர்ந் திருக்க, க. வி. கலாசாலை உதவித் தமிழாசிரியர் ஸ்ரீ S. ஆழ்வாரையங்காரவர்கள் "கற்பு" என்பதனையும், சொக்கலிங்கம்புத்தூர் ம. வா. வித்தியாசாலைத் தமிழாசிரியர் ஸ்ரீ செ. இராமமூர்த்தி ஐயரவர்கள் "உள்ளந்தாற் பொய்யா தொழுகல்" என்பதனையும், ஸ்ரீமான். அ. நா. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் "விநாயகப்பிரபாவம்" என்பதனையும் அழகாக உபந்யசித்தார்கள். பின்பு சுவாமிகள் ஷை விஷயங்களுக்கெல்லாம் அபிப்ராயங்கூறியதுடன் சபையையும் கலாசாலையையும் நன்கு வாழ்த்தினார்கள். இரவு 7½ மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

இராயபுரம்
சாரதாவிலாஸ சபை.

சிவபிரான் திருவருளால் இங்ஙனம் நடைபெற்று வருகிறதான இச்சபையின் இரண்டாம் வருடத்து ஐந்தாமாதத்துக் கூட்டம் இம்மதி ௰௩௳ (26–2–17) சோமவாரத்தன்று பிற்பகல் 3½ மணிக்குக் கூடிற்று. முறையே கடவுள் வாழ்த்துக்கூறப் பெற்று ப்ரம்மஸ்ரீ சமஸ்கிருத பண்டிதர் S. மீனாட்சிசுந்தரதீக்ஷிதர் அவர்கள் சபையார் வேண்டுகோட்படி அக்கிராசனத்தமர்ந்து முகவுரைகூறியபின்னர் ஸ்ரீ சேவையர், ஸ்ரீ சித. ஏகப்பசெட்டியார், ஸ்ரீ வேலுமயிலுஞ் சுவாமியவர்கள், மிஸ்டர் ஸ்ரீ V. K. முதலையபிள்ளையவர்கள்; பக்தி கல்வி முயற்சி ஆனந்தம் தேகசுகம் என்ற விஷயங்களைப் பற்றி ஒவ்வொருவரும் நீண்டநேரம் தத்தம் ஆராய்ச்சியைக் கொண்டு யாவருமுவக்குமாறு பிரசங்கித்தார்கள்.

அதன்பின்னர் இவ்வூர் ஸ்ரீபாலகவி K. நல்லைய ஆசாரியவர்கள் மேற்கூறப்பட்ட ஐந்து விஷயங்களின் சுருக்கம் என்பதைப்பற்றி எடுத்துக்கொண்டு பக்தி யென்றும் இது உலகின் கணுள்ள மக்கள் பலரும் மோட்சத்தை யடைதற்கு முதன்மை பெற்றதாயினும், அதனைப்பகுத்தறிதற்குக் கல்வியே அவசியமென்றும், அக்கல்வியையக் கற்றுக்கொள்வதற்கு முயற்சியே மிகுதியும் பயன்றரத்தக்க தென்றும், அத்தன்மை பெரிதான முயற்சிக்கும் மனமானது

சந்தோஷமடைந்தாலன்றிச் சித்தம் பயனடையா தென்றும், இத்தகைய விஷயங்கட்கெல்லாம் சரீரங்காரணமாகல் பற்றிச் சரீரத்தைப்பேணல் முக்கியமென்றுங்கூறி, சரீரமெல்லாரும் சந்தோஷத்தோடு முயற்சிசெய்து கல்வியைக் கற்று பக்தி செய்தற்கியலாதாகலான், இதற்குக் காரணம் சரீரமென்றும் பற் பல நூற்பிரமாணங்களானும் தக்க உபமான உபமேயத்தானுங்கூறி முடித்தார். பிறகு சபாநாயகரவர்களும் ஒவ்வொரு விஷயங்கட்கும் தக்கமேற்கோள்களெடுத்துக் கூற சபையும் 9½ மணிக்குத் தேவாராதியருட்பாக்களோதப் பெற்று வந்தனோபசாரத்துடன் ஹாரசந்தனதாம்பூலாதிகள் வழங்கப் பெற்று மங்கள கரகோஷத்துடனினிது நிறைவெய்தியது. சுபம்! சுபம்!! சுபம்!!!

ஆஸ்பிடல்.

இவ்வூரில் சிலவருடங்களாகத் தஞ்சாவூர் ஸ்ரீமாந் டாக்டர் கிருஷ்ண ஸ்வாமிந்தேவ் கோண்டார் அவர்கள் ஔஷதாலயமொன்று ஏற்படுத்தி இங்கரவாசிகட்கும், அயல்கிராமங்களிலுள்ள ஜனங்கட்கும் வியாதியின் குணங் கண்டு அவ்வவர்களின் தேகத்திற்குத் தக்கவாறு ஔஷதங்களைக் கொடுத்துச் சுகமடைவித்து வருகிறார்கள். அவர்களோ உயர்ந்த படிப்பும், ஆராய்ச்சியும் நன்னடக்கையும் நற்குணங்களும் பரோபகாரச் சிந்தையும் ஜனங்களிடத்து அன்பும் வாய்ந்துள்ளவர்கள். அவர்களை இங்கர வைசியர்களாகிய ஸ்ரீமாங்கள் பலரும் அவர்கள் சொந்தமாயிருந்ததை விடுத்து லோகோபகாரமாக சர்வஜனங்களின் நன்மையையும் கருதி இவ்வூரில் பொதுவாக நடத்துவிக்கிறதாகவும் தெரியவருகிறது. அவ்வண்ணமே சிவபிரான்றிருவருள் புரிவாராக.

26—2—17 } நன்மை விரும்பி.
இராயபுரம். } B. V. K. N.

பலவான்குடி.

மணிவாசக சங்கம்.

நளஞூ மாசிமீ உடு (8. 3. 17) திருவருட்பேற்றால் நம் மணிவாசகசங்கத்தின் மாதக்கூட்டங்கூடிற்று. காரைக்குடி கம்பராமாயணப்பிரசாரகரும், வித்தியாபாநு பத்திராதிபருமாகிய பிர்மஸ்ரீ M. V. கோவிந்தராஜஐயங்கார் அவர்கள் அக்கிராசனம்வகிக்க, திருவாசகமடம் ஸ்ரீமத் சிதம்பரசாமிகள் 'ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகள்' சரித்திரத்தையும், கோநகர்கற்பகவிநாயககலாசாலைத்தலைமையாசிரியர் பிர்மஸ்ரீ. பண்டித, அ. கோபாலையரவர்கள் 'போதனை' என்ற விஷ

யத்தையும் நன்கு யுபந்நியசித்தார்கள். முடிவில் சபாநாயகர் அழகிய முடிவுரை கூறியபின்னர். சித்திவிநாயக வித்தியாசாலை மாணவி. கு மீனாக்ஷி வாழ்த்துப் பாக்கூறியது மிகவும் வியக்கத்தக்கது. ஆசிரசந்தனை சகள் வழங்கச்சங்கம் இனிது நடைபெற்றது. சு-டம். ஷண்முகநாதன்.

உள்ளூர் வர்த்தமானம்.

காலநிலை.—செங்கதிரோன் வெம்மையதிகம். மழைபெய்து அநேக நாளாயிற்று. கால்நடைகள் அருந்தக் கண்மாய் குளம் குட்டைகளில் நீரில்லை. குடிநீர் கொஞ்சம் ஊருணியிலுண்டு. பெரும்பான்மையான கிணறுகளிலும் நீரில்லை. சிற்சில கிணறுகளிலிருந்து ஊறவூற இறைத்துக் கொள்ளுகிறார்கள். ஆகவே இப்போது இங்குள்ள நிலை,

> "தாழிநறுங் குவளையந்தார்த் தருமன்மக னருட்புனலுந் தரங்க வேலை
> யூழிநெடும் பெரும்புனலு முடலிலுறு வெயர்ப்புனலு மூறி யூறிப்
> பாழ்தொறு மிறைக்கின்ற பைம்புனலு மல்லதுவெம் பருவந் தன்னாற்
> பூழிபடு மமர்வாய மானிலத்துப் புகலுதற்கோர் புனலு முண்டோ."

(பாரதம் ஆதி-காண்டவ-செ19)

என்னுஞ்செய்யுளை ஞாபகமூட்டுகிறது. வருணபகவான் கருணையை ஜனங்கள் எதிர்பார்த்த வண்ணமாயிருக்கிறார்கள்.

அகவிலை:—சம்பா நெல் பொதி 1-க்கு ரூபா 15, 15—8—0 கேழ்வரகு ரூபா. 1—க்கு பட்டணம்படி 4.

போஸ்டாபீஸ்:—இவ்வூர்ப் போஸ்டாபீஸ், அதற்கு மேல்புறம் அதற் கென்று புதிதாகக் கட்டப் பெற்றுள்ள அழகிய புதுக்கட்டிடத்திற்கு 1-2-17 மாற்றப் பெற்றது.

கஞ்சித்தொட்டி:—முன் சில தனவான்கள் ஏற்பாடு செய்திருந்த கஞ்சித் தொட்டிக்கு இப்பொழுது திருமயம் ரஸ்தா ஓரத்தில் செல்லச்சாமி மடத் துக்கு வடபுறம் உள்ள ஸ்தலத்தில் கட்டிடந் தொடங்கப் பெற்று வேலை நடந்து வருகிறது. இக்கட்டிடம் கூடிய சீக்கிரம் வேலையாகி இப்பஞ்சகாலத்தில் கஞ்சித்தர்மம் சிறப்புற்று விளங்கும்படி எல்லாம்வல்ல இறைவன கிருபை செய்வாராக. சம்பந்தன்.

உ

கணபதி துணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."—திருக்குறள்.

தொகுதி.	நள-ஹு பங்குனி-மீ	பகுதி.
9	1917 ஏப்ரல்.	3

கல்வியும் தர்மமும்.

இதற்குமுன் ஸஞ்சிகையில் "கல்விமுறையில் சீர்திருத்தம்" என்று எடுத்துக்கொண்டு, 'இப்போது நமது நாட்டு மாணவர்கட்குக் கொடுக்கப்படும் கல்விமுறையானது உண்டிக்கும் உடைக்கும் மாத்திரம் ஏகதேச உதவியாகின்றதேயன்றி, மாணவனுடைய புரோவ்ருத்தியையாவது ஆத்மவ்ருத்தியையாவது நாட்டின் நன்மைக்கு ஏற்ற ஞானவ்ருத்தியையாவது கொடுத்தற்கியலாததாக இருக்கின்றது, என்பது ஒருவாறு குறிக்கப்பட்டது. இந்த ஸஞ்சிகையில் ஒரு நாடு செழிக்கவேண்டி அந்தநாட்டுத்தர்மத்தைப் போற்றுவதிலே ஒரு மாணவனுக்கு எவ்வளவு சம்பந்தமிருக்கின்றது என்பதை வியாஜமாக வைத்துக்கொண்டு, 'கல்வியும் தர்மமும்' என்னும் விஷயத்தை ஆராய்வோமாக. இந்த விஷயத்தில் நாம் அதிக சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. இதற்கு முன்னால் நமது பூர்விகர்கள், "ஒழுங்கான கல்வியே தர்மத்தை உயர்த்தும்" என்று பலப்பல நூல் மூக

மாகக் கோஷித்திருக்கிறார்கள். அவருள்ளும் ஆதிமனுவானவர் தமது தர்மசாஸ்திரத்தில் இவ்விஷயத்தைப் பரக்கப்பேசி யிருக்கிறார்கள். அதனையே இப்போது அடியொற்றிப்போவது அழகென மதிக்கிறோம்.

இந்தியாவின் கல்விமுறையைப் பற்றி—ஆதிகாலமுதல் இதுவரை—ஒரு சரித்திரம் எழுதவேண்டுவது அவசியமாயினும், இப்போது அதனை விரிக்காமலே, ஐரோப்பியர் நமது நாட்டில் வந்து நுழையும் வரையில், எந்த முறையைப் பின்பற்றியே மாணவர்கட்குக் கல்வி போதிக்கப் பட்டுவந்தது? அதனால் தேசத்தில் உண்டாயிருந்த பெருமையென்ன? என்றும் இவைபோன்ற சில விஷயங்களைப் பேசுவோமாக.

மனுதர்ம சாஸ்திரத்தினை, ஒருவர் அதன் மூலக்ரந்த ரூபத்திலாயினும், அதன் மொழிபெயர்ப்பு க்ரந்தரூபத்திலாயினும் ஊன்றிப்படித்தாராயின், கல்விமுறையில் அவர் கொண்டிருந்த அபிப்பிராயமும், கல்வியே உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத ஸாதனம் என்னும் அவரது கொள்கையும், அதனை மாணவர்க்கு ஏற்ற வேண்டிய முறையில் அவர் சேர்த்திருக்கிய ஒழுங்கும் படிப்பவரது மனதுக்கு ஓர் அதிசயத்தை யுண்டுபண்ணாமலிரா.

அவரது முறை வெகுகாலங்கட்கு முன்னரே சொல்லப்பட்டுளதேனும், நமது நாட்டின் தற்கால நிலையிலும் ஆண் பெண் இருபாலார்க்கும், தேசமுன்னேற்றத்தின் நிமித்தம், அவரது முறையையே பின்பற்றிக்கசல் வேண்டும் என்பதனை எவரும் நினையாதிரார். அவரது முறையே எக்காலத்துக்கும் ஏற்ற ஒழுங்கான முறையென்றும் துணிவாகச் சொல்வோம்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாட்டினருக்கும் தர்மமே கல்வியின் அடிப்படையாக இருக்கின்றது என்று அவர் சொல்கிறார். ஒவ்வொருவரும் தமது பூர்வஜன்ம வாஸனைக்கேற்ற தர்மத்தைக் கைப்பற்றி இருக்கிறார் என்றும், அந்தத் தமது தர்மத்துக்கு ஏற்ப உலகநடையில் ஒழுகி வருகிறார் என்றும் அவர் குறிக்கிறார். அந்தத்

தர்மமும் தமது இப்பிறப்பின் பழக்கவழக்கங்களினால் சீர்பாடடைந்து முன்னேற்றத்தை அடைய இருக்கிறது. அவ்விதம் முன்னேறிச் சீர்திருத்தம் அடையும் ஒருவனுடைய தருமமே உலகக்கூட்டுறவில் அவனை ஒரு பங்காளியாகச்சேர்த்து வைக்கிறது. இச்செயல்தான் அவனுடைய லௌகிக வைதிகப் பிரவிர்த்திகளைச் சீர்திருத்துகிறது.

இந்தச் சீர்திருத்தமான தர்மத்தை அடிப்பாகவைத்தே வர்ணங்களும் ஆச்ரமங்களும் வகுக்கப்பட்டன என்று குறிப்பதற்கும் இடமிருக்கிறது. இந்த வர்ணங்களும் ஆச்ரமங்களுமாகிய பாகுபாடுகள் இல்லாவிடின் ஒருவர் ஆத்மவிருத்தியில் பிரயத்தனப்படல் இயலாது எனவுந் தோன்றுகிறது.

எனவே, அவர் தமது தர்மசாஸ்திரத்தில், தர்மம் செயல் கூட்டுறவு என்னும் மூன்றையும் சொல்வாராகிக் கல்வியையே இவற்றினுக்குக் கொழு கொம்பாகவும் குறித்துள்ளார். அவரது முறையைப் பின்பற்றிக் கற்பிக்கப்பட்டுவரும் ஒவ்வொரு மாணவனும் தேசதர்மத்தை நன்குணர்ந்தவனாகி; முன்னுக்கு வர முயல்வான். இப்படியே அநேக மாணவர்கள் முன்னேறிவருவார்களாயின், நமது தேசம் தற்கால நிலைமையினின்றும் விடுபட்டு உலகத்திலுள்ள தேசங்களைக் காட்டிலும் சிறப்புப் பெற்றோங்கும் என்பதில் யாதொரு தடையுமிராது. அப்பொழுதே நமது ஆர்ய தர்மம் சீரோங்கிவளரும். அப்போதே மனுவினுடைய கல்விமுறை வேரூன்றி நிற்கின்றது என்று சொல்லலாகும்.

ஐரோப்பிய தேசங்களில், தேசதர்மம் என்றால் யுத்ததர்மம் என்பதையே விசேஷமாகக் குறிப்பதாகத் தெரியவருகிறது. ஏனெனில், தேசவூழியம் செய்யப்போவது என்றால் ராணுவத்தில் பழகுவதையே விசேஷமாகக் கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்கள் அப்படிக் கொள்கிறதற்கு ஒரு நியாயமும் இருக்கிறது. இப்போது ஒவ்வொரு தேசத்தின் நிலைமையும், விசேஷமாக ஐரோப்பிய தேசங்களின் நிலைமை, உட்பகையிலும் அவநம்பிக்கையிலும் அதிருப்தியிலும் குறையாதபடி இருக்கின்றது. ஆகையினால்

ஒவ்வொரு தேசமும் தற்காவலுக்காக யுத்தத்துக்கு வேண்டிய ஆயுத்தங்களுடனே எப்போதும் இருக்கவேண்டி யிருக்கிறது. அதனாலேயே தேசஊழியம் என்று ராணுவஊழியத்தையே முதன்மையாக அவர்கள் கொள்ளவேண்டியிருக்கிறது.

நமது தேசமோ, உட்பகைக்கும் அதிருப்திக்கும் இடங்கொடாத பழக்கத்தில் வளர்ந்து விட்டமையால், தேசதர்மமென்பது நமது பூர்விகாது ஆசாரமென்ற பொருளில் பழகித் தேசஊழியம் என்பது கூட்டுறவின்பால் படுகிறது. மனுவின் முறைபோ அறிவின் முதிர்ச்சியைத் தருவதாகிய சாஸ்திர பரிசயம் ஒருபக்கமும், தேசபோஷணைக்குக் காரணமாகிய விவசாயம் ஒருபக்கமும், தேசத்தின் திரவிய விருத்தியைச்செய்யும் வியாபாரம் ஒருபக்கமும், தேசக் காவலைத்தரும் போர்த்தொழில் ஒருபக்கமுமாக வளர்ந்து வரக் கூடியதாக அமைக்கப்பட்டிருக்கிறது. இவைகளே பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்ர தர்மங்களாகக் கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. இந்தவர்ணதர்மங்கள் அவரவர் முற்பிறப்பில் பழகியுள்ள அனுபவமுறையின் பயனாகப் பெறப்படுகின்றன. ஆக, நமது தேசத்தின முன்னோரது அபிப்பிராயம், போர்த்தொழில் என்பது ஜாதி தர்மமாகவும், தேசஊழியம் என்பது கூட்டுறவாகிய தேசதர்மமாகவுமே கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

எனவே, நமது தேசத்தில் ஒவ்வொருவரும் தமது ஆத்மதர்மமாகிய ஜாதிதர்மத்திலும், அதனுள் மாறுபாடடையாதிருந்து தேசப்பொதுதர்மமாகிய கூட்டுறவிலும் பழகித் தம்மையும் தமது தேசத்தையும் விருத்தித்துக் கொண்டுவர வேண்டுமென்பது மனு முதலிய நமது முன்னோரது கொள்கையென்பதும் கொண்டோம். இவ்விரு தர்மங்களுக்குத் தக்ககல்வியை ஒழுங்காக ஓர் நல்லாசிரியன் இருந்து பயிற்றுவிடில், மாணவர் தம்மையும் தமதுதேசத்தையும் பற்றிய உணர்ச்சியே பெறாது, ஊனப்பாடங்களை உள்ளவும் கற்று உண்டிக்கும் உடைக்குமே உழைப்பவர்களாவார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாம். இதற்கு மனுவாக்கியம்:—

"ஒருகுடும்பத்தின் நற்போக்கு ஒருமாணவனது திருந்திய கல்வியைச் சார்ந்திருக்கிறது. அப்படியான குடும்ப வாழ்வே ஒரு

தேசக்கூட்டுறவை உயர்த்துகிறது. அக்கூட்டுறவு தேசப்பொக்கிஷத்தைப் பாதுகாக்கிறது. தேசக்காவலே அத்தேசத்தின் உயர்ந்த சக்தியை உறுதிப்படுத்துகின்றது.''

இப்போது நாம் நமது தேசத்தின் தற்காலக்கல்வி முறையைச் சிறிது தொட்டுப்போவோம். இப்போது தர்மங்கள் எல்லாவற்றுள்ளும் வித்தியாதர்மத்தின் முக்கியாம்சமாகிய உபாத்திமைத் தொழிலானது மற்ற எந்தத்தொழிலினும் மிகவும் தாழ்ந்ததாக மதிக்கப்பட்டு வருகிறது. நமது மனு தமது தர்மநூலின்கண் உபாத்திமைத் தொழிலுக்கு ஏற்றம் கொடுத்திருப்பதைப்போல, இவ்வுலகத்தில் எந்தத் தேசத்திலும் யாராலும் ஏற்றம் கொடுக்கப்படவில்லையென்றே துணியலாம். இந்தியாவிலும், ஐரோப்பிய நாகரிகம் வந்து கூத்தாட ஆரம்பிக்கும் வரையில் அந்த ஏற்றம் நிலைத்தே இருந்தது. இப்போதும் மேனுமாணவருக்குக் குருபக்தி யென்பது இயற்கையாக இருந்து கொண்டே இருக்கிறது. எனினும், அது ஐரோப்பியப் பழக்க வழக்கங்களினால் அழிக்கப் படுகின்றது. ஐரோப்பாவில் குருபக்தி என்னும் ஆலோசனையே ஒரு அவமானச் செயலாகக் காணப்படுவதாக அறிகிறோம். அந்தத்தேசத்து மாணவர் தமது குருவைத் தம்மைக் காட்டிலும் மூத்தவர் என்று மதிப்பதே பெருந்தன்மையாகக் கொள்ளப்படுகிறது.

தவிர, தற்காலம் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் மரியாதைக்குத் தக்கவர்களில் பெரும்பாலார் உபாத்திமைத் தொழிலுக்கு வருவதே இல்லை. பல உபாத்தியாயர்கள் சாதாரண கவுரவத்தையும் பெறக்கூடாதவர்களாக இருக்கின்றார்கள். இது அவர்களுடைய தவறாகாது. அவர்களுக்குத் தக்கமுறையில் கல்வி பயிற்றுவிக்காததே பெருந்தவறாகும்என்றுஎண்ண இடமிருக்கிறது. சில உபாத்தியாயர்களே தங்களது ஒழுக்கம் சக்தி ஆழ்ந்தபுத்தி தெளிந்தஆராய்ச்சி இவற்றைக் கொண்டு, தமக்கு வேறு தொழிலில் மிகுந்த சம்பாத்யம் கிடைக்கலாமாயினும், தேசமுன்னேற்றத்தை யுன்னியே இந்த உபாத்திமைத் தொழிலில் புகுந்து, ஏற்ப, தகுந்த மரியாதையும் பெறுகின்றார்கள். இவர்களைப்போலப் பலர் கிளம்பின அன்றுதான் நமது மனுமுறை மனுவின்முறைப்படி நடக்கலாகும். எந்தத்தே

சத்திய உபாத்தியாயர்களே தேசக்காருக்குள் சிறந்தவர்களாகக் கவுரவிக்கப்படுகிறார்களோ, அந்தத் தேசமே மற்றெல்லா உலகத்தின் மற்றத் தேசங்கட்கு ஒர் வழிகாட்டியாகவிருக்கும். ஏனெனில் உபாத்தியாயர் மனுஷர்களை ஒழுங்குபெற நடத்தவல்லவர்களாயிருந்து மாணாக்கர் மனதைச் சன்மார்க்கச் சரிவர நடக்கும்படி காட்டுவார்கள். மாணவர் மாணப்பெறுவாராயின் மனுஷ்யமும் மாண்புறுமல்லவா? ஆனவே, ஒவ்வொரு தேசத்துப் பாடசாலையும் அந்தத்தேசத்து ஆசாரத்தில் பழகிய ஒருவராலேயே தலைமை வகிக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தல் எளிதாகும். அதாவது—நமது இந்திய தேசத்துப் பாடசாலைகள் இந்தியர்களாலேயே ஆட்சி செய்யப்படவேண்டுமென்பதாம். ஏனென்றால், ஆங்கிலேய ஐரோப்பிய மேதாவிகள் மனுமுறையைக் களைந்து தங்கள் கல்விமுறையில் தலைமை வகித்திருக்கிறார்கள்; ஆனால், இக்கல்விமுறை மட்டும் இன்னும் மனுவின் முறைக்குத் திரும்பினபாடில்லை. அதனால் தேசம் திருந்தினபாடுமில்லை. இங்கிலாந்தில் இப்போது, பின்வரப்போவதை யோசியாமல், போர்த்தொழிலைக் கைக்கொள்வதையே மேன்மையாகக் கொண்டு, உபாத்தியாயர்களையும் அரண்களில் இருந்து சண்டையிட அனுப்பியிருக்கிறார்களென்று நம்புகிறோம்.

அங்கே ஒவ்வொரு இடத்திலும் கல்விக்குவேண்டிய ஸாதனங்களைக் குறைத்துவிட்டார்கள். ஆனால், தற்போது இங்கிலாந்திலுள்ள மெடிகல் டைரக்டருடைய சமீபரிபோர்ட்டினால், கல்விச்சங்கத்தார் ஒருகூட்டம்கூடி அத்தேசத்துப் பிள்ளைகளின் படிப்பில் முயற்சி எடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். உண்மையாக, அது முயற்சித்து வருமானால், நமது தேசமும் கவனிக்கப்படுமென்று எண்ணுகிறோம். என்றாலும், அது நாம் எண்ணுகிறபடி நமது தேசத்தின் நன்மைக்கு வழிகொடுக்கும் என்று எண்ணுவதற்கு இடமில்லை. ஆனால், பரோடா நாட்டிலும் மைசூர் நாட்டிலும் ஆரம்பித்திருக்கிறபடி நமது நாட்டில் ஆரம்பித்தாலும், நமது எண்ணத்தில் பெரும்பான்மை கைகூடலாகும். அன்றியும், அரசாங்கத்தாரை எதிர்பாராமல், நாட்டு மஹாஜனங்கள் பொதுவில் கல்விச்சங்கத்

களை ஏற்படுத்தி நமது தேசநன்மையை நாடுவதே சால்புடைத்தாகும். அதனால் அரசாங்கத்தாருக்கும் அதிகடமைச்சுமை தோன்றுது. நமது அரசாங்கமும் அதனையே கோருகிறது. இச்செயலுக்குச் சாட்சியங்களாக, ஆரிய ஸமாஜமும் ஹரித்வாரத்தில் உள்ள குருகுல கலாசாலையும் போல்பூரிலுள்ள ரவீந்திரநாத டாகூர் கலாசாலையும் நமது தென்னாட்டில் பல இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பச்சையப்பன் கலாசாலைகளும் முன் வருகின்றன.

எந்தக் கலாசாலை யாவரும் வியக்க முன்னேறி வந்திருக்கிறதோ, அந்தக் கலாசாலை இந்தியர்களால் நடத்தப்பட்டு வருவதை நாம் நன்றாக கவனிக்கலாம். ஏனெனில், தேசமும் இந்தியா, மாணவரும் இந்தியர். இவ்விதம் கல்விச்சங்கம் இந்தியர்கள் வசப்பட்டால் தற்காலக் கல்விமுறையிலிருந்தும் அவசியம் திருத்தப்படவேண்டியவை எவை யென்பது ஆலோசனைக்கு வரலாகும். முதலில், உபாத்தியாயர்கட்கு பூர்விக முறைப்படியான கௌரவஸ்தானம் கொடுத்து மரியாதைப்படுத்தவேண்டும். ஆனால், உபாத்தியாயர்களை நியமிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தித், தமது நயம் கோராமல் தமது தேசத்தின் நன்மையையும் தமதுதேச மாணவர்களின் நன்மையையுமே கோரும் ஸ்வபாவம் வாய்ந்தவர்களையே அத்தொழிலில் நியமிக்கவேண்டும். ஒருவரை நியமிப்பதற்கு முன் அவரது அறிவு ஒழுக்கம் இரண்டில் ஒழுக்கத்தையே ஊன்றிக் கவனிக்கவேண்டும். மனுவும் சொல்கிறார்:—"ஒருவரது சீலம் குணம் ஆசாரம் கருணை இவைகளையே ஊன்றிப்பார்க்கவேண்டும்" என்று.

எனவே, நமது தேசதர்மம் ஒழுங்குபெறுவது மாணவர்களைச் சார்ந்திருக்கிறது. மாணவர்கள் ஆத்மதர்மத்தை யுணர்ந்தால் அல்லாமல் தேசதர்மத்தில் காலிட அறியார்கள். அவர்கட்கு அத்தர்மத்தை யூட்டுவது நல்லாசிரியர் தொழிலாகும். நல்லாசிரியர் என்பார், சீலம் குணம் ஆசாரம் கருணை என்னும் இவைகளையுடையார். அந்நல்லாசிரியரைக் கல்விச்சங்கத்தார் மநு முறைப்படி கௌரவிக்கவேண்டும். அதற்கு ஏற்பக் கல்விச்சங்கங்களும் நம்மவராலேயே நடத்தப் பெறல்வேண்டும் என்பது பெற்றோம்.

ஆகையினால் தேசமுன்னேற்றத்திற் கவலைசெலுத்தும் தேசாபிமானிகளே! பலபாஷைகளில் பயின்று நம்பாஷையின் முன்னேற்றத்தைக் கோரும் பாஷாபிமானிகளே!! வித்தியாதர்மத்தில் விரும்பி விளங்குறும் வைசியமணிகளே!!! உங்கள் உணர்வையும் பொருளையும் இந்தத்தர்மத்தில் செலவிட முன்வருவீர்களென்று மிகவும் வினயத்துடன் வேண்டிக்கொள்கின்றோம்.

பத்திராதிபர்

நீதி வார்த்தைகள்.

ஒரு தேசத்தின் நிலை பெற்ற தன்மை, புரோவ்ருத்தி களிப்பு இவை அத்தேசத்தினது மதக்கொள்கையே சார்ந்திருக்கிறது.

கடவுளின் வியாபகத்துவத்தை அறியாமல், ஒருவன் தன்னை அறிந்து கொள்ளமாட்டான். தன்னை அறிந்துகொண்டவனே கடவுளை அறிந்தவனாவான். தன்னை அறிந்தவனாவான் தன்னை எல்லா ஜீவர்களிடத்தும் கண்டவனே ஆவான்.

எல்லா ஜீவர்களிடத்தும் தன்னைக்காண்பதாவது, எல்லா ஜீவரையும் தன்னைப்போலவே பாவிப்பது ஆகும். அதாவது அவரது சுகதுக்கங்களைத் தன்னுடையவாகப்பாவித்தலேயாகும். இந்த அநுபவத்தை ஒருவன் தானாக அறியலாம். ஆனால் அதனைத் தனது சகோதரனுககுக் காண்பிக்க முடியாது. அதாவது அநுபவமுறையைத்தானே பெறவேண்டுமே யல்லாது ஒருவரால் கற்றுக் கொள்ள முடியாது என்பதாம். அதனால்தான் ஆசாரியர்கள் என்பார் கடவுளை யறியும் வழியைக்காண்பிப்பதற்கு ஒரு வழிகாட்டியாகமாத்திரம் இருக்கிறார்கள். அவர்கள் காட்டும் வழியாவது, "யாவரிடத்தும் யாவற்றினிடத்தும் அன்புடையவனாக இரு" என்பதாம்.

த்வேஷம் கோபம் வெறுப்பு தோன்றவே இடம் கொடுக்கப் படாது. அப்படித் தோன்றினாலும் உடனே பகுத்தறிவைக் கொண்டு அடக்கிக்கொள்ளவேண்டும்.

"அன்பே எல்லா ஜீவர்க்கும் ஆதியும் அந்தமுமாமும். அன்பில்லாவிடில் ஒன்றும் இல்லை" என்று ஒரு சீனரிஷி சொல்கிறார்.

இளங்கோவடிகள்.

[52-ம் பக்கத்தொடர்ச்சி.]

5. துறவடைதல்:—ஒருநாள் நெடுஞ்சேரலாதன் மந்திராலோசனை மண்டபத்தில் மன்னவர் சூழ இளவரசர் நால்வருடனும், அமைச்சர் கூட்டத்துடனும் வீற்றிருக்கையில், முக்காலமும் அறிந்து கூறவல்ல சோதிடன் அரசன் சமூகத்தினை அடைந்து அரசனையும் இளவரசர்களையும் அடிமுதல் முடிவரை பார்த்து, "மன்னர் மன்னனே! நீ சுவர்க்கம் புகுங்காலம் சமீபித்தது; உன்னரசியலை உனக்குப் பிறகு வகிக்கும் சாமுத்திரிகா லக்ஷணம் அமைந்தவன் இளங்கோவே" என்பலருமறியக்கூறினன். அரசுரிமை பெறுதற்குப் பிறந்த முறைமையால் உரியசெங்குட்டுவன் இவ்வாக்கைக்கேட்டு மனம் வருந்துகின்றனன். இதனை அறிந்து மூத்தோன்மனத் துன்பத்தைத் தணிப்பதே தம் அருங்கடமையென எண்ணிய பேரறிவும் உத்தம குணங்களும் நிறைந்த இளங்கோ, முறைமைகெட ராஜபாத்தியத்தைப் புகன்ற பெருநிமித்தங்களை வெறுத்துரைத்து, அந்த ராஜசபையிலே தமக்குக் கிடைத்து நிற்கும் அரசாளுரிமையை வெறுத்து, செங்குட்டுவனுக்கு அரசியலைக்கொடுத்து, அகப்பற்று புறப்பற்று என்னும் இரண்டு ஆசைகளையும் வெருட்டி, சன்னியாச ஆச்சிரமத்தைக் கைக்கொண்டு, செய்தற்கரிய செப்பையாதிபஞ்சேந்திரியங்களை அடக்கி ஜிதேந்திரியராய் ராஜரிஷியாகி, தமையன் பொருட்டு இம்மையின்பத்தை நிக்கிரகித்தலால் சேரர்குலத் திலகனாகி அரசர்க்கு அறிவுறுத்தும் பெருங்குருவாய் அமர்ந்து, அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டையரசாளும் மன்னர் மன்னனாகி விளங்கினர்.

6. காலக்ஷேபம்:—இங்ஙனம் தமக்கென வாழாது பிறர்க்குரியாளராகி, வஞ்சிநகரத்தின் கீழ்த்திசையில் உள்ள "குணவாயிற் கோட்டம்" என்ற தவச்சாலையில் தமக்குரிய ஒழுக்கத்திலே நின்று, தத்துவ உணர்வுபெற்று, ஐம்பொறிகளை அடக்கி, யோகப்பயிற்சியில் அமர்ந்தனர். தக்க காலங்களில் தம்மிடம் வரும்பண்டிதர்களுட-

னும் பாமரர்களுடனும் அளவளாவி அவரவர்க்குரிய மதாபிமானத்திற்குத் தக்கவண்ணம் வேதாந்த உபதேசம் செய்துவருவது இவர் வழக்கம். இவர் பெருந்துறவியாக இருந்ததுமன்றி அக்காலத்திருந்த வித்வான்களுள் சிறந்தவராகவும் விளங்கினர். துறவறத்திருந்த இளங்கோவை ஜனங்கள் மரியாதையாக இளங்கோவடிகள் என வழங்கத் தொடங்கினர். (அடிகள்—சுவாமி)

7. சிலப்பதிகாரம் இயற்றிய வரலாறு:—இந்நிலைமையில், புலவர் பாடும் புகழுடைய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வானவர் எதிர்கொள்ள வானுலகம் சென்றனன். பிறகு செங்குட்டுவன் முடிசூட்டப்பெற்று சேர அரசனுய் விளங்கினன். இந்நாட்களில் ஓர்நாள் மஞ்சுசூழும் சோலைகளையுடைய மலைவளத்தைக் கண்டு களிக்க எண்ணி, இளங்கோவடிகள், மதுரைக் கூலவாணிகன் சாத்தனர் முதலிய பாவலர்களுடன் பெரும்பரிவாரங்கள் சூழச் சென்று, செங்குன்று என்னும் மலையினின்று வீழ்ந்து பிரவகித்து ஓடும் பேரியாற்றங்கரையின் மணல்மிக்க எக்கரில் முன்னமே நிருமித்த கூடாரத்தில் அமர்ந்தனன். உடனே மலைவாழ்குறவர்கள் அரசனுக்கு நல்வரவுகூறி, "இவ்விடத்துள்ள வேங்கைமரத்தின்கீழ் மங்கை ஒருத்தி (கண்ணகி) ஒரு தனம் இழந்து பெருந்துயருடன் வந்து நிற்க, தேவர்கள் அநேகர் இவளிடம் வந்து அவள் காதற்கொழுநனைக் (கோவலனை) காட்டி, அவனையும் விமானத்தேற்றி, எங்கள் கண்முன்பு விண்ணுலகம் சென்றனர். அவள் எந்நாட்டாளோ! யார்மகளோ! யாங்கள் அறிந்தோமில்லை. தேவரீரே இதனை அறிதல் வேண்டும்" எனக்கூறிவாழ்த்தி நின்றனர். அச்சமயம் அரசனது பெருஞ்சிறப்பையும் மலைவளத்தின் நேர்த்தியையும் கண்டுகளித்திருந்த மதுரைச்சாத்தனர், கண்ணகியின் மதுரையில்நடந்த வரலாறுமுழுவதையும் நேரில் அறிந்தவராதலின், அரசன் சமுகத்தில் விரிவாய்க்கூறினர். மற்றொருகால் மாடலன் என்னும் மறையவன், செங்குட்டுவன் முன்னிலையில் வந்து நின்று அரசனை ஆசிர்வதித்து, "மாதவியென்னும் நாடகக் கன்னிகையின் கடற்கரைப்பாடலானது கனகவிஜயாது முடித்தலைகளை இவ்வனம் நெரித்தது. இது வியக்கத்தக்கது!" எனக்கதையைச் சுருக்கக் கூறி

னர். உடன் செங்குட்டுவன் மாடலனைப்பார்த்து "நீர் சொன்ன வாக்கியத்தின் பொருள் யாது?" என, அந்தணன், காவிரிப்பூம்பட்டினத்து நிகழ்ந்த வரலாறு முதல் கனகவிஜயரின் தலையில் பத்தினிக்கல்லைக் கொண்டுவந்தவரை யுள்ள வரலாறுகளைக் கூறினர். சோழநாட்டிலும் பாண்டியநாட்டிலும் வணிகர் குலப்பெரு மக்களாகிய கண்ணகி கோவலர் விஷயமாக நடந்த வரலாறு முழுவதையும் மாடலன் வாயுரையாலும் சாத்தனர் வாய்மொழியாலும் கேட்டு, சேரநாட்டில் நடந்த விவரங்களைப் பிரத்தியக்ஷத்திற் கண்டு, இத்தகைய உத்தம பத்தினியாகிய கண்ணகியின் பொருட்டுச் சிறந்த காவியம் ஒன்று இயற்றி அவள் அருளைத்தாம் அடைய வேண்டுமென்று விரும்பினர். விரும்பித் தன்னுயிர்த்தோழராகிய சாத்தனரைப்பார்த்து,

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரணம் ஆகச்
சிலப்பதிகாரம் என்னும் பெயரான்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"

என்று பொருநிலைமையிற்கூற, சாத்தனர் இவ்வுத்தம வீரபத்தினியின் சரிதை,

"முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
அடிகள் நீரே அருளுக."

நீரே நடுநிலைபிறழாமல் மூவேந்தரையும் ஏற்றத்தாழ்வில்லாமல் உயர்த்துந் தகுதியுடையவர். ஆதலின் மூவேந்தர்க்கும் உரிய மூன்று நாட்டிலும் நடந்த வீரபத்தினியின் சரிதத்தைக் கூற வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். உடனே அடிகள் சாத்தனர் கேட்டுக்கொள்ள, மங்கலவாழ்த்துப்பாடல் முதல் வரந்தருகாதை இறுதியாக முப்பது காதைகளாகவும், புகார்காண்டம் மதுரைக்காண்டம் வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களாகவும் வகுத்து உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுளாகச் சிலப்பதிகாரம் என்னும்பெயருடன் நூலை இயற்றிச் சாத்தனரைத் தலைமை

யாகக் கொண்ட அவைக்களத்தே அரங்கேற்றிக் கண்ணகி தேவி யின் கருணைக்கிலக்காயினர் என்பர்.

(8) நூற்சிறப்பு:—பின்னர், கோவலன் மகளாகிய மணி மேகலையின் வரலாற்றை நீர் செய்தருள வேண்டுமெனச் சாத்த னாரை வேண்டிக்கொள்ளச் சாத்தனாரும், மணிமேகலை துறவு என முப்பதுகாதையுள் சிறந்தநீதிகள்விளங்க இயற்றினார். சிலப்பதி காரம் மணிமேகலை என்னும் இரண்டும் பண்டைக்காலந்தொட்டு வண்டமிழ் வாணர்களால் ஐம்பெருங்காவியங்களில் இரண்டாவ தாகவும் மூன்றாவதாகவும் சிலாகித்து எண்ணப்பட்டு, இவற்றைக் கற்றபிறகே தமிழ்க்கல்வியிலும் ஒருவாறு நிபுணர்களாகின்றனர் என்று தமிழ்நாட்டவரால் ஒருதலையாகக்கொள்ளப்பட்டுச் சிறந்து விளங்கி நிற்கின்றது. இவ்வடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தின் சொற்பொருள்வளங்கள், அறிஞர்பலராலும் அறிந்து மகிழ்தற்குரியன. பண்புடையாளர் தொடர்பைப்போல் நவில் தொறும் இன்பம் பயப்பது. தொட்டனைத்தூறு மணற்கேணிபோல் கற்றனைத்து அறிவுபயப்பது. இதன் பெருமையை விரிப்பிற் பெருகும்.

(9) மதம்:—இவ்வடிகள் ஜைநமதத்தில் பற்றுள்ளவராகவே இவரதுவாக்கின் போக்கால் உய்த்துணரப்படுமாயினும், இவர் வைதிகமதத்தைச் சேர்ந்தவர் என்று கருதுதற்குரிய அத்தாட்சி களும் இவர் வாக்கில் உள்ளன.

1. "செஞ்சடை வானவன் அருளினில் விளங்க,
வஞ்சித் தோன்றிய வானவ! கேளாய்"
2. "நிலவுக்கதிர் முடித்தோன் நீளிருஞ் சென்னி
உலகுபொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி
இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங்கொண்டு"

இவ்வாறு தம்தமையனான செங்குட்டுவனைக் கூறுதலால், இவர் சைவ மதப்பற்றுடையவர் என்று வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது; ஆயினும், அக்கால வழக்கப்படி மற்றையமதங்களிடத்தில் பேத புத்தி உடையவரில்லை. மதங்களிடத்தில் சமரஸபுத்திநிறுத்தியவர்.

10. சமகாலத்துப்புலவர்கள்:—மதுரைக்கூலவாணிகன் சாத்த

ஞர் பரணர் கபிலர் பாலைக்கௌதமனர் காப்பியாற்றுக்காப்பிய ஞர் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் முதலிய பலராவர்.

11. சமகாலத்தரசர்கள்:—இவர்காலத்தில் சேரநாட்டில் அரசாண்டவர் சேரன்-செங்குட்டுவன். சோழநாட்டில்:-சோழன் மனக்கிள்ளிமகன்-நெடுங்கிள்ளியும், கிள்ளிவளவனுமாவர். பாண்டியநாட்டில்:-ஆரியப்படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியனும் வெற்றிவேற்செழியனுமாவர், இம்மூவரசராலும் கொண்டாடப்பட்டார் இவ்வடிகள்.

12. காலம்:—இவ்வடிகளின் தமையனராகிய செங்குட்டுவனின் காலத்தைக்கூறவே இவர்காலமும் சற்றேறக்குறைய அக்காலம் என அமையும். செங்குட்டுவன்காலம் கி-பி ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். செங்குட்டுவன் 55 வருஷகாலம் அரசாண்டனன் எனக்கூறப்படுதலால், செங்குட்டுவன் இறக்குந்தருணத்து இளங்கோவடிகட்குச் சற்றேறக்குறைய 50 வயதிருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது. இளங்கோவடிகள் 50 வயதின்மேல் 60 வயதிற்குள்ளாக இக்காவியத்தைச் செய்தவராயிருத்தல்வேண்டும் என்றுகூறவேண்டும். ஆகையால் இளங்கோவடிகள் காலமும், சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற இரண்டு காவியங்களின் காலமும், இற்றைக்கு 1450 வருஷங்களுக்கு முன் எனச் சரித்திர ஆராய்ச்சியோர் துணிந்து கூறுகின்றனர்.

13. முடிவுரை:—மேற்கூறியவைகளால் இளங்கோவடிகளது சரித்திரத்தின் சிறப்பு ஒருவாறு விளங்கும். இவ்வடிகள் இயற்றிய அரும்பெருங்காவியமாகிய சிலப்பதிகாரத்தில் மறைந்துள்ள புராதன தமிழகத்தின் அரசியல் பத்தினிகளின் மேன்மை பழையகைத்தொழில் வியாபாரங்கள் தமிழர்வீரம் தமிழர்கடற்செல்கை தமிழரின்நகரநிர்மாணங்கள் நாடகத்தமிழ்லக்ஷணம் இசைத்தமிழ் நூல்கள் பழையநூல்களின் பெயர்கள் அடிகளின் ப்ரவசனசக்தி இன்னும் இவைமுதலிய பல விஷயங்களை இப்பொழுது விரிப்பின் இவ்விஷயம் பெரிதாமாதலின், தனித்தனியே அடிக்கடி தொடர்ந்தெழுதப்படும்.

V. T. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்,

Head Tamil Pandit, Maha Raja's College, PUDUKOTTAH.

தந்தைசொன்மிக்க மந்திரமில்லை.

[48-ம் பக்கத்தொடர்ச்சி.]

தந்தையாரானவர் தமக்குக் கிடைத்த அருமையான தின்பண்டங்களையும் குழந்தைகட்குத் தராது தின்னுதற்குச் சம்மதப்படுகிறதில்லை. தாம் தேடும் பொருளெல்லாம் தம்பிள்ளைகட்கு வேண்டுமென்றே சேமித்துவைப்பர். எண்ணும் எண்ணமெல்லாம் பிள்ளைகளின் சுகத்தைக் கருதியதாகவேயிருக்கும். இங்ஙனமாதலின் இவரபிமானத்திற்கு அளவேயில்லை. பன்றியானது பலகுட்டிகளை யீனுவதுபோற் பலபிள்ளைகள் வேண்டுமென்பதவசியமில்லை. ஒரே புத்திரனாகவிருந்தாலும் நற்குண நற்செய்கைகளுள்ளவனாக இருத்தல் வேண்டும். எல்லாத் தந்தைகட்கும் சற்புத்திரன் வாய்ப்பது அரிது. சற்புத்திரனைப் பெறாதார் தேகத்தில் வலுக்குறைந்த பிறகு நெடுநாளிவ் வுலகிலிருத்தல் கூடாது. இருப்பின் மிகுதியுந் துன்புறும்படி நேரும். சற்புத்திரனைப் பெற்றவர் எவ்வளவு காலமிருப்பினும், தப்புதல்வாராற் பல்லாற்றானும் உபசரிக்கப் பெற்று மகிழ்வர் என்பதனையறிவித்தற்கே,

“ அறுபதுக்கு மேலிருக்க லாகாதே ஆமாம்
பெறுநற் புதல்வனைப் பெற்றோ—லிறுமளவும்
பாலுடனே யன்னம் பகிர்ந்தளிப்பா னப்பாலும்
மால்பதத்தில் வைக்கும் மகிழ்ந்து. ”

என்னுஞ் செய்யுளெழுந்ததாகும். எல்லாநன்மைகளையுஞ் செய்து தன்னைப் பேணிய தந்தையின் சொல்லைக் கேளாத மைந்தன் எந்த விதத்தாலுய்தி பெறுவன்? உய்தி பெறுதல் ஒருநாளுமில்லை. தந்தை சுபநலங்கருதிக் கூறுவனவற்றையும் பிறவற்றையுந் தட்டாமற் கேட்டு நடத்தல்வேண்டும். தந்தையார், மைந்தன் நலங்கருதிக் கூறுவன பல உளவாயினும், முக்கியமாகப் படித்தல் வேண்டுமெனவும், படியாதவர் நித்த அநித்தக் கூறுபாடுகளையுணரும் உணர்வின்றி அகக்கண் குருடுபட்டவராவர் எனவும், வடிவழகினுங் கல்வியழகே யழகெனவுங்கூறுவர்; இதனை,

"மைந்தர்கள் கல்வி வளனுணரா மாந்தரெலா
மந்தகரே யாவ ரவர்வடிவிற்—சந்தத்
தவழ் திரைகளார்த்தெழுந் தண்கடல்சூழ் வையத்
தவிழ்முருக்கம் பூவினிற மாம்."

என்பது உணர்த்தாநிற்கும். 'கற்கவேண்டியதவசியம்' எனக்கூறப் பட்ட சொல்லைக் கேளாதவன் நிலை இத்தகைத் தென்பதனை,

"கல்லென்று தந்தை கழற வதனையோர்
சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன்—மெல்ல
எழுத்தோலை பல்லார்முன் னீட்ட விளியா
வழுக்கோலைக் கொண்டு விடும்."

என்பது உணர்த்தாநிற்கும். ஆகையால் நண்பர்களே! சிறுபிராயத்தினராக இருக்கும் நம்மைப் போஷிக்குநிலையிலிருக்கின்ற தந்தையார் சொல்வனவெல்லாம் நம் நன்மையைக் குறித்தேயாகும் என்பதனையுட்கொண்டு அவற்றைக் கேட்டு நடத்தலும், நாம் தக்க வயதுற்றவராகத் தந்தையார் முதுமைப்பருவ மெய்தியவழித் தந்தையாற் கூறப்படுவது சுயநலங்கருதியதே யெனினும், அதனையும் மறாது அன்புடன் கேட்டு நடத்தலும் வேண்டும். ஏனெனில், நாம் நம் தந்தையர்க்கு எவ்விதம் உதவி புரிந்தோமோ அவ்விதமே நம் புதல்வரும் நமக்கு உதவி செய்வரென்பது உறுதியாதலின் என்க.

யயாதி என்ற அரசன், சுக்ராசாரியரால், 'ஜயிக்கமுடியாத மூப்பையடையக் கடவாய்' என்று சபிக்கப்பட்டுக் கிழப்பருவத்தை யடைந்தான். பின்னர் அந்த யயாதியின் வேண்டுகோட்கிணங்கி, 'இம்முதுமைப் பருவத்தை யாருக்கேனும்-அவர் வாங்கிக் கொள்வதாயிருந்தால்- கொடுத்து அவர்தம் இளமைப் பருவத்தை அவரிடமிருந்து நீ பெற்றுக்கொள்ளலாம்' என்று சுக்ராசாரியார் சொன்னார். யயாதி மகாராஜன் தன் புத்திரர்களவரில் யது துர்வசு த்ருஹ்யு அனு என்னும் நான்கு புதல்வர்களையும் தனித்தனி அழைத்து, குழந்தாய்! 'மூப்பும் மடிப்புக்களும் நரைகளும் சுக்ராசாரியருடைய சாபத்தினால் என்னைச் சூழ்ந்திருக்கின்றன. நீ இந்த மூப்புடன்கூடத் துன்பத்தையும் பெற்றுக்கொண்டு எனக்கு

உன் யௌவனத்தைத் தரக்கடவாய். ஆயிரம் வருஷம் கழிந்த பின் யௌவனத்தை யுன்னிடங் கொடுத்துவிட்டு மூப்புடன் கூடத் துன்பத்தையுந் திரும்பப்பெற்றுக்கொள்ளுகிறேன்.' என்று கேட்க அந்நால்வரும் தனித்தனி மூப்பைப் பெற்றுக்கொள்ளவும் தம்மிடத்துள்ள இளமையைத் தரவும் முடியாதென்றும் மறுத்துவிட்டார்கள். இதனால் மனம் பொறாத யயாதி அந்நால்வருக்கும் சாபங்கொடுத்தான். அவர்களும் இருமை நலன்களையும் இழந்து வருந்தினார்கள்.

ஐந்தாவது குமாரனான பூருவைத் தன்சொல் மறாதவனென்று நினைத்து அவனிடஞ்சென்று, பூருவே! 'நீ எனக்கு அன்பனான புதல்வன். நீமிகச்சிறந்தவனாவாய்; குழந்தாய்! மூப்பும்மடிப்புக்களும் நரைகளும் சுக்ராசாரியர் சாபத்தினால் என்னைச் சூழ்ந்தன. யௌவனசுகத்தில் எனக்குத் திருப்தியாகவில்லை. பூருவே! ஜரையுடன் துன்பத்தை வாங்கிக்கொள். உன்வயசினால் போகங்களையனுபவித்து ஆயிரம் வருஷம் நிரம்பினதும் உன் யௌவனத்தைத் திருப்பிக் கொடுத்துத் துன்பத்தை ஜரையுடன் வாங்கிக்கொள்ளுகிறேன்' என்பதாகச் சொன்னான். இதனைக் கேட்ட பூருவானவன், யயாதி என்னும் தன் தந்தையை மகிழ்ச்சியுடன் பார்த்து, மகாராஜாவே! 'நீர் எதைச் செய்யச் சொல்லுகிறீரோ அதைச் செய்வேன்; நீர் எதுவரையில் விரும்புகிறீரோ அதுவரையில் உமது ஜரையை வகிப்பேன்.' என்று ஜரையை வாங்கிக்கொண்டு தன்னிளமையைப் பிதாவுக்குக் கொடுத்தான். பிதிரு வாக்யத்தை மந்திரோபதேசமெனக்கொண்ட பூருவுக்கு ஆயிரம் வருஷங்கள் கழிந்தவுடன், யயாதி தான் பெற்ற இளமையைத் தன் புதல்வனுக்கு மீளக்கொடுத்தான். தன் இராஜ்ய முழுவதையும் அரசாளும்படி கொடுத்தான். 'புத்ரபௌத்ரபாரம்பர்யமாகக் கீர்த்தியுடன்வாழக்கடவாய்' என்று மனப்பூர்வமாக ஆசீர்வதித்தான். அன்பர்களே! ஆகலால் நாம் நம் தந்தையர் கூறுவனவற்றை யன்புடன் கேட்டு அவற்றின்படி நடப்பின் எல்லா நலமுமெய்தி வாழலாமென்பது நிச்சயம். சுபம்.

மணிவாசகன்.

இந்திய புத்திரிகளுக்கு ஓர் விக்ஞாபனம்.

ஸகோதரிகளே!

இக்காலத்தில் நீங்கள் கூர்ந்து உணரவேண்டிய தொன்றுண்டு. அதாவது, ஸ்திரீகளுக்கு அன்பு மிகுதி; புருஷர்களுக்கு ஞானம் மிகுதி; ஆனாலும், ஸ்திரீ புருஷர் ஒவ்வொருவருக்கும் இரண்டும் அதி அவசியம்; புருஷர்களுடைய தர்மத்தைக் கூடவிருந்து முன்செலுத்துவதற்கேற்ற ஞானம் ஸ்திரீகளிடத்திலும், பெண்மக்களிடத்தில் கௌரவபுத்தி கொள்ளத்தக்க அன்பு புருஷர்களிடத்திலும் தற்காலத்தில் மிகக்குறைவு. ஒரு குடும்பத்தில் ஸ்திரீ புருஷர் இருவரும் நேர்மையாயிருக்கவேண்டியது போலவே, ஒரு தேசக்ஷேமத்திற்கும் இன்றியமையாதது அத்தேசத்து ஆண் பெண்மக்களின் ஒற்றுமையேயாம். நமது இந்தியாவின் அபிவிருத்தியை ஒரு ரதத்திற்கு ஒப்பிடுவோமானால், நீவிரும் நாமும் அதற்கு அவசியமான இரண்டு சக்கரங்களாவோம். ஒற்றைச்சக்கரம் மட்டும் பயன்படாது. இதுதான் நீவிரும் நாமும் அறியவேண்டிய உண்மை.

இக்காலத்தில் ஓர் தவறான எண்ணங்கொண்டிருக்கிறோம். இது, ஜன்மாந்தரங்களைப்பற்றிய உண்மையை யுணர்ந்தறியாததால் வந்த வினை. இப்போது புருஷர்களாயிருப்பவர் பலர் அநேக முன்ஜன்மங்களில் ஸ்திரீயாயிருந்து, ஸ்திரீசுபாவத்தையே அதிகமாய் விருத்திசெய்கிறார்கள். அதனால்தான் சில ஆண்மக்களிடமுங்கூட, காம்பீர்யம் அதிகமாய்ப்பிரகாசியாமல், கருணையும் அச்சமும் கூச்சமும் வெட்கமுமே மிகுதியாய் விளங்குவதைக் காண்கிறோம். இவர்களை ஸங்கீதம் கவித்வம் நாடகம் முதலிய கலைகளிற் படிப்பித்தல் தான் தகும். இவர்களுக்கு இயற்கையாகவே இவைகளில் ஓர் நாட்டம் இருக்கும். பரோபகாரங்கருதி உழைக்க இவர்கள் தளரார். அன்பின் வழிபற்றியே இவர்கள் செல்வர். தத்துவமும் தர்க்கமும் இவர்களுக்கு ருசியாயிரா.

அநேக பூர்வஜென்மங்களில் ஆண்மக்களாயிருந்து இப்போது பெண் வடிவத்திலிருப்போரையும் பார்ப்போம். நல்ல மனோவல்லமையையும், தர்க்க தத்துவ பௌதிக சாஸ்திரங்களில் தீவிர நாட்டத்தையும் இவர்களிடம் காண்போம். பிறர் தம்மை எவ்வாறு கருதினாலும் தாம் நீதியெனக்கண்டவழியில் பயமின்றி இவர்கள் செல்வார்கள். ஸ்ரீ ஹெலிநாம்பாளம்மையார் ஸ்ரீ பெசண்ட் அம்மையார் ஸ்ரீ ஸரோஜினி தேவியார் இவர்கள் இதற்குச்சான்றாவர். ஆகவே சரீரவேறுபாடுகளைக்கருதுவதோடு சுபாவங்களில் ஒற்றுமையையும் கவனிப்போமானால், உலகத்தில் சநாதந தர்மம் நிலைக்கும்.

நாம் ஒவ்வொருவரும் அன்பையும் ஞானத்தையும் நம் சித்தில் நிறைய அமைத்துக் கொள்ளல்வேண்டும், அன்பை யிழந்த ஞானமும் ஞானத்தை யிழந்த அன்பும் பயனற்றவை. இது மட்டுமோ? தீமையுமல்லவோ விளைக்கின்றன! எப்படி என்று பார்ப்போம்:—ஐரோப்பிய யுத்தத்தில் அரும் பெரும் காரியங்களை சாதிக்கக்கூடிய மஹா புத்தி பராக்ரமசாலிகள் தம் ஞானத்தையும், சக்தியையும் எப்படி உபயோகிக்கிறார்கள்? ஒரு க்ஷணத்தில் பதினாயிரம் கணக்கான ஜனங்களைக் கொல்லும் வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அன்பிழந்த ஞானம் கொடும் பகையாயிற்று. அங்ஙனமே ஞானமிழந்த அன்பும் த்வேஷமாகவும் குருட்டு பக்தியாகவும் விளையும். எப்படியெனில்:—"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்" என்னும் உண்மையை நம்மில் பலர் அறிகிறோமில்லை. அறிவோமானால், நம்மையும் நம்பிள்ளைகளையும் நம் பந்துக்களையும் நாம் எவ்வளவு உயர்வாய் மதிக்கிறோமோ, அப்படியே பிறருக்கும், அவரவர் பிள்ளைகளும் பந்துக்களும் உயர்வு என்று உணர்வோம். அப்போது எல்லோரையும் ஸமமான அன்போடு கருதுவோம். இது இல்லாததால் நமது குழந்தைகளை நேசிக்க எண்ணி, பிறர் குழந்தைகளிடத்து அருளை கொள்ளுகிறோம். ஞானமில்லாமல் அன்பு செலுத்தத் தொடங்கித் த்வேஷத்தைக் கொள்கிறோம், எது எக்காலத்திலும் அழியாத ஸத்தியமா யுள்ளதோ, அதை யறிவதுதான் ஞானம். அதனிடத்துப்பிரியங்கொள்வதுதான் அன்பு. ஸத்தியத்தைத் தழுவாத அன்பும் ஞானமும் முரண்படும்; சிதைந்துபோம். அன்பும் ஞானமும் ஸத்தியத்தைத் தழுவாமல் முரண்படவே, உடலையும் உருவத்தையும் பெரிதாக நினைக்கிறோம். உயிரையும் குணத்தையும் கவனிக்கிறோமில்லை. வெளி டம்பத்தைக் கண்டு மயங்குகிறோம். உள்ளத் தூய்மையை அசட்டை பண்ணுகிறோம். அதனால் உலக வாழ்வு ஈசுவர கைங்கர்யமாய் நிகழாமல், உண்பதும் உறங்குவதுமாக முடிகிறது. இப்படிச் சீர்குலையும் காலங்களில்தான் பகவான் அவதரிப்பதாக கீதாசாஸ்திரம் கூறுகிறது. அதாவது, "தருமம் அழிந்து அதர்மம் ஓங்கும் போது நான் அவதரிக்கிறேன்" என்பதேயாம். தற்கால யுத்தத்தை தர்மாதர்ம யுத்தமென்று நாம் எங்ஙனம் கூறாமலிருப்பது? இக்காலத்தில் ஞானம் அபிவிருத்தியாகி யிருப்பதற்குத் தக்கபடி உலகத்தில் அன்பு இல்லை. நமக்குத் தெரிந்தமட்டில் பிறருக்குக் கற்பிக்கவேண்டுமென்ற அன்பும் நாம் கற்றுக் கொண்டதற்குத் தக்கபடி நேர்மையாய் நடக்கத் தீவிர பக்தியும் இப்போது நம்மவருள் மிகத்தேவை. எல்லோரிடத்தும் ஸகோதர பாவமான அன்பு கொள்ளவேண்டுமென்று நாம் எவ்வளவு நன்றாயறிந்தாலும், நங்கண்ணுக்குப் பிரியமான ரூபவான்களிடத்திலும் ரூபவதிகளிடத்திலும் மட்டும் அன்பு கொள்கிறோமே யொழிய, மற்றவர்கள் எவ்வளவு நற்குணம்பொருந்தியவர்களாயிருந்தாலும், அவர்களைக் கவனிக்கிறோமில்லை.

நந்தேசத்து ஸ்திரீ புருஷர்களாகிய நாம், பரஸ்பர கௌரவத்தோடு ஒருவரையொருவர் நன்குமதித்து ஒருங்குசேர்ந்து நம்தேசத்துப் பொதுநலம் ஒன்றிற்கேனும் உழைக்க முன்வாராத இக்காலத்தில், கருணைக்கடலான ஸ்ரீகிருஷ்ணபகவான் அவதரிப்பாரானால், அவரைநாம் அறிந்து நன்குமதிக்கமுடியுமா? "லோகாநுக்கிரஹத்திற்கு அவர் புருஷ ரூபமாகத்தான் வருவார்; ஸ்திரீ ரூபமாக வரமாட்டார். ஸ்திரீ ரூபமாக வருவார்; புருஷரூபமாய் வரமாட்டார்" என்றும் நாம் கருதல் நியாயமோ? ஒரு மஹாபுருஷன் வந்தால், அவருக்கு ஸ்திரீயென்றும் சூத்திரனென்றும் பேதபுத்தி இருக்குமோ? "ஸ்திரீகளும் வைசியர்களும் சூத்திரர்களும் என்னையடையத் தகுந்தவர்கள்" என்று பகவான் கூறியிருக்கிறாரே. ஸ்திரீ ரூபமாய்ப்பகவான் வந்தால் புருஷர்கள் அவரையணுகி அவரைவணங்கி அவர் ஆக்ஞைப்படி நடக்கவும், புருஷ ரூபமாகப்பகவான் வந்தால், ஸ்திரீகள் அவரையணுகிஅவரை வணங்கி அவர் ஆக்ஞைப்படி நடக்கவும் ஏற்றவிதமாய் நந்தேசத்தில்ஸ்திரீபுருஷர்களுக்குள் அந்யோந்யமான முறைமை நிகழ்கிறதென்று நாம்சொல்லமுடியுமா? புருஷர்களுக்கு இக்காலத்தில் பக்தியே அழிந்துபோயிருக்கிறது. ஸ்திரீகளாகிய நீங்கள் பக்திரசத்தை அறிவது போலப் புருஷர்களுக்குஅறியச்சக்தி கிடையாது. இக்காலத்திலும் பகவான் வருவதாகப் பிரஸ்தாபம்உள்ளது. உலகப்போராட்டத்தை நிறுத்தவும் அவர்வரவை வேண்டுகிறோம். ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில்கோபஸ்திரீகள் எத்தகைய உள்ளுணர்வோடு பகவானுடைய பெருமையைப் பிரகாசப்படுத்தி வந்தனரோ, அத்தகைய உள்ளுணர்வோடு இக்காலத்திலும் பகவானுடைய அவதாரத்தை ஆவலாய் எதிர்பாருங்கள். முற்காலத்தில் கோபஸ்திரீகள் விதைத்த பக்தியே இக்காலம்வரை உலகத்தில் நிலைத்திருக்குமானால், அவ்வித பக்தியை இக்காலத்திலும் நீங்கள் பிரபலப்படுத்த என்ன தடை? இனி வெகுகாலம்வரை உலகில்பக்தி நிலைத்திருக்க நீங்கள் விதை ஊன்றுவது உங்கள் பாக்கியமல்லவா? ஸர்வதர்மங்களையும் நாம் அறியாவிட்டாலும், அவதாரமூர்த்தி வருங்காலத்தில் அவரிடம் பக்தியை மட்டும் எல்லோரும கொள்வார்களானால் அதுவேபோதும். அதன் மூலமாய்த் தர்மங்களைத் தெரிந்துகொள்வோம். "அநந்யபக்தியால் மட்டும் என்னையறிய முடியும்". என்று ஸ்ரீகிருஷ்ணர் கீதையிற் கூறியபடியே, ஸ்ரீகிருஷ்ணனுடைய பெருமையை இடையர்களுக்கு இடையப்பெண்கள் தாம் அறிவுறுத்தினரென்று கேட்டிருக்கிறோம். அதேமாதிரி இக்காலத்திலும் வரப்போகும் பரமாசார்யனிடம், ஆண்மக்கள் அநேகருக்குப் பக்தியில்லை. உங்கள் மூலமாகத்தான் அவர்களுக்கு பக்திபெருகவேண்டும். ஸ்திரீகளுடைய நிஜபக்திக்குப்பகவான் மிகவும் கட்டுப்பட்டவர். பகவான் திரௌபதிமானசம்ரக்ஷணம் செய்யவில்லையா? பகவான் உலகில் உதித்து ஸங்கடங்களைத் தீர்த்துச் சமாதானத்தை நிலைபெறச் செய்யும்படி தீவிரமாய்ப்

பிரார்த்தியுங்கள். அவர் நிச்சயம் வருவார். கோபிகைகளின் சங்கமொன்று முற்காலத்தில் ஏற்பட்டிருந்தது. இப்போதும் உங்கள் பக்திக்குரிய பொதுச் சங்கமொன்று அவசியமல்லவா? பூர்வஜன்மங்களில் ரிஷிகளாயிருந்தவர்கள் கோகுலத்தில் ஸ்திரீகளாய்ப்பிறந்தார்களென்றால், இக்காலத்திலும் அத்தகைய புண்யாத்மாக்கள் ஸ்திரீகளாகிய உங்களுக்குள் இல்லையென்று எவர் மறுப்பார்? எத்தனையோ அரியரத்தினங்கள் ஸமுத்திரத்திற் புதைந்து கிடப்பனபோல, உங்களுக்குத்தக்க கல்வி ஏற்படாமையால் உங்களிடத்திலுள்ள க்ஷேத்திரம் பிரகாசிக்க முடியவில்லை. உங்கள் கல்விக்கு நீங்களே முயலவேண்டுமெல்லாது வேறொருவர் உங்களுக்காகக் கற்க முடியாது.

உங்களுக்குப்பக்திமயமான கல்வியைப் புகட்ட, உதயதினைச நக்ஷத்திர சங்கம் நம் இந்தியாவிற்கு ஓர் பெரும் பாக்கியமாகவுள்ளது. இத்துடனுள்ள துண்டுப்பத்திரிகைகளைப் படித்து இச்சங்கத்தின் நோக்கங்களையும் உயர்வான பிரயோஜனத்தையும் ஜனங்களுக்குள் பரவச்செய்து, இதைப்படிக்கும் ஒவ்வொரு சகோதரியும் தம் அருகாமையில் ஒரு சிறு நக்ஷத்திரக்கிளைச்சங்கத்தை ஏற்படுத்தி வருமாறு வேண்டுகிறோம். ஒரு தெருவிலுள்ள நாலைந்து வீட்டுக்கு ஒரு சங்கம்வீதம் நாட்டில் ஏற்படவேண்டும். வீண் வம்பைத்தவிர்க்கவும் பிறர் குற்றத்தை மறக்கவும் மன்னிக்கவும் பிறரிடத்து அன்போடு நடக்கவும் பழகுமின். எவரிடத்திலும் அணுவளவாவது ஒரு நற்குணத்தைக்கண்டு அதை நாம் அடையும்படிக்கும் எல்லாவற்றிலும் நம் சொந்த பிரயோஜனத்தையே பெரிதும் பாராட்டாமல் நாளுக்கு நாளதிகமாய் எத்தனை விதங்களில் பிறர்க்கு உபயோகமாய்வாழலாமென்பதையும் தெரிந்து நடக்க முயலுங்கள். ஸ்ரீ பெஸண்ட் அம்மையெப்படி உழைக்கிறார் பாருங்கள்.

அதற்குச்சாதனமாக, அருகாமையிலுள்ள நாலைந்து வீட்டுப்பெண்மக்கள் ஒருவர் வீட்டில் பிரதிதினமும், சாவகாசமான ஒருகுறித்த நேரத்தில் அல்லது வாரமொருமுறையாவது குறித்த சமயத்தில் கூடி, அமைதியாயும் சாந்தமாயும் ராமாயணம் பாகவதம் முதலியவைகளைத் தமிழில் படிப்பதோடு அவைகளின் ஸாரங்களையும் படிப்பினைகளையும் சிந்தித்தறியலாம். மகா பூரணசந்திரோதயம் முதலியபலபத்திரிகைகளை வருவித்து, நம்தேசத்தின் தற்காலநிலைமையையும் அதில் அவதாரமூர்த்தியைப்பற்றி எழுதப்படும் வியாசங்களையும்படிக்கலாம். சந்தேகங்கள் உண்டானால் எம்மைப்போன்றவர்கட்கெழுதினால். எமக்குத்தெரிந்த அளவு தெரிவிக்கத் தயாராயிருக்கிறோம். இப்படிக் கிராமங்கள் தோறும் தெருக்கள் தோறும் ஸ்திரீகள் அனைவோரும் ஒருமித்து இவ்வுதயதினைச நக்ஷத்திர சங்கத்தை ஏற்படுத்தி நடத்திவருவர்களானால், நம் இந்தியாவில் புதிய

விளக்கேற்றிவைத்த மாதிரி பிரகாசம் ஏற்படும். ஞானமணம் கமழும். லக்ஷ்மியும் சரஸ்வதியும் நம் இந்தியதாயோடு ஒருமித்து வாழ்வார்கள்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று திருவள்ளுவர் எழுதியுள்ள பிரகாரம், எவ்விடத்திலும் நல்லோரை உபசரிக்கத்தக்க ஸ்திரீ சங்கங்கள் ஏற்படவேண்டும். எவர் சொல்வதையும் கேட்கு முன் தள்ளிவிடலாகாது; கேட்குமுன் அங்கீகரிக்கவுமாகாது.

உங்கள் பேதமைக்குணம் நல்லதேயானாலும், அறிவின்மையைக்கண்டிப்பாய் தவிர்க்கவேண்டும். உங்கள் பூரணபக்தியையும் தைர்யத்தையும் கொண்டு அறிவின்மையை விலக்கவேண்டும். உண்மைப்பரோபகாரிகளை இன்னாரென்று அறிந்து அவர்களுடன் ஒத்து உழைக்கவேண்டும். அவர்களை ஆதரித்து ஆடம்பரங்களைத் தவிர்க்கவேண்டும். பழத்தின் ருசியைக்கொண்டு மரத்தின் யோக்யதையை நாம் அறிவதுபோலப்பரோபகாரம் என்னும் ஒரே குறியை முன்வைத்து இன்னார் பெரியோர்என்று அறியலாம அப்படி அறிந்தவுடனே நீங்கள் அவருடன் ஒத்துஉழைக்க முன்வரவும் வேண்டும். பர்த்ருஹரி சொல்லியபடி உலகத்தின் நீதிநிபுணர்கள் தங்களைப் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும் ஐஸ்வரியம்பெருகினாலும் குறைந்தாலும் இன்று மரணம் வரக்கூடியதாயிருந்தாலும் அல்லது ஒரு யுகம் கழிந்துதான் மரணம் வருமென்றாலும், நியாயமுறையினின்றும் ஒரு மயிரிழை கூடத்தீரர்கள் விலகமாட்டார்கள். இதை உங்கட்குச்சொல்வானேன் என்றால், நியாயவழியில்செல்வோருக்கு அபரிமிதமான இடையூறுகள் அவசியம்வரும். அவைகளை அலக்ஷியமாய் எதிர்க்கவேண்டும். இத்தகையசிலமில்லாதவர்கள் பிறர்க்குஒருபோதும் உபயோகமாய்வாழ இயலார் ஆகவே, கம்தேசத்து ஜயசீலர்களும் ஜபவீரர்களுமான தற்கால முற்காலத்து ஸ்திரீபுமான்களின் சரித்திரங்களைப் படிப்பீர்களானால், உங்கள் மனோபாவத்திற்குத் தக்கபடி இனி நம்தேசத்தில் பிறக்கும் ஜீவர்களை ஒளி நிறைந்த நக்ஷத்திரங்களாய்ப் பிரகாசிக்கத்தக்க சரீரங்களைக் கொடுக்க வல்லவராவீர்கள். உங்கள் தகைமைக்குத்தக்கபடி சிறிதளவாவது இதில் உதவுவீர்களானால், அது பகவானுக்குச் செய்த கைங்கர்யமாகும்.

"சீவனென்னச் சிவனென்ன வேறில்லை" என்னும் திருமூலர் வாக்குக்கிணங்க, ஜீவர்களின் க்ஷேமத்திற்கு நாம் உழைப்பதே , ஸ்வாமியினுடைய சித்தத்தை யறிந்து உழைப்பதாகும்.

ஸ்திரீகளுக்கு நமது பூர்வாசந்திரோதயம் அரைச்சந்தா விகிதந்தியத்துக் கொடுக்கப்படும். இம்மாதிரிப் பத்திரிகைகளை வேண்டுவோர் தம்மாலியன்ற எவ்வற்பத்தொகையாவது எமக்கனுப்பினால், அதற்குத்தக்க துண்டுப்பத்திரிகைகள் அனுப்பப்படும். அவைகளைப் பிறர் பலருக்குங்கொடுத்து நம் சங்கத்தைப் பரவச்செய்யலாம்.

தங்கள் சகோதரன்,

B. S. ராமசுப்பையர்,

காரியதரிசி.

உதயதிசை நக்ஷத்ர சங்கம், மதுரை.

மதராஸ் யுத்தநிதி ஸ்டாம்பு.

ஹிஸ் எக்ஸெலன்ஸி பென்லண்டுப்பிரபு அவர்கள் மதராஸ் யுத்த நிதித்தலைவர் என்னும் முறைமையில் மதராஸ் யுத்தநிதி ஸ்டாம்பு சமீபத்தில் வெளியாகுமென்றும் விற்பனைக்குக் கொடுக்கலாகுமென்றும் அறிவிக்கும்படி எம்மைக் கேட்டுக்கொண்டனர்.

மதராஸ் சித்திரவேலைகலாசாலை சூபரின்டென்டெண்டு W. S. ஹாட்லே அவர்களால் அந்த ஸ்டாம்பு குறிப்பெழுதப்பட்டது. அதில் 'மதராஸ்'' என்னும் புகைக்கப்பல் செல்வதைக் காட்டியிருக்கிறது. உச்சிப்பக்கம் மத்திய பாகத்தில் ''மதராஸ் வார் பண்டு'' என்று வரைந்திருக்கிறது. உச்சிமூலைகளொவ்வொன்றிலும் லைப்பாய் என்று சொல்லப்படும் மிதப்பு ஒன்றும் கீழ்ப்பக்கம் மூலையொவ்வொன்றிலும் சிவப்புச் சிலுவை யொன்றும் போடப்பட்டிருக்கிறது. கீழ்ப்பக்கம் மத்திய பாகத்தில் ''அரை $\frac{1}{2}$ அணா'' என்று எழுதப்பட்டுள்ளது.

ஸ்டாம்பு செய்வதற்கான அச்சு முத்திரைகள் ஹைதராபாத் ஸமஸ்தானத் தங்கசாலையில் செய்யப்பட்டுள்ளன. ஹிஸ் ஹைனெஸ் நிஜாம் அவர்கள் தர்மத்தில் ஸ்டாம்பு இனாமாக பதிப்பிக்கப்படுகிறது.

கையொப்பம் செலுத்துகிறவர்கள் பொருட்டாக ஹிஸ் எக்ஸெலன்ஸியவர்கள் பம்பாயில் செய்யப்படுகிறதுபோலவே, மதராஸிலும் முகாமையான சகலஷாப்புகளிலும் தொழிற்சாலைகளிலும் இந்த ஸ்டாம்புகளை விற்பனைசெய்ய முயற்சி பண்ணுவார்களென்று எதிர்பார்க்கின்றனர். பம்பாய் ராஜதானி யுத்தஸகாய நிதிக்கு அவர்களுடைய ஸ்டாம்பு விற்பனையிலிருந்து எற்கனவே லக்ஷ ரூபாய்க்குமேல் கிடைத்திருக்கிறது. பம்பாயில் ஏற்பட்டிருக்கும் அநுகூலமானது இந்த ராஜதானியிலுள்ள ஒவ்வொருவருக்கும் பம்பாயில் செய்யும்

முயற்சியைக்காட்டிலும் அதிக முயற்சி செய்யவேண்டுமென்று ஊக்கம் உண்டு பண்ணவேண்டும். ஸ்டாம்புகள் செய்வதற்கான செலவு முழுமையையும் பம்பாயிலுள்ள வர்த்தகக்கூட்டத்தார் தாங்களே போட்டுக்கொண்டனர். ஸ்டாம்பும் வெகு உதாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒரு ஷாப்புமாத்திரம் ரூ. 950-க்கு ஸ்டாம்பு விலைக்கு எடுத்துக்கொண்டது. மற்றொரு ஷாப் கப்பலில் சாமான்கள் அனுப்பும்படி தாங்கள் எழுதும் கடிதங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு ஸ்டாம்பு ஒட்டுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறது. அநேக ஷாப்புகள் ஸ்டாம்பைக் குறித்த விளம்பரங்களை அவைகளனுப்பும் கடிதங்களுடன் வைத்தனுப்பின. கடைகள் கிளப்புகள் ஹோட்டல்கள் முதலிய எல்லா இடங்களிலும் ஸ்டாம்புகள் விற்கப்படுவதுடன், பெரிய பிரசித்தப்பத்திரிகைகளும் விளம்பரப்பத்திரங்களும் கொடுக்கலாயின. ஸினிமடோகிராப் வைத்திருப்பவர்கள் காக்ஷி நடத்தப்படும் ஒவ்வொரு சமயத்திலும் ஸ்டாம்பு விற்கிறார்கள். சமாசாரப் பத்திரிகைகளெல்லாம் ஸ்டாம்பு விற்பனையை அதிகப்படுத்த இயன்றமட்டும் பிரயாசைப்படுகின்றன. ஒவ்வொருவரும் அந்த ஸ்டாம்பை வாங்கித்தாம் எழுதும் கடிதங்களுக்கு முகர் மாதிரி உபயோகப்படுத்தினால் உதவிபுரியலாம்

ஸ்டாம்புகள்—32 ஸ்டாம்புகளடங்கிய புஸ்தகங்களாகச் சேர்த்து விற்கப்படும். இம்மாதிரியான ஸ்டாம்பு புஸ்தகம் மதுராஸ் கவர்ன்மெண்ட் ஹவுஸிலிருக்கும் மதுராஸ் யுத்தபண்டு ஆனரெரி செகிரிடரியிடம் விலைக்குக் கிடைக்கும்.

ஸ்டாம்புகள் மதுராஸ் வார் பண்டைச்சேர்ந்த 'லேடீஸ் டெப்போ' வின் லோகல் ஸெகிரிடரிகளிடத்தும் விலைக்குக் கிடைக்கும், செகிரிடரிகள் ஏற்கனவே நிதிக்குச்செய்துவரும் உதவியோடு இந்தக்காரியத்தையும் அன்புடன் வகிக்கும்படி ஹிஸ் எக்ஸலென்ஸி கேட்டுக்கொள்ளலாயினர்.

ஸ்டாம்பு வந்துசேர்ந்தவுடன் அதைக்குறித்து கிரமப்படி பிரசித்தம் செய்யப்படும். அப்போது ஸ்டாம்புப் புஸ்தகங்களுக்காக வரும் விண்ணப்பங்கள் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆனால் இந்த ஸ்டாம்பை தபால் தலையாக உபயோகிக்கலாகாதென்று எல்லாரும் நன்றாய் அறியவேண்டும். கடிதம் எழுதுகிறவர் ஸ்டாம்புவாங்கி உபயோகிப்பதனால், தாம்யுத்தபண்டுக்குக் கையொப்பம் செலுத்துகிறாரென்று காட்டுவதற்கான முத்திரையாக மட்டில் ஒட்டி உபயோகிக்கலாம். இவ்விதம் செய்வதினால் இந்த ராஜதானி முழுமையிலும் இந்த ஸ்டாம்பைப்பற்றியும் யுத்த பண்டைப்பற்றியும் அவர் பிரசித்தம் செய்கிறதாகும்.

(ஒப்பம்) எல். எம். பீட், கப்தான்,
ஆனரரி செகரிடரி, மதுராஸ் யுத்தநிதி ஸ்டாம்பு.

V. R. DURAI RAJAH—For Darbar.

ஓர் சந்தேகவினா?

பற்பல நூலுணர் பண்டிதமணிகாள்!

இந்நிலவுலகின்கண் சாட்சண்ய பரிபூரண வஸ்துவாய் பரப்பிரமத்தின் சிருஷ்டியினாலனேக பிறவிகள் படைக்கப்பட்டுள. அவற்றுள் சிறப்பும் உயர்வாயது மானுடப்பிறவியேயாம். அதனுள் ப்ரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென நால்வருணமுமுள. இவற்றுள் சூத்திரவருணத்தைப் பற்றி தக்ஷிணநாட்டிலடங்கிய ஜாதிகளெல்லாவற்றையும் முறையே வகுத்துத் தமிழ்பாஷையின் மூலந்தமிழ்ச்செபருத்துப் புலப்படுமாறு பெரியோர்கள் வெளியிட்டுள்ளார்கள். இவைகளன்றி நவமாக ஓர் மரபுநாமம் பதிகின்றன. அவைகளென்னவெனின்:-சைவஜாதியேயாம். அச்சாதியானது எவ்வித ஜாதிகளைப்போன்று கிரியையை முன்னிட்டு வந்தது, அல்லது செய்கையை முன்னிட்டு வந்தது என்பதையறிய அதிகமும் விழைவுடையேனாகலான் இதனை எழுதியுள்ளேன். அறிஞசிரோன்மணிகளாய பண்டிதர்கள் நன்கு புலப்படுமாறு நமது பாஷையின் வாயிலாய் எழுதுவீர்களாக.

இங்ஙனம்,

பாலகவி, K. நல்லையஆசாரி.

சகலகலாவல்லி விலாஸ்.

விளம்பரம்.

நஞ் செந்தமிழ் நூல்கள் வெளிவருதலையும், பிராசீனவாசாரக் கலையறிந்தோருதலையும் கருதி சங்க நூல்களாகிய பதினெண்கணக் கணுள்ளொன்றாகிய 'ஆசாரக்கோவை' என்னும் நீதிநூல் பலவான்குடி சித்திவிநாயக வித்தியாசாலையின் முதற்பிரசுரமாக ஸ்ரீமாந் மு. மு. வீர. வீரப்பசெட்டியாரவர்களின் பொருளுதவியால் மாணவர்கட்கு விலையின்றிக் கொடுக்க அச்சிடப்பெற்றுத் தபாலிலிருக்கின்றது. வேண்டுவோர் தபாற்செலவுக்காக புத்தகம் ஒன்றுக்கு அரையணாவிதம் தபால் முத்திரையனுப்பி மேற்படி வித்தியாசாலைத் தலைவர் ஸ்ரீமாந், ராம. கு. ராம. இராமசாமிச் செட்டியாரவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்.

சண்முகநாதன்.

ஸ்ரீமான் சடையப்பவள்ளலாரது சரித்திரத்தில் ஒருபகுதி.

(தொண்டைமண்டல சதகம்.)

"தெள்ளத் தெரிந்தவர் செய்தக்க தோர்முறை செய்யிலையா
வெள்ளத் தனைமலை யத்தனை யாமென்ப தின்றறிந்தோ
முள்ளற் கரிய தொடையாடை கீறிய தொன்றுமொரு
வள்ளற் றகைமையொ டொத்துள தாற்றொண்டை மண்டலமே"

பொழிப்புரை.

நூல்களைக்கற்றுத் தெளிந்த அறிவுடையோர், தாம்செய்யத் தகும் செயல்களில் ஒன்றை அவ்வளவாக நிரம்பச்செய்யாமல் ஒருவகையாற்சிறிது செய்யினும், அது எள்ளத்தனைச் சிறிதாயினும், பிறர்க்கு மலைபத்தனைப்பெரிதாகும். எங்ஙனமெனில், வெண்ணெய் நல்லூர்ச் சடையப்பமுதலியார் அரசன் சமூகத்தில் விலையுயர்ந்த தனது துடையாடையைக் கிழித்த இச்சிறு செயலிலேயே கண்டோம். அவர் செய்த அச்சிறு செயல் அரசனும் பிரமிக்கத்தக்க பெருஞ்செயலாயிருந்தது. இத்தகைய வேளாண்குடிமையரை யுடையது தொண்டைமண்டலம்.

வரலாறு.

வடநாட்டு வணிகனொருவன் முடிபுனைந்த அரசர்க்கேற்பதாக உயர்ந்த விலையில் அரியவேலைப்பாடமைந்த பட்டாடையொன்றைச் சோழன்பாற்கொண்டு சென்றான். சோழன் அப்பட்டாடையின் அருமை பெருமைகளைக்கண்டு பெரிதும் களித்து, அதனைப் பெறுவான்கருதி விலைகேட்டனன். அதற்கு வணிகன் கூறியவிலை, தன் பொக்கிஷத்திலுள்ள பொன்னினும் பதின்மடங்கு அதிகமாய் இருந்ததுபற்றிப் பெறற்கியலாதவனாகி வணிகனைச்செலவிடுத்தனன்,

விடைபெற்ற வணிகன், அப்பெரும்பட்டினைப் பெறற்குரிய பிரபுக்கள் வேறெவருளாரென விசாரித்தபோது, 'திருவெண்ணெய் நல்லூர் சடையவள்ளலே இப்பட்டினைக்கொள்ளற்குரிய பெரும் பிரபு' வென்று நாடுமுழுதும் ஒருங்கே புகழ்தலைக்கேட்டு, அப்பிரபுவைக்காண்பதற்கு வெண்ணெய்நல்லூர் சென்று, அச்சீமானிடத்து அவ்வரிய பட்டினைக்காட்டி, நிகழ்ந்த விஷயத்தையும் உரைத்தனன். பிரபு, பெரிதும் மகிழ்ந்து அதனைப்பெறுவதில் பேராவல்கொண்டு, அப்பட்டின் மேம்பாட்டையும் நுண்ணிய வேலைப்பாட்டையும், ஆடைநெய்தானின் அரியபுத்திகூர்மையையும் சிந்திக்குமிடத்து, வணிகன் கூறியவிலை மிகு கொஞ்சமேயாமென்று, தனது பெருநிதியறையினின்றும் அதன் உயர்ந்த விலையை எளிதாகத்தந்து, வணிகனைவழிவிட்டனன். இதன்மேற் சோழன், ஓர் நாள், சடையவள்ளலிடத்து சில விஷயங்களைப்பற்றிச் சம்பாஷிக்க நினைந்து, அழைத்துவருமாறு தனது தூதரைவிடுத்தபோது, அவ வள்ளல், தனக்குத் தொடையில் புண்ணுண்டாயிருப்பதால் இச்சமயம் இராஜசபைக்கு வருவதற்கு இயலாதென்றும் அதுதீர்ந்து குணமடைந்ததும் வருவதில் தடையிராதென்றும் தூதனிடத்தில் பதில் விடுத்துக், குணமடைந்தசிறிதுநாளில் கூறியவாறு சோழனைக் காணச்சென்றார். சோழன் தன்னாலுங்கொள்ள முடியாததொரு பெருவிலைப்பட்டைச் சடையவள்ளலின் அரையிற்கண்டு, வியப்பும் அழுக்காறுங்கொண்டு அகத்தால் நொந்து முகத்தாலுபசரித்து, தொடையிலெழுந்த புண் தீர்ந்து முற்றிலுங் குணப்பட்டதோ, எவ்விதமிருக்கிறது? நான் அதைப்பார்க்க விரும்புகிறேன் என்று வெகு கனிவாகக்கேட்டனன். அதுகேட்ட வள்ளல், உடுத்த ஆடையை நீக்கித்தொடையைக் காட்டுதல் மரியாதைக்குறைவெனக் கருதி, தான் பெருவிலை கொடுத்துப்பெற்ற அப்பட்டாடையை புண்ணுள்ள இடத்துக்குநேரே கைபாற் கிழித்துக்காட்டினர். அது கண்ட அரசன், "எமக்கரியதாய்த் தன் செல்வமிகுதிதோற்றற்குக் காரணமான இப்பட்டாடையையும் இவன் ஒருபொருளாகக் கருதினானில்லை. இவன் செல்வநிலையும் மனநிலையும் இருந்தவாறென்னே!" என்று முன்னினும் அதிகமாகச் சடையவள்ளலின்பால் அழுக்காறு

கொண்டனன் என்ப. இவ்வரிய சம்பவத்தையே, ...ஆறுத்

"துடையிலெழு சிலந்தி தோற்றுவிக்கப் பட்டின்
புடவை கிழித்த பெருங்கை"

(திருக்கைவழக்கம்)

எனவும்,

"விளைவாஞ் சிலந்திபை யாடையைக்கிழி வெளியிலிட்டும்
வளமான் கீர்த்திகொள் வேளாளர் பாண்டியன் மண்டலமே"

(பாண்டிமண்டல சதகம்)

எனவும்,

"உற்றதொடைப் புண்ணுக் குடைகிழிக் காட்டிநின்றான்
கொற்றவன்மு னுங்கங்கை கோத்திரத்தான்"—

(ஆத்திசூடி வெண்பா)

எனவும் பாராட்டப்பட்டிருத்தல் காண்க.

குறிப்பு:—சோழநாட்டு நடந்த இச்சம்பவத்தைத் தொண்டை நாட்டுக்கேற்றித் தொண்டைமண்டலசதகவாசிரியர் கூறியகாரணம் யாதாயிருக்கலாம்? என அன்பர் சிலர்சந்தேகிக்கலாம். திருவெண்ணெய்நல்லூர்ச்சடையர்க்குத் தொண்டைவளநாட்டிலும் பெருங்காணிவளம் இருந்த உரிமைபற்றித்தமது நூலில் கூறத்துணிந்தாரென்றுதெளிதல் வேண்டும்.

சி. ரு. நாராயணசாமி முதலியார்
காரியதரிசி
சாரதாவிலாஸ சபை.
கோயமுத்தூர்.

விவசாயம்.

Farm Or Fight?

சாகுபடியா சண்டையா?

பயிரிடுவோர்களாகிய கிருஷிகர்கள் நிலத்தை உழுது பயிரிடு வதைச் சாகுபடி செய்கிறார்களென்று சொல்லுவதைவிட, நல்ல விளைவு எடுக்கக் கலப்பையால் பூமியைக் குத்திக்கிளறி நிலத்தோடு சண்டைபோட்டுப் போராடுகிறார்களென்றே சொல்லவேண்டும். கல்வியிற்சிறந்த கம்பர் ஏரெழுபதுபாடியபோது, "அரசர்கள் செய் யும்போரில் சிலர் வெல்வர்; சிலர் தோற்பர். ஆனால் கிருஷிகர் செய்யும் சண்டையில் யாசிப்பவருக்கூடத் தோற்கமாட்டார்கள்" என்று சொல்லியிருக்கிறார். இப்படி உலகத்தில் தேசங்களெங்கும் அங்கங்கே கிருஷிகர் பூமியோடு விசித்திரமான சண்டைசெய்கிறார் கள். இவர்களுடைய சத்துருக்களில் முக்கியமானவர் யாவர்? அவர்களை எவ்வாறு வெல்லவேண்டும்? என்று கவனிப்போம்.

முதலாவது எதிரி:—கிருஷிகனே ஆகிறான். எவ்வாறெனில்; ஒருவன் தான் செய்யவேண்டிய காரியங்களைப் பட்டம் தவறினால் நட்டமென்றுணராமல் காலத்தில் செய்யத்தவறினாலும் சரி; அல் லது தன்னுடைய உழைப்பு கொஞ்சமுமில்லாமல் "அதிர்ஷ்டமிருந் தால் கிடைக்கும்" என்ற ஒரு கெட்ட நம்பிக்கையுடன் சோம்பேறி யாக வீண்காலம் கழித்தாலுஞ்சரி; இவ்விருவிதத்திலும் கிருஷிகன் தனக்குத்தானே சத்ருருவாகிறான். திருஷ்டாந்தமாக, ஒரு கிரா மத்தில் ஒரு உழைப்புள்ள குடியானவன் பாடுபட்டுத் தன்நிலத்தின் மகசூலை எதிரி மந்திரவசத்தால் அவன் நிலத்திற்கு இழுத்துக் கொண்டு போய்விட்டானென்று நியாயஸ்தலத்தில் முறையிட, குடி யானவன், தன்னுடைய பழுதற்ற சாகுபடிக் கருவிகளையும், பல முள்ள உழவுமாடுகளையும் திடகாத்திரரான பண்ணையாட்களையும் கோர்ட்டார் முன் சாட்சிகளாக நிறுத்தி, பயிர்க்காலத்தில் தான் அநேக இரவு கண்விழித்துப்பயிர்களைக் காப்பாற்றி வந்த கிர

மக்கை பிரத்யட்சமாக சேர்ட்டுக்குமுன் கொண்டுவந்து காண்பிக்கமுடியவில்லையே என்று துக்கித்தான். ஆகையினால் தகுந்த விளைவிற்குக் குடியானவன் முயற்சியே காரணமாகும். "எல்லாம் கடவுள் செயல்" என்று சும்மாவிராமல் தங்களாலான முயற்சிகளைச் செய்துவிட்டு, "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்று பலனை எதிர்பார்ப்பது உத்தமம். வியவசாயத்தில் பேர்போன அமெரிக்கா ஜப்பான் இங்கிலாந்து முதலிய தேசங்களில் நீராவிக்கலப்பை மோட்டார்கலப்பைகளைப்பூட்டி ஏராளமாக உரம்செய்து பயிர்செய்வதால், சாகுபடிச்செலவு கம்மியாய் உலகச்சந்தையில் தானியங்களை அத்தேசத்து கிருஷிகர் நம்மைப்பார்க்கிலும் விலை சரசமாக விற்க, நாம் புராதனமான சற்றும் சீர்திருத்தமடையாத நாட்டு மரக்கல்ப்பைகளை கன்றுக்குட்டிகள்போன்ற மாடுகளைக்கொண்டு தகுந்த உரமிடாத பூமியை உழுது சாகுபடிசெய்து நல்ல மகசூல் எடுக்க நினைப்பது சரியல்ல. அயல்தேசங்களில் கையாடும் இயந்திரங்களை இப்போதே நாம் இங்கே உபயோகப்படுத்த வேண்டுமென்று சொல்லவரவில்லை. நம்மிடத்திலிருக்கும் பலத்தை அதிகப்படுத்திக் கொஞ்சம் கொஞ்சமாக அயல்தேச நவீனமுறையைக்கைக்கொள்ள வேண்டுமென்னும் கோரிக்கைதான். ஏனெனில், துப்பாக்கியை கையாடத்தெரியாத ஒருவனுக்கு ஒரு துப்பாக்கிகொடுத்துச் சுடு என்றால், அவன் ஒருவேளை தன்னையே சுட்டுக்கொண்டாலும் கொள்வான். ஆகையினால் நாம் நூதனமுறைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக கைக்கொள்ளவேண்டும். இப்போது நாம் சிறு இரும்புக்கலப்பைகளை உபயோகப்படுத்தலாம். அதையும் காலத்தில் உழுவதற்கு உபயோகிக்கத் தயாராயிருக்கவேண்டும். கம்பேனிகளிலிருந்து உரம் தருவிப்பதற்குமுன், நம்மாட்டின் குப்பையை மழை வெயிலினின்று காப்பாற்றவேண்டும். மெலிந்த மாடுகள் அனேகம் வைத்திருப்பதிலும் நல்லமாடாக இரண்டொரு ஜோடி வைத்துக் கொள்வது உசிதமானது.

இரண்டாவது எதிரி:—படிப்பின்மை. இந்தப் படிப்பின்மையே தான் நம்தேசத்தில் நாகரிகம் சீக்கிரம் பரவாமலிருப்பதற்கும் வியவசாயம் ஐக்கியம் முதலியவைகள் விருத்தியடையாமலிருப்ப

தற்கும் முக்கியமான காரணம். சாதாரணமாய் ஒரு கிராமத்தில் அம்மைவைக்கும் உத்தியோகஸ்தர் வந்துவிட்டாரென்றால், வைசூரி என்ற பெரிய வியாதியினின்றும் தப்புவிக்க வந்திருக்கும் நண்ப ரென்று அவரை நினையாமல், நீவர்த்திக்கொள்ளைக்காரர்களைக் கண்டதுபோல் பயந்து குடிகள் ஓடி ஒளிகிறார்கள். ஒரு ஊரில் ஒரு ஐக்கியசங்கம் ஏற்படுத்தி ஜனங்களைச் சாவ்காரர்களின் வலையி னின்று தப்புவிக்கயத்தனித்தால், "அது ஒரு ஸர்க்கார்தொல்லை; நம்முடைய பணத்தைப் பறிப்பதற்கு இது ஒரு உபாயம்; நம் முடைய செட்டியாரோ நமக்கு வேண்டும்பொழுது எந்தச்செலவிற் கும் ஏராளமான தொகையைக்கொடுக்கிறார்; நம்மை மாதத்தவணை யில் கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கிறாரில்லை" என்று நினைக்கிறார் களே ஒழிய, குடிகளின் நன்மையை உத்தேசித்து ஸர்க்காரால் ஐக் கியச்சங்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றனவென்று அறிகிறாரில்லை. இது அறிவின்மையினாலன்றோ! மேலும், நல்ல கலப்பைகளும் மாடும் விதைகளும் இருந்து, முன்யோஜனையும் யுக்தியும் ஸாமர்த் தியமும் இல்லாமற்போனால் பிரயோஜனமில்லை. தனக்கு இதம் செய்கிறவர்யார்? கெடுதல் செய்பவர்யார்? என்று தெரிந்துகொண்டு சாதகம் செய்கிறவர் சொற்படி நடக்கவேண்டும். முடிமுடியாய் நட்டால், கோட்டைகோட்டையாய் விளையு"மென்று எண்ணாமல் "ஒற்றையலகு ஒப்பற்ற விளைவுகொடுக்கும்" என்று, தனிமுதல் நடவை சௌகரியமானவரையில் கையாடவேண்டும். தழை குழைக்கு அலைந்து திரியாமல், "கொளுஞ்சி நெல்காட்டு" மென்ற படி ஒரு பசுந்தாள் பயிரை பூமியிலேயே விளைவித்துக்கொள்ள வேண்டும். களர் நிலமானால் தக்கைப்பூண்டை வளர்த்துக்களரை முறிக்கப்பார்க்கலாம். இத்தகையான முறைகளைக் கையாடுவதற்கு முதலில் உங்களுக்குப்பணம் தேவையாயிருக்கும். அதற்கு இலகு வான வட்டிக்குப்பணம் கிடைப்பதற்கு, உங்கள் ஊரில் ஒரு ஐக்கிய நாணயச்சங்கம் ஏற்படுத்திக்கொண்டு, உங்கள் சிரமத்தின் பூராப் பலனை நீங்களே அடையலாம். இவ்வைக்கியமுறையைக் கொள்வினை விற்பனையில் அப்பியசித்தால், மத்தியக்கொள்ளைக்காரர்களாகிய சாவ் காரர் தகர் இவர்களினின்றும் தப்பலாம்.

மூன்றாவது விரோதி:—அகாலமழை மழைக்குறைவு காற்று முதலியன. இவைகளை நிவர்த்திப்பது மனிதர் யத்தனத்தால் முடியாதபோதிலும், ஆழமாக உழக்கூடிய கலப்பைகளால் உழுது மழைநீரை பூமியில் நிறுத்தியும் ஜலக்குறைவில் விளையக்கூடிய பயிர்களைச் சாகுபடி செய்தும் கிணறுகள் வெட்டி நீர்ப்பாய்ச்சியும், ஒருவாறு இவ்விரோதிகளின் கொடுமையை அடக்கி அனுகூலப்படுத்திக்கொள்ள வழிதேடலாம்.

நான்காவது விரோதி:—பயிர்களின் மத்தியில் காணும் களைப்பூண்டுகளும் பூச்சிகளும். இவைகள் எப்படி உண்டாகின்றன? இவைகளை எப்படித்தடுப்பது? என்று யோசிக்ககாமல், 'இது தெய்வக்குற்றமென்றும், நம்மாலாவதுஒன்றுமில்லையென்றும்' நினைத்து, கடவுளைப் பிரார்த்திக்கின்றனர். அவைகள் நிலத்தில் ஏராளமாய்க் காணப்பட்டாலும் முதலில் ஒரு களைப்பூண்டினின்றும் அல்லது ஒரு பூச்சியினின்றும் உற்பத்தியானவைதாம். "ஆகையால் கள்ளனையும் களையையும் கண்டவுடன் கட்டிவிடு" என்பதற்கு இணங்க, முதலிலேயே களைகளையும் பூச்சிகளையும் அடியோடு அழித்துவிட வேண்டும். உழவற உழாதவனும், தரிசுபோட்டவனும், பட்டந்தப்பிப்பயிர் செய்தவனும், களைகளுக்கும் பூச்சிகளுக்கும் நண்பராவார். செழிப்பாகச் சாகுபடியான ஒரு விஸ்திரணத்தின் மத்தியில் ஒரு சோம்பேறி தன் சிறு குண்டு நிலத்தைத் தரிசுபோட்டால் அந்தத்தரிசில் காணும் களைகளும் பூச்சிகளும் பல்கிப்பெருகி பக்கத்துப்பயிர்களில் விழுந்து, கெடுதியுண்டுபண்ணுமல்லவா? ஆகையினால் ஒரு சோம்பேறி தான் கெட்டதுமல்லாமல் பக்கத்து உழைப்புள்ள குடியானவனையும் நஷ்டத்துக்குள்ளாக்குகிறான். இப்போது கிராமாந்தரங்களில் பயங்கரமாய் வளர்ந்து, விஷஜந்துக்களுக்கு உறைவிடமாய் அநேக பூமியைக்கவர்ந்து கொண்டிருக்கிற சப்பாத்துக்கள்ளியைப் பார்ப்போம். அது முதல் முதலில் அவ்வூரில் எங்கேயோ ஒரு ஓரத்தில் சிறிய செடியாக ஆரம்பித்திருக்கும். அக்காலத்தில் அதைக் கவனியாததால், இப்போது இந்த அனர்த்தம் உண்டாயிருக்கிறது. ஆனால் ஜனங்கள் மட்டும் இதைத்தொலைக்கத்தீர்மானித்து விட்டால், இது இருந்த இடம் தெரியாமல்

போவது நிச்சயமே. இம்மாதிரி சில கிராமங்களில் செய்திருக்கிறார்கள். சில இடங்களில் அச்சப்பாத்தியை வெட்டி மண்ணில் மக்கவைத்து உரமாக்குகிறார்கள். ஆகையினால் "சப்பாத்தி அவன் நிலத்தில்தானே இருக்கிறது. புறம்போக்கில்தானே இருக்கிறது. நமக்கென்ன?" என்று இருக்கக்கூடாது.

ஒற்றுமையின்றித் தானென்னும் அகங்காரம் மேலிட்டு மிக அல்ப சங்கதிகளிலும்கூடத்தங்களுக்குள்ளே ஒரு தீர்மானத்திற்கு வராமல், மிகத்திமிரடைந்து கோர்ட்டில் வழக்காடித் தாங்கள் நிலத்தில் வியர்வைவிழ உழைத்துச் சம்பாதித்த சொத்துகளை இழந்து, யோக்கிதையுடன் கூடின மற்றக் கிராமத்தாரையும் சந்திக்கிழுத்து, ஊரைப்பாழ்படுத்துபவர் ஐந்தாவது விரோதியாவார். "முன்னே போனவன் கீழேவிழுந்தால் பின்னால் வருபவருக்குத் தீவர்த்தி பிடித்தால்போல்". இதுவரை வழக்காடிய அநேக ஜனங்களும் ஊராரும் இந்தக் கேவலஸ்திதிக்கு வந்ததைப் பார்த்தாவது "சேர்ந்துவாழ்வதே சிறந்த வலிமை" என்று நன்குணர்ந்து தங்கள் வழக்குகளைத் தங்கள் ஊரிலேயே ஒரு பஞ்சாயத்தார் முன்வைத்து அவர்கள் செய்யும் தீர்மானத்தின்படி நடக்க முயலவேண்டும்.

ஒரு தேசத்தாருக்கும் மற்றத் தேசத்தாருக்கும் உண்டாகும் சண்டை எப்போதாவது நேரிடக்கூடியது; ஆனால் கிருஷிகர்கள் மேலே சொன்ன ஐந்து விரோதிகளுடன் சதா சண்டைசெய்ய வேண்டியிருக்கிறதாகையால், இந்தப் பயிரிடுதலை ஒரு மஹாயுத்தம் என்று ஏன் சொல்லக்கூடாது?

கே. ஆர். சங்கர அய்யர்,
விவசாய இன்ஸ்பெக்டர்.

மதிப்புரை.

பூர்ண சந்திரோதயம்:—இதன் பங்குனி—மீ சஞ்சிகை வரப்பெற்றோம். இதனுள் மதம், சாஸ்திரம், சித்திரவித்தை, நாகரிகம் என்னும் இவ்விஷயங்களைப்பற்றிப் பலவியாஸங்கள் அருமையாக எழுதப்பெற்றிருக்கின்றன. அவற்றுளும் மீராபாய், பெண்கல்வி என்னும் விஷயங்கள் பெண்கட்கு அறிவையும் உற்சாகத்தையும் கொடுக்கக்கூடியனவாக எழுதப்பெற்றிருக்கின்றன.

ஜனோபகாரி:—இதனது பங்குனி சஞ்சிகை கிடைத்தது. இதனுள் தொழிலைப்பற்றிய வியாஸங்கள் அருமையாக எழுதப்பெறுகின்றன. இம்முறை எழுதப்பெற்றிருக்கும் "இந்தியாவில் குங்கிலியத்தொழில்" என்னும் வியாசம், மிகஅருமையாக எழுதப்பெற்றிருக்கிறது. இன்னும அரிய வியாசங்களும் எழுதப்பெற்றிருக்கின்றன.

1916 வருஷம் இந்தியன் நேஷனல் காங்கிரஸ் அக்ராஸனாதிபதியவர்கள் உபந்யாஸம் என்னும் ஒரு தமிழ்ப்புத்தகம் வரப்பெற்றோம். இதனை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்தவர்கள், மதுரை வக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ R. S நாராயணசாமி ஐயர் அவர்கள் B. A., B. L. இவர்கள் நம்தமிழ்நாட்டுக்கு உதவுவதற்கென்றே உருவெடுத்த உபகாரி. இவர்கள் இதனைப்போல இன்னும் அரிய உபகாரங்கள் தமிழர்க்குச்செய்யக்காத்திருக்கிறார்கள் என்பதுதெரிகிறது. இந்தச்சிறு புத்தகத்தை மதுரை டிஸ்டிரிக்ட் காங்கிரஸ்கமிட்டியார் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இதன் விலை அணா 0-2-0. வேண்டுவோர் மேற்கண்டிருக்கும் கமிட்டிசெக்ரிடரிக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

விவேகோதயம்:—இதனது மாசி மாதத்து சஞ்சிகை வரப்பெற்றோம். இதனுள் பல அரிய விஷயங்கள் தக்கவர்களால் எழுதப்பட்டிருக்கின்றன.

ஆரியதர்மம்:—இது கும்பகோணம் காமகோடி பீடாதிபதியவர்களது அனுக்கிரகத்தின் பேரில் வெளியாகிவருகிறது. புத்தகம் தக்க உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சேறியிருப்பதற்கிணங்க, விஷயங்களும் தக்கனவாகி ஆர்யதர்மத்தை உயர்த்தும் தன்மையவாகி இருக்கின்றன. பிரணவோபாஸ்தி எனும் வியாஸம் அருமையாக எழுதப்பெற்றிருக்கிறது.

வைத்தியகலாநிதி:—இதனது நான்காவது தொகுதி ஐந்தாவது பகுதி வரப்பெற்றோம். பலநுட்பமான வைத்திய விஷயங்களும் அனுபவமுறைகளும் பதார்த்த குணவிமர்சங்களும் எழுதப்பெற்றிருக்கின்றன.

சைவப்பிரகாசம்;— இதன் தொகுதி 1 பகுதி 7 கிடைத்தது. சைவசம யத்தைச்செவ்வனே தெரிவிக்கும் அரிய பத்திரிகை. இந்த ஸஞ்சிகையில் எல்லா விஷயங்களும் நன்கு எழுதப்பெற்றிருக்கின்றன. அவற்றுள் தமிழ்மொழி தமிழ்ப்பயிற்சி, கற்பு, ஏசம்பவானை ன் இவை தமிழர்க்கேற்ற விருந்தேயாகும்.

சாந்திவசனம்:—இச்சஞ்சிகை தொகுதி 1 பகுதிகள் 3, 4, 5. 6 வரப்பெற் றோம். இது மாதம் ஒரு புத்தகமாக வருகிறது. இத்தொடரில், பிரமஞான சங்கத்தாரால் வெளியிடப்பட்டுவரும் Adyar Pamphlets, Adyar Popular Lectures முதலிய சிறு இங்கிலீஷ்புஸ்தகங்களை, இங்கிலீஷ் பயிற்சியில்லாத தமிழ் மெம்பர்களும் மற்ற அபிமானிகளும் படித்துத்தெரிந்து கொள்ளும் பொருட்டுத் தமிழில் மொழிபெயர்த்து மாதமொரு புத்தகமாக வெளியிட உத் தேசித்திருக்கிறதாகவும், இதன் வரும்படியைக்கொண்டு ஒரு தரும பாடசாலை நடத்திவருவதாகவும், இது ஜூலை மாதத்தையே முதல் மாதமாகக்கொண்டி ருக்கிறது என்றும், முன்பணம்செலுத்தும் சந்தாதார்களுக்கு தபால்சார்ஜ் உள்பட ரூ 1–8–0 என்றும் இதனைப் பிரசுரித்தவர்கள் குறிக்கிறார்கள். தேவையுள்ளவர்கள் தஞ்சாவூர் ஜில்லா பேரளம் போஸ்டு திருமியச்சூர் சாந்தி ஆச்ரமம் காரியதரிசிக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

குடிதங்கள்.

சபை நிகழ்ச்சிக் குறிப்புகள்.

புதுவயல் ஞானப்பிரகாச சபை.

ஸ்ரீபரமேசுவரனது திருவருளால், இந்த ஸபையின் 2வது வருஷ 9வது மாதாந்தக்கூட்டம் நளவருஷ மாசிமீ 30உ(13–3–17) மங்களவாரம் மாலை 2½ மணிக்கு, சொக்கலிங்கம்புதூர் மாணிக்கவாசக வித்யாசாலைத் தலைமையாசிரி யர் பிரமஸ்ரீ செ.இராமமூர்த்தி ஐயரவர்கள் அக்கிராசனத்தின்கீழ்க் கூடிற்று. முதலில் பிரமஸ்ரீ தலைவரவர்கள் முகவுரை மொழிந்தவுடன், (1) தமிழ்ப் பாஷையின் பெருமை (2) பொதுஜனநன்மை (3) ஸ்ரீராம பாதுகாபட்டாபி ஷேகம் (4) சதுர்வித புருஷார்த்தங்கள் என்றும் இவ்விஷயங்கள் முறையே (1) ஞா. க. மாணவன், வெ. சுப்பிரமணியன் (2) காட்டுப்புத்தூர், பிரமஸ்ரீ. கிருஷ்ணசாஸ்திரிகளவர்கள். (3) காரைக்குடி வித்துவான் பிரமஸ்ரீ. M. V. கோவிந்தராஜ ஐயங்கார் அவர்கள் (4) கண்டனூர் பிரமஸ்ரீ (லால்குடி) சுப்ர மணிய சாஸ்திரிகள் அவர்கள் என்றும் இவ்வறிவாளர்களால் தெளிவாக உபந் நியசிக்கப் பெற்றன. பிரதி உபந்யாச முடிவிலும் பிரமஸ்ரீ தலைவரவர்கள்

நம்பத்து அரிய அபிப்பிராயங்களை விளக்கமாகக்கூறினார்கள். இடையிடையே ஸ்ரீ. க. மாணவன் C. D. சுப்பிரமணியம் என்பவன் தேனினும் இனிய தேவாரதிருப்பாக்களைப் பண்ணமைதியுடன் ஓதினான். யாவருக்கும் ஸ்ரீ. க. தமிழாசிரியர் வந்தனோபசாரங் கூறியவுடன் ஷெ ஆங்கில ஆசிரியர் பிரம்மஸ்ரீ மீனாட்சி சுந்தரம் ஐயரவர்கள் ராஜவாழ்த்துக்கூறினதும், ஹார சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்று மங்கள கரகோஷத்துடன் ஸபை நன்கு நிறைவேறியது. சுபம்.

சேவிக்குணவு கோள்வோன்.

கோநகர்.

ஞானசம்பந்த நற்சபை.

இதன் மாதாந்தக்கூட்டம் நளவருஷ பங்குனிமீ ௰௨ (26-3-17) திங்கட்கிழமை பிற்பகல் 4½ மணிக்கு கூடிற்று. மதுரைத் தமிழ்ச்சங்கம் வித்துவான் ஸ்ரீ. உ.ப. வே. திரு-நாராயணையங்கார் ஸ்வாமிகளும், காரைக்குடி, கம்பராமாயணப்பிரசாரகர் ஸ்ரீ M. V. கோவிந்தராஜய்யங்காரவர்களும், சொக்கலிங்கம் புதூர், மா. வா. வித்தியாசாலைத் தலைமைத் தமிழாசிரியர் ஸ்ரீ வே. இராமமூர்த்தியையரவர்களும், பல்வான்குடி சி. வி. வித்தியாசாலைத்தலைமைத்தமிழாசிரியர் ஸ்ரீ குமாரவீரையரவர்களும் விஜயஞ்செய்திருந்தார்கள்.

காரைக்குடி, கம்பராமாயணப்பிரசாரகர் ஸ்ரீ M. V. கோவிந்தராஜய்யங்காரவர்கள் "வால்மீகியும் கம்பரும்" என்றெடுத்துக்கொண்டு இருவர் கவிகளுக்குமுள்ள ஒற்றுமையை விளக்கிக்காட்டி அழகாகப்பேசினார்கள்.

சபையோர்யாவருக்கும் வந்தனோபசாரஞ்செய்யப்பெற்று இரவு 8மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

சம்பந்தன்.

இராயவரம்

சாரதாவிலாச சபை.

பரமகருணாநிதியாகிய சிவபெருமான் திருவருளானே இனிது நடைபெற்று வருகிறதான இக்கழகத்தின், இரண்டாம் வருடத்து ஆறும் மாதக்கூட்டம் இம்மதியின் ௰௯ (29-3-17) குருவாசரத்தன்று பிற்பகல் 3½மணிக்குக் கூடக் கடவுள்வாழ்த்தோதப்பட்டு சபையார் வேண்டுகோட்படி மதுரைத் தமிழ்ச்சங்கத்தங்கத்தினரும், வித்தியாபாதப் பத்திராதிபரும், கம்பராமாயணப்

பிரசாரகருமாகிய வித்துவான் பிர்மஸ்ரீ M. V. கோவிந்தராஜய்யங்காரவர்கள் அக்கிராசனத்தமர்ந்து முகவுரை கூறிய பின்னர், வித்தியாசாலை மாணவர் ஸ்ரீசேஷையர் வித்தை என்பதையும், சமஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ S. மீனாட்சிசுந்தர தீக்ஷிதரவர்கள் ஸ்ரீ கிருஷ்ணலீலா என்ற விஷயத்தையும், தலைவரவர்கள் கம்பர் கவித்திறம் என்ற விஷயத்தைப்பற்றியும், ஒவ்வொருவரும் நீண்டநேரம் தத்தம் நாலாராய்ச்சியைக்கொண்டு மிக்க திட்பநுட்பமாய் யாவருமுவக்குமாறு கூறிமுடித்தார்கள்.

பின்னைத் தலைவரவர்கள் கூறிப்போந்த விஷயத்தை வியந்து மதுரைத் தமிழ்ச்சங்கத்தங்கத்தவரும் இங்கேர் வாசருமான ஸ்ரீ பாலகவி. K. நல்லையா ஆசாரியவர்கள் வெண்பாவொன்று' கூறித்தேவா ரா தி யருட்பாக்களின் னிசையோடோதப்பெற்று வந்தஜேபசாரத்துடன் ஹாரசந்தனுதிகள் வழங்கி 8½ மணிக்கு சர்வமங்களகரகோஷத்துடனிறைவெய்தியது.

வெண்பா.

கம்பநாட் டாழ்வார் கவித்திறமை நன்குறைத்தா
னும்பநாட் டாரமுத மொக்கவே—யம்புவியிற்
கோவிந்தன் சேரடியைக் கோதிலா தேத்திடுநற்
கோவிந்த ராஜனினுக் கொண்டு.

சுபம்! சுபம்!! சுபம்!!

நன்மை விரும்பி.

சென்னை
வர்ணாசிரமதர்ம ஸம்ரக்ஷணஸபையின்
இரண்டாவது வருஷத்திய மகாசங்கம்.
(தேதியூர்)

இது, நளஞு பங்குனிமீ உயசவ (6-4-17) வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாட்களில், தஞ்சாவூர் ஜில்லா நன்னிலந்தாலூகா தேதியூர் என்னுங் கிராமத்தில், அவ்வூர் மகாஜனங்களின் முயற்சியால் நடைபெற்றது. இம்மகா சபை அச்சிறியவூரில் நடைபெறக்காரணம், சென்ற ஒரு வருஷகாலமாக அவ்வூரில் "ஸ்ரீ மீனாக்ஷிசுந்தர வித்தியாமந்திரம்' என்னும் பெயருடன் நடைபெற்று வருகிற வேத சாஸ்திர பாடசாலையின் ஸ்தாபகர் ஸ்ரீமத் வித்துவான் சுப்பிரமணிய தீக்ஷிதரவர்களின் முயற்சியேயாம்.

ஸபைக்கு விஜயம்செய்தோர்:—இச்சபையின் கௌரவ காரியதரிசியாகிய சென்னை ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமத் T. R இராமச்சந்திர ஐயரவர்

கள், இவர்களுக்குத்தம்பியும் முன்னே ஸாக்ஷாத் இராமச்சந்திர மூர்த்திக்குப் பிரியாத்துணைவனாகி விளங்கிய இலட்சுமண மூர்த்தியே இப்பொழுது வருணாசிரம தருமஸம்ரக்ஷணார்த்தம் சாந்தரூபத்துடன் வந்ததுபோல் விளங்குபவரும் ஆகிய ஸ்ரீமத் T. R. கிருஷ்ணஸ்வாமிஐயரவர்கள், இச்சபையினிடத்து உள்ளன்பு பூண்ட தஞ்சாவூர் ஜில்லா ரிஜிஸ்தரார் ஸ்ரீமத் T. கிருஷ்ணசாமி ஐயரவர்கள், தஞ்சைப்பழைய முனிஸிபல் சேர்மன் ஸ்ரீமத் இராமச்சந்திராயரவர்கள், தஞ்சை ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமத் கோதண்டராம ஐயங்காரவர்கள் முதலிய சன்தனவான்களும், கல்கத்தாக் காலேஜ் பிரதம ஸம்ஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய இலட்சுமண சாஸ்திரிகள், மன்னார்குடி பிரம்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள், சென்னைப் பச்சையப்பன் காலேஜ் ஸம்ஸ்கிருதபண்டிதர் பிரம்மஸ்ரீ சுவேதாரண்யம் நாராயண சாஸ்திரிகள், கொடவாசல் பிரம்மஸ்ரீ நரஸிம்மாச்சாரியார், திருநெல்வேலி பிரம்மஸ்ரீ இராஜவல்லபசாஸ்திரிகள் முதலிய வித்துவான்களும், கோனேரிராஜபுரம் விஷ்ணுபுரம், முடிகொண்டான் முதலிய பக்கத்துக்கிராமவாசிகளுமாகச் சுமார் எழுநூறுபேர் கூடினார்கள்.

சபைநிகழ்ந்த இடமுதலியன:—அக்கிரகாரத்தின் மத்தியிலுள்ள ஷை வேதசாஸ்திரபாடசாலையின் வாசலில் விஸ்தாரமான பந்தல் அலங்காரத்துடன் அமைக்கப்பெற்றிருந்தது. பூந்தோட்டம் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து வரும்மார்க்கமும், உள்ளூர் வீதிகளும் மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பெற்று விளங்கின. அயலூர்களிலிருந்து வந்தவர்களை எல்லாம் உள்ளூர் பிராமணர்கள் பழையகாலத்து முறைப்படி ஆதரவுடன் உபசரித்தார்கள். முதல்நாள் வெள்ளிக்கிழமை பகல் 2மணிக்கு உள்ளூர் மகாஜனங்கள், பூரணகும்பம் வேதகோஷம் வாத்தியகோஷங்களுடன் ஸபையாரை வரவேற்றார்கள். அன்புடன் கேட்கவந்து கூடின ஜனங்களால் பந்தல் நிறைந்திருந்தது.

சபைநிகழ்ச்சி விவரம்:—யாவரும் கோரிய வண்ணம் பிரம்மஸ்ரீ T. R. இராமச்சந்திர ஐயரவர்கள் அக்கிராசனம் வகிக்க, வைதிக சாந்திபடனம் செய்யப்பெற்றது. கிராமத்தாராலும், வித்தியாசாலைக் கமிட்டியாராலும் முறையே உபசரணைப்பத்திரங்கள் படித்துக்கொடுக்கப்பெற்றன. அக்கிராசனாதிபதியவர்கள், அவற்றிற்குத்தக்க பதிலளித்ததுமன்றி அழகியதொரு முன்னுரையுங்கூறினார்கள். அவற்றின் பின், முதல் நாள் ஐந்து பிரசங்கங்களும், இரண்டாநாள் இரண்டு வேளையுமாக ஆறுபிரசங்கங்களும், மூன்றாநாள் இரண்டுவேளையுமாகப் பத்துப்பிரசங்கங்களும், ஆக 21 அழகாக நடைபெற்றன. உபந்யாசங்கள் பெரும்பாலும் தமிழிலும், சிலமாத்திரம் (மூன்று) ஸம்ஸ்கிருதத்திலும் நிகழ்ந்தன. அவற்றுள் மூன்று நான்கு மிகவும் சிலாக்கியமானவை.

இவற்றின் ரஸங்களை நேரேயிருந்து சாதாரப் பருகினவர்களே யறிவர். ஜனங்கள் யாவரும் "சித்திரப்பாவையின் அத்தகவடங்கிச் செவிவாயாக நெஞ்சகனாகக் கேட்டவை கேட்டவை விடாதுளத்தமைத்து"க்கொண்டிருந்தார்கள். சில பிரேரேபணைகளும் செய்யப்பெற்றன. அவற்றுள் முக்கியமானவை (1) உபஸபைகளும் பாடசாலைகளும் அங்கங்கே ஏற்படவேண்டும். (2) இந்த ஸ்கூல்களில் மேது மதப்பிரசாரகர்களை யேற்படுத்தி மதபோதனை செய்விக்கவேண்டும். (3) பிராமணர்கள் யாவரும் இச்சபையின் மூலதனத்திற்காகக் குடும்பத்திற்கு ஒரு ரூபா முதல் இயன்ற அளவும் நன்கொடையளிக்கவேண்டும் என்பவைகளாம்.

இரண்டாநாள் இராத்திரியில் ஒரு புல்லாங்குழற் கச்சேரியும், மூன்றாநாள் இராத்திரியில் ஒரு மேளக்கச்சேரியும் நடைபெற்றன. இவ்வாத்தியக்காரர்கள் யாதொரு பிரதிப்பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் தாங்களாகவே வந்து வாசித்துச்சபையோரை மகிழ்வித்தார்கள். இம்மூன்று நாளும் தேதியூர் முழுதும் கலியாணமாக விளங்கிற்று. ஸமஸ்த உபசாரங்களுடனும் ஸபை மங்களகரமாக நிறைவேறிற்று.

கண்டுகளித்தோன்.

பலவான்குடி.

மணிவாசக சங்கம்.

(7—4—17)

திருவருட்பேற்றால் இன்று நம் மணிவாசக சங்கத்தின் மாதக்கூட்டங் கூடிற்று. காரைக்குடி கம்பராமாயணப் பிரசாரகரும், வித்தியாபாநு பத்திராதிபருமாகிய ஸ்ரீ M. V. கோவிந்தராஜய்யங்காரவர்கள் அக்கிராசனம் வகித்து அழகிய முகவுரைகூற, இந்துமதப் பிரசாரகர் ஸ்ரீ S. விசுவநாத சாஸ்திரிகள், கோநகர் க. வி. கலாசாலை உபாத்தியாயர் ஸ்ரீ ஆழ்வாரையங்கார், சி. வி மாணவி ஸி. ஜீவரத்தினம், ஷை மாணவன் சித. பெரியகருப்பன், ஷை மாணவி பழ சின்னம்மாள், க. வி. கலாசாலை மாணவன் மு. சாமிநாதன் இவர்களால் விக்கிரகாராதனம், நட்பிற்பிழைபொறுத்தல், பொன்னனையாள் சரித்திரம், மெய்ப்பொருணாயனார் சரித்திரம், கொலைமறுத்தல், தமயந்தி சுயம்வரம் என்னும் அரிய விஷயங்கள் அழகாக உபந்யசிக்கப்பெற்றன. முடிவில் தலைவரவர்கள் சிறந்த பிரமாணங்களுடன் அபிப்பிராயங்கூற வந்த ஜனோபசாரத்துடன் ஆசந்தநாதிகள் வழங்க, சங்கம் இனிது நடைபெற்றது.

சண்முகநாதன்.

பொதுவர்த்தமானம்.

யுத்த ஆருடம்:—பிங்கள வருடத்துப் பிரவேசத்தின் ஜகத்லக்கினம் நமது ராஜாங்கத்தார்க்கு வெற்றியை யுண்டாக்குவதா யிருக்கின்றதென்றும், இங்கிலாந்திற்கு 29-5-17ல் ஒன்பதாமிடத்தில் குரு வருகின்றபடியால், அப்போது நமது ராஜாங்கத்தார் வெற்றியுடன் யுத்தத்தை முடிப்பார்களென்றும் ஒரு ஜோசியர் விளம்பரஞ்செய்திருக்கின்றார்.

கல்மழை:—இம்மாதம் 13ந்தேதியாகிய பிங்கள வருடம் சித்திரை மாசப் பிரவேச தினத்தன்று பகல் 5-20 மணிக்குத் திருப்பத்தூரில் திடீரென்று கல்மழைபெய்தது. ஓயாது 20 நிமிஷம் வரையில் பெய்தது; அதனால் செட்டிகுளத்திலிருந்து ஜலங்கொண்டு வந்த சில ஸ்திரீகள் பலமாகக் காயமடைந்தனர். அநேக முனிசிபல் லாந்தர்களின் கண்ணாடிகளும் சிம்னிகளும் உடைந்துபோயின. சிலவிடங்களில் பூனைத்தலை யளவுள்ள கற்கள் விழுந்தன. வீதிகளெல்லாம் சலவைக்கற்கள் பரப்பியதுபோலிருந்தன. வீடுகளில் பிள்ளைகள் கற்களைக்கூடைகளில் சேர்த்துவைத்திருந்தார்கள்; அவை 4மணி நேரம் கரையாமலேயிருந்தன.

வைத்தியக் குறிப்புகள்.

மந்தாரை.

இது வெள்ளை மந்தாரை, காட்டு மந்தாரை என இரண்டு வகைப்படும்.

வெள்ளை மந்தாரை:—(1) இதன்வேரைக் கஷாயமிட்டுக்காய்ச்சி யெடுத்து அக்கஷாயத்துடன் சிறிது நல்லெண்ணெயைச் சேர்த்துக்கூட்டி சிறிய சிழ்க்கட்டிகளின்மேல் பூசிவருவதால் நல்ல குணமுண்டாகும். (2) இதன் புஷ்பத்தையும் சிறிது மிளகையும்வைத்து ஆட்டியெடுத்து சிரோவேதனையில் நெற்றிக்கட்டில் பற்றப்போடலாம். (3) இம்மந்தாரைப்பட்டையின் சாற்றை சர்மவியாதிகளிலும் கண்டமாலை முதலிய கழலைக்கிரந்தி வியாதிகளிலும் உட்கொள்ளக்கொடுக்க நல்ல பலன் உண்டாகும்.

காட்டுமந்தாரை:—(1) சீதபேதியைத்தடுப்பதற்கு அல்லது ஸ்வஸ்தம் செய்வதற்கு இச்செடிசிறந்தவஸ்து. (2) கிருமிஹரமானகுணம் இதற்கு விசேஷமாய் உண்டு. (3) கல்லீரலைப்பற்றிய வியாதிகளில் இச்சரக்கு உபயோககரமாயிருக்கும். (4) இதன் வித்துக்களைக் காடிவிட்டு ஆட்டி, விஷகுணமுள்ள ஜந்துக்கள் கடித்துப் புண்ணாகிய விடங்களில் தடவுவதால் குணமுண்டாகும்.

வைத்தியகலாநிதி.

உள்ளூர் வர்த்தமானம்.

காலநிலை:—சென்னதிரோன் வெம்மை மிகவும் அதிகம். குளங்குட்டை ஊருணியாவும் வறண்டுபோயின. அங்கங்கே இரண்டொரு கிணறுகளில் மாத்திரம் கொஞ்சங்கொஞ்சம் நீருண்டு. குடிதண்ணீருக்கு உபயோகப்படும்படி இவ்வூருக்கு மேற்கே இரண்டுமைல் தூரத்திலுள்ள பொன்னூருணியிலிருந்து நாள்தோறும் வண்டி 11 (வண்டி ஒன்றுக்கு நாலுநடைவீதம்) ஜலம் கொணர்ந்து ஊர் முழுதும் குடங்குடமாக ஊற்றிக்கொடுக்கும்படி, புண்ணியவான்களாகிய இரண்டு ஸ்ரீமான்கள் திட்டம்செய்திருக்கிறார்கள். அவர்கள்-சு. ப. கு. சொக்கலிங்கம் செட்டியாரவர்களும், சு. முரு. ஷண்முகம் செட்டியாரவர்களும் ஆவர். இவர்களுள் சு. ப. கு. சொ. அவர்கள் தருமம் நகரத்தார் முதலியோர்களுக்காக எட்டுவண்டியும்; சு. முரு. ஷ. அவர்கள் தருமம் பிராமணர்களுக்கும் சைவர்களுக்குமாக மூன்று வண்டியுமாம். இதனால் ஜனங்கள் இவ்விருவரையும் வாயார வாழ்த்துகிறார்கள். வருண பகவான் சீக்கிரம் கிருபை செய்யாவிட்டால் ஜனங்கள்குடியோடவேண்டி வரும். நகரத்தார் கூடிக் கோயிலில் வருணஜபம் வைக்கவுந்தேசித்திருப்பதாக வதந்தி. நடைபெற்றால் நலமே.

ஞானசம்பந்தநற்சபை:—இதன் ஐந்தாம்வருடப்பூர்த்திக்கொண்டாட்டம் வைகாசிமீ ௫, ௬ (மேமீ 18, 19) தேதிகளில் நடைபெறும். இவ்விரு தினங்களிலும் கூடும்சபையில், திருச்சி ஸப்ஜட்ஜ் A. S. பாலசுப்பிரமணிய ஐயரவர்கள் அக்கிராசனம் வகிக்க, அறிஞர்கள் பலரும் பிரசங்கம் புரிவார்கள்.

கற்பகவிநாயக கலாசாலை:—இதற்கு மூலதனம் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்ந்துவருகிறதோடு மாட்சிமைபொருந்திய புதுக்கோட்டையரசாங்கத்தாரும் இவ்வருஷத்திலிருந்து வருஷமொன்றுக்கு முந்நூறு ரூபாவீதம் இக்கலாசாலைக்கு நன்கொடையளித்து வரும்படி ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். இது மிகவும் பாராட்டற்பாலதாம்.

அறிவிப்பு.

நம் ஆபீஸ் காலண்டரில் ஒரு காலண்டர் தனியே ஆர்டர் கொடுத்தவர்களுக்கு (ஒரு காலண்டராகப் போஸ்டில் பத்திரமாகச் சேரமாட்டாதாகையால்) இதுவரை அனுப்பக்கூடவில்லை. இனிச்சீக்கிரம் அனுப்புவதற்காக வேறு ஸ்பெஷல் அட்டை (Board) தயாராகிவிட்டது. சீக்கிரம் அனுப்பப்பெறும்.

மானேஜர்
தனவைசியன் ஆபீஸ்.

உ

கணபதி துணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."—திருக்குறள்.

தொகுதி.	பிங்கள-ஸு சித்திரை-மீ	பகுதி.
9	1917 May	4

இந்தியக் கல்விமுறை.

நமது பாநுவின் சென்ற ஸஞ்சிகையில் "கல்வியும் தர்மமும்" என்று எடுத்துக் கொண்டு, 'கல்வியே தர்மத்தை யுயர்த்துகின்றது; மாணவர்கள் ஆத்ம தர்மத்தை யுணர்ந்தால் அல்லாமல் தேச தர்மத்தில் நடைகொள அறியார்கள்; அவர்கட்கு அத்தர்மத்தை யூட்டுவது நல்லாசிரியரது தொழிலாகும்; நல்லாசிரியர் ஆவார் சீலம் குணம் ஆசாரம் கருணை என்னும் இவ்வியல்பினை யுடையார்; அந்நல்லாசிரியரைக் கல்விச்சங்கத்தார் மனுமுறைப்படி கௌரவிக்க வேண்டும்; அதற்குத்தக கல்விச் சங்கங்களும் அத்தேசத்தவராலேயே நடத்தப் பெறல் வேண்டும்' என்னும் இவ்விஷயங்கள் ஆளப் பெற்றன.

எனவே, நமது தேசதர்மம் வளரவேண்டின் நமது மாணவர்கள் நமது தேசத்தலைவர்களால் நடத்தப் பெறும் கல்விச்சாலைகளிற் சேர்ந்து நமது தேசாபிமானிகளாகிய தர்மாசரணையில் நிற்கும் கற்ற புலவர்களாலே பயிற்றுவிக்கப் படவேண்டும் என்பது பெற்

ரும். எனினும், அவ்விதமான கல்விச்சாலைகளில் கற்பிக்கும் முறை எவ்வண்ணம் இருக்க வேண்டியது? என்னும் விஷயம் இந்த ஆராயற்பாலது. நமது தேசம் இந்திய தேசமாதலால், இந்திய தர்மம் உயர்ந்தேறவேண்டின் இந்திய மாணவர்கள் இந்தியமுறையிலேயே கற்பிக்கப்படல் வேண்டும் என்பது மிகையாகாது. இந்தியக்கல்வி முறையாவது யாதெனின்:-இந்திய தர்மத்தைத் தெற்றெனப் புலப்படுத்தும் இந்திய வழக்க வொழுக்கங்கள் இந்திய சாஸ்திரங்கள் இந்திய சரித்திரங்கள் முதலான இந்தியாது பூர்விக மேதாவிகளுடைய சம்பந்தம் பெற்ற நூல்களின் முறைகளானே பயிற்றுவதாகும். மனுமுறையினைப் பழகிவந்த வரையில் இந்தியா ஏற்றத்தையடைந்திருந்தது என்று பன்முறை சொன்னபோதிலும் குற்றமாகாது; அம்முறை இந்திய முறையாகலின். நேயர்களே! நமது பூர்விக சாஸ்திரங்களையும் ஒழுக்கங்களையும் வழக்கங்களையும் எக்காரணம் பற்றியேனும் இகழாமல் இருக்கும்படி மிகுந்த வணக்கததுடன் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறோம். எத்தேசத்திலும உத்தமர்கள் தங்களது பூர்விகரை இகழார்கள் என்பது திண்ணம் அவர்கள் (பூர்விக மேதாவிகள்) ஏற்படுத்தி வைத்திருக்கும் நூல்களையும் அவற்றில் நிறைந்துள்ள தர்மங்களையும் அவற்றின்வழி அவர்கள் நடந்துகாட்டியுள்ள ஒழுக்கங்களையும் நாம் ஸத்வசிந்தையுடன கவனித்தோமாயின், அவை உலகமழியும் வரை நடத்தப்பெற வேண்டிய தர்மங்களாகத் தோன்றுமேயன்றி வேறாகாது என்பது நமது அறிவுக்குப் புலப்படாமல் போகாது.

நூதனமுறையாகிய ஆங்கில முறைக்கும் புராதன முறையாகிய மனுமுறைக்கும் வித்யாஸம் சொல்லப் புகுந்தோமாயின், புராதன முறையில் தேகாப்பியாஸத்துக்கு வேண்டிய பயிற்சிகள் காட்டப் பெறுமையே முன்னிற்குமென்று எண்ண இடமுண்டு. தேகாப்பியாஸத்தால் வரும் பயனென்னவென்று ஆலோசித்தால், சுத்தமான காற்றைப் பரிசிப்பதும் உருசிப்பதும் உட்கொள்ளுவதும் அவற்றால் தேகத்தில் நோயுண்டாகாமல் இருப்பதுமே எனப்பெறுவோம். இவற்றை நித்யகர்மமாகிய ஸந்தியாவந்தனத்திலேயே பெறு

கிறோம். என்னை; பிராணாயாமப் பயிற்சியைவிட வேறொன்றும் தேக சக்தியைத்தரும் என்று எண்ணுவதற்கு இடமுண்டோ? இன்னும் இந்தப்பிராணாயாமப் பயிற்சியானது ஆத்மசக்தியையும் தருகிறது. நூதனமான தேஹாப்பியாஸ முறை ஆத்மசக்தியைத் தருவதற்கு இயலாது. பிராணாயாமப்பயிற்சியால் பிரஸித்திபெற்று, ஸர்வதேசங்களிலும் கண்டங்களிலும் சென்று, வெற்றியும் விருதும் பெற்ற கலியுகபீமனென்று அழைக்கப் பெறும் நமது ப்ரொபஸர் இராமமூர்த்தியே இதற்குத்தக்க ஸாட்சியாவாரன்றோ? கல்விச்சாலைகளில் பிராணாயாமப் பயிற்சியைக் கிரமமாகவும் கவனமாகவும் ஒரு நல்லாசிரியர் பழக்கி வந்தாராயின், பல்லாயிரம் இராமமூர்த்திகளை யுண்டு பண்ணலாமன்றோ? அவர்களை நமது தேசத்தைக் காவல் பூணும் உத்தம க்ஷத்திரியராவார் என்பதில் ஐயமும் உண்டோ?

நமது மனு இம்முறையைப் பற்றியன்றோ க்ஷத்திரியவர்ணத்தாருக்கு நிறைந்த க்ஷத்திரிய அம்சத்தையும் மற்ற மூன்றுவருணத்தாருக்கும் சொல்ப க்ஷத்திரியாம்சத்தையும் வகுத்திருக்கிறார். இந்நால்வருமே தேசக் காவலில் சிறப்புடையவர்களாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிக்கின்றார்.

நமது மதக்கொள்கைகளில் நமது மாணவர்களைப்பயிற்றுவதும் ஒரு முறையேயாகும். தற்காலத்திலோ ஆங்கிலமுறையில் மதக்கொள்கைக்கும் கல்விக்கும், மதக்கொள்கைக்கும் சாஸ்திரங்கட்கும் ஸம்பந்தம் இருப்பதாகவே காட்டப் பெறக்காணோம். மநுமுறையோ மதக்கொள்கையும் சாஸ்திரங்களும் வேறுபட்டனவாகக் காட்டவில்லை. சாஸ்திரங்கள் இல்லாவிடின் மதமில்லை; மதமில்லாவிடின் சாஸ்திரங்கள் இல்லை. நமது சாஸ்திரங்கள் முறையே பயிற்றுவிக்கப் படுமாயின் மதக்கொள்கையின்றி பயிற்றுவிப்பது யாங்ஙனம் இயலும்? நேயர்களே! இந்து மதம் என்றது இந்து மதமாகிய பொது மதத்தையேயன்றி, இடையில் பொதுநோக்கில்லாது மாற்சரியத்தால் வேறுபடுத்திக்கொள்ளப்பட்டுப் பிரிவுபட்ட மதக்கொள்கையை யன்று. ஒரு பொது மதத்திலிருந்து மாற்சரி

யத்தால் பலகொள்கைகள் பிரிவாகத் தோன்றிய தன்மை நமக்கு மாத்திரமல்ல ஏனைய தேசத்தாருக்கும் மதத்தாருக்கும் உண்டு. ஏனெனில்:—எல்லாத் தேசத்திலும் நல்லவர் தீயவர், பொறுத்தவர் பொறாதவர் உண்டாகலின் என்க. ஆகலின், நமது மாணவர்க்கு நமது பொது மதக்கொள்கைகளைத் தெரிவிப்பதன் நிமித்தம் நமது சாஸ்திரப் பயிற்சியைக் கொடுத்தோமாயின், அதனுள் ஒருபாகமாகிய ஸந்தியா வந்தனப் பழக்கமுண்டாகிப் பிராணாயாமத்தில் தேர்ச்சி பெற்று நமது மாணவர் நோயின்றி உத்தம க்ஷத்திரியர்களாகித் தேஹசுத்தி ஆத்மசுத்தி பெற்றுத் தேசக்காவலில் சித்தர்களாக நின்று உழைப்பார்கள். அப்பொழுது வர்ணதர்மங்களும் கூட்டுறவில் கலந்து துவேஷ புத்தியில்லாமலே காக்கப் படும்.

இக்காலத்தில் பிராணாயாம முறையின்றியே, பலாத்காரமாகத் தேஹாப்பியாஸம் பயிற்றப் படுவதால், மாணவர்களிற் பலரன்றிச் சிலரே ஒருவாறு தேகபலத்துடன் வளர்ந்து வருகிறார்கள். அப் பலரோ தேஹம் பலத்தில்லவராயிருக்கும் போதே, கல்வியால் மனதுக்குஅதிக வேலையைக் கொடுப்பதன் நிமித்தம், இளைத்தவர்களாகித்தேஹத்தைஇழந்தோ அன்றி வியாதியுடனிருந்தோ, தாங்கள்விரும்பிக் கற்ற கல்வியைத்தமக்கேனும் பிறர்க்கேனும்தேசத்துக்கேனும் உலகுக்கேனும் கொடாதவர்களாகி ஒழிகிறார்கள் என்பது யாவரும் அறிந்ததேயாகும்.

மனுவின் முறைப்படி குருகுலவாசமும் ஒரு முறையாகும். குருகுலவாசமென்றால் மாணவர்க்குப் பாடசாலையே வீடாகுமென்பதே. அதாவது மாணவர்கள் தமது குருவின் வீட்டிலேயே வாழ்ந்திருந்து தமது கல்விபயிலும் காலமாகியபிரமசரிய நிலையை ஒழுங்கு பெறப்பழகி வருவதாகும். மனுமுறைப்படி ஒழுகிய பிராமணன் ஆத்மசுத்தி ஆஸ்திகபுத்தி ஸ்தூல ஒழுக்கம் இவற்றைநன்குணர்வான். அம்முறையில் பழகிய க்ஷத்திரியன் அம்மூன்றனொடுதேஹப் பயிற்சியின் மிகுதியால் தற்காவல் தருமக்காவல் இவற்றில் பழக்கம் பெறுவான். வைசியனோ அம்மூன்றனொடுதேஹபலமும் அறத்தின் வழிப் பொருளீட்டலும் தக்குழிச் செலவிடலுமாகிய வழக்கம் உறுவான். அங்ஙனமே குடித்தனப் பாங்கிலும் மற்றும்மேற்கண்ட தொழில்களிலும் நான்காம் வருணத்தாரும்நல்லமேம்பாடுறுவான்;

ஆனால் குருகுலவாசமென்று சொல்லும்போது கீழ்வரும் விஷயங்கள் அவசியம் கவனிக்கப்படல் வேண்டும். பாடசாலைத்தலைவரும் உபாத்தியாயரும் முன்னத்தியாயத்தில்கூறப்பட்டுள்ளபடி சீலம் குணம் ஆசாரம் கருணை தேசாபிமானம் பாஷாபிமானம் சாஸ்திரசிரத்தை இவற்றை யுடையவர்களாக இருத்தல் வேண்டும். பாடசாலையும் நகர்க்கு வெகுதூரத்தில் நல்லகாற்றுள்ள இடத்தில் கட்டப்பெறல் வேண்டும். விசேஷ அறைகள் உடையதாகி மாணவர்கள் நெருக்கத்தால் கஷ்டப்படாது இருக்கும்படி அமைக்கப் பெறல் வேண்டும். யாழ்ப்பாணத்து இணுவில் என்னும் கிராமத்தில்கட்டப்பெற்றுள்ள ஸ்ரீமாந் P. இராமநாதன் பெண்பிள்ளை காலேஜ் இதற்கு எடுத்துக் காட்டாகலாம். நல்லஜலவசதிகளையும் தலவசதியும் அமையப்பெற்றதாக இருக்கவேண்டும். உபாத்தியாயரது உத்தரவின்றி மாணவர் தமது கல்விச்சாலையினின்றும் பெற்றோரது கிருஹத்துக்குச் செல்லவாவது, பெற்றோரும் அடிக்கடி மாணவரை வருவித்துக் கொள்ளவாவது கூடாது.

எனவே, இந்தியக் கல்விமுறையானது, தேஹபலத்தையும் மனோபலத்தையும் ஒருங்கே தருவதான பிராணாயாமத்தில் பழகுவதன் நிமித்தம் மதக்கொள்கைகளைப் பயிற்றும் முறையென்றும், நல்ல பழக்கத்தை யடைவதன்நிமித்தமும் மதக்கொள்கைகளையுணர்வதன் நிமித்தமுமாக சாஸ்திரங்களைப் பயிற்றும் முறை யென்றும், இவற்றை உபதேசங்களாலும் ஆசாரணையாலும் பழக்கத்தகுதியுள்ளவரான நல்லாசிரியரிடம் பயின்று வருவதன் நிமித்தம் குருகுலவாசம் செய்யும் முறையென்றும், இன்னும் இவைபோன்ற இந்தியரது தேசதர்மத்தைக் காப்பாற்றக்கூடியவையென்று மேதாவிகளால் அறுதியிடப் பெறும் முறைகளென்றும் பொருளாகிறது. ஆகையால் இந்தமுறையே நமது சொந்தமுறையாகும். தற்காலம் வந்தமுறையான மேனாட்டு முறையோ நமது தேசத்திற் கோணாட்டா முறையாகும். தற்கால நாகரிகத்துக்கு வேண்டிய நூல்களையாக்கிக் கொண்டேனும் இம்முறையில் மாணவரைப் பயிற்றுவதே உத்தமம்.

பத்திராதிபர்.

பத்திரிகையும் அதன் பிரயோஜனமும்.

பத்திரிகை என்றால் என்ன? நாம் அதை ஏன் படிக்கவேண்டும்? படித்ததினால் அடையும் இலாபமென்ன? அப்படிப் படித்தவர்கள் யாராவது முன்னேற்றத்திற்கு வந்திருக்கிறார்களா? என்பதைச் சற்றுகவனிப்போம்.

பத்திரிகையாவது:—லோகானுபவத்தை யொட்டியுலாவும் ஓர் தூதன். உலகத்தில் எந்த இடங்களிலும் நடக்கும் சமாசாரங்களை நேரிற்கண்டவாறு பேசும் ஓர் மித்திரன். ஜனங்களுக்கு அஞ்ஞானமாகிய இருளைப் போக்கி ஞானதீபத்தை ஏற்றிவைக்கும் ஓர் தினகரன். பிரஜைகளுக்கும் அவர்களை ஆளும் அரசாங்கத்தாருக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்கக் காட்டும் ஓர் பந்து. "ஊருடன் கூடிவாழ்" "ஒப்புரவொழுகு" "தேசத்தோடொத்துவாழ்" என ஒளவையார் திருவாய் மலர்ந்தருளிய அமிர்த சஞ்சீவியாகியசொற்களைக்கேட்டானந்திக்கும் நீதிமான். யாதொரு மனிதன் உலகத்தை யொட்டிநடப்பவனாக இருப்பானானால், அவன் நிச்சயமாகப்பத்திரிகையின் துணையாலேதான் லோகானுபவத்தில் மேன்மை யடைந்திருப்பானென்பது யாவரும் மனத்துட்கொள்ளும் விஷயமன்றோ?

நாம் அதை ஏன்படிக்க வேண்டு மென்பதைச் சற்று ஊகிப்போம். பல்லாயிர மைல்களுக்கப்பால் நடக்கும் இம்மகாயுத்தத்தை யாவர்தான் அறியார்? நம்மூரில் ஓர்மூலையில் நடக்கும் விஷயத்தை முற்றிலு மறியச்சக்தியில்லாத நாம் மேற்கூறிய அநேகமைல்களுக்கப்பால் நடக்கும் மகாயுத்தத்தை யாதொரு சிரமமும் செலவும் இல்லாமல் இருந்தவாறே உணருகிறோம். கடலில் அநேகம் கப்பல்கள் மூழ்கும்பொழுது அவைகளைக்கேட்டு விசனித்தும், மகிமைதங்கிய நம்சக்கிரவர்த்தியார் பாக்தாத்நகரத்தைக் கைப்பற்றிவிட்டார் என்பதைக் கேட்டதே ஆனந்தித்தும், இரக்கமற்ற சத்துருக்களின் செயல்களைக் கேட்கத் துவேஷங்கொண்டும், நேசக் கக்ஷியாரின் ஜெயங்களைக் கேட்டு உற்சாக மடைந்தும் இருக்கிறோம். இவ்வாறு நமக்குற்சாகத்திற்கும் பயத்துக்கும் தற்காலத்தில் பெருத்த சாதகமாக விளங்கும் இப்பத்திரிகையைப் படிக்காமலும் இருக்கலாமோ? அந்நிய தேசத்து ஜனங்கள், கல்வி கைத்தொழில் வியாபாரம்

கிருஷி நாகரிகம் முதலிய விஷயங்களில் நம்மைவிட உயர்ந்திருக்கிறார்களா அல்லது தாழ்ந்திருக்கிறார்களா? என்பதை அறியவேண்டியது இன்றியமையாததாயிருப்பின், அதற்குத் தக்க சாதனம் பத்திரிகையன்றோ? ஒப்பந்தக் கூலியைப் பற்றி நம்மவருள் அநேகர் மிகவும் சிரத்தை பாராட்டிப் பத்திரிகைகளின் மூலமாய்க் கதறி யழுதது நம் மாக்ஷிமை தங்கிய இராஜப் பிரதிநிதியவர்களின் காதுக் கெட்டி, இப்பொழுது கூலிகள் குடியேற்ற நாடுகளுக்குப் போகாம லிருப்பதைப் பற்றிய சட்டம் ஏற்படவில்லையா?

காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணகோகலேயவர்கள், அம்மம்மா! அவர் நாமத்தின்பெருமையே பெருமை! அவர் நம்மவருக்காகப் படாதபாடெல்லாம் பட்டு ஜனங்கள் மெச்சத் தக்கதான இராஜ கௌரவங்களையும்விலக்கிச் சுயநலத்தையுங்கருதாது தேசத்தினன்மைக்காகக் கல்வியைக் குறித்து உழைத்துவந்த சிறப்பினாலன்றோ நம்தேசத்தில் இப்பொழுது கல்வி வாசனையைக்காண்கிறோம்? பத்திரிகையன்றோ இப்படிப்பட்ட தேசபக்தர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க ஏதுவாயிருக்கிறது?

பத்திரிகை வாசிப்பதனு லடையும் இலாபமென்ன? கல்வி யபிவிருத்தியாகிறது. நாகரிக முன்னேற்ற மடைகிறது. லோகானுபவம் சீக்கிரத்தில் உற்பத்தியாகிறது. ஒருவனுக்கு லோகானுபவம் கிட்டவேண்டியிருந்தால் நிரம்ப நாட்கள் செல்லும்; நம் சரீரமாகிய மரத்தைக் காலத்தச்சன் வெட்டி முறிக்கச் சமயம்பார்த்துக் கொண்டிருப்பதால், "காற்றுள்ள பொழுதே தூற்றிக்கொள்" என்ற முதுமொழியைப் பின்பற்றிக் காலம் வாய்ந்தபொழுதே அதையாராய்ந்து நடப்பது அறிவுள்ளோர்களின் செயலன்றோ?

பத்திரிகை வாசித்து யாராவது மேன்மை யடைந்திருக்கிறார்களா வென்பதைச் சற்றுகவனிப்போம். பத்திரிகையைக் கட்டாயப் படிப்பாக்கிப் பள்ளிக்கூடங்களின் மாணவர்களுக்கு அமெரிக்காவில் கற்றுக்கொடுக்கிறார்களாம். என்னே! அவர்களின் சிறந்தநோக்கம்! அமெரிக்கா ஜெர்மனி ஜப்பான் இங்கிலாந்து முதலிய தேசங்கள் நம் தேசத்தைக் காட்டிலும் நூதன சாஸ்திரப் பயிற்சியிலும் நாகரிகத்திலும்செல்வத்திலும் முன்னேற்ற மடைந்ததற்குப் பத்திரிகைபடிப்பதே காரணமென்று ஒருமுறையல்ல பன்முறை சொல்லுவேன். நம் தேசத்திலோ பத்திரிகை படிக்கும் அப்பியாசம் சோம்பேறிகளுக்கும் அதிகப்பிரசங்கிகளுக்குமே யுரியதென்று நம்மவருள் அநேகர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். அந்தோ! இவ்

பத்துப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் ஜப்பான் தேசம் படித்தவர்களுக்கு மாத்திரம் தெரிந்திருக்க, இச் சொற்பகாலத்தில் கல்வியிலும் செல்வத்திலும் உயர்ந்து சாதாரண ஜனங்களுக்கும் தெரியும்படியாய்க் கைத்தொழிலை விருத்திசெய்து விட்டது. இதற்கு முக்கியகாரணம் பத்திரிகைகளின் நடமாட்டமே யன்றி வேறு அல்ல. கைத்தொழிலிலும் செல்வத்திலும் மேன்மை யடைந்திருக்க அவ்விடத்திலிருந்து ஏற்றுமதியாகும் சாமான்களும் அமெரிக்கா இங்கிலாந்து ருஷ்யா முதலிய தேசங்களுக்கு இந்த யுத்தத்தை யுத்தேசித்துக் கொடுத்திருக்கும் பணமும் அக்காக்ஷியாக இருக்கின்றன. அத்தேசத்தில் 1200க்கு மேல் தினசரிப் பத்திரிகைகள் உலவுவதாக பத்திரிகை மூலமாய்ப் படித்திருக்கிறோமன்றோ?

கல்வியைக் கருதும் கனவான்களே? நம் இந்தியாவில் தினசரிப் பத்திரிகைகளின் நடமாட்டமும் மற்றத் தேசங்களின் பத்திரிகைகளின் செழிப்பும் நன்றாய்க் கவனிக்கப் படவேண்டும். மேல் நாடுகளில் பத்திரிகைகளைப் படிக்காத ஜனங்களைப் பார்ப்பதரிது. இவ்விடத்தில் படிக்கும் ஜனங்களை அதிகமாய்க் காண்பதரிது. அநேகர் பெருமைக்குப்பத்திரிகையை வரவழைத்து மேல் கவர்களை (கூடுகளைக்) கூடத்திறக்காமல் வைத்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஜனங்கள் மெச்சுவதற்காகப் பத்திரிகையை வரவழைப்பதா? அல்லது அறிவை விருத்தி செய்து கொள்ளுவதற்கு வாங்குவதா? ஆனதினால் அன்பிற் சிறந்த நண்பர்களுக்கு ஓர் விஞ்ஞாபனம். பத்திரிகையை எந்த மூகாந்தரத்தைக் கொண்டும் அவமதிக்காது, நமது பாரதநாடு முன்னேற்றத்திற்கு வர, இது, ஓர் தூண்டுகோலாய் இருந்து வருவதாய் இதை மிகவும் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் வாங்கிவாசித்தல் அறிவை விருத்திசெய்து, நம்நாடு செல்வத்திலும் நாகரிகத்திலும் படிப்பிலும் கைத்தொழிலிலும் வியாபாரத்திலும் வேளாண்மையிலும் முன்னேற்றத்திற்குரிய சாதனங்களைத் தேடி நம் பாரதமாதாவின் மனதை உற்சாகப்படுத்த முன் வருவீரென்று எல்லாம்வல்ல பரம கிருபாநிதியாகிய எம்பெருமானைத் தொழுகின்றனன்.

Karaikudi.

Rajagopala Rao
Correspondant.

(இது, புதுவயல் லலிதா விலாஸ ரீடிங்ரூம் அண்டு பாட்மிண்டன் கிளப் முதல் வருஷோத்ஸவத்தில், M. V. கோவிந்தராஜ ஐயங்கார் அக்கிராஸனத்தின்கீழ் படிக்கப் பட்டதன் ஸாரம்).

* அறிவின் பயன் யாது?

கிருபா ஸமுத்ரம் சுமுகம் த்ரிநேத்ரம் ஜடாதரம் பார்வதிவாமபாகம்
ஸதாசிவம் ருத்ர மனந்தரூபம் சிதம்பரேசம் ஹ்ருதிபாவயாமி ||

அறிவின் பயன்யாது என்பதை அறிவு + பயன் + யாது, என்று பிரித்துப் பொருள் கொள்ளப்படும். அர்த்தம்: அறிவினுடைய பயன் எது? என்பதாம். எனவே, நாங்கள் தேகத்தோடு கூடியிருந்து அறிவைச் செலுத்தும் பல்வகைச் செயல்களிலும் நல்வகைச் செயலொன்றுள்ளது, அதன் வழியே அறிவைச் செலுத்த வேண்டும் என்பது குறிப்பாம்.

அறிவு, என்றால் எல்லாப் பிராணிகளிடத்திலும் அமைந்த இயல்பான ஒரு குணமாம். இக்குணம் மனதோடு சம்பந்தமுடையது. மனம் ஒன்றை எண்ணும்போது அறிவு துணை செய்யும். மனம் ஒன்றையும் நினையாது இருக்கவே மாட்டாது. நன்மையானவைகளைச் செய்ய ஏவினால் நல்லறிவு என்றும், தீமையானவைகளைச் செய்ய ஏவினால் தீயஅறிவு என்றும், நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது ஆவசியகமாகும். ஏனெனில்; அறிவினாலே மனதை நல்வழிகளிலே செலுத்தி நன்மையடைய வேண்டுமென்பதே எங்கள் தர்மமாகலின் என்க. மனித தேகிகளாகிய நாங்கள் அறிவினாலே மற்றைப் பிராணிகளிலும் மேன்மையுடையவர்களாக இருக்கின்றோம். மற்றைய விலங்கு, பறவை ஊர்வன, நீர் வாழ்வன, மரம் முதலியனவற்றிற்கும் அறிவு உண்டு. சில லோக வஸ்துக்களுக்கும் ஒருவித உணர்ச்சி உண்டு என்று தத்துவ சாஸ்திர நிபுணர்கள் கண்டிருக்கின்றார்கள். "பொட்டாஸியம் ஸையானைட்" என்னும் விஷமருந்தினால் சிற்சில பொருள்களின் மாறுபாடுகளை நன்கு அறியலாம். இது தத்துவ விசாரிணிகள் கூற்று.

---

* (இவ்வியாஸம்:— தேவகோட்டை, சைவ சித்தாந்த சபையின் மூன்றாம் வருஷ நிறைவு விழாக்காலத்தில் திருநெல்வேலி ஸ்ரீமாந். V. N. சோமசுந்தரம்பிள்ளை யவர்கள் (B. A., B. L.). அக்கிராசனத்திற் செய்யப்பட்ட பிரசங்க சாராம்சம்.)

தாவரங்களுக்குள்ள உபாதிகளையும் அறிவின் வேறுபாடுகளையும் நமது இந்திய தேசத்தவராகிய மிஸ்டர் ஜகதீச சந்திரபோஸ் அவர்கள் ஒரு யந்திரத்தின் றுணையுடன் பிரத்யக்ஷமாகக் காட்டுகின்றார். இவைகளினாலே அறிவுள்ளவைகள் இவை இவை என்று இனிது விளங்குகின்றதன்றோ!. ஆனால் மநுஷ்யர்களாகிய எங்களுக்கும் மற்றைத் தேகிகளாகிய பிராணிகளுக்கும் உள்ள வித்யாஸம் என்னை. நாங்கள் அறிவினாலடைய வேண்டியதென்னை? என்பவைகளைச்சற்று ஆராய்வது இப்போது ஆவசியகமாகும். ஆத்மா விலங்கு பறவை முதலியவைகளுக்கும்மனிதர்களுக்கும்இருக்கின்றது. ஆத்மா=உயிர். உயிரே இயங்கவும்; மரமுதலியன தளிர்க்கவுங் காரணமானது. உயிரினாலே வேறுபாடில்லை. தேகங்களினாலே வேறுபாடு காணப்படும். தேகங்கள் புண்ணிய பாவ பேதுக்களால் உயர்ச்சியுந் தாழ்ச்சியுமாகக் கிடைக்கும். அவ்வத்தேக வேறுபாட்டிற்கியைய அறிவும் வேறுபாடுடையதாகும். எல்லாத்தேக ஜீவர்களையும் ஒருங்கே நனித்து ஆராய்ந்தால், மநுஷ்ய தேகமுடைய நாங்களே மேம்பாடுடையேம். எதனால் மேம்பாடுடையேம்? தேக அமைப்பானும், அறிவின் சுதிப்பானுமேயாம். எப்படிப்பட்ட அறிவினாலே என்னில்; பகுத்தறிவினாலேயாம். நன்மையுந் தீமையுமறிந்து நன்மைவழி நடக்கத்தக்கவர்கள் மனிதர்களே! இவ்வுண்மைகளை அநேக நூல்களிற் காணலாம்; ஒவ்வொருவரும் அநுபவத்தினுந் தெளியலாம். இலக்கண நூலினுள்ளதும், யாவரும் எடுத்துக்காட்டுவதுமான ஒருபிரமாணம்உள்ளது. அது மக்கடாமே ஆறறிவுயிரே என்பதாகும். (தொல்காப்பியம்.) மநஸிற்கு வேறாகவுள்ள அவ்வறிவு இயற்கையறிவு, செயற்கையறிவு என இருதிறப்படும். ஆறாவதான அறிவானது மனிதர்க்கன்றி வேறோர் பிராணிகளுக்குமில்லையென்பதையும், அவ்வறிவால் இப்பிறவியே மேலானதெனக்கருதி மனதை தியவழி நடவிடாது நன்மை நாடுதல் வேண்டும் என்பதையும் மறந்துவிடலாகாது. அறிவு வளர்ச்சியை மாயை மறைக்கும். மாயை—தோற்ற ஒடுக்கங்களுக்குக் காரணமாயது. மாயா மலத்தினாலே அஞ்ஞானத்துவம், பொய், மோஹம், அபர்வு, பைசாசுந்யம் மாற்சரியம் ஆதியன உண்டாகின்றன. நல்லறிவு தலைப்பட்டால்

இத்தீக்குணங்களை முற்றக்களையலாம். நல்லறிவு கல்வியினாலேயுண்டாகும். கல்வியை 'இளமையிற்கல்' என்னும் ஸரஸ்வதி திருவாக்கை நோக்கிச் சிந்தித்துக் கற்றால் பேராக்கம் பெறலாம். கற்றற்குரிய நூல்கள் இலக்கணம், நிகண்டு, அந்தாதி, தருக்கம், சித்தாந்தம், வேதாந்தம் என்னப்பல திறமுடையன. சைவத்துண்மை விளக்கும் பத்திரிகைகளைப் படித்தலும், மகோபந்நியாசங்களைக் கேட்டலும் அறிவு வளர்தற்கு ஏதுக்களாம். பாரதமாதாவின் மகிமையால் ஸ்ரீசுவாமி விவேகாநந்தர், ஸ்ரீ கோபாலகிருஷ்ண கோகலே முதலிய தற்கால மகான்கள் அறிவின் மிகுதியினாலே சமயத்திற்கும் தேசம் பாஷை என்பவற்றிற்கும் தங்கள் தங்கள் வாழ்நாட்களைச் செலுத்திச் செய்த அருஞ்செயல்கள் ஒன்றா, இரண்டா? அவைசிறந்த செயல்களால் அவர்கள் பூதவுடம்பிறுப்பின் புகழுடம்பு நிலைத்திருப்பதையாரறியாதார்?

இவை நிற்க; அறிவைச் செலுத்துவதிலும் பாகுபாடுகளுள்ளன. ஆன்மசுகங்கருதிக் கடவுளுடைய திருவடிகளிலே பதிந்த மனமுடையராக நடக்குங் காலத்திலே வைதிக அறிவு என்றும் தேகசம்பந்தமாய்ச் செய்ய வேண்டியவைகளை ஜாஸ்தியாகப் புரியுங் காலத்திலே லௌகிக அறிவு என்றும் அறிவு, இருவகையாகக் கருதப் படுகின்றது. தேகசம்பந்தத்திலும் ஆத்ம சம்பந்தமான சற்கருமப் பிரவிர்த்தியே மிகவுஞ் சிறந்தது. தேகம் வேண்டாமா? என்றால், தேகம் வேண்டும். தேகங்களை நல்ல சுத்தமாக வைத்திருந்தாற்றான் ஆன்மாக்கள் சுகம் பெறலாம். அதற்காகத் தேகத்தை ஆகாரம், நீர், காற்று, ஆகாயம் என்னுமிவைகளினாலே நோயுண்டாகாதபடி காத்துக்கொள்ள வேண்டும். சிலர் ஜலம், ஆகாரமென்னுமிவைகளைக் கண்டகண்டபடியோ ஒரு ஆலோசனையுமில்லாது உண்டு அவஸ்தைப் படுகிறார்கள். தேகத்தைச் சௌக்கியமாக வைத்துக்கொண்டு அறிவைக் கடவுளிடத்துப் பதித்தல் இலகுவாகுமன்றித், தேகம் நோயுற்றால், மனம் ஒருவிதத்திலும் பிரயோசனப்படாது. முதலாவதாக இதனையே நாங்கள் கைக்கொண்டொழுகல் வேண்டும். இரண்டாவது இத்துர்லபமான 'பிரணவாகார தேகத்தையும்

அரியபெரிய அறிவையும் ஒருங்கே உதவித் திருவருளாலே பாது காத்தருளும் கடவுளை நாடோறும் வழிபாடு செய்தல் வேண்டும். தேகாநுபவப்பொருள்கள் ஈசுவர சந்நிதியால் எங்களுக்குக் கிடைத் துள்ளன. ஆகலின், அறிவின்பயன் அவ்விறைவனை எக்காலத்தும், எத்தொழிலினும் இடையீடின்றிச் சிந்திக்கவேயாம். தேகவுல்லா சமும், கலாஞான மதிப்பும் அவ்விறைவனுக்கே அர்ப்பணஞ் செய் தற்பாலன. இவ்வுண்மையை

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாடொழாஅ ரெனின்"

என்ற ஒரு விசிட்டமான பாவினாலே திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளினார். அறிவின் பயனிதுவேயாம். இப்படி ஏன் சொல்லுவான் எனில்; கடவுளுடைய ஸ்வரூபமே அறிவினு டைய முடிவாகும் என அறிக. என்னை? முக்காலத்தும் ஒரேபெற் றித்தாகவிளங்கும் நிர்மலமான பரப்பிரமத்திற்கு லயஸ்தானம் அறி வுடையவர்களின் பரிசுத்தமான மனமே யாகலினென்க.

சில பிரமாணங்கள்.

வடநூலுள்.

யதைத மநுபஸ்யத்யாத்மாநம் தேவமஞ்சஸா ।
ஈசாநம் பூதபஸ்ய நததோ விஜுகுப்ஸதே ॥

தென்மொழியுள்;

அறிவறி வென்றிங் கரற்று முலகம்
அறிவறி யாமையா ரறிவார்
அறிவா யவற்று ளுட்டாறு மறிவின்
செறிவாகி நின்றனன் சிவனுமாமே.

அறிவுடை யார்நெஞ் சகலிட மாவது
அறிவுடை யார்நெஞ் சருந்தவ மாவது
அறிவுடை யார்நெஞ்சொ டாதிப்பி ரானும்
அறிவுடை யார்நெஞ்சத் தங்குநின் றானே.

என்பது முதலியனவாக ஆன்றோர் எங்கள் ஆன்மாக்களின் ஈடேற்றங்கருதி அருளிச் செய்தார்கள். நான்முகமாக நாங்கள் அறிவதினும் அநுபூதியாற் கண்டு ஆநந்திப்பதே உயர்வாகும். நூல் வழியாக நம்பிக்கை பெற்றாலன்றி அநுபவியாதல் சாத்தியப்படாது. முதிய அறிவாளர்கள் அநுபூதியாற் கூறினமையால், நாங்கள் அவை கேளாச் சிரவணஞ்செய்து அமைவு பெறவேண்டும். எவ்வளவு கற்றாலும் எவ்வளவு கேட்டாலும் மனம் அடங்காது. அதிலும் செல்வப் பெருக்கமுங் கூடினாற் சொல்லவும் வேண்டுமோ? கல்வியில்லாதவர்களுக்குச் செல்வம் சேர்ந்தால் விளைக்குந் துன்பம் இவ்வளவிற்றென்று கூறவே முடியாது. ஆகலின், முறையாகக் கல்வியைக் கற்றுச் சீலமாக நடக்க வேண்டும். வஞ்சனை, பொறாமை லோபம் என்னும் பெரிய சரக்குக் குடுக்கைகளாகித் தினந்தோறும் கொலை களவு கட்காமம் என்னும் மறக்கலைப் புரிந்தால் அறிவு வளர்ச்சியடையமாட்டாது. அல்லதூஉம், தேகத்தையும், தேகத்துக்கு இன்பமான போகமாதரையும் நீக்கி கருமலங்கழிக்க வேண்டுமானால அறிவாகிய திரியில் சாந்தமாகிய நெய்யைச் சேர்த்து ஞானதீபம் பெற உள்ளத்தே உள்ளதை முன்னி வழிபாடு செய்வார்க்கு இனிய விபாகத்துவம் சித்திக்கும். உள்ளது—கடவுள். இது திருவள்ளுவ நாயனார் "ஓர்த்துள்ள முள்ளதுணரின் ஒருதலையாப், பேர்த்துள்ள வேண்டாபிறப்பு" என்றருளிச் செய்த விடத்துக் கண்டது.

தேவாரம்.

பொள்ளத்த காயமாயம் பொருளினைப் போகமாதர்
வெள்ளத்தைக் கழிக்க வேண்டில் விரும்புமின் விளக்குத்தூய
முள்ளொத்த திரியோன் றேற்றி யுணருமா றுணரவல்லார்
கள்ளத்தைக் கழிப்பர் போலுங் கடவூர் வீரட்டனாரே.

இன்னும், அறிவைவளர்ப்பவரும், அறிவுருவானவரும், அநந்த கல்யாண குணசம்பந்நராகிய கடவுளேயாம். ஆன்மபோதம் முன்னும் பின்னும் க்ஷாம நிலைக்குச்செலுத்துமன்றி அறிவை விளக்கி க்ஷேமநிலை காட்டாது. ஆகலினாலே சிவபோதம் வளரச் செய்யுமுண்மையறிவைக் கலைஞான வுணர்ச்சி கொண்டு ஸ்திரமுறச

செய்தல்வேண்டும். கற்றார் சரிவர அறிவைச் சீர்ப்படுத்தி நடக்கின்றார்களோ என்னில், சற்குருவிடம் மாணவக முறையாகப் பயின்றோர்கள் என்றும் அறிவை விளக்கமாக்கியே நன்மை புரிவார்கள். கல்லார் அறிவைக் கீழ்ப்படுத்தி ஆணவத்தை மேற்படுத்தி நடப்பார்கள். வித்யாஸம் வேறில்லை.

ஸ்ரீவாகீசப் பெருந்தகையார்,

மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகடலோடும் போது
மதனெனும் பாறைதாக்க மறியும்போ தறியவொண்ணா
துனையுனு முணர்வை நல்கா யொற்றியூருடைய கோவே.

என்று சிவபோதச் சிறுமை நீக்கயாகச் சிவபரம் பொருளைப் பிரார்த்திக்கின்றார். நாங்களோ அபிமானிக்க வேண்டியவைகளை வெறுக்கவே விரும்புவதும், ஆராய வேண்டியவைகளைத் தக்க அறிவின்மையால் ஆராயாது அழுந்தி வருந்தும்போது ஆ! கூ! என்றும் சிறுமையுட் சிறுமையான கர்மங்களை வளர்க்கின்றோம். அப்படிச் செய்யாது பெருஞ்சீர் விளக்கும் வழியில் அறிவைச் செலுத்தி ஊனுடன் கூடிய ஈனமாந் தேகச்சுமை விடுத்து ஞானநாயகன் அறிவுருப்பெற முயற்சிப்பதே அறிவுடையார்கடமையாகும். ஒவ்வொரு விஷயங்களையும் இன்னுஞ் சிற்றறிவுக்கு ஏற்றவாறு எடுத்துக்கூறப் போதிய அவகாசமின்மையின் இவ்வளவிலே சுருக்கி முடிப்புரை கூற என்கருத்து. சபையாரும் அதற்கு இணங்குவார்களென்று நம்புகின்றேன்.

முடிப்புரை.

இதுவரையுங் கூறப்பெற்றவற்றுளே அறிவு இன்னது என்பதூஉம், ஜீவனுள்ளவைகளுக்கு மாத்திரமன்றிச், சிலலோக வகைகளுக்கும் ஒருவித உணர்ச்சி உண்டென்பதூஉம், மாநுஷர்களாகிய எங்களுக்கே விசேஷித்த பகுத்தறிவு உண்டென்பதூஉம், அறிவினாலடைய வேண்டியது இறைவனோடு அத்துவிதமாகும் நித்தியானந்த முத்தி நிலையே என்பதூஉம், இந்நிலையடையதற் பொருட்டுந் தேகமுள்ள பொழுதே அரிய தர்மங்களைச் சிரத்தையோடு செய்து

வாழ்வென்பம் என்பதூஉம், தேசம், பாஷை, சமயம் என்னுமிவை கள் மேனிலையடையும்படி செய்வனவும் அறிவுடைமைக்கு அழகா கும் என்பதூஉம், அமைதியான மனமுடைமையினாலே அறிவு வள ர்ச்சியையும், அறிவு வளர்ச்சியினாலே புகழ் புண்ணியங்களையும் பண்டைக்கால மேதாவியர்கள் பெற்றுள்ளார்கள் என்பதூஉம், பிறவும் சுருக்க சூசனமாகப் பேசப்பட்டதென்பதை யாவரும் அறி ந்து, அறிவை நல்வழிச் செலுத்தி ஒழுகமுன்னிற்கும்படி இறை வனருளைப் பிரார்த்தித்து இவ்வளவிலே எனது பிரசங்கத்தை நிறை வுறச் செய்கின்றேன். இவ்வைசிய சிவானந்தசபையும் அபிமானி களும் நீடூழிகாலம் இனிது நிலவச் சிவபரம்பொருளின் பூர்ண கிருபை யுண்டாவதாக.

யாழ்ப்பாணம்
பிங்கள ஞு
சித்திரை மீ
கருஉ

வ. மு. இரத்நேசுவரையர்,
தமிழ்ப் பண்டிதர்
விவேகானந்தசபை
மாத்தளை.

வாணியன்தாதன்

தொண்டைமண்டல சதகம்.

"பேணிய செந்தமிழ்த் தாதனுக் கேயன்பு பெற்றமையா
ணுணிய கம்பன் சிவிகையுந் தாங்கி நயந்த தமிழ்
பூணிய நின்றதும் பொச்சாப்பிலாது புகுந்து பின்னும்
வாணியத் தாதற்குத் தாதானதுந் தொண்டை மண்டலமே"

பொழிப்புரை.

விருப்பமிகும் செந்தமிழ்வல்ல தாதனுக்குத் தாம்டிமைப் பட் டமையால், பாடுதற்குநாணமுற்ற கம்பனது பல்லக்குச் சுமந்தும், யாவரும் விரும்புதற்குரிய தமிழ்ப்பாமாலை புனையப்பெற்றும், தீதி ல்லாது பின்னும் சென்று வாணியத்தாதற்கு அடிமைப்பட்டது மான வேளாளருடைமையால் தொண்டை மண்டலம் சிறந்தது.

வரலாறு

தாதன் என்பவன் செக்கார் குலத்துதித்துக் கம்பர் காலத்துப் பெரும்புலவராய் விளங்கிய வாணியப்புலவன். இவன் கி. பி. 1070

முதல் 1118 வரையும் சோழநாட்டைப் பரிபாலித்த 1 குலோத்துங்க சோழன் அவைக்களஞ் சென்று [illegible] இருந்த அச் சோழமன்னனைப் பலவகையினுஞ் சி[illegible] பாடக் காதன் புலமையின் அருமை பெருமைகட்குப் [illegible]மானித்த சோழன் அவனுக்குத்தானும், பெரும் அரி[illegible] திருச்சின்னமுதலிய விருதுவரிசைகள் தந்து பெருமைப்படுத்தினான். இதனைப் பொறாத கம்பர், காதன் விஷயமாக அரசனை நோக்கி,

"கூளம் பிடித்தெட்டிக் கோதுவைப் பானங் குலக்கலிக்குக்
காளம் பிடித்திடிற் சின்னம் படுமன்னர் காதலியார்
* வேளம் பிடித்தகன் வெள்ளம் பிடிக்கவெம் பேய்க்கிளம்பே
தாளம் பிடிக்கத் தனிவேல் பிடித்த சபதுங்கனே" [யத்

(தமிழ்நாவலர்சரிதை)

எனப்பாடி இவ்வாறு தரமறியாது சன்மானிப்பது என்போன்ற சிறந்த உத்தமக் கல்வியாளரைச் சிறுமைசெய்ததுபோலாகும். இனி இவ்வாறு செய்யாதிருக்கும்படி வேண்டினன். இதுதெரிந்த வாணியத்காதன் சினந்து, கம்பர்பாடிய மும்மணிக்கோவை என்னும் ஓர் நூலிற் குற்றங்கூறி அவரையும் அவமதித்தனன். அது:—

† "மைம்மணிச் சென்றிச் சிறியாக்கம்ப நாடன் சொன்ன
மும்மணிக் கோவை முதற்சீர் பிழைமுனே வாளெயிற்றுப்
பைம்மணிநாத்திக் கனமணிப் பாத்தட் படம்பிதுங்கச்
செம்மணிகண்பிதுங் கப்பதம் பேர்த்த செபதுங்கனே"

எனவருவதால் தெளிவாம். காதன் சோழன் பால் மானியமாகப் பெற்றவூர் தொண்டைநாட்டின்கணுள்ள கூவம் என்ப. இது

(தொடரும்)

பின் 145-ம் பக்கம் பார்க்க

---

* வேள் அம்பு இடித்தகன் வெள்ளம்பிடிக்க = மன்மதனது அம்பைவென்ற கண்கள் நீர்த்துளிசொரிய.

† மைம்மணிச்சி—மையின்மணியோசை. காளிகோயில் முதலியவற்றிற் புகைபுரியும் உவச்சமரபிற் கம்பர் பிறந்தவராதலின் இவ்வாறு வசைகூறினான். "சோணிசோழநாட்டுத் திருவழுந்தூருவச்சன்" என்று [illegible] காணப்படும் இராமயணத் தனியன் பாடலும் நோக்கற்பாலது. கம்பர்பாடியமும்மணிக்கோவை யாரைப்பற்றியதென்பது விளங்கவில்லை.

மனத்தூய்மையும் பொது நன்மையும்.

பொது நன்மையென்பதொன்றே ஒரு நாட்டினை நல்ல நிலைமைக்குக் கொண்டுவரக் கூடியதாகும். ஒரு நாட்டிலுள்ள கற்றறிந்து அடங்கிய பெரியோரிற் சிலரே, அந்நாட்டின் பொது நன்மைக்கு உழைக்க முன்வருவதை நாம் பார்த்துவருகின்றோம். மற்றும் பலர் அந்த வேஷம்போட்டுக்கொண்டு திரிவார்களேனும், அவர்களால் யாதொரு நன்மையும் உண்டாகாமலிருப்பதுடன், ஒருகால் தீமையும் நிகழ்வதாகின்றது. ஏனெனில், பொது நன்மைக்கு உழைக்கவென்று முன்வருவோர், கூடியவரையில் தமது ஆத்ம பக்குவத்திற்கேற்ப, தம்மிடம் சுயநயம் பாராட்டுதல், துரோக சிந்தை, புறங்கூறுதல், கலகம் செய்தல், பிறன்மனைநயத்தல் முதலிய துர்க்குணங்களைக் கொள்ளாமலிருக்க முயலவேண்டும், ஏனெனில், இவை ஒருவரது முன்னேற்றத்துக்கே தடைகளாக இருக்குமெனில், ஒரு நாடு முன்னேறும் வழியாகிய பொதுநன்மையுழைப்பில் தடை செய்யும் என்பதில் என்ன சந்தேகம்?

பொது நன்மைகளாவன:—ஒருநாடு முன்னேற வேண்டிய வழிகளாகிய ராஜ்யவிவஹார நிர்ணய ஸபை, மதபோதக ஸபை, வித்தியாசாலை, ஏழைகளை முன்னுக்கு கொண்டுவரும் ஸபை ஆகிய இவை, இவற்றுக்கு அதிகாரிகளாகவோ பிரசாரகர்களாகவோ உபாத்தியாயர்களாகவோ உபந்யாசகர்களாகவோ, இருப்பவர்கள், எப்போதும்எவ்விஷயத்தும் மனத்தூய்மையுடன் உழைப்பவர்களாக இருக்கவேண்டும். மனமொன்றும் சொல் வேறொன்றும் செயல் இன்னொன்றுமாக இருந்தால், அவர்கள் எடுத்துக்கொண்ட காரியம் பயன் பெறாதிருப்பதுடன் அவர்களை நம்பிப்பின்பற்றும் பலபேர்களைக்கெடுக்கவும் ஆளாகிறார்கள். சிலர் எமது அந்தரங்க காரியம்

எப்படியிருந்தாலென்ன? நாங்கள் ஏற்றுக்கொண்ட காரியத்தில் யாதொரு களங்கமில்லாமல் தானே உழைக்கிறோம் என்கிறார்கள். இவர்கள் தங்களது ஆத்மதர்மத்திற் பகிரங்கதர்மம் வேறாகவும் அந்தரங்கதர்மம் வேறாகவும் கவனித்து உழைத்து வருகிறார்கள்.

நமது ஆத்ம தர்மத்தை நிறுத்துக்கொண்டு ஒழுகாத ஒருவர், பொது நன்மைக்கு உழைப்பதற்குச் சற்றேனும் பொருந்தார் என்பது திண்ணமாகும். அவர் எப்போதும் ஒரு கூட்டத்துக்குத் தலைவராகவாவது மாணவர்கட்கு உபாத்தியாயராகவாவது இருத்தலே கூடாது. ஒரு தேசமானது ஒரு பொய்யராலாவது ஒரு மோசக்காரராலாவது ஒரு தூர்த்தராலாவது ஒரு கள்வராலாவது முன்னேற்றத்தை அடைந்துவிடும் என்று நினைப்பதற்கும் இடமில்லை. ஒரு தொழிலில் தேர்ந்தபயிற்சிமாத்திரமே ஒருவரை ஒரு கூட்டத்திற்குத்தலைவராக இருந்து நடத்தவல்ல பயனளியாது. நாம் இப்போது மனிதர்களைமாத்திரம் தலைவராக வேண்டுகின்றோமாதலின், மனிதத்தத்தின் பக்குவத்தையடையாதவரை நமது ஸபைகட்குத் தலைவராக நியமிக்கப்படாது. ஒழுக்கமின்மையேனும் வாய்மையின்மையேனும் நாணயமின்மையேனும் பெற்றிருப்பவரை நமது ஸபைகட்குத் தலைவராகக் கொள்ளப்படாது. அவர் தக்க ராஜதந்திரியாக இருக்கலாம். அவர் நல்ல வித்வானாக இருக்கலாம். அவர் நல்ல உபந்யாஸகராக இருக்கலாம். இவையிருந்தும்; மெய்யும் ஒழுக்கமும் நாணயமும் இல்லாதவராயின், அக்கலைகள் அவர்க்கு, பாம்புக்கு வார்க்கப்பட்ட பாலாகின்றன.

தூர்த்தரும் பொய்யரும் ஒரு தேசத்தை முன்னுக்குக்கொண்டு வந்திருப்பதாக ஒரு சரித்திரத்திலும் படித்ததில்லை. தர்மம் ஒன்றே ஏழைகளைக்காத்து அவர்க்குப் பலமளித்து அவரையேற்றியவரால் அத்தேசத்தை முன்னுக்குக்கொண்டு வந்திருப்பதாகத் தெரிகிறோம். ஆகையால் தர்மமொன்றையே நாடவேண்டும். தர்மமொன்றையே போற்றவேண்டும். வாய்மையில்லாவிடின் தர்மம் போற்றப்படாததாகும். ஒழுக்கமில்லாவிடின் தர்மம் போற்றப்படாததாகும். நாணயமில்லாவிடின் தர்மம் போற்றப்படாததாகும்.

இந்த மனம் அதர்மவழியைப் பின்பற்றப்படாது. தர்மம் ஒன்றினாலேயே முன்னேறவேண்டும் என்னும் நம்பிக்கையையுடைய நம் நாட்டின் இயற்கைக்கு மாறான தற்காலக் கல்விமுறையானது நாட்டினை அதாவது நாட்டின் மாணவர்களை அதாவது நாட்டின் தர்மத்தை சீர்கெடுத்துக் கொண்டிருக்கின்றது.

ஒழுக்கமே மதமென்று சொல்லப்படுவதுமாகும். ஏனெனில், மதமானது ஒழுக்கமில்லாவிடில் நிலைபெறாது. நமது தேசம் தாழ்வடைந்திருக்கிறது. இந்தத் தாழ்வு உண்டானதற்குக்காரணம் சாஸ்திரஞானம் இல்லாமையல்ல. யூகம் இல்லாமையல்ல. ராஜ்ய தந்திரம் இல்லாமையல்ல. இவையெல்லாம் நம்மவர் பெற்றிருக்கிறார்கள். ஒழுக்கம் ஒன்றுமே பலர்க்குக் குறைந்திருக்கத்தெரிகிறோம். ஒழுக்கமின்மையினால் உண்டாகக்கூடிய பல தீமைகளை அந்த சாஸ்திர ஆராய்ச்சிகள் சீர்திருத்தமுடியா. சாஸ்திரஞானம் என்னும் உயர்தின் கதவானது ஒழுக்கமென்னும் தாழினைப் பெறாதொழிந்தால் தேசநன்மையென்னும் நகரத்தைக்காக்கமுடியாது. ஒழுக்கம் உண்மை பெருமை இவையே தேசத்துக்குப் பொதுக் காவலாகும். இவற்றை உடைய ஒருவனே தனது தேசத்துக்கு மஹோபகாரியாவான். இவன் சாஸ்திரஞானம் உபந்யாசவன்மை ராஜ்யதந்திரம் இவற்றைப் பெறாவிடினும், இவனொருவனையே நல்லவர் மனம் நாடிநிற்கும். நல்லவர் மனம் நாடும் என்பது ஒரு தேசமே நாடும் என்பதன்பொருளல்லவா?

ஒருவரது அந்தரங்க தர்மம் அவரது பகிரங்க தர்மத்தைக் காட்டிவிடுமன்றோ? ஒருவன் தனது சொந்தக்காரியங்களில் பொய் பேசப் பழகியிருந்தானாகில், அவன் பொது நன்மையில் மாத்திரம் அப்பழக்கத்தை யொழித்தல் இயலுமா? ஒரு அவசியமும் அசாத்தியமுமான காரியத்தில் அவனை ராஜஸ குணம் தூண்டிவிட்டு சொந்தப்பழக்கமாகிய பொய்ப்பழக்கத்தை எழுப்பிக்கொண்டுவந்து விடாதா? ஒருவன் தனது அந்தரங்கதர்மத்தில் ஒருபடியில் இருந்துவிட்டுப் பொதுச்சபையில் ஏறினவுடனேமாத்திரம் புதுமனிதனாக மாறிவிடல்முடியுமா? திருத்தத்தையடையாத அவனது இயற்கை

எங்கொளித்துவிடும்? ஒருவன் அந்தரங்க தர்மம் பஹிரங்க தர்மம் மத்திமாங்கதர்மம் என்னும் மூன்று கவசங்களை ஒரு நாளில் அணிந்து கொள்ளல் கூடுமோ? மனிதன் என்பான் ஒழுக்கம் அறிவு என்னும் சக்திகள் இணைந்து கூட்டப்பட்டவனல்லனோ? அவனது இயற்கையானது ஒரு யந்திரத்தின் ஜடமானகருவிகளைப் போன்ற அவயவங்களால் மட்டும் இணைக்கப்பட்டதன்றே? பலம் ஆசை பழக்கம் ஒழுக்கம் என்னும் பௌதிகாம்சலேசமான பூர்வ ஜந்மவாசனைகளாலும் இணைக்கப்பட்டுள்ள தல்லவா? ஆகையினல் கண்ணியம்பெறாத அந்தரங்க தர்மமுடைய ஒருவன், பொதுநன்மை யாகிய பஹிரங்கதர்மத்தில் கண்ணியத்துடன் உழைப்பான் என்று எப்படி நம்புதல் இயலும். அவனுடைய இயற்கை மாறுபட இடங் கொடாதல்லவா? ஒருவன் எவ்வளவுதான் தனது இயற்கையை யொளித்துச்செயற்கையால் மாறுவேஷம்போட்டு நின்றானேனும், ஒரு அசாத்திய நிலையில் அவனது இயற்கைக் குணம் வந்து தோன்றாமல் போகாதன்றோ? தேசப்பொது நன்மையென்பது கஷ்டசாத்தியமான காரியமல்லவா? எத்தனை இடையூறுகளை ஒழித் தேறவேண்டியிருக்கும்? ஆகலின் இவ்விடையூறுகளில் மனம் தளரா மல் இருக்கவேண்டுமே! தளர்ந்தால் ராஜஸமும் தாமஸமும் தலை கொள்ளுமே! அப்போது இயற்கைக் குணந்தானே வெளிப்படும் அன்றோ? இப்படி மாறுபட்டகுணமுடைய ஒருவரை வணங்கும்படி எப்படி நமதுமாணவரை ஏவத்துணிவோம்? ஒரு பொய்யனையாவது ஒருதூர்த்தனையாவது ஒரு கள்வனையாவது ஆசாரியனாகக்கொண்டு நமது மாணவர் பழக நாம் பார்த்திருக்கலாமா?

அந்தரங்க சுத்தம் அதாவது மனத்தூய்மை பெறாதவனென் பான் தன்னடக்கமில்லாதவனன்றோ? தானடங்காதான் தனயரை யடக்க மாட்டுவனோ? அவனிடத்தில்தான் மாணவர் எப்படி அடங்கி நிற்பார்? இவனது கூட்டுறவு அந்தக் கூட்டத்தைக்கெடுக் காதா? இவன் தலைவனாக இருக்க நேருமாயின், இவனது கீழுள் ளோர் இவன் வழியையன்றோ பற்றுவர்? ஒருநாட்டுக்கோ ஒரு கூட்டத்துக்கோ தலைவன் என்பான், அந்த நாட்டினும் அந்தக்

கூட்டத்திலும் இனிமேல் பிறக்கக்கூடிய குழந்தைகளின் குணத்திலுக்கும் உத்திரவாதியல்லவோ?

பெருந்தகைமை பற்றி வாழ்ந்திருந்த ஒரு தேசமானது சிறுதகைமைபற்றித் தாழ்வடைந்திருக்கும்போது, மாறுபட்ட இயற்கையுடையாரைத் தலைமையாகக் கொண்டால் முன்னேறி வரும் என்று எப்படி நம்புதல் இயலும்? மனிதர் இயற்கையைச் செயற்கையால் மாற்றி முன்னேறுவது என்பது ஒரு பெரியவரைப் பற்றியன்றோ? அப்பெரியவரால் மனிதர் தமது தீக்குணங்களை மாற்றி உண்மைதெரிந்து பெருந்தன்மை முதலிய கண்ணியமான ஒழுக்கங்களைப் பெறுகிறார்களென்பது உண்மையன்றோ? அங்ஙனமாயின், தாழ்வடைந்த தேசமொன்று முன்னேறுவதற்கு, அதன் இருதயஸ்தானமாக ஒரு பெரியவரையன்றோ பற்றவேண்டும்? அப்பெரியவர் என்பார் தமது மனத்தூய்மையால் நிறைகுணமுடையவரன்றோ? ஒரு தேசம் தாழ்வடைந்திருக்கிறது என்றால், அத்தேசத்து ஜனங்களில் பெரும்பாலார் சுயநயம் பாராட்டுதல் பயங்கொள்ளுந்தன்மை அறிவின்மை இவற்றில் ஆழ்ந்திருக்கிறார்களென்பது தெளிவன்றோ? அத்தேசத்தை முன்னேற்றுதல் என்றால் அத்தேசத்தில் உள்ள ஆண் பெண் என்னும் இருபாலாரிற் பெரும்பாலார்க்கு அவரது அழிந்த இருதயத்தை எழுப்பி அவரது மனோதர்மத்தை வேகப்படுத்தி அவரது மனம் செல்லக்கூடியதாகத் தக்கதொரு மார்க்கத்தைக் காண்பிப்பதன்றோ? அப்போது தானே மெலிந்தார் வலிவுகொள்வார்; தாழ்ந்தார் வாழ்வுகொள்வார். ஒரு தேசம் தனது ஜனங்களின் வாழ்வில் கலக்கத்தை யடைந்திருக்கும் போது வியாபாரத்திலாவது ராஜ்யதந்திரத்திலாவது சிறந்து வாழ்வது எப்படியாகும்? தமது வீட்டு வாழ்க்கையில் மாறுபட்ட மனமுடைய ஜனங்கள் தமது நாட்டுவாழ்க்கையில் ஒத்துழைத்தல் இயலாத காரியமேயன்றோ?

ஒரு தாழ்வடைந்த தேசமானது தனது வாய்மை பரோபகாரம் தன்மறுப்பு இவற்றில் குறைந்தே இருக்கும். அது வாழ்வு

பெறுவதானது, அம்மூன்றையும் மறுபடியும் பெறுவதன்றோ? அதற்குத்தக்க தலைவனைப் பெற்றாலன்றோ அத்தேசம் அம்மூன்றையும் பெறமுடியும்?

ஒருவரது பயிற்சியும் ஆராய்ச்சியும் மாத்திரம், அவரது தலைமையின் கீழ் உள்ளவரைத் திருத்தவியலா. அவரது மனத் தூய்மை நன்னோக்கம் பெருந்தன்மை இம்மூன்றும் சேர்ந்து தூண்டும்போது பயிற்சியும் ஆராய்ச்சியும் மாணப்பெற்றுத் தமது காரியங்களைப் பயனுறுத்துகின்றன.

ஒரு தேசமுன்னேற்றம் ராஜ்யதந்திரத்தாலும், ராஜ்யதந்திரம் நூலாராய்ச்சியாலும், நூலாராய்ச்சி கல்விப்பயிற்சியாலும், கல்விப் பயிற்சி விநயத்தினாலும், விநயம் ஒழுக்கத்தினாலும் ஒழுக்கம் பழக் கத்தினாலும் உண்டாகின்றன. அப்பழக்கம் நல்லதொரு பெரியாரிடம் கொள்ளப்பெறாவிடின் அனைத்தும் இன்றாய்விடும். ஆகலின், தலை வரைத்தேர்ந்தெடுக்க வேண்டுவது அவசியம். உள்நாட்டுக் கலகம் பெற்ற ஒரு தேசம் உலகத்தில் உயர்ந்துவாராது. உண்மையறியாத ஜனங்களையுடைய தேசம் எப்போதும் உள்நாட்டுக்கலகத்தை ஓயா துபெற்றிருக்கும். உத்தமரோடு பழகாதஜனங்கள் உண்மையையறிய மாட்டார்கள். உயர்குணமில்லாதோர் உத்தமராகார். உயர்குண மாவன உண்மை பரோபகாரம் தன்மறப்பு என்பனவே. இக் குணங்களை அகங்காரம் சுயநயம் பேராசை என்னும்தோஷங்கள் கவர்ந்துகொள்ள எத்தனிக்கும். புகழிலும் பொருளிலும் வைத் திருக்கும் ஆறாத காதலே அம்மூன்று தோஷங்களையும் எழுப்பு கின்றன.

பொய்யரையும் புறங்கூறுவாரையும் கள்வரையும் பெற்றுள்ள ஒரு தேசம் உலகில் உயரமுடியாது என்பது முன்னரே சொல்லப் பட்டது. ஒரு தேசத்துக்கு ஒழுக்கமே உயிராகவும், வியாபாரம் ராஜ்யதந்திரம் பாஷாஞானம் கூட்டுறவு என்பன அவயவங்களாக வும் இருக்கின்றன. ஒழுக்கமே அந்த அவயவங்களுக்கு வலிமை

தந்து நிலை நிறுத்துகின்றது. வியாபாரம் முதலியனவையும் ஒழுக்கமுமே தேசத்துக்கு முக்கியமாக வேண்டியவை. ஆனாலும் வியாபாரம் முதலியவை ஒவ்வொரு பிரிவான நன்மையையே ஒரு தேசத்துக்குக் கொடுத்துதவும். ஒழுக்கமோ எல்லா நன்மைகளையுந் தரும். ஒழுக்கமில்லாதவன் வியாபாரத்தில் புகுந்தால் நாணயத்தில் கெடுவான். ஒழுக்கமில்லாதவன் ராஜ தந்திரியானால் அரசனுக்காவது குடிகட்காவது மோசக்காரனாவான். ஒழுக்கமில்லாதவன் பாஷாஞானியாயினும் அவனிடத்தில மாணவர்க்கு மரியாதை பிறக்காது. ஒழுக்கமில்லாதவன் கூட்டுறவிற்கு உழைப்பானாயினும் சுயநயத்தையே பாராட்டத்தலைப்படுவான்.

மனதின் ஒவ்வொரு அசுத்தத்தன்மையும் அதையுடைய மனிதனுக்கு ஒவ்வொரு குறையை யுண்டுபண்ணியே நிற்கிறது. ஒரு தூர்த்தனாயினும் ஒரு பொய்யனாயினும் ஒரு கள்வனாயினும் தனது மனத்தெழுந்த கெட்ட ஆசைகளை அடக்கமுடியாதவனாகின்றான். அவன் அந்தத்தாழ்ந்த சக்திகட்கு அடிமையாகின்றான். உலகில் கெடுமதிகொண்டு பாவத்தொழிலைச்செய்வார்க்கு இதுதான் காரணமாகிறது.

தேசத்தலைவர் என்பார், தாழ்ந்தசக்திகட்கு இடங் கொடாமல் உயர்ந்த சக்திகளையே உறுதியாகக்கொண்டு காற்றுக்கும் மழைக்கும் அஞ்சாத கப்பல்போலிருந்து தமது கஷ்டங்களாகிய சமுத்திரத்திலிருந்துத் தாம் கொண்ட கருமமாகிய கரையேறுபவரேயாவர். இவர்களே த்யாகி எனப்படுவாரும். இவர்கள் அழிந்தாலும் அழிந்து படுவரேயன்றி மானத்தை விடுக்கமாட்டார்கள். தமது தர்மம் கெடுவது மானம் கெடுவது அன்றோ? தமது தர்மமாவது இவர்கட்குத் தங்களது தேசதர்மமேயாகும். ஆகையால், மனத்தூய்மை யில்லாதான் தேசதர்மத்தைக் காப்பாற்ற இயலாதவனே யாவான்.

ஒரு குடிகாரன் தலைவனானால் ஒரு குடிக்குத் தனது மரியாதையை இழப்பன். ஒரு தூர்த்தன் தலைவனானால் ஒரு ஸ்திரீக்கு தன் அதிகாரத்தைக் கொடுப்பான். ஒரு பொய்யன் தலைவனானால் ஒரு முக்கியவிஷயத்தில் பொய்சொல்லிக் காரியத்தைத் தலைகீழாக்குவான். ஒரு புறங்கூறுவோன் தலைவனானால் எப்போதும் கலகத்தையே உண்டுபண்ணிக்கொண்டிருப்பான். தீர்த்தம் கங்கையினது ஆயினும், அது சாக்கடையிற் போகும்போது கௌரவிக்கப்படுவதில்லை. அதுபோல உயர்ந்த அதிகாரிகளும் உயர்ந்த கொள்கைகளும் தாழ்ந்தவர்களைப் பின்பற்றியிருப்பின் கௌரவிக்கப்படமாட்டா. ஏனெனில் இவர் ஒழுக்கமில்லாதவராதலினால், இவரது அதிகாரங்களும் உபதேசங்களும் கீழுள்ளாரது செவிகளில் அவர்கள் கவனத்தைப்பின்பற்றிச் செல்வதில்லை. இவர்களைச் சந்தேகத்துடனே கவனிக்கிறார்கள். இவர்சொல்வது உண்மையல்லவென்றும் வேஷமென்றும் அவர்களுக்குத் தோன்றுகிறது. ஆகையால் இவர்கள் பொதுநன்மைக்கு உரியராகாதவர் ஆகிறார்கள். ஒரு மனத்தூய்மை யின்மையானது எத்தனை சக்திகளையும் அழித்து அவற்றைப்பயனற்றவைகள் ஆக்குகின்றன!

ஆகையினால் மனத்தூய்மையே ஒழுக்கமென்று சொல்லப்படுகிறது. மனத்தூய்மையுடையாரே தேசத்தைத் திருத்தும் தன்மையுடையார். மனத்தூய்மையே பொது நன்மையைக் கைகூட்டித் தேசத்தைக் காக்கிறது, மனத்தூய்மை பெற்றவரே அரியபெரியகாரியங்களை சாதித்திருக்கிறார் என்று சரித்திரங்கள் முறையிடுகின்றன. ஒரு உயர்ந்த, யாரும்விரும்பும் நடத்தையே உலகத்தாரை யொருங்கேவசப்படுத்துகின்றன. ஒரு உயர்ந்தகுணமும் ஒழுக்கமு முடையான் எப்போதும் ஒரு கெட்ட தகப்பனாகவாவது ஒரு பொய்யான நண்பனாகவாவது ஒரு கபட உபதேசியாகவாவது ஒரு துரோகியாகிய ராஜதந்திரியாகவாவது மாறமாட்டான்.

"இடர்தீர்த்தல் எள்ளாமை கீழ்இனம் சேராமை
படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பி—னடைநீர்த்தல்
கண்டவர் காமுறும் சொல்காணில் கல்வியின்கண்
விண்டவர் நூல் வேண்டா விடும்".

பத்திராதிபர்.

(136-ம் பக்கத்தொடர்ச்சி)

இப்பொழுது திருவிற்கோலம் என்று மறுபெயர்வழங்கி சமயாசார்யர்களாற் பாடப்பெற்றுத் தொண்டைநாட்டு முப்பத்திரண்டு ஸ்தலங்களில் ஒன்றாய் விளங்குகின்றது. கம்பர், ஓர்கால் தொண்டைநாட்டில் யாத்திரை செய்தபொழுது தாதருக்கு அடிமைப்பட்ட கூவத்து வழியே சென்றாராக, அதுதெரிந்த அவ்வூரார்,கம்பரையடுத்துத் தங்களைப்பாடுமாறு தாழ்ந்து பெரிதும் வேண்ட, அதற்குக்கம்பர் தாதனுக்கு அடிமைப்பட்ட கூவத்தைத் தாம் பாடுவதில்லையென்று மறுத்தனர். அவ்வூரார் அம்மட்டில் ஒழியாராகிக் கம்பர் சிவிகையை நெடுந்தூரஞ் சுமந்தும் அடப்பையிட்டும், வழிபட்டு நின்றதற்கு மனமுவந்து அவர்களைப்பாடினரென்ப. அது:—

" ஒங்கிய செந்தமிழ்த் தாதற் கடிமையவ் வூரதனால்
நாங்கவி சொல்வது மில்லையென் றேகம்ப நாடன்சொல்ல
ஆங்கவ னேறுஞ் சிவிகை சுமந்து மடப்பை யிட்டுந்
தாங்கவி கொண்டது கூவந் தியாக சமுத்திரமே"

என்பதனாற்காண்க. கம்பரோடு ஒட்டக்கூத்தரை விரோதியாக்கிப் பிற்காலத்தார் கூறியகதைகளுக்கு "தமிழ்நாவலர் சரிதையிலேனும், சோழ பாண்டி கொங்குமண்டல சதங்க" ளிலேனும், இந்நூலிலேனும் ஆதாரங்கிடையாமையால், இவ்வாணியன் தாதனுடன் கம்பர்க்கிருந்த பகைமையையே அவ்வாறு மாறிக்கூறினர் போலும்.

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

தீயநினைவும் அதன்பயனும்.

நினைவு அன்பு செய்கை விசுவாசம் என்னும் இந்நான்குமே ஒருவனை ஒரு பெருந்தன்மையான மனிதனாக்குவதற்கு உண்மையான அடிப்படைகளாக இருக்கின்றன.

மனிதாது மூளையே சூக்ஷ்மசக்தியாகிய மனதைக் காரியப்படுத்துதற்குரிய ஸ்தூல சக்தியாக இருக்கின்றது. அந்தச் சக்தி

யும் அவற்றின் செயலுமே ஒருவனது இயற்கையான குணங்களை நிச்சயப்படுத்திக் காட்டுகின்றன. அதிகமாகிய யோசனை செய்கிற மூளைக்கே, ரத்தச்சுழற்சியிலிருந்து ரத்தம் பாய்கிறது. இந்த இரத்தப் பாய்ச்சலினாலே மூளையானது போஷிக்கும் சக்தியைப் பெறுகின்றது. இந்தச் சக்தியே மனதைப் பலமுள்ளதாகவும் சுத்தமுள்ளதாகவும் செய்கிறது. இன்றைக்கு நமது எண்ணங்கள் நன்மையும் சூக்ஷமமுமாக இருந்தால்தான், நாளைக்கு நாம் நன்மையை எதிர்பார்க்கலாம்.

நாம் செல்வத்திலாவது புகழிலாவது பேராசைகொண்டு, ஒருவரது கெடுதியில் மனக்கருத்தைக் கொண்டோமானால், மூளையின் பாகமாகிய பேராசை யறைக்கு மாத்திரம் இரத்தம் சொரியப்பட்டு, அந்தச்சக்தி பலமடைந்து, தனது எதிரான சக்திகளாகும் பரோபகாரம் பெருந்தன்மை என்னும் இவற்றினை மேலோங்க விடாமல் அழுத்தி விடுகிறது. ஒரு வைத்திய சாஸ்திரத்தில் பின்வருமாறு குறிக்கப்பட்டிருக்கிறது:—

"மூளையில் 64 அறைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் சாஸ்திரம் பயிற்சி அல்லது நற்குணம் திக்குணங்களாகிய பழக்கங்கள் என்றும் இவற்றைக் குறிக்கின்றன. அறிவு முதிராத ஒருவனுடைய மூளையில் 64 அறைகளும் நிரம்பப் பெறாமலே இருக்கின்றன. எல்லாமறிந்த ஒரு ஞானியினது மூளையில் 64 அறைகளும் நிரம்பி யிருக்கின்றன. ஆயின் பின்னவரது மூளையில் உள்ள திக்குண அறைகள் உருத்தெரியாமல் அழிந்து கிடக்கின்றன."

எனவே, மூளையை அதாவது நமது சிந்தையை எவ்வளவுக் கெவ்வளவு கலகத்திலும் கலக்கத்திலும் செலுத்தாமல் இருக்கின்றோமோ, அவ்வளவுக் கவ்வளவு நமது மனதும் சத்ப்ரவ்ருத்தியில் புகும் என்பது பெற்றோம். அப்போதே நாம் முயன்று படித்தவை யெல்லாம் அவற்றுக் கேற்ற பயனைத் தருவனவாகும்.

ஒரு இளையவன் தனது நினைவைச் சிற்றின்பங்களிலேயே செலுத்திவருவானானால், அவன் அவற்றுக்கேற்ற தீக்குணங்களின் சக்திகளையே மூளையில் பெருக்கிக் கொண்டுவருகிறான். அதனால், அந்தச் சக்திகளைப் பகைத்துள்ள நற்குணங்கள் வளர்க்கப்பெறாமல் அழிவை யடைகின்றன. ஏற்ப, மனதும் ஸத்ப்ரவர்த்திகளை மறந்து விடுகிறது. படித்த படிப்பினால் வேஷம் போட்டுக் கொண்டவனாயினும், அவனை அம்மனமானது கோபத்திலும் பொறாமையிலும் பிரவர்த்திக்கும்படி செய்து தன்னழிவு பிறர்கலக்கம் இவற்றுக்கு ஆளாக்கி விடுகிறது.

மூளையின் சக்திகளும் நரம்புகளின் வலிமையும் இளமையிலேயே முக்யமாகச் சேகரிக்கப் படுகின்றன. அக்காலத்தில் அவைகள் சரிவர வளர்க்கப் பெறாவிட்டால், முதுமையில் திருத்தமடைதல் சிரமமாகும். தமிழ் மூதாட்டியின் அருமைத் திருவாக்காகிய "இளமையிற்கல்" என்னும் சூத்திரம் இது பற்றி எழுந்ததாகவும் கூறலாம்.

மூளையின் சக்திகளை அடிக்கடி உண்டாகும் நினைவுகளினால் பழக்கத்துக்குக் கொண்டு வருவோமானால், அந்தந்த ப்ரவர்த்திகளில் மனது களைப்பில்லாமல் நின்று உறுதிபெறும். அப்போது செய்கை பலப்படும். ஆனால், எண்ணங்கள் மாத்திரம் நன்மையானவைகளாக இருக்கவேண்டும். இல்லாவிடின், நாம் அழிவதற்கு இன்னொருவர் பிரயத்தனப்படல் வேண்டாததாகும். "நன்மை விதைத்தால் நன்மை விளையும், தீமை விதைத்தால் தீமை விளையும்." இது இதனையே வற்புறுத்துகின்றது. நினைவால் செய்கையும், செய்கையால் பழக்கமும், பழக்கத்தால் குணமும், குணத்தால் பெருமையும், பெருமையால் வாழ்வும், வாழ்வால் களிப்பும் பெறுகிறோம். நினைவு மாறின் களிப்பே இல்லை. களிப்பும் கண்ணியமும் ஒருவனது நிலையினால் பெறலாகா. ஆயின் அவனது நினைவினாலும் செய்கையினாலுமே பெறலாகும். தீயநினைவால் அவமானமும் நல்ல நினைவால் கண்ணியமும் பெறுகிறோம்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்" திருவள்ளுவர்.

தருமம் பற்றிய தக்கவர்க் கெல்லாம்
கருமம் கட்டளை யென்ப கட்டதே" கம்பர்.

"நன்னிலைக் கண்தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்" நாலடியார்.

ஆதலால்,

தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பின்
ஊன்கெடினும் உண்ணார்கைத் துண்ணற்க—வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினும் உரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்" நாலடியார்.

பத்திராதிபர்.

மித்திரர்களுக்கோர் விக்ஞாபனம்.

நாட்டரசன் கோட்டையில் ஸ்ரீவெங்கிடேசப் பெருமாள் ஸன்னிதிக்கு முன்பாக ஷையூர் அரு. சு. வே. காசிவிஸ்வநாதன் செட்டியார் அவாதசிமடம் காம்பவுண்டில் இதற்கென்று அமைத்திருக்கும் கட்டிடத்தில் நகரத்தார்களின் முயற்சியின் ஊக்கத்தால், "வித்தியாபரிபாலன ஸங்கம்" நாளது வைகாசிமீ ௨௨ (2-5-517) சுக்கிரவார சுபதினத்தில் மிகவும் விமரிசையாய் நடைபெறும். சிறப்புக் கொண்டாட்டம் வைகாசிமீ 22, 23 (ஜூலைமீ 4, 5உ) தேதிகளில் உபந்யாச முதலியவைகள் கற்றறிந்த சான்றோர்களால் நடைபெறும்.

நாட்டரசன்கோட்டை,
வைகாசிமீ 6உ } இங்ஙனம்
நகரத்தார்.

சாது சங்கடகோசபை.

தொழிலபி விருத்தியைப் பற்றித்
தொழிலிலாகாத் தலைவர்.
ஜப்பானும் சென்னை மாகாணமும்.

ஜப்பானி லிருந்து சமீபத்தில் திரும்பிவந்த நெசவுத்தொழில் நிபுணரான மிஸ்டர் டி. ஏ. ராமஸ்வாமி ஆச்சாரி, நேற்றுமாலை பச்சையப்பன் ஹாலில், தொழிலிலாகாத் தலைவரான மிஸ்டர் இன்னெஸின் அக்கிராசனத்தின் கீழ், "ஜப்பானில் நெசவுத் தொழில்" என்றவிஷயத்தைப்பற்றி ஒருபன்யாசஞ்செய்தார். உபந்நியாசகர் எழுந்து நின்று ஜப்பானில் நெசவுத்தொழில், பூர்வகாலம் முதல் நாளது வரையில் எப்படி அபிவிருத்தியாயிற்றென்ற விஷயத்தைப் பற்றி நன்கு விளக்கினார். அபிவிருத்திக்குக்காரணம் ராஜாங்கத்தினரின் உதவியும் வேறு பல சந்தர்ப்பங்களுமேயாகும். சென்னையில் நெசவுத்தொழில் அபிவிருத்தியடைய வேண்டுமானால், கவர்ன்மெண்டார், அத்தொழிலுக்கு நேராகவும் வேறுமூலமாகவும்உதவி செய்துவரவேண்டும். அவ்வித ஸ்கூல்களை ஸ்தாபிக்க வேண்டும், தொழிலாளிகளைப்பயிற்சி செய்விக்கவேண்டும். மாதிரித் தொழிற்சாலைகளை ஸ்தாபிக்கவேண்டும். கிராமாந்தரங்களில் தொழிலுக்கு உதவிசெய்து வரவேண்டும் என்று பேசிமுடித்தார்.

மிஸ்டர் இன்னெஸின் பேச்சு:—ஜப்பானியர்கள் அற்புதமான வேலைகளைச்செய்து முடிக்கும்சாமார்த்திய முள்ளவர்கள் என்றவிஷயம் எல்லோருக்கும் தெரிந்ததே. முக்கியமாக விவசாயத் தொழிலுக்கென்றே ஏற்பட்ட அவர்களுடைய தேசத்தை சென்ற 50 வருஷகாலத்திற்குள் கைத்தொழிலும், வியாபாரத்திலும் சிறந்த தேசமாக மாற்றியிருக்கும் அவர்களுடைய சாமர்த்தியத்தை என்னவென்று சொல்லுவது. இவ்விதமாக அவர்கள் எப்படி மாற்றினார்கள் என்ற விஷயத்தைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். படிப்பில்லாத குடும்பம், எக்கிராமத்திலும் இருக்கக்கூடாது. படிப்பில்லாத ஒருவன் எந்தக் குடும்பத்திலும் இருக்கக்கூடாது. இவ்விதமாகப்படிப்பை அபிவிருத்தி செய்யும்படியாக ஜப்பானில் ஏற்பாடு செய்யப்பட்டது. மேனாட்டாரின் முறைப்படி தொழில்கள் அநுஷ்டிக்கப் பட்டு வந்தன. கவர்ன்மென்டார் பட்டு நெசவுமில் ஒன்றையும், கம்பளித் தொழில் சாலையையும், கண்ணாடித் தொழிற்சாலையையும், காகித மில்லையும், வேறு பலமாதிரித்தொழிற்சாலைகளையும் ஸ்தாபித்தார்கள். அன்னிய தேசங்களிலிருந்து நிபுணர்களை வரவழைத்தார்கள். சாலைகளில் வேலைசெய்வதற்காக அன்னிய தேசங்களிலிருந்து 80 நிபுணர்கள் வரவழைக்கப்பட்டார்கள். பிறகு 1890-ம் வருஷத்தில்

தொழிற் பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. இது சித்திபெறவில்லை. பிறகு ஜப்பானுக்கும் சீனாவுக்கும் யுத்தம் ஆரம்பமாகி முடிந்ததின் பேரில், தொழிற் படிப்பை அபிவிருத்திசெய்ய வேண்டுமென்ற அவசியத்தை ஜப்பானியர்கள் உணர்ந்தார்கள். 12வருஷ காலத்திற்குள் அதாவது 1902ம் வருஷம் முடிவில் ஜப்பான் தேசத்தின் ஏற்றுமதி 50 லக்ஷம் பவுனிலிருந்து 2 கோடியே 5 லக்ஷம் பவுனாக உயர்ந்தது. பிறகு ருஷியாவுக்கும், ஜப்பானுக்கும் நேர்ந்த சண்டையினால் தொழில் அபிவிருத்தி இன்னும் அபிவிருத்தி யடைந்தது. இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் மஹாயுத்தத்தினால் ஜப்பானியர்கள் ரொம்ப முன்னேற்றமடைந்து வருகிறார்கள். சில கைத்தொழில்களுக்கு கவர்ன்மெண்டார் நேராகப் பண உதவி செய்துவருகிறார்கள். தொழில் ஸ்கூல்களை கவர்ன்மெண்டார் ஸ்தாபித்து நடத்திவருவதுமல்லாமல் தொழில் நிபுணர்களை தேசமெங்கும் அனுப்பி, ஜனங்களுக்குப் போதிக்கும்படிச் செய்து வருகிறார்கள். மாணாக்கர்களையும் வியாபாரிகளையும் அன்னிய தேசங்களுக்கு அனுப்பி, உயர்தரப் படிப்பைக் கற்றுக்கொண்டு வரும்படிச் செய்கிறார்கள். கவர்ன்மெண்டார் முயற்சியினாலேயே சென்ற 50 வருஷ காலத்திற்குள் ஜப்பான், தொழிலில் இவ்வளவு அபிவிருத்தி யடைந்திருக்கிறது.

சென்னையைப்பற்றி யோசிக்குமிடத்து நேர் விரோதமாயிருக்கிறது; கேட்பதற்கே மனதிற்கு வருத்தத்தை யுண்டுபண்ணக் கூடியதா யிருக்கிறது. சமீப காலத்தில் கொஞ்சம் அபிவிருத்தி முகம் காட்டி வந்தது. அதையும் ஜப்பானின் அபிவிருத்தியையும் ஒப்பிட்டுப் பார்த்தால், சென்னையின் அபிவிருத்தி ஒன்றுமில்லை என்றே சொல்லலாம். ஜப்பான் கவர்ன்மெண்டாரின்வழியைச் சென்னையில் அனுஷ்டித்து வருவது நலமாகும். அம்முறைகளைக் கற்க வேண்டியது என்னுடைய முக்கிய கடமையாகும். சென்னையும் ஜப்பானைப் போல விவசாய நாடுதான். சென்னையின் விஸ்தீரணமும் ஜப்பானின் விஸ்தீரணமும் ஒன்றே. ஜப்பானில் பொன் வெள்ளி இரும்பு தாம்பிரம் ஈயம், கந்தகம் முதலிய கனிஜ வஸ்துக்கள் ஏராளமாய்க் கிடைக்கின்றன. சென்னையிலோ அவ்வித கனிஜவஸ்துக்கள் இல்லை. சென்னை ராஜதானியைச் சேர்ந்த சேலம் முதலிய ஸ்தலங்களில் இரும்பு ஏராளமாக அகப்படுகிறது. கனிகளில் வேலை நடத்தப்படுவதற்கு வேண்டிய நிலக்கரி கிடைக்கிறதில்லை. ஜப்பானில் வருஷந்தோறும் பத்து லக்ஷக்கணக்கான டன் நிலக்கரி உற்பத்தியாகிறது. ஏராளமான எண்ணெயும் உற்பத்தியாகிறது.

சென்னை ராஜதானி முழுவதிலும் நிலக்கரியும் இல்லை, எண்ணெயும் இல்லை. இப்படி யிருக்க, சென்னை ராஜதானியில் தொழில் அபிவிருத்தியாகவில்லையே என்று சொல்லுவதில் பிரயோஜன மென்ன? பம்பாயில் இபத்தை

யான துறைமுகம் இருக்கிறது. அங்கே இருக்கும் பார்ஸிகளுக்கும் பம்பாய் மகமதியர்களுக்கும், கைத்தொழிலையும் வியாபாரத்தையும் முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் அபிலாஷை இருக்கிறது. இங்கே, சென்னையிலோ, படிப்பாளிகளும் கவர்ன்மெண்டு உத்தியோகத்திற்குப்போகவேண்டுமென்ற அபிலாஷை கொண்டவர்களாக இருக்கிறார்கள். தொழிலில் அபிவிருத்தி ஆக ஆக, தொழிற்சாலைகள் பல ஏற்படும். அப்பொழுது தொழிலில் பயிற்சி பெற்றவர்களின் உதவி அதிகமாக வேண்டியிருக்கும். அதற்குத் தயாராக பலர் இருப்பார்கள். தொழிற்சாலையில் அனுபவம் இல்லாதவர்களின் தொழிற்படிப்பு பிரயோஜனப்படாது.

முதலில் நமது தொழில் தலையெடுக்கவேண்டும். அப்பொழுதுதான் தொழிற் படிப்பு அபிவிருத்தியாகும். இந்த விஷயத்தில் கவர்ன்மெண்டாரே அதிகமாக ஒன்றும் செய்ய முடியாது. ஜனங்களும் கவர்ன்மெண்டாருடன் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும். பணம் இல்லாமல் தொழில்கள் ஸ்தாபிக்கமுடியாது. தொழில்களில் ஜனங்கள் பணத்தைப் போடப் பின் தாங்கினால், அபிவிருத்தி மெதுவாகத்தான் ஆகும்.

சென்னையில் யுத்தக்கடனுக்கு ஏன் ஜாஸ்திப் பணம் சேரவில்லை? இதற்குப்பதில் சொல்லுவது அதிக கஷ்டமில்லை. சென்னையில் ஜனங்கள் பணத்தை பூமிவாங்குவதிலும் வட்டிக்குக் கடன் கொடுப்பதிலும் உபயோகப் படுத்தி வருகிறார்கள். இவ்விரண்டு விஷயங்களில் நன்மை அதிகமில்லை. நான் என்னுடைய உபந்நியாசத்தை நிறுத்தி விடுவதற்கு முன்பு இன்றைய தினம் எடுத்துக்கொண்டிருக்கும் உபந்நியாச விஷயத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தையைச் சொல்லி முடிக்கிறேன். உபந்நியாசகர் சொன்னபடி ஜப்பானில் பெரிய நெசவு மில்லுகள் இருந்தபோதிலும் அவைகளுக்குப் பக்கத்தில் விசைத்தறி யந்திரங்கள் இருந்து வருகின்றன. விசை நாட்டுத்தறியைவிட கைத்தறிகள் ரொம்பப் பிரயோஜனமானவைகள். இதையறிந்தே இங்கிலாந்தில் சமீபகாலத்தில் கைத்தறிகள் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன. ஜப்பானிலும் அப்படித்தான் இருக்கிறது. கைத்தறித் தொழில் அபிவிருத்தியாக வேண்டுமானால் அதைச் சரியாக நடத்துவதற்கு போதுமான ஒழுங்கும் ஏற்பாடும் வேண்டும். ஜப்பானில் கைத்தறித் தொழில் சரியாக நடத்தப்பட்டு வருகிறது. சென்னையில் அதை எப்படிச்சரியாக நடத்துவது என்பதுதான் பிரசினை.

ஜப்பானில் நெசவுக்காரர்கள் சுருசுருப்பாயும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டவர்களாயும், சாமர்த்தியசாலிகளாயும் கடனுக்கு உள்படாதவர்களாயும் இருக்கிறார்கள் என்று உபந்யாசகர் சொல்லியிருக்கிறார். இங்கே சென்னையிலேயோ, நெசவுத்தொழிலாளிகளுள் சிலரைத் தவிர மற்றவர் படிப்பில்லாதவர்களாயும் குடிவழக்கத்தை அனுஷ்டிப்பவர்களாயும் இருப்பதும் தவிர, வட்டிக்குக்கடன்கொடுப்பவர்களிடம் சென்று, வட்டிக்குக் கடன் வாங்குகிறவர்களாயும் இருக்கிறார்கள். இதற்குப்பரிகாரவழி என்னவெனில், கல்வி கற்பித்து வருவதும் ஒற்றுமையுணர்ச்சி முயற்சியை ஆதாரமாகக்கொண்டு அதின்படி அவர்களை நடத்தும்படி செய்து வருவதுமாகும். இந்த விஷயத்தைப்பற்றி மிஸ்டர் ஸ்வாமிக்கண்ணு பிள்ளையும் நானும் கடிதப் போக்குவரத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம், என்று மிஸ்டர் இன்னெஸ் பேசிமுடித்தார்.

மதிப்புரை.

கல்வி:—இது, ஒரு மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை. இது இந்தச் சித்திரை முதல்தான்மதுரையிலிருந்து பிரசுரமாகிவருகிறது. இதனை நடாத்துபவர் கல்வியிற்சிறந்து பரோபகாரத்திற் பெருத்த ஆர். எஸ். நாராயணசாமி அய்யர், பி. ஏ.பி. எல். கல்வியின் ஏற்றத்துக்கு இன்றியமையாத பலவியாஸங்கள் பல மேதாவிகளால் எழுதப்பெற்று உலாவுகிறது. சில சித்திரப்படங்களும் அமையப்பெற்றிருக்கிறது. இதன் வருஷச்சந்தா இந்தியாவுக்கு ரூபாய் ஒன்றேதான். இந்தக்காலத்தில் இதனை இப்படிக்கொடுப்பதும் தேசோபகாரத்தின் நிமித்தமேயன்றி வேறன்று என எண்ணுகிறோம்.

தொழில்:—சென்னையிலிருந்து பிரசுரமாகிவந்த "விச்வகர்ம குலோபகாரி" என்னும் மாதாந்தப் பத்திரிகையானது இந்த மாதம்முதல் இப்பெயர் கொண்டு உலாவுகிறது என்று இதன் ஆசிரியர் எழுதுகிறார். இதன் பெயருக்கேற்ப இதனுள் தொழிற்கல்வியே மிகுதியும் எழுதப்பெற்றிருக்கின்றன. அவற்றுளும் நீக்குச்சி செய்வதற்கான யந்திரம் எனும் வியாசம் அவசியம் படிக்கப்பட்டு அதற்கேற்ற முயற்சியும் தேடப்பெறல்வேண்டும்.

பெண்கல்வி:—இது வழக்கம் போல் இம்மதியிலும் நல்ல வியாஸங்கள் எழுதப்பெற்று விளங்குகின்றது.

வறிவின்பயன் யாது? இது, யாழ்ப்பாணத்து உடுவில் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் வ. மு. இரத்நேசுவரையரால், தேவகோட்டை வைசியசிவானந்தசபையின் மூன்றாவது வருஷோத்சவத்தின் காலத்தில் செய்யப்பெற்ற பிரசங்கத்தின் சாரமாகும். அறிவின்பயனை நன்குவிளக்கி இகபரசாதகத்தைத் தரத்தக்கதானதொரு ஸாதனமாக இருக்கிறது. இதனுள் ஆசிரியர் (1) ஆத்மா உண்டென்பது (2) ஆத்மா இது என்பது (3) ஆத்மாவும்வேறு பரமாத்மாவும் வேறு (4) ஆத்மாவின் பிரமாணம் (5) ஆத்மலக்ஷணம் என்றிப்படியாகப் பதினொரு விஷயங்களை எடுத்து நன்கு உபந்யசித்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் படிக்கத்தகுந்ததேயாகும். இப்படியாக வித்துவான்களது அருமைத் திருவாக்கினின்றும் அவ்வப்போது எழும் உபந்யாஸங்களைப் புத்தகரூபமாக்கித் தந்து உலகத்தாரை உயர்நிலைக்குக் கொண்டுவர வேண்டுவதும் உத்தமர் கடமைகளில் ஒன்றாகும்.

தர்பாரவர்களால் விளம்பரம்.

மஹா-ா-ா-ஸ்ரீ மஹாராஜா அவர்களுடைய ஆக்ஞையை ஒத்து ஸமஸ்தானத்திலுள்ள கிருஷிகர்களுடைய வாலிபப்பிள்ளைகளை வியவஸாய அபிவிர்த்தியில் பழக்கச்செய்ய ா-தர்பார் அவாகள் ஓர் வியவஸாய பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்க உத்திரவு செய்திருக்கிறார்கள். அதைக்குறித்த நிபந்தனைகள் அடியில் காட்டப்பட்டிருக்கிறது.

பள்ளிக்கூடம் இந்த வருஷம் ஜூலை 1௳ முதல் ஆரம்பிக்கப்படும். மேமீ 31௳க்குள்ளாக பள்ளிக்கூடத்தில் சேருகிறதற்கு மனுக்கள் அனுப்பப் படவேண்டியது.

"புதுக்கோட்டை ஸமஸ்தானம் வியவஸாய பள்ளிக்கூடம்"

இடம்.—இச்சமஸ்தானத்தைச் சேர்ந்த புதுக்கோட்டை டவுனில் ஏற்படுத்தியிருக்கும் ஸ்டேட் வியவஸாயப்பண்ணையில் மேற்படிபள்ளிக்கூடம் ஏற்படுத்தப்படும்.

ஆதீனம்.—மேற்படி பள்ளிக்கூடமானது திவான்பேஷ்கார் அவர்களுடைய ஆதினத்துக்குள்பட்டு ஸமஸ்தானத்தின் வியவஸாய டிபார்ட்மெண்டினால் நடத்தப்பட்டு வரும்.

கொள்கை.—கிருஷிகர்களுடைய வாலிபப்பிள்ளைகளை சாமர்த்தியமாகவும் மிகவும் புத்திசாலித்தனமாகவும் பயிரிடக்கூடியவர்களாகச் செய்யும் பொருட்டு இந்தப்பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வியவஸாயத் தொழிலை நன்றாயறியும்பொருட்டு எவ்வளவு சொல்லிக்கொடுக்கவேண்டுமோ அவ்வளவு மட்டில் பத்திரிகை மூலமாய் சொல்லிக்கொடுக்கப்படும். ஆனால் வியவஸாயத்தைக்குறித்த எல்லா விஷயங்களும் செய்கை மூலமாய் சொல்லிக்கொடுக்கப்படும்.

படிப்பின் காலம்.—மேற்படி படிப்பானது இப்போதைக்கு ஒரு வருஷத்துக்குள் கற்றுக்கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடமானது பிரதி வருஷமும் ஜூன் மாதம் முதல்வாரத்தில் ஆரம்பிக்கப்படும். பின்வருமாறு மூன்று தடவைகளில் படிப்பு சொல்லிக்கொடுக்கப்படும்

முதல் தடவை—ஜூன்மீ முதல் நவராத்திரி வரையில்.
இரண்டாவது தடவை—நவராத்திரி முடிந்தது முதல் டிஸம்பர்மீ வரை
மூன்றாவது தடவை—ஜனவரிமீ முதல் ஏப்ரல்மீ வரையில். யில்

அட்மிஷன்.—ஒரு வருஷத்திற்கு 12 பையன்கள்தான் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படுவார்கள். ஆனால் ஸமஸ்தானத்தில் யார் யார் நிலங்கள் வைத்துக்கொண்டு வியவஸாயத்தைக்கவனித்து வருகிறார்களோ அவர்களின் பிள்ளைகளை பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொள்வதில் முதலில் கவனிக்கப்படும். பள்ளிக்கூடத்தில் சேருவதற்கு பிள்ளைகள் தாசில்தார் மூலமாக இத்துடன் அடக்கியிருக்கும் A-பாரத்தில் கண்டபடி மனுச்செய்துகொள்ளவேண்டியது. தாசில்தார்கள் திவான்பேஷ்கார் அவர்களுக்கு மேமீ 31உக்குள்ளாக மேற்படி மனுக்களை அவர்களுடைய சிபார்சுகளுடன் அனுப்பவேண்டியது. மனுதார்கள் பிரைமெரி பரீக்ஷை ஸர்ட்டிபிகேட்டாவது பெற்றிருக்கவேண்டியது.

ஸமஸ்தானத்தில் வியவஸாய அபிவிர்த்தியில் ஊக்கமுள்ளவர்களுக்கும், ஸமஸ்தானத்திலுள்ள Training School மாணாக்கர்களுக்கும் ஸ்பெஷலாய் இப்பாடம் சொல்லிக்கொடுக்கப்படும்.

படிப்பின் விவரம்.—படிப்பு சொல்லிக்கொடுப்பதற்குரிய விதிகள் B.பாரத்தில்காட்டப்பட்டிருக்கின்றன. ஆனால்சொற்பமாறுதல்கள் அவசியமாயிருந்தால் அப்போதைக்கப்போதுசெய்யப்படும். வியவஸாயத்தொழிலில் செய்து காட்டக்கூடிய பாடங்களில், உழுவது, விதைப்பது, பயிர் நடுவது இவைகளையும் இன்னும் இவைகளைப்போன்றவைகளையும் மாணாக்கர்களே செய்யவேண்டியதாயிருக்கும்.

சம்பளம்.—படிப்பு சொல்லிக்கொடுப்பதற்கு சம்பளம் வசூலிக்கப்படமாட்டாது. மேலும் ஒவ்வொரு மாணுக்கருக்கும் மாதம் 1-க்கு ரூ 6-வீதம் Stipend (உபகாரச்சம்பளம்) கொடுக்கப்படும். பிற்பாடு சௌகரியங்களை ஏற்படுத்திக்கொண்டு மாணுக்கர்களுக்கு Stipend-க்கு பதிலாக இனமாக இருப்பதற்கு இடமும் சாப்பாடும் உபாத்தியாயர்களுடைய பாராமரிஷையில் ஏற்படுத்தப்படும்.

விடுமுறை நாட்கள்.—கெஜட்டில் விளம்பரம் செய்யப்பட்டிருக்கும் விடுமுறை நாட்களெல்லாம் கூடியவரையில் விடுமுறை நாட்களாகவே அனுஸரிக்கப்படும். மேலும் வருஷத்துக்கு மூன்று தடவை வெகேஷன் உண்டு.

(1) தஸரா விடுமுறை நாட்கள்.
(2) கிறிஸ்ட்மஸ் விடுமுறை நாட்கள்.
(3) கோடை விடுமுறை நாட்கள்.

மாணுக்கர்கள் எல்லோரும் ஒவ்வொரு வகுப்புக்கும் தவறாமல் சரிவரபோய்க்கொண்டு வருகிறார்களா என்று கண்டிப்பாய் கவனிக்கப்படும்.

A. பாரம்.

புதுக்கோட்டை ஸமஸ்தானம் வியவஸாய பள்ளிக்கூடத்தில் சேருவதற்கு மனு.

1. மாணுக்கரின் பெயர்—
2. இருப்பிடம் கிராமம் தாலுக்கா—
3. மாணுக்கரின் ஜாதி—
4. மனுச்செய்யும்போதுள்ள வயது—
5. மாணுக்கரின் குடும்பத்துக்கு சொந்தமான நிலம் } (1) விஸ்தீர்ணம். (2) நிலம் இருக்குமிடம்.

(6) மாணுக்கரால் தேறப்பட்டிருக்கும் பரீக்ஷைகள். } (1) என்ன பரீக்ஷை. (2) எப்பொழுது. (3) எவ்விடத்தில்.

(7) தகப்பனுரின் தொழில்—

மாணுக்கரின் கையெழுத்து.

B. பாரம்.

பள்ளிக்கூடத்தில் சொல்லிக்கொடுக்கும் பாடங்களின் அட்டவணை.

(1) கணிதம், பூகோளசாஸ்திரம் (பூமியின் அமைப்பு), பொருள்பாடம், கிராமவாசமும், சுத்தமும் வியவஸாயம், சிடிசன்ஷிப் இவைகள் பள்ளிக்கூடத்தில் புஸ்தகங்கள் மூலமாகச் சொல்லிக்கொடுக்கப்படும்.

(2) இவைகளிலும் வியவஸாயத்துக்குரியவைகளையே முக்கியமாக சொல்லிக்கொடுக்கப்படும். அதாவது கணிதத்தில் நாணயம், நிறை, அளவு, விலை மதிப்பு, வட்டிபோடுதல் இவ்விதபாடங்கள் சொல்லிக்கொடுக்கப்படும். பாலிலிருந்து வெண்ணெய் எடுப்பதைப்பற்றியும் ஆடுமாடுகளின் நோய்களைப்பற்றிய சாஸ்திரமும்சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படும். பாடங்களின் விபரமும் அதற்குச்சம்பந்தப்பட்ட ஆபீஸரின் பெயரும்அடியில் விபரமாய் காட்டப்பட்டிருக்கிறது.

A. வியவசாயம். .... 140 பாடங்கள்.

(1)	பூமியின் மண்திறம்	10	பாடங்கள்
(2)	வியவஸாயக் கருவிகள்	6	,,
(3)	தண்ணீர்பாய்ச்சல்	8	,,
(4)	உரம்	10	,,
(5)	பயிர்கள்	20	,,
(6)	விதையும், விதைபொறுக்கி எடுத்தலும்	5	,,
(7)	சேர்த்துவைப்பதும், வியாபாரம் செய்வதும்	4	,,
(8)	ஆடு மாடுகள், பாலிலிருந்து வெண்ணெய் எடுப்பது	10	,,
(9)	பயிர்களுக்கு ஏற்படும் நோய்	10	,,
(10)	பண்ணையும், பண்ணையைப்பாதுகாப்பதும்	4	,,
(11)	தோட்டமும், தோட்டப்பயிரும்	10	,,
(12)	பரம்படித்தல், அல்லது மட்டப்படுத்துதல்	2	,,
(13)	மென்சுரேஷன், பில்ட்லர்வேயிங்	10	,,
(14)	பூமியின் அமைப்பு	4	,,
(15)	கணிதம்	4	,,
(16)	பொருள்பாடம்	6	,,
(17)	கிராமத்துக்குரிய Economics and Sanitation	10	,,
(18)	ஐக்கியம். (ஒற்றுமை)	5	,,
(19)	காடுகளின் பிரயோஜனம், மரம் செடிகள் பயிர் செய்வது	2	,,

இந்த 140 பாடங்களும் வியவஸாயத்தைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களால் சொல்லிக்கொடுக்கப்படும். Veterinary Assistant அவர்கள் ஆடு மாடு முதலியவைகளின் நோய்களை நிவர்த்திக்கவேண்டிய 28 பாடங்கள் சொல்லிக்கொடுப்பார். Workshop சார்ஜையும் ஸமஸ்தானத்தின் ஆயில் இஞ்சின் சார்ஜையும் வகிக்கிற உத்தியோகஸ்தர்களால் தச்சுவேலைகள் கொல்லுவேலைகள் ஆயில் இஞ்சின்ஓட்டும்விதம் இவைகளைப்பற்றிய 28 பாடங்கள் சொல்லிக்கொடுக்க

படும். Training School மாணாக்கர்கள் திங்கட்கிழமை வியாழக்கிழமை இரண்டுதினமும் காலை 6 மணிமுதல் 8மணிவரையில் வியவஸாயத்தை கற்றுக் கொள்ளும்பொருட்டு பண்ணைக்குவரலாம். பயிரிடும் விதங்களையும் அதினின்றும் உண்டாகியிருக்கும் பயிர்களையும்பார்க்க மாணாக்கர்களை ஸ்டேட் முழுவதும் கூட்டிக்கொண்டுபோவதற்குத்தக்க ஏற்பாடுகளும் செய்யப்படும்.

நடத்திக்காட்டும் செய்கைகள்.

ஜூன்மீ ஜூலைமீ—ஆரம்பவியவஸாயம் (உழுவது, கட்டி உடைத்தல் [முதலானவை

ஆகஸ்டு செப்டெம்பர்—உரம், அதை உபயோகிப்பது.

செப்டம்பர் அக்டோபர்—விதை, விதைவிதைப்பதும், பிற்பாடு அதை [நடுவதும்.

அக்டோபர் டிசம்பர்– களையெடுத்துப்பயிரைக்காப்பாற்றுவது-

டிஸம்பர் பிப்ரவரி–கதிர் அறுத்து அடிக்கிறது.

பிப்ரவரி எப்பிரல்–சேர்த்துவைத்து வியாபாரத்துக்கு கொண்டுபோவது

மே—விடுமுறைகாலம்.

SIDNEY BURN
For Darbar.

கடிதங்கள்.

சபைநிகழ்ச்சி விபரங்கள்.

புதுவயல் ஞானப்பிரகாச ஸபை.

ஸ்ரீ பரமேசுவரரது திருவருளால், ஒழுங்குற நடைபெற்றுவரும் இச்சபையின் 2.வதுஞ் 10வது மாதாந்தக் கூட்டம் நள ஞு பங்குனிமீ 30உ (12-4-17) குருவாரம் மாலை 3½ மணிக்கு (லால்குடி) பிர்மஸ்ரீ. சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்களின் அக்கிராஸனத்தின் கீழ்க்கூடி, மேல்வருமாறு நிகழ்ந்தது.

(நிகழ்ச்சிவிவரம்)

விஷயங்கள்	உபந்நியாசகர்கள்.
1 பிர்மஸ்ரீ. தலைவரவர்களின் வரவேற்பு	(மூலையூர். மெ. வி. ஸபா காரியதரிசி) ஸ்ரீமாந். சுப. குமரப்பசெட்டியாரவர்கள். (ஞா. பி. ஸ. காரியதரிசி யவர்கட்காக)
2. முகவுரை	பிர்மஸ்ரீ. தலைவரவர்கள்
3. வித்தியாசாலை	சுப. அண்ணாமலை (ஞா. க. மாணவன்)
4. மனமேகாரணம்	பிர்மஸ்ரீ. மீனாட்சிசுந்தரம் ஐயரவர்கள் (ஞா. க. ஆங்கில ஆசிரியர்)
5. ஸத்தியம்	(அ. சி. த. அ.) காவேரி ஸ்ரீ. M. V. G. அவர்களின் மாணவி, காரைக்குடி.
6. (கம்பராமாயணத்துள்) "தருகைநீண்டதயாதன்" என்னும் தலைப்பினையுடைய காப்புச் செய்யுளாராய்ச்சி.	ஷை. பிர்மஸ்ரீ. M. V. கோவிந்தராஜ ஐயங்காரவர்கள்.
7. தேவாரப்பிரபாவம்	ஸ்ரீமத். நாகலிங்கதேசிகரவர்கள்.
8. பதியிலக்கணம்	ஸ்ரீமத். C. துரைசாமிதேசிகரவர்கள்.) (ஞா. க. தமிழாசிரியர்.)

9. பிர்மஸ்ரீ. தலைவரவர்கள், ஒவ்வொரு உபந்நியாஸத்தின் முடிவிலும் அவ்வவ்விஷயத்தை நன்கு விளக்கத்தக்க, தமது அரிய அபிப்பிராயங்களை வியக்தமாகக் கூறினார்கள்.

10. ஷை. ஞா. க. தமிழாசிரியரவர்களின் குமாரர். C. D. சுப்பிரமணியம் என்பவரால், இடையிடையே தேவார, திருவாசகாதி யருட், பாக்கள் இன்னிசையோடு ஓதப்பெற்றன.

ஷை. ஞா. க. ஆங்கில ஆசிரியரவர்களால் முறையாக வந்தனோபசாரமும் இராஜவாழ்த்தும் கூறப்பட்டு, கடவுள் வாழ்த்துப்பாடி ஆர, சந்தன, தாம்பூலாதிகள் வழங்க, மாலை 9 மணிக்கு மங்களகர கோஷத்துடனே, ஸபை நன்கு நிறைவேறியது.

குறிப்பு:—தற்காலம் இராமேசுவர யாத்திரை செய்திருந்த (ஞா. க. காரியதரிசி) ஸ்ரீமாந். சோமசுந்தர செட்டியாரவர்கள் இம்மாதக் கூட்டத்துக்குத் தாம் வரக்கூடாமற் போயினமையால், வழக்கம்போல ஸபையைச் சிறப்பாக நடப்பிக்கும்படி தம்முடைய பிரதிநிக்குத் தந்தி மூலமாகத் தெரிவித்திருந்ததோடு, இத்தைக் கூட்டத்தின் தலைவரவர்களையும், மேற்கூறியவாறே தந்திமூலமாகக் கேட்டுக்கொண்டார்கள். அத்தந்தி உபந்நியாஸ நிகழ்ச்சி காலத்தில் கிடைத்தது ஸபையில் வாசிக்கப்பட்டுப் போன்பும் ஊக்கமுங் கொண்டு ஸபை செவ்வனே நடைபெற்றது.

நன்மை நவில்வோன்.

தேவகோட்டை

வைசிய சிவாநந்தஸபை.

மேற்படி சபையின் சித்திரை மாதத்தியக் கூட்டம் நாளது சித்திரைமீ 13௳ புதன்கிழமை யன்று தேவகோட்டைச் சிவாலயத்தின் முன்னுள்ள அலங்காரக் கொட்டகையில் மகிபாலன்பட்டி வித்வான் மு. கதிரேசன் செட்டியாரவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் நடைபெற்றது. தனவைசியஸ்ரீமான்கள் பலர் வந்திருந்தார்கள். பல வித்வான்களும் விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீமான். மு. கதி-அவர்கள் ஆரம்பப் பிரஸங்கத்தை அவர்களது படிப்பின் முதிர்ச்சிக்குத் தக்கபடி சபையின் நோக்கத்தைச் சொல்லிமுடித்து பிர்மஸ்ரீ சுந்தரேசுவரய்யரவர்களைக் கொண்டு வரகுணபாண்டியனது சரித்திரத்தைப் பிரஸங்கிக்கச் சொல்லி யாசனத்தமர்ந்தார்கள்.

அவர்கள் பல மேற்கோள்களுடன் வெகு அழகாகப் பிரஸங்கித்ததில் வரகுணனுக்கு ஏற்பட்ட பிர்மஹத்தி திருவிடைமருதூரில் நிவர்த்தி யடைந்ததையும், அவ்வரசர் ஈசுவரபக்தியாலீடுபட்டுப் பலவிதக் கைங்கரியங்களைச் செய்தது, மற்றுமுலகத்தவர்களும் ஈசுவரனது திருக்கருணைக்குப் பாத்திரர்களாகும்படி அவனுசவிருந்தும் வழிகாட்டியாக விருந்தாரென்பதையும் பிரசங்கித்த பின்னர், சைவசித்தாந்த பிரசாரகர் பெ. முத்தய்யா பிள்ளையவர்கள் சித்தாந்த சாரமென்பதைப் பற்றி சித்தாந்த சாஸ்திர ஆராய்ச்சி பலத்தால் நன்கு பக்யவித்தார்கள்.

வித்வான் மு. கதி. அவர்கள் பிரஸங்கத்தின் சாரத்தை யாமோதித்துச் சபையாருக்குச் சொல்லியபின் உத்தம காவியமாகிய சிலப்பதிகாரத்தின் முக்கிய பாகமான கண்ணகியின் கற்பு முதலியவற்றைச் சபையோர்களது வேண்டுகோளுக்கிணங்கி கேட்டோர் ஆநந்திக்கும்படி நீண்ட நேரம் பிரஸங்கித்தார். வடமொழி தென்மொழிகளில் பயின்ற மேதாவியான மு. கதி. அவர்களுடைய பிரஸங்கம் ஷெ தேவகோட்டையில் நடந்த சைவாகம சித்தாந்த பரிபாலன சபையிலும் செயயப்பட்டது. ஒவ்வொன்றும் அவர்களுடைய வித்வத் திறமையை வெளிப்படுத்தியது. பிரஸங்கங்களின் முழு விஷயங்களையும் பலரும் படித்தறிந் தெரியும்படி சுருக்கெழுத்தில் எடுத்து வெளியிடவேண்டும். தமிழில் சுருக்கெழுத்தில்லாதது மிக [illegible].

பமவ பாண்டி.

மணிவாசகசங்கம்.

இன்று நடைபெற்ற நமது மணிவாசகசங்கத்தின் மாதக்கூட்டம் கூடிற்று. காரைக்குடி கம்பராமயணப் பிரசாரகர் ஸ்ரீ M. V. கோவிந்தராஜய்யங்காரவர்கள் அக்கிராசனம் வகிக்க, சங்கராசார்யர் பெருமை குருகடாக்ஷம், என்பவைகளை குன்றக்குடி ஸ்ரீ. சதாசிவப்பிர்மம், திருவாசகமடம் ஸ்ரீ சிதம்பரசுவாமிகள் இருவரும் உபந்நியசிக்க, தேவகோட்டை வைசிய சிவாநந்த சபையாரால் அனுப்பப்பெற்ற கல்வி என்னும் வியாசம் கோசகர்

ஃ. வி. கலாசாலைமாணவன் சம்பந்தனால் படிக்கப்பெற்றது. முடிவில் தலைவரவர்கள் அபிப்பிராயங் கூறியபின்னர் வந்தனோபசாரத்துடன் ஆரசந்தனுதிகள் வழங்க, சங்கம் இனிது நடைபெற்றது. சிவன்கோவில் கொட்டகையில் பிரம்மஸ்ரீ முத்துராமலிங்க சாஸ்திரி யாரவர்களால் ஸ்ரீமத் ராமாயணப் பிரசங்கம் நகரத்தார் முயற்சியின்பேரில் இன்றுதொடங்கி நடைபெற்று வருகின்றது. ஜனங்கள் சிரத்தையுடன் சிரவணஞ்செய்து பக்திபாராட்டுகிறார்கள். சுபம். இங்ஙனம் ஷண்முகநாதன்.

வைத்தியக் குறிப்பு.

பேராத்தை.

வருஷாந்தரப் பயிரான இச்செடி திருவாங்கூர் முதலான பிரதேசங்களில் அபரிமிதமாய் விளைவதுண்டு.

இச்செடியின் வேர் சிறிது வாஸனையுள்ளதாகவும் கசப்பாகவும் இருக்கும். வயிற்றுப் பொருமலைப் போக்கவும், பசியை உத்தீபநம் செய்யவும் இதற்குச் சக்தியுண்டு. இதைக்கஷாய மிட்டு ஜ்வரங்களிலும் ஆமவாத மென்னும் கீல் வாயுவிலும், ஜலதோஷம் அதிகரிப்பதா லுண்டாகும் கோளாறுகளிலும் உபயோகிக்கலாம். வாயில் துர் நாற்றமுண்டானால் அதைப் போக்குவதற்கு இதை உபயோகிப்பதுண்டு. நீரிழிவு வியாதியில் இதைப் பிரயோகித்துக் குணம் கண்டதாகவும் சில வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். தொண்டைக் கம்மலைப் போக்கி நல்ல தொனியை யுண்டுபண்ணுவதற்கு வற்ற சுக்குக்குப் பதிலாகவும் சிலசமயம் இதை வைத்தியர்கள் உபயோகித்து வருகிறார்களாம்.

விளம்பரம்.

ஆத்திக்காடு தெக்கூர்காடப்பசெட்டிமகன்சுப்பிரமணியஞ்செட்டி தெரிவிப்பதாவது:— என் தமையன் பவுத்திரனும் தாய் தந்தை இறந்தவனுமான ஆண்டியப்பனென்ற காசியென்பவன் 12 வருஷகாலமாய் என் வீட்டிலிருந்து வளர்ந்து வந்தான். சிலகாலமாய் ஷை காசியென்பவன் கெட்ட சாவகாசத்தினால் பஞ்சமா பாதகத் தொழிலில் புகுந்து அங்குஅங்கே உண்டுதிரிவதால் ஒருவருஷகாலமாய் எங்கள் வீட்டிலிருந்து விலகி விட்டான். என் குடும்பத்தில் ஷை யானுக்கு யாதொரு பாத்தியமு மில்லை.

கா. சுப்ரமணியன்செட்டி.

உ

கணபதி துணை.

வித்யாபாநு.

" கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."—திருக்குறள்.

தொகுதி.	பிங்கள ஹூ வைகாசி & ஆனிமீ	பகுதி
9	1917 June & July	5&6

கல்வியும் மதமும்.

நமது பாநுவின் முக்கிய ஸஞ்சிகையில் "இந்தியக்கல்வி முறை" என்னும் விஷயம் எடுத்துக்கொள்ளப்பட்டுத்தர்ம மென்பது,காலம் தேசம் ஜாதிதொழில் ஆச்ரமம் என்னும்இவற்றுக் கேற்றபடியாக மாறுவ தொன்றென்றும்,அந்தந்தத் தேசத்தாரும் சாதியாரும் காலத்துக்கேற்றபடியாகத் தமது தமதுதர்மத்தில்மாறு படாமல் ஒழுகிவந்தாராயின், அவருடைய தாய்நாடுசெழிப்புற்றோங் கும்என்றும், அங்ஙனமாய தர்மத்தின் உணர்ச்சியானதுகல்வியாலே பெறப்படும் என்றும், ஆகையினால் கல்வியின் முறையானது தேசத் துக்குத்தேசம் வேறுபட்டேயிருக்கு மென்றும், எற்ப இந்திய நாடாகிய நம் தாய் நாட்டில் கற்பிக்க வேண்டியமுறை நம் தாய்நாட் டுத்தருமங்களை யுயர்த்தந்தருந்தபடி. இந்தியக் கல்விமுறையாகவே இருக்கவேண்டுமென்றும் ஒருவாறு குறிக்கப்பட்டது.

ஒரு தேசத்துக் கல்விமுறை, அந்தத் தேசத்துத் தர்மத்தை வளர்க்கும் முறையில் கற்பிக்கப்பட வேண்டுமென்றால், அந்தத் தேசத்தின் மதக் கொள்கைகள் அவசியம் ஆராயப்பெற வேண்டும்.

நாம் எடுத்து வற்புறுத்த வந்தது "இந்தியக் கல்விமுறை" யாதலின், இந்திய தேயத்தினது மதக்கொள்கைகளே இப்போதுபேசப்பெறல் வேண்டும்.

நமது தேசத்தில், மிகப் பழைய காலமுதல், தத்வதர்சிகளாகிய ஆசாரியர்கள், வேதத்தையே ஆதாரமாகக்கொண்டு உலக தத்வங்களையும் ஆத்மதத்வங்களையும் தாம் உணர்ந்து அநுபவித்து வந்ததேயல்லாமல், மற்றவர்க்கும் உரைத்து வந்துள்ளார்கள். உலக தத்வங்களை முறையேயுணர்ந்து சித்தசுத்தி தோன்றி, ஆத்மதத்வவுணர்ச்சியில் முதிர்ந்து, அநித்யமான பொருள்களிடத்தில் வெறுப்புப் பிறந்து, அவற்றை மற்றைத்தமக்குக் கீழ்ப்பட்ட பக்குவிகளுக்கென்று த்யாகம் செய்துவிட்டு, நித்யமான நிரதிசய வீட்டின்பத்தைப் பெறுவதே பயனாகக்கருதி யுழைத்திருக்கின்றனர். ஆதலின், இந்த ஆத்மயாத்திரையில பக்குவிகளுக்கு ஏற்பத் தர்மங்களும் அவற்றை வற்புறுத்தும் மதக் கொள்கைகளும் வேறுபட்டிருக்கின்றன. இந்த ஆஸ்திக மதங்கட்குக் கொள்கைகள் வேறுபட்டிருப்பினும் பயனொன்றாகவே கருதப்படுகிறது.

இம்மதக் கொள்கைகளெல்லாம் தக்க காரணங்களுடனே நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றுக்குத்தக்க சாஸ்திரங்களையும் பெற்றிருக்கின்றன. இவற்றின் உண்மைகளைக் கிரமப்படி உணர்ந்தேறாத பிறநாட்டாரிற் பலரும் நம் நாட்டாரிற் சிலரும், "இந்தியாவில் மதக் கொள்கைகள் வேறுபட்டிருக்கின்றன. அவைகள் தமது காலவரையறையைச் செவ்வனே குறிக்கவில்லை. பல உட்கலகங்களால் நேர்ந்த மனவேறுபாட்டைக்கொண்டு அவைகள் மாறுபாட்டுடன் ஏற்பட்டிருக்கவேண்டும். ஆகையினால் அவைகள் உறுதியான கொள்கைகளையுடையனவாகக் கொள்ளப்பெறமாட்டா" என்று குறைகூறுவர்.

ஆனால், அவர்கள் கூறுகிறபடியே கொள்கைகள் மாறுபட்டுள்ளனவென்றாலும், குறை கூறுவதற்கு ஏதும் ஆதாரம் காணோம். ஏனெனில், இந்துமதக்கொள்கைகள் எல்லாம் ஒரு

காலத்தில் ஒருவரால் உண்டாக்கப் பட்டனவாகக் கொள்வதற்கு இடமில்லை. இந்தியா, மிகவும் புராதன தேசமாதலால், பிறதேசத்தினது நாகரிகவுதவியை வேண்டாமலே, நாளடைவில் மனிதவர்க்கத்தின் ஏற்றத்துக்குத் தகுந்தபடியான நாகரிகப் பெருக்கத்தில் ஏறி, உலகதத்வம் ஆத்மதத்வம் ஆகிய இரண்டிலும் விருத்தியடைந்து வந்திருக்கின்றது. ஆகவே, மேற்சொன்னமாறுபட்ட கொள்கைகளெல்லாம் ஸோபானக்ரமமாகக் கொள்ளப்படுகின்றன. எனினும் பயன் மாத்திரம் ஒன்றாகவே கருதப்படுகின்றது. பயனாவது வீடுபேறு.

ஒரு மதமானது, ஒருவராலேயே உண்டாக்கப்பட்டதாயிருந்திருப்பின், அவர் உயிருடன் இருக்கையில் தானும் பெருக்கத்தையடைந்து அவருக்குப் பிற்காலத்து சுருக்கமடைந்து ஆதரிப்பார் அற்றும் கழியலாகும். இம்மதமோ, ஒரே உண்மையைக் கைப்பற்றிய பலவேறு தத்துவதர்சிகளாற் பலவேறு காலங்களில் பலவேறு கொள்கைகளுடன் ஆதரிக்கப்பட்டு வந்திருக்கிறது. தத்வ உணர்ச்சிக்கு மிகவும் பொருத்தமானது. தர்க்க நியாயங்கட்குத் தோலாதது. வேதத்தையே தனக்குப் பிரமாணமாகக் கொண்டுள்ளது. தக்க ஸாதுவான உக்திகளால், தன்னை அவலம்பித்துள்ளாரை படிப்படியாக மேலேற்றி, நிவர்த்திமார்க்கப் படியேற்றி, ஸதானந்தத்தைப் பெறச் செய்வது. அநுபவ முறைகளையும் உலகம் விருத்தியடையும் முறையையும் ஒருங்கே யநுசரித்துப் போவது. தத்துவசாஸ்திரங்களில் முறைபோகி யநுபவமுறையைக் கைப்பற்றி ஒழுகும் பிறதேசத்தினரும் தலைபணைத் தானந்திக்கத்தக்க உண்மைகள் வாய்ந்துள்ளது. இத்தகைய மதத்தின் கொள்கைகள், தற்காலத்தில் நம்மவர்களாலேயே அநுசரிக்கப்படாமல் பிறமதக் கொள்கைகளிற் புகுந்து தருக்கியிருப்பதால் கைசோர விடப்பட்டிருக்கிறது. நம்மவர்களிற் பலரும் மதக் கொள்கைகளைப் பின்பற்றாதிருப்பதுடன்; மதக் கொள்கைகளில் குறைகண்டு முற்று முணர்ந்தவர் போலப் பழித்தும் திரிகின்றனர். இதற்குக் காரணமென்னவென்று ஆராய்ந்திடின், கல்வி பயிற்றும் பருவத்தில் சாஸ்திரக் கொள்கைக

யுணர்த்திவரும்போது மதக் கொள்கைகளையும் கொடாதிருந்தது தான் என்று நன்றாக ஊஹிக்கலாகும். ஒருமதச்சார்பில் உதித்தவர், அம்மதக்கொள்கைகளுடனும் கொள்கைகளையுணர்த்தும் சரித்திரங் களுடனும் போதிக்கப்பட்டு வந்திருப்பின், அவர் தம்மதத்தில் நின்று தம்மதக்கொள்கைகளைப் பாராட்டி யநுசரித்து அம்மதத் தைத்தக்கவழிகளில் பெருக்கிக்கொண்டும் போவர். அங்ஙனமின்றிப் பிறமதக் கொள்கைகளுடனும் அக்கொள்கைகளை யுணர்த்தும் சரித்திரங்களுடனும் கற்பிக்கப்பட்டு வந்தவரைத் 'தம்மதக் கொள் கைகளைத்தாமே விரோதிக்கிறவர்' என்று நிந்தித்தல் தகாது.

நமது தாய்ப்பாலுடன், நமது தேசாபிமானப்பாலும், புகட்டப் பட்டிருப்பின் யாதும் குறைநேர்ந்திராது. அப்படியன்றித் தாயை யும், 'பேதை' என்று அவளது பருவத்துக்கு ஏற்றிவைத்த ஒரு குணத்துக்கு உரைவதப்பாளாக்கி, என்றும் அக்குண முடையவ ளாகவே இருக்கும்படிச்செய்துவந்தோமானால், தநயர்கள் எங்ஙனம் தேசத்தொழுக்கிலேறி மதக் கொள்கைகளைக் கைப்பற்ற முடியும்? ஆகலின், ஆண் பெண் என்னும் இருபாலர்க்கும் ஏற்றவாறு நம் கல்விகற்பிக்கப்படல்வேண்டும். மதக்கொள்கைகளுடனும் நமது முன்னோர் சரித்திரங்களுடனும் அப்படி கற்பித்து வந்தால், நம்மாணவர் தம்தாய் நாட்டைப் போற்றுவதுடன் அந்நாட்டின் முன்னேற்றத்தைக்கோரி, அதற்கு ஸாதனமான தமது ஸநாதன தர்மத்தைக் கைசோரவிடாமல் அந்தக்கொள்கைகளைப் பின்பற்றி நடப்பர்.

ஒரு தேசத்து ராஜாங்கமுறையும் சாஸ்திரமுறையும் அத்தே சத்து ஆசாரமுறையையும் அறநெறியையுமே ஆணையாப்பற்றியிருக் கின்றன. அத்தேசத்து அறத்தின் நெறிகள் சிலபோது முதலே அநுசரிக்கப்படா தொழியின் அத்தேசத்து ஆசாரம் சீர்படாது. ஆசாரத்தில் சீர்பாடடையாதொருவன், அத்தேசத்து சாஸ்திர வுண்மைகளைத் தெரிந்து உபந்யஸித்தலும் ஒன்றையழித்து மற்றொன்றை வளர்த்தலாகும். தன்னெறியில் நில்லாதவொருவனது

சாஸ்திர உபதேசங்களைப் பின்பற்றி நடப்பார் ஒருவரும் இலராவர். இன்னவர் நிறைந்து நடத்துகிற ராஜாங்கம் அத்தேசத்தை முன்னுக்குக் கொண்டுவராது ஒழியும் என்பதில் ஸந்தேஹம் யாது?

ஆனதால் இப்போதாகிலும் நாம் விழித்துக்கொண்டு, தற்கால மாணவர்க்குக் கல்வியுடன் மதக்கொள்கைகளைப் போதித்து வருவோமாயின், நம் மதக் கொள்கைகள் அநுசரிக்கப் பெற்று நமது அரசாங்க முறையும் ஒழுங்கு பெற்றுவரும். அப்போதே தேசம் தேசமாகும். இப்போதிருக்கும் நூதனக் கல்விமுறையால் நமது அறிஞர்கட்கு நூதன அறிவும் நூதன சித்தவ்ருத்தியும் நூதன ஆசையும் உற்பத்தியாயிருக்கின்றன. இவை நமது தேச தர்மத்தை முற்றிலும் கெடுத்து வருகின்றன. எது தங்களையும் தங்கள் தேச தர்மத்தையும் முன்னுக்குக் கொண்டுவருமோ அந்த முறையைச் சிந்திக்கிறதுமில்லை: சிந்தனையில் ஒருகால்இருக்கும்படிச் செய்தாலும் அநுசரிக்கிறதுமில்லை. தங்கள் நயத்தையேபாராட்டும் முறையிலேயே-செலுத்துகிறார்கள். வேததத்வங்களையும் அவற்றையநுசரித்த சாஸ்திர நிபந்தனைகளையும் கண்டித்து வீண்வழக்கிடுகிறார்கள். அவர்கள் சொல்லும் வழக்குகளிற் சிலவற்றை இங்கே குறிப்பிடல் தகும். அவை:—

"ஒருவருக்கு இப்பிறப்பில் நிகழும் ஸுகதுக்கமான ஸகலவிஷயங்களும் முற்பிறப்பின் பயனாகவே ஏற்படுகின்றன வென்றும், அதனை மீறித் தாமாக யாதொன்றும் செய்து கொள்ளமுடியாதென்றும், இவருடைய முயற்சிகளெல்லாம் விதியை அநுசரித்தே பயன் தருமென்றும் வேதசாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அப்படியானால், அவைகள், "இதைச்செய்; இதைச்செய்யாதே" என்று விதிவிலக்கான தர்மங்களை ஏன் விதிக்கவேண்டும்?"

"யாரும் இவ்வுலகிலேயே மிக்க இன்பத்திலும் மிக்க துன்பத்திலும் உழன்று வருவதைக் கவனிக்கிறோமல்லவா? பாபபுண்ணிய பலன்களை யநுபவிக்க வேறு லோகங்கள் உண்டென்று கொள்வதற்கு யாது காரணமிருக்கின்றது? உலகங்களையெல்லாம் ப்ரயக்ஷமித்தமாகப் பரிசோதித்த மேல்நாட்டார்களும் வேறு லோகங்கள் உண்

டென்று கொள்ளவில்லையே. அன்றியும், இறந்தவர் ஸ்வர்க்கவாஸி களாக இருக்கின்றார்களா? நரகவாஸிகளாக இருக்கின்றார்களா? புழு பூச்சிகளாகப் பிறந்திருக்கிறார்களா? மனிதராகவே பிறந்திருக்கின் றார்களா? என்று யாதொரு விதத்திலும் நிச்சயிக்க முடியாதிருக் கும்போது சிராத்தம் செய்வது எதன் நிமித்தம்?"

"கர்மபலன்களினாலோ இயற்கையினாலோ முயற்சியினாலோ உலகவியவகாரங்கள் நடந்து வருகின்றனவென்றால், எல்லாம்வல்ல ஒரு தலைவனான ஈச்வரன் ஒருவன் உண்டென்று ஏன் கொள்ள வேண்டும்".

"வேதத்தை அபௌருஷேயமென்று சொல்கின்றார்களே; ஒரு வராலும் உச்சரிக்கப்படாமல் ஒரு வார்த்தையும் பிறக்க நியாய மில்லையே; அப்படியிருக்க அனந்தகோடி வார்த்தைகளடங்கிய வேதம் அநாதியானதெப்படி? அன்றியும் வேதவாக்கியங்களிற் சில தமக்கு முன்னிகழ்ந்த பல நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றபடியால், பல சரித்திரகாலங்கட்குப்பின்னரே வேதம் ஏற்பட்டிருப்பதாகக் கொள்ளக்கிடைக்கிறதன்றோ? ஆகைபால் அவை எப்படிப் பிரமாணமாகும்?".

என்னும் இவை போன்ற கேள்விகளை எழுப்புகிறார்கள். வேத சாஸ்திர தத்வங்களை அந்த நெறியிலேயே நின்றவர்கள், தக்க அறநெறியுடன் போதிப்பார்களானால், முறையே சிரத்தையுடன் கற்பிக்கப்பட்ட மாணவர்களும் மானவர்களும் வேத சாஸ்திர வாக்கியங்கட்கு அபார்த்தம் செப்பமாட்டார்கள். ஏனெனில், பிரவ்ருத்தி மார்க்க வாக்கியங்களிற் பலவற்றை நிவ்ருத்திமார்க்க வாக்யங்கள், அதிகாரி பக்குவத்தை யுக்தியோசித்துக், கண்டித்துச் செல்கின்றன. நமது பிராசீன மேதாவிகளால் தக்க யுக்திகளுடன் அந்தப்படியான வேத சாஸ்திர வாக்யங்களெல்லாம் விசாரிக்கப் பெற்றிருக்கின்றன. அந்த யுக்திகளில் முறையே பழகி வரும் போது யாதும் முரண்பாடு தோன்றாது. நமது பூர்வாசார்யர்களும் ஆத்ம தத்துவமுணர்ந்த மேல் நாட்டா ரிற் சிலரும், "ஹிந்துமதத்தை ஒரு முடிந்த கருத்துகளடங்கிய மத மென்றும் எவருடைய ஆபேக்ஷங்கட்கும் அநுபவத்துக்கும்

தருந்த ஸமாதானம் சொல்லும் மதமென்றும் எல்லாமதங்களுக்கும் முக்யமான கொள்கையை யளித்தமதமென்றும் "கொண்டிருக்கிறார்கள்." உலகஇன்பங்களை அநுபவிக்க அநுபவிக்க யாருக்கும் திருப்தியைத் தராமல் துன்பங்களையே முற்றும் தந்துகொண்டுவருவதால், இகளையறிந்த ஆத்மவுணர்ச்சி யுடையானொருவன், என்றும் நிலைதிரியாத இன்பமொன்றினைப் பெறுவதற்குரிய மார்க்கங்களை இந்துமதந்தான் போதிக்கின்றது." என்றும் பெரியோர் சொல்லியிருக்கின்றார்கள்.

இப்படி மதவிரோதிகளும் பயின்று நற்கதி பெறுவதற்குத் தக்க மதக்கொள்கைகளைச்செவ்வனே எடுத்துப்புகட்டும் இந்தஹிந்து மதமானது, நம்மவர்க்குப் புகட்டாததற்குக் காரணமென்னவென்று ஆலோசித்தால், அது; அவர்க்கு அந்தக்கொள்கைகளை முறைப்படி நல்லநெறியுடன் போதிக்காதிருந்ததேதான் என்று நன்றாய் ஊகிக்க இடமாகின்றது.

ஆகையினால், "நமது பாடசாலைகளில், கற்பிக்கும் முறையில் இந்துமதக் கொள்கைகளும் ஒருபாகமாக வைக்கப்பெற்றுப் போதிக்கப்பெறல் வேண்டும்." என்பதே நமது முக்யவேண்டுகோளாகும்.

பத்திராதிபர்.

தமிழ்ப்புலவர் சரித்திர முகவுரை.

தமிழ்ப்புலவர் சரித்திரம் என்பது பண்டைக்காலத்து அறிஞர்களது சரித்திரம் எனப் பொருள்படும். நவமாயியற்றப் பெற்ற தமிழ்ப்புலவர் சரித்திரம் என்னும் நூலின் ஒருபாகம், அதனை இயற்றிய எனது தமிழாசிரியர் சுன்னாகம்:- ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்களால், எனக்கு அனுப்பப்பட்டது. அப்போது யான் காரைக்குடியில் தமிழ்ப்பண்டிதனாக இருந்தேன். அனுப்பிய பாகமாவது எனது குலமுதல்வரும், சிவராத்திரிப்புராணம் ஏகாதசிப் புராணம் கிள்ளைவிடுதூது முதலியவைகளின் ஆசிரியரும் ஆகிய வரகவிப்புலமை வரதபண்டிதரவர்கள் சரித்திரம்வரைந்துள்ள பாகமாகும். அப்பாகத்தை யான் பார்த்து மகிழ்ச்சியினாலே சிறப்புப்பாயிரமுஞ்செய்தேன். அஃது சில தடைகளினாலே வெளிவந்திலதுபோலும். இப்போது, சரித்திர முகவுரையாகிய உபக்கிரமணிகையை வாசித்துப் பார்த்தேன். அதிலே "தமிழ்" எனும் பத அர்த்தம், அதன் வகை, "புலவர்" என்னுஞ் சொற்பொருள்,

அவர் வகை முதலியனவும் பிறவும் விரிக்கெழுதப்பட்டிருக்கின்றன. அன்றியும், இராமநாதபுரம் ஸ்ரீமாந் இராஜராஜேஸ்வர சேதுபதி அரசர் அவர்களும் வேறு சில தமிழபிமானிகளும், திரவியசகாயஞ் செய்து அபிமானித்தமையும் எழுதப்பட்டிருக்கிறது. மஹாராஜா அவர்களின் நாமத்தை விசேஷித்து முதற்பக்கமும், அவர்களுடைய உதாரத்துவத்தை விசேஷித்து வேறு மூன்று பக்கங்களும் அதிக சாதுரியமாகப் பல வாக்கியங்கள் மாதுரியம் பொருந்த எழுதப்பட்டிருக்கின்றன.

நூலிலே ஏறக்குறைய நூற்றைம்பது புலவர்களுடைய சரித்திரங்களும், சிலசில கவிகளும் சிலசில அருங்கவிகளின் அர்த்தங்களும் வரையப்பட்டிருக்கின்றன. இன்னும், சேர்க்கப்படவேண்டிய புலவர்களாய் யாழ்ப்பாணத்திலே பலருளரென்று நான் அறிகிறேன். அவர்களையும் அநுபந்தமாகச் சேர்த்துக்கொள்வது அதிகம் நல்லதென்று நான் கருதுகின்றேன். எனது மாதாமகரும்; காரை: இயற்றமிழ்ப் போதகாசிரியரும், பிரபலபுலவருமாகிய மூ. கார்த்திகேச ஐயரவர்கள் சேர்க்கப்பட்டிலர். அவர்களோ தன்னையமகவந்தாதி, திக்கைத் திரிபந்தாதி முதலிய பிரபந்தங்கள் பாடினவர்கள்; பலநூல்களைப் பரிசீலனை செய்து அச்சிட்டவர்கள்; பண்டிதராகியிருந்த சிவசிதம்பரையரவர்களுக்குத் தந்தையார்; பற்பல பெரிய இரட்டையாசிரிய விருத்தங்கள் பாடிப் பத்திரிகைகளிலே பிரசுரித்தவர்கள். மிக்க வித்வாம்சராகிய புலோலி நா. கதிரைவேற்பிள்ளை அவர்களையும் சேர்க்கவில்லை என்று சிலர் கூறுகின்றார்கள். இன்னும் சில புலவர்களைப் பின்னர்க்கூறுவன்.

இன்னும், இந்நூல் புலவர்கள்சரித்திரங்களைப் பூரணமாகக் கொண்டிராததாயினும், தமிழ் நூல்களைப் படிப்பவர்களுக்கும் தமிழுபாத்தியாயர்களுக்கும், படித்துச் சிலசில விஷயங்களை அறிந்துகொள்ளுதற்கு, உபயோகமாகுமென்று நான் எண்ணுகிறேன். புலவர்சிரோமணியவர்கள் தமிழகத்தார்க்கும் எனக்கும் புரிந்த நன்மைகள் பல. அவையிற்றை ஈண்டுக்குறிக்க இடமின்றெனக் கருதி விடுகின்றேன்.

புலவரவர்கள் நீடூழிகாலம்—பூமியில்வாழ்க.—சுபமஸ்து.

இங்ஙனம்

வ. மூ. இரத்திநேசுவரையர்,
தமிழ்ப்பண்டிதர்,
விவேகாநந்தசபை,
மாத்தளை.

யாழ்ப்பாணம்
பிங்கள ௵
வைகாசி ௴
௰௯உ

ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசாரியஸ்வாமி.

:(o):

பிரபஞ்சத்தில் அடங்கியிருக்கும் ஜீவராசிகள் ப்ரக்ருதி புருஷன் பரன் என்னும் மூன்றின் சேர்க்கையினால் இயங்குகின்றனவென்பதும், ப்ரக்ருதியின் தாழ்ந்த அம்சங்களை யுதறிவிட்டு ப்ரக்ருதியின் உயர்ந்த அம்சங்களால் புருஷனாகிய ஜீவன் தனக்கு வங்கேதியாயுள்ள அஞ்ஞானத்தினின்றும் நீங்கித் தனது ஸ்வரூப ஞானத்தை யடைகிறானென்பதும், பிறகு மஹான்களாகிய ஆசார்யர்களுடைய உபதேசங்களால் பரத்தின் அதாவது ஈசுவரனது ஸ்வரூபத்தை யுணர்ந்து தனக்கும் ஈசுவரனுக்கும் உண்டாயிருக்கும் சம்பந்த மின்னதென்று தெளிந்து இன்னும் தன்னைப்பற்றியிருக்கும் ப்ரக்ருதியின் உயர்ந்த அம்சங்களையும் உதறிவிட்டுத் தானும் ஈச்வரனும் ஒன்றாகநின்று ஆத்மானுபவம் பெறுகிறானென்பதும் வைதிகர்களுடைய சித்தாந்தம்.

அசேதனத்தோடு அதாவது ப்ரக்ருதி யம்சங்களோடு சம்பந்தப்பட்டுள்ள சேதனன் அதாவது ஜீவன் தனது ஸ்வரூபஞானத்தை யறிந்துவரும் யாத்திரைக்காலம் மிகவும் நீண்டிருக்கிறபடியால், இடையில் உண்டாகும் ஸங்கோச விகாசங்களுக்கு ஏற்றபடி ஜீவன் பிறவியை யடைகிறானென்பதும், அந்தக்காலங்களுக் கிடையிடையே அவச்யம் ஏற்பட்டபோதெல்லாம் ஜீவனது வ்ருத்திபம்சத்தை நாடியவராக ஒவ்வொரு காரியத்தின் நிமித்தம் ஈசுவரன் அவதரிக்கிறாரென்பதும் வைதிகசித்தாந்தம்.

இதனையே ஸ்ரீ கீதையில் ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மா "தர்மத்துக்கு அழிவும் அதர்மத்திற்கு ஏற்றமும் உண்டாகும்போது நான் உருவெடுத்துத் துஷ்டர்களை நிக்ரஹித்து சிஷ்டர்களைப்பரிபாலித்துத் தர்மத்தை வளர்க்கிறேன்" என்றும் அறிக்கையிட்டிருக்கிறார்.

இப்படியாகப்பகவான் அவதாரங்கள் அம்சாவதாரங்கள் என்றும் பூர்ணாவதாரங்கள் என்றும் பகுக்கப்படுகின்றன. உலகங்ருத்

தியின் காலங்களின் இடையிடையே அவ்வப்போது தோன்றி ஸ்வல்பகால மிருந்து உபதேசமூலமாகவோ துஷ்டநிக்ரஹமூலமாகவோ சிஷ்டபரிபாலன மூலமாகவோ தான் வந்தகாரியத்தை முடித்துவிட்டு மறைவது அம்சாவதாரமென்றும்; தனது இச்சையினால் பிறப்படைந்து, மனிதனுடைய அவஸ்தைகளைப்பெற்று, யோகநிலையில் நின்று, தன்னைத்தானறிந்து, தன்னிடத்துப் பரம்பொருளின் அம்சத்தைக்கண்டு, அதனைப் பிறருக்கு அதிசயகாரியங்களால் காட்டி, உலகில் சமத்ருஷ்டியும் காட்டி, உபதேசமூலமாகவும் நடத்தையின் மூலமாகவும் சிஷ்டபரிபாலன மூலமாகவும் தான் வந்தகாரியத்தை முடித்துவிட்டு ப்ரபஞ்சமூலமாகிய பரம்பொருளையறிந்து அனுபவித்து நிற்பதுதான் பூர்ணாவதாரம் எனநாம் அறிகிறோம்.

அப்படியான பூர்ணாவதாரங்களுள் ஒரு அவதாரம் நாம் இன்று எடுத்துச் சொல்லப்போகும் அவதாரம். இந்த அவதார புருஷர், ஜீவரது அஞ்ஞானத்தை நீக்கி ஸ்வரூபஞானத்தை புணர்த்தி ப்ரக்ருதியின் அம்சங்கள் அநித்தியங்களென்றும் ஜீவன் நித்தியனென்றும் ஈச்வரனோடு நித்தியஸம்பந்தம் பெற்றுஈச்வரனேதானாக நிற்பவனென்றும் முதன்மையாக உலகத்துக்குக் காட்டவந்த ஆசாரியஸ்தானத்தை வஹித்தவர். இம்மஹான் ஜீவியகாலத்தில் இவ்விந்தியநாடெல்லாம் இவரது உபந்யாஸத்தில் ஆழ்ந்து அவரது மதத்தைத் தழுவியேநின்றன. பிறகும், அங்கங்கே ஏற்பட்டிருக்கும் வேதாந்த சபையார்களெல்லாரும் பிரம்மஞான சங்கத்தாரும் (Theosophic Society) வேறுநாடாகிய ஐரோப்பிய அமெரிக்காநாடுகளும் இம்மஹானது மதத்தை யவலம்பித்திருக்கின்றன.

கிறிஸ்து முதலிய மதங்களோடு இதனைக் கலந்து படிக்கும்போது அம்மதங்களின் கொள்கைகளெல்லாம் இம்மதத்தின் ஒவ்வோர் படியாகக் கவனிக்கப்படுமே யல்லாமல் வேறில்லை. அவர் தம்மதக்கொள்கைகளை யநுசரித்தே தாமும் நடந்து உலகத்துக்கு உண்மை யின்னதென விளக்கியிருக்கிறார். இவரது சரித்திரம் சங்கரவிஜயம் என்று சொல்லப்படுகிற நூலில் விரிவாகக் காணப்

படும். மத்வாசாரியர் (வித்யாரண்யர்) ஆனந்தகிரி ஸ்வாமி ஸதாநந்தர் என்னும் மேதாவிகளாலும் இவரது ஒழுக்கங்கள் எடுத்து உபந்யசிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்கந்தபுராணத்தின் ஒன்பதாவது அம்சத்திலும் இவர் அவதாரஞ்செய்யப்போகும் விஷயம் குறிக்கப்பட்டிருக்கிறது. அன்றியும் மத்வமதஸ்தாபகராகிய ஸ்ரீமத் மத்வதீர்த்தருடைய சரித்திரம் எழுதிய பண்டித நாராயணாசாரியாரும் இவரது சரித்திரபாகங்களை ஆங்காங்குக் குறித்துளார். நவீனக்ரந்த கர்த்தர்களான வில்சன் மாக்ஸ்முல்லர் திலாங் இவர்களும் இம்மஹானைப் பற்றி விவரமாகச் சொல்லியிருக்கிறார்கள். மேற்சொல்லப்பட்டவர்களுடைய உதவிகளை யநுசரித்தே இந்த வியாஸமும் எழுதப்படுகிறது.

ஒவ்வொரு அவதாரத்தின் சரித்திரத்தையும் எழுதப்புகும் போது, "அவர் அவதரிக்குமுன் உலகம் எப்படி இருந்தது? அவர் ஏன் அவதரிக்கவேண்டும்?" என்னும் இவைபோன்ற பல கேள்விகளுக்குத்தக்க ஸமாதானங்களைக் காட்டிக்கொண்டே போவது நலம். இதற்கிணங்க நாமும், இவரது காலத்துக்குமுன் ஹிந்துமதம் இருந்த நிலைமையையும் கவனித்துக்கொண்டே போவோமாக.

பாமரர்களுக்கும் உண்மையைப் போதிக்கவந்தவேதம், அப்பாமரருடைய உள்ளத்தைத் திருப்புவதற்காகவெண்ணி, அவரது இஷ்டத்துக்கொப்பாக அஜமேதம் அசுவமேதம் முதலிய யாகங்களை வகுத்துக்காட்டி, அவர்கள் யாகபலனாகிய இந்திராதிபோகங்களை விரும்பித் தமது பழையவழக்கங்களை விட்டுச்சிறிது புத்தி தெளிந்து வந்தபிறகு, அந்த இந்திராதி போகங்களும் நிலைபற்றன என்று காட்டியும் ஜீவாத்மஸ்வரூபத்தைச் சொல்லிப் பரனுக்குப் பக்தி செய்வதே மார்க்கமெனத் தீட்டியும் அப்பரத்தோடு கூடினதே முத்தி என்பதை வற்புறுத்தியும் செல்லாநிற்கிறது.

இதன் உண்மையை நன்கறியாதகாலத்து யாகஞ்செய்தலே மேலானதாயம் என்றகவனத்தோடு பூர்விகர் அநேக ஜீவவதைகளைச் செய்துக் கொண்டிருந்தார்கள்.

இப்படி உலகம், ஜீவகாருண்யம் இல்லாமல், மெலியாரை வலியார் அடித்தல் என்னும் கொலையில் மூழ்கிக்கிடக்க, பரம பொருள் தாம் புத்தக்கடவுளாக அவதரித்துத் தமது நடத்தையாலும் உபதேசங்களாலும், "பிராணிகள் எல்லாரும் ஸமானர். ஒருவருக்குத் தீங்கு மற்றவர் நினைப்பது தவறு. அப்படித்தவறான காரியங்களை விட்டு ஜீவரிடத்தில் கருணைகொண்டால்தான் புத்தி தெளிந்து நிர்வாணதசையை (முக்தியை) யடையும்" என்று போதித்தார். இவருடைய உபதேசங்களில் மகிழ்ந்துயாவரும் பௌத்தர்களானார்கள்.

பிறகு நாளடைவில், பௌத்தர்கள் மலிந்து புத்தருடைய உண்மைக் கருத்துக்களைத் தெரிந்துகொள்ளாமல் ஈச்வரஸ்வரூபத்தையும் அதை விவரிக்கும் வேதத்தையும் மறுத்துவிட்டார்கள்; அப்போது உலகமெல்லாம் அவைதிகநிலையில் இருந்தது. இந்தச் சமயமே நமது சங்கராசாரியர் அவதரித்தகாலம். உலகத்தை அவைதிக நிலையிலிருந்து வைதிகநிலைக்குக் கொண்டுவருவதற்காக,வேதத்தில் உத்தமபாகமான உபநிஷத்துக்களைத் தமக்கு ஆதாரமாகக் கொண்டு போதிக்கவந்ததே இவருடைய அவதாரகாரணம்.

எனவே, உலகம் அதுவரையில் விருத்தியடைந்து வந்ததற்குச் சாக்ஷியாக, அந்தக்காலத்தில், "உலகமே தத்வம், உலகசுகமே முக்தி. பொருளீட்டுவதே மார்க்கம்" என்னும் உலகாயதமதமும், "உலகம் மெய். அது ப்ரகருதி புருஷன் என்னும் இரண்டு தத்வங்களின் சேர்க்கை. ப்ரக்ருதியின தாழ்ந்த அம்சங்களோடு கூடினவன் அஞ்ஞானி. அந்தப்ரக்ருதியின் உயர்ந்த அம்சங்களோடு கூடினவனே ஞானி. இந்த ஞானியையே உலகம் என்றும் தொழும். இவனே உலகுக்கு ஆசிரியன்; இறைவன். வேறுதெய்வமென்ற ஒருபொருள் இல்லை." என்னும் நாஸ்திகமதமும், "உலகில் மானுடர் சுகமும் துக்கமும் கலந்த இருவகையினர். இவர் தீயகருமங்களாகிய பாவத்தைச் செய்வதால் துக்கத்தையே அனுபவிக்கும் நரகர்களாகவும், நல்லகருமங்களைச் செய்வதால் சுகத்தையே என்

றும் அநுபவிக்கும் தேவர்களாகவும் மாறுகிறார்கள். ஆகையால் நல்ல கர்மங்களையே செய்துவரவேண்டும்; அந்தக்கர்மங்களாவன தேவதைகளுக்கு உகப்பான ஸந்த்யாவந்தனாதி ஜபங்களும், சூர்யநமஸ்காரம் முதலான தபசுகளும், ஏகாதசி முதலான வ்ரதங்களும், தேவயஞ்ஞ பிதுர்யஞ்ஞங்களாதி யஞ்ஞங்களும், அஜமேதம் அச்வமேதம் முதலிய யாகங்களும் தாம். உலகத்தில் தொழில் செய்வோர்க்குத் தகுந்தபடியாக வர்ணபேதங்கள் உண்டு. அங்கங்கு ஜாதிக்கு ஏற்றபடியான தர்மங்களுமுண்டு. அவரவர் செய்துள்ள நல்லகர்மங்கட்குத் தக்கபடியாக சிலதேவதைகள் வசமாவதும் அவைகளது உதவியால் உலகத்தில் கீர்த்திபெறுவதும் உண்டு." என்னும் இவைபோன்ற கர்மமார்க்கத்தைப் போதிக்கும் கர்மடமதமும், மேலே சொல்லப்பட்ட புத்தமதமும் ஆங்காங்கு விரவியிருந்தன. ஆகவே, நமது ஸ்வாமிகள் தமது வாக்குப்பலத்தாலும் ஒழுக்கத்தாலும் உபநிஷத்தின் ப்ரமாணங்களாலும் மேலே சொல்லப்பட்ட மதங்களெல்லாம் தாம் சொல்லும் வைதிகமதத்துக்குக் கீழ்ப்படிகள் என்றுகாட்டி, அவைபயனில்லை முக்திதராதவையென்று தெளிவித்துத், தமது கொள்கையை நாட்டவேண்டியிருந்தது. அதனால் இடையிடையே பல வாதங்களும் நிகழ இடமிருந்தது.

இவர் அவதரித்த கிராமம் காலடி என்னும் பெயருடையது. இது, கொச்சி ஷோரனூர் இருப்புப்பாதையில் ஒரு ஸ்டேஷனாகிய ஆள்வாய் என்னுமூருக்கு ஆறுமைல கிழக்கேயிருக்கிறது. இந்தக் கிராமத்துக்கு இப்பெயர் உண்டானதற்குக் காரணமாக ஒரு கதையும் சொல்லப்படுவதுண்டு.

கேரளராஜனாகிய ராஜசேகரனென்பவன் தனது இராஜதானிக்குச் சமீபத்தில் ஒரு ஸ்வயம்புலிங்கமிருப்பதாகக் கனவுகண்டு, அதனைப்போய்ப் பார்த்து, அதற்காக அங்கொரு கோவில் கட்டுவித்து, அதன் பூஜைசெய்யும் பிராமணர்களுக்கென்று ஒரு அக்ரஹாரமும் ஏற்படுத்தினான். ஈச்வரனது காலினடியில் ஏற்படுத்தப்பட்ட ஊராதலின் அதற்கு அப்பெயர் வந்ததென்பர்.

அந்த அக்ரஹாரத்தில் க்ருஹஸ்தாச்ரமத்தை நிலைதவறாமல் நடத்திவந்த சிவகுரு என்னும் அந்தணருக்குச் சிவபெருமானருளால் அவதரித்தவர் நமதுஸ்வாமி. இப்படி அவதரித்த இம்மஹானின் மூன்றாவதுவயதில், பிதாவான சிவகுரு மண்ணுலகை நீங்க, இக்குமாரர் தமது தாயைத் தமது தெய்வமாகப் பாவித்து, ஐந்தாவது வயதில் உபநயனம் செய்யப்பெற்று, விதிப்படி வேதாத்யயனம் செய்து, தாம் ஏற்றுக்கொண்ட ஆச்ரமத்துக்கு ஏற்பப்பிக்ஷாடனவ்ரதத்தைக் கைக்கொண்டு இருந்தார். இவரது திவ்யவடிவினையும் வாக்கு சுத்தத்தையும் வேதமந்திர உச்சாரணத்தின் அழகையும் நடத்தையின் க்ரமத்தையும் ஊராரெல்லாரும் வியந்திருந்ததால், இவரது பிக்ஷாடனகாலம்மிகவும் கௌரவமாகவே நடந்தது. ஒருகால் இம்மஹான் தமது க்ருஹத்துக்குவர, தமது க்ருஹத்தில் இவருக்கு இடும்படியாக யாதொன்றுமில்லையே யென்று, மயங்கின ஸ்திரீகள் தமக்ககப்பட்டதோர் நெல்லிக்கனியை இவருக்கிட்டு நிற்க, அதனைக் குறிப்பாலுணர்ந்த நமது ஸ்வாமி மகிழ்ந்து, கனகதாரா என்னும் ஸ்தோத்திரத்தினால் லக்ஷ்மியை வேண்ட, அந்த க்ரஹத்திலுள்ளார் ஆச்சரியப்படும்படி அவ்வீடு முழுவதும் பொன்நெல்லிக்கனி நிறைய விழுந்தன. இப்படித்தமது இளமையிலேயே அதிக அற்புதங்களைக்காட்டி ஸகல வித்தையையும் ஐயம் திரிபு அறக்கற்றுணர்ந்ததைக்கண்ட தாயும் பந்துக்களும் இவருக்கு விவாஹம் செய்ய உத்தேசித்திருந்தனர். பலபேரும் பெண்கொடுப்பதாகவும் முன்னுக்கு வந்தார்கள். ஒருநாள் அகஸ்திய முனிவர் இவரது தாயிடம் வந்து இவருக்கு வாழ்நாள் சிறிதேதானென்று சொல்லிப்போயினர். இம்மஹானும் தமக்கு ஸந்யாஸாச்ரமம் கொள்ள பிரியம் இருப்பதாகத் தெரிவித்தார்.

இதனைக்கேட்ட தாயார் மனம் வருந்தியிருக்க, இவர் எப்படியாயினும் மாதாவினது உத்தரவின்மேல் தமது காரியத்தை முடித்துக்கொள்ள உத்தேசித்திருந்தார். ஏற்ப ஓர் நாள் சூர்ணிப்பழை என்னும் நதியில் ஸ்நானஞ் செய்துகொண்டிருந்த பொழுது, இவரது காலை ஒரு முதலை கவ்விக்கொண்டது. இதனைத் தெரிந்த

தாயார் மனம் வருந்த. ஸ்வாமி தமது தாயைப்பார்த்து, 'ஸந்யாஸாச்ரமத்துக்கு உத்தரவு கொடுத்தால், இம்முதலை எம்மை விட்டு விடும்." என்று சொன்னார். அங்ஙனமே தாயும் உத்தரம் கொடுக்க, அம்முதலையும் இவரது மகிமைதெரிந்து, புகழ்ந்துவிட்டுப்போயிற்று. உடனே ஆச்ரமஸ்வீகாரம் செய்துகொண்டு, தமது தாயார் நினைத்தபோது வருவதாக வாக்குக் கொடுத்துப் புறப்பட்டு விட்டார்.

இப்படி வெளிப்புறப்பட்ட நமது ஸ்வாமி, தமக்கொரு ஆத்ம குருவைத்தேடிப் பலதேச யாத்திரை செய்துக் கடைசியில் பதரிக்குச் சென்று, அங்கே பதரி நாராயணன் ஸமீபத்துள்ள ஒரு ஆச்ரமத்தில் இருந்த கோவிந்தஸ்வாமி என்னும் ஆசாரியரைக்கிட்டி, அவருடைய தேஜஸினாலும் மகிமையாலும் அவரே தமது குருவெனத்தெரிந்து, தசச்லோகி என்னும் ஸித்தாந்த பிந்துவாகிய நிர்வாணதசகத்தால் பிரார்த்திக்க, அந்த ஆசாரியரும் அதன் அர்த்த கர்ப்பத்தைக் கவனித்து, இவரது பக்குவத்துக்கு மெச்சி, தாமிருந்தசிறுகுகையின் துவாரத்தின் மார்க்கமாகத்தமது சரணங்களைக் காண்பித்தார். உடனே நமது சங்கரரும் அப்பாதங்களைப் பூஜிக்க, கோவிந்தபாதரும் இவருக்கு ப்ரஹ்மோபதேசம் செய்தருளினார். அங்கே அப்பெரியவராலேயே க்ரமஸந்யாஸத்தையும் பெற்றுக்கொண்டு, வேதவ்யாஸர் செய்த ப்ரஹ்மஸூத்ரத்துக்குப் பாஷ்யம் செய்யும்படிக் கட்டளையிட்ட அவரது இஷ்டத்துக்கு இணங்கி, அவரிடம் விடைபெற்றுக் காசிமாபுரிக்குப்போனார்.

அங்கே கங்கைக்கரையில், பல ஸந்யாஸிகளுக்கு ஆத்ம வித்தையைப் போதித்துக்கொண்டிருந்தார். அச்சமயத்தில் காவேரி தீர்த்தத்திலிருந்து, தகுந்த ஆசாரியனைத் தேடிவந்த ஸநந்தனன் என்னும் பிராமணர், நமது பகவத்பாதரை வந்து ஆச்ரயித்தார். நமது ஸ்வாமியும் வந்தவரிடம் சிஷ்யனுக்கேற்ற குணமிருக்க மகிழ்ந்து, அவருக்கு உபதேசம் செய்து, தம்முடைய சிஷ்யருக்குள்

அவரிடத்தில் அதிகப்ரியத்தையும் காட்டிவந்தார். இதனைக்கண்டு பொறாத மற்ற சிஷ்யர்களுடைய ஸந்தேகத்தை நிவர்த்திப்பதன் பொருட்டு, அந்தத் தென்தேசத்துச் சிஷ்யர் கங்கைக்கு அக்கரையில் நின்றிருந்தபோது, இக்கரையில தாமிருந்துகொண்டு, உடனே வரும்படி ஆஞ்ஞாபித்தார். உடனே, அந்த ஸநந்தனரும், யாதொரு ஆலோசனையுமின்றித் தமது ஆசாரியருடைய பாதமலர்களை மனதில் தியானித்தவராகவே கங்கையில் இறங்கினர். இவர் இறங்கினவுடன் இவரது ஒரு அடிக்கு ஒரு தாமரைதோன்றி இவர் பாதத்தைத் தாங்க, இவரும் கரையேறினார். மற்ற சிஷ்யர்கள் வியந்து தமது கர்வம் ஒழிந்தனர். அதற்கேற்ப இவருக்குப் பத்மபாதரென்னும் நாமத்தையும் நமது ஸ்வாமி தந்தருளினர்.

ஒருநாள், நமதுமஹான் அந்தக்காசிக்ஷேத்திரத்தின்தெருவில் போய்க்கொண்டிருந்தபோது, ஒரு சண்டாளன் நான்கு நாய்களுடன் எதிரே வரக்கண்ட சிஷ்யர்கள், அவனை விலகிப் போகும்படித் தூண்டினர்கள். அப்போது அவன், ஸ்வாமியைப் பார்த்து, "ஆத்ம ஸ்வரூபத்தையறிந்த உமக்கு ஜாதிபேதம் எப்படித்தோன்றும்? ஆத்மாவில் ஜாதிபேதம் உண்டோ? கங்காஜலத்தில் தோன்றும் சூரியனுக்கும் குடத்துக்கள்ளில் தோன்றும் சூரியனுக்கும் பேதமுண்டோ? தங்கபாத்திரத்தின் உள்ளிருக்கும் ஆகாசத்திற்கும் மண்பாத்திரத்தின் ஆகாசத்திற்கும் வித்யாஸம் எது?" என்று கேட்டான்.

இதனைக் கேட்டதும் நமது ஆசாரியர் மகிழ்ந்து மனீஷா பஞ்சகம் என்னும் ஐந்து ச்லோகங்களால் தமது மனத்திலுள்ள பொதுவான அபிப்பிராயத்தை வெளியிட்டார். தமது ஸ்தோத்திரம் முடிந்தபிறகுபார்க்க, அச்சண்டாளனும் நாய்களும்இல்லாமற்போக யாவரும் வியந்தார்கள். உடனேகாசிநாதனுடைய விச்வேசநும் ப்ரத்யக்ஷராகி, தாமே சண்டாளனுருக் கொண்ட விதத்தையும், அவரது மனீஷா பஞ்சகத்தால் மகிழ்ந்ததையுஞ் சொல்லி, ப்ரஹ்மஸூத்ரத்துக்குப் பாஷ்யம் செய்யும்படி அநுக்கிரஹம் செய்து மறைந்தார்.

ஸ்வாமியும், ஸஹஸ்ரநாமபாஷ்யம் உபநிஷத்பாஷ்யம் கீதாபாஷ்யம் ப்ரஹ்மஸூத்ர பாஷ்யம் முதலியவற்றைச் செய்தருளினூர். இந்தப் பாஷ்யங்களைத் தமது சிஷ்யர்களுக்கு உபதேசித்துக் கொண்டிருக்கும்போது அவ்விடத்தில் கிழப்பிராமணவுருவத்தோடு வந்த வியாஸர் கேட்ட கேள்விக்குத் தக்க விடைகள் நமது ஸ்வாமி அளித்ததனுல், வ்யாஸரும் மகிழ்ந்து அநுக்கிரஹம் செய்து சென்றனர்.

பிறகு சங்கரர், அங்கிருந்து சிஷ்யர்களோடு புறப்பட்டு, இப்போது அலஹபாத் என்று அழைக்கப்படுகிற பிரயாகை என்னும் க்ஷேத்திரத்திற்குப் போய்ச் சேர்ந்தார். இங்குத்தான் இப்பாரத கண்டத்தின் ஏழுமஹாநதிகளுள் கங்கை யமுனை ஸரஸ்வதி என்னும் மூன்று நதிகளும் கூடிக்குலாவுகின்றன. ஸ்வாமி, இந்தக்கூடல் துறையில் ஸ்நானஞ்செய்துவிட்டு, அங்கேயமுனாநதிக்கரையிலேயே ஒரு தமாலமரத்தினடியில் வீற்றிருந்து ஆத்மோபதேசம் செய்து கொண்டிருந்தார்.

இந்தச் சமயத்தில் ஸ்வாமி காதுக்கு ஒருவிஷயம் எட்டிற்று. என்னவெனில்:- அவ்வூரில் "குமரிலபட்டர் என்னும் ஒரு கர்மயோகியானவர், தமது பாவங்கள் கழியும் வண்ணம், அக்நிப்ரவேசம் செய்யப்போகிறூர்" என்ற விஷயமே. இவரையே பட்டபாதர் என்று உலகம் சொல்லும். இதனைக் கேட்டவுடன், சங்கரபகவத்பாதர் சிஷ்யர்களோடு அங்குச் சென்று, குமரிலப் பட்டருக்குத் தர்சனம் கொடுத்தார். அந்தக் குமரிலபட்டரும், ஸுப்ரஹ்மண்யாவதாரமாக வந்து உலகத்துக்குக் கர்மமார்க்கத்தைப் போதித்தவர். இவரும் தமது ஸ்வரூபத்தையும், ஸ்ரீசங்கரபகவத்பாதருடைய ஸ்வரூபத்தையும் ஆத்மஞானத்தால் தெரிந்து கொண்டவராதலால், ஸ்ரீமத் சங்கரரோடு சிலகாலம் ஸல்லாபம் செய்துக் கடைசியாக நமது ஸ்வாமியைப் பார்த்து, "மாஹிஷ்மதி என்னும்பட்டணத்தில் நான்முகனது அவதாரமாக மண்டனமிச்ரர் என்னும் ஒருபிராமணர் ஸரஸ்வதியின் அம்சத்தால் அவதரித்துள்ள ஸரஸவாணி என்னும்

தமது தர்ம பக்தியோடு இல்லறத்தை இனிது நடத்தி உலகத்துக்கு க்ருஹஸ்ததர்மத்தின் மேன்மையைப் போதித்துக்கொண்டிருக்கிறார்; அங்கும் தாங்கள் செல்லவேண்டும்" என்று பிரார்த்தித்துவிட்டு அவருடைய அநுக்ரஹத்தின்மேல் தமது கார்யத்தை முடித்துக் கொண்டே இம்மண்ணுலகை விட்டனர்.

உடனே பகவத்பாதரும் அந்தப் பிரயாகையினின்றும் புறப் பட்டு மாஹிஷ்மதிக்குச் சென்றனர்.

நர்மதை யென்னும் நதத்தின் கரையில் உள்ள மாஹிஷ்மதி என்னும் பட்டணத்தில், மண்டனமிச்ரர் தமது தர்ம பக்தியோடு, இல்லறம் நடத்தி வருநாளில் ஒருநாள், தமது க்ருஹத்தில் நடத் தும் பித்ருதினம் வந்து சேர்ந்தது. அத்தினத்தில். வேதக்ரமப்படி ச்ராத்தம் செய்து முடித்தற் பொருட்டு பூர்வமீமாம்ஸையைச் செய்தவராகிய ஜைமினி மஹரிஷியையும் உத்தரமீமாம்ஸையின் கர்த்தாவாகிய வேதவ்யாஸரையும் விச்வேதேவராகவும் பித்ருதேவ ராகவும் வரித்து மிகுந்த ச்ரத்தையுடன் அந்தத் தினத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளோடு இருந்தார். இந்த உலகத்துக்கு அலங் காரமாகப் பிறந்தவராதலால், இவருக்கு மண்டனமிச்ரர் என்னும் நாமம்வந்தது. மண்டனம் என்றால் அலங்காரம். அப்போது நாழிகை 18 இருக்கும். நமது ஸ்வாமி தமது சிஷ்யர்களோடு அங்குச்சென் றனர். அச்சமயம் வெளிக்கதவு தாளிடப்பட்டிருந்ததால், ஸ்வாமி தமது சிடர்களை வெளியில் நிறுத்தி விட்டு, தாம் மாத்திரம் தமது யோகபலத்தைக் கொண்டு ஆகாய வழியாக உள்ளே சென்றார்.

ச்ராத்த காலத்தில் ஸந்நியாசிகளைக் கண்டால் அந்த ச்ராத்தம் நஷ்டமாகுமென் றுகர்மகாண்டத்தில்சொல்லியிருப்பதால்,மண்டனர் தமது சாமாரரைக் கண்டவுடன் மிகுந்த கோபங்கொண்டார். அங்கிருந்தஜைமினியும் வ்யாஸரும் வந்தவர் இன்னாரெனத்தெரிந்த வர்களாகையால், அவரது கோபத்தைத் தணித்து அவரையே விஷ்ணுவாக வரிக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். மண்டனரும்

உடனே சாந்தராகி, அப்படியே நமது சங்கரரை, விஷ்ணு ஸ்தானத்தை அங்கீகரிக்கும்படி ப்ரார்த்திக்க, பகவத்பாதர் தமக்கு நிமித்தராணபிக்ஷை வேண்டாமென்றும் வாதபிக்ஷைதான் வேண்டுமென்றும் சொன்னார். உடனே மண்டனரும் ஒத்துக்கொள்ள வாதம் நடக்கலாயிற்று.

இந்தவாதத்துக்கு மத்யஸ்தர்களாக இரண்டு ரிஷிகளையும் வரிக்க, அவர்கள் ஒத்துக் கொள்ளாமல், மண்டனரது தர்மபத்நியாகிய ஸரஸவாணியையே மத்யஸ்தையாக வரித்துக்கொள்ளும்படி ஆஞ்ஞாபிக்க, ஆஞ்ஞாபித்தபடியே வரித்துக்கொண்டு மறுநாள் வாதந் தொடங்குவதாகத் தீர்மானித்து ச்ராத்தத்தை முடித்து விட்டு, ரிஷிகள் இருவரையும் அனுப்பி விட்டார்கள்.

வாதத்தில் மண்டனமிச்ரர் தோற்றுப்போக, அவரும் நமது ஸ்வாமியை வணங்கித்தமக்கு ஸந்யாஸம் தரும்படிக் கேட்டார்.

பிறகு, ஸரஸவாணியாகிய ஸரஸ்வதிதேவி, தான் பிரஹ்மலோகத்துக்குப் புறப்படவே, நமது ஸ்வாமி அவளையும் வாதுக்கழைத்து இருவரும் 17 நாள்கள் வாதம் செய்ய, வாணி ஒவ்வொன்றிலும் தோல்வியடைந்து வருந்திப் பதினெட்டாம்நாள் ச்ருங்காரசாஸ்திரத்தின் வாதத்தையாரம்பித்தாள். அப்போது ஸ்வாமி, அவளிடம் ஒருமாதத்தவணை கேட்டுக்கொண்டு காமசாஸ்திரத்தை அப்யஸிக்கச் சென்றார்.

ஒரு ஊரில் அமருகனென்னும் அரசன் இறந்துபோக, அந்தப் பிரேதத்தைக் கிடத்திக் கொண்டு அவனது பத்நிகளும் மற்றுமுள்ள மந்திரிகளும் வருத்தப் பட்டிருப்பதைத் தெரிந்துகொண்ட ஸ்வாமி, தமது சிஷ்யர்களிடத்தில் தமது தேஹத்தை ஒப்பித்து விட்டுப் பரகாயப்ரவேசம் என்னும் வித்தையினால், அந்த மருதமான சரீரத்தில் நுழைந்தார். உடனே அமருகன் தூங்கி விழித்தவன்போலெழுந்திருந்தான். சிலநாளில், இவரது நூதனமான ஒழுக்கங்களால் ஸ்திரீகட்கும் மந்திரிகட்கும் ஸந்தேஹமுண்டாகி, இவரை யாரோ ஒரு மஹான் எனத் தெரிந்து, இவரது தேஹத்தைக் கண்டுபிடித்துச் சுட்டெரித்து விடும்படிக் கட்டளை யிட்டார்கள்.

அந்தப் படியே சேவகர்களும் பலஇடங்களிற் றேடிக்கடைசியாக அதனைக்கண்டுபிடித்துக் கொண்டார்கள். அதனைத் தெரிந்து கொண்ட பத்மபாதர் முதலிய சிஷ்யர்கள், தங்கள் ஸாமர்த்தியத்தினும், மோஹமுத்கர மென்னும் பெயருடன் பஜகோவிந்தம் என்று குரு அருளிச்செய்த சுலோகங்களாலும் தங்களது அபிப்பிராயத்தை அமருகனாக இருக்கும் குருவுக்குத் தெரிவிக்க, நமது பகவத்பாதரும்மப்பக்கந் தெளிந்து அந்தத்தேஹத்தைக் கீழேதள்ளி விட்டுத் தமது தேஹத்தில் நுழைந்தார்.

அப்போது அந்தத் தேஹம் அந்தச் சேவர்களால் பாதி சுடப்பட்டிருந்தது. அந்த ஸமயம் நமது ஸ்வாமி, லக்ஷ்மீ நரஸிம்ம ஸ்தோத்ரம் செய்து, அவரது க்ருபையால் தமது தேஹம் வளரப் பெற்று, சிஷ்யர்களோடு மாஹிஷ்மதி வந்து, ஸரஸவாணியோடு வாதஞ் செய்து, அவளையும் ஜயித்து, அவளையும் ப்ரஹ்மலோகத்துக்குச் செல்ல அநுமதிகொடுத்து, மண்டனமிச்ரருக்கு க்ரமஸந்யாஸமும் ஸுரேச்வராசாரியர் என்னும் நாமமுமளித்துத்தம்முடன் இருத்திக்கொண்டார்.

ஒருகால் மஹாராஷ்டிர தேசத்தில் ஒரு கபாலிகமதத்தான், ஸ்வாமி தனியே இருக்கும் போது வந்து, அவரது சிரசைத் தமது கடவுளுக்கு அர்ப்பணமாகத் தந்தருளும்படி வேண்ட, ஸ்வாமியும் யாதொரு தடையுமில்லாமல் தமது நிர்விகல்பஸமாதியின் போது வந்து எடுத்துப் போகும்படி அநுக்ரஹித்தார். அவ்வண்ணமே ஒரு தினம் அந்தச் சமயம் பார்த்து அந்தக் கபாலிகன்வந்துசிரசை அபகரிக்க நின்ற தருணத்தில், பத்மபாதர் திடீரென அவ்விடத்துத் தோன்றி, விஷயந்தெரிந்து திகைத்து, லக்ஷ்மீநரசிம்மனைத் துதிக்க அவர் உக்ரமான கர்ஜனையோடு தோன்றி, அந்தக் கபாலிகனைக் குத்திக் கொன்றருளினார். இந்த விஷயம் சிஷ்யருக்கும் மற்றவருக்கும் தெரிந்து யாவரும் வியந்தார்கள்.

திருக்கோகர்ண மென்னும் திவ்யஸ்தலத்துக்குப் போனபோது அங்கு இறந்து கிடந்த ஒருகுமாரனைப் பிழைப்பித்துக் கொடுத்தருளினார்.

பிறகு ஸ்ரீபலி என்னும் கிராமத்தில் இருந்த பிரபாகரர் என்னும் க்ருகஸ்தர், தமது குழந்தை வயது எட்டாகியும் பேசுவது முதலிய செய்யாமல் ஸதா தியானத்தில் இருப்பவன் போலவும் உன்மத்தன் போலவும் இருப்பதை நிவர்த்திக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, ஸ்வாமி தமது த்ருஷ்டியாலும் வசனங்களாலும் அவனது உன்மாதத்தைப் போக்கிப் பேசும்படிச் செய்வித்தார். அக் குழந்தையும் தனது வாய்திறந்து அதிக வேகத்தோடு ஸம்ஸ்கிருத பாஷையில் தத்வமஸி வாக்யத்திற்குப் பொருளாகப் பன்னிரண்டு சுலோகங்களை வருஷித்தான். அதன் பொருள்யாவருக்கும் உள்ளங்கை நெல்லிக் கனியாக இருந்தமையால், அவருக்கு ஸ்வாமி, ஹஸ்தாமலகர் என்னும் நாமம் கொடுத்துத் தம்மிடமே இருத்திக் கொண்டார். ஹஸ்தம் என்றால் கை. ஆமலகம் என்றால் நெல்லிக் கனி. பிரபாகரர் தமது மகன்பேசினதினாலும், அத்வைத நிஷ்டைக்கு உரியனானபடியால், தமக்குப் பயனில்லையென்று போய்விட்டார்.

பிறகு, நமதுமஹான் தமது சிஷ்யர்களோடு, துங்கபத்திரை நதியினால் பரிசுத்தமுடைய ச்ருங்ககிரிக்குப் போய்ச் சேர்ந்தார். அந்தக் கிரியில்தான் ராமாயணத்தில் சொல்லப்படுகிற விபாண்டகரான கலைக்கோட்டு மஹாமுனியென்று பெயருடைய ரிச்யசிருங்கர் என்னும் ரிஷி தபசுசெய்து கொண்டிருந்தார். அங்கே போய்ச் சேர்ந்தவுடன்; ஸ்வாமி அதன் பரிசுத்தத்தை யுணர்ந்துதமதுசிஷ்யர்களோடு ஆலோசித்து அந்த இடத்தில் ஸரஸ்வதியைப் பிரதிஷ்டை செய்து பெரிய மதில்களோடு கூடியமடமும் நிர்மாணம் செய்து கீழே ஸ்ரீசக்ரமும் பிரதிஷ்டை செய்தார். இதற்குத்தான் ச்ருங்ககிரி மடமென்று பேர். இது சங்கரமடங்களுக்குள் முதன்மை பெற்றது. இங்கே தமது சிஷ்யரான ஸுரேச்வராசாரியரை இருக்கும்படி ஏற்படுத்தினர்.

பிறகு ஸ்வாமி சேதுயாத்திரை போயிருக்கும் போது தமது மாதாவின் நினைவால் அவளது அந்திமகாலத்தை யுணர்ந்து யோக சக்தியால் காலடிக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே தாயாருக்குத் தரிசனம் கொடுத்து அவளது ப்ரார்த்தனையின்படி விஷ்ணுவை ஸ்தோத்ரம் செய்து அவளது சேவை செய்து வைத்துத் தாயாரை

வைகுண்டத்துக்கு அனுப்பினார். பிறகு அவளது உத்தரகிரியைக்கு உதவியாக அவ்வூர் பிராமணர்களை வேண்ட, அவர்கள் ஸந்நியாஸிக்கு இது உரியதல்லாமையால் அவருக்குத் தாங்கள் உதவி செய்யமாட்டோம் என்று சொல்லி விட்டார்கள். உடனே ஸ்வாமி கோபித்து அந்த உடலைச் சேதித்துத் தொல்லைப் புறத்தில் தகனக்கிரியையும் முடித்துச்சென்றார். அந்தக் கோபத்தின் பலனாகவே இன்றும் மலையாளத்துப் பிராமணர்கள், தங்கள் வீட்டின் கொல்லைப்புறத்தைச் சுடுகாடாகக்கொண்டு, இறந்த தேகத்தைச் சேதிக்கும் வழக்கத்தையும் கொண்டிருக்கிறார்கள்.

பிறகு, ஸ்வாமி, திக்விஜயம் செய்யப் புறப்பட்டுக் காஞ்சீபுரத்தில் ஒருமடமும் ஜகன்னாதத்தில் ஒரு மடமும் துவாரகையில் ஒரு மடமும் பதிரிகாச்ரமத்தில் ஒரு மடமும் ஸ்தாபித்தார்கள்.

பிறகு காஷ்மீரத்துக்குப் போய் அங்குள்ள சாரதாபீடத்தின் தெற்குவாசலைத் தமது மகிமையால் திறந்து, அங்குள்ள பண்டிதர்களோடு வாதித்துத் தமது வைதிகமதத்தை ஸ்தாபித்து விட்டுத் தமது ஸ்ருங்ககிரிக்கு வந்து, சிலகாலம் உபதேசகராக இருந்து விட்டு, 32-வது வயதில் இம்மண்ணுலகில் தமது புகழையும் மதத்தையும் மடங்களையும் சிஷ்யர்களையும் நிறுத்தி விட்டுத் தமது இருப்பிடமாகிய கைலங்கிரிக்கு எழுந்தருளினார்.

பத்திராதிபர்.

தருமபரிபாலனம்.

தருமத்தைப் பாதுகாத்தல் என்பது இதன் பொருள். இனித் தருமம் என்றாலென்ன? அதனைப் பாதுகாத்தலாவது எவ்விதம்? என்பனவற்றை ஆராய்வாம். தருமம் எனினும் அறமெனினும் கடமை யெனினும் ஒருபொருளனவே.

தருமமாவது, மனுஸ்மிருதி முதலிய நூல்களிலே, செய்யத் தகுந்தன வெனவிதித்தனவற்றைச் செய்தலும் செய்யத்தகாதனவென விலக்கியவற்றை ஒழிதலுமாம்.

அஃது ஒழுக்கம் வழுக்குத் தண்டனை முறைமைப்படும்

ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தங்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய ஆச்சிரமங்களினின்று அவ்வவற்றிற் கோதிய தருமங்களின் வழுவா தொழுகுதல்.

வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே என்னுடையது என்னுடையது என்றிருக்கப்பட்டவர்கள் அது காரணமாகத் தமக்குள் மாறுபாடு பூண்டு அப்பொருளைப் பற்றிச் செல்வது.

அவ்வாறு சொல்லுதற்குரிய வியவகாரபதம் பதினெண் வகைப்படும். அவையாவன:—கடன் கோடல், உபநிதி, கூடிமேம்படல், நல்கியதை நல்காமை, ஒப்பிப் பணிசெய்யாமை, கூலிகொடாமை, உடையனல்லான்விற்றல், விற்றுக்கொடாமை, கொண்டுள்ளமொப்பாமை, கட்டுப்பாடு கடத்தல், நிலவழக்கு, மாதராடவர் தருமம், தாயபாகம், வன்செய்கை, சொற்கொடுமை, தண்டக்கொடுமை, சூது, ஒழிபு என இவைகளாம்.

தண்டமாவது மேற்சொல்லிய ஒழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழுவியவர்களை அவ்வந் நெறியில் நிறுத்தற் பொருட்டு ஒப்பநாடி அதற்குத் தக்கவாறு தண்டித்தல்.

இவைகளுள்ளும் வழக்கும் தண்டமும் உலகமார்க்கத்தை நிலை நிறுத்துதற்கு மட்டிலும் உரியனவாயிருத்தலேயன்றி ஒழுக்கத்தைப் போல மக்களுயிர்க்கு உறுதிபயக்குஞ் சிறப்பினவாயில்லையாதலாலும், நூல்களாலும் அறியப்படுதல் மாத்திரையின் நில்லாது அறிவு மிகுதியினாலேயும் தேச நடக்கையினாலேயும் அறியக்கூடியனவாயிருத்தலாலும், அவைகளை விலக்கி மக்களுயிர்க்கு உறுதிபயக்குஞ் சிறப்பினதாய் ஒழுக்கமே தருமமென வெடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிபாலனமென்பதற்கு முன்னரே பாதுகாவல் எனப்பொருள் கூறப்பட்டது. பொன் வெள்ளி இரத்தின முதலியவைகளையும் அவற்றுடைய களைகளையும் ஏனைய பதார்த்தங்களையும் காக்கும் காவல் போலாது, ஆத்மசுகத்திற்கு ஏதுவாய் இன்னின்னார்க்கு இன்

னின்னவை யுரித்தென மனுஸ்மிருதி முதலிய நூல்களிற் கூறப் பட்டுள்ளவைகளைக் கைக்கொண்டு இடைவிடாது அநுட்டித்து வருதலையே ஈண்டுப் பாதுகாவலெனக் கூறப்பட்டது.

இதுவாறும் தொடர்க்குப் பொருளும், தருமம் என்றால் இன்ன தென்பதும், பரிபாலனம் என்றால் இன்னதென்பதும் இவ்விதமென் பதுங் கூறப்பட்டன. இனித்தருமத்தின் வகைகளைப்பற்றியோசிக்க வேண்டுவது ஆவசியகம்.

அது தான் நான்குவகைப்பட்ட நிலையுடையதாய் வருணங்கள் தோறும் பலவேறுவகைப்பட்டுக் கிடக்கின்றமையாலும், ஒவ்வொன் றிற்கும் சிறப்பாயுள்ளமையாலும், தனித்தனி கூறப்புகின் விரியு மாதலாலும், விரிப்பினும் சிறுபான்மையோர்க்கே உபயோகப்படுத லாலும், எல்லார்க்கு மொத்தலிற் பெரும் பான்மையாகிய பொது வியல்பு பற்றி இல்லறந் துறவறமென இரண்டுவகையாகப் பிரித் துக்கொண்டு கூறத்தொடங்குகின்றேன்.

இல்லறம்—இ-ள். கற்புடைமனைவியோடு இல்லின்கணிருந்து செய்யும்அறம் என்பதாம் இதினின்றும் இல்லறமென்பதற்கு இல் லின்கணிருந்து செய்யும் அறமெனப்பொருளிருக்க, "கற்புடைமனைவி யோடு" என்று அடைதந்து பொருள் கொள்வானேனென ஓர் ஆசங் கை நிகழலாம். நம் தெய்வப்புலமைத்திருவள்ளுவநாயனார்,

பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னுந், திண்மையுண் டாகப்பெறின்" என்று கூறியிருத்தலும், இதனுள் "கற்பென்னும்" என விசேடித்து "யாவுள, என்றதற்கு நம்பரிமேலழகியார்" "கற்பு டையாள் போல அறமுதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிறவின் மையின் யாவுள வென்றார்" எனக் கூறியிருத்தலும், அவ்வாறு அடைதந்து பொருள் கோடலை வற்புறுத்தலின் அம்மனம் கொள்ள வேண்டும். இன்னும்,

"கற்பு மேய கனங்குழை மாதரைப்
பெற்று ளோர்த மரபும் பெருந்தவக்
கற்பி னுட்கொண்ட காதல ருநுயிர்ச்
சுற்றம் யாவுந் துறக்கத்தி னெய்துமால்."

விவசாயம்

கலப்பைகளும் உழவும்.

நமது இராஜாங்கத்தில் ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டு வருகிறபடியால், அவர்கள் போஜனர்த்தத்திற்குத் தரிசுநிலங்களைத் தற்காலத்தில் எடுத்துச் சாகுபடிக்குக் கொண்டுவரக் குடிகள் பிரயத்தனப்படுவது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே.

இதற்கு மூலகாரணம் யாதெனில்:- நமது ஆகாரம் உடை முதலிய உபயோகமுள்ள எல்லா வஸ்துக்களுக்கும், புற்பூண்டுகளைப் புசித்தும் புஷ்பங்களின் மதுவைப் பானம்செய்தும் நமக்குப் பால் தேன் முதலிய உணவுப்பொருள்களாக மாற்றிக்கொடுக்கிற ஜீவப் பிராணிகளுக்கும் ஜீவாதாரமாயிருப்பன இப்பயிர்ச்செடிகளே.

இப்பயிர்களின் வளர்ப்பானது வேளாண்மைத் திறத்தை ஒத்திருக்கிறது. உலகத்தில் வழங்கிவரும் "கொழுனன் நட்பில்லாத பெண்ணும் உழவு நட்பில்லாத பயிரும் பிரயோஜனமில்லை" என்றும், "உழஅற உழுதால் விளைவுஅற விளையும்" என்றும் உள்ள பழமொழிகள் மேற்சொன்ன கருத்தை வெளியாக்குகின்றன. அதாவது வேளாண்மை என்பது முட்களையும் புதர்களையும் அழித்து நிலத்தைத்திறமான கருவிகளைக்கொண்டு பக்குவப்படுத்தித் தகுந்த பயிர்களை காலத்தில் சாகுபடி செய்து அத்தொழிலுக்குச் சாதனங்களாயிருக்கும் ஜீவப்பிராணிகளையும் போஷித்துநிர்வகிப்பதுந்தான்.

எல்லாத்தொழில்களுக்கும் ஜீவாதாரமாயிருக்கும் இத்தொழிலின் குறைகளைத்தெரிந்து சீர்திருத்தி நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்து பலப்படுத்தவேண்டியது அவசியமல்லவா?

இந்நாட்டுக்கிருஷியை அபிவிருத்திசெய்யக்கூடுமான அநேக விஷயங்களில் முக்கிய பாகமாகிய வேளாண்மைக்குக் கருவிகளில்

தலைமையான கலப்பைகளையும் அவைகளினுடைய உழவின் குண விசேஷங்களைப்பற்றியும் நாம் இங்குப் பேசுவோம்.

இந்தசமஸ்தானத்தில் உபயோகித்து வருவதுபோல மற்றத் தேசங்களிலும் கொஞ்சக்காலத்திற்கு முன் மரக்கலப்பையையே உபயோகப்படுத்தி வந்தார்கள். ஆனால் அவ்விடங்களிலிருக்கும் குடிகள் காலநாகரீகத்தையொத்து வியவசாய அபிவிர்த்தி சம்பந்தமான விஷயங்களில் தங்கள் தங்கள் இராஜாங்கத்தாரோடு தாங்களும் சிரத்தையெடுத்துக்கொண்டு ஆங்காங்குள்ள கலப்பைகளின் குறைகளை 'அறிந்து சிலமாறுதல்களைச் செய்துச் சீர்திருத்தி ஆழமாயும் ஜாஸ்தி மண் புறளும்படிக்கும் செய்து கொண்டார்கள். நமது சமஸ்தானத்துக் குடிகளோ வியவசாய அபிவிருத்தியில் சிரத்தையில்லாததுடன் நம்பிக்கையும் ஊக்கமும் மனோதைரியமுமற்றவர்களா யிருப்பதால் நமது கலப்பைகள் மாறுதலன்றியில் பழையமாதிரியாகவே இருக்கிறது.

இவ்விடத்தில் மழைமாரிகள் சரியானகாலத்தில் பெய்யாமல் க்ஷாமமாய்ப் போகிறபடியால் நமது கருணைதங்கிய மஹா-ா-ா-ஸ்ரீ மகாராஜாஅவர்கள் இதையறிந்து வியவசாயிகளை நல்ல நிலைமைக்குக்கொண்டுவரும் பொருட்டும் நூதன வியவசாய முறைமைகளின் குண விசேஷங்களைத் தெளிவாகச்சொல்லிக்குடிகளுக்கு ஊக்கத்தை உண்டுபண்ணி அவர்களை அநுஷ்டிக்கச்செய்து அதனால் அவர்கள் விசேஷ லாபத்தையடையும் நவீன சாஸ்திரமுறைகளில் தேர்ச்சியடைந்தவர்களை நியமித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

இது நிற்க, மற்றத்தேசங்களின் கலப்பை அடைந்த மாறுதலின் அநுகூலங்களையே பேசுமுன் நமது கலப்பையின் உழவின் தோஷங்களைச்சற்று எடுத்துப்பேசுவோம். இந்தக்கலப்பை செய்ய ஆப்பு உருவம்போன்ற மரமும் அதன் நுணியில் சேர்க்க இரும்பு தட்டைக்கம்பி கொழுவும் தாம் அவசியமானவை. இக்கலப்பை அமைக்கப்பட்டிருக்கும் வாட்டத்தினால் இதன் உழவில் மண் இலே

சாக மேலே திறப்பட்டு ஆழமில்லாமல் உழவுசால்களுக்கிடையில்திட்டுகளும் காணப்படுகின்றன. மண்ணைக் கீழும் மேலுமாய்ப் புரட்டிப் புற்பூண்டுகளின் வேர்களை வெளிப்படுத்திக்காயவைத்து அழிக்கவும் மண்ணை விதைக்கும் பக்குவத்திற்கு கொண்டு வரவும் சக்தியற்றதாயுமிருக்கிறது. தவிரவும் கலப்பையில் மண் ஒட்டிக்கொண்டு மாட்டுக்கும் ஏர் ஓட்டிக்கும் சிரமத்தைக்கொடுப்பதோடும் உழவு ஆழமாய்ச்செல்ல ஏர் ஓட்டி மேழியை எப்பொழுதும் அழுத்த வேண்டியதாயுமிருக்கிறது. இவ்வளவு அற்றைக்கூலி ஆளைக் கொண்டு உழுத நிலத்தை மண்ணைச்சற்று அப்புறப்படுத்தி உழவைப்பார்த்தால் படைச்சால்களுக்கு ஊடேநேரிடும் திட்டுகள் அதிகமாய்க்காணப்படும். இதன் காரணத்தை யோசிக்கும் பட்சத்தில், உழவில் ஏற்படும் படைச்சாலானது கலப்பையின் அமைப்பால் மேற்பக்கம் மண்ணில்போகும் அகலம் அடிப்பக்கமும் போகாமல் மேலேயிருந்து இருபக்கமும் வாட்டமாய்க் கரைந்து முக்கோண உருவத்தைப்போலடைகிறது. இவைகளை நிவர்த்திக்கும்பொருட்டுத்தான் கிருஷிகர் குறுக்குழவு போடுவது சகஜம். பத்தாள் நடுகை குடித்தனமுள்ளவன் இவ்விடத்தில் உழவிறகு ஒரு ஜோடி மாடு வைத்துக்கொள்வது வழக்கம். உழவிற்செல்லும்காலத்தைக் கவனித்தால் ஒரு ஏரைக்கொண்டு இவனுடைய நிலத்தை முதல் உழவு செய்ய 5 நாளும் மறுபடி குறுக்குழவிற்கு 3 நாளும் ஈரமிருந்த பட்சத்தில் செல்லும். இப்படிச்செய்துங்கூட உழவில் இன்னஞ்சிறிய சதுரமான திட்டுகள் காணப்படுகிறபடியால், மண்ணின் பாங்குக்குத் தகுந்தபடி 4 அல்லது 6 உழவு செய்யவேண்டியதாயிருக்கிறது. இவ்வளவு சிரமப்பட்டும் மண் வெட்டியினால் கொத்துதலில் மண் புரட்டப்பட்டு நயமடைகிறது போல இதில் அவ்வளவு பதமடைகிறதில்லை.

தவிர, நமது குடிகள் மழையை எதிர்பார்த்து வியவசாயத் தொழிலை கைக்கொள்வது வழக்கமல்ல. உதாரணமாக மழை பெய்த பிறகு தான் உழுவதற்காகக் கலப்பை அடிக்க ஆசாரியிடம் போவது வழக்கமாயிருக்கிறது. அவனோ குடியானவனுக்கு காலதாமதத்தால் உண்டாகும் நஷ்டத்தைக் கவனியாமல், தன்னுடைய

லாபத்தையே கருதி ஜாஸ்தி பணம் தரக்கூடிய இதரவேலைகளில் கருத்தாயும் குடியானவனைத் தன் வீட்டுக்கு அலையவைத்தும் தன் தயவை எதிர்பார்த்துக் காத்திருக்கும்படிச் செய்வதையும் கண்டு முதல் காலத்தில் இவ்வளவு தயவாய்ச்செய்து கொடுத்து வேலைக்கு க்ஷாம காலத்திலும் தானியம் வாங்குவதையும் அநேகர் பார்த்தும கேட்டுமிருக்கலாம்.

இவ்விதகாரணங்களை முன்னிட்டும் மழை காலாகாலத்தில் தவறுகிறபடியாலும் குடியானவனுக்கு நிலத்தை நன்றாய்ச்செம்மை படுத்த ஆசையிருந்தாலும்கூட பட்டத்துக்குள் நிலம் பூராவும் தகுந்தபடி நயப்படுத்த சாகவாசம் இல்லாதிருப்பதில், அவசரத்தில் பூமியை அரைகுறையாய் உழுது விதைத்துக் கடைசியில் கண்டு முதல் நாளில் அதிருப்தியடைகிறான். "ஓடி ஓடி நூறு குழி உழுவதால் யாது பயன்" பயிரின் வேர்கள் சல்லிசாய் ஓடும்படி மண்ணை நன்றாய்க்கிளறி இளக்கியும் காற்றடச்செய்தும் ஈரத்தை காக்கும் படி செய்வதும் உழவினால் ஆகவேண்டியதன்றோ? இவ்விஷயங்களை திருப்திகரமாய்ச்செய்ய நமது கலப்பை சக்திபற்றதாயிருந்தபடியால் மற்ற தேசங்களில் சீர்திருத்தப்பட்டு இரும்பினால் செய்யப் பட்டதால் இரும்புக்கலப்பையென்று பெயர்வழங்குகிறது.

கொத்துதலில் மண்வெட்டி எப்படி மண்ணைக் கீழும் மேலுமாய்ப் புரட்டப்படுவதற்குச் சாதனமாயிருக்கிறதோ அதுபோல இரும்புக்கலப்பையும் உழவில் அதன் கூர்மையான கொழுவின் சக்தியினால் மண்ணைப் பெயர்த்துக்கிளறி மண் புரட்டும் இறக்கையின் விசேஷவாட்ட அமைப்பால் இளகிற மண் மறைந்து விழுக அடி மண்ணை மேல் வரச்செய்து ஒருபுரமாய்ச் சால்களைப் புரட்டிச் சம கோணமான உருவத்தை அடையும் படைச்சால்களில் விழுகும்படி செய்கிறது. ஒவ்வொரு தடவையும் இம்மாதிரிப் படைச்சால் ஏற் பட்டுக் கொழுவினால் கிளறப்படும் மண் கீழும் மேலுமாய் புரட்டப் பட்டு முன்னிருககும் படைச்சாலில் விழுந்து மறைகிறது. மண் புரட்டும் இறக்கையின் மேல்பாகம் மிருது ஏற்றப்பட்டு பளபளப்பா யிருக்கிறபடியால் நாட்டுக்கலப்பையில் போல் அதில் மண் ஒட்டிக் கொள்வதில்லை. காலதாமதமில்லாமலும் நிலம் பூராவும் ஒரு உழவில்

நன்றாகஉழப்பட்டு மண் விதைக்கும் பக்குவத்தையடைகிறது. இதில் படைச்சால்கள் ஆழமாய்ப் போவதற்கும் தணிந்த மாடுகள் பூட்டிக் கொள்வதற்கும் தகுந்த சாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சாதாரணமாய் இக்கலப்பை செல்லும் ஆழம் தானியப்பயிர் களுக்குப் போதுமானது. செடிகளின் வேர்களுக்குத் தகுந்தபடி மண்ணை இளககவேண்டியதவசியமாகையால், உழவின் ஆழம் சாகுபடிசெய்யும் பயிர்களின் தன்மையையும் மண்ணின் சுபாவத்தையும் ஒத்திருக்கிறது. இதை யோஜித்துக் கலப்பையை உபயோகிக்கும் போதேஇன்னபயிர்தான் சாகுபடிசெய்வதென்று நிஷ்கரித்துகொள் வதோடும் மண்ணின் சுபாவத்திற்குத் தகுந்தபடியும் கலப்பையைக் கொண்டு உழ இக்கருவியின் அமைப்பிலிருக்கும் சாதனங்களை இதற்குத்தகுந்தபடியும் சரிப்படுத்திக்கொள்ளவேண்டியது. இப் படிச்செயதால் ஏர்ஓட்டிக்குக்கலப்பையை அமிழ்த்தவேண்டிய சிரம மில்லை. ஆழ் உழுவதால் மண் இளகிப் புலபுலத்துக் காற்று சூரிய வெப்பம் மழை முதலியவைகளால் ஏராளமாய்ச் சஞ்சரிக்கப்பட்டு மண்ணிலிருக்கும் பயிர் சாதனங்களை உணவுப் பொருளாக மாற்றிப் பயிர்களுக்கு வீரியத்தையும் கொடுக்கிறது. இதனால் தான் "எரு விலும் வலியது உழவு" "உழவு அறஉழுதால் விளைவு அறவிளையும்" என்னும் பழமொழிகள் வழங்குகிறது.

மழைபெய்யும் பொழுது உழுத வயலுக்கும் உழாத வயலுக் கும் இருக்கிற வித்தியாசத்தைப்பார்த்தால், உழுதவயலில் மழை ஜலம் உறிஞ்சப்பட்டு மண் ஈர நட்புக்கொள்ளுகிறது. உழாத வய லில் மழை ஜலமானது பள்ளத்தாக்குகளை நோக்கிச்சென்று உப யோகமில்லாமற்போகிறது. ஆழ உழுவதால வேர்கள் ஆழமாய்ச் செல்ல வழியுண்டாகிக் காலத்தில் மழை தவறினலும் காய்ச்சலைத் தாங்கும்படி பயிர்களுக்கு சக்தியுண்டாகிறது.

நாட்டுக் கலப்பையைக்கொண்டு ஒரு காலத்தில் எவ்வளவு நிலம் உழ முடியுமோ அதேகாலத்தில் அதைப்போல் மூன்று மடங்கு விஸ்தீரணமான நிலத்தை இக்கலப்பையினல் உழுது வேளாண்மை செய்யலாம். தவிரவும் புற்பூண்டுகளின் வேர்களை

வெளிப்படுத்தி மக்கவைத்து எருவாக்கிக்கொள்வதோடும் பூமியில் குடி கொண்டிருக்கும் பயிர்களுக்குக் கெடுதிசெய்யும் சிறு சிறுபூச்சிகளையும் வெளிப்படுத்திப்பட்சிகளுக்கு ஆகாரமாக்கிப்பயிர் விருத்தியடையும்படி செய்கிறது. இக்குண விசேஷங்கள் அமைக்கப்பெற்ற இவ்விரும்புக்கலப்பையே சிலாக்கியமான கருவியென்று நாம் கருதவேண்டும்.

பல கம்பெனிகளில் உலகம் விருத்தியடைவதற்குத் தகுந்தபடி நமது நாட்டு மண்மாதிரி உழவுப் பழக்கங்கள் உயிர் வாழாநின்ற கால் நடைகளின் பலத்தை யோசித்தும் குடிகளின் தரித்திர நிலைமையை அநுசரித்தும் பற்பல கலப்பைகள் செய்து விற்பனை செய்கிறார்கள். இஞ்சின் இழுக்கும்படியான கலப்பைகளும், மண்கட்டிகளை உடைக்கும் கலப்பைகளும், சால்கள் உண்டுபண்ணி வரப்புகள் கட்டும் கலப்பைகளும் செய்திருக்கிறார்கள். மேற்சொல்லிய சீர்திருத்தங்களையடைந்த கலப்பைகளையும் நமது ஸமஸ்தானத்துக் குடிகளின் நிலைமையையும் மாடுகளின் ஸ்திதியையும்யோஜித்தால், விலைசரசமாயும் லகுவானதாயுமிருக்கும். "களைமாக்ஸ்" "மெஸ்டன்" "மன்சூன்" என்று பெயர் வழங்கும் கலப்பைகள் ஏற்றவைகளாதலால் அவை களின் முக்கிய அம்சஙகளைப்பற்றி ஆராய்வோம்.

இவைகளின் முக்கிய பாகங்கள் இரும்பினாலும் ஏர்க்காலும் மேழியும் மரத்தினாலும் செய்யப்பட்டிருக்கின்றன. இரும்பினால் செய்யப்பட்ட பாகம் பல துண்டுகள் ஒன்றுசேர்த்து கட்டையும் முறுக்காணியும் வைத்து முடுக்கப்பட்டிருக்கிறது. இத்துண்டுகளில், எந்தப் பாகம் கெடுதல் அடைந்தபோதிலும் சுலபமாய்த் தனியே எடுத்து புதிதான வேறு துண்டுகள் வைத்து சேர்த்துக் கொள்ளலாம். காளைகளின் உயரத்திற்குத தகுந்தபடி ஏர்க்காலை உயர்த்தவும் தாழ்த்தவும் சாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைப் புழுதி நிலங்களிலும், சேற்று நிலங்களிலும் உபயோகப்படுத்தலாம். கொழுவு தேய்ந்துபோகுமாதலால் அடிக்கடி மாற்றவேண்டியதற்குச் சொற்பச் செலவில் புதுக்கொழு தனி

யாய் வாங்கிக்கொள்ளலாம். மற்ற எல்லாப்பாகங்களும் ஜாக்கிரதை யாய் உபயோகப்படுத்தும் பட்சத்தில் அநேக வருஷங்கள் வரை கெடுதியடையாமல் நிலைத்திருக்கும்.

நவீன சாஸ்திர வியவசாய பழக்கங்களிலும் கிருஷி ஆயுதங்களி லும் இன்னும் சந்தேகிக்கும் வியவசாயிகளுக்கு விசுவாசம் ஜனிப் பதற்காகத் திருமயம் தாலூகாவில் வெங்களூர், கோட்டூர் முதலிய கிராமங்களில் மேற்சொல்லிய "மெஸ்டன்" என்னும் கலப்பையை உழுது பரீக்ஷித்துக் குணங்களைத்தெரிந்து அனுபவிக்கும் நிலச் சுவான்தார்களின் ரிபோர்ட்டின் காப்பிகளின் சுருக்கம் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஷை இரும்புக்கலப்பையின் உபயோகத்தால் அதிக நாள் சிரமமும் பொருள் விரயமும் உண்டாகாதென்றும் கால் நடைகளுக்குச் சிரமமில்லை யென்பதும் தெளிவாகும்.

இது நாட்டுக் கலப்பையைக் காட்டிலும் முதலில் விலைக்கு வாங்க அதிகச் செலவுசெய்யவேண்டியதா யிருந்தபோதிலும் கூட ஆசாரிகளுக்குக்கலப்பைக்காக வருஷந்தோறும் கொடுக்கும் தானிய அளவின் கிரயத்தை உத்தேசித்தும், காலத்தில் கலப்பை அடிப்ப தற்கு நேரிடுகிற தொந்தரவை உத்தேசித்தும், காலதாமதத்தா லுண்டாகும் நஷ்டத்தையோஜிக்குமளவில் அநேக வருஷங்களுக்கு உபயோகப்படுத்தும் இவ்விரும்புக் கலப்பையை வாங்கிவருவது நல மென்று புலப்படும்.

இவ்வளவு குணகரமான கலப்பையை வியவசாய உத்தியோ கஸ்தர் மூலமாய் அபேட்சித்தால் அவர்கள் மனுதாரின் சக்திக்குத் தகுந்தபடிக்கும் அவர்கள் நிலத்தின் மண்பாங்குக்குத் தகுந்தபடி யும் ஏற்ற உபயோகமுள்ள கலப்பையைத் தருவித்து அசலுக்குக் கொடுக்கத்தயாராயிருக்கிறார்கள்.

Tirumayyam, 7—3—17. } G. DORAISWAMI IYENGAR, Agricultural Instructor.

Extract.

A. திருமயம் தாலூகா கோனாப்பட்டு வட்டம் வெங்களூர் கிராமம் நைய்னா முகம்மது வணக்கமாய் எழுதிக்கொண்ட மனு.

தாங்களும் இந்த வட்டம் மணியகாரர்கூடக் கொண்டுவந்த "மெஸ்டன்" கலப்பையை கிராயுள்ள நஞ்சை நிலத்தில் என்னுடைய ஏரைக்கொண்டு கட்டி உழுதுப் பார்த்ததில் உழவு திட்டு இல்லாமலும் ஆழமாயும் மாட்டுக்கு லகுவாயும் கஷ்டமில்லாமல் போவதோடும் கலப்பையின் இறக்கை மண்ணைக் கீழும் மேலுமாய் புரட்டித்தள்ளுவதைப் பார்க்க காலதாமதமில்லாமல் உழவடைசெய்வதற்குச் சிலாக்கியமாகக் காணப்படுகிறது. இந்தக் காரணத்தால் எனக்கு ஒருகலப்பை புதிதாகவும் சுபமாகவும் வாட்டமாயுள்ளதாயும் தங்களிடமிருக்கும் கலப்பைகளில் பொருக்கிக்கொடுத்து உள்ள கிரயத்தை பெற்றுக்கொள்ளும்படியாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

22—11—16 (Sd.) நைய்னாமுகம்மது ருவுத்தர்.

B. கோட்டூர் வட்டம் கோட்டூர் கிராமம் தி. சொ. காரியம் கருப்பையாபிள்ளை எழுதிக்கொண்ட மனு.

தாங்கள் இவ்விடத்திற்குக் கொண்டுவந்த இரும்புக்கலப்பையால் நஞ்சை நிலத்தில் எங்கள் பண்ணை ஆளை உழச்சொன்னேன். அதாவது தாங்களுமிருக்கும்போது நேரில் கட்டி உழுதுபார்த்ததில்மாடு லகுவாயும் கஷ்டமில்லாமல் போவதோடும் கலப்பையில் தகடு மண்ணை புரட்டித்தள்ளுவதையும் பார்க்க ரொம்ப உழவடை செய்வதற்குச் சிலாக்கியமாகத்தெரிகிறது. ஆகையால், இதுசமயம் சாகுபடி சமயமாகையால் எங்களுக்கு 2 கலப்பை அவசியம்வேணும். தாங்கள் தயவுசெய்து வருகிற வெள்ளிக்கிழமை புதுக்கோட்டையில் தங்களிடமிருக்கும் கலப்பையில் சுபமானதாய்ப் பொருக்கி அதன் கிரயத்தை எங்களிடம் பெற்றுக்கொண்டு கலப்பைகள் கொடுக்க உத்திரவாகவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

17—10—16. (Sd.) தி. சொ. காரியம் கருப்பையாபிள்ளை.

Tirumayyam. 7—3—17. G. DORAISWAMI IYENGAR. Agricultural Instructor,

தொண்டை மண்டல சதகம்

புதுவைச் சேதிராயன்

அழுவதுங் கொண்டு புலம்பாது நஞ்சுண்டதுமறைத்தே
செழுவதுங் கொண்டு புகழ்க்கம்ப நாட னெழுபதிசை
முழுவதுங் கொண்டொரு சொற்பேச நெய்யின் முழுகிக் (கையின்
மழுவதுங் கொண்டு புகழ்கொண்டதாற் றொண்டை மண்டல (மே.

பொழிப்புரை.

புதுவைச் சேதிபராயனென்னும் செல்வரைப் பாம்புகடிக்க, அதனாலுண்டாகும் வருத்தத்தைப் புலம்பியழுது வெளிப் படுத்தாமல் மறைத்துக் கம்பரால் கவிபாடிப் பிழைத்து அவர் பாடி வந்த ஏரெழுபதென்னும் நூலை அரங்கேற்றி, அதனால் கீர்த்தி சிறந்து விளங்க, அரசன் அச்செயல் ஐயுறத்தக்கதென்று கூறியபோது, பழுக்கக் காய்ச்சிய நெய்யில் மூழ்கிக் கையில் மழுவையு மேந்தி ஐயந்தெளிவித்து அரசனாலும் புகழ்பெற்றோராகிய வேளாளருடையது தொண்டை மண்டலம்.

வரலாறு.

சேதிராயன் என்பவன் புதுவை என்னும் ஊருக்குத் தலைவனும் பிரபுவும் ஆவன். இவன் கொடையாலும் குணத்தாலும் புகழாலும் உயர்ந்து சிறந்த புலவர்க்குப் பேருபகாரியாகவும் விளங்கினவன். இவன் புதுவையர்கோன் சேதிபர்கோன் என வழங்கும் பெருமை பெற்றுப் பிள்ளைப் பெருமாள் புதுவைச் சேதியராயன் என்னும் பெயர்களையு மேற்று மேம்பட வாழ்ந்தவன். அன்றியும், கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பரால் பாடப் பெற்ற இராமாயணம் என்னும் இதிகாசத்தில் புகழ்ந்து பாடப் பெற்றுக் கொண்டவள்ள

ளாய்ச் சிறந்த திருவெண்ணெய் நல்லூர்ச் சடையற்கு மகனுமாய் விளங்கினனென்றால், இவனது பெருமை அளவிடற்பாலதோ? இவர் வெண்ணெய்ச் சடையற்கு மகனென்பது, "புதுவைவாழ் சடையனுதவுசேய்—பூதலம்பரவு சேதிபன்"

காவிரியைச் சோணாட்டைக் காராளர் தம்மரபை
நாவலரைக் காவலரை நல்லோரைப்—பூவலய
முள்ளத் தகும்புதுவை யூரைச் சிறப்பித்தான்
பிள்ளைப் பெருமாள் பிறந்து.

பேரோசைப் பிள்ளைப் பெருமாளைச் சேதிபனைக்
காரோசைக் கையானைக் கண்டீரோ—பாரோர்
விடுங்கோள் கொடுங்கோ (ள்) விழியருள் பூண்டன்ன
மிடுக்கோள் கொடுங் கே ... ...

எனவரும் மூவலூர்ச் சிவன்கோயிலிற் காணப்படும் சிலா சாஸனப் பாடல்களால் தெளிவாம்.

மேற்கூறியவற்றால், சேதிபன் அல்லது சேதிராயன் என்பவன், வெண்ணெய்ச்சடையற்கு மகனும் வள்ளலாயும் விளங்கினவனென்றும், இவனே கம்பர் ஏரெழுபது அரங்கேற்றும் போது விடந்தீண்டப்பட்டு அப்புலவர் பெருமானால் அது நீக்கப்பெற்றவனென்றும், இவன் தந்தையாகிய சடையற்கு வழங்கிய புதுவையர் கோன், சேதிபர்கோன் என்னும் விசேடணங்கள் இவன்றனக்கும் முறைப்படி எய்தின வென்றும், இவனுக்குப் பிள்ளைப்பெருமாள் என்பது பெயரென்றும், புதுவைச் சேதிராயன் என்றும் பெயர்வழக்கைப் பிரபலமாகப் பெற்றவன் என்றும் நன்குணரப் படுவன.

கல்வியிற் பெரிய கம்பரால் வேளாளரைச் சிறப்பித்துப்பாடிய ஏரெழுபது என்னும் நூலை அரங்கேற்றக் கூடியிருந்த அவையில்,வெண்ணெய்ச் சடையன்முதலிய வேளாளச்

செல்வருடன் இச்சேதிராயனும் ஒருவனாக விருந்து கேட்கும் போது, இவனை நாகமொன்று கடிக்க, இச்செய்தியைச் சபைக்கு அறிவிக்காமலேயிருந்து, ஏரெழுபது கேட்டபடியேவிஷந்தலைக்கேறி வீழ்ந்தனன். அவ்வளவில் அங்குக் கூடிய பெரியோர் பலரும், உடற் குறியால் விடமென்று கண்டு வருந்தா நிற்கையில், கம்பர் தம் அருமைத்திருவாக்கால்,

* "ஆழியான் பள்ளி யணையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே—†பூழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணே யகல நட." (தமிழ் நாவலர் சரிதை.)

"மங்கை யொருபாகர் மார்பிலணி யாரமே
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே—திங்களையுஞ்
சீறியதன் மேலூருந் தெய்வத் திருநாணே
யேறிய பண்பே யிறங்கு".

* இப்பாடல்கள் தில்லை மூவாயிரவர் பிள்ளைகளில் ஒன்றைஅரவந்தீண்ட அதனை உயிர்ப்பிக்கக் கம்பர் பாடியதாக விநோதரசமஞ்சரி முதலிய நூல்களில் காணப்படுகின்றன.

† பூழியான்—சிவ பெருமான்.

என்னும் இரண்டு வெண்பாக்கள்பாடித் தம் தெய்வசக்தியால் அவ்விஷத்தையிறக்கிச் சேதிராயனை உயிர்ப்பித்தனர். இது "தமிழ் நாவலர் சரிதையில்," கம்பர் ஏரெழுபதுபாடி அரங்கேற்றும்போது புதுவைச் சேதிராயனை விஷந்தீண்டத் தீர்த்தவெண்பா" என்று காணப்படும் குறிப்பும்,

குணங்கொள் சடையன் புதுச்சேரிக்கொடையன்சேதி ராயன்முதற்
கணங்கொள் பெரியோர் பலர்கூடிக் கம்பநாடன் களிகூர
விணங்கும் பரிசி லீந்துபுவி யேழும்புகழே ரெழுபதெனும்
மணங்கொள்பெருங்காப் பியப்பனுவல்வளஞ்சேர்சோழமண்டலமே.
(சோழமண்டலசதகம்.)

—பாவலர்தாம்
"ஏரெழுப தோதியசங் கேற்றுங் களரியிலே
காரிவிட நாகங் கடிக்குங்கை" (திருக்கைவழக்கம்)

எனவரும் பாடல்களும் இச்சம்பவத்தை நன்கு வலியுறுத்தப் போதுமான ஆதாரங்களாக் காணப்படுகின்றன.

இனிமேற்குறித்த "அழுவதுங்கொண்டு" என்னுஞ் சதகச் செய்யுளில் மூன்றாம்படியில் நான்காஞ்சீரில், "ஒரு சொற்பேச நெய்யின் முழுகிக் கையின்—மழுவதுங் கொண்டு புகழ்கொண்டதாற் றொண்டை மண்டலமே" எனவரும் அடிகளில் குறிக்கப்பட்டுள்ள சம்பவம் என்னவென்பதைக் கவனிப்பாம். வேளாண்மரபையும் அவர்தஞ் சிறப்பையும் பற்றி அரசசபையில் ஓர்பிரஸ்தாபம் நிகழ்ந்தபோது, வேளாண்மரபே சிறந்ததும் பாடல் பெறுவதற்குத் தகுதிபெற்றது மென்பதற்குக் கம்பர் வேளாளரைச் சிறப்பித்துப் பாடிய ஏரெழுபதே தக்க சான்றாமென்றும், அம்மரபின் வந்தானொருவன் எடுத்துக்கூற, அரசன் வேளாளர் அவ்வளவு சிறப்புடையரென்று பாடல் பெறத்தக்கவரோ? அக்கம்பர் சொல் மெய்யாமோ? என்று சங்கிக்கையில், அவ்வேளாண் மகன் அரசனைநோக்கி, கம்பர் வாக்குத் தெய்வீகமும் சத்தியமுமுடையது; அதனை நானே மெய்ப்பிக்க வுடையேன், என்றுக் காய்ச்சிய நெய்யில் மூழ்கியெழுந்து கையிற்றும் மழுவையேந்தி நின்று அரசன்கொண்ட ஐயத்தை நிவர்த்தித்து, அவ்வரசனால் தான்புகழப் பெற்றதன்றிக் கம்பரையும் அவர் பாடல்பெற்ற வேளாளரையும் புகழ்ந்து கொண்டாடச் செய்தான் என்பதே அவ்வடிகளின் வரலாறென்ப.

இங்ஙனம்
சி. கு. நாராயணசாமி முதலியார்
கோயமுத்தூர்.

மூடரும் முனிவனும்.

ஒருநி லேபதின்மர் ஒன்றாக உற்றனராய்
ஊரூராய்ச் சென்றே உலவிவரப்—பேருவகை
கொண்டார்கள் கொண்ட குறிப்பின் படிநடந்தே
கண்டாரோர் ஆற்றங் கரை. (1)

ஆற்றங் கரைகண்ட அன்னார்கள் அக்கரைசேர்
மாற்றம் அவணிலதால் மாழ்கினராய்ச்—சாற்றினர்கள்
பாலம்எதும் ஈங்கில்லை பார்த்ததுநாம் இல்லைமுனம்
ஏலஇவன் செய்வதெவன் என்று. (மாற்றம்-வழி.) (2)

என்றேங்கி ஆங்கண் இருக்க எதிர்கரையில்
நின்றும் ஒருவன்அந் நீள்புனலில்—நன்றாக
வந்தடைந்தான் இக்கரையில் மற்றதனைப் பார்த்தோரும்
சந்தோஷ மேயடைந்தார் தாம். (3)

தாமகிழ்ச்சி கொண்டதினால் சாற்றுவர்கள் தாமதமேன்
நாமடையச் செல்வம் நடவுமெனச்—சேமமாய்
அக்கரைபோய் நின்றார் அதுபோ தவரிடையோர்
துக்கம்வந் துற்ற தொடர்ந்து. (4)

தொடர்ந்ததுயர் யாதென்னச் சொல்லிடுவன் கேளீர்
நடந்துகரை ஏறியபின் நாடிக்—கடந்துநதி
வந்தோமே எல்லோரும் வந்தோமோ என்றெண்ணிச்
சிந்தைஅழி வுற்றார் திகைத்து. (5)

திகைத்தமனமுடையார் செப்புங்கால் தம்மையல்லால்
மிகையாயுள் ளார்கணக்கே விண்ட—வகையாலே
ஒன்பதென வேகணக்கிட் டார்கள் ஒருவருமே
தன்னொடுபத் தென்றறியார் தான். (6)

தானல்லா தேவரும் சாற்றியபோ லேகணக்கிட்
டானைபெருங் கூடாரம் ஆ! ஆ! ஆ!—நானவிலும்
தாத்தன் றகலினுற் றள்ளுகமற் றீலைந்து
உறநோக்கி யுற்றமுனி ஓர்ந்து. (7)

ஓர்ந்தெய்தும் பேருவகை உள்ளடங் காதெழும்பிப்
பேர்ந்து வழிகுவபோல் பேசுமவர்—தேர்ந்திடவே
ஓர்சிரிப்புக் கொண்டார் உறுஞ்சிரிப்பை நோக்கியவர்
சார்படைந்து நின்றார்கள் தாழ்ந்து. (8)

தாழ்ந்து முனர்நின்றோர் தமைநோக்கிச் சாதுவமே
ஆழ்ந்தமதி யுள்ளீர்காள் ஆகியதென்—போழ்ந்ததுயர்
சிந்தை அடைந்தீர்கள் தீர்ப்பனுரைப் பீரெனலும்
அந்தம் வரையுரைத்தார் ஆய்ந்து. (9)

ஆய்ந்துரைத்த பின்னும் அடங்காத் துயரினராய்
மாய்ந்தான் ஒருவனெனும் மாண்பினராய்—ஏய்ந்தமுனி
முன்னரே தான்காண மும்மடங் குக்கதிகம்
அன்னர் புரண்டார் அழுது. (10)

அழுதேங்கு மன்னர்க் கருள்சேர் முனியும்
பழுதில்லை என்றே பகர்ந்து—முழுமூடர்
கூட்டத்தில் ஒன்றும் குறைவிலதாய்க் காட்டவே
வாட்டமற் றேஇருந்தார் வாழ்ந்து. (11)

வாழ்ந்தோம் குறைவில்லை மாசறுநன் மாமுனியே
தாழ்ந்தோர்பா லேசிரித்த தன்மையினை—ஆழ்ந்தமதி
இல்லோர்கள் தேறோம் எமக்கருள்செய் வீரென்ன
எல்லோரும் தாழ்ந்தார் இசைத்து. (12)

இசைத்தாரை நோக்கி எழுமினெனச் சொல்லி
அசைத்துக் கைகாட்டி அறிவோன்—வசைக்காக
அல்லவே நோக்கி அதுபொழுதி லேசிரித்தேன்
சொல்லுவன்நான் கேளீர் தொகுத்து. (13)

தொகுத்துச் சொலும்செய்தி தோன்றும் உலகில்
பகுத்தறிவு கொண்டதினல் பார்த்து—வகுக்காது
தன்னினைப்பே எவ்விடத்தும் தாராள மாயிருக்கத்
தன்னினைப்பே விட்டீர் தவிர்த்து. (14)

தவித்திட்ட தன்மை தனக்குச் சிரித்தேன்
அவித்ததுயர் என்றும் அடையீர்—செவித்துளையில்
சேர்மாற்றம் நன்ருகச் சிந்திப்பீர் என்றுரைத்தான்
ஓர்மாற்றம் தேர்ந்திருந்தார் உற்று. (15)

உற்றபொருள் தேரின் உறும்பெருமை இன்னதென
மற்றெவ ரேயுரைப்பார் மாநிலத்திர்—குற்றமுள
பாகம் தவிர்த்துப் பயன்கொள்ள வேண்டுகின்றேன்
ஆகசுயம் எல்லோர்க்கும் ஆம். (16)

A. R. ஸ்ரீநிவாசமுதலியார்.
ஆனைமலை.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீபிருஹந்நாயகி சமேத ஸ்ரீ பாடலேசுவரர் மஹா கும்பாபிஷேகம்.

நிகழும் பிங்கள௵ ஆனிமீ கருஉ குருவாரம் (28-6-17) ஹஸ்த நக்ஷத்திரங் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 11¼க்கு மேல் 13க்குள் ஸிம்மலக்கினத்தில் ஸ்ரீபாடலேசுவரஸ்வாமிக்கும் ஸ்ரீபிரஹந் நாயகிக்கும் ஸ்ரீ விநாயகாதி சமஸ்த பரிவார தேவதைகளுக்கும் திருவருளை முன்னிட்டு மஹாகும்பாபிஷேகம் செய்விக்க நிச்சயித்திருப்பதால், அன்பர்கள் யாவரும் வந்து தரிசித்து நேத்திராநந்தமடைந்து அபீஷ்டங்களைப் பெற்று மகிழ்ந்துய்யும் வண்ணம் வேண்டுகின்றனம்.

திருப்பாதிரிப்புலியூர், பிங்கள—௵ சித்திரை-மீ கஅ—உ	}	தீ. நா. நாச்சியப்பசெட்டி. தீ. சோ. முருகப்பசெட்டி. தீ. அ. சிதம்பரம்செட்டி.

அதிசய விஷயங்கள்.

ஒரு கல்லானகாடு,—அரிஸோனுவில் நூறுமைல் சதுரப் பரப்புள்ள ஒருகாடு இருக்கிறது. அங்கே அநேகம் பறவைகள் மரம் போன்ற உருவத்தோடும், மஞ்சள் நீலம் கருப்பு சிவப்பு ஊதா வெள்ளை முதலிய நிறங்களோடும் காணப்படுகின்றனவாம்.

எரிமலை:—உலகத்தில் 672 எரிமலைகள் இருக்கின்றன. அவற்றுள் 270 மலைகள் தாம் நெரிப்பைக் கக்குகின்றன.

ஒரு விக்ரஹம்:—இங்கிலாந்தில் கார்ன் ஹில் என்னுமிடத்தில் மெஸ்ஸர்ஸ் ஹென்றி H. கிங் அண்டு கம்பெனியில், 1700 வருஷங் கட்குமுன் செய்யப்பட்ட ஹிந்துவிக்ரஹமொன்று விலைக்கு வந்திருக்கிறதாம். மொகலாயர்கள் இந்துராஜர்களை ஜயித்த போது அபஹரிக்கப்பட்டு 664 வருஷங்கள் அவர் வசமாக இருந்து, சிப்பாய்கலகத்துக்குப் பிறகு ஆங்கிலேயர்வசப்பட்டிருந்ததாம். பிறகு இந்தக்கம்பெனிக்கு கொண்டுவரப்பட்டதாம்.

புஸ்தகங்கள்:—ஜர்மனி ஒரு வருஷத்தில் சுமார் 20000 புஸ்தகங்களும், பிரான்சு 11000 புஸ்தகங்களும், இதாலி 9000 புஸ்தகங்களும், இங்கிலாந்து 6000 புஸ்தகங்களும், யுனைடெட் ஸ்டேட்ஸ் மாகாணம் 5000 புஸ்தகங்களும் வெளிப்படுத்துகின்றனவாம்.

செவ்வாய்:—இந்த க்ரஹத்தில் ஜனங்கள் வசிப்பதாகவும், அந்த ஜனங்கள் இந்தப் பூமிக்குச் சமாசாரம் போக்கு வரவுசெய்ய முயற்சிப்பதாகவும், அதற்கு மின்சார உதவியால் வெளிச்சங் காண்பிப்பதாகவும், அத்தகைய வெளிச்சத்தை தான் அடிக்கடி தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் ஒரு பேர்போன பிரஞ்சு வானசாஸ்திரி சொல்லுகிறார்.

184 பக்கம் தொடர்ச்சி.

என்ற பெரியோர் கூற்றாலும் கற்புடை மனையாள் பெருமையை அறிக. கற்புடைமையாலன்றோ சிலபெண்மணிகள் புகழுடம்பு பெற்று இன்றும் நின்று நிலவுகின்றனர்.

இனி இல்லறத்தான் மேற்கொள்ள வேண்டுந் தருமங்களைப் பற்றி யோசிப்பாம்.

அவையாவன:—தன்னை யொழிந்த பிரமசரியம் வானப்பிரஸ்தம் சந்யாசம் முதலிய மூன்று ஆசிரமங்களிலும் ஒழுகுகின்றவர்களுக்கும், மிக்கவறுமையை அடைந்தவர்களுக்கும், தம்மைப் பாதுகாப்பார் ஒருவருமின்றித் தன்கண் வந்தடையாசித்தவர்களுக்கும், தேவர்க்கும், முனிவர்க்கும் விருந்தினர்க்கும், சுற்றத்தார்க்கும், பிறர்க்கும் வேண்டிய உதவிகளைச் செய்தலும் யாகாதி கிரிகைகள் செய்தலும் விரதங்களை யநுட்டித்தலும் உயிர்களிடத்து அன்பும்அருளுமுடையனா யிருத்தலும் இன்னும் இவைபோன்ற பிறவுமாம்.

இவற்றிற்குச் சான்றாக நம் பொய்யில் புலமைத் திருவள்ளுவநாயனார் கூறியுள்ள,

"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை"
"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை"
"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை."

என்ற அருமைத் திருக்குறள்களையும் யோசித்தறிக.

மேலும் இத்தகைய காரியங்களுக் கெல்லாம் உடனிருந்துதவுபவளாகிய மனைவியை நற்குல நற்குணமுள்ளவளாகத் தேடிக் கொள்ளவேண்டும். பழியொழிந்த வழியிற் பொருளைச் சம்பாதித்தல் வேண்டும். வேதத்திலும் தரும சாஸ்திரத்திலுஞ் சொல்லப்பட்ட நித்திய நைமித்திக காரியங்களை வழுவின்றிச் செய்தல் வேண்டும். சப்தாதி விஷயங்களில் மிக்கவிருப்பம் வைத்தல்கூடாது. தன்மனையாளானாலும் சாஸ்திர விரோதமான காமசேஷ்டைகளை அவளிடத்திற் செய்தல் கூடாது. நகத்தைக் கிள்ளல் கூடாது. மண்கட்டியைக் காரணமின்றி உடைத்தல் கூடாது. (இவையெல்

லாம் தருமசாத்திரக் கூற்றெனை அறிக) இவையாவும் தனித்தனி ஒவ்வொரு தருமமாய் முடிந்து அதனுள்ளும் பல வேறுவகைப்படு வனவாயிருக்க, இவ்வனைத்தையும் தன்னுளடக்கிக் கொண்டிருக் கின்ற இவ்வில்லறத்தின் பெருமையை என்னென் றுரைப்பது?

இக்காலத்துச் சிலர் என்ன இல்லறம் வேண்டியிருக்கிறது? பெண்டிராம் பிள்ளையாம் இவர்களைக்காப்பாற்ற வேண்டுமாம். இதற் காக எவ்வளவு தான் சங்கடப்படுகிறது? அன்றியும் விடிந்தால் உப்பில்லை புளியில்லையென மனைவியொருபக்கம் துன்புறுத்துகிறாள். பிள்ளைகளோ எங்களுக்கு அதைவாங்கிக்கொடு இதைவாங்கிக்கொடு எனத்துன்புறுத்துகின்றன. இவைகளை நோக்கும் பொழுது இல் லறத்தில் வெகு துன்பங்களிருக்கின்றன என்கிறார்கள்.

துன்பமென்பது எதனிடத்துத்தான் இல்லாமலிருக்கிறது? யா ண்டுந் துன்பமும் இன்பமும் ஒத்து நிகழ்வனவன்றோ? அங்ஙன மாக ஒன்றைமட்டிலும் நோக்குவதிற் பயனென்ன? இரண்டை யும் ஒத்து நோக்குவதலல்வோ அறிவுடையோர்க் கழகாவது. இவை பற்றியன்றே கம்பநாடர், துன்புளதெனினன்றோ சுகமுள ததுவன்றி'' என்றும், திருத்தக்கதேவர், "துன்பமுற்றவர்க் கலா தின்பமில்லை யாதலின்'' என்றுங் கூறியுள்ளார்கள். ஒத்துநோக்கு வோமாயின், இதனிடத்தும் இன்பமும் பயனும் அளவிறந்திருக் கின்றன வன்றோ? எத்துணை யான்மாக்களைத் திருப்திபண்ணி வைத்தற் கேதுவாயுள்ளது? இவ்வாறு இன்பதுன்ப மிரண்டையும் தானனுபவித் தறிவானன்றோ, பிறவுயிர்களின் இன்பதுன்பங்களை அறிவான்? தன்னனுபவத்தேரடொட்டிப் பிறவுயிர்களின் இன்ப துன்பங்களை அறிவாற் கன்றோ அன்பும் அருளும் உண்டாம்? அன் பும் அருளும் உண்டாயினன்றோ பின்வருந் துறவறநிலைக் கேது வாம்? இக்கருத்துப் பற்றியன்றே கந்தபுராண நூலாரும்,

"தருமமே போற்றிடி னன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியு மணையு மாங்கவை
வருவழித் தவமெனு மாட்சி யெய்துமேற்
றெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்."

எனக்கூறியுள்ளார்.

(தொடரும்)

S. ஆழ்வாரையங்கார்.
க. வி. கலாசாலை. கோநகர்.

நாட்டரசன் கோட்டை

வித்யாபரிபாலன சங்கத்தின்
ஆரம்பக்கொண்டாட்டம்.

4—5—17

இந்தச் சங்கத்திற்கு, அக்கிராஸனாதிபதியாகக் கோரப்பட்டுள்ள மகிபாலன்பட்டி, தமிழ் ஸம்ஸ்க்ருத வித்வான் ஸ்ரீமான் மு. கதிரேசச்செட்டியார் அவர்களை அவர்கள் இறங்கியிருந்த ஜாகையிலிருந்து மேளவாத்தியங்களுடன் நகரத்தார் ஸபைக்கு அழைத்துக்கொண்டு வந்தார்கள்.

சபையின் காரியதரிசியவர்களால் வரவேற்புப்பத்திரிகை படிக்கப்பெற்றுச் சபை மங்களகரமாக ஆரம்பிக்கலாயிற்று. அக்கிராஸனாதிபதியவர்கள் முகவுரையில் பின்வருமாறு பேசினார்கள்.

ஆண் பெண் இருபாலார்க்கும் கல்வியை இலவசமாகவும் கட்டாயமாகவும் கற்பிக்கவேண்டுமென்றும், நகரவட்டகையில்எவ்விடங்களிலும் சபைகள் புஸ்தகசாலைகள் வாசகசாலைகள்ஸ்தாபிக்கவேண்டுமென்றும், நமது நாட்டின் தற்கால நிலைமையை அறிந்து பிள்ளைகட்கு இந்துதேச சரித்திரம் மதக்கல்வி கைத்தொழிற் கல்வி வியாபாரக்கல்வி முதலியவைகளைத் தாய்ப்பாஷையாகிய தமிழிலேயே சொல்லிக்கொடுக்க வேண்டுமென்றும் மிகவும் அழுத்தமாக எடுத்துச் சொன்னார்கள். மேலும் நாட்டரசன் கோட்டையில் இதுகாறும் யாதொரு பொதுச்சபையும் ஏற்படாமலிருந்தது ஒரு குறைவாகவே இருந்தது என்றும், அக்குறைவு இப்போது நகரத்தாரால் ஒருவாறு நீக்கப்பட்டதென்றும் எடுத்துச் சொன்னார்கள். பிறகு, கற்றறிந்த உபந்யாஸகர்களால் அருமையான விஷயங்கள் பல உபந்யஸிக்கப்பெற்றன. அவற்றின் சாரம் பின்வரும்.

வைகாசி மீ 22உ பிற்பகல்.

கோநகர்க் கற்பகவிநாயக கலாசாலைத் தமிழ்த் தலைமையுபாத்தியாயர் ப்ரம்மஸ்ரீ அ. கோபாலையர் அவர்கள் கலாசாலைக்ளும்

சபைகளும் என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு, புறக்கண்களைக் காட்டிலும் அகக்கண்ணே மேலானதென்றும், அகக்கண்ணைப் பயன் பெறச்செய்வது கல்வியே யென்றும், அக்கல்வியோடு கேட்டலும் அத்யாவச்யகமென்றும், அப்படிக்கேட்டலும் பெரியவர் கோஷ்டியாலேதான் பயன் தருமென்றும், அதற்கு இதனைப்போன்ற சபைகளே மிகுந்த ஆதாரமாக இருக்கின்றனவென்றும், ஆகையால் இந்நாட்டில் எங்கும் சபைகளும் கலாசாலைகளும் ஏற்பட்டு மாணவர்க்குக் கேட்டற்கும் கற்றற்கும் தகுந்த ஸாதனத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்றும் நன்றாகவும் திருத்தமாகவும் அழுத்தமாகவும் பேசிமுடித்தார்கள்.

பிறகு, மதுரை வித்வான், நா. சுந்தரேசுவரையரவர்கள் திருவிசைப்பா என்னும் அரியவிஷயத்தை எடுத்துக்கொண்டு, எல்லாம் வல்ல இறைவனாகிய சிவபெருமான் தொண்டர்க்கெளியனென்றும், அத்தொண்டர்களது தோத்திரத்திற்கே எப்போதும் கருணைபாலிப்பவனென்றும், அங்ஙனம் ஆன்றோராகிய சமயகுரவர்களாலே பாடப்பெற்று இன்றும் நிலவுவதாய்த் தமிழ்வேதங்களாக இருப்பன தேவாராதிகளென்றும், அவற்றுள் ஒன்று திருவிசைப்பாவென்றும், அதனுள் எம்பெருமானது அருட்டிறம் மிகுதியாக ஓதப்பெற்றிருக்கின்றனவென்றும் விரித்து கூறி அப்பாக்களுள் அருமையான சிலவற்றை எடுத்தோதி யருமையான உரையும் கூறிச் சபையோரை சிவானந்தக்கடலில் குளித்துச் சிவாநுபூதி மணியைப் பெறும்படிச் செய்தார்கள்.

இவ்விரண்டு விஷயங்கட்கும் அக்கிராஸனாதிபதியவர்களால் முடிவுரை கூறப்பெற்று அன்றையக்கூட்டம் அழகாக முடிக்கப் பெற்றது.

வைகாசி மீ 23உ காலை.

பலவான்குடி, ஸ்ரீமான் ராம. கு. ராம. இராமசாமிசெட்டியார் அவர்கள், ஜீவகாருண்யம் என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு,

ஜீவகோடிகளிடத்தில் கருணைகொள்வதே ஒருவன் தனது ஆத்ம தர்மத்தில் ஏறிச்செல்வதற்குத் தகுதியான மார்க்கமென்றும், ஜீவகாருண்யமில்லாது ஒருவன் எத்தனைதான் ஜபதபங்கள் வைத்துக்கொண்டிருந்தாலும் சிவபிரான் கருணைத்திறம் அருளமாட்டானென்றும், ஜீவகாருண்யத்துடனிருந்து உயிர் வதைக்கு இடங்கொடாதிருந்தால் இகத்திலும் பரத்திலும் சுகமடையலாகுமென்றும், தாம் கொலைசெய்யாதிருப்பினும் புலாலுண்ணலை விரும்பினால், கொலையிற் பெரும் பகுதியான பாவம் இவரையே சேருமென்றும் அருமையாகவும் அநுபவமுறையாகவும் எடுத்துப் பேசினார்கள்.

பிறகு, கண்டனூர், ஸ்ரீமான் க. தெ. அரு. ராமநாதன்செட்டியார் அவர்கள், முயற்சி என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு, முயற்சியே சகல காரியத்தையும் முடிக்கவல்ல சித்த அவுஷதம் என்றும், முயற்சியில்லாமல் இகத்திலாவது பரத்திலாவது அதாவது தேக ஏற்றத்திலாவது ஆத்ம ஏற்றத்திலாவது முன்னேற முடியாதென்றும், ஏனெனின் ஊழின்படியே யாவும் முடிக்கப்படுகின்றனவென்றும், ஊழ் என்பது பூர்வவினையாதலின் அப்பூர்வவினையும் நல்லனவாயின் இப்பிறப்பில் நற்பயனையும் தீயவினையாயின் தீயபயனையுமே கொடுக்கின்றனவென்றும், அதலின் இப்பிறப்பிலேனும் நல்வினையில் முயற்சி செய்தவரின் பின் பிறப்பு ஒருகால் நேர்ந்ததேனும் நல்லபயனையே தந்து நமக்கும் நல்லவர்க்கும் நாதனுக்கும் நன்மைசெய்து கொண்டவராக ஆவோமென்றும் யாவர் மனதிலும் அழுந்தும்படியாகவும் உருக்கமாகவும் பேசினார்கள்.

பின்னர் உள்ளூர் வித்வான் ப்ரம்மஸ்ரீ சீதாராமய்யங்கார் அவர்கள் சூதுவிரும்பேல் என்னும் ஔவைப்பிராட்டியின் சூத்திரத்தை எடுத்துக்கொண்டு அதற்கு உரைசொல்வதாகிய ஒரு வ்யாஜத்தை வைத்துக்கொண்டு, சிறுபிள்ளைகளும் பெரியவரும் ஏழைகளும் தனவந்தரும் ஆகிய இவர்களில் அநேகர் இந்த வினையை வேடிக்கையாக விரும்பிப் பிறகு சர்வத்தையும் இழந்து மானமழிந்து திரிகிறார்கள் என்றும், முன்னர் நளன் தருமன் முதலானோர் கேடடைந்தது இந்தத் தீய வினையினாலே தானென்றும், இந்த வினைசெய்து கெடுவதை

விடக் காலத்தை வீண்போக்காமல் தூங்கவாகிலும் செய்யலாமே என்றும் ஹாஸ்யரஸம் தோன்றவும் ஒவ்வொருவர் மனத்திலும் தைக்கும்படிக்கும் அத்தொழிலுடையார் மனம் வருந்தி அன்று முதலே அதனை நிவ்ருத்திசெய்யும்படிக்கும் பேசிமுடித்தார்கள்.

பிறகு, திருவாரூர் தமிழ் வித்வான் ப்ரம்மஸ்ரீ சிதம்பரையர் அவர்கள், திருவிளையாடல் ஆராய்ச்சி என்னும் ஒரு அரிய விஷயத்தை எடுத்துக்கொண்டு, அதிலுள்ள "சத்தியாய்" என்னும் காப்புச்செய்யுட்குப் பொருள் கூறும் முகமாகசிவபெருமானது பரத்வத்தையும், அன்னாது கருணைத்திறத்தையும், அன்னார் அடியார்கள்பால் வைத்துள்ள அருளின் மிகுதியையும், சக்தி தத்வங்களையும் கம்பீரமாகவும் அழகாகவும் எடுத்து உபந்யஸித்தார்கள். இவற்றுக்கு அக்கிராஸனாதிபதியவர்கள் அழகான முடிவுரை கூறினவுடன் காலைச்சபை கலைந்தது.

மாலை 3—30 மணி.

திரளி வித்வான் ப்ரம்மஸ்ரீ இராமையங்கார் அவர்கள், கீழ்படிதல் என்னும் விஷயத்தைப் பலமேற்கோள்கள் மூலமாக எடுத்துப்பெருமையாகக்கூறி ஸ்ரீ ராமபிரானது அரிய குணங்களில் இதுவும் ஓர் அரிய குணமென்று கம்பராமாயண மூலமாகக்காட்டியும் திட்பமாகப்பிரஸங்கித்தார்கள்.

பிறகு, காரைக்குடி கம்பராமாயணப்ரசாரகர் மே. வெ. கோவிந்தராஜையங்கார் அவர்கள் கம்பர் கவித்வம் என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு, கம்பராமாயணத்தில் உள்ள சிலஅருமையான செய்யுள்களை உதாரணமாகக் காட்டி அவற்றின் நயங்களைத் தாம் அறிந்தவளவில் எடுத்து உபந்யஸித்தார்கள்.

பின்பு, தேவகோட்டைச் சிவாகமசித்தாந்த பரிபாலன சங்கத்துக்காரியஸ்தராகிய ஸ்ரீமத் A. சாமிநாதபிள்ளையவர்கள், ஆகமம் என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு, அதனைக் காமிகாதி சிவா

கமம் என்றே தெளிவித்து, அவற்றை சிவத்விஜர்கட்கு அவசியம் போதிக்கவேண்டுமென்றும், அப்படிப் போதிக்க ஏற்பாடு செய்யாவிடின் நகரத்தார் திருக்கோயில்கள் பிரதிஷ்டை செய்ததன்பலனை யடையமுடியாது என்றும், இதற்கென்றே தேவகோட்டையில் சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவருகிறதென்றும், எல்லாச் சிவநேசச்செல்வர்களும் அதில் அங்கத்தவராக ஆவதோடு தங்கள் தங்கள் ஊரிலும் அதனது கிளைச்சபைகளாகச் சில சபைகள் ஸ்தாபித்து நடத்திவர வேண்டுமென்றும், இது தேவகோட்டையில் உள்ள ஷை சங்கத்தாரின் நோக்கமென்றும் அதனைத் தெரிவிப்பதே தாம்இங்குவந்தகாரியமென்றும் யாவரும் அறிந்துகொள்ளும்படி மிகவும் அழகாகப்படித்தார்கள்.

பிறகு, சொக்கலிங்கம் புத்தூர் வித்யாசாலைத்தலைமைத் தமிழ்ப் பண்டிதர். வித்வான் ப்ரம்மஸ்ரீ செ. ராமமூர்த்திஐயர் அவர்கள், ஈந்துவக்குமின்பம் என்னும் அரிய விஷயத்தைக்கொண்டு, பொருளுடையார்க்கு இக்குணமானது இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் ஒருங்கே தரவல்லது என்றும், பொருளுடையார்க்கு இதனைக் காட்டிலும் வேறொன்றிலும் இன்பம் நீடித்துநிலைத்திராது என்றும் திருக்குறள் நாலடியார் முதலிய அரிய நீதிநூல்களிலிருந்து மேற்கோள்களும் புராணங்களிலிருந்து கதைகளும் எடுத்துக் காட்டி இனிமையாக உபந்யஸித்து லௌகிக வைதிகம் என்னும் இரண்டு நிலையிலும் இதுபயன் தருவதொன்றென்று அறுதியிட்டார்கள்.

பின்னர், மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க்கலாசாலை தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். க. சொ. பாலசுப்பிரமணியக்கவிராயர் அவர்கள், மங்கையர்க்கரசியார் சரித்திரத்தைப் பெரியபுராணத்தின் சில செய்யுள்களை ஆதாரமாக்கொண்டு செவ்வனே எடுத்து ஓதியும், அம்மையின் குணங்களைத் திருவள்ளுவரது "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற—சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னும் குறளிற் சொல்லப்பட்டுள்ள பெண்ணின் அருங்

குணங்களுக்கு இலக்காக்கி, இக்கூறள் இந்த அம்மையின் சரித்திரத்தின் பொருட்டே தேவர்வாசக்கினின்றும் எழுந்ததோ என்று யாவரும் வியக்கும்படியாகச் சொன்மாரி பொழிந்தார்கள்.

பின்னர்க்கடைசியாக, மேலைச்சிவபுரிச் சன்மார்க்கஸபையின் காரியதரிசி. ஸ்ரீமான் குமரப்பசெட்டியார் அவர்கள். தாழ்ந்தவகுப்பாரை யுயர்த்தல் என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு நமது தேசத்துள்ள தாழ்ந்த வகுப்பார் நம்மால் கல்விமுதலான கவுரவம் கொடுக்கப்பெறாது அநாதரிக்கப்படவே, வேறுமதத்தார் வலைக்குட்பட்டு அம்மதத்தினராகி நமது தேசத்துமதம் நாகரிகம் ஜனத்தொகை இவற்றில் குறைவுகாட்டிவருகிறார்கள். ஆதலால், அவர்களை உயர்த்த வேண்டியமுயற்சிகளை அவசியம் தேடவேண்டியது நம்மெல்லோருடைய முதன்மையான கடமையென்று மிகவும் உருக்கமாகவும் கம்பீரமாகவும் உண்மையாகவும் பேசினார்கள்.

பிறகு, அக்கிராஸனாதிபதி எழுந்திருந்து சொல்லவேண்டிய விஷயங்கட்கெல்லாம் அழகாக முடிவுரை கூறிக்கடைசியாக நடந்த விஷயத்தில் தமது அபிப்பிராயத்தையும் வெளியிட்டார்கள். அஃதென்னவெனில், தாழ்ந்தவரைப்பற்றி நமது நண்பர் ஸ்ரீமான் குமரப்பசெட்டியார் அவர்கள் சொல்லிவந்த வெல்லாம் உண்மையேயாயினும், நமதுதேசத்துப் பிராசீனதர்மங்களாகியவர்ணதர்மங்கள் நிலைகுலையாதபடியாக அவர்கட்குக் கல்வியில் அவச்யமானதைக் கொடுத்து அவர்களைத் திருத்தவேண்டியது நமது கடமைதான் என்று சொன்னார்கள்.

பிறகு, அக்கிராஸனாதிபதியவர்களைப் பற்றிச் சபையில் வந்திருந்த வித்வான்களிற் பலர் வாழ்த்துப் பாக்கள்கூறிவாழ்த்துக் கூறவே ஹார சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்று இறைவனது திருவருளால் சபையானது மங்களகரமாக நடந்தேறியது.

பிறகு, மேளவாத்தியங்களுடன் அக்கிராஸனாதிபதியவர்களை, அவர்கள் இறங்கியிருந்த ஜாகைக்கு நகரத்தார் அழைத்துச்சென்று உபசரித்துவந்தார்கள்.

R. RAJAGOPALA ROW

Paper correspondant

Karaikudi.

பாத்திர மறிந்து பிச்சை யிடுதல்.

உலகத்தில் தர்மங்களெவற்றினும் சிறந்தது பிக்ஷையிடுவதே யாகும். அங்ஙனம் அந்தந்தர்மத்தைச்செய்யப்புகும்போது, பாத்திரமறிந்து இடலே தகுதியாகும். பாத்திரமாவார், நாம் இடும் பிக்ஷையைஏற்றுக்கொள்ளத் தகுதியுடையவராயிருப்பவர். அதாவது அவர் வேறொரு வழியால் ஸம்பாதித்துக்கொள்ள முடியாதவராக இருத்தல் வேண்டும். சில பிக்ஷுகர், ஒருவரிடம் ஒன்றைப் பெறும்வரையில், நல்லவர்போலவும் தக்கவர்போலவும் நடித்து விட்டுப் பிறகு, தமது இயற்கைக்குணங்களால் நம்மை பிக்ஷயின் பலனையடையாதவர்களாகச் செய்கின்றனர்.

ஆகலின், நம்மால் கூடிய அளவு ஏற்போரது மனம் வாக்கு செயல் இவற்றைப் பரிசோதித்தலே தகுதியாகும். ஒருவனை நன்றாய் ஆராய்ந்து அறிதல் கூடாதகாரியமேனும், கூடிய அளவு பரிக்ஷித்துச் செய்தலே தகுதியாகும். நாட்டுக்கோட்டை நகரப் பக்கங்களில், பலவிடங்களிலிருந்தும் யாசகர்கள் வந்துபோவதைப் பார்க்கிறோம். அவர்களிற் பாத்திரமாவார் உளரோவெனின், ஒரு சிலருமிலர். சிலர் அதிகாரத்தாலும், வேறுசிலர் ஆசாரிய வேஷத்தாலும், மற்றும் சிலர் அக்கிரமகாரியங்களின் ஸமர்த்தினாலும், இன்னும் சிலர் சிபார்சினாலும் யாசகர்களென வந்து, தனவான்களிடம் கொள்ளைகொண்டுபோகின்றனர். உண்மையில் பாத்திரரா யுள்ளவர் வந்து தெருத்தோறும் நின்றும் வீடுதோறும் புகுந்தும், பயன்பெறாதவராகி வருந்துகின்றார்கள். அந்தோ! இங்குள்ள செல்வரை நம்பி வந்து பரிதபிக்கும் கூனரும் குருடரும் முடவரும் கிழவரும் நாதனற்றவரும் சிசுக்களும் எத்தனையென்பேன்! இவர்கள் இந்தப்பக்கங்கட்கு வந்து வெகுகாலம் திரிந்து வருந்திச் செல்வது ஒருபக்கமிருக்க, வெறியரும் கடியரும் வேஷக்காரரும் தாம்வந்த சிறுகாலத்திலேயே "கைநிறையபைநிறைய மனம்நிறையத் தனத்தைத் தட்டிக்கொண்டுவிட்டோம்" என்று வீரம்பேசிச் செல்வதைப் பார்க்கும்போது வயிறு எரிகிறது.

இதனால் தர்மம்செய்வதை நிறுத்தவேண்டுமென்றாவது, தர்மம் செய்வது குற்றம் என்றாவது நாம் சொல்லப் புகவில்லை என்றும் தனவான்களை ஏழைகள் பின்பற்றவேண்டுவது அவசியம்தான். தனவான்களும் அவர்களை ஆதரிக்கவேண்டுவது கடமைதான். உத்தம தனவந்தர் தர்மச்செயலாலன்றி, வேறு எவ்வகையினும் திருப்தியடையமாட்டார் என்பது உண்மையே; ஆயினும், தாம் செய்யும் காரியத்தை ஆலோசித்துச்செய்து அதன் நற்பயனைப் பெறவேண்டுமென்பதே எமது கோரிக்கை. அப்படியல்லாமல், அபாத்திரருக்கும் யோசியாமல் கொடுப்பதனாலே, அவர்களைக் கெடுப்பதுமன்றியில், ஏனையோரையும் இந்தக் கபட காரியத்தில் தூண்டிவிட்டவர்களாகவும் ஆகிறார்கள்.

அபாத்திரரேனும் பாத்திரரேனும் ஆக, அவர்கள் பசித்து வந்தவர்களாயின், அவர்களது பசித்தழலை அவித்துவிடவேண்டியது செல்வர்க்கேயன்றி ஏனையவர்க்கும் கடமையாகுமென்றால், செல்வர்கள் செய்வதில் யாதும் குற்றமில்லை. அப்படிப் பசியாற்றும் விதத்திலும், கையில் பணமாக உதவுவதினும் உணவாகவுதவுவதற்குத்தக்க ஏற்பாடுசெய்தலே தகுதி. இப்படித் தேசாந்திரியாக உணவுக்கென்றே திரியும் பலரன்றி, தமது சொந்தநாட்டிலிருந்து பிழைக்கமுடியாமல், குடும்பத்துடன் செல்வம் நிறைந்துள்ள நாட்டிற் பரம ஏழைகளும் வந்துகொண்டிருப்பதைக் காண்கிறோம். இவரைக்காப்பதில், செல்வர் எவ்விதத்திலும் கடமைப்பட்டவரே யாவர். ஆயின் அச்செல்வர் தமது அந்தக்கடமையைச்செலுத்தும் காரியத்தில், நாமும் ஒரு யோசனை சொல்ல உத்தேசிக்கிறோம். என்னவெனில் கீழே சொல்கிறோம்.

குடும்பத்துடன் யாசிக்கவந்தவர்கள், சிறிதுகாலம் இந்தப்பக்கங்களில் திரிந்துவிட்டுப் பிறகு தங்கள் ஊருக்கே செல்பவர்களாக இருப்பினும், அன்றித் தமது புத்திரர்கட்கோ புத்திரிகட்கோ விவாக விஷயமாக வந்தவராக இருப்பினும், அவர்களை வெகுநாள் காத்திருக்கச்செய்யாமல் விரைவில் கொடுத்து அனுப்புவதே உசிதம், இல்லையாயின், காத்திருந்து பெற்ற தனமெல்லாம் உண்டி உடை

முதலியவற்றுக்கேயாகித் தமது உத்தேசம் நிறைவேறாது மற்றும் வருந்துவாராகின்றனர். அன்றித் தம் நாட்டையே விட்டு எங்கேனும் இருந்து பிழைக்கலாம் என்று வருவாரும் உளரேல், அவர்கட்குச் செல்வர் ஏதேனும் வேலையிட்டுக் கூலியாகக்கொடுப்பதே நலமாகும். அப்படிக் கூலியாகக்கொடுப்பதற்குத் தகுந்தயோசனையும் ஒன்றிருக்கிறது. இந்தப்பக்கத்துப் பலநாடுகளிலும் உள்ள தனவான்கள், தந்தம் குடும்பங்களில் தர்மத்துக்கென்றே சேர்த்து வைத்துள்ள பொருள்களால், யாவரும் ஒருங்கே ஆலோசித்து தக்க மத்தியதாமான வூரில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தியதனைநடத்திவரமுயல்வார்களாயின், வந்த யாசகரும் தமது மானக்கேடான தொழிலைவிட்டு வேலைசெய்து கூலிவாங்கியுண்டுகளிப்பார்கள். இதனால் தேசமும் நாகரிகத்திற் சிறப்பெறும்.

ஆகையால், சீமான்களே! இந்த இகபரஸாதகமான காரியத்தைச் செய்வதற்கு நீங்கள்தாம் முன்வரவேண்டும். நம் தேசம் பிக்ஷுகர்களாலும், பாத்திரமறியாது பிக்ஷையிடுபவர்களாலுமே சீர்கெட்டிருக்கின்றது என்று குறைகூறப்படுகிறது. இவ்விரண்டு குறைகளும் உங்களாலேயே நீங்கவேண்டும். ஏழைகள் பிக்ஷையெடாமலும் செல்வர்கள் பிக்ஷைகொடாமலும் ஒருபோதுமிருக்க முடியாது. ஆயின் அவற்றை தேசத்தின் முன்னேற்றத்தையநுசரித்துப் பரிஷ்கரித்துக்கொள்ளவேண்டுமென்பதேதான் நமது கோரிக்கை.

ஸமசீதோஷ்ணமுடைய நமது தேசத்தில் எவ்வித் தொழிலையும் செய்து நாமே சித்திபெறலாகும். அவற்றுக்கு வேண்டிய கல்வியினையும் நமது மாணவரிற் பலர், பல தேசங்கட்குச் சென்று தமது சுகங்களையெல்லாம் இழந்து அங்குப் பலநாள் வசித்து, கற்று வந்திருக்கின்றனர். தம்மை ஆதரிப்பார் இன்றிவருந்தி நிற்கின்றனர். ஆதலால், நீங்கள்தேசத்தில் அபிமானங்கொண்டு விழித்தெழுந்து, தொழிற்கல்வி தொழிற்சாலை முதலிய நல்லதர்மங்களைச் செய்ய முன் வருவீர்களாயின், உங்களது தர்மமும் பயன்பெற்றது ஆகும். நமது தேசத்தின் ஏழ்மையும் நீங்கும். இதாதேசத்துச் சாமான்

களும் அதிகமாக வந்துகொண்டிருத்தல் நின்றுவிடும். அப்போதே தேசம் தேசமாகும். ஏனெனில், இந்தத்தேசத்தினுடைய விளை பொருள்கள் இந்தத்தேசத்திலேயே செய்பொருள்களாக்கப்பட்டு இந்தத்தேசத்திலேயே அழியுமானால், விலையும் சரஸமாகும்; ஏழ்மையும் நீங்கும். அறிவும் விரியும். பொருளும் குவியும். தேசமும் தேசமாகும், எல்லோரும் ஸஹோதரரென்ற ஒற்றுமையும் உண்டாகும்.

M. V. ராஜம்.

நன்னடக்கை.

உலகில் ஒருவரது தேசயாத்திரையிலும் ஆத்மயாத்திரையிலும் வெற்றிதருவது நன்னடக்கையேயாகும். செல்வமுடைமை வலியுடைமை அறிவுடைமை புகழுடைமை ஆற்றலுடைமை நோயின்மையாகிய யாவும்ஒருவற்குண்டெனினும், அவற்கு நடக்கை நன்னர் அமைந்திலதேல் அவையாவும் பேடிகைவாள் போலாகும். நடக்கையொன்றே உயிர்க்குச்சுவையளிப்பது. ஒருவனை, அவனது நடக்கையினின்றும் பிரித்துத் தனியாக மதித்தல் இயலாத காரியம். ஏனெனில், அந்நடக்கைபொன்றே அவற்குப் பெருமையும் சிறுமையும் தருவது ஆகும். மனம் வாக்கு காயம் எனும் மூன்றனுள்ளும் ஒருவரது நடக்கை வெளியாகிறது. இம்மூன்றுமே ஒருவனது நடக்கையையாக்கிக் கொள்வதற்கு ஸாதனங்கள். தனது, நன்னடக்கையையே ஒருவன், தனக்கு உயர்கதியாகக்கொண்டு அதனைக் கெடுக்கவரும் ஆசைகளை யொதுக்குமாற்றல் உள்ளவனாயின், அவனே உலகத்தாரால் உத்தமபுருஷனென்று மதிக்கப் பெறுவான். ஆசைக்கு அடிமையானவன் உலகத்துக்கே அடிமையாவான்; ஆசையைத் தனக்கு அடிமையாக் கொண்டவனே தப்

பாது உலகத்தனையடிமைகொண்டவனுவான். புகழுடம்பு கொண்டு நிலவுறும் புவிசக்ரவர்த்திகளும் கவிசக்ரவர்த்திகளும், தமது நடக்கை யொன்றையே கவனித்துக்கொண்டு, அதனை நீக்கவரும் ஏனைய செல்வம் முதலியவற்றைப் பரித்யாகம் செய்திருக்கிறார்கள். நன்னடக்கை யென்னும் ஏணியில் ஏறிச் செல்கிறவன் பலபடிகளை வருந்திக் கடந்தேறினவனேனும், தன்னயத்தின பொருட்டு ஒருநல்லகாரியத்தைச் செய்யப் புகுவானுனல், உடனே அதிவிரை வில் கீழே தள்ளப்படுகின்றான். அவனை உலகம் மதிப்பதில்லை.

ஆயின், ஒருவர் நன்னடக்கை யுடையவராக இருக்க எவ் வெக்குணங்களைப் பெற்றிருக்கவேண்டும் என்பதை யாராய்வோம். யார்க்கும் அதிலைலபராகவும் மெய்ம்மையுடையவராகவும் இருக்க முயலவேண்டும். உலகத்தில் முதல் குற்றம் பொய்ம்மையென்றே மதிக்கப்படுகிறது. மெய்ம்மை யொன்றே யொருவற்கு மெய்க்கணி யப் பெறும் மெய்ப் பூணுதம். பலகவர் எத்துணையர் எதிர்த்து நிலை கெடுக்கினும், உண்மையுடையானை உலகம்நிறுத்து, அவற்கே வெற்றிதரும்.

வினயமும் அதிகாரமும் ஒருவனது நன்னடக்கையை அலங் கரிக்கின்றன. இவ்விரண்டும் தம்முள் மாறுபட்ட குணங்களேனும், முன்னேற விருப்பமுடைய ஒருவற்கு இவ்விரண்டும் வேண்டற் பால்ன. முதியாரிடம் வினயமும் இளையாரிடம் ஆதிக்யமும் காட்ட வேண்டும். ஆதிக்கியமாவது தன்னைச் சூழ்ந்தும் சார்ந்தும் இருப் போரை நயத்தாலும் பயத்தாலும், தனக்கடங்கி நடக்கும்படிச் செய்யவேண்டுவது. ஒருவன் தனது உத்யோக நிலையிலிருந்து கொண்டு, தனது கீழுள்ளவரிடமும் வினயத்தைக் காட்டுங் குண முடையவனுயின், அவனது அதிகாரம் நன்றாக நடத்தப்படுவதாகி றதில்லை. இல்லையாகவே, அவற்குக்கீழுள்ள புத்திசாலியொருவன் இவனை மேற்கொள்வன். அதனுல், தேகயாத்திரையின் ஒழுங்கு பெற்ற முன்னேற்றம் தடைப்படுகிறது. ஆகவின் பெரியாரிடம் வினயத்தையும் சிறியாரிடம் ஆதிக்யத்தையும் காட்டவேண்டும்.

பொறுமையும் விடாமுயற்சியும் நடக்கையை நன்மையில் நாட்டக்கூடியவையாகும். இவையுடையான், மலைபோல்வரு துயரைப் பனிபோற் கண்டு பயனடைவான். நாம் ஒன்றினைச்செய்து முடிக்க வெண்ணித் துணிந்துவிட்டால், அக்காரியம் முடிவுபெறுகிறவரையிலும் எத்தனைக் கஷ்ட நஷ்டங்கள் வந்தபோதிலும், பின்வாங்காமல் முன் னோக்கிநிற்கவேண்டும்.

கடமையென்பதொன்றும் ஒருவரை நடக்கையில் கடைத்தேறச் செய்கிறது. எக்காரியத்தைச் செய்யப்புகினும், அதனுள் தனக்கு ஒரு உதவியையும் நாடாமல், அது ஒப்புரவின்பாற்படுவதொன்றாயின், அதனைச் செய்துமுடிப்பது தனது கடமையென்றே நினைத்துச் செயல்வேண்டும். நாம் நினைப்பதும் அறிவதும் நம்பிக்கை கொள்வதும் எல்லாம், பிறர்க்கு உபகரிப்பதற்கென்றே கருத வேண்டும். இதே நம்கடமையென்று கருதவேண்டும். கடமை என்னும் நோக்கத்துடன் அல்லாது ஒருவன் நினைப்பதும் அறிவதும் செய்வதும் எல்லாம் அவனது நன்னடக்கையின் விருத்திக்கு உபகரணங்கள் ஆகாவாம். ஒரேஒரு குணத்தைப்பற்றினவனாயினும் கடமையோடு முன்னேறுவனானால், அவன் நன்னடக்கையில் உயர்ந்தவனாவான். அப்போது மிகைமக்களால் மதிக்கப்படுகின்றான்.

ஸ்ரீராமபிரான் உலகினுக்கு நன்னடக்கையை நடத்திக் காட்ட வந்த ஒருமூர்த்தி. அவரிடம் அச்செயலுக்கு ஸாதனங்களாயிருந்தவையோ, வினயம் உண்மையுடைமை பொறுமை அன்புடைமை ஒப்புரவு எனும் இவையேயாகும். அரிச்சந்திரராஜன் தனது உண்மையுடைமை முதலியவற்றையே ஸாதனமாகக் கொண்டு, கைப்பற்றிப், பலதுன்பங்களையும் நீந்தி, நன்னடக்கை யென்னும் கரையேறியிருக்கின்றான். யுதிஷ்டிரர் (தர்மராஜன்) உண்மையும் பிரியமும் கலந்துறவாடுதலும் பொறுமையும் உடையவராக இருந்தார். இவைகளே நன்னடக்கைக்குச் சாதனங்களாகின்றன.

நன்னடக்கையே ஒருவற்கு நல்லுயிராகும். அஃதொன்றே அவற்குப் பரமானந்த திருப்தியைத் தரக்கூடியது. பகுத்தறிவால்

நல்லவர் சேர்க்கையையும், அச்சேர்க்கையால் நற்செயலையும், அச்செயலால் நற்பழக்கத்தையும், அப்பழக்கத்தால் நன்னடக்கையையும் பெறுகிறோம். ஆகலின், தன்னயத்தில் வைத்த ஆசையை யொழித்து பிறர்க்குச் செய்வதே நமது கடமையென் றெண்ணிப், பகுத்தறிந்து ஒருகாரியத்தைச் செய்யப்புக்கோமாயின், நமதுநடக்கை நன்னடக்கையாகும்.

தீநடக்கையை யுண்டுபண்ணும் கெட்டகுணங்கள், நமக்கு, பல பிறப்பின் பழக்கங்களாக இருக்கலாம். எனினும், அவற்றை நமது பகுத்தறிவு என்னும் வாளால் அறுத்துத் தள்ளவேண்டும். மனிதவகுப்பார் இரண்டு பிரிவினையாகப் பிரிக்கப்படுகிறார்கள், "உபகாரிகள்" என்னும் "அபகாரிக" ளென்றும் அவர்கள் அழைக்கப் பெறுவர். உபகாரிகளென்பார், "உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும்" எல்லாம் உலகத்துக்கே என்ற ஒப்புரவிற்கு ஒல்காதாராகி, தமது உடல் பொருள் ஆவி மூன்றனையும் பரோபகாரத்தே செலுத்தும் ஸத்புருஷர்களாக இருப்பர். அபகாரிக ளென்பார், தாயின்புறும் பொருட்டு ஏனையோர்க்குத் துன்பம் செய்தும், தமக்கு யாதும் இன்பம்தாராதபோதும், ஏனையோரைத் துன்புறுத்தலே தமது இயற்கையாகக்கொண்டும் இருப்பார்கள்.

உலகத்தின் சீதோஷ்ணங்களும் குணங்களை மாறுபடுத்துவதுண்டு என்பர். என்றாலும் இந்தவிஷயம், அறிவின் மிகுந்து இந்திரியங்களைத் தம்வசத்தவாக்கிக் கொண்டிருக்கும் பெரியோர்க்கு ஒவ்வாதது. ஏனெனில், அறிவில்லாதவர்கள் வசித்திருந்ததேசம் இப்போது தக்க அறிஞர்களால் நிறைந்துள்ள தன்மையையும், நிறைந்த அறிவாளிகள் வசித்திருந்ததேசம் இப்போது கேவலம் வனசரர்களை நிறைந்துள்ள தன்மையையும் உணர்கிறோம்.

உலகில் பிறந்தவருள் "பூர்ண அறிவுடையார்" என்று கொள்வதற்குயாரும் இலர். எவர்க்கும் ஏதேனும் ஒருகுறைஇருந்துகொண்டே இருக்கக்காண்கிறோம். ஆகலின், எல்லாரும் தமது நடக்

கையில் திருந்தி உணர்வில் மிருந்தவராகி வருவதற்கு முயலவேண்டும். ஒருகாரியத்தைச் செய்யப்புகும்போது, ஸாத்விகத்தில் பழகியுள்ள சுத்தமனதுடன் ஆலோசித்தே செய்யத் தொடங்குவோமானல், யாதும் தீமைதோன்ற நியாயமேயிராது. அதுவேநன்னடக்கையிற் பழகிவரத்தக்க மார்க்கமாகும். மனத்தினை ஸாத்விகத்தில் பழக்குவதற்குத்தக்கஸாதனம் கற்றறிந்தபெரியோரது சேர்க்கையேயன்றி வேறு யாதுமிலது.

ஆகையால், தர்மத்துடன் கூடினவராயிருக்கப் பழகவேண்டும். அதற்கு ஸாதனமான மதக்கொள்கைகளை நன்ருகத் தெரிந்துகொள்ளவேண்டும். அவற்றைத் தெரிந்துகொள்ள நல்லாசிரியருடைய பழக்கம் எப்போதுமிருக்கவேண்டும்.

பத்திராதிபர்.

நீதிமொழிகள்.

மரத்திலும் கல்லிலும் மண்ணிலும் கடவுள் இல்லை; எண்ணத்திலேயே இருக்கின்ருர். ஆதலின், நல்லெண்ணமே உயர்சிறப்புக்குக் காரணம்.

*
* *

மந்திரத்திலும், புண்ணியதீர்த்தத்திலும், அந்தணரிடத்திலும், கடவுளிடத்திலும், சோதிடனிடத்திலும், வைத்தியனிடத்திலும், குருவிடத்திலும் நாம் வைத்திருக்கும் பத்திக்குத் தக்கபடி ஸித்தியுண்டாகும்.

*
* *

ஆகாயத்தில் மேகங்களிருக்கின்றன; மலையில் மயில்களிருக்கின்றன; இலக்ஷமைல்களுக்கு அப்பால் சூரியனிருக்கிறன்; நீரில் தாமரையிருக்கின்றது; இரண்டுலக்ஷ மைல்களுக்கப்பால் சந்திரனிருக்கின்ருன்; ஆம்பல்மலர்கள் பூமியிலிருக்கின்றன. ஆயினும், அவைகளில் ஒன்றுக்கொன்று நட்பு இருக்கின்றமையின், தூரத்திலிருப்பது தெரியவில்லை.

*
* *

"இந்தியக் கிழச்சிங்கம்"

தாதாபாய் நவ்ரோஜி.

1825—1917.

நமது இந்தியக்கிழச்சிங்கமாகிய ஸ்ரீமான் தாதாபாய் நவ்ரோஜி, சென்றமீ 30உ சனிக்கிழமை மாலை 5-மணிக்குப் பம்பாயில் தேஹவியோஹமானதைக்கேட்டு மிகவும் விசனிக்கிறோம். அவர்கள் சென்ற ஒருமாதகாலமாகவே வர்ஸோவாவில் மிகுந்த அசவுக்யமாக இருந்துவந்ததால், பம்பாயில் தமது மருமகனது ஸ்தானமாகிய கும்பாலா குன்றுக்கு அழைத்துவரப் பெற்றிருந்தார்.

அவரது தேஹத்துக்குச் செய்யவேண்டிய உத்தரகார்யம் மறுநாளாகிய நாயிற்றுக்கிழமை மாலையில் வெகு விமரிசையாக நடந்தேறியது. அந்தச்சமயம் சுமார் 15, 000 ஜனங்கள் வந்திருந்தார்கள். இந்தியாவின் பல இடங்களிலிருந்தும் வரக்கூடியவர்கள் வந்து சேர்ந்திருந்தார்கள். அவர்களுள் முக்கியமானவர் சிலரைச் சொல்லுவோம்.

ஸர். ஜே. ஜீஜீபாய்; ஸர். டின்ஷா. இ. வாசா; மிஸ்டர். எச். ஏ. வாடியா; ஸர், என். ஜி. சந்தர்வாக்கர்; மிஸ்டர். புருஷோத்தமதாஸ் தாகூர்தாஸ்; ஆனரபில், மிஸ்டர். எம். ஏ. ஜின்னா; மிஸ்டர் பாஸப்பாய் ஜம்மகபாய் லால்ஜி முதலியவர் பிராப்தமாகி இருந்தார்கள்.

நமது மஹாபுருஷரது
சரித்திரச்சுருக்கம்.

ஸ்ரீமான் தாதாபாய் நவ்ரோஜி, 1825ஞு செப்டம்பர்மீ 4உ பம்பாய் நகரத்திலே ஒருமையான பார்ஸி குடும்பத்தில் பிறந்து, தமது 4-வது வயதிலேயே தமது பிதாவை யிழந்து, தந்தையில்லாச் சிறுவராக வளர்க்கப் பெற்றார். அவரது தாயார் அவருடைய

படிப்பில் மிகுதியும் கவலை யெடுத்துக்கொண்டு வந்தபடியால், அந்தக்காலத்து "எல்பின்ஸ்டன் இன்ஸ்டிட்யூஷன்" என்று வழங்கப் பெற்றுத் தற்காலம் "எல்பின்ஸ்டன் காலேஜ்" என்று வழங்கப் பெறுகிற கலாசாலையில் உதவிப்பணம் பெற்ற ஒருமாணவராகச் சேர்த்துக்கொள்ளப் பெற்றுநன்முக ஊக்கத்துடன் படித்துவந்தார். அப்போது பம்பாயில் பிரதான ஜஸ்டிஸாக இருந்த ஸர். எர்ஸ்கின் பேரி என்பவர், நமது சிங்கத்தின் புத்திசாதுரியத்தையும் திறமையையும் கல்வியின் விருப்பத்தையும் கண்டு அவரை பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படிப்பிக்கும் பொருட்டு லண்டனுக்கு அனுப்பிக்க வேண்டிய பிரயத்தனங்கள் செய்தார்; எனினும், அது நிறைவேருமல் போயிற்று.

ஆகையால், 1850 வருஷத்தில், அவர் தாம் படித்துவந்த காலேஜிலேயே ஒரு போதகராக நியமனம் பெற்று, பின் 4 வருஷங்களுக்குள் தக்க அதிர்ஷ்ட வசத்தால் அதே காலேஜுக்குப் பிரதான போதகராகவும் அமர்ந்திருந்தார். ஆனாலும் இரண்டு வருஷங்கட்கெல்லாம் அப்பதவியை யுதறிவிட்டு, ஒருபெரிய கம்பெனியின் ஏஜண்டாக லண்டனிலிருந்தே வேலைபார்க்கும்படியாக ஏற்பட்டதனல், அங்குப்புறப்பட்டுப் போய்விட்டார்.

1865 வருஷத்திலிருந்து 1869-ம் வருஷம்வரையில், நமது மஹாபுருஷர், இங்கிலந்திலேயே வாசஞ் செய்துகொண்டிருந்து, அங்கே இந்தியாது விஷயங்களை ஆங்கிலப் பொதுஜனங்கட்குப் பல மார்க்கங்களிலும் எடுத்துத்தெரிவித்துக் கொண்டிருந்தார். அங்கே, மாகாணங்கள்தோறும் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டு, அவ்வவ்விடங்களிலெல்லாம், இந்தியாவைப் பற்றியே பிரசங்கங்கள் செய்துகொண்டு, ஆங்கிலஜனங்கள் இந்திய விஷயங்களை கவனிப்பதற்கென்றே "லண்டன் இந்தியன் அஸோஸியேஷன்" என்ற ஸபையையும் வெகு ஊக்கத்துடன் ஸ்தாபித்தார். இதன் இடையில் தாம் இருந்தகம்பெனியை விட்டுத் தனியே வியாபாரம்செய்ய முயற்சித்து நடத்திவந்தாராளுைம், ஒரு ஹிந்துகனவானுக்கு அவசியம்செய்து முடிக்கவேண்டிய உதவியினல் தமது சொத்துக்களெல்லாம் குறைந்து வியாபாரம் நின்றுபோகும் படியாக நேர்ந்து

விட்டது. என்றாலும், நமதுசிங்கம் தமது தளராதமுயற்சியாலும் கண்ணியத்தினாலும் தமது கடன்காரர்களால் மானத்தைக் கெடுத்துக் கொள்ளாமலே கவுரவமாகக் கடன்களையெல்லாம் அடைத்துவிட்டு, 1869-ம் வருஷத்தில் பம்பாய்க்குத் திரும்பிவிட்டார். அப்போது பம்பாய் நகரஜனங்கள் அவரை நல்லுபசாரத்துடன் நல்வரவேற்றார்கள்.

பிறகு, இந்தியாவின் வரவு செலவு விஷயமாக விசாரணை செய்வதற்கென்று பார்லிமெண்டினால் ஏற்படுத்தப் பெற்றிருந்த கமிட்டிக்கு சாட்சியாகச்சென்று, இந்தியாவின் ஏழ்மைத் தன்மையை மிகவும் உருக்கமாகவும் உண்மையாகவும் பேசி, ஆங்கிலப் பொது ஜனங்களின் கவுரவத்துக்கு விஷயமானார். அப்போது இந்திய ஜனங்களுள் ஒவ்வொருவருக்கும் சராசரிவருஷ வரும்படி ரூபாய் 20 தானென்று அவர் அறுதியிட்டுச் சொன்னதை ஆங்கில ஜனங்கள் ஆராய்ச்சியால் உண்மையென்றே தெரிந்து இவரதுபுத்தியை மிகவும் வியந்தார்கள். இன்னும் இந்தியாவின் அரசாட்சி முறையைப் பற்றியும் ஆங்கிலப்பொதுஜனங்கட்கு நன்றாகஎடுத்துக் காட்டினார்.

1874-ம் வருஷத்தில், பரோடா ஸ்மஸ்தானம் வெகுசீர்கெட்ட நிலைமையில் இருந்துவந்ததால், அந்தச்சமயத்தில் திவானாக நியமிக்கப் பெற்றார். அமைச்சப்பதவியை ஏற்றுக்கொண்ட சிறு காலத்திலெல்லாம் ஸம்ஸ்தானத்தை நல்லநிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டார். இதனைப்பொறாத, அங்குள்ள பிரிட்டிஷ் ரெஸிடெண்டான கர்னல் பேயர் என்பவர் நவ்ரோஜியை விலக்கிவிட மிகுந்த பிரயத்தனப்பட்டார். ஆனாலும், இங்கிலந்தில் இருந்த லார்டு ஸாலிஸ்பரி போன்ற ராஜதந்திரிகள், இவரது அரியசெயல்களைக்கண்டு வியந்து மெச்சிக்கொண்டதனால், கர்னல் பேயருடைய முயற்சி பலிக்கவில்லை. என்றாலும் நமதுசிங்கம் அந்தவேலையை ராஜிநாமாசெய்துவிட்டுப் பம்பாயிலேயே வசித்துவந்தார்.

பிறகு, இந்தியாவின் பொருட்டு இங்கிலந்தில் செய்யவேண்டியவேலை அதிகமாக இருந்ததனால், 1885ஷ் திரும்பவும் இங்கிலந்துக்குப் புறப்பட்டார். அங்கே 1887-ம் வருஷத்தில் ஹோலஸ்

சேப்ரன் என்னும் வட்டத்துக்கு ஒரு பிரதிநிதியாகத் தேர்ந்தெடுப்பதற்கு அபேக்ஷகராக நின்றார். மனோதைர்யமும் பொதுஜனஉழைப்பில் ஆசையும் ஸத்யத்தில் நம்பிக்கையும் அவருக்கு அதிகமாக இருந்ததனால், அவர் அதற்கொரு அபேக்ஷகராக இருக்கும்படி நேர்ந்தது. இருந்தாலும் இவர் ஒரு கறுப்பு மனிதர் என்னும் ஒரே காரணத்தினால், இவருக்கு 1950 ஓட்டுகளும் எதிரிக்கு 3658 ஓட்டுகளும் கிடைத்தபடியால் அதில்இவருக்குத் தோல்வியே கிடைத்தது. இதனால் நமது சிங்கம் மனம் சலிக்கவில்லை. பிறகும் விடாமுயற்சியாலும் பொதுநோக்குண்மையாலும் அன்பின் முறையாலும் பொது ஜனங்களின் அபிமானத்தைப் பெற்றுக் கொண்டு, காமன் ஸபையில் முதன் முதல் இந்தியாராக ஸ்தானம் பெற்றார். ஆங்குத் தமது நண்பர்கட்கு இந்தியச் சகோதரர்களின் நிலைமையைப் பலபடியாகவும் எடுத்துக்காட்டுவதே அவருடைய முக்ய வேலையாக இருந்தது. இவர்களுடைய முயற்சியின் வன்மையினாலேதான் ஆங்கிலர்கள் இந்தியர்களைப்பற்றிச் சிறிதேனும் கவனிக்க ஆரம்பித்தார்கள்,

இந்தியவிஷயங்களைப் பற்றிப் பார்லிமெண்டின் விசாரணை ஏற்பட்ட காலங்களிலெல்லாம், அந்தக்கமிட்டிகள் ஒவ்வொன்றிலும் நமது சிங்கம் தகுந்த சாக்ஷி சொல்லியிருக்கிறார்கள்.

அப்போது, அதாவது 1892 ம் வருஷத்தில் இந்தியாவில் லாஹோரில்நடந்த காங்கிரஸுக்கு இவர்களையே அக்கிராஸனாதிபதிஸ்தானம் வகிக்க பிரார்த்தித்திருந்தபடியால், அந்தஸ்தானத்தை வகிக்க அவர் இங்கிலந்திலிருந்து புறப்பட்டார். அவர் பம்பாயிலிருந்து லாஹோர் போகும் வரையிலுள்ள ஒவ்வொரு ஸ்டேஷனிலும், ஒரு அரசன் பெறக்கூடிய மரியாதைக்கு மேற்பட்ட மரியாதைகளைப் பெற்றது மாத்திரமன்றி, லாஹோரிலும் எழுத்தால் எழுதமுடியாத அவ்வளவு வைபவத்துடனும் அன்புடனும் வரவேற்கப் பெற்றார். இந்த வரவேற்பு மகிமையைப் பற்றி, இந்தியநண்பர்களின் ஒருவரான ஸர்வில்லியம் ஹண்டர் என்னும் ஐரோப்பியர் லண்டன் டைம்ஸ்பத்திரிகையில் நீண்ட ஒருவியாஸம் எழுதினார். இதுமாத்திரமல்லாமல், அந்தநிகழ்ச்சியின் பிரதாபத்தைக்குறித்து

அநேகதந்திகள் லண்டன்மா நகரத்துக்குப் பறந்துகொண்டே இருந்தன.

பின்னர் 1906 ஹுத்தில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸில் இரண்டாந் தடவையாக அக்கிராஸனாதிபத்யம் வகித்து, இந்தியர் சுய ஆட்சியையே தமக்குரிய லட்சியமாக வைத்திருக்கவேண்டுமென்று உறுதிமொழி கூறியிருக்கிறார்.

அவர் லண்டனில் காங்கிரஸ் மஹாஸபையின் ஆதரணையில் நடைபெறும் இந்தியா பத்திரிகையில் பின்வரும் பொருள் உள்ள கடிதத்தை இந்தியர்களுக்கு எழுதியனுப்பியிருக்கிறார்.

“ஐம்பது வருஷங்களாக நான் பொதுவாழ்க்கையில் எனது ஜீவிய காலத்தைச் செலவிட்டிருக்கிறேன். ராஜீயவிஷயம் ஸமுதாயக்கல்வி வியாபாரம் நிர்வாஹம் முதலிய அம்சங்களிலும் நான் உழைத்திருக்கிறேன். எல்லோரையும்போலவே எனக்குத் தோல்வியும் ஜயமும் கிடைத்ததுண்டு. ஜயமடைந்தபோது நான் ஸந்தோஷப்பட்டதில்லை. தோல்வியுற்றபோது துக்கப்பட்டதில்லை. இங்கிலந்தில் லிபரல் கக்ஷியே சிதைந்துபோயிற்று. எனவே, நானும் இந்த எலெக்ஷனில் தோற்றுப்போனேன். “பொறுமையுடனும் பிடிவாதத்துடனும் முன்னேறிச்செல்” என்ற முறையையே நான் எப்போதும் ஏற்று நடப்பவன். நல்லகாரியத்திற்காக உழைக்கும்போது ஜயமேற்பட்டாலும் அட்ஜயம் ஏற்பட்டாலும் இரண்டும் எனக்கு ஒன்றுதான். நான் என்னுடைய முயற்சியைத் தளரவிடமாட்டேன். என்னுடைய தேசத்திற்கு உழைக்க எனக்குச் சரீரபலமும் தருணமும் இருக்கும்வரையில், நான் பாடுபட்டுழைத்துவர என்னாலியன்றமட்டும் முயற்சிசெய்வேன். எனவே, மீண்டும் ஒருதடவை காமன்ஸ் ஸபையில் ஸ்தானம் பெற நான் முயற்சிசெய்யப்போகிறேன். காமன்ஸ் ஸபையில்தான் இந்தியாவின் குறைகளையும் இந்தியாவில் செய்யப்படவேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றிய சண்டைகளையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்துவதற்கான சண்டைகளையும் நடத்தவேண்டும். இந்தியாவின் நன்மையே ஏகாதிபத்தியத்தின் நன்மையாக இருக்கின்றது. இந்தியாவின் லாபநஷ்டங்களைவிட இந்தியாவில் தோன்றியிருக்கும் பிரச்னைகள் தீர்க்கப்படுவதே ஏகாதிபத்தியத்துக்கு மிகவும் அவசியமானதாகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் நிலைபெற்று நிற்பது இந்தியப் பிரச்னைகள் தீர்க்கப்படுவதைப் பொறுத்ததாயிருக்கின்றது. இவ்விஷயமாய் எனக்குள்ள அபிப்பிராயங்களையும் நோக்கங்களையும் எத்தனையோதரம் பகிரங்கமாய் வெளியிட்டிருக்கிறேன். இந்தியாவில் சத்தியமும் பலமும் வாய்ந்த பலசக்திகள் வேலை செய்துகொண்டுவருகின்றன என்பதைத் தவிர நான் இங்கு அதிகம் சொல்ல

வேண்டியதில்லை. ஏகாதிபத்யத்தின் லாபநஷ்டங்களைத் தற்போதைய ராஜ தந்திரிகள் கவனித்து, ஜனங்களுக்குள் க்ஷேமத்தையும் திருப்தியையும் உண்டு பண்ணிவைக்காமற் போவார்களானல், தற்போது ஏகாதிபத்தியத்தில் தோன்றியிருக்கும் சக்திகள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு விரோதமாய்க் கிளம்பி மகத்தான ஆபத்துகளை விளைவிப்பது ஆச்சரியத்துக்கிடமாகாது. இப்படிப்பட்ட பேராபத்து ஏகாதிபத்தியத்துக்கு நேரிடாவண்ணம் தடுக்க என்னாலானமட்டும் முயற்சிசெய்வேன். நான் தோல்வியடைந்துபோனதினல் மனஞ்சலித்துவிடுவேனென்று இந்தியாவிலுள்ள எனது சகோதரர்கள் சிறிதும் எண்ணவேண்டியதில்லை. இந்தவிஷயங்களில் கவனம் பாராட்டும் வழக்கம் பிரிட்டிஷ் ஜனங்களுக்குள் கொஞ்சங்கொஞ்சமாய்ப் பரவிவருகின்றது. எனவே, இந்தியாவுக்கு ஸதாகாலம் தரித்திரத்தையும் அதிருப்தியையும் உண்டுபண்ணிவைக்கின்ற இயற்கைக்கு விரோதமான தற்போதைய ஆட்சி முறையையே பிரிட்டிஷார் இந்தியாவில் வற்புறுத்தி வராமலும், இந்திய ஜனங்களின் க்ஷேமத்தை நாடி அதன் மூலமாய்த் தங்களுடைய க்ஷேமத்தையும் விருத்திசெய்துகொள்ளவும் பிரிட்டிஷார் முயற்சி செய்வார்களென்று நம்பிக்கையுடன் நான் உழைத்துவருவேன். சு. மித்திரன்.

இந்த மஹான் தமது ஜீவியகாலத்தில் எத்தனையோ அரிய பெரிய காரியங்களில்தலையிட்டு விடாமுயற்சியுடன் நின்று சாதித்திருக்கிறார். இவர் நம்மையாளும் பிரிட்டிஷாரால் மாத்திரம் மதிக்கப்பெற்றவர் அல்லர். உலகத்துள்ள எல்லோராலும் போற்றப் பெற்றவர். 1905-ம் வருஷத்தில் ஆம்ஸ்டர்டாம் நகரத்தில் நடைபெற்ற சர்வதேச அபேதவாதிகளின் மஹாஸபையில், நமது கிழச்சிங்கம், இந்தியாவின் அபேதவாதப் பிரதிநிதியாகச் சென்று இந்தியாவின் ஆட்சி முறைகளையும் ஜனங்களின் நிலைமையையும், உலகத்தின் பல திசைகளிலிருந்தும் அங்கு வந்து கூடியிருந்த பிரதிநிதிகளுக்கு அழுத்தமாக எடுத்துக்கூறி அவர்கள் உண்மையறிந்து உருகும்படிச் செய்தார்.

1902-ம் வருஷத்தில், தாம் பற்பல சமயங்களில் வெளியிட்டிருந்த துண்டுப் பத்திரங்களையும் வியாஸங்களையும் கமிட்டியின் முன்பு கொடுத்திருந்த சாட்சியங்களையும் ஒன்றாகச்சேர்த்து, "இந்தியாவின் ஏழ்மைத்தனமும் பிரிட்டிஷாரின் தன்மைக்கு ஒவ்வாத ஆட்சியும்" என்ற பெயருடன் ஒரு புத்தகத்தை வெளியிட்டார். இந்தியாவின் செல்வ நிலைமையையும் பொதுவாகப் பொருளாதா

ரத்தின் சாஸ்திர நுட்பத்தையும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற இச்சையுடைய மாணவர்கட்கு அது ஒரு துணை நூலாகஇருக்கும் என்பதற்கு யாதும் சந்தேகம் இல்லை. அதனுள் அவர், இந்தியா வின் நிலைமையை நன்றாகவும் உண்மையாகவும் அழுத்தமாகவும் பல தேசத்தாரும் ஒப்புக்கொள்ளும் படியாகவும் வற்புறுத்தித் தெரிவித்திருக்கிறார். அந்நூலின் பெருமையே பிரிட்டிஷார்களை இந்தியர்களிடம் கண்வைக்கும்படித் தூண்டிவிட்டது. அதுமாத் திரமா? படித்த இந்தியர்க்கு இந்திய தேசாபிமானக் கண்ணையும் கொடுத்தது.

இப்படிச் சுமார் 50-வருஷகாலம் இந்தியா மேம்பாடடைய வேண்டுமென்ற முழுநோக்கத்துடன் மிகவும் இடைவிடாத விடா முயற்சியுடன் உழைத்துவந்த நமது வயோதிக ஸிம்ஹம் சென்ற பன்னிரண்டு வருஷங்களாக வர்சோவாவிலேயே வசிக்கும்படியாக நேர்ந்தது. அங்கும் பிரதிதினமும் ஸாயங்காலவேளைகளில், தமது அந்தக் கிழப்பருவத்திலும், வெளியே காற்றுவாங்கிவரும்பொருட் டுச் சவாரிபோகாமல் இருந்ததில்லை. தமது கடைசி காலம்வரை யில் அவர் மனோபலம் இழந்திருக்கவும் இல்லை. சென்ற வருஷம் கொடுக்கப்பட்ட எல். எல். டி. பட்டம் பெறுவதற்காகமாத்திரம வர்சோவாவிலிருந்து பம்பாய்ச் சர்வகலாசாலைக்கு வந்திருந்தனரே யல்லாமல், மற்றைக்காலங்களில் அந்த இடத்தைவிட்டு வெளி யேறினதில்லை; என்றாலும். அங்கிருந்தபடியே தமது அபிப்பிரா யங்களையும் நோக்கங்களையும் பலவிதத்திலும் பன்முறைகளிலும் தெரிவித்திருக்கிறார்.

சென்ற பலவருஷங்களாகவே இந்தியாமுழுவதுமுள்ள பல ஜாதியாரும் அவரது பிறந்தநாளை வருஷந்தோறும் பெருமையாகக் கொண்டாடி மங்களம்பாராட்டி வந்திருக்கிறார்கள். அவருடைய பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது பம்பாயிலுள்ள பெண் மணிகள் கூட்டங்கூட்டமாக அவருடைய வீட்டிற்குச்சென்று அவரை வணங்கி, அவரது உள்ளன்பு கூடிய ஆசீர்வாதங்களைப் பெற்றுவருவதுண்டு,

தமது தள்ளாத வயதிலும் அவர் இந்தியாவையும் இந்தியரின் தன்மையையும் இந்தியாவின் முன்னேற்றத்தையும் இந்தியரின் பெருக்கத்தையும் மறவாதவராக இருந்தார். வருஷந்தோறும் கொண்டாடும் கொண்டாட்டத்தில் இந்திய ஜனங்கள் தமக்குச் செய்யும் மரியாதைக்குப் பிரதியாக நல்ல புத்திமதிகளைச்சொல்லி வந்திருக்கிறார்.

எனவே, அவர் தமது இளம்பிராயத்தில் உழைத்திருந்த விடாமுயற்சியின் பயனாகவே, பொதுஜனங்களாலும் பெரிய உத்தி யோகஸ்தர்களாலும், தமது கிழப்பருவத்தில் நன்குமதிக்கப்பெற்று இரண்டாவது ஸோராஸ்டராக விளங்கினார். இன்னும் விளங் கிக்கொண்டிருக்கிறார். பெருமைதங்கிய லார்ட் ஹார்டிஞ்ஜ், லார்ட் ஸைடன்ஹாம், லார்ட் வில்லிங்டன் முதலிய தேசாதிபதிகளும் பேட்டி காணவென்றே வர்சோவாவுக்குச் சென்று, அவரது க்ஷேம லாபங்களை விசாரித்து அவரைக் கவுரவப்படுத்திவந்திருக்கிறார்கள். மற்றும் பல தேசாதிபதிகளின் உபசாரமொழிகளையும் பெற்றிருக் கிறார்.

இவரே இந்தியாவின் மஹாபுருஷர்; ஒப்புயர்வற்ற தேசபக்தர்; சுய ஆட்சி ஸ்தாபனத்தை வேரூன்றிக் கிழங்குபற்றித் தழைக்கும் படி விதைத்த உழவாளி; யாவராலும் ஜாதி மதம் தேசம் வித்தை எனும் இவைகளால் மாறுபடாத கவுரவிக்கப்பெற்ற உத்தமன்; இனி உண்டாகப்போகும் இந்தியச்சரித்திரப் பகுதிக்கு ஒரு தக்க நாயகஸ்தானத்தை வகிக்கப்பிறந்த அவதார புருஷர். இந்த அருமையான உரு நமதுகண்களைவிட்டு மறைந்துபோயினதாயினும் நமது, ஏன்? எல்லாரது சித்தத்தையும்விட்டு ஒருகாலும் பிரிந்து போகாது என்பது திண்ணம். எல்லாம் வல்ல இறைவன் அவரது ஆத்மாவுக்கு நற்கதிகொடுப்பதுடன், அவரிட்ட விதையை முளைக் கும்படியும் தழைத்துப் பருத்துப் பூத்துக் காய்த்துப் பழுத்து நாம் எல்லோரும் என்றும் அருந்திக் களிக்கும்படியும் செய்வாராக.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று." திருக்குறள்.

பத்திராதிபர்.

அரியூர் மிஸ்டர் S. சாமிநாதையரின் மரணம்.

நமது வித்தியாபாநுவுக்கு வெகுகாலம் உதவிப்பத்திராதிபராகவும் பத்திராதிபராகவும் இருந்து நடத்திவந்த எமது ஆப்த நண்பரும் வித்வானுமான மிஸ்டர் S. சாமிநாதையரின் மரணத்தைக் கேட்டு மிகவும் விசனிக்கிறோம். இவர்கட்குப் பாரிசவாய்வுநோய் மூன்று வருஷங்கட்கு முன்னமே ஒருமுறை கண்டது என்று கேள்வியாயிருந்தாலும், சென்ற 9–மாதகாலங்களாகத்தான் அந்த நோய் அவரைப்பிடித்துக்கொண்டு பிடித்துக்கடைசியில் அவரது உருவத்தை இந்த மாசம் 4—ம் தேதியில் நமது கண்களினின்றும் மறைத்து விட்டது. இவர்கள் திருச்சிஜில்லா அரியூர் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். தமது சிறுவயதிலேயே மெட்ரிகுலேஷன்பரீக்ஷையில் தேறித்திண்டுக்கல்லில் E. செஸ்டர் ஸ்கூலில் ஒருஉபாத்தியாயராகச் சில வருஷங்கள் உழைத்துப் பிறகு அந்த ஊரில் ஸ்தாபிக்கப்பெற்றுள்ள ஹிந்து ஸ்கூலில் ஒரு உபாத்தியாயராகவும் இருந்துவந்திருக்கிறார்கள். அந்த ஸ்கூல் முனிஸிபல் ஹைஸ்கூலான பிறகும் மிகவும் ஊக்கத்துடன் உழைத்திருக்கிறார்கள். 1896—ம் வருஷத்தில் மதுரை சேதுபதி ஹைஸ்கூலிலும் வெகுகாலம் வேலைபார்த்து வந்திருக்கிறார். சில வருஷங்கள் தொட்டப்பநாய்க்கனூர் ஜமீனிலும், சேதுபதி ஸம்ஸ்தானத்திலும் போதகராக (ட்யூடராக) இருந்து இளவரசினரை உத்ஸாகப்படுத்திப் படிப்பில் ஊக்கமும் தேசத்திலும் தேசபாஷையிலும் அபிமானமும் காட்டும்படிச் செய்திருக்கிறார்.

இவர்கட்கு இங்கிலீஷில் நல்ல தேர்ச்சியான பரிசயம் இருந்ததுடன், தமிழிலும் இலக்கிய இலக்கண க்ரந்தங்களின் ஆராய்ச்சி மிகுதியுண்டு. தேசாபிமானமும் மதாபிமானமும் பாஷாபிமானமும் மிகவும் வாய்ந்தவர். வர்ணாச்ரமதர்மங்களின் வரம்பு கடந்து செல்லப்படாது என்னும் பிடிவாதமான நோக்குடையவர். கம்பராமாயணத்திலும் வில்லிபாரதத்திலும் அழுத்தமான பற்றுடையவர்.

சபைகளில் தமது ரோக்கங்களை எடுத்துத் தெரிவிக்கும் போது யாதும் மன்க்கோழையின்றி வெகு ஊக்கத்துடன் தீர்மானமாகவே சொல்லும் ஆற்றல் அமைந்தவர். பெண்கட்குப்படிப்பு அவசியமென்பதை நல்ல ஆதாரங்களுடனும் அநுபவமுறைகளுடனும் எடுத்தோதும் முறையில் முற்போனவரென்றே சொல்லலாம். பெண்கல்வியைப்பற்றிப் பேசும்போதெல்லாம் அவர் ஆவேசம்கொண்டே பேசுவதைப் பன்முறையும் நாம் கவனித்திருக்கிறோம்.

சிரித்தமுகமும் அறிந்து அடங்கிய அகமும் உபசரிக்கும் தகவுமுடையவர். ஒருபோதும் அவரது முகத்தில் சினவுண்மை தெரிந்திலது. செய்யுட்குப் பொருள் கூறுங்கால் கவிஹ்ருதயத்தை அறிந்து தக்க ஆதாரத்துடன் உரைவகுக்க யாம் அநுபவித்திருக்கிறோம். அவரிடம் எப்போதும் ஆராய்ச்சிப் பேச்சேயன்றி வீண்பேச்சும் வழக்குப்பேச்சும் நாம்ஒருபோதும் கேட்டதில்லை. மூதுரை நல்வழி நன்னெறிகட்கும் தகுந்த உரைகொடுத்து வெளியிட்டிருக்கிறார்கள். உண்மையான ஒழுக்கமுடையவர். மதுரையில் தமிழ்ச்சங்கத்தை ஸ்தாபிப்பதன் பொருட்டு ஸ்ரீமான் பாண்டித்துரைசாமியவர்களுடன் மிகவும் ஊக்கங்காட்டியுழைத்தவர்களுள் இவரும் ஒருவர். அவருடன் பழகியவருள் அவரைப்போற்றாதாரும் அவருடைய சொல்லை ஏலாதாரும் இலரென்றே என்னுகிறேன். அவர்கட்கு வயது இப்போது 57—இருக்கலாமானாலும், தமது வீட்டில் தாமிருந்து நடத்தவேண்டிய சில வெண்ணங்களும் தமிழுலகுக்குத்தாம் செய்யவெண்ணியிருந்த பல காரியங்களும் முடிவடைவதற்கு முன்னமே இந்நிலவுலகினின்றும் மறையவேண்டியபடியாக ஈச்வர ஸங்கல்பம் இருந்தது. இந்தத் தென்னிந்தியாவிலுள்ள அவர்களது நண்பர்கள்பலரும், அவர்களது மரணத்தைக் கேட்பின் வருந்துவாரென்பது திண்ணம். விதிக்குமாறாக யாதும் செய்ய யாருக்கும் முடியாது என்ற ஒரேதீர்மானத்தையே நாம் அவரது பிரிவாற்றாமைக்கு ஆறுதலாகக் கொள்வதோடு, அவர்களது புத்திராதிய குடும்பத்தார்க்கும் எமது அநுதாபத்தைத்தெரிவிக்கிறோம்.

பத்திராதிபர்.

கோநகர்

ஐந்தாவது வருஷத்து ஆண்டு நிறைவுக்கொண்டாட்டம்.

கோநகர் ஞானசம்பந்த நற்சபை, வாணிமந்திர புத்தகசாலை, கற்பகவிநாயக கலாசாலை என்பவற்றின் ஐந்தாவதாண்டு நிறைவுக் கொண்டாட்டத்தை முன்னிட்டுப் பிங்களஞு வைகாசி மீ ரு. சு (1917-ஞு மேய் 18, 19) ஆந்தேதிகளில் சபை நடைபெற்றது.

அக்கிராசனாதிபதி:—திருச்சிஞப்பள்ளி சப்ஜட்ஜி பிரும்மஸ்ரீ A. S. பாலசுப்பிரமணிய ஐயரவர்கள் B. A, B. L.

அக்கிராசனாதிபதியவர்கள் முதனாளிரவே நகரத்தாரனுப்பிய மோட்டாரில் திருச்சியிலிருந்து விஜயஞ் செய்தார்கள்.

ரு உ பிற்பகல் 3½ மணிக்குச் சபையோர் மேளவாத்யத்துடன் சென்று அக்கிராசனாதிபதியவர்களைச் சபாமண்டபத்திற்கு அழைத்து வந்தார்கள். இவ்வுத்ஸவத்தைக் கண்டு களிக்கும்பொருட்டு, தேவகோட்டை மெ. அரு. நா. இராமநாதன்செட்டியார் முதலிய ஸ்ரீமான்களும் புதுக்கோட்டை ஸடேட் அதிகாரிகளும் வித்துவான்களும், ஏனையோருமாகச் சுமார் 600 பேர் கூடினார்கள். இவர்களுள் நூறுபேர் பெண்பாலர்.

வலயபட்டி வித்துவான் ஸ்ரீ திரு. இராமஸ்வாமி ஐயங்காரவர்களும் திருவையாற்று ஸம்ஸ்கிருத பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ சந்தானமையங்காரவர்களும் இன்னிசையுடன் கடவுள் வாழ்த்துக்கூறினார்கள். பண்டித ஸ்ரீ அ. கோபாலையரவர்கள் வந்தனோபசாரபத்திரமும் உள்ளூர் ஸ்ரீ அரு. ராம. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் ஐந்தாம் வருடத்து அறிக்கைப் பத்திரமும் படித்தார்கள். பின்பு அக்கிராசனாதிபதியவர்கள் நீண்ட அழகிய முகவுரை கூறியவுடன் கலாசாலையில் நன்றாகத்தேறிய மாணவர்களுக்குப் பரிசுகள் அளித்தார்கள். அருப்புக்கோட்டை ரேஞ்சுஸ்கூல்களின் சப்அஸிஸ்டெண்ட் இனிஸ்பெக்டர் ஸ்ரீ வே. முத்துஸாமி அய்யரவர்களால் சீதையின் பெருமை என்பதும், க. வி. கலாசாலை மாணவர் முரு. சிதம்பரம் வயி. வயித்திநாதன் இருவரால் ஆங்கிலத்தில் கைத்தொழிற் கல்வி யென்னும் சம்பாஷணையும், ஷை மாணவன் மு. சாமிநாதனால் நன்றியறிதல் என்பதும், ஷை மாணவன் அ. இராமனால் கொலைமறுத்தல் என்பதும் அழகாகக் கூறப்பெற்றன. அனுஷ்டானாதிகளுக்கு ஒய்வுநேரம் கொடுக்கப் பெற்று 7½ மணிக்குச் சபை கூடிற்று.

புதுக்கோட்டைக் காலேஜ் உபாத்தியாயர் ஸ்ரீ. M. சிதம்பரையரவர்கள் நந்தனர் மகிமையைப் பக்திரசம் ததும்ப எடுத்துரைத்தார்கள். ப்ரசங்கங்களுக்கெல்லாம் அக்கிராசனாதிபதியவர்கள் தனித்தனி யாவரும் ஆனந்தமடைய அபிப்பிராயங் கூறினார்கள்.

௯ உ (19—5—17) சனிக்கிழமை காலை 8 மணிக்குச் சபை கூடிற்று. கடவுள் வாழ்த்துக் கூறப்பெற்றது. பலவான்குடி ஸ்ரீ ராம. கு. ராம. இராமசாமிச் செட்டியாரவர்கள் மனத்தூய்மை என்பதையும், க. வி. கலாசாலை மாணவன் சு. மு. பழனியப்பன் ஆங்கிலத்தில் பெற்றோரைப் பேணல் என்பதையும், ஷை மாணவி சொ. வள்ளியம்மை குழந்தைகளைப் பாதுகாத்தல் என்பதையும் கேட்டோர் மனம் குளிர உபந்யசித்தபிறகு, மதுரை வித்துவான் ஸ்ரீ நா. சுந்தரேசுவரையரவர்கள் கம்பர் உபமானம் என்றெடுத்துக்கொண்டு கம்பராமாயணக்கவி சிலவற்றிலுள்ள உபமான நயங்களைக் கம்பரே நேரில் வந்து சொல்வதுபோல எடுத்து விளக்கிக் காட்டினார்கள். க. வி. க. மாணவர் சா. சுப்பிரமணியனும் சா. சாமிநாதனும் அன்னதானமும் வித்தியாதானமும் என்பதைப்பற்றி நன்றாகச் சம்பாஷித்தார்கள். பகற் போஜனத்திற்கு ஒய்வு நேரங் கொடுக்கப்பெற்றுத் திரும்பவும் பிற்பகல் 3½ மணிக்குச் சபை கூடிக் கடவுள் வாழ்த்துக் கூறப்பெற்றது. புதுக்கோட்டை காலேஜ் ஜூனியர் லெக்சரர் ஸ்ரீ. P. R. மீனாக்ஷிசுந்தரமையரவர்கள் நிஜபக்தி யென்பதையும், க. வி. க மாணவன் ராம. அருணாசலம் ஆங்கிலத்தில் இரண்டு விசயங்கள் என்பதையும், பலவான்குடித் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ வீ. குமாரவீரையரவர்கள் கல்வியின் தற்கால நிலைமை யென்பதையும் பற்றி உபந்யசித்தார்கள். அனுஷ்டானாதிகளுக்கு ஒய்வு நேரம் விடப்பெற்றுத் திரும்பவும் 7½ மணிக்குச் சபை கூடிற்று. க. வி. க. மாணவன் முரு. பிச்சப்பன் விடுமுறைநாள்கழிக்கும் விதத்தை ஆங்கிலத்திற் கூறியவுடன், மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்கள் எழுந்து பட்டினத்தடிகள் சரித்திரத்தைச் சுருங்கச் சொல்லி விளங்கவைத்து அவர்பாடிய பதினோராந் திருமுறைப்பாடல்களிலுள்ள ஆழ்ந்த கருத்துக்களைக்கேட்டோர் மனம் உருகுமாறு கூறினார்கள். மதுரை ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீ. T. C. ஸ்ரீனிவாசையங்காரவர்கள் தமிழ் நூல் ஆராய்ச்சி யென்றெடுத்துக்கொண்டு தமிழ் ஏடுகள் சேர்க்கும் விதத்தையும் அதினாலாம் நன்மையையும் கூறிக் கம்பராமாயணத்திலுள்ள அருமைப்பாடல் சிலவற்றின் பொருளையெடுத்து விளக்கி இது போலவே ஒவ்வொரு நூல்களையும் ஆராயவேண்டுமென்று கூறினார்கள்.

அக்கிராசனாதிபதியவர்கள் ஷை உபந்யாசங்களின் சாராம்சங்களையெல்லாம் திரட்டிக் கேட்டோர்மனங்குளிர அபிப்ராயங் கூறினார்கள்.

சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் வழங்கப்பெற்று மங்கலவாழ்த்து நிகழ இரவு 10½—மணிக்குச் சபைபூர்த்தியாயிற்று.

ஞானசம்பந்தன்.

:(o):

கோநகர்.

ஞானசம்பந்த சுவாமிகள் குருபூஜை.

பிங்கள ஞு வைகாசிமீ 24 (7—6—17) புதன்கிழமை காலையில் விநாயகருக்கும் சமயாசாரியர் நால்வருக்கும் மறைமுறைப்படி அபிஷேகாராதனைகள் நடந்தன. 12—மணிக்குப் பிராமண சமாராதனையும் சிவனடியார் நகரத்தார் முதலியோர்களுக்கு விருந்தும் நடைபெற்றன.

மதுரை வித்துவான் ஸ்ரீ. நா. சுந்தரேசுவரையரவர்கள், திருவாரூர் போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. K. M. சிதம்பரையரவர்கள், சொக்கலிங்கம்புதூர் மா. வா. வித்தியாசாலைத் தமிழாசிரியர் ஸ்ரீ. ரெ. இராமமூர்த்தி ஐயரவர்கள், குன்றக்குடி ஸ்ரீ. சதாசிவப்பிரமம் அவர்கள், லால்குடி ஸ்ரீ. சுப்பிரமணியசாஸ்திரிகள், பலவான்குடித் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. வீ. குமாரவீரையரவர்கள் முதலிய வித்துவான்களும் தனவைசிய சீமான்களும் விஜயஞ்செய்திருந்தார்கள்.

5:—மணிக்கு மதுரை வித்துவான் ஸ்ரீ. நா. சுந்தரேசுவரையரவர்கள் ஞானசம்பந்த சுவாமிகள் சரித்திரத்தைச் சோனைமாரி சொரிவதுபோல் யாவரும் களிகொள்ளுமாறு மிகவும் அழகாக நான்குமணிநேரம் பிரசங்கித்தார்கள். லால்குடி பிரமஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரிகள் ஷை பிரசங்கத்திலுள்ள சாராம்சங்களை எடுத்துக்கூறி வியந்து பேசினார்கள்.

இரவு 9—மணிக்குப் பிரசங்கமுடிந்ததும் ஸ்ரீ. ஞானசம்பந்த சுவாமிகள் பரிமள புஷ்பாலங்கிருதராய் முத்துப்பல்லக்கில் ஆரோகணித்து ஊருணிவலம் வந்த காக்ஷி யாவர்மனதையுங் கவர்ந்து பக்திவலையிற் சிக்கச்செய்தது.

ஞானசம்பந்தன்.

கோநகர்

ஞானசம்பந்தநற்சபை.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை.

பிங்கள ஷூ ஆனி மீ ௧௦-௨ (24—6—17) ஞாயிற்றுக்கிழமை காலையில் விநாயகப்பெருமானுக்கும் சமயாசாரியர் நால்வருக்கும் வேதவிதிப்படி அபிஷேக ஆராதனைகள் நடந்தன. 12—மணிக்குப் பிராமண சமாராதனையும் சிவனடியார் நகரத்தார் முதலியோர்க்கு விருந்தும் நடைபெற்றன.

4½—மணிக்கு மதுரை வித்துவான் ஸ்ரீ. நா. சுந்தரேசுவரையரவர்கள் ஸ்ரீ. மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரத்தைக் கேட்டோர் மனங்குளிர நான்கு மணிநேரம் அமிருதவர்ஷம் பொழிவதுபோல் உபந்யசித்தார்கள். பின்பு க. வி. கலாசாலை உதவித்தமிழாசிரியர் ஸ்ரீ. S. ஆழ்வாரையங்காரவர்கள் ஷெ. உபந்யாசத்தை வியந்து இரண்டு வாழ்த்துப் பாக்களைக் கூறினார்கள்.

9—மணிக்கு ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள், பூக்குடை நிழற்ற வெள்ளி ரிஷபவாகனத்தின் மீது இரத்தினாபரண அலங்கிருதராய் ஆரோகணித்த காக்ஷியை யாவருங்கண்டுகளித்துப் பக்திபரவசரானார்கள்.

ஞானசம்பந்தன்.

வைத்தியக் குறிப்புகள்.

இருமலில் உஷ்ணஜலத்தின் உபயோகம்.

அடிக்கடியும் காசத்தினால் வருந்துபவருக்கு திடீரென்று உண்டாகும் இருமலைத்தடுப்பதற்கு உஷ்ணஜலம் சிறந்த ஔஷதம் என்று அறியப்படுகிறது. முக்கியமாக கூடிய காசத்தில் தற்காலம் சாந்தியுண்டுபண்ணுவதற்கு இதை உபயோகிப்பது நலம். திடீரென்று வேகத்துடன் கிளம்பும் இருமல் உஷ்ணஜலத்தை இரண்டு மூன்று விழுங்குகள் உட்கொண்டவுடனே ஆச்சரியப்படும்படி தணிவடையும். இருமலுக்கு முக்கியமாக உபயோகிக்கப்படும் வேறு ஔஷதங்கள் ஜீர்ணசக்தியையும் பசியையும் கெடுத்துவிடுவது வழக்கம். ஆனால் உஷ்ணஜலமோ தேஹத்தில் இயற்கையில் நடந்தேறும் ஜீர்ணவேலை

முதலிய எச்செயல்களுக்கும் சிறிதும் விரோதம் செய்யாமல் இருமலைத், தணிக்கச்செய்யும் இயல்புடையது. இருமலின் வேகம் தோன்றும் போதெல்லாம் நன்கு கொதிக்கவைத்த ஜலத்தை உட்கொள்ளவேண்டும்.

American medicene.

குழந்தைகளுடைய அதிசாரத்துக்கு.

சில குழந்தைகளுக்கு ஸாதாரண அதிசாரமும் ஒவ்வொருஸமயத்தில் அபாயகரமான நிலைமையையுண்டுபண்ணும். ஆகவே அதிசாரம் ஏற்பட்டவுடனே, வேறு சிகித்ஸைகளுக்காகப் பிரயத்னப்படுவதற்கு முன்பாக, ஸோடா எனப்படும் உஷாக்ஷார ஸத்துவத்தை ஒரு தேக்கரண்டியளவு வீதம் கொதித்த ஜலத்தில் கரைத்து தினத்துக்கு மூன்றுவேளை உபயோகிக்கவும். இது வயிற்றில் உள்ள ஏற்பட்ட புளிப்பைத் தணியச்செய்து அதிசாரத்தையும் தடுக்கும்.

The Doctor.

கறியுப்பால் கீழ்க்குடலிலுள்ள கிருமிகளை அழித்தல்.

ஒருதேக்கரண்டியளவு கறியுப்பை இரண்டுபங்கு வெந்நீரில் கரைத்து இளஞ்சூடாயிருக்கையில் ஆஸனத்வாரத்தின் மூலமாய் இரவில் படுக்கைக்குப் போகையில் உட்செலுத்திவிடவும். மூன்று, நான்கு தினங்கள் வரிசையாகப் பிரயோகித்தால் கிருமிகள் அழிந்து விடுகின்றன.

வைத்தியகலாநிதி.

குழந்தைகளுக்கு சில வியாதிகளின் முக்கியமான குறிப்புகள்.

டாக்டர் H. C. ஹியூலியர், M. D. என்பவர் ஒரு வைத்தியப் பத்திரிகையில் அடியில் வருமாறு சில குறிப்புகள் எழுதுகிறார்:—

கக்கிருமல்:—குழந்தை திடீரென்று வாயை நன்கு திறந்து வீறிட்டு அழும்;

வயிற்றுவலி—கால்களை வயிற்றுப்பக்கமாக அடிக்கடி மடக்கிக்கொண்டு மீண்டும் நீட்டி நீட்டி அழும். முகம் சிவந்திருக்கும். அழுகை வெகு பலமாயிருக்கும். முகம் சுருங்கி வெறுப்புடையதாகத் தோற்றும்.

அபந்நியாஸஜ்வரம்:—Pneumonia fever அடிக்கடி துரிதமாகப் பக்கவாட்டில் சாய்ந்துபடுக்கும். இரண்டுகால்களையும் ஒன்றாகத் தூக்கிப்போடும். முகம்கடுகடுப்பாயிருக்கும்.

ஈளை:—முகம் ஒருவாறு மினுக்குக் கொண்டு வெறுப்புக்குறியுடன் கூடியதாயிருக்கும். விலாப்பக்கத்து மாம்ஸ பேசிகள் இழுக்கப்பட்டு முரண்பட்டிருக்கும்.

இருதயவியாதி:—முகத்தில் தென்பில்லாமல் கவலை மேலிட்டிருப்பதாகத் தோற்றும். கண்கள் விரிந்து ஏக்கமுற்றிருப்பதாக காணும். முகத்தின் மாமிஸபேசிகள் ஒருவாறு நீண்டு முகத்தை நீளமாகச் செய்திருப்பதுபோலத்தோற்றும்.

மூளை வியாதிகள்:—முகத்தில் இயற்கைக்கு விரோதமான ஏதேதோ விகாரங்கள் தோன்றும். கண்கள் மூடியிருக்கும். தலைசாய்ந்து நிற்கும். உதடுகள் ஒன்றோடொன்று சேர்ந்துகொண்டு வாய் எளிதில் திறக்கமுடியாமல் போய்விடும்.

நீடித்தஅஜீர்ணம்:—வாந்தியும் குமட்டலும் அடிக்கடி யுண்டாகும். இத்துடன் வயிற்று வலிக்குக் கூறிய குறிகளும் காணப்படும்.

சூரியகாந்தி

அநேகம் தோட்டக்கால்களில் இப்பூண்டைக் காணலாம். இதன் புஷ்பங்கள் வட்டமாகவும் விசாலமாகவும் அழகாகவும் இருக்கும்.

இதன்வித்துக்களிலிருந்து எடுக்கப்படும் தைலம் சுத்தமான நிலையில் பாதுவங்கொட்டை யெண்ணெய்க்கு அல்லது ஆல்மண்ட்(சித விருக்ஷத்தைலம்) எண்ணெய்க்குச் சமானமான குணமுள்ளது. பனி வெடியினால் கால் முதலியவற்றிலுண்டாகும் வேதனைகளில் இது மிக்க உபயோகமான தைலம்.

புதுவயல்
ஞானப்பிரகாச சபையின்
இரண்டாம்வருஷப் பூர்த்திக்கொண்டாட்டம்.

இச்சபையின இரண்டாம் வருடக்கொண்டாட்டத்திற்காக அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் மேள தாள முதலிய மங்களவாத்தியங்களுடன் அக்கிராஸனாதிபதியாகிய ஸ்ரீமான் எஸ். ஆர். எம். எம். ஸி. டி. பெத தாச்சி செட்டியார் எம். ஆர். ஏ. எஸ் அவர்கள் நகரத்தார் அவர்களால் வரவேற்கப் பெற்றார். கடவுள் வாழ்த்துக்கூறிய பின்னர், சபையின் காரிய தரிசியாகிய ஸ்ரீமான் வீர. சோமசுந்தரஞ்செட்டியாரால் வந்தனோபசாரம் பத்திரிகை படிக்கலாயிற்று. ஞானப்பிரகாச கலாசாலைத் தமிழாசிரியர் வி. துரைசாமி தேசிகர் அவர்களால் அறிக்கைப்பத்திரம் படிக்கலாயிற்று. அதன் பின்னர் அக்கிராசனாதிபதி அவர்கள் முன்னுரை பின்வருமாறு பதில் அளித்தனர்.

நீங்களெல்லோரும் ஏகோபித்து ஒரேமனதாய் என்னை அக்கிராஸனம் வகிக்கும்படி கேட்டதற்கு யான் அந்தப்பதவிக்கு அருகனல்லனென்று நான் முற்றிலும் நம்புகிறேன். என்னை விடக் கல்வியில் சிறந்தவர்கள் அக்கிராஸனம் வகித்திருப்பார்களே யானால் மிகவும் பொருத்தமாயிருக்கும். ஆனால் நீங்கள் என்னை அக்கிராஸனம் வகிக்கும்படி வேண்டிக்கொண்டதானது உங்களுடைய முழு அன்பையும் விஸ்வாஸத்தையும் காட்டுகிறதேயன்றி வேறல்ல. என் இனத்தார் மத்தியில் அக்கிராஸனம் வகிக்கும்படி வேண்டிக்கொண்டதானது யான் செய்தபாக்கியமே என்று நினைக்கிறேன் என்று மிகவும் உற்சாகத்தொனியுடன் எடுத்துரைத்தனர். அதன்பின்னர் ப்ரம்மஸ்ரீ லால்குடி சுப்பிரமணிய சாஸ்திரிகள் சண்டேசுவரநாயனார் சரித்திர தத்துவம் என்ற விஷயத்தைப் பின்வருமாறு பேசினார். சண்டேசுவரர் இளம்பிராயமுதல் கொண்டே ஜீவகாருண்யத்தில் சிறந்தவரென்றும், மாடுகளெல்லாம இவரிடத்தில் வந்து பாலைச்சுரந்து கொடுத்துவிட்டுப் போகுமென்றும், அப்பாலை இவர் ஸ்ரீ சிவபிரானுக்கே அர்ப்பணம் செய்கிறதென்றும் இப்படிப் பசுக்கள் பாலைச் சுரக்கிற விஷயத்தை அறிந்த சொந்தக்காரர்கள் சண்டேசுவரர் தகப்பனாரிடம் சொல்லவும் அவர் மகன் செய்யும் திருவிளையாடல்களைக்கண்டு மனம் சகிக்

காதவராய் நிஷ்டையிலிருக்கும் சண்டேசுவரரை காலால்உதைக்கவும், அதனல் நிஷ்டைக்குப் பாதகம் வந்ததைக் கண்ணுற்ற அவர், தன் தகப்பனென்றும் பாராமல் அருகிலிருந்த தடியையெடுத்துத் தகப்பனரின் காலைமுறித்து விட்டார். இதனல் நாம் அறிந்துகொள்ளும் தத்துவம் என்னவென்றல், யாவரொருவர் ஈஸ்வரன்பால் உண்மையான பக்தியைச் செலுத்துகிறரோ அவருக்கே மோக்ஷசாம்ராஜ்யம் கிடைக்குமென்றும் அப்படியில்லாமல் பக்தியைச் செய்யாமல் நிஷ்டையிலிருக்கும் சாதுக்களைப் பங்கப் படுத்துகின்றனே அவன் நரகலோகம் அடைவானென்றும், இதற்கு திருஷ்டாந்தமாக அநேக உபகதைகளை எடுத்து அழகாகப் பிரசங்கித்தனர். வலையப்பட்டி தமிழ் வித்வான் ப்ரம்மஸ்ரீ ராமசாமி ஐயங்கார் அவர்கள் "ஈப்போல்வலை" என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு அதில் ஒளவைப் பிராட்டியார் இயற்றியகருத்தையும் அவருடைய திறமையையும் வெகுஅழகாய் எடுத்துப் பிரசங்கித்தனர். இராமரும் பரதரும் என்ற விஷயம் ஞா. க. மாணவர்களால் ஆங்கிலத்தில் சம்பாஷிக்கப்பட்டது. செய்யுட்களெல்லாம் கலாசாலை இங்கிலீஷ் உபாத்தியாயர் மிஸ்டர் மீனுக்ஷிசுந்தரமய்யர் அவர்களால் இயற்றப்பட்டவை. சபையோர்களுக்கு எளிதில் உணரும்படியாய் மிகவும் அழகாய் அர்த்தபுஷ்டியுடன் வாய்த்திருந்தது. இல்லறவாழ்க்கை என்றவிஷயத்தை விவேகோதய உதவிப்பத்திரிகாசிரியான சகோதரி ஸ்ரீமதி வி. பாலம்மாள் பின்வருமாறு பிரசங்கித்தனர். இல்லறவாழ்க்கையே ஆச்ரமங்களி லெல்லாவற்றிலும் சிறந்ததென்றும் அதற்கு இல்லாளே மிகவும் முக்கியமானவளென்றும் இவள் புருஷன் மனப்படிச் சம்பாதித்துக் கொண்டுவந்த பொருளை மிகவும் சாமர்த்தியமாய் செலவழிக்கவும், ஒவ்வொரு சமயாசமயங்களில் தக்க புத்திமதி சொல்லுபவளாகியும் இருப்பதினலே அவருக்குப்படிப்பு சொல்லிவைக்க வேணுமென்றும் முற்காலத்திய ஸ்திரீகள் மிகவும் கற்புடையவர்களாய் இருந்ததற்குக் காரணம் படிப்பென்றும் ஆனதினல் ஸ்திரிகளுக்குப் படிப்பு ஒவ்வொருவரும் சொலலிக்கொடுக்கவேண்டுமென்றும் தக்கஉபமான உபமேயங்களுடன்எடுத்துஅழகாய்ப் பிரசங்கித்தனர்.

சொக்கலிங்கம்புத்தூர் தமிழ் வித்வான் ப்ரம்மஸ்ரீ ரெ. ராமமூர்த்தி அய்யர் ஏகாக்ரசித்தம் என்ற விஷயத்தைப் பின்வருமாறு பேசினர். ஒருபொருளைப்பற்றி (கடவுளை) கவனமற்று நிற்கும் மனம்எனப் பொருள்படும் எனவும் இம்மனம் பஞ்சேந்திரியங்களையும் வாயில்களாகக்கொண்டு அவற்றிற்கு விஷயமாகும் புறப்பொருள்களை ஆசையோடு பற்றுவதில் மிகவிரைவுவாய்த் ததெனவும் அங்ஙனம்அதுபற்றுந்தோறும் விளைவது துன்பமேயெனவும்இன்ப

மடைய விரும்புவோர் புறவிந்திரியங்களுக்கு விஷயமான வற்றுள்ள அறத்தோடு மாறுகொள்வனவற்றை முற்றும் விலக்கிப் பிறபொருள்களினும் உள்ள அவாவை நாளடைவில ஒழிக்க முயலவேண்டும் எனவும் அவாவே பிறவிக்குக் காரணமாதலால் பிறவித்துன்பத்தையும் பிறவாமையால் வருமின்பத்தையும் உணர்ந்த மேலாயினோர் யோகவுறுப்புகளாகிய இயம நியமாதி முறையே கொண்டும் பிறபயிற்சி வசத்தாலும் காமம் வெகுளி மயக்கங்களாற் சிதறிப் போகின்ற மனத்தை அது கருதியவாறே செல்லவிடாது ஹிருதயாரவிந்தத்தெழுந்தருளியிருக்கும் ஈசன்பாற் சேர்க்க, அச்சேர்க்கையில் என்றுமழியாத நித்யானந்தங் கைகூடும்; துயில்கூடுங் காலத்து மனத்திற்கு இந்திரியங்கள் சம்பந்தமில்லாமையால் ஏற்படுவது சுகமாகக் காணப்படினும் அச்சுகம் அஞ்ஞான சம்பந்தத்துடன் கூடி அறியப்படுவதாகிய தூங்காமற் றூங்குவதாகிய சுகமே சுகமென்றறிந்து அதை அடைவதற்கேற்ற மனத்தை இந்திரிய விஷய சம்பந்தமின்றி ஒருநிலைப்படுத்தல் நம்மனோர்கடமையாம் எனவும் தக்க மேற்கோட்பாடுகளுடன் எடுத்துரைத்தனர்.

ஆத்தங்குடி விவேக விளக்க வித்யாசாலைத் தலைமை உபாத்தியாயர் ப்ரம்மஸ்ரீ எம் சுப்பராமய்யர் அவர்கள் "நமதுகடமை" என்ற விஷயத்தை எடுத்து மிகவும் அழகாயப் பிரசங்கித்தனர். அதில் மேது சிறந்த தேசாபிமானிகளாகிய ஸ்ரீமதி அனிபெஸன்ட் அம்மான், மெஸ்ஸர்ஸ் அரண்டேல், வாடியா முதலியவர்கள் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருப்பதைக் குறித்தும், மேனாட்டுச்சாமான்களை வாங்குவதைநிறுத்திக் கைத்தொழிற்சாலைகளை நியமித்துநம் தேசத்துச் செல்வத்தை விருத்திசெய்து கொள்ளவேண்டுமென்றும் கைத்தொழிற்சாலைகளை திறந்து வைப்பதற்கு நகரப்பிரபுக்கள்தைரியமாய்ப் பணத்தைப்போட முன்வரவேண்டுமென்றும்மிகவும்உருக்கமாய்ப்பேசினார். உபந்யாசர்களுடைய விஷயங்களைத் தொட்டே அக்கிராஸனாதிபதி அவர்களால் பின்னுரை சொல்லப்பட்டு சபை இரவு 9-மணிக்கு நிறைவேறியது.

இரண்டாம் நாள் நடவடிக்கை.

கடவுள் வாழ்த்துக் கூறியபின்னர் சபை காலை 9-மணிக்கு ஆரம்பிக்கப்பெற்றது. கோநகர்க் கற்பகவிநாயக கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ப்ரம்மஸ்ரீ அ. கோபாலையர் அவர்கள் ஊக்கமும் முயற்சியும் என்ற விஷயத்தை மிகவும் அழகாய்ப் பிரசங்கித்தனர். திரிவாரூர் கமலாலய பத்திராதிபர் மிஸ்டர் டி. எஸ்

தியாகராஜ ஞானியார் அவர்கள் கம்பரும் சைவமும் என்ற விஷயத்தையும் மதுரை மாணவத் தமிழ்ச்சங்க அக்கிராசனாதிபதியாகிய மிஸ்டர் ம• கோபால கிருஷ்ணையர் "தேனும் தேனீயும்" என்றவிஷயத்தையும் "பெற்றோர்கடமை" என்ற விஷயத்தை சு• ப. குமரப்பசெட்டியாரும், இந்து ஸ்திரீகள் முற்கால தற்கால நிலைமை என்ற விஷயத்தைச்சகோதரி ஸ்ரீமதி வி. பாலம்மாள் அவர்களும் முறையே பேசினார்கள். ஸ்ரீமாந் தாதாபாய் நௌரோஜி காலஞ் சென்றதைக் குறித்து தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. அக்கிராசனாதி பதி அவர்கள் முடிவுரையில் மிஸ்டர் தியாகராஜ ஞானியார் பேசிய விஷயத் தில் மதத்துவேஷங்களுண்டாக்கக் கூடியதாயுள்ள அப்பேர்க்கொத்த விஷயங் களைத் தற்காலத்தில் பிரசங்கிக்கப் படாதென்றும் கம்பர் சைவராய் இருந்தா லென்ன வைஷ்ணவராய் இருந்தாலென்ன நாம் அவர் இயற்றிய நூலிலுள்ள தத்துவங்களை மட்டும் கிரஹித்துக் கொள்ளவேணுமென்றும் மிகவும் அழகாய்ப் பிரசங்கித்தனர். ஹாரசந்தனதாம்பூலாதிகள் வழங்கப்பட்டு சபை மங்களகர மாக இரவு 10 மணிக்கு நிறைவேறியது.

R. ராஜகோபாலராவ்
ப்ரஸ் ரிப்போர்ட்டர்.

கோவிலூர்

பிரம்ம வித்தியா பிரசாரண சபை

நான்காம் வருஷ பூர்த்திக் கொண்டாட்டம்.

ஸ்ரீபரமேஸ்வரனது திருவருளான் இச்சபையின் நான்காவது வருஷோத் ஸவம் நாளது பிங்கள வருஷம் ஆனி மீ 31-ந் தேதி முதல் ஆடிமாதம் 9-ம்வ ரைகாலைமாலையாகிய இருவேளைகளிலும் கோவிலூர் வேதாந்த பாஸ்கரர் ஸ்ரீ சுப்பையா சுவாமிகள் ஸ்ரீ காசிகாநந்த ஸ்வாமிகள் முதலிய சாதுக்களாலும் சாஸ்திரோத்தம பலவித்ப்ரசிகாமணிகளாலும் அரிய பெரிய விஷயங்கள் உபந் யசிக்கப்பெற்றன. தேவகோட்டைடிப்டிகலெக்டர் ராவ்பகதூர் T. N. சிவஞானம் பிள்ளை அவர்களும் தேவகோட்டை ஜமீன்தாராகிய ஸ்ரீமாந் A. L. A. R. அருணாசலஞ்செட்டியாரவர்களும் அநேக சாதுக்களும் பிராமணோத்தமர்களும் நகரப்பிரபுக்களும் சுமார் 500 பேர்களுக்கு மேலாகவே விஜயஞ்செய்திருந்த னர். சபையில் பிரசங்கிக்கப் பெற்றவிஷயங்களையும் பிரசாரகர்களுடையபெயர் களையும் இங்குக் கூறுவோம்:— (1) ஸ்தலமஹிமை (2) சாதுசங்க மஹிமை (3) ஸ்ரீ சங்கரவிஜயம் (4) புருஷார்த்தம் (5) ஜீவன்முக்திலக்ஷணம் (6) வருணா ச்ரமதர்மம் (7) பக்தி (8) வேதாந்திகளே உயர்ந்த உபாசகர் (9) சதுர்வேததாத்

பர்யம் (10) பக்தி (11) பஞ்சகோச விசாரம் (12) திரிபுடி (13) ஆகம முடிவு (14) ஸ்ரீராமபிரான் மஹிமை (15) ஸ்ரீமாணிக்கவாசகர்சரித்திரம் (16) தெய்வோபாசனை, திருப்பணிமஹிமை (17) ஈஸ்வரசங்கரப்பிரபாவம் என்றவிஷயங்களை (1) ஸ்ரீ சுப்பையயா சுவாமிகளும் (2) சிவராமலிங்கஸ்வாமிகளும் (3) ஸ்ரீகாசிகாநந்தஸ்வாமிகளும் (4) ஸ்ரீசிவராமலிங்கசுவாமிகளும் (5) ஸ்ரீ சுப்பையாசுவாமிகளும் (6) லால்குடி ப்ரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளும்

(7) குன்றக்குடி	,,	சதாசிவக்குருக்கள் அவர்களும்
(8) கோவிலூர்	,,	சுப்பிரமணிய சாஸ்திரிகளும்
(9) நீடாமங்கலம்	,,	சுப்பிரமணிய சாஸ்திரிகளும்
(10) சாக்கை	,,	கிருஷ்ணசாஸ்திரிகளும்
(11) சென்னை	,,	அருணாசலசாஸ்திரிகளும்
(12) குன்றக்குடி	,,	விஸ்வநாதசாஸ்திரிகளும்
(13) மதுரை	,,	கல்யாணசுந்தரபட்டர் அவர்களும்
(14) காரைக்குடி	,,	M. V. கோவிந்தராஜ ஐயங்காரவர்களும்
(15) வலையபட்டி	,,	திரு. இராமசாமி ஐயங்காரவர்களும்
(16) கண்டனூர்	,,	ஸ்ரீமாந். முத்துராமைய்யா அவர்களும்

(17) ஸ்ரீ சுப்பையயா சுவாமிகளும் முறையே மிகவும் அழகாகவும் தக்க ஆராய்ச்சி வாயிலாகவும் கேட்போர்களின் மனது பரவசமடையும்படி நன்கு எடுத்துரைத்தனர். வித்துவான்களுக்கும் பாகவதர்களுக்கும் வேதபாட்சாலை உபாத்தியாயர்கள் மாணவர் முதலியோர்களுக்கும் கோவிலூர் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிகர் அவர்களால் நன்கு பரிசளிக்கப்பெற்றன இச்சபையின் காரியதரிசியாகிய கண்டனூர் ஸ்ரீமாந் முத்துராமையா அவர்களின் நன்முயற்சியால் மிகவும் விமரிசையாய் நடைபெற்றது. சுபம்!

R. இராஜகோபால்ராவ்
ப்ரஸ் ரிப்போர்ட்டர்.

நாட்டரசன் கோட்டை.

வித்யாபரிபாலன சங்கம்.

திருவருட்பேற்றால் இன்று (15—7—17) மாதாந்தக் கூட்டம் கூடிற்று. சிவகெங்கை யூனியன் சேர்மன் ம-ா-ா-ஸ்ரீ A. சோமசுந்தரம் ஐயரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஷெியூர் சாமவேதம் பிர்ம்மஸ்ரீ சுந்தரசாஸ்திரிகள் "கல்வி" என்னும் விஷயத்தையும், ஸ்ரீ உ. வே. திரளி இராமய்யங்கார் "ஜடதத்துவம்!" என்னும் விஷயத்தையும், உபந்யசித்தார்கள். ஸ்ரீ உ. வே. சீதாராமையங்கார் அவர்கள் அக்கிராசனாதிபதிபேரில் ஒருவெண்பா சொன்

ஞர்கள். உபாத்தியாயர் வெள்ளைவாரணம்பிள்ளையவர்கள் "கடவுள் வழிபாடு" என்னும் விஷயத்தை பிரசங்கித்தார்கள். கடைசியில் அக்கிராசனாதிபதியவர்கள் விரிவாக முடிவுரைகூறச் சபைநிறைவேறிற்று. இவ்வூர் நகரத்தார்கள் சிவன் கோவிலுக்கு மேல்புறமுள்ள அக்கிராகாரத்தில் இரண்டு மாதங்களாக திரளி. ஸ்ரீ உ. வே. இராமையங்கார் அவர்களைக்கொண்டு கம்பராமாயணப்ரஸங்கம் நடத்திவருவதில், இன்று "ஸீதாகல்யாணம்" நடந்தேறியது. ஜனங்களும் பக்தி சிரத்தையுடன் கேட்டு வருகிறார்கள்.

இங்ஙனம்
காரியதரிசி.

புதுவயல் ஞானப்பிரகாச சபை.
(15—7—17)

இன்றையதினம் மாலை 4 மணிக்கு திருநெல்வேலி பிரம்ம ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள் அக்கிராஸனத்தின் கீழ் இச்சபை கூடிற்று. கடவுள் வாழ்த்து அக்கிராசனாதிபதி முகவுரை முதலியவைகள் கூறியபின்னர் சபைஆரம்பிக்கப் பட்டது. காரைக்குடி கம்பராமாயண ப்ரசாரக் ப்ரம்மஸ்ரீ எம். வி. கோவிந்த ராஜையங்கார் திருவிளையாடற்புராணத்தில் "தாடகைப்பிராட்டியார் திருவவதாரம்". என்ற அரியசதையை உபந்யாஸம் செய்தார். புதுக்கோட்டை பிரம்ம ஸ்ரீவைத்தியநாத ஐயர் "தமிழ்ச்சங்கமும் சங்கப்புலவர்களும்" என்ற அருமையான விஷயத்தை எடுத்து அதில் கபில சரிதத்தை மிக்க ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் செய்யுட்களால் மிகவும் நன்றாய் எடுத்துரைத்தார். அதன் பின்னர், சுதேசமித்திரன் பிரதிநிதி மிஸ்டர் ஆர். ராஜகோபாலராவ் "பத்திரிகையும் அதன்பயனும்" என்ற விஷயத்தை யெடுத்து, அதில் பத்திரிகை என்றால் என்ன? அதை ஏன் படிக்கவேண்டும்? படிப்பதனால் அடையும் லாபமென்ன? அப்படிப்படித்து யாவராவது மேன்மையடைந்திருக்கிறார்களா? என்ற விஷயங்களைச்சுருக்கமாய் எடுத்துப் பிரசங்கித்தார். அக்கிராசனாதிபதி அவர்கள் முடிவுரையில் தென்னிந்தியாவில் அதாவது தமிழ்நாட்டில் பத்திரிகையைப் படிக்கும் வரப்பிரஸாதம் மித்திரனுக்கு ஆசிரியராய் இருந்து காலஞ்சென்ற ஜி. சுப்பிரமணிய ஐயரால் செய்யப் பட்டதென்றும், பொதுஜன ஊக்கத்தையும் இராஜாங்கத்தாருக்கும் ஜனங்களுக்குமுள்ள பாத்தவ்யத்தையும் குக்கிராமவாசிகளும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு செய்வித்த மஹான் அவரே என்றும் அவருடைய பேருதவிக்கு நம்மவருள் ஒவ்வொருவரும் அவர் நாட்டிவைத்த நம்மித்திரனை வாங்கி, வாசித்து இன்புறவேண்டுமென்றும் மிக்க உருக்கமாய்ப் பேசினர். இப்பெரிய ஐரோப்பிய யுத்தத்தில் நமது நேசக்கட்சியாருக்கே ஜயம் உண்டாகவேண்டுமென்று பிரார்த்

தனை காரியதரிசியால்கொண்டுவரப்பட்டு எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது. ஹார சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்று சபை மங்களகரமாய் இரவு 8—மணிக்கு நிறைவேறியது.

R. RAJAGOPALAROW,
சுதேசமித்திரன் ஏஜண்டு,
காரைக்குடி.

ஷண்முகநாதபுரம் (ஆருவயல்)
ஷண்முகவிலாச ஸபை,
10—7—17.

இன்று மாலை 4—30 மணிக்குத் திருவருட் பேற்றால் சபை கூட்டப்பெற்று, அங்கத்தினர்கள் வேண்ட காரைக்குடி அஷ்டாவதானம். சிலேடைப் புல பிரம்மஸ்ரீ சாமிநாதையரவர்கள் அக்கிராஸனத்தமர்ந்தார்கள். அவர்கள் முகவுரை கூறிய பின்னர், காரைக்குடி கம்பராமாயண ப்ரசாரகர் பிரம்மஸ்ரீ எம். வி. கோவிந்தராஜையங்கார் கம்பராமாயணம் கையடைப்படலத்தையும் வலையபுரி தமிழ்வித்வான் பிரம்மஸ்ரீ இராமசாமிஐயங்காரவர்கள் "அன்பு" என்னும் விஷயத்தையும் எடுத்துக்கொண்டு நன்றாய் உபந்யஸித்தார்கள். பிறகு அக்கிராஸனாதிபதியவர்கள் சிலேடைப் பொருள்பட முடிவுரை கூறியபின் ஹாரசந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்று ஸபை நன்றாய் நிறைவேறியது. சுபம்!!!

அரு. சித. சுப்பிரமணியச்செட்டியார்
காரியதரிசி.

மதிப்புரை.

வேதாந்ததீபிகை:—இதனது ஆனிமாதத்திய சஞ்சிகை வரப்பெற்றோம். அதனுள் ஜகஜ்ஜ்யோதி; ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் சரித்திரம் ப்ரபந்நநிஷ்டை முதலிய வியாஸங்கள் மிகவும் அருமையாக எழுதப்பெற்றிருக்கின்றன.

ஒளவை (ஒரு சிறு தமிழ் வாசகநூல்) இது வேலூர் வூர்ஹீஸ் காலேஜ் பிரதம தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் அவர்களால் எழுதப் பெற்று, ஜநோபகாரி ஆபீஸாரால் பிரசுரிக்கப்பெற்றது. இதனுள், நம் தமிழ் மூதாட்டியாகிய ஒளவைப் பிராட்டியாரது சரிதம் மிகவும் விரிவாகவும் தக்க ஆதாரங்களுடனும் எழுதப்பெற்றிருக்கிறது. இச்சிறு நூல் பள்ளிக்கூட

மாணவர்கட்கு அத்யாவச்யமான உதவி புரிவதுடன் ஏனையோர்க்கும் பயன் தந்து நிற்கும். பிரதிதினம் அம்மூதாட்டியினுடைய வசனங்களையே உச்சரித்துக்கொண்டிருக்கும் நம் தென்னாட்டில் உள்ளயாரும் அவ்வம்மையாரது சரித்திரத்தை அவசியம் தெரிந்திருக்கவேண்டிய தாகையால், இதனை யாவரும் எளிதில் பெறும்படி இதன் விலை அணா 0—6—0 ஆகவே ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது. எல்லாரும் வாங்கிப்படிக்கவேண்டியது அவச்யம். வேண்டியவர்கள், வேலூர் ஜனோபகாரி ஆபீஸ் மானேஜருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

பொதுக் குறிப்புகள்.

கிராமாந்தரங்களில பொது அறிவை விருத்திசெய்தல்.

சௌக்கியம் சுகாதாரம் விவசாயம் ஐக்கியம் முதலிய பல விஷயங்களைப் பற்றி நாட்டுப்புறங்களிலுள்ள ஜனங்களுக்குத் தேசபாஷைகளில் பிரஸங்கஞ் செய்து அவர்களுக்குப் பொது அறிவை விருத்திசெய்வதற்காகக் கொச்சி சமஸ்தான அதிகாரிகள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தப்பிரசங்கங்களெல்லாம் கிராமாந்தரங்களிலுள்ள கல்வியறிவற்ற ஜனங்களுக்குத் தெளிவாய் விளங்கும்படித் தக்க மனிதர்களைக்கொண்டு செய்விக்கப்படும் என்று தெரிகிறது. இதுபோல் மற்ற இடங்களிலும் ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமாகும்.

ஒரு ஜோஸ்யம்.

ஜப்பானில் பலவித உத்தியோகங்களை வகித்தவரான யூஷோ தமா மோட்டோ என்பவர் ஜோஸ்யசாஸ்திரத்தில் மிகுந்த தேர்ச்சியுள்ளவர். இப்போது நடக்கும் ஐரோபியயுத்தத்தைப்பற்றி 1912-ம் வருஷத்திலேயே இவர் கூறியிருக்கிறாராம். அவர் இந்த யுத்தம் 42-மாதம் நடக்குமென்றும், அந்தப்படி அடுத்த ஆகஸ்டுமாதத்திற்கும் நவம்பர் மாதத்திற்கும் இடையில் யுத்தம் முடிந்து விடுமென்றும் நவம்பர் மாதத்தில் நேசராஜாங்கத்தாரின் சேனைகள் ஜர்மனியின் தலைநகரமான பெர்லின் பட்டணத்தைக் கிட்டிவிடுமென்றும் கூறுகிறார். கிறிஸ்தவர்களின் வேதமான பைபிளில் இந்த விஷயங்கள் குறிப்பாகக் காணப்படுகின்றனவென்று அவர் சொல்லுகிறார். 1920—ம் வருஷத்தில் ஜப்பான் சீனா அல்லது வேறு ஒரு தேசத்துடன் சண்டை செய்ய நேரிடுமென்றும் அது சீனாவுடன் ஐக்கியப்பட்டு ஒத்துவாழ்தல் நல்லதென்றும் அவர் கூறுகிறார். அவர் இன்னும் ஒரு பெரிய யுத்தம் வருமென்று கூறுகிறார். அது மிகப் பெரிய யுத்தமாயிருக்குமென்றும், அது ஜர்மன் சக்கிரவர்த்தியின் குமாரரால் நடத்தப்படுமென்றும் இது முடிந்தபின் உலகத்தில் சமாதானமே பரவுமென்றும் அவர் அபிப்பிராயப்படுகிறார். இந்த வருஷமுதல் ஒரு புதிய யுகம் தொடங்குகின்றதென்றும் அவர் கூறுகிறார்.

திராவிடபத்திரிகை.

உ

கணபதி துணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."—திருக்குறள்.

தொகுதி 9. | பிங்கள௵ ஆடிமீ August. 1917. | பகுதி 7.

கல்வியும் ஒழுங்கும்.

நமது பானுவின் முந்திய ஸஞ்சிகையில் "கல்வியும் மதமும்" என்று எழுதப்பெற்ற வியாஸத்தினால், ஒவ்வொரு தேசத்துக்கல்வி முறையும் அவ்வத் தேசத்து மதக் கொள்கையுடன் போதிக்கப்பட வேண்டியனவாக இருக்கின்றன வென்பது ஒருவாறு கூறப் பெற்றது. இனி அதனை யநுசரித்தே இந்தமாத ஸஞ்சிகையில், அம்மதக்கொள்கைகளில் மாணவர் பழகவேண்டிய ஒழுங்குகளை முறையே சொல்லிவருவாம்.

பெரியோரது அபிப்பிராயமாகச் சொல்கிறோம்; கீழ்வரும் ஒழுங்குகளை அவசியம் ஒவ்வொருவரும் அநுஷ்டிக்க வேணடுவது. இவை இந்தத்தேசத்து மதக் கொள்கைகளைப் பெருக்கியமைக்கக் கூடியனவாக இருக்கின்றன.

1. முதலில், பள்ளிக்கூடமாணவர்களின் நடத்தைகள் முற்றிலும் உபாத்தியாயரினது. இயற்கையையும் நடத்தையையும் பின்பற்றக் கூடியனவாகவே இருக்கின்றன. ஆகையினால் உபாத்தியாயர்களின் நடத்தைகளைக் கவனித்துத் தேர்ந்தே அமர்த்தவேண்டும். அவர்கள் சுதேசக்கல்வியில் ஆர்வமுடையவர்களா வென்று நன்கு ஆலோசிக்கவேண்டும். அப்படியிருந்தால், அவர்கள் மாணவர்களைத் தேசமுன்னேற்றத்துக்குத் தக்கவராக்க முயல்வார்கள்.

2. கலாசாலைகூடும் காலங்கள், பூர்விக ஆசாரப்படிக் காலையிலும் மாலையிலுமே ஏற்படுத்தப்படல் வேண்டும். இந்த முறையை இப்போது ஆரம்பிக்கப்புகுந்தால், முதலில் கஷ்டமாகத்தான் தோன்றும். இப்போது அமைத்திருக்கிற படியே, 10 மணிப் பள்ளிக்

கூடமாகவே யிருந்தால், மாணவர்க்கு மிகுந்த கஷ்டமாகவே முடியும். ஏனெனில், நமது தேசம் அதியுஷ்ணதேசமாதலால், வெயிலில் கலாசாலைக்குப் போவதும் பாடந்தருவதுமான வேலை அதிகக் கஷ்டமாகவேமுடியும். தவிரவும், அந்தப் பத்துமணிக்கே பகலுணவை எடுத்துக்கொள்ளும்படி நேரிடுகிறது; இது அவர்கட்குச் சோம்பலையே தந்திடும் என்று எண்ணுகிறேன்.

3. மாணவர்களை ஸாதாரண இந்திய உடையுடன் தேகத்தைப் போர்த்துக்கொண்டுவரும்படி உத்தரவு அளிக்கவேண்டும். தற்கால மாணவர்க்கு, இங்கிலாந்தினரைப்போல உடை தரித்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசையுண்டாயிருப்பது ஒரு ஆச்சரியமாகாது. எனினும், அவ்வுடைகள் ஏழைகளுக்கு முடியாதனவாகவும் தனிகர்களுக்கும் கஷ்டசாத்தியங்களாகவும் இருக்கின்றன.

4. ஒவ்வொரு கலாசாலையிலும் மதப்படிப்பைப் போதிக்கக் கூடிய ஒரு வகுப்பை ஏற்படுத்தி, மதக்கலகமில்லாது எல்லா மத வுண்மைகளையும் எடுத்துச் சொல்லவேண்டும். இதனால் மாணவர்கள் தமது மதக்கொள்கைகளை அறிந்துகொள்வதுடன் பிறமதக் கொள்கைகளையும் தெரிந்து மதத்வேஷம் செய்யாதபடி பழகிவருவார்கள்.

5. மாணவர்கட்கு "வீட்டுவேலை" என்று ஒன்றும் கொடுக்காமல் அவ்வேலைகளைப் பள்ளிக்கூடங்களிலேயே செய்துதரும்படியான ஒரு காலமும் ஏற்படுத்தி நல்வழித்திருத்தல்வேண்டும்.

6. தொழிற்கல்விகளைப் போதிக்கக்கூடிய பிரயத்தனங்களும் ஸாதனங்களும் ஏற்படுத்தப் பெறல் வேண்டும். இம்முறை அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. எந்தமாணவனுக்கு எந்தத் தொழிலில் ஆசையும் பழக்கமும் உண்டோ அம்மாணவனுக்கு அந்தத் தொழிலையே கற்பிக்கவேண்டும். அப்போதுதான் மனோசக்தியும் தேஹசக்தியும் ஒருபடியான பழக்கத்தை யடையும். அன்றியும் மாணவன் தனது ஓய்வு காலங்களை இத்தொழில்களிலேயே

செலவு செய்யும்படி தொழிலுக்கென்று தனியிடமும் அமைக்கப் பெறல் வேண்டும்.

7. தேகப் பயிற்சியும் கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்படல் வேண்டும், இந்தப் பயிற்சியையும் நமது பூர்விக முறையை அநுசரித்து நடத்துதலே மிகவும் பிரயோஜனகரமாகும்.

8. மாணவர்களில் அறிவும் அடக்கமும் ஆற்றலும் அன்பும் கூடிய ஒருவனைச் சட்டம்பிள்ளையாக ஒவ்வொரு வகுப்பிலும் நியமித்து, அவன் வழியில் யாவரும் நடந்து வரும்படி மற்றவர்களுக்குச் சொல்லி, அப்படி நடந்து வருகிறார்களாவென்று அடிக்கடிக கவனித்து வரலும் வேண்டும். அம் மாணவனும் உபாத்தியாயரிடம் அன்பும் மற்ற மாணவரிடம் அருளும் கொண்டு தான் தீயவழி செல்லாமலும் மற்றாரும் செல்லப் பார்த்திராமலும், நேருமாயின் தான் அம்மாணவனுக்குத்தக்கஉபாயங்களாற் சொல்லியோ அன்றி உபாத்தியாயரிடம் சொல்லியோ அக்கெடுமாணவனைத் திருத்த முயலவேண்டும்.

9. தான் கல்லாததை மற்றவர்க்கு யாவரும் கற்பிக்க முடியாதவராவார். ஆதலினால் உபாத்தியாயர்களும் அன்றைய அன்றைய பாடங்களை நன்கு ஆலோசித்து படித்த பின்னரே மாணவர்க்குப் போதிக்க வேண்டும். அப்போதுதான் இவரும் அநுபவித்துச் சொல்லலாம்; அவர்களும் கவனித்துக் கேட்டுப் படிக்கலாம்.

10. கூடுமானால் ஏழைகட்கும் மந்தமதிகளுக்குமென்று இராப் பாடசாலை யொன்றேற்படுத்தித் தக்க உபாத்தியாயரைக் கொண்டு போதிப்பிக்கச் செய்யலாம்.

11. பலவிதமான தேசாபிமான வழிகளிலே அவர்கள் பழகி வரவேண்டிய மார்க்கங்களையும் தேடிச் செய்வதே கடமையாக மதிக்கவேண்டும். தேசாபிமானமும் தேசக்கூட்டுறவும் மதாபிமானமும் மதத்வேஷமின்மையுமே மாணவர்க்கு உறுதியிலையாகக்

கற்பிக்கவேண்டும். கலாசாலை ஒருபெரிய குடும்பமாகவும் மாணவர்கள் அக்குடும்பத்தின் அவயவிகளாகவும் இருந்து ஒற்றுமையுடன் பழகிவந்தார்களானால், பிறகு தேசக் கூட்டுறவிலே அவர் நுழையும்போது வேற்றுமையின்றியருளுடையவராகிப் பலரையும் பாதுகாக்கக்கூடிய தன்மையுடையவராகவும் மாறுவார். ஒருகுடும்பத்தில் ஸந்தோஷம் நிலைத்திருக்க வேண்டுமானால், அக்குடும்பத்திலுள்ள பலஅவயவிகளும் ஒற்றுமையுடன் உழைத்துவர வேண்டுவதுபோலவே தேசத்துக்கு அவயவிகளாகிய ஒவ்வொரு மாணவரும் தமது கலாசாலை மாணவருடன் ஒருபோதும் எக்காரணத்தைக் கொண்டேனும் கலகம் செய்யாதவராகிப் பரோபகார சிந்தையுள்ளவராகப் பழகிவந்தார்களானால், தேசப்பொது நன்மைக்குப்பாடுபடும் தொழிலில் மிகப்பழக்கமுடையவர்களாக வெளிவருவார்கள். இதுதான் தேசாபிமானமென்பதுமாகும்.

இப்படியாகப் படிப்பிக்கும் முறையே மனுமுறையை யுயர்த்துவதற்கு ஏற்றதொரு அஸ்திவாரமாகும். கல்வியைத் தேசஉழைப்புக்குக் காரணமானதென்றே நினைத்துக் கற்பித்தல் வேண்டும். கல்வியென்பது நமது இருதயத்தில் அடங்கியுள்ள தெய்வ சக்திகளை வெளிப்படுத்தக் கூடிய தூண்டுகோலாகும். அந்தத் தெய்வ சக்தி வெளிப்படுமானால் தேசத்தின் பொருட்டுத் தன்னயம் கோராமல் உலகத்துக்கு உதவிபுரிவதில் முன்னேக்குடையவராக இருப்பார்கள். அப்போதே தமக்கும் தமது தேசத்துக்கும் நன்றுசெய்தவர்களாவார்கள். இந்த முறையைக் கற்பிக்க வேண்டுமாயின், உபாத்தியாயரும் தமது சுகம் கருதாதவராகவும் கிடைத்தது கொண்டு திருப்தியடைபவராகவும் இருந்து உழைக்க வேண்டும். இவரிடம் பழகி வெளிவந்த மாணவர்கள் "எனது தேசத்துக்கு என்னால் செய்யக்கூடியவுதவியென்ன?" என்று எண்ணக்கூடியவர்களாக இருப்பார்களே யன்றி, "நான் எப்படி பணக்காரனாகலாம்" என்று கருதக்கூடியவர்களாக இருக்கமாட்டார்கள். ஒருவன் தனது வயிற்றையே நிரப்பிக்கொள்ளும் பணக்காரனுவதினும் உலகத்தாருக்கு உபகாரஞ் செய்தலைக் கடமையாகக் கொண்ட ஏழையாக இருப்

யதே மேலானதாகுமென்று எண்ணுகிறோம். இப்படி நமது தேசம் நமது தாய்ப்பாஷை நமது புண்யமதம் நமது ஸதாசாரம் என்று அபிமானம் கொண்டு ஒழுகுவது மாணவரிடம் என்றைக்குத் தோன்றுகின்றதோ அன்றைக்கே நமது தேசமுன்னேற்றத்துக்கு அஸ்திவாரக்கல்லை நாட்டி விடலாம்.

ஆகையால் பெற்றோர்களே! கலாசாலை யதிபர்களே!! தலைமை யுபாத்தியாயர்களே!!! கல்வி முறையில் நமது தேசமுன்னேற்றத்துக்கு ஸாதனமான இதனைப்போன்ற இன்னும் தக்கஸாதனங்களைக் கொடுப்பீர்களென்று மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பத்திராதிபர்.

பழையனூர் நீலி.

" இன்னும் புகழ்நிற்க வோர்பழிக் காமற் றெழுபதின்மர்
துன்னுந் தழல்புக் கொளித்ததெல் லாஞ்சுரு திப்பொருளா
யுன்னும் புரிசைத் திருவாலங் காட்டி னுரைபதிக
மன்னுந் தமிழில் வகுத்ததன் றேதொண்டை மண்டலமே " (8).

பொழிப்புரை.

இக்காலத்தும் புகழ்நிற்குமாறு (தாம்நீலியென்பவட்குப்பரிந்து ஓர் செட்டியின்பால் செய்த) ஓர் பழிக்காக வேளாளர் எழுபது பேரும் தீப்பாய்ந்திறந்தசெய்தியனைத்தையும், மதில்சூழ்ந்த "*திருவாலங்காட்டில்" திருஞானசம்பந்த நாயனார் † "திருக்கடைக்காப்புப் பதிகத்தில்" நிலைபெற்றும், தமிழில்பெய்து அவை வேதப்

---

* இது சென்னப்பட்டணத்துக்கு மேற்கே 37 மைல் தூரமுள்ள திருஆலங்காடு என்னும் ரயில் ஸ்டேஷனுக்கு வடகிழக்கு 3. மைல் தூரம்.

† " துஞ்ச வருவாருந் தொழுவிப் பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப் பாரும் வழுவிப்போய்
வஞ்சப் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூ ராலங் காட்டெம் மடிகளே" (திருஞானசம்பந்தர்)

பொருளாய் விளங்கப்பெறுவதும் தொண்டை மண்டலம்.

வரலாறு.

நீலியென்பவள், பழையனூரிலிருந்த ஒருவணிகன் மனைவி. இவள் விவாகமாகிச் சிறிது காலத்தில் அகாலமரணத்தால் இறந்து திருவாலங் காட்டிலே பேயாய்த்திரிவாளாயினாள். ஒருநாள் இவளுடைய நாயகன் காஞ்சிபுரத்திலிருந்து இக்காட்டு வழியே தனித்துச் செல்லும்போது இந்நீலிப்பேய் அவனுடைய இரண்டாம் மனைவியைப்போல வடிவங்கொண்டு ஒருகள்ளிக் கட்டையைப் பிள்ளையாக்கி இடையிலே தாங்கிக்கொண்டு அவனைத் தொடர, அவன் அவ்வடிவத்தைப் பேயெனநிச்சயித்து அப்பேயினது வஞ்சமொழிக்கிணங்காது ஓடினான். பேயும் "இது முறையோ! இது முறையோ!! என்னைக் காட்டில் தனியே விடுத்து அகலக்கருதினீரே" என்று அழுதுகொண்டு பின்தொடர்ந்து ‡ பழையனூரடைந்து அங்கே அம்பலத்திற் கூடியிருந்த வேளாளரிடத்திற் சென்று தன்வழக்கைச்சொல்லிற்று. அம்பலத்து வேளாளர் இருவர் வழக்கையுங்கேட்டுப் பேயைப்பார்த்து நீ கூறுவதற்கு சாக்ஷியாதென்றுவினவ, பேய், "இப்பிள்ளையைவிடுகின்றேன் அது அப்பாவென்றழைத்துத் தந்தை மடிமீது ஏறுதோ பாருங்கள்" என்று கூறிவிடுப்ப, அப்பிள்ளை அவ்வாறுசெய்ய வணிகன், இது பேய்க்கூத்தென்றான். அதுகேட்ட வேளாளர், இவளால்உன்றுயிர்க்குஏதேனும் இறுதிநேருமாயின் இங்குள்ள எழுபதின்மரும் உயிர்மாய்வோம். நீயும், இவளுமாக இவ்வறையினுட் போய்ச் சிறிதுநேரம் பேசிவாருங்கள் என்று சொல்ல, அப்பொழுது இருட்டிய மாலைக்காலமாதலால் வணிகன், அவர்கள் சொல்லை மறுக்க முடியாதவனாகி அறையினுட்செல்ல, பேயுந்தொடர்ந்து உள்ளே புகுந்து கதவடைத்து முன்பழிக்கீடாக அவனுயிரைப் பருகி மறைந்தது. வேளாளர் எழுபதின்மரும் விடிந்தபின் கதவைத்திறந்து பார்த்து மிகவருந்தித் தம்மாலிறந்த வணிகன் பொருட்டுத் தாங்கூறிய உறுதி

‡ இது திருவாலங்காட்டுக்குக் கிழக்கு ஒரு மைல் தூரத்திலிருக்கிறது.

மொழிப்படி அறுபத்தொன்பதின்மரும் § தீப்பாய்ந்து உயிர் துறந்தனர்.

இங்ஙனம் தீப்பாய்ந்திறந்து தங்கள்சத்தியத்தைக் காத்த வேளாண்மக்களது புகழை ஆசிரியர்.

" தாயினு நல்ல தலையுடை யோர்கடமதுடலம்
வீயினுஞ் செய்கை விடுவர்கொல் லோதங்கண் மெய்முழுதுந்
தீயினும் வீழ்வார் "........எனத்தமது சதகத்தின் 14-வது செய்யுளின்
முற்பாதியிலும், ... " அக்கஞ் செந்தழலிற்
றோய்ந்திட் டவருக்குச் சர்வாங்க முந்திரி தூள்படவே
மாய்த்திட் டவர்க்கரி தோவெளி தோதொண்டை மண்டலமே "
என 16-வது செய்யுளின் பிற்பாதியிலும்,

தீப்பாய்ந் திறந்த அறுபத்தொன்பதின்மர்போக வயலுழவுக்குச் சென்றிருந்த எஞ்சிய ஒருவர், இச்செய்தி கேட்ட வப்பொழுதே உழகின்ற கொழுவினால் குத்திக்கொண்டுயிர் விடுத்ததை

" விழுவே னெனச்சென் று வீழ்ந்தாரி லோர்மைந்தன் வேறுபட
வுழுவேலி யிற்சென் றெருநீலி முன்கை யுடையவற்குக்
கொழுவே படைக்கல மென்றுசொல் லாமுனங் கூறியசொல்
வழுவே யெனப்பொன்று வல்லாள னுந்தொண்டை மண்டலமே"

என இச்சதகத்தின் 37-வது செய்யுளிலும் விளக்கிச் செல்லும் உண்மை பெரிதும் பாராட்டத் தக்கன.

" இவ்வாறு வேளாளர் எழுபதின்மரும் தீப்பாய்ந்திறந்த பெரும்புகழ் அக்காலத்துத் தமிழ்மக்க ளெல்லாரையும் வியப்புறுத்

---

§ " மாறுகொடு பழையனூர் நீலி செய்த
வஞ்சனையால் வணிகனுயி ரிழப்பத் தாங்கள்
கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக்
குழியிலெழு பதுபேரு மூழ்கிக் கங்கை
யாறணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்ப
ரண்டமுற நிமிர்ந்தாடு மடியின் கீழ்மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மாற்
பிரித்தளவிட் டிவளவெனப் பேசலமோ" (சேக்கிழார் புராணம்)

திபது போலவே சேரசோழ பாண்டியர்க்கும் அதிசய மூட்டியது. அவர்கள் மூவரும் அத்தீக்குழியை நேரிற்கண்டு மனமுருகி அவ் வேளாளர் பெருமையை ஒவ்வொரு வெண்பாவால் புகழ்வ ராயினர்.

" தமிழ் நாவலர் சரிதையில் " " பழையனூரார் பழிதீர்த்த தீக்குழி அவியாதெரிய மூவ்வேந்தரும் வந்துபார்த்துப் பாடியவை " என்னுந்தலைப்பின் கீழ் அம்மூன்று இனிய வெண்பாக்கள் காணப்படுகின்றன.

சேரன்.

" யாவரே காராளர் யாவ ரிணையாவர்
நாவலோ நாவலோ நாவலோ—கோவைப்
பொருப்பா லமைத்தார்க்குப் போதுமே யுண்மை
நெருப்பா லமைத்தார்க்கு நேர் " (1).

சோழன்.

" எல்லை பலகடந்திட் டெக்கும் புகழ்பூத்த
தொல்லை மனுக்காகத் தோன்றிற்றே—கொல்லை
வழியிலொரு பேய்நின்று வஞ்சனையாற் செய்த
குழியி லெழு செந்தீக் கொழுந்து " (2).

பாண்டியன்.

" பிழைத்தாரோ காராளர் பேய்மகள்சொற் கேட்டுப்
பிழைத்தாக எல்லர்பிழை தீர்த்தார்—பிழைத்தார்கள்
எல்லாருங் காண எரியகத்தே மூழ்கினர்
எல்லாரு மின்று முளர் " (3).

இப்பாடல்கள், வேளாளர் சத்தியத்தைக் காத்தது பற்றி எவ்வளவு உருக்கங் காட்டுகின்றன என்பது அறிந்து மகிழத் தக்கது.

இங்ஙனம்,
சி. கு. நாராயணசாமி முதலியார்.
கோயமுத்தூர்.

மூலரோகம்.

இந்த ரோகமானது ஆஸனவலிபங்களில் கருணைக்கிழங்கின் முளைகள் போலும் முளைகள் புறப்படுங்காரணத்தால் மூலரோகமெனப்பெயர்பெற்றது.

இதற்கு வடமொழியில் அர்ச்சஸ் என்று பெயர். இது ஆறு வகைப்படும். அவை:—வாதார்ச்சஸ் பித்தார்ச்சஸ் கபார்ச்சஸ் ஸந்நிபாதார்ச்சஸ் ஸம்ஸர்க்கார்ச்சஸ் ரக்தார்ச்சஸ் என்பனவாம்.

பொதுவாக வேறுவகையில் நான்கு விதமாகவும் கூறப்படும். அவை:—ஸஹஜார்ச்சஸ் உத்தரகாலஜார்ச்சஸ் சுஷ்கார்ச்சஸ் ஆர்த்ரார்ச்சஸ் என்பன.

1. ரோகமுள்ள தாய்தந்தைகள் வழியாகப் பிறப்பது ஸஹஜார்ச்சஸ்.

2 கார்ந்த வஸ்துக்கள் அதாவது அதிக காரம், நன்கு பாகம் செய்யப்பெறாத ரஸபாஷாணாதி மருந்துகள் இவற்றை உட்கொள்ளுதல், நீண்டகவலை, கொடூரசிந்தனை, சிறுபிழையையும் பெரிதாக நினைந்து வருந்துதல், அசூயை, பொறாமை ஆகிய இவற்றாலும் அதிக ஸம்போகத்தாலும் தோன்றுவதற்கு உத்தரகாலஜார்ச்சஸ் என்று பெயர்.

3. இரத்தம் சீழ் முதலியன எப்போதும் பொசிந்து தோன்றியிருப்பதற்கு ஆர்த்ரமூலம் என்று பெயர்.

4. இரத்தம் சீழ் இவையில்லாமல் சுருங்கியிருப்பதற்கு சுஷ்கார்ச்சஸ் என்று பெயர்.

இந்த ரோகத்தின் செய்கைகள்:— அக்கினிமந்தம், மலபந்தம், அடித்தொடைச்சதையிலும் கணுக்கால்களிலும் அதிக வேதனையைக் கொடுத்தல், ஆயாசம், தேகம் நாளுக்குநாள் இளைத்தல், கண் அதப்பு மலம் சரியாகவும் தாராளமாகவும் வராதிருத்தல், சிறுகச் சிறுகக் கடுப்போடு வெளியாகுதல் அபான வாய்புண்ணுண்டாகுதல், எப்போதும் நாபிக்குக் கீழ் இரைச்சலிருத்தல் ஆகிய இவற்றைச் செய்யும்.

இந்த ரோகத்திற்கு மூலத்தில் வாயுதங்கி நிற்பதே காரணமா கின்றது. இது கீழ் நோக்கியிருந்தால் மலத்தைத் தாராளமாய் வெளியேற்ருமல் கடுப்பைக் கொடுப்பதும் மேல்நோக்கும்போது புளியேப்பம்,இளைப்பு,முதுகு மார்புகளில் குற்றல். எந்தக் காரியத்தி லும் புத்திசெல்லாமை, சோம்பல்,தேஹத்தில் வேறு நிறமுண்டாக் கல், அயர்ச்சி, துர்ப்பலம், கோபம் இவைகளைச் செய்வதும் ஆகும்.

எந்த மூலரோகிக்கேனும் கைகால் நாபி ஆஸனம் பீசம் முகம் இவ்விடங்களில் வீக்கம் கண்டால் அது அஸாத்யம் என்று உணரப் படும்.

மூலரோகிகள் முன் எச்சரிக்கையாகவே மருந்து சாப்பிட்டுச் சவுக்கியம் செய்துகொள்ளவேண்டியது.

லேகியங்கள் சூர்ணங்கள் க்ஷாரத்ரம் அதாவது ஆயுதப்பிரயோ கம் க்ஷாரம் அதாவது மூலிகைகளின் உப்பு இவற்றைக்கொண்டு சிகித்ஸை செய்துகொள்ளவேண்டியது.

ஸாரங்கதா ஸம்ஹிதையில் க்ரநாதன் என்பவரால் சொல்லப்பட் டிருக்கிற காஸீஸாதித்தைலம் அதாவது அன்னபேதியை ஆதியாக வுடைய தைலத்தை ஆயுதப்பிரயோகமின்றியே மேல் தடவுவத னுலே குணத்துக்கு வரும்; முளைகளும் விழுந்துவிடும்.

இதற்கு முக்ய பத்தியம்:—அதிக காரம் கூடாது. வாயுவை யுண்டாக்கும் ஆகாரம்கூடாது. இரத்தம் மலத்துடன் விழுந்தால் லாக்ஷாக்ருதமும் அதாவது கொம்பரக்கு நெய்யும் உபயோகப்படுத் தலாம்.

அ. சௌமிய நாராயணையங்கார்.

உலோகவகையால் புஸ்தகங்கள்.

இப்போது காலம் இருக்கும் நிலையையறிந்து, ஒருவர் பின் வரும் விஷயத்தைச் சொல்கிருர். "இனிமேல் புஸ்தகங்கள் காகித த்தினுல் ஆக்கப்படாமல், நிக்கல் எஃகு முதலிய லோஹங்களினுல் ஆக்கப்படப்போகின்றன. இதற்குக் காரணம்:—தற்போதைய யுத்

தத்தினால் உண்டாயிருக்கும் காகிதப்பஞ்சமும், ஜனப்பெருக்கினால் காடுகள் அழிக்கப்பட்டு நாடுகளாக்கப்படுவதனால் உண்டாகும் மரச் சூழ்ப்பஞ்சமும் தாம் ஆகும்."

இதைச் சொல்கிறவர் யாரெனில், மிஸ்டர் தாமஸ் A. எடிஸன் என்பவர் ஆவார். இவர்தாம் போனக்ராப் என்னும் அற்புதக் கருவியைக்கண்டு பிடித்தவர். இவர் இன்னும் பின் வருமாறு சொல்கிறார். "மின்ஸார ஸம்பந்தம்பெற்ற ஓர் ரஸவாத மருந்து வகையால், எஃகு தாமிரம் அல்லது நிக்கல் ஆகிய இவற்றின் தகடு களில் அச்சுக்கு உபயோகப்படுத்தப்பெறும் மையினை (மசியை)ப் பொருந்தச்செய்யக்கூடும். இந்த மூன்று உலோஹங்களிலும் நிக் கல் என்னும் தாதுப்பொருளே காகிதம் போல் உபயோகத்துக்கு வரும் என்று எண்ணுகிறேன். இதனை, ஒரு அங்குலத்தின் (20000) இருபதினாயிரத்தில் ஒருபங்கு கனமுள்ள தகடாகச்செய்யலாம். இத்தகடு ஸரஸமாகவும் ஒடியாததாகவும் வளையக்கூடியதாகவும் உபயோகிக்கப்படலாகும்."

"இரண்டு அங்குல கனமுள்ள ஒரு புஸ்தகமாக்கப்பட்டால் அது ஒரு பவுண்டு நிறைக்கு மேல் பளுவாக இராது."

"நிக்கல் தகடுகள் காகிதத்தைப் போலவே மசியை உறிஞ்சக் கூடிய தன்மையுடையன. ஆனால் இதற்கு உபயோகிக்கப்பெற வேண்டிய மசியானது சாதாரண காகிதமசியைக் காட்டிலும் வேறு வகையான கூட்டுப்பொருள்களால் ஆக்கப்பெறல் வேண்டும். இந்த மசியை வெகு சுலபத்தில் செய்துவிடலாகும். நிக்கல் தகடுகள் எந்தவித வர்ணமைகளையும் ஏற்றுக்கொள்ளும். வழவழப்பான காகிதங்களில் பதிக்கப்பெறும் அழகான சித்திரங்களையும் இந்த நிக்கல் தகடுகளில் நன்றாகவும் அழகாகவும் பதிக்கலாம். ஆகக் காகிதத்தினால் செய்யக்கூடிய எவ்வகைசசாதகமும் இந்த நிக்கல் தகடுகளால் செய்து கொள்ளலாம்."

அவரது ஔஷதசாலையில் இந்தலோஹத்தினால்செய்யப்பெற்ற காகிதம் இருக்கிறது. இதனைப்பற்றி அவர் இன்னும் சொல்லுகிறார். "இந்த விதமான நிக்கல் தகட்டில் ஐந்து சதுர அடி செய்வதற்கு

ஒன்றரை நிமிஷம் தான் ஆகிறது; ஆக ஒரு நாளில் கால்டன் நிறையுள்ள தகடுகளைச் செய்துவிடலாம். இது வியாபாரமாகக் கூடுமானால் இதிற் பெருந்தொகையான தகடுகளைச் சுருட்டுவதற்குத் தக்க யந்திரமும் செய்து விடலாம்."

நிக்கல் தகடுகளைச் செய்யும் விதமும் அது மெலிந்து நயப்பட்டு வருவதற்கு வழியும்சொல்லுகிறார். இது மின்ஸார வழியாலே செய்யப்படவேண்டுமென்கிறார். இவ்வழி எவ்வளவு ஸூக்ஷ்மமாகச் செய்வதற்கும் இடந்தரும் என்கிறார்.

இந்த நிக்கல் தகடுகளால் ஆக்கப்பெற்ற புஸ்தகங்களுக்கு மேல் அட்டைகளும் அந்த நிக்கல் தகடுகளாலேயே செய்யப்படலாகும் என்றும், அதன்மேல் அழகான சித்திரங்களையும் பதிப்பிக்கலாம் என்றும், காலிகோதுணி அல்லது பதனிட்டதோல் ஆகிய இவைகளின் நிறத்துக்கும் இந்தத்தகடுகளைச் செய்து விடலாம் என்றும் அவர் சொல்கிறார்.

புஸ்தகசாலை யதிபர்கள் பின்வருமாறு முறையிடுவதும் உண்டு. "காகிதத்தினால் ஆக்கப்பட்ட புஸ்தகங்கள் சுமார் 100 வருஷங்கட்கெல்லாம் சிதறுண்டு தூள்களாகப் போகின்றன. அன்றியும் காகிதப்புஸ்தகங்கள் அடிக்கடி நெருப்புக்கிரையாகி விடுகின்றன. நீருக்கும் பயப்படுகின்றன" என்று சொல்கிறார்கள். இப்போது மிஸ்டர் எடிஸன் சொல்லுகிறமாதிரி நிக்கல் தகடுகளால் புத்தகம் ஆக்கப்பெற்று வெற்றிதந்து நிலைத்துநின்று பிரசாரத்துக்கும் வருமானால், நெருப்பு நீர் இவற்றுக்குப் பயமில்லையென்றே சொல்லலாம். இவைகள் நெருப்புப்பட்டவுடனே இளகுமானாலும் ஆறினவுடன் முன்போலவே அழிவில்லாமல் நிற்கும்.

ஒரு அங்குல கனமுள்ளதும் இந்த லோஹத்தகடுகளில் 40,000 பக்கங்கள் கொண்டதுமான ஒரு புஸ்தகம், ஒவ்வொன்று 200 பக்கங்கள் கொண்ட 200 காகிதப்புஸ்தகங்கட்குச் சமானமாகுமென்று அவர் சொல்கிறார். இந்த 200 புஸ்தகங்களும் சேர்ந்து 9—அடி 6—அங்குலம் உயரமாகிய ஒரு குவியலாக ஆகின்றன. இந்த நிக்கல் தகட்டிலான 200 புஸ்தகங்கள் மேற்சொல்லப்பட்ட ஒரு காகிதப் புஸ்தகத்துக்குச் சமானமாகின்றன என்றும் சொல்கிறார்.

இந்தமாதிரியான நிக்கல்தகட்டுப் புஸ்தகங்களைச் செய்வதற்கே நாம் ஆதரவு காட்டி வருவோமாயானால், நமக்குப் பணமும் இடமும் லாபமாகும் என்பதில் யாதொரு தட்டுப்பாடும் இல்லை. இப்போதைய உலகமுன்னேற்றத்தைக் கவனித்தோமானால், இருக்க இருக்க புஸ்தகங்களாகவே குவிக்கப்பெறும் என்பது ஊகிக்கலாகிறது. ஆதலின், மிஸ்டர் எடிஸன் இப்போது செய்து கொண்டுவரும் பிரயத்தனம் காலத்துக்கு ஏற்றதோர் உதவியெனவே யாரும் துணிந்து சொல்லலாம். "இப்போதைய செய்வகைக்கு அந்த நிக்கல் தகட்டுக்காகிதம் ஒரு பவுண்டு நிறை 4 ஷில்லிங்காக ஆகுமாயினும் அது கைகூடி உலகத்தில் பரந்து பிரசாரமாகும்போது ஒரு பென்னியே விலையாகு" மென்றும் அவர் சொல்கிறார்.

பத்திராதிபர்.

இருகடல்.

சஞ்சல உவரியிற் றாழவே நினைக்கும்
நெஞ்சே! இதுவரை நீ அடைந் திட்ட
சுகத்தினை ரற்பம் சொல்லுதி பார்ப்பம்.
சகத்துள மாயை தனக்கடி மைத்தொழில்
பூண்டனை; அன்றிப் பொருந்திய இன்பினை
ஆண்டனை என்றே ஆகுமோ ஓர்நாள்.
எண்ணு தெண்ணி ஏவிடர்ப் படுவை.
புண்ணை பொருந்துதி புகழ்தான் ஈதோ?
கெடுதினைப். பிகளுப் கிட்டிவந் துன்னை
அடிப்பதே தென்னில்:—அறைகுவன் கேட்டி.
நோய்க்கிட மென்றே யாரும் நுவலவும்
பாய்க்கிட மாகவும் பண்ணுவை உடலை.
பண்ணி நீஅடை பயன்தான் ஏதோ?
எண்ணி எண்ணிஏங்கிட லல்லால்.
நீர்மேல் எழுத்துடல் என்பதை நினைந்து
தேர்வாய் நற்பொருள் செப்புவன் கேட்டி.
ஏக்கம் பெற்றிடும் இக்கடல் விட்டு

மோக்கம் பெற்றிட முதுனர் வோர்சொல்
வித்தைக் கடலிடை விழ்ந்தனே என்னில
மெத்தவும் பயனுறும் வேண்டின னுனே.

ஸ்ரீ. R. ஸ்ரீனிவாசமுதலியார் [ஆனைமலே.]

ஆலங்குடி கிருஷிகர் சங்கம்.

நெல் ஒற்றைநாற்று நடுகை.

கும்மி.

வானமும் பூமியும் வாரிதி னிலும்வாழ்
மாந்தர் முதலுயிர் காத்தளிக்கும்
தானவர் நாதனைப் பணிந்து வணங்கிநான்
சாற்றுந் தமிழைப் பொறுத்தருள்வீர் (1)

எத்தனை ஆயிர வருஷக கணக்காக
இபற்றிய வேளான் முறைக ளெல்லாம்
இத்தின நல்முறைக் கேலாது கொஞ்சமும்
என்பதன் காரணம் யாது சொல்வீர் (2)

கூறுவேன் கேளும்நீர் தொல்முறை யில்விதை
கொள்ளையாய்க் கொட்ட பயிர் நெருங்கி
நீருள தென்னினும் வளரசம னாசிபோல்
நின்றிடும் நாற்றின் நிலையறிவாய் (3)

நாற்றைப் பிடிப்பிடி யாகநட் டாற்பயிர்
நாடிச் செழிப்பதற் கிடைஞ்ச லுற்று
வேற்றுமை யாகவே நோயுற்று வேர்பின்னி
வெளுக்குஞ் சிறுத்துக் கதிர் பறியும் (4)

மாருறும் வைக்கோலும் குறைந்து கிடைத்திடும்
மன்னார் செலவுகள் மிக அதிகம்
தேசம் புகழ்ந்திடும் புதுமுறை யைக்கொண்டால்
திண்ணமாய் சாதக மெத்தவுண்டு (5)

சாதகம் மெத்த இருப்பதினால் அதைச்
சாற்றுவீர் முற்றும் எனவினவின்
போதம தாகப் புகலு கிறேனதைப்
புத்தியில் வைத்துத் தொழில் புரிவாய் (6)
சீரப்பட்ட செண்டெட்டு செழுநிலத்தில் விதை
செம்மையாய் எட்டுப் படி விதைக்க
ஏற்பட்ட சம்சாரக் கவலையில் லாதவோர்
எழில்சார் இளவல் என வளர்ந்து (7)
நீண்டு செழித்துக் கருத்துப் பெருத்ததை
நிதான மாய்ப் பறித்தோ ரேக்கர்தனில்
தாண்டியே சாணுக் கொருமுத லாய்நட்டுத்
தக்க பலனைக் கைக்கொள்ளுவீர் (8)
ஒற்றை முதலாக நட்டிட வேபயிர்
ஓங்கிக் கிளைத்து மிகச்செழித்து
பற்றி யடர்ந்துதாள் பூடுகட்டிக் கதிர்
பத்துப் பதினைந் துண்டாய் விடுமே (9)
வந்த கதிர்களில் வளரு மணிகொண்டு
மாசூலும் வைக்கோலும் குறையாமல்
நந்தலில் ராசி மிகக்கண்டு ஞாலம்
நலமடையச் செய்வீர் நண்பர்களே (10)
பாவிய வித்து லாபமுடன் நாற்றும்
பறிக்கவும் தூக்கவும் கூலியற்பம்
தாவும் களைபைப் பிடுங்கலும் நாற்றுக்கள்
நடவிலும் நல்ல லாபமாகும் (11)
நல்ல விசேஷம் கொண்ட முறையிதை
நாட்டில் எவர்களும் செய்துளரோ ?
எல்லை இலாநலம் கொண்டனரோ அதை
இயம்புகிறேன் கேளும் இன்பமதாய். (12)
சீர்பெறுந் தாலுகா ஆலங் குடியிலே
செப்பும் விவசாய இன்ஸ்பெக்டர்

பேர்பெறும் சங்கர ஐய ரவர்களின்
　　　　பெருத்த முயற்சிக் கிணையிலவே (13)
கூறும்மொழி கேட்டுக் குழந்தை விநாயகர்
　　　　கோட்டைப் பிரமகமதென்பவரும்
தேறியே அங்கொற்றை நாற்று நட்டுப்பலன்
　　　　தெரிவித்த நோட்டீசைப் பார்த்திலீரோ (14)
கத்தையாய் நட்டவோ ரேக்கரிலே பக்கா
　　　　கண்டதோர் எழுநூற் றைம்பதுவாம்
இத்தலம் ஒற்றை நாற்று நடவுக்கோர்
　　　　ஆயிரத் திருநூறு படியளந்தார் (15)
இன்னமுஞ் சொல்லுவேன் வீரபட்டியில்
　　　　ராமச் சந்திர னம்பலமும்
முன்னேக்கிப் போடொரு ஏக்கரில் முந்நூற்று
　　　　முப்பது பக்கா லாபமென்றே (16)
போட்ட விளம்பரம் பார்த்திருந்தும் இதை
　　　　பொய்யென் றுரைத்திட ஞாயமுண்டோ?
கேட்டவர் யாவரும் லாபமும் கீர்த்தியும்
　　　　கிடைத்து மகிழ்ந்தார் க்ருஷிகர்களே (17)
இத்தரை மீதினில் பழைய வழக்கத்தை
　　　　எண்ணுமலே புது நன்முறையாய்ச்
சித்தம் மகிழ்ந்து வேளாண்மை செய்தே
　　　　சீரும் சிறப்புமாய் வாழ்வீரே (18)
தேசம்புகழ் புதுக் கோட்டை மகாராஜா
　　　　செங்கோ லரசு வளர்ந்தோங்கி
வீசும் கதிர்மதி யுள்ளள வுமிந்த
　　　　மேதினி தன்னில் மிகவாழ்க (19)
ஆங்கில மன்ன ரசோங்கப் புவி
　　　　அகிலமெங்குஞ் செழித்தோங்க
பாங்குடன் வானமும் மாரி பொழிந்திட
　　　　பாக்கியம் பெற்றுக் குடிவாழ்க. (20)

ஆலங்குடி.
9—7—17.

மீ. ச. பீருமகமது.

மரவள்ளியும் அதன் உபயோகமும்.

இது இந்த ராஜதானியில் சாதாரணத்தோட்டப் பயிராக விளைவிக்கப்படுகிறது. திருவாங்கூர் ராஜ்யத்தில் இது ஏராளமாகப் பயிராக்கப்பட்டுப் பலபேர்கட்கு உணவுப் பொருளாக உபயோகப்பட்டும் வருகிறது.

மரவள்ளி இந்தத் தேசத்துப் பொருளன்று. இது மோரிசிலிருந்து 1794 ஹூத்தில் கல்கத்தாவுக்கும் பின் இரண்டு வருஷம் கழித்து இலங்கைக்கும் கொண்டுவரப்பட்டது. பம்பாய்க்குப் போர்த்துகேசியர் வந்து குடியேறினபோது, அவர்களாற் கொண்டுவரப்பட்டதாகத்தெரிகிறது. மத்தியமாகாணத்தில் இது ஸாதாரண தோட்டப்பயிராகப் பயிராக்கப்பட்டு வருகிறது. இது பினாங்கிலிருந்து பர்மாவுக்குக் கொண்டுபோகப் பட்டிருக்கிறது. அந்தமான் தீவுகளில் இது முக்கியப் பயிராகவும், விரைவில் பலந்தரும் பயிராகவும் கவனிக்கப்படுகிறது. இது இந்தியாவில் இப்போது பெரும்பாலும் எல்லாமாகாணங்களிலும் பயிராக்கப்பட்டுவருகிறது. நேபாளம், டார்ஜிலிங்கு, அஸ்ஸாம், வங்காளம், மதராஸ், திருவாங்கூர் ஆகிய இடங்களில் அதிகமாகப் பயிரிடுகிறார்கள். இதற்கு 14, 16 அங்குல மழையே போதுமானது; நன்றாய் விளையும்; ஆறு மாதத்தில் பலன் கொடுக்கும். மரவள்ளியில் பலவகைகள் இருக்கின்றன. சில சதுப்பு நிலங்களிலும் சில மேட்டுப் பாங்கான இடங்களிலும் கடல்மட்டத்திற்கு 6000 அடிக்கு உயரமான உஷ்ணபூமிகளிலும் பயிராகும். இந்தியாவுக்கு அப்புறத்தும், தென்அமெரிக்கா, கிழக்கு மேற்கு ஆபிரிக்கா, மடகாஸ்கர் முதலான இடங்களில் அதிகமாகப் பயிராகின்றது.

மரவள்ளி அதிகமாகப் பலன் கொடுக்கிற பொருள். இரண்டு வகையான கிழங்குகள் பயிர்செய்யப் படுகின்றன. ஒன்று தித்திப்பு; மற்றொன்று கைப்பு. நமதுதேசத்தில் அதிகமாகப் பயிராக்கப்பட்டு

வருவது கைப்பு வகையேதான். இவ்வகைக் கிழங்கினுள் அதிகமாக ஜலவாயு கலந்திருக்கும். தித்திப்புவகைக் கிழங்கும் அவ்விதமே ஜலவாயு கலந்துள்ளதானாலும் இவ்வளவு அதிகமாக உண்டாக்கப் படுவதில்லை. இவ்விரண்டுக்கும் வித்தியாஸம் கண்டறிவது அருமைதான்; ஆனாலும் சில தாவர சாஸ்திரிகள் கண்டறிந்து கொள்வதுடன், 'இவ்வகைக் கிழங்கும் கைப்புக்கிழங்காகவே இருந்தது; பிறகு செய்வகையால் சிறிது தித்திப்பு ஆக்கப்பட்டுள்ளது' என்கின்றனர். திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் அதிகமாக மதுரவகை பயிராக்கப் பட்டுவருகின்றது.

கழிகளைக் கணுக்களாகக் கத்தரித்தே பயிராக்குகிறார்கள்; முற்றின கழிகளே அழியாமல் பயிராகி வளர்கின்றன. மரவள்ளியானது தான் பயிராகிவரும் நிலத்தின் மாவுணவு சாரங்களைச் சீக்கிரம் கிரஹித்து அந்நிலத்தை உரமற்ற நிலமாகச் செய்துவிடுகிறது; ரப்பர்த்தோட்டங்களில், அவற்றை விருத்தி செய்வதற்கென்றே இடையிடையே மரவள்ளிக் கழிகளையும் வைத்துப் பயிராக்குகின்றார்கள். அதனால் இதனைப் பயிர்வளர்க்கும் கிழங்கென்றும் அழைப்பதுண்டு. ரப்பர்த் தோட்டங்களில், பூமிக்கு உரம் கொடுப்பதற்காகக் கொத்தும்போது இக்கிழங்குகள் பெயர்த்தெடுக்கப் படுகின்றன. தென்னைத் தோட்டங்களினும் தெங்குகளை வளர்க்கவேண்டி இடையிடையே மரவள்ளிகளை வைத்துப் பயிராக்குகிறார்கள். மைலாப்பூரில் சில வெற்றிலைத் தோட்டங்களினும் அகத்தியுடன் இக்கிழங்குக் கழிகளையும் நட்டுப் பயிராக்குகிறார்கள். இப்படிப் பயிராக்கப்படுங் காலத்தில் தக்கஉரம் கொடுத்துப் பூமியைத் திருத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நிலத்துக்குத் தக்கதாகவும் உரத்துக்குத் தக்கதாகவும் விளைப்போன் சிரமத்துக்குத் தக்கதாகவும் இது பலன் கொடுக்கிறது. ஒரு ஏகர் நிலத்தில் சுமார் எட்டு டன்நிறையுள்ள புதுக்கிழங்குகள் உண்டாக்கப் படுகின்றன. ஆனால் மதுரவகையைக் காட்டிலும் கைப்புவகையே அதிகப்பலன் கொடுக்கிறதாகத் தெரிகிறது. மர

வள்ளிக்குப் பகையாகப் பூச்சிகள் அதிகமில்லா விடினும் காட்டுப் பன்றிகள் அதிகமாக வந்து பாழாக்குவதுண்டு. ஆகையினால் காட்டையடுத்த இடங்களிலெல்லாம், மரவள்ளித் தோட்டங்களை இராத்திரி காலத்தில் நன்றாகக் காத்துவரவேண்டும்.

தற்காலம், மரவள்ளிக்கிழங்கு அதிகமாக ஆகாரப் பொருளாக வழங்கப்பெற்று வருகிறது. சில இடங்களில் கிழங்குகளைப் பச்சையாகவே உபயோகப் படுத்துகிறார்கள். ஆனால் இப்படி உபயோகிப்பது மதுரவகையைத்தான்; என்றாலும் இவ்வகையும் ஜலவாயு சம்பந்தமான விஷத்தை உண்டுபண்ணி வியாதியைக்கொடுப்பதாக அறியப்படுகின்றது. மதுரமான உருளைக் கிழங்கைப்போல இதனையும் அவித்துத் தின்றால், யாதும் கெடுதி நேருவதில்லை யென்று தெரியவருகிறது. கிழங்குகள் தோண்டியெடுக்கப்பட்டவுடன் நன்றாய்க் கழுவப்பெற்றுப் பலவகையாகச் சமைக்கப்படுகின்றன. இதனை மாவாகவும் நொய்யாகவும் செய்து உபயோகிக்கின்றார்கள்.

மாவும் நொய்யுமாக ஆக்கப்படும்போது, கிழங்கை எடுத்துத் துண்டுகளாக்கிக் காயவைக்கிறார்கள். பிறகு வேண்டும்போது வேண்டிய அளவுக்கு மாவாக்கிக் கொள்ளுகிறார்கள். இந்தமா, கோதுமை மாவுக்குப் பதிலாகச் சில இடங்களில் உபயோகப்பட்டு வருகின்றது. இதனால் ரொட்டியும் பலகாரங்களும் கூட செய்கிறார்கள். சத்தைக்கொடுத்துப் போஷிக்கும் உணவுவகைகளில் இது தாழ்ந்ததொன்றானாலும், ஏழைகள் தங்களது தரத்துக்குத் தகுந்தபடி இதனையே உபயோகிக்கிறார்கள். வெஸ்ட் இந்தியர்கள், புதுக் கிழங்கை எடுத்து வேகவைத்துச் சாற்றை இறுத்துக் காயவைத்து நொய்யாக்குகின்றார்கள்.

அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில், இதை மாடு முதலானவற்றுக்கு உணவுப் பொருளாகவும் உபயோகித்து வருகிறார்கள். குதிரைகளும் பன்றிகளும் கோழிகளும் கூட இதனால் வளருகின்றன. கிழங்கில் கஞ்சிப்பசை அதிகமாக இருப்பதால், தவிட்டுடனும் பருத்தி விரையுடனும் இதனைப் பசு முதலியவற்றுக்குக்

கொடுக்கிறார்கள். இதனை யுணவாகக்கொண்ட பசுக்கள், மிகுதி யாகவும் வெளுப்பாகவும் பாலைத் தருகின்றது. இதனால் பாலாவது வெண்ணெயாவது கெடுவதாகத் தெரியவில்லை. இதனைத் துண்டு துண்டுகளாகநறுக்கியும் பருத்திவிதையுடன் கலந்துவைப்பதுண்டு. 21 பவுண்டு நிறையுள்ள பருத்திவிதையுடன் 15 பவுண்டு நிறை யுள்ள கிழங்குத்துண்டுகள் சேர்ப்பதுண்டு.

மரவள்ளிக் கிழங்கினை மாவாக்கி வியாபாரம் செய்வது, பிரேஸில், அமெரிக்கா ஐக்கியமாகாணம், மேற்கு ஆபிரிக்கா முதலான இடங்களிலே நடக்கிறது. கிழங்கு விளைவு அதிகமாகும் வரையில் மாவாக்கும் தொழில்களெல்லாம், கைகளாலே செய்யப்பட்டு வருகின்றன. மிகுதியான விளைவுக்குப் பிறகே யந்திர ஸாதனங்களைத் தேடுகின்றார்கள். உறுதியாகச் சொல்லுங்கால், உருளைக்கிழங்குமா செய்யப்படுவது போலவே இதன் மாவும் செய்யப்பட்டு வருகிறது.

சாராயவகை செய்வதற்கும் மரவள்ளியை ஒரு முக்கியஸாதனமாகவும் கொண்டிருக்கிறார்கள். முதல் தரமான விளைச்சலில், இக்கிழங்கில் 100-க்கு 30 பாகம் கஞ்சிப்பசையும் 5 பாகம் சர்க்கரைப் பசையும் கலந்திருக்கிறது. 100-க்கு 25 வீதம் புளிப்புச்சத்து எடுக்கப்பட்ட போதிலும் சாதாரண உருளைக் கிழங்கைக் காட்டிலும் இது அதிகச்சத்துள்ளதாகக் கவனிக்கப்படுகிறது. உலர்ந்த கிழங்குகளில் 100-க்கு 80 பாகம் புளிப்புச் சத்து இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் அரிசியைப் போலவே இதுவும் சாராயம் செய்யும் வகைக்குச் சரிக்குச்சரியான பலன் கொடுப்பதாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. இதனால் உண்டாக்கப் படும் சாராயவகையை மத்தியதரமாகவே கொண்டிருக்கிறார்கள். இது ஒருவிதமான துர்வாசனையை உடைத்தா யிருப்பதானாலும், வடிகட்டும்போது முதலிலும் கடைசியிலும் எடுக்கப்படும் தெளிவை நீக்கி விடுவதனால், இந்தத்துர்க்கந்தம் ஒருவாறு நீக்கப்படுகிறது. உருளைக்கிழங்கு முதலான இதர ஸாதனங்களிலிருந்து

சாராயம் செய்வதைக்கும் இதிலிருந்து செய்வதைக்கும் மற்று யாதொருபேதமும் இல்லை.

மற்றக் கிழங்குகளின் கஞ்சிப்பசையினால் செய்யப்பட்டுவரும் எவ்விதச் செய்பொருளுக்கும் இதுவும் உபயோகப் பட்டுவருகிறது. இதனால் சாராயம் மாத்திரமே இறக்கப்படாமல் நார்வகைகள் செய்வதற்கும், பசைகள் செய்வதற்கும் உபயோகப்பட்டு வருகிறது. வண்ணார வேலைக்கும் இதன் கஞ்சிப்பசை உபயோகப்பட்டு வருகிறதானாலும் அரிசிப் பசையைப்போல அவ்வளவு உயர்வாகக் கொள்ளப் படுவதில்லை. ஆனால், சோளப்பசை முதலிய புன்செய்ப் பயிர்ப் பசையைக்காட்டிலும்மேலாகக்கொள்ளப்படுகிறது. நெசவுத்தொழிலிலும் இப்பசை உபயோகப்பட்டுவருகிறது. இது அரிசிப்பசைபோல் உயர்வில்லாதது பற்றிச் சிறிது அரிசிக்கஞ்சியையும் இதனோடு கலந்து கொள்வதுண்டு.

நமது உழவாளிகளும் தங்களது வாழை வெற்றிலை முதலான பயிர் வகைகளுக்கு இதனை ஓர் துணைப்பயிராக வளர்த்து வந்தார்களானால், மேற் சொன்னபடியான பலவித சாதனங்களை நம் தேசத்திலேயே பெறுவதற்கும் இது தக்கஉபயோகமுள்ள பொருளாகவும் கொள்ளப்படும்.

இந்திய தேசத்துப்

பூர்வ சரித்திரச் சுருக்கம்

இந்திய தேசமானது, அதனது இயற்கையான அமைப்புகளினால் பல பரிசுத்தமான க்ஷேத்திரங்களையும் புண்ணிய நதிகளையும் பெற்று சுத்த மனதை உண்டாக்கக் கூடிய நிலைமையிலிருக்கிறதோடு, சீதோஷ்ணங்களின் பலபடித்தான தன்மையினால் தக்கவிலை பொருள்களையும் வேறுபட்ட சாரங்கப் பொருள்களையும் விரும்பி முயற்சித்தார்க்குக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

அவ்விதமான புண்ணிய க்ஷேத்திரங்களும் புண்ணிய நதிகளும் சரித்திரகாலம் உதயமாவதற்கு வெகு முற்பட்ட காலங்களிலிருந்தே விளக்கமுற்று வருகின்றன. மேற்கண்டபடி தேசத்தின் வடக் கெல்லையாகிய இமாசலம் முதல் தேசத்தின் தெற்கெல்லையாகிய ராமேச்வரம் வரையிலுள்ள நதி க்ஷேத்திரங்களில் யாத்திரை போய் வரும் யாத்திரிகர்களது கூட்டுறவினால், இத்தேசம் ஒரு தேசமாக வும் ஒரே ஒரு பொது மதத்தை யவலம்பித்ததாகவும் இருக்கிறது. அந்தப் புண்ணிய க்ஷேத்திரங்களையும் நதிகளையும் பற்றிச் சொல் லாத புராணங்களுமில்லையாகையால், இந்தப் பூமியே புண்ணிய பூமியாகக் கருதப்படுகிறது. இந்தியா வெகு காலங்கட்கு முன்ன ரே இலக்கிய இலக்கணங்களில் திருத்தமான நூல்களை யுடையதா கிப், பல புராணங்களையும் நாடகங்களையும் உடையதாகி, அவற்றுள் குறிக்கப்பட்டுள்ள கதாநாயகர் குணங்களால் இத்தேசத்தாரது மன தைச்சிதறவிடாமல் ஆஸ்திக்யம் சத்யம் பரோபகாரம் தன்மறுப்பு முதலிய உயர்ந்த குணங்களில் எப்போதும் பழக்கிக்கொண்டுவருத லால், இதனைத் தர்ம பூமியென்றும் சொல்வதுண்டு. இப்படித் தனத்தாலும் கனத்தாலும் குணத்தாலும் குலத்தாலும் வளத்தா லும் வண்மையாலும் சீர்பெற்றோங்கிவரும் ஒருதேசத்தை ஏனைய தேசத்தர் இச்சித்து அடிக்கடிவருவது ஒரு ஆச்சரியமாகாது. எனவே, அநேகவிதமான அயல் தேசத்தினர் இத்தேசத்தை நாடி பலப்பல காலங்களில் ஒருவர் பின்னொருவராக வந்து போயிருக்கி றார்கள்.

சரித்திரகாலம் ஆரம்பித்தது முதலாகவே இவ்விந்தியாவா னது செல்வமும் சீரும் பொருந்திய தேசமாக இருந்திருக்கிறது. கி. மு. 3000 வருஷத்தில் பெரிய பேபிலான் தேசத்துடன் வியாபா ரம் செய்து வந்திருக்கிறது. கி. மு. 2034 செமிராமிஸ் இத்தே சத்தின்மீது படையெடுத்து வந்ததற்கு அடையாளமாக ஒரு ஸ்தம் பத்தையும் நாட்டிவைத்துப் போயிருக்கிறார்கள். கி. மு. 2000 வருஷங்கட்கு முற்பட்டதாகக் கருதப்படும் எஜிப்டு தேசத்துக் கோரிகளிலுள்ள மம்மிகள் என்று சொல்லப்படும் விக்ரகங்கட்கு

மேற் போர்வையாக இந்தியாவின் நேர்த்தியான மஸ்லின் துணிகள் தாம் மூடப்பட்டிருக்கின்றன. கி. மு. 981 வருஷத்தில் இரண்டாவது ராமேஸஸ் என்பார் படையெடுத்து வந்திருக்கிறார். கி. மு. 980 வருஷத்தில் டைடர் ஹிராம் என்பவர் இந்தியாவோடு வியாபாரம் செய்திருப்பதற்கு அடையாளமாக, இன்றும் அந்தத்தேசத்தில் வழங்கும் ஹிப்ரூபாஷையில் அத்தேசத்து விளைபொருள்களிற் சில தமிழ்ப் பெயர்களால் வழங்கப் பெறுகின்றன. கி. மு. ஆறும் நூற்றாண்டில் பர்சியாதேசத்து டரையஸ் என்பவர் படையெடுத்து வந்து 10,00000 பவுன் நிறையுள்ள பொற்கட்டிகளை வருஷ வாரியாகப் பஞ்சாப் சிந்து மாகாணங்களிலிருந்து கப்பம் பெற்றிருக்கிறார். கி. மு. 327 ஷூ த்தில் கிரேக்கதேசத்து அலெக்ஸாந்தர் என்பார் செமிராமியர் போலவே யமுனைநதிவரையில் படையெடுத்து வந்திருக்கின்றனர். கிறிஸ்து பிறக்கும் முன்னும் கிறிஸ்து பிறந்த பின்னும் ரோமாபுரியுடன் இந்தியா வியாபாரம் செய்து வந்திருக்கிறது. கி. மு. 20ஷூ ஆகஸ்டஸ் சீசருடனும் கி. பி. 99ஷூத்தில் ட்ரேஜானுடனும் உறவாடியிருக்கிறது. கிறிஸ்து பிறக்கு முன்னும் கிறிஸ்து பிறந்த பின்னும் பதினேழாவது நூற்றாண்டு வரையில் இருந்த மூத்த ப்ளினி என்பவரும் பெர்ணியர் என்பவரும் இந்தியாவினது பொன்விஷயமான பல செய்திகள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது பேபிலான் எஜிப்து பர்ஸியா பலஸ்தின் ரோம் இவைகள் எல்லாம் கடந்துவிட்டன. இந்தியா இருக்கிறது. அவைகளின் ஒவ்வொன்றின் உச்சமான காலத்திலும் இந்தியா உன்னதஸ்திதியில் இருந்து வந்திருக்கிறது. அவைகளுடைய சரித்திரங்கள் தேடிக் காணவேண்டி யிருக்கிறது. இந்தியாவின் சரித்திரமோ இன்னும் எழுதப்பட்டுக் கொண்டுவருகிறது. இந்திய சரித்திரம் எப்போதும் புதிதுபுதிதான தொடர்ச்சியை யுடையதாகவே இருக்கும். ஏனெனில், இந்தத் தேசத்தின் செழுமையை நோக்கிப் பற்பலரும் பலகாலங்களிலும் பல நாடுகளிலிருந்தும் வந்து குடியேற இடந்தந்து கொண்டிருக்கிறது. உதாரணமாக, இத்தேசத்துள் எத்தனை ராஜாங்கங்கள் ஆண்டு மாண்டிருக்கின்றன. எத்தனை இதர தேசப்படையெழுச்சிகளும் உட்கலகங்களும் உண்டாகி அழிந்திருக்கின்றன. ஆனாலும் இத்தேசமானது தனது சீர்மையில் குன்றாம லிருக்கின்றது. படையெடுத்து வந்தவர்களில் அநேகர்,

இங்கேயே தங்கள் வாசஸ்தானத்தை ஏற்படுத்திக்கொண்டு இந்தியர்களாகவே மாறியிருக்கின்றார்கள்.

"மிஸ்டர். வின்ஸெண்ட் ஸ்மித் என்பவர் சொல்கிறார்:—கி. மு. ஏழாவது நூற்றாண்டின் மத்தியகாலத்தில், இமயமலைக்கும் நருமதை நதிக்கு மிடையில் 16 ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப் பட்டிருந்தன. மகா அலெக்சாந்தர் வந்து போன பிறகு, சந்திரகுப்த மஹாராஜன் வடக்கில் உள்ள ஹிந்துகுஷ்மலையிலிருந்து நருமதை நதிவரையில் உயர்ந்த மாதிரியான ஒரே ராஜ்யத்தை ஸ்தாபித்து; அதற்குத்தானே சக்ரவர்த்தியாக இருந்தான். இந்த அரசாங்கப் பெருமையைப் பற்றி, மெகஸ்தனீஸ் என்பவர் பின்வருமாறு குறிக்கிறார்:—ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு சிறிய குடியரசாகவே இருந்தது. அப்போது அடிமைத்தனம் என்பதே கிடையாது. ஸ்திரீகள் கற்புடையவர்களாகவும், புருஷர்கள் வீரம் கண்ணியம் சத்தியம் முதலிய பொருத்தினவர்களாகவும் இருந்தனர். சந்திர குப்தனுடைய குமாரன், இப்போதைய சென்னையின் வடபாகம் வரையிலும் அதே ராஜ்யத்தைப் பெருகும்படிச் செய்தான். பிறகு அசோகன் ஆட்சி புரிந்தபோது, அவன் தனது ஆட்சியின் பெருமையை மேனாட்டவரும் கேட்டு வியக்கும்படிச் செய்தான்."

"தென் இந்தியாவோ மூன்று பெரிய ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவையே சேர சோழ பாண்டிய ராஜ்யங்கள் என்பவை. அவர்கள் மூவரும் ஒரே தாய்ப்பாஷையைக் கொண்டு பல உயர்ந்த நூல்களை யுடையவர்களாக இருந்தார்கள். இவ்விராஜ்யங்கள் கி. மு. 2000 முதல் கி. பி. 1731 வரையில் நன்றாய்ச் செழித்திருந்ததாகத் தெரிகிறது. அதன் அரசர்களில் ஒருவன் கி. மு. 543-ல், இலங்கைமேல் படையெடுத்துவந்த விஜயன் என்னும் அரசனுக்குத் தனது மகளை மணம்செய்து கொடுத்தான். மற்றோர் சந்திர குப்தனால் கி. பி. நான்காம் நூற்றாண்டில் ஒரு பெரிய ராஜ்யம் ஸ்தாபிக்கப் பெற்று, கி. பி. 340 வரையில் அவன் இந்தியசக்ரவர்த்தியென்று கொண்டாடப் பெற்றான். இவன் மகனது ராஜ்யகாலத்தில் தான் சீன யாத்திரியாகிய பாஹியன இந்தியாவுக்கு வந்து போனான். பாஹியன் சொல்வதாவது:—ஜனங்களுக்கு அதிக ஸ்வதந்திரம் கொடுக்கப்பட்டிருந்தது. சாலைகளில் திருடர் பயமென்பதே கிடையாது; அதனால் பிரயாணம் வெகு சுலபமாக இருந்தது. கொடுந்தண்டனைகள் இல்லை. அப்போதுதான் ஹூன்ஸ் ஜாதியார் படையெடுத்து வந்தார்கள்."

கி. பி. 644 ஆண்டில் இந்திய சக்ரவர்த்தியாகிய, ஹர்ஷராஜன் காலத்தில் வந்த சீன யாத்திரியாகிய ஹ்யூன் த்ஸாங் என்பவர் பின் வருமாறு எழுதுகிறார்:—

"அக்காலத்து அரசன், பிரயாகையில் ஒரு பெரிய சபை நடத்தினன். அது 75 நாள் வரை மஹோத்ஸவமாக நடந்தேறியது. அச்சமயம் சுமார் 50,000 ஜனங்கள் கூடியிருந்தார்கள். அச்சமயம், அரசன், தான் ஐந்து வருஷங்களாகச் சேர்த்து வைத்திருந்த திரவியங்களை யெல்லாம் வந்து கூடியிருந்த வித்வான்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தான். இப்படி ஐந்து வருஷங்கட்கு ஒரு முறையாக முப்பது வருஷங்கள் நடத்தினன். ஒரு வித்வானுக்கு ஒரு நாளைக்கு 100 பொன் நாணயமாக 10,000 வித்வான்கள் பரிசுபெற்றுச் சென்றார்கள்."

கி. பி. எட்டாவது நூற்றாண்டில் அரபி தேசத்தார் படையெடுத்து வந்து சிந்து தேசத்தை ஜயித்தார்கள்; என்றாலும் ராஜபுதனத்திலிருந்து பின்னல் துரத்தப்பட்டார்கள். கி. பி. 986 வருஷத்தில் கஜினி சுல்தானுடன் மகம்மதியர்கள் படையெடுத்து வந்து பெஷாவர் வரையிலும் நின்றுவிட்டார்கள். பின் அவன் மகன் மகம்மது என்பவன், 17 தரம் உட்புகுந்து கி. பி. 1021 வருஷத்தில் லாகூரில் தங்கிவிட்டான். பிறகு 5 வருஷங்கள் வரையில் ராஜபுத்திர அரசர்கட்குள் உட்கலகங்கள் உண்டாய்க் கொண்டிருந்தன. இவர்கட்குத் துணை செய்யவே மகம்மதியர் மறுபடியும் உள்ளேவந்து நுழைந்தார்கள். இந்தயுத்தத்தில் கீர்த்திபெற்ற பிருதிவிராஜன் கி. பி. 1193-ல் கொல்லப்பட்டான். இவனே டில்லிக்குக் கடைசி ராஜபுத்திர அரசன். பிறகு பட்டாணியர்களே சக்ரவர்த்தியானார்கள். அவர்கள் 1526வருஷம் வரையில் ஆண்டார்கள். பிறகு மொகலாய வம்சத்தைக் கண்டுபிடித்த பாபர் சக்ரவர்த்தி இந்தியாவை ஆண்டுகொண்டிருந்தான். இந்த மொகலாய அரசாட்சியும் 1857-ல் நடந்த சிப்பாய்க் கலகத்தோடு முடிவடைந்து விட்டது. இப்படி இடையிடையே பலவகையான படையெடுப்புக்களும் யுத்தங்களும் சேர்ந்ததானாலும், தேசம் செழித்துக் கொண்டே இருந்தது. ஏனெனில், உழவாளிகளும் தொழிலாளிகளும் தங்கள் தங்கள் தொழிலைச் சரிவர நடத்திக்கொண்டுவந்து செல்வத்தைப் பெருக்கி, க்ஷத்திரியர்கட்கு யுத்தத்துக்கு வேண்டிய சாதனங்களை அப்போதைக் கப்போது உதவிக்கொண் டிருந்தார்கள். வந்தவர்களும் உழவாளிகளையாவது தொழிலாளிகளையாவது எவ்வகையிலும் கெடுக்காமலிருந்தார்கள்.

தென் இந்தியாவானது இந்தக்காலங்களிலெல்லாம் பெரும்பாலும் அமைதியுடனே இருந்து, தனக்குரிய வியாபாரம் கல்வி இவற்றில் விருத்தியடைந்து கொண்டிருந்தது. ஒரு ராஜபுத்திர அரசர் கி. பி. 550 வருஷத்தில் தக்ஷிணத்தில் ஒரு நேர்த்தியான ராஜாங்கத்தை ஏற்படுத்தினார். அது கி. பி. 1190 வருஷம் வரையில் நடந்தேறியது. அல்லாவுடீனோடு சில முகம்மதியர் இந்தியாவில் புகுந்து 8 மணங்கு பவளங்களையும் வைரங்களையும் இன்னும் சில நகைகளையும் 1294 வருஷத்தில் அபகரித்துக் கொண்டுபோனார்கள். அதேவிஜயநகர ராஜ்யம் கி. பி. 14-ம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 16-ம் நூற்றாண்டு வரையில் மறுபடியும் தழைத்திருந்தது. ஆக கி. பி. 11-ம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 17-ம நூற்றாண்டுவரையில் சிற்சில கலகங்களையும் பெற்றிருந்தபோதிலும் செல்வத்துடனும் நாகரிகத்துடனும் புதுப்புது நோக்கங்களுடன் தழைத்துக் கொண்டே வந்தது.

கி. பி. 1556 ம் வருஷம்முதல் 1605வருஷம் வரையில் ஆண்டு கொண்டிருந்த அக்பர் சக்ரவர்த்தி பொது நோக்கும் நீதியுமாகிய இவைகளையே தமது உறுதியாகக் கொண்டிருந்தார். அவர் குமாரர் ஜிஹாங்கிர் என்பவர் கி. பி. 1613 வருஷத்தில் இந்தியாவில் வியாபாரம் செய்யும்படி ஆங்கிலருக்கு உத்தரவு கொடுத்தார். ஜிஹாங்கிர் அரசருக்கு அக்காலங்களில் நிலவரி வரும்படியாக ரூ 26,25,00,000. கிடைத்துக் கொண்டிருந்தது. அவர் மகன் ஷாஜஹான் காலத்திலும் இப்படியே இருந்து கொண்டிருந்தது. இவருக்குப் பிறகு இவரது மகன் ஔரங்கஜேபு காலத்தின் முடிவில் அதாவது கி. பி. 1706-ம் வருஷத்தில் இந்த ராஜ்யம் பலபடியாக நிலைகுலைந்து விட்டது. ஔரங்கஜேபு பொது நோக்கில்லாமல் ஹிந்துமதத்தை அழித்து மகம்மதிய மதத்தைப் பரவச்செய்ய வேண்டுமென்று சிறு நோக்குடையவராயிருந்தபடியால் உட்கலகங்களும் ஐக்கிய மின்மையும் ஏற்பட்டு இந்தியதேசம் எவ்விதத்திலும் பிந்திய தேசமாகத் தள்ளப்பட்டது. இவர் காலத்தில், இவருடைய பலாத்காரத்தினால், நிலவரியும் மற்றைவரிகளும் ரூ 57, 00,00,000. இருந்தபோதிலும் ஜனங்கட்கு சவுக்கியமே யில்லாமலிருந்தது. பிறகு நூறு வருஷத்திற் கெல்லாம் வரும்படி ரூ 51, 75,99,600 ஆகக் குறைந்து விட்டது.

இந்திய சரித்திரத்தில் பழமையென்று சொல்லப்படவேண்டியதில் மஹாராட்டிர ராஜாங்கம் ஒன்றுதான் மிகுதி. இந்தராஜங்கமானது கீர்த்திபெற்ற சிவாஜி என்னும் மஹாராட்டிர வீரரால் ஏற்படுத்தப்பட்டது. இவரது சரித்திரம் தனிமையான ஒரு வியாஸமாக எழுதப்பட வேண்டியதே.

பத்திராதிபர்.

தருமபரிபாலனம்.

(202 ம் பக்கத் தொடர்ச்சி.)

இல்லறம் வீடுபேற்றையுந் தரவல்லதென்பது—அருளுண்டாகவே துறவறத்திற்காரம்பமாயிற்று. இதுபற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனர் துறவறவியலின் முதற்கண் அருளுடைமை யென்னும் அதிகாரத்தை வைத்தது மென்க. ஆகவே இல்லறத்தானருள் தோன்றி அவ்வருள் துறவறத்திற்குக் காரணமாகித் துறவறம் வீடுபேற்றிற்குக் காரணமாகிநிற்றலிற்றொடர்புடைமையால் இல்லறமும் வீடுபேற்றிற்குக் காரணமாமென அறிக. "இல்லறமே வாழ்வினுக்கு முயர்கதிக்கும், வித்துமாந்துறவறத்தின் வேருமாமெனும் வேதம்" என்ற ஆன்றோர் வாக்கியமும் ஈண்டுணரத் தக்கது. மற்றொரு வகையானுங் காரணமாதலைக் காட்டுவோம். இல்லறத்தின்கண் வழுவாதொழுக அறம் [illegible] அறம் வளரப் பாவந் தேயும்; பாவந்தேய அறியாமை நீங்கு[illegible]மை நீங்க நித்தவநித்தங்களது வேறுபாட்டுணர்வும் அ[illegible]ய வாய இம்மை மறுமை இன்பங்களின் உவர்ப்பும் பிறவி[illegible]களும் தோன்றும்; அவை தோன்ற வீட்டின்கணசையுண்டாம்; அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனின் முயற்சிகளெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோகமுயற்சி யுண்டாம்; அஃதுண்டாகத் தத்துவ ஞானம் பிறந்து புறப்பற்றாகிய எனதென்பதும் அகப்பற்றாகிய யானென்பதும் விடும். ஆகலின், இவ்விரண்டு பற்றுக்களையும் இம்முறையே உவர்த்து விடுத்து வீடுபேறெய்தலாமாதலின், ஈண்டுத் தொடர்புடைமை பற்றி இல்லறம் வீடுபேற்றிற்குக் காரணமானமை அறிக. துறவறத்தான் வீடுபேறெய்துதலைப் பின்னர்த் துறவறங் கூறுழிக்கூறுவாம். ஆண்டுக்காண்க.

இனி இத்தகைய இல்லறத்தைப் பரிபாலித்தலாவது எவ்வாவாறெனிற் கூறுதும். நற்குண நற்செய்கைகளும் எழுமையுந் தொடரும் உழுவலன்பும் வாய்ந்த ஓர் கன்னியைப் பெற்றோர்

மனாருவர்து அங்கியங் கடவுள் சாட்சியாக நீர்வெப்பந் தொடுக்க மணந்து உருவத்தாலிருவகைப்பட்டுத் தோன்றினும் மனத்தாலொரு தன்மைப்பட்டு முன்னர்க் கூறிய இல்லற தர்மங்களை உலகோர் வழுவின்றி மேற்கொண்டொழுகுதலே இதன் பரிபாலனம் ஆம். மனமொவ்வாவழி இல்வாழ்க்கை சிறிதும் நடைபெறாதாம். பெண்ணின் நற்குணங்களாவன:—துறந்தார்ப் பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட்டருளுடைமையு முதலாயின. நற்செய்கைகளாவன:—வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை அறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற்றொழில்வன்மையும், ஒப்புரவு செய்தலு முதலாயின.

நாயகன் நாயகி என்ற இருவரது மனங்களும் ஒற்றுமைப் பட்டிருத்தல் வேண்டுமென்பதை வற்புறுத்தத்துணிந்த நம் அரும் பெரும்புலமைச் சான்றோர்கள், இல்வாழ்க்கையானது தருமமென்னும் சரக்கை ஏற்றிவைத்தற்குரியதோர் சகடமென்றும், இச்சகடம் நாயகன் நாயகி என்ற இரண்டெருதுகள் கருமமென்னும் நுகத்தைப் பற்றி முறையே ஈர்த்தாலன்றி தூரமுஞ் செல்லுமென்றும், இவ்விருவருள் ஒருவர் செல்லுமார்க்கத்தே மற்றொருவர் செல்லாது மாறுபட்டுச் செல்லுவாராயின் சிறிது தூரமுஞ் செல்லாதென்றும் உவமித்துள்ளார்கள்.

" தருமமெனும் பண்டமிடுஞ் சகடமா மனைவாழ்க்கை
கருமநுகம் பிணித்துமனைக் காதலியுந் தானுமெனும்
இருவராய் முறைசெலுத்தி னெத்துணைத்தூ ரமுஞ்செல்லும்
ஒருவராய்ப் பூண்டிழுப்பி னோரிறையுஞ் செல்லாதால்."

" மருவிய காதன் மனையாளுந் தானு
மிருவரும் பூண்டுய்ப்பி னல்லா—லொருவரா
லில்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடஞ்
செல்லாது தெற்றிற்று நின்று."

" காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—யோதுகலை
யெண்ணிரண்டு மொன்று மதி யென்முகத்தாய் நோக்கலுங்
கண்ணிரண்டு மொன்றையே காண்."

" எஞ்ஞான்றும், காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் "

என்பவற்றானறிக.

இதனைப் பொதுவியல்பு பற்றி யெடுத்துக் கொள்ளினும் இதன்கண் மோக்ஷதருமமும் புருஷதருமமும் ஸ்திரீதருமமும் முதலியனவாகப் பலவகைத் தருமங்களும் அடங்கி யிருக்கின்றன வெனத் தெரிந்து கொள்க. இவைகளை யெடுத்துக் காட்டிவிளக்கலா மேலும் விரியுமென விடுத்தாம்.

துறவறம்.

துறவறமாவது நாகந்தோலுரித்தாற்போல அகப்பற்றும் புறப்பற்று மறுத்து இந்திரிய வசமறுத்து முற்றத் துறத்தல்.

" படநாகந் தோலுரித்தாற் போற்றுறந்து கண்டவர்மெய்ப் பனிப்ப நோற்றிட், டடுகவைம்பொறியும் வென்றார்க்கு " என்றார் சிந்தாமணியாரும். அகப்பற்று—தானல்லாதவுடம்பை யானென்று கருதல். இதனை வடநூலார் அகங்காரமென்ப. புறப்பற்று—தன்னோடியைபில்லாப் பொருளை எனதென்று கருதல். இதனை வடநூலார் மமகாரமென்ப. அவற்றை யறுத்தலாவது—குருவினிடத்துப் பெற்ற உறுதிமொழிகளாலும் யோகப்பயிற்சியாலும் அவை யானெனதன்மை தெளிந்து, அவற்றின் கண்வைத்தபற்றைவிடுதல். இந்திரிய வசமறுத்தலாவது—மெய்வாய்கண்மூக்குச்செவி என்ற பஞ்சேந்திரியங்களின் வசப்பட்டு விஷயங்களிற் பற்றுவைத்தலை யொழித்தல். முற்றத்துறத்தலாவது—பொருள்களையும் இருவகை யுடம்பினையும் உவர்த்துப் பற்றறவிடுதல். இருவகை யுடம்பாவன—அருவுடம்பும் உருவுடம்புமாம். அருவுடம்பு—சூக்குமசரீரம். உருவுடம்பு—தூலசரீரம். இன்பத்துன்பங்களான் உயிரோடு ஒற்றுமை யெய்தி இவ்வுடம்புகளும் யானெனப்பட்டு அகப்பற்றுமாதலின் அவற்றைவிடுதல் கூறப்பட்டது.

இனித்துறவிகளுக்குச் சரியை கிரியை யோகம் ஞானம் என்பன முக்கியமாக வேண்டப் படுவனவாம். சரியையாவது அலகிடல் முதலியன. கிரியையாவது பூசைமுதலியன. யோகம் எண்வகைய; அவை இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகை நிலை, பொறை நிலை, நினைதல், சமாதியென்பன. இவைகளின் விரிவும் ஞானமும் குருமுகத்தாற் கேட்டு ஸ்வாநுபவத்தால் அறியத்தக்கன. இவைகளையும் இல்லறத்தான் மேற்கொள்ளவேண்டுமெனக் கூறிய தருமங்களையும் அதததற்குரிய துறைகளெனவழங்குவர் ஆசிரியர் அடியார்க்கு நல்லார். இவைகளெல்லாம் சிலப்பதிகாரம் ஊர் காண்காதை 11-வது வரியாகிய "அறத்துறை விளங்கிய வறவோர் பள்ளியும்" என்றதன் விசேட வுரையானுணரத் தக்கன.

இனி ஆசிரியர் பரிமேலழிகியார் துறவறம்விரதங்களும்ஞானமுமென்று இருவகைப்படுமெனக் கூறியுள்ளார். அவற்றை "இனி முறையானே துறவறங்கூறிய தொடங்கினர். துறவறமாவது இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையராய்ப் பிறப்பினையஞ்சி வீடு பேற்றின் பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம். அதுதான் வினைமாசு தீர்ந்து அந்தக்கரணங்கள் தூயவாதற் பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களும், அவற்றான் அவை தூயவாய வழிஉதிப்பதாய ஞானமுமென இருவகைப்படும். அவற்றுள் விரதங்களாவன—இன்னவறஞ் செய்வலெனவும் இன்னபாவந் தவிர்வலெனவும் தம்மாற்றலுக் கேற்பவரைந்து கொள்வன. ஞானமாவது—வீடு பயக்குமுணர்வு" எனக்கூறியுள்ளனவற்றானறிக.

துறவறத்தைப் பரிபாலித்தல் எவ்வாறெனிற் சொல்வாம்.

"கூத்தாட்டவைக்குழாத்தற்றே பெருஞ்செல்வம், போக்கு மதுவிளிந்தற்று" என்ற பொய்யாமொழியைக் கொண்டு, ஒருவனுக்குப் பெருஞ் செல்வம் வருவது, கூத்தாடுகின்ற ஓர் அரங்கினிடத்தே அதனைக் காணும் பொருட்டு வருகின்ற ஜனக்கூட்டத்தையொக்குமென்றும், அச்செல்வம் போவது, அக்கூத்தைக் காணும்பொருட்டு வந்த ஜனங்கள் கூத்து முடிந்தவழிப் போய்விடுதலை யொக்குமென்

றும் உணர்ந்து புறத்ததாகிய செல்வத்தின்கணுள்ள பற்றை யொழித்தல் வேண்டும். பின்னர் "உறங்குவது போலுஞ் சாக்காடு றங்கி, விழிப்பதும் போலும் பிறப்பு" என்ற பொய்யா மொழியால், உயிர்கட்குத் தூங்குதலும் விழித்தலும் இயல்பாய் விரைவின் மாறி மாறி வருதல்போலச்சாதலும் பிறத்தலும் இயல்பாய் விரைவின் மாறிமாறி வருமென்றுணர்ந்து அகத்ததாகிய யாக்கையின்கணுள்ள பற்றினை யொழித்தல் வேண்டும். "நெஞ்சிற் றுறவார் துறந்தார் போல் வஞ்சித்து, வாழ்வாரின் வன்கணா ரில்" என்ற பொய்யா மொழியின் பொருளை யுணர்ந்து பொய்வேடங் கொள்ளாதொழி தல் வேண்டும். மேற்கூறிய மூன்றினையும் ஒழித்தலுடன் திருக்குற ட்டுறவறவியற்கண் அருளுடைமைமுதற்சொல்லாமை யீறாகச் சொ ல்லப்பட்ட விரதங்களையும் பிற துறவறத்திற்கென நூல்களிற்கூறப் பட்டுள்ளவைகளையும் அநுட்டித்துக் கொண்டு ஈஸ்வரத்தியானமே பொழுது போக்காக இருப்பது தான் இதன் பரிபாலனமாம்.

துறவறமே எளிதில் வீடுபேற்றைத் தரவல்ல தென்பது:— சுருக்கமாக "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்றார் பெரி யார். பற்றறுவதே துறவாதலின் அதனுலுற்றது வீடென எளிதி லறிக. பற்றறுதலே துறவென்பதை யாவர்க்கும்அறிவிக்கும்பொருட் டாகவே நம் நாயனர் அவாவறுத்தலென்னும் அதிகாரத்தைத் துறவறவியலின் இறுதிக்கண்வைத்துள்ளார். அவா அறவே உற்றது வீடு என்பதை அறிவித்தற்பொருட்டாகவும், துறவறத்தால் இறுதி யிலெய்தும் பயன் வீடே என்பதை யறிவித்தற் பொருட்டாகவும் அவாவறுத்தலென்னும் அதிகாரத்திறுதிக்கண், "ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே, பேரா வியற்கை தரும்" என்னும் அருமைத் திறக்குறளையும் கூறியுள்ளார். இக்குறளின் விசேடவுரையில் ஆசி ரியர் அரிமேலின்புறாஉம் பரிமேலழகியார் "களிப்புக்கவற்சிகளும் பிறப்புப்பிணி மூப்பிறப்புக்களும் முதலாயினவின்றி உயிர்நிரதிசய வின்பத்ததாய்நிற்றலின் வீட்டினைப்பேராவியற்கை யென்றும், அஃது அவா நீத்தவழிப்பெறுதல் ஒருதலையாகலின், அந்நிலையே தருமென்றுங் கூறினர்......... இதனல் வீடாவது இதுவென்பதூஉம் அஃது அவாவறுத்தார்க்கு அப்பொழுதே யுளதா மென்பதூஉங் கூறப்

பட்டன" என்று கூறியவற்றையும் ஆய்ந்து தெளிக. இன்னும் "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்றை விடற்கு" என்ற குறளால் அகப்பற்றும் புறப்பற்றுமாகிய பற்றுக்களை விட்டவழிப் பற்றப்படுவதொன்று வேண்டும். அப்பற்றப்படுவதுபற் றற்றான் பற்றெனவிட்டு நெறிபாஃ என்றுங்கண்டு தெளிவதுடன் அடியில் வரும்பாடல்களையுங் கண்டு ஆராய்ந்தறிந்து கொள்க.

"நன்றாய்ஞானங்கடந்துபோய்நல்லிந்திரியமெல்லாமீர்த்
தொன்றாய்க்கிடந்தவரும்பெரும்பாழுலப்பிலதனையுணர்ந்துணர்ந்து
சென்றாங்கின்பத்துன்பங்கள்செற்றுக்களைந்துபசையற்றா
லன்றேயப்போதேவீடதுவேவீடுவீடாமே."

(திருவாய்மொழி ௧௮-ம் பதிகம் ௯)

"மக்களைக் குருக்க டம்மை மாதரை மற்று ளோரை
யொக்குமின் னுயிரன் னோரை யுதவிசெய் தாரோ டொன்ற
துக்கமித் தொடர்ச்சி யென்று துறப்பரேற் றுறவு பூண்டோர்
மிக்கது நலனே யாசி வீடுபே றளிக்கு மன்றே."

(இராமாயணம்)

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோ ருறுவது அறிகென் றருளி"

(மணிமேகலை)

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்" (திருக்குறள்)

இதுவரையிலும் தருமங்களின் பாகுபாடுகளையும் அவற்றைப் பரிபாலிக்கும் விதங்களையும் ஒருவாறு கூறினோம். மேலும்இவற்றின் விரிவுகளை ஆன்றோர் வாயிலாயுணர்க.

குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

S. ஆழ்வாரையங்கார்.
உதவியுபாத்தியாயர் க. வி. கலாசாலை, கோநகர்.

சபை நிகழ்ச்சி விவரங்கள்.

கோநகர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை.

பிங்கள ஸ்ரீ ஆடிமீ ௰௨ (27–7–17) வெள்ளிக்கிழமை காலையில் விநாயகக் கடவுளுக்கும் சமயாசாரியர் நால்வருக்கும் வைதிக விதிப்படி அபிஷேக ஆராதனைகள் நடந்தன.

12 மணிக்குப் பிராமண சமாராதனையும் சிவனடியார் நகரத்தார் முதலியோர்க்கு விருந்தும் நடைபெற்றன.

பிற்பகல் 4 மணிக்கு மதுரை வித்துவான் ஸ்ரீ நா. சுந்தரேசவையரவர்கள் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரத்தைக் கேட்டோர் மனங்குளிர சோனாவர்ஷம் சொரிந்தாற்போல் மூன்று மணி நேரம் உபந்நியசித்தார்கள்.

இரவு 8½ மணிக்கு ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அழகிய வெள்ளையானை வாகனத்தின் மீது அம்பாரியில் திவ்ய புஷ்பாலங்கிருதராய் ஆரோகணித்து ஊருணிவலம் வந்த காக்ஷியைப் பக்தகோடிகள் தெரிசித்து ஆனந்த பரவசரானார்கள்.

சம்பந்தன்.

பலவான்குடி மணிவாசக சங்கம்.

இன்று திருவருட்பேற்றால் நம்மணிவாசக சங்கத்தின் மாதக்கூட்டம் கூடிற்று. மாணவர்கள் கடவுள்வாழ்த்துக் கூறிய பின்னர்க் கோயிலூர் ஸ்ரீ காசிகானந்தசுவாமிகள் ஜீவகாருண்யம் என்பதையும், திருப்பாதிருப்புலியூர் ஸ்ரீ திருச்சிற்றம்பலம் சுவாமிகள் ஈசுவரபக்தியென்னும் விஷயத்தையும் அரிய பிரமாணங்களோடு அழகாக உபந்நியசிக்க ஆத்தங்குடி ஸ்ரீ சி. வீர. கதிரேசச் செட்டியாரால், தேவகோட்டை வைசியசிவானந்த ஸபையோரால் பிரசுரித்து அனுப்பப்பெற்ற பெண்கல்வி என்னும் வியாஸம் படிக்கப்பெற்றது. ஆவணி மாதம் 14உ 15உ நடைபெறவேண்டிய முறைகளைப்பற்றி ஸ்ரீ ராம்-ரு-ராம. இராமசாமிச்செட்டியார் வேண்டிக்கொள்ள நகரத்தாரனைவரும் ஆமோதித்து அதற்கேற்றநியதிகள் முறையாகத் தீர்மானிக்கப்பட்டது. ராஜவாழ்த்துக் கூறிப் பின்னர் ஸபை மங்களகரமாய் நடந்தேறியது.

புதுவயல் ஞானப்பிரகாச ஸபை.

ஸ்ரீ பரமேசுவரனது திருவருளால் இன்று (16-8-17) இச்சபையின் மாதாந்தக் கூட்டமானது, காரைக்குடி கம்பராமயணப் பிரசாரகர் மிஸ்டர் எம். வி. கோவிந்தராஜ ஐயங்காரின் அக்கிராசனத்தின் கீழ்க்கூடியது. அச்சபையில் "கல்வியும் தனமும்" என்னும் விஷயத்தைப்பற்றிமிஸ்டர் நாகலிங்க தேசிகரும், "நக்கீரரும் அவரது நூல்களும்" என்னும் விஷயத்தைப்பற்றிப் பண்டிதர் மிஸ்டர். டி. வைத்தியநாத ஐயரும், "தொழிற்கல்வி" என்னும் விஷயத்தைப்பற்றிப் மிஸ்டர். ஆர். இராஜகோபாலராவும் உபநியாஸம் செய்தார்கள். பின்னால் அக்கிராஸனாதிபதியவர்கள் உபந்யாஸ விஷயங்களைப் பொது ஜனங்கள் மனதிலும் பதியுமாறு எடுத்துச் சொல்லிவிட்டு, நகரத்தார் தொழிற்கல்வியை விருத்திசெய்யத் தொழிற் கல்விச்சாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்றும்ஸ்வதேசிய வுணர்ச்சியை விருத்திசெய்ய வேண்டுமென்றும் சொன்னார். பின்னால் மஹாயுத்தத்தில் பிரிட்டிஷாருக்கு வெற்றிகிடைக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்யப்பட்ட பின், சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்றுச் சபை மங்களகரமாக நிறைவெய்தியது.

ஆர். ராஜகோபாலராவ்.
பிரஸ். ரிபோர்ட்டர்.

வித்யாபரிபாலன சங்கம்.

நாட்டரசன் கோட்டை.

பிங்களஞு ஆடிமீ உயவ (11-8-17) இல் இச்சங்கத்தின் நான்காவது உபந்நியாஸம் நடந்தது. அதில் சிவகெங்கை மஹாராஜா ஹைஸ்கூல் போதகாசிரியர் பிர்ம்மஸ்ரீ கோதண்டராமையரவர்கள். B. A. அக்ராசனம் வகித்தார்கள். ஷை ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் மகாா ாஸ்ரீ மு. ப, கணபதி பிள்ளையவர்கள் தமிழை வளர்க்குமுறை என்ற விஷயத்தை எடுத்துக் கொண்டு சங்கச் செய்யுள்களிலும் திருக்குறள் கம்பராமாயணங்களிலும் தமக்குள்ள ஆராய்ச்சியை நன்குவிளக்கி உபந்நியசித்தார்கள். சிவகெங்கை வக்கீல் பிர்மஸ்ரீ P. S. இராமஸாமி ஐயரவர்கள் தமிழ்ப் பாஷையை வளர்ப்பதே தமிழ் மக்களின் கடமை என்று உபந்நியசித்தார்கள். திரளி ஸ்ரீ. உ. வே. ப. ஸ்ரீ இராமையங்காரவர்கள் தமிழ்ப்பாஷையைக் கற்றவர்களும் ஆங்கிலம் கற்றவர்களும் ஒருங்குகூடி ஜடதத்வ சாஸ்திரங்களை யெளிய தமிழ் நடையில் மொழி

பெயர்த்து உலகம் நன்மை அடையும்படி செய்வதே வித்வான்களின் கடமை என்று உபந்நியஸித்தார்கள். சுப. வெள்ளைவாரணம் பிள்ளையவர்கள் தமிழ் மொழி தனிமொழியென்றும் இவ்வூரிலுள்ள சுண்ணுடைநாயகி அம்மன் கிருபையால் இந்தச்சங்கமோனது அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்றும் பேசி, ஒருவாழ்த்துப் பாடலும் சொன்னார்கள். பிறகு மஹா-ா-ா-ஸ்ரீ மு. ப. கண பதிபிள்ளையவர்களாலும் சிவகங்கை ஜவுளிக்கடை பெரியசாமி சேர்வைகாரராலும் வாழ்த்துப் பாடல்கள் சொல்லப்பட்டன. பின்னர் அக்ராசனபதியவர்கள் தமிழ் ஒருதனிப்பாஷை என்றும் அதைவளர்க்க நாம் கடமைப்பட்டிருக்கிறோமென்றும் ஜடதத்வ சாஸ்திரங்கள் தமிழில் வரவேண்டியது ஆவசியகமென்றும் அழகாகவும் சிறப்பாகவும் பேசிச் சபையைச் சிறப்பித்தார்கள். பிறகு கடவுள்வாழ்த்து ராஜவாழ்த்து முதலியவைகள்கூறச் சபைசிறப்பாய் நிகழ்ந்தது.

இங்ஙனம்.

ப. ஸ்ரீ. இராமையங்காார்.

தலைமை உபாத்தியாயன்.

வைத்தியக் குறிப்புகள்.

ஜ்வரம்.

யானைக்கு உண்டாகும் ஜ்வரத்துக்கு பாகலம் என்றும், குதிரைகளின் ஜ்வரத்துக்கு அகிதாபம் என்றும், பசுக்களின் ஜ்வரத்துக்கு கோகர்ணகம் என்றும், பக்ஷிகளின் ஜ்வரத்திற்கு மகரம் என்றும் பெயர். இவ்வாறே விருக்ஷம் முதலியவற்றிற்கும் ஜ்வரம் உண்டாவதுண்டு.

கறியுப்பின் உபயோகம்.

வைத்தியமுறையில் கறியுப்புஅநேகவகையில் உபயோகிக்கப்பட்டுவருகிறது. விசேஷமாக இதனை நீரில் கரைத்துத்தான் வாயின் மூலமாக உள்ளுக்கும் தோலின் மூலமாக இரத்தத்திலும் பிரயோகிக்கப் பட்டு வருவதுண்டு. புராதன வைத்தியர்கள் உப்பை ஜலத்தில் கரைக்காமல் விரணங்களில் கட்டுவதற்குமாத்திரம் உபயோகித்து வந்தார்கள். உடலில்உண்டாகும் துர்நீர்களைச் சோஷணம் செய்யவும் பசியை விருத்தி செய்யவும் ஸாதாரணஉப்பை அப்படியே உபயோகிக்கலாம் என்று டாக்டர் நேகாஸாவா என்பவர் கூறுகிறார்.

கவனிக்கவேண்டியவை.

1. ஒருவர் உபயோகித்த துணியை மற்றொருவர் எதற்கும் உபயோகிக்கக்கூடாது.

2. தேஹ உழைப்புச் செய்தபிறகு ஈரமுள்ள இடங்களில் உட்காரக்கூடாது.

3. பலருக்குப் பொதுவான பாத்திரத்தை யொருபோதும் குடிப்பதற்கு உபயோகிக்கக்கூடாது.

4. பாதங்களை ஈரமாக வைத்திருக்கக் கூடாது. (அதனால் கபஜ்வரம்உண்டாகும்.)

5. ஜலதோஷத்திற்கு ஆரம்பத்திலேயே ஏற்ற சிகித்ஸை செய்யத்தவறக்கூடாது.

6. சூடான அறையில் மிகவும்கனமான உடைகளைத்தரித்துக்கொண்டு இருக்கக்கூடாது.

7. சிறுவர்கள் அசௌக்கியமா யிருக்கையில் அவர்களைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பக்கூடாது.

8. தொண்டைப்புண் எவ்வளவு அற்பமாயிருந்தபோதிலும், சீக்கிரத்தில் அதற்குச் சிகித்ஸை செய்யாமலிருக்கக்கூடாது.

9. குழந்தை அசௌக்யமானால், உடனே வைத்தியரை அழைத்து ஏற்ற பரிகாரம் செய்வதில் தவறக்கூடாது.

Family Doctor.

படுக்கையில் படுத்துக்கொண்டே படிப்பதால் வரும்தீங்கு.

இவ்வாறு படிப்பவர்கள் சாதாரணமாகச் செய்யும் வழக்கம் என்னவென்றால், வலதுமுழங்கையைப் படுக்கையில் அல்லது தலையணையில் ஊன்றி, அவ்வலது கையில் தலையைச்சாய்த்து அமர்த்திக்கொண்டு, இடது கையில் புஸ்தகத்தை ஏந்தியவாறு சாய்ந்திருப்பதேயாம். குளிர்ந்தநேரங்களில் (முக்யமாகக் குளிர்காலங்களில்) வலதுதோளும், இடதுகையும் மறைக்கப்பட்டுப் போய்ப் போர்க்க முடியாதவைகளாகித் திறந்து வைக்கப்படுகின்றன. பிறகு சிலரோக் கழிக்க, அந்த இரண்டு பிரதேசங்களிலும் வலியும இசிவும் உண்டாயிருப்பதாக உணர்ந்து கொள்ளுகிறார்கள். அவ்வுணர்ச்சியைத்தரும் குறிதான் ஆமவாதம் என்னும் வியாதிக்கு ஸம்பந்தப்பட்டதாக இருக்கிறது. கையின் உட்புறத்தி

ளுள்ள நரம்புகளினூடே அவ்வலிபாவியிருப்பதாகவும், முக்கியமாய்க் கையின் பூட்டுகளுக்கு எதிரில் அவ்விதநோய் ஏற்பட்டிருப்பதாகவும் உணரப்படும். நரம்பைப்பற்றியும் பூட்டுகளைப் பற்றியும் இரண்டு விதங்களாக இந்தநோய் ஸம்பவிக்கும். சில கேஸுகளில் மாம்ஸ பேசிகள் இதனால் க்ஷயமடைவதும்உண்டு. தோளின் பூட்டில் இந்தநோயால் கிரமமாக வீக்கமும் வலியும் விருத்தியாகக் கூடும். கையைத்தூக்கவும்அசைக்கவும் சக்தி குறைந்துவிடும். இப்படிப்படுப்பவன் இவ்வழக்கத்தை விட்டுவிட்டால் கிரமமாக இவ்விகாரங்கள் குறைந்துவிடும். ஆனால் பெரும்பாலும், இதன் காரணம் இன்னதென்று யோசிக்காமலே அவ்விதம்படிக்கும் அப்பியாஸத்தை மேற்கொள்ளுகின்றனர். தோளைக்குள்ருக்கு வெளிப்படையாகக் காட்டாமல் படித்தால்கெடுதல் உண்டாவதில்லையென்று தெரியவருகிறது. இவ்வலியுண்டானால், சூடான ஒற்றடங்களாலும் பலமாகப் பிடிப்பதனாலும் சிறிது நிவ்ருத்தியுண்டாவதுண்டு. படுத்தபடியே படிப்பது முதலில் ஸௌகரியமாகத் தோற்றியபோதிலும், அதனால் அடுத்தாற்போல் இந்தத்தீங்கு ஸம்பவிப்பதால், படுக்கையில் படுத்துக்கொண்டே படிக்கும் வழக்கத்தை விட்டு விடவேண்டும்.

கர்ப்பத்தில் ஆண் பெண் உண்டாகக்
காரண நிர்ணயம்.

டாக்டர். ஜெ. எஸ். ப்ரீபாரன் என்பவர், கர்ப்பத்தில் ஆண் சிசுவாவது பெண் சிசுவாவது உண்டாவதற்குக் காரணம் ஒன்று கண்டுபிடித்திருக்கிறார். அவருடைய சித்தாந்தத்திற்கு ஆதாரமாக 1,000 கேஸுகளில் பரிசோதனைகள் செய்து பார்த்துக் கடைசியில் தத்துவத்தை வெளிப்படுத்தினர். இந்த 1,000 கேஸுகளில் நூற்றுக்கு 98 வீதம் வெகுநுட்பமான பரீக்ஷைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்திரீக்கு மாதவிடாய் உண்டான தேதிமுதல் மற்றொரு மாதவிடாய் உண்டாகவேண்டிய நாள்வரையிலுள்ள தினங்களின் மொத்தத்தை இரண்டு சரிபாதியாகப் பங்கிட்டு, 'அவற்றுள் முதற் பாதிநாட்களில் எந்தத் தினத்தில் கர்ப்பம் ஸம்பவித்ததென்பதும், இரண்டாவது பாதிநாட்களில் எந்தத்தினத்தில் கர்ப்பதாரணமானது நேரிட்டதென்பதும் குறித்துக்கொள்ளப்பட்டது. மாதவிடாய் உண்டான தேதிமுதல் 15 நாட்கள் வரையில், அதாவது மாதவிடாயான முதற் பகுதியைச் சேர்ந்த நாட்களில் ஆர்த்தவ பீஜங்கள் ovam பெண் சிசுவுக்கு ஸம்பந்தபட்டவையாகவும், இரண்டாவது பகுதி

யான நாட்களில் முக்கியமாய் மற்றொரு ருதுகாலத்திற்கு முந்திய 10 நாட்களில் புருஷப் பிரஜைக்கு ஸம்பந்தப்பட்டவைபாகவும் உண்டாவது வழக்கம் என்று அவருடைய பரிசோதனையில் தெரியவந்தது. சுக்லமும் ஆர்த்தவ பீஜமும் எந்தத்தினத்தில் ஒன்றாகக் கலந்துவிடுமோ அந்தத்தினமே ஸ்திரீ புருஷப் பிரஜைகளின் நிர்ணயம் செய்வதற்கும் அவசியமானதாம். ஸ்திரீகளுடைய ஆர்த்தவ பீஜமே ஸ்திரீப் பிரஜைக்காவது புருஷப்பிரஜைக்காவது சுதந்தரமாகக் காரணமாகும். இது விஷயத்தில் புருஷருடைய சுக்ல தாதுவின் குணாகுணங்கள் ஒருவித ஸாதக பாதகங்களையும் உண்டுபண்ணக் கூடியவையல்லவென்பது அவ்வாராய்ச்சிக்காரருடைய ஸித்தாந்தமாகும். ஆர்த்தவ பீஜங்கள், ருதுவான முதர்பகுதி நாட்களுக்கு ஸம்பந்தப்பட்டவையானல், (13 நாட்களுக்கு முற்பட்டவையானல்) அவை பெண் சிசுக்களையும், ருதுகாலத்தின் பிற்பகுதி நாட்களைச் சேர்ந்தவையானல் ஆண் சிசுக்களையும் உண்டாக்கக் கூடியவை. அல்லது ருதுவான தினத்திற்குப் பிறகு 10 அல்லது 12 நாட்கள் வரையில் பெண் சிசு உண்டாவதற்கும், மற்றொரு மாதவிடாய் உண்டாகக்கூடிய தினத்திற்கு முந்திய 10 நாட்களும் வரிசையாக ஆண்சிசு உண்டாவதற்கும் தகுந்தவையென்று நிச்சயிக்கப்படுகிறது. இவ்விஷயம் மெடிகல் ரிகார்ட் என்னும் வைத்தியப் பத்திரிகையில் வெளியாயிருக்கிறது.

வைத்தியகலாநிதி.

ஸோடாஉப்பின் புதியஉபயோகம்.

கீல் வாயுவால் துன்பப்படுபவருக்கு ஸோடா உத்தமமான ஔஷதமாகும். சில பிணியாளிகளுக்கு அடியில் வருமாறு பிரயோகித்ததில் ஆச்சரியப்படும்படி எதிர்பாராத குணம் உண்டாயிற்று. எவ்வெவ்விடங்களில் வீக்கமும் வலியும் உண்டாயிருக்கின்றனவோ, அவ்விடங்களில் ஸோடாஉப்பை ஜலத்தில்கலந்து, மாவைப்பிசைந்து கனமாகப்பூசிவிடவும். ஈரம் உலர்ந்து போகாதபடி அப்பூச்சைக் கவனித்து வரவேண்டும். அதிகமாகப்பணச் செலவு செய்து சிரமப்பட்டுச் செய்யப்படும் இதர சிகித்ஸைகளைவிட இவ்வற்பமான சிகித்ஸையானது மிகவும் மேலானதென்று தெரியவருகிறது.

M. S. Journal.

வைத்தியகலாநிதி.

மதிப்புரை.

ஞானதீபிகை அல்லது தர்மதீபிகை.

பதினெட்டாவது நூற்றாண்டின் மத்தியகாலத்தில் சீன தேசத்தில் இருந்த கயாட்ஸி என்னும்சினபண்டிதரால் கண்டெடுக்கப்பெற்றுப்பிறகு, அதை அந்த் ஸம்ஸ்க்ருதபாஷையிலிருந்துச் சீன பாஷையில் மொழிபெயர்க்கப்பெற்றது. பிறகு 1749-ம் வருஷம் ஆங்கிலத்தில்மொழிபெயர்க்கப்பெற்றது. பிறகு இத்தமிழ் நாட்டாருக்கும் உபயோகமாகும் பொருட்டுத் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதனுள் ஸர்வமத ஸகோதரத்துவமே பெரிதும்காணப்படுகிறது; அன்றியும் ஒருவன் உத்தமபுருஷனாவதற்கு வேண்டிய தினசரி ஸாதனங்கள் மிகஅழகாக எழுதப்பெற்றிருக்கின்றன. ஸ்திரி புருஷர்கள் தங்கள் வாழ்நாளில் அநுஷ்டிக்கவேண்டிய தர்மங்களையும் பிறரிடம் நடந்துகொள்ளவேண்டிய தர்மங்களையும்பிறரிடம் நடந்துகொள்ளவேண்டிய வழிகளையும் தேசத்துக்கும் அரசனுக்கும் செய்ய வேண்டிய கடமைகளையும் ஆசிரியர் விரித்து எழுதியிருக்கிறார். இது இருபாலார்களின் வாழ்க்கைக்கிரமத்தை ஸரியாக அமைத்து ஸன்மார்க்கத்தையும் நீதியையும் உண்மையையும் தைர்யத்தையும் தர்மத்தையும் போதிக்கும் ஒரு அரியநூல். ஒவ்வொரு தேசாபிமானியும் ஒவ்வொரு கிருஹஸ்தனும் இதை வாசிக்கவேண்டியது, விலை ரூ. 0—10—0 வேண்டுபவர் இந்தவிலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—
ஆர்தர்ஸ் அண்டு பட்ளிஷர்ஸ்
ஏஜென்ஸி.
சென்னை ஈ.

மரணபயம் வேண்டாம்:—இது ஒரு சிறுநூல். C, W. லெட்பீட்டர் என்பவர்களால் இங்கிலீஷில்எழுதப் பட்டதிலிருந்து, ம-ා-ஸ-ஸ்ரீ ப. நாராயணையர் என்பவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பெற்றது. காசியிலுள்ள பிரஹ்மஞான ஸபை இந்தியன் செக்ஷனால் பிரசுரிக்கப்பெற்றது. வேண்டுபவர், மதுரை பிரஹ்ம ஞானமந்திரத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலை அணா 0—2—0

சைவப்பிரகாசம்:—இந்த மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையின் சித்திரைமாதத் திய ஸஞ்சிகை வரப்பெற்றோம். இதனுள் பல அரியவிஷயங்கள் தக்கபண்டிதர்களால் எழுதப்பெற்றிருக்கின்றன. சேக்கிழார் தமிழ்ப்பயிற்சி முதலிய சில

விஷயங்கள் மிகவும் அருமையாக எழுதப்பெற்றிருக்கின்றன. இதன் வருட சந்தா ரூ 2—8—0. வேண்டுவோர் கோட்டமுக தூருக்கு அந்தத பேருசில் சைவப்பிரகாச ஆபீஸ் மானேஜருக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

பத்திராதிபர்.

ஆபரணம்.

1. பிராமணன் வித்தையால் விளங்குகின்றான்; க்ஷத்திரியன் விஜயத்தால் விளங்குகின்றான்; செல்வமுடையோன் தானத்தினால்விளங்குகின்றான்; குலஸ்திரீ நாணத்தினால் விளங்குகின்றாள்.

2. கைக்குத் தானம் ஆபரணமாம்; கண்டத்திற்குச் சத்தியம் ஆபரணமாம்; சுரோத்திரத்திற்குச் சாஸ்திரம் ஆபரணமாம்; அந்நிய ஆபரணங்களினால் என்னபயன்?

3. நட்சத்திரங்களுக்குச் சந்திரன் ஆபரணமாம்; ஸ்திரீகளுக்குப் பதி ஆபரணமாம்; பூமிக்கு அரசன் ஆபரணமாம்; வித்தை யாவருக்கும் ஆபரணமாம்.

4. குதிரைக்கு வேகம் ஆபரணமாம்; ஸ்திரீகளுக்குப் பயம் ஆபரணமாம்; யதிகளுக்குத்தபசு ஆபரணமாம்;அரசனுக்குப் பொறுமை ஆபரணமாம்; வீரனுக்குப் பராக்கிரமம் ஆபரணமாம்.

5. ஆகாசத்திற்கு பரிசுத்தத்தன்மை ஆபரணமாம்; தாமரைவனத்திற்கு வண்டு ஆபரணமாம்; வாக்கிற்குச் சத்தியம் ஆபரணமாம்; செல்வத்திற்குக் கொடை ஆபரணமாம்; மனத்திற்கு மைத்ரி ஆபரணமாம்; சத்துருக்களுக்கு இன்சொல் ஆபரணமாம்; யாவருக்கும் வினயம்ஆபரணமாம்.

குழந்தைகளுக்குப் பாலூட்டும்போது கவனிக்கவேண்டியவை.

தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டும் சமயத்தில் தமக்கு எவ்வித மனக்கவலையும் வியசனமும் பயமுமில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், தம் மனதில் உதிக்கும் கவலை வியசனம் பயம் முதலியவைகளால் தம்முடைய பாலுக்கும் தோஷம் ஏற்பட்டு, அப்பாலையுண்ணும் குழந்தைகளுக்கு அஜீர்ணம் பேதி மாந்தம் ஜ்வரம் முதலிய வியாதிகள் ஏற்படுகின்றன.

உ
கணபதிதுணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."—திருக்குறள்.

தொகுதி 9. | பிங்களஞூ ஆவணிமீ September. 1917. | பகுதி 8.

போல்பூர் பிரமசரிய ஆசிரமம்.

நமது பாநுவின் முந்திய ஸஞ்சிகைகளில் குறித்துள்ள இந்து முறையான கல்விச்சாலைகட்கு உதாரணமாகக் கீழே ஒரு கலாசாலை முறை எடுத்துக்காட்டப் பட்டிருக்கிறது.

வேதாந்தகேஸரியில் மிஸ்டர் ஸ்ரீ சைலர் பின்வருமாறு எழுதுகிறார்:—

நமது பூர்விகக் கல்விமுறையைப் புதுப்பித்துக் கொண்டுவர வேண்டிய முயற்சிகள், நமது தேசத்தில் இப்போது ஒரு புதுமையாக நாம் காட்டப்புகவேண்டாம். ஹரித்வாரத்தில் உள்ள ரிஷிகுலமும், போல்பூரில் உள்ள பிரமசரிய ஆசிரமமும் நமக்கு வழிகாட்டிகளாக இருக்கின்றன. அவற்றுள் போல்பூர் ஆசிரமத்தைப்பற்றிப் பேசப்புகுவோம். சமீபித்த க்ரிஸ்ட்மஸ் விடுமுறை நாட்களில் நாம் நேரில்கண்டதை இங்கு எழுதுகிறோம். இம்முறையே இந்து மதத்தினைத்தாங்கும் தூணாக நிற்கின்றது.

இந்த ஆசிரமத்துக்கு இப்போது சொந்தக்காரர் உலகெங்கும் கீர்த்திவாய்ந்துள்ள ரவீந்திரநாத டாகூர் என்பவர். இந்தக்கலாசாலை சென்ற 17 வருஷங்களாக நிலைத்துள்ளதேனும், 1914 வருஷம் வரையில் பங்காள மாகாணத்தைத் தவிர்ந்த பிறநாடுகளில் அறியப்பெற்றதாக இருந்திருக்கவில்லை. நமது வங்காளக் கவியாகிய டாகூர் அவர்கள் உலகம் மெச்சும் நோபல் வெகுமானத்தைப்

பெற்றபிறகே, உலகெங்கும் தெரிவிக்கப்பட்டதாகி முயற்சியிலும் அதிகரித்துக்கொண்டு வருகின்றது.

பூர்விகர் ஆசாரமுறையில் ஒரு கலாசாலை ஆரம்பிக்கவேண்டு மென்றநினைவு நமது டாகூரின் பிதாவான மஹரிஷி தேவேந்திரநாத டாகூர் அவர்கட்கு வந்தது. அகன்ற ஆகாயம் பூமி இவற்றின் விரிந்து பரந்த இடங்களே ஆத்மாவுக்கு ஆத்ம சக்தியைத் தந்து ஜடமாகிய தேஹக்கட்டினுள்ள பற்றை ஒழித்துக் காட்டுவன வென்று நன்கு அநுபவமுறையில் உணர்ந்த மஹரிஷியவர்களே இப்போது கலாசாலை இருக்கும் இடத்தைத் தெரிந்தெடுத்தவர்கள். அங்கே அவர் நிஷ்டையிருந்த இடம் இரண்டு ஏழிலைப் பாலைமரங்களின் கீழிருக்கிறது. அங்கு இப்போதும் அடையாளமாகப் பின்வரும் வாக்கியம் வங்காளிபாஷையில் எழுதப் பெற்றிருக்கிறது. "அவரே எனது உயிர்க்கு சுகம்தருபவராகவும், என் இருதயானந்தராகவும் என் ஆத்மசாந்திதாராகவும் இருக்கிறார்."

ஒரு கற்பாங்கான பூமியில் ஒரு அகன்றவெளியில் ஸால விருக்ஷங்களால் நிறைந்துள்ள ஒரு உயர்ந்த இடத்தை ஊஹித்துக் கொள்ளுங்கள். அதுவே நமது பிரமசரிய ஆசிரமம். இது போல்பூரில் இருக்கிறது. ஈஸ்ட் இந்திய ரெயில்வேயின் மேல், கல்கத்தாவுக்கு 99 மைலில் உள்ளதும் பரத்வானுக்கு 33 மைலில் உள்ளதுமான போல்பூர் ஸ்டேஷனுக்குச் சுமார் இரண்டுமைல் தூரத்தில் அமைக்கப் பெற்றிருக்கிறது. இந்த ஆசிரமத்து இருப்பிடம், பட்டண வாஸத்திலிருந்து விலகினதாகவும் அதனாலேயே சாந்தமும் இன்பமும் நிறைந்துள்ளதாகவும் இருக்கின்றது. ஒரு பகுத்தறிவில் பழகியுள்ள ஜீவனும் பிரகிருதியின் இயற்கை யம்சங்களும் இனியவுறவுடன் கலந்தாடும் தன்மை அங்கு நன்குவிளங்குகின்றது. அதனைச்சுற்றியுள்ள தோட்டம் நமது ரவீந்திர நாதரால் வைத்து வளர்க்கப் பெற்ற ஸாலமரங்களாலும் மாமரங்களாலும் குளிர்ந்து இன்பமளிக்கும் ஆநந்தகரமான நிழலைத் தந்து கொண்டிருக்கிறது. மாணவர் விளையாட்டிடம் பெரிதாகவும் வெளியாகவும் இருக்கிறது. நான்கு புறங்களிலிருந்தும் சுத்தவாயு அபரிதமாக வீசிக்கொண்டிருக்கிறது. தோட்டத்துள் பலவிடங்களில் சுத்தநீர்க்

கேணிகள் தோண்டப்பெற்றிருக்கின்றன. இதுவே மாணவர்கள் சுத்தமனதுடன் கல்விகற்றுக்கொள்ளத்தக்க இடம். இது நமது டாகூர் அவர்கட்கு அமைந்தது அதிர்ஷ்டவசத்தால்தான் என்பது உண்மையாகிறது.

" * * * * * மயிலூர்
கந்தனை யனையவர் கலைதெரி கழகம்
* * * * * *
நந்தன வனமல நறைவிரி புறவம்."

வகுப்புகட்கெல்லாம் பாடங்கள் மரங்களின் நீழல்களிலேகற்பிக்கப்படுகின்றன. மரங்களின் கீழே பாய்களின்மேல் பிள்ளைகள் உட்கார்ந்து படிக்கிறார்கள். மழைகாலங்களில், மாணவர்கள் உபாத்தியாயர்களுடைய அறைகளில் கூடியிருக்கிறார்கள். உபாத்தியாயர்களும் தங்களால் கூடியவரை மாணவர்கட்கு எவ்வழியாலும் உயிர் வாழ்க்கைக்கும் ஆத்ம முன்னேற்றத்துக்கும் வேண்டியனவற்றைப் போதித்து வருகிறார்கள். சுலபமாகவும் இயற்கையாகவும் உள்ள வழிகளால் ஆத்மபோதத்தை யூட்டுகிறார்கள். சித்திரம் ஸங்கீதம் இவற்றில் பிரியமும் வாஸனையும் உடையவர்க்கு அவையும் முறையே கற்பிக்கப் படுகின்றன.

ஸங்கீத ஸபைகளும் நாடகசபைகளும் ஏற்றமாகக் கொண்டாடப் படுகின்றன. ஸங்கீதமுறை மனதுக்கு இன்பத்தையும் பக்தியையும் தரக்கூடியதாகவே இருக்கின்றது: மாணவர்கள் மழைக் காலங்களிலும் ஸங்கீதத்தைப் பயில்கிறார்கள். திறந்தவெளியில் காலை யாரம்பத்திலும் மாலை யாரம்பத்திலுங் கால்மணிநேரம் மாணவர்கள் தோத்திரம் சொல்லுகிறார்கள்.

வருஷ மிரண்டு முறைதான் மாணவர்கள் புதிதாகச் சேர்க்கப்படுவார்கள். பெரும்பாலும் 11 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் மாணவராகச் சேர்க்கப் படுகிறார்களில்லை. அநேகமாக 8, 9 வயதே சேர்த்துக் கொள்ளத்தக்க காலம். ஒவ்வொரு மாணவனும் பிரவேசச் சம்பளம் ரூ20-ம் மாதச்சம்பளம் ரூ20-ம் கட்டிச் சேரவேண்டும். மாதச்சம்பளம் சாப்பாட்டுக்கும், வாடகைக்கும், கற்பிப்பதற்

கும், வெளிச்சம் வண்ணான் அம்பட்டன் வைத்தியம் முதலியவற்றின் கூலிக்குமாகக் கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு மாணவனும் காகிதம் முதலானவற்றுக்காக ரூ5 கொடுத்து வைத்திருக்கவேண்டும்; அதுசெலவான பின்னர் மறுபடியும் அப்படியே கொடுத்து வைத்திருக்கவேண்டும். எல்லாச்சம்பளங்களும் வங்காளமாதத்தின் முதல் வாரத்திலேயே கொடுக்கப் பெறவேண்டும்; இல்லையாயின் மூன்று வாரங்கள் தவணையாகக் கொடுக்கப்படும்; இதனினும் கடந்துசென்றால் ரூ2 கூட்டிக்கொடுக்க வேண்டிவருகின்றது.

மாணவர் கலாசாலையில் சேரும்போதே பின்வரும் ஸாமான்களை ஆயத்தப் படுத்திக் கொண்டுவர வேண்டும். அவை:— மெத்தை தலையணை கொசுவலை விரிப்பு கம்பளியாகிய படுக்கைச்சாமான்களும், உடைகளும் குளிர்காலத்துக்குவேண்டிய உடுப்புகளும், ஒரு பானபாத்திரம் இரண்டு கிண்ணங்கள் ஒருதாலமாகிய தட்டுமுட்டுச் சாமான்களும், புஸ்தகங்கள் தேசப்படங்கள் மைக்கூடு காகிதம் எழுதுகோலாகிய படிப்புச் சாமான்களும் ஆம்.

ஸம்ஸ்கிருதம் வங்காளி இங்கிலீஷ் கணிதம் சரித்திர பாடம் பூகோள சாஸ்திரம் ரஸாயன சாஸ்திரம் இயற்கைத் தத்துவம் ஸங்கீதம் இவைகள் கற்பிக்கப் படுகின்றன. போதனாமுறைக்குப் போதிய பாஷையாக வங்காளியையே கொண்டிருக்கிறார்களென்பது சொல்லத்தேவை யில்லை. இந்தக் கலாசாலையிலிருந்தே மாணவர்கள் கல்கத்தா யுநிவர்ஸிடியின் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குச் செல்லலாகும். அதாவது வகுப்புகள் தாழ்ந்த முறையில் நடத்தப் படவில்லை யென்பதே தெரிவிக்க வந்தது. பெரும்பாலும் மாணவர்கள் தங்கள் மெட்ரிகுலேஷன் பரீக்ஷயான பிறகு ஆசிரமத்தை விட்டு விலகிக் கொள்ளுகிறார்கள். ஆனால் சிலர் இருந்து ஸம்ஸ்கிருதத்தை விருத்தி செய்து கொள்ளுகிறார்கள்.

கால்பந்து கிரிக்கட் முதலான சிறுவிளையாடல்களை மாணவர்கட்குத் தேஹாப்பியாஸ முறைகளாகும். சிலசமயங்களில் உபாத்தியாயர்களுடன் உலாப் போவதுமுண்டு. தோட்ட வேலைகள் தச்சுத் தொழில் முதலானவைகளும் ஒழிவு நேரங்களில் கற்பிக்கப்படுகின்

றன. பூந்தோட்டங்களும் மாணவர்களால் ஆதரிக்கப் படுகின்றன.

மாணவர்களது தினசரி மிகவும் கவனிக்கத் தகுந்தது. அதிகாலை 4½ மணிக்கு நித்திரை நீங்கி எழுந்திருக்கிறார்கள். தங்கள் தங்கள் இடங்களைச் சுத்தம் செய்து கொண்ட பிறகே காலைக்கடன் கழிக்கச் செல்கிறார்கள். பிறகு ஆசிரமத்து வேலைக்காரர்களால் கிணற்றி லிருந்து இறைக்கப் பட்டு நிரப்பப் பெற்றுள்ள தொட்டித் தண்ணீரில் ஸ்நானம் செய்கிறார்கள். சிறிது காலம் திறந்த வெளியில் நிஷ்டையும் தோத்திரங்களும் செய்கிறார்கள். பிறகு காலை 7 மணிக்குக் காலை யாகாரம் செய்து கொண்டு 10½ மணிவரையில் காலைப்பாடங்களைப்படிக்கிறார்கள். பிறகு 11 மணியில் மத்தியான ஆகாரம் கொடுக்கப் படுகிறது. மச்சமாமிசங்கள் ஆசிரமத்தில் சேர்க்கப் படவில்லை. பொதுவான சாப்பாட்டறையில்தான் எல்லோரும் கூடியிருந்து சாப்பிடுகிறார்கள். ஜாதிவித்தியாச நோக்குடைய பெற்றோர்கள் விரும்பினால், தனியே இருத்தியமுது படைக்கப்படும். ஆனால் வந்துசேரும்போது பொதுச்சாப்பாட்டறையில் சேர்ந்துள்ள மாணவன், பிறகு தனியறைக்கு அனுப்பப்படுவதில்லை. யார்க்கும் ஒரேமாதிரி யாகாரம்தான். ஆனால், அசௌக்கிய காலங்களில் வைத்தியருடைய கட்டளையின் பேரில் தனிச்சாப்பாடு தரப்படும். சமையற்காரர்கள் பிராமணர்களேதாம். காலையும் மாலையும் மாணவர்கட்கென்றே மிகுதியாகப் பால்வாங்கப் படுகிறது.

சென்ற வருஷம் கலாசாலையில் 140 மாணவர்கட்கு அதிகமாக இருந்தார்கள். உபாத்தியாயர்கள் 18 பேர். ஐரோப்பியர்களான ரெவரண்ட் ஆண்ட்ரூஸும், பியர்ஸனும் அவர்களுள்சேர்ந்தவர்களேயாவார். அமெரிக்கா யூனிவர்ஸிடியில் பி. ஏ. பரீக்ஷையில் தேறியுள்ள பாபு ஸந்தோஷ சந்த்ர முஸும்தார் என்பவர் அந்த ஆசிரமத்தில் வைத்திருக்கும் ஆதரவு எழுதிமுடியாததொன்றாகும். பாபு ஜகதாநந்தராய் என்பவரும் குறிப்பிடத் தகுந்தவர். இவர் ரஸாயன சாஸ்திர போதகர். இவர் கலாசாலையாரம்பத்திலிருந்தே இங்கு உழைத்து வருகிறார். அவரிடம் சிறிது நேரம் உட்கார்ந்து கலாசாலையைப்பற்றி ஸம்பாஷித்தோமானால், அவர்கலாசாலையின்பிறப்பு வளர்ப்பைச் சொல்லிச் சொல்லி யானந்தவாரிதியில் மூழ்கியெழுந்

திருப்பார். இவர் சில ரஸாயன சாஸ்திர நூல்களை எழுதியிருக்கிறார். வங்காளிபாஷையில் எழுதப்பெற்றுள்ள அந்நூல்களால் இவரதுபெயர் ஆசிரமத்துக்குவெளியிலும் உலாவருகிறது. கலாசாலைத் தலைமை யுபாத்தியாயராகிய ரேபால் சந்திரராய் அவர்கள் சரித்திர பாடம் போதிக்கிறார்கள். ஐரோப்பியர் இங்கிலீஷ்ப் பாடங்கள் போதிக்கிறார்கள். பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த மஹாராஷ்டிரப் பிராம்மணரான மிஸ்டர் பீமராவ் என்பார் கர்னாடக சங்கீதம் கற்பிக்கிறார். பாபு தேவேந்திரநாத டாகூர் என்பவரால் இந்துஸ்தானி சங்கீதம் கற்பிக்கப்படுகிறது. (இவர்நமது ரிஷி தேவேந்திரநாதரல்ல) ஒருமதராஸியாகிய மிஸ்டர் சுப்பராவ்என்பார் அங்கு உபாத்தியாயராக இருந்தார்; ஆனால் சீதோஷ்ண நிலையின் தாங்க முடியாத தன்மையால் விலகியிருக்கும்படியாயிற்று.

ஆசிரமம் ஒருசிறு கிராமம் போலவே இருக்கிறது. சில உபாத்தியாயர்கள்தங்கள்குடும்பத்துடன் வசிக்கிறார்கள். இவர்கட்கும்கலாசாலைப்போசனம் இனமாகவே அளிக்கப்படுகிறது. வேலைக்காரர்கள் இருபது பெயர்கள் இருக்கிறார்கள். வெளிப்புற வீடுகளில் தனிமையாக வசிக்கிறார்கள். நமது டாகூர்குடும்பத்தாரிற் சிலரும்இங்கேயே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். ரவீந்திரநாத டாகூரும் அவரது சிஷ்யர்களும் வசித்து வருகிற சாந்திநிகேதனம் தவிர மற்றைக்கட்டிடங்களெல்லாம் கூரைவீடுகள்தாம். அதுமாத்திரம் தளவரிசை செய்யப்பெற்றதும் மேல்மாடியுள்ளதுமாக இருக்கிறது. கட்டடச் சாமான்களெல்லாம் பிராசீனமுறையை நன்கு தெரிவிக்கக்கூடியனவாக அமைக்கப்பட்டிருக்கின்றன கொக்கி தாழ்ப்பாள்முதலானவைகளெல்லாம் மரங்களாலேயே யாக்கப்பெற்றிருக்கின்றன. பன்னிச் சொல்வதில் பயனில்லை. உயிர்வாழ்க்கையில் அதிகச் செலவைத் தருவனவும் அவசியமில்லாதனவும் டம்பத்துக்கானவுமான ஸாமான்கள் அங்குவிலக்கப்பட்டிருக்கின்றன. சுருங்கியசெலவில் செய்யப்பெற்றனவேனும் அழகாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. விருந்தினர்க் கென்று ஒருவீடும் அமைக்கப்பட்டிருக்கிறது. சிற்சில ஸமயங்களில் சிலர் ஆசிரமத்தைப் பார்த்துப் போகவும் வருவதுண்டு. அவர்கட்கு வேண்டிய சவுகரியங்கள் அங்குச் செய்தளிக்கப் படுகின்

றன. ஆனால் அவை வடதேசமுறைப்படி யிருக்கும்.

மாணவர்கள் மூன்று வகுப்பினராகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். பிரிவு வயதைபநுசரித்தபடியாக இருக்கும். பள்ளிக்கூட மாணவர்கட்கே ஒருவன் தலைவனாக இருப்பான். ஒவ்வொரு வகுப்பினரும் தத்தமக்கென்று ஒவ்வொரு மாணவச் சிறுதலைவரைப் பெற்றிருப்பார். அந்தமாணவச் சிறுதலைவர்க்கும் துணைத்தலைவர்கள் உண்டு. அறுவர் அல்லது எழுவர்க்கு ஒரு துணைத்தலைவனுண்டு. மாணவரும் அத்தலைவர்க் கடங்கிக் கீழ்ப்படிதலுள்ளவராக இப்பார்கள். சிறுசச்சரவுகளையும் கீழ்ப்படியாமையையும் மாணவத்தலைவர்களே விசாரித்துத் தீர்த்து விடுவார்கள். குற்றத்துக்குத் தண்டனை சிறிதேனும் உறுதியுள்ளதாக விருக்கும். குற்றம்செய்தோர் சிறிது காலங்கட்கு விளையாட்டில் சேர்க்கப்படாமலாவது மற்ற மாணவர்களுடன் பேசக்கூடாமலாவது ஒதுக்கிவைக்கப்படுவார்கள். எல்லா மாணவர்கட்கும் முன்னிலையில் தன் குற்றங்களை யொப்புக்கொண்டால் மன்னிக்கப் படுவதுண்டு. உபாத்தியாயர்கள் பிரம்பு என்பதனையே கண்ணால் பார்த்திருக்க மாட்டார்கள் என்று எண்ணுகிறோம். அன்றியும் எவ்விதமான குரூர தண்டனையும் அங்கு இல்லை.

மாணவர்கள் மூன்று வங்காளிப் பத்திரிகைகளையும் ஒரு இங்கிலீஷ்ப் பத்திரிகையையும் நடத்திவருகிறார்கள். அநேகமாக அவைகள் பிழைகள் இல்லாமலே வெளியாகின்றன. எழுதப்பெற்ற வியாஸங்கள் கலாசாலை யங்கத்தினரால் பார்க்கப்பட்ட பின்னரே அச்சிடப்பெறுகின்றன. ஆசிரம புஸ்தகசாலை ஸம்ஸ்க்ருதம் வங்காளி இங்கிலீஷ்பாஷைப் புஸ்தகங்களாலேயே நிரம்பியிருக்கிறது. யாத்திரையையும் வீரத்தையும் பற்றிய புஸ்தகங்களையே மாணவர்கள் மிகுதியும் விரும்புகிறார்கள். பாபு நளினிகாந்த ராய் என்பவரே புஸ்தகசாலைக்கு அதிபராக நியமிக்கப் பட்டிருக்கிறார். அவரே எமக்கு இந்த வியாஸத்தை எழுதுவதற்கு வேண்டிய ஸாதனங்கள் தந்தவராவர்.

இந்த ஆசிரமம் கவர்ன்மெண்டாரது அங்கீகாரத்தைப் பெறவில்லையாதலால், அவர்களது உதவியை எதிர்பாராமலே நடத்தப் பெறுகிறது. கலாசாலைச் செலவுக்குத் தேவையான வருவாய்கள்

நான்கு வகையாயிருக்கின்றன. அவை:— 1. சாந்திநிகேதன மூலதனத்தின் வட்டிவரும்படிகள். இதுவே முக்கியாதாரமாக இருக்கிறது. 2. டாக்டர் ஸர் ரவீந்திரநாத டாகூர் அவர்கள் எழுதியுள்ள புஸ்தகங்களின் விற்றுவரவுகள். இது அடுத்த தாரமாகச் சொல்லப்படும். 3. மாணவர்களின் சம்பளங்கள். 4. டாகூர் அவர்களது நோபல் வெகுமதியின் வட்டி. இவைகளெல்லாம்கூடி ஆசிரமச்செலவுக்குப் போதாதிருப்பின் டாகூர் அவர்கள் கவனித்துக் கொள்ளுகிறார்கள்.

மாணவர்கள் பெரும்பாலும் எல்லாக்காலங்களிலும் உபாத்தியாயருடன் கூடிக்கொண்டே யிருப்பார்கள். மாணவர்களின் படிக்கை யறைகளைப்பற்றிக் கவனிக்கும்படிஉபாத்தியர்களே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உபாத்தியாயர்களும் மாணவர்களும் அருளும்அன்பும் கூடினவர்களாக இருப்பதனால், அந்தக்கூட்டுறவு சுககரமாகவும் ஆனந்தகரமாகவும் இருக்கிறது. மாணவர்களும் தங்கள் வீட்டு வாசத்தைவிட இதனையே விரும்புகிறார்கள். சிற்சில காலங்களில் வயது கூடியமாணவர்கள் வெளிச்சென்று அயல் கிராமங்கட்குள் நுழைந்து அங்குள்ளவாஸிகட்குத்தேசாபிமானத்தைப்போதித்து வருவதுமுண்டு. மாணவர்கட்குப் பரோபகார குணமும் தேசாபிமானமும் சிறுபோதிலிருந்தே போதிக்கப் படுகின்றன.

பாபு ஸந்தோஷ மூலசந்த்தாரரது மேற்பார்வையில் ஒரு தினசரிக்குறிப்புப்புஸ்தகமும் ஆசிரமத்தில் இருக்கிறது. சுத்தமான பால் கொண்டுவந்து கொடுக்கப்படுகிறது. அதிகம் வேண்டுமானாலும் தருவிக்கப் படுகின்றது. ஆசிரமத்து உபயோகத்துக்காகவே மிஸ். B. P. டட் என்பவரால் ஒருவைத்தியசாலையும் நடத்தப்பட்டு வருகிறது. சுரம் சீதபேதி பேதி இவைகள் சிலசமயங்களில்இருப்பதுண்டு. ஆனால் தினசரிக் குறிப்பில் (வைத்தியம்) நால்வர் அல்லது ஐவர்தாம் குறிக்கப்படுகிறார்கள். அதனாலேயே ஆச்சிரமம் சௌக்கிய நிலையில் இருக்கிறதென்பது ஊகிக்கப்படலாகும்.

ஆசிரமத்தை யொட்டி ஒருதந்தித் தபாலாபீஸசும் இருப்பது மாணவர்கட்கு மிகவும் ஆதாரவாக இருக்கிறது. பத்திராதிபர்.

கீழ்நாட்டு நாகரிகமும் மேல்நாட்டு நாகரிகமும்.

நாகரிகமென்பது, மக்கள் முன்னேற்றத்தை யட[illegible]தவரக் காரணமான உலகக் கூட்டுறவில் நிகழும் பலதிறப்ப[illegible] பக்குவ நிலையேயாகும். இதனை இன்னும் விவரமாகச் [illegible] புகுந்தோமாயின், ஒருதேசத்தாரோ அல்லது ஒருகூட்டத்த[illegible]ர கால தேச வர்த்தமானங்கட்கு ஏற்றபடியாக விருத்தியடைந்துவரும் போது, அவர்களில் உயர்ந்தவர்கள் நடந்துகாட்டி[illegible] தேஹயாத்திரையின் வழிகளும் ஆத்மயாத்திரையின் வழிகளுமே யென்பது பொருந்தும். ஆயின், ஒரே தேசத்தாருக்கு[illegible] பக்குவமடையாத ஜீவர்களுக்குத் தாழ்ந்த விஷயங்களில் பிரவ்ருத்தியுண்டாகிச் சில சமயங்களில் அவர்களே ஜனத்தலைமைபூ[illegible] சில ஒழுக்கங்களைக் காட்டியிருக்கலாமாயினும், அவை அத்[illegible]சத்து ஸமுதாய ஜனங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய எடுத்துக்காட்டுகள் ஆகமாட்டா; ஆனால் அவர்களுள்ளும் [illegible]ற்றறிந்தடங்கிய பெரியோர்களது இருவகை யொழுக்கநிலைகளே நாகரிக நிலைகளெனக் கருதப்படுகின்றன. இருவகை யொழுக்கமாவன:—தேஹ ஒழுக்கமும் ஆத்ம ஒழுக்கமும் ஆம். ஆகையால், இங்கு எடுத்துக்கூறப்படுவன, அவ்வத் தேசத்துப் பெரியோர்களால் அங்கீகரிக்கப்பெற்றுப் பொதுஜனங்களால் ஒழுகப்பெற்றுவந்துள்ள நிலைகளே தாம் என்று எண்ண வேண்டும். ஆயினும், நாம் இவண் எடுத்துக் கொண்டது கீழ் நாட்டுக்கும் மேல் நாட்டுக்கும் நாகரிகத்தில் உண்டாயிருக்கும் வித்யாஸமேயாகும்.

கீழ்நாடாவன:—ஆசியாக்கண்டமும் நாம்வசிக்கும் பூமியாகிய இந்திய தேசமும்; மேல்நாடாவன:—ஐரோப்பியக் கண்டமும் அமெரிக்காக் கண்டமும் ஆகும். இவற்றுக்குள் வித்யாஸங் கூறப் புகுந்ததாலேயே கீழ்நாட்டு ஒழுக்கங்கள் மேல்நாடுகளில் இல்லை யென்றுவது மேல்நாட்டு ஒழுக்கங்கள் கீழ்நாட்டில் இல்லை யென்றுவது நாம் என்றுவதற்கு இயலாது. சில மாறுபட்டிருக்கலாமாயினும், அவை பெரும்பாலும் தேசத்தின் சீதோஷ்ண வேறுபாட்டால் உண்டாயிருக்கலாம் என்றே கருதவேண்டும்.

கீழ்நாட்டில் ஆத்ம முன்னேற்றத்தின் உறுதி நிலையாவது கடவுளருளைப் பெற்றுக் கடவுள் தன்மையை யடைந்து நிற்றலேயாகும். அந்த நிலையை யடைந்தவர்கள் ஞானி யென்றும் ரிஷி யென்றும் தீர்க்கதரிசியென்றும் ஏற்றவாறு அழைக்கப்படுகிறார்கள். நமது ஆசியாதேசச் சரித்திரமானது இத்தகைய பெரியோர்களைப் பெறாதிருந்தகாலமேயில்லை யென்பதை வற்புறுத்திக்காட்டும். இத்தகைய பெரியோர்களையே மக்களுள் உயர் பதவியடைந்த மஹான்களென்பார் கீழ்நாட்டார். மேல்நாட்டார் இத்தகையோரை மானுடத் தன்மையின் முடிவு பெற்ற உத்தம மனிதர் என்றே கொள்வர். இவர்கள் சாஸ்திரிகளாகவும் இருக்கலாம். சித்திரிக்கர்களாகவும் ராஜாங்க நிபுணராகவும் இருக்கலாம். ஞானிகளையும் ரிஷிகளையும் பார்க்கிலும் மேற்சொல்லப்பட்ட அத்தகைய மனிதர்களையே மேல்நாட்டார் மிகவும் விரும்பிப்போற்றுவார். இது ஒவ்வொரு மேல்நாட்டாரும் கொண்டுள்ளகருத்தென்ப.

மதவிசாரம் தத்துவவிசாரம் ஆத்மவிசாரம் இவையே கலைகளுக்கும் சித்திரவித்தைக்கும் உயிர்வாழ்க்கைக்கும் மேலானவையென்பார் கீழ்நாட்டார். இக்கொள்கையே இலக்கியங்களிலும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. ஆசியர் சாஸ்திரவாராய்ச்சிகளையும் சித்திரவித்தையையும் நல்வாழ்வு வாழ்வதையும் மறுக்கின்றாரென்றுவது, ஐரோப்பியர் ஆத்மரஹஸ்ய சாஸ்திரங்களையே கவனிக்கிறதில்லை யென்றுவது எண்ணிவிட முடியாது. ஆசிய இலக்கியங்களெல்லாம் ப்ரவ்ருத்தியை யொழித்து நிவ்ருத்தியிற் புகுந்த ஆத்மாக்களுக்கே பெருமைகொடுத்துப் பேசுகின்றன. ஐரோப்பிய இலக்கியங்களோ வீரர்க்கும் அவர்களது சௌர்யத்திற்கும் அவர்கள் மற்றவர்களை யடக்கியாண்ட திறமைக்குமே கவுரவமளித்துப் பேசுகின்றன.

ஸ்வர்க்கமான சுகத்தையொழித்துப் பாரமார்த்திக நிலையைக் கோருவதே உறுதியென்று ஆசியர் கூறுவர். ஸ்வர்க்க சுகமே மனிதனுடைய முடிவு என்று ஐரோப்பியர் கொள்வர். மனுஷ்யபாவத்துக்கு மிஞ்சிய செயலைப்பெறுவதே முடிவான நிலையென்று கீழ்

நாட்டாரும், கடவுள் அருளால் மனுஷரூபத்தை மாற்றிக்கொள்வ
தே முடிவான நிலையென்று மேல்நாட்டாரும் பிடிவாதமாகக் கூறு
வர். ஆசையை யொழித்துவிடுவதே உயர்வான ஆசாரமென்று
கீழ்நாட்டாரும், அவ்வாசைகள் வேறாகமாறுதலே அபிவிருத்தி
யென்று மேல்நாட்டாரும் கொள்வர். மனோசக்தியைத் தடைப்படுத்
துவதே காரியமென்று கீழ்நாட்டவரும், அவற்றையுயர்ந்த பத
விக்கு விருத்தி பண்ணுவதே காரியமென்று மேல்நாட்டாரும்
சொல்லுகின்றனர். சாந்தம் தெளிவு பரோபகாரம் இவற்றையே
ஆசியர் உபதேசிக்கிறார்கள். ஐரோப்பியரோ ஏகாக்ரம் ஏகத்யானம்
கவனம் இவற்றையே உத்ஸாகப்படுத்தி வருகிறார்கள். தேஹத்தின்
புத்திபலத்தையும் நரம்பின் பலத்தையும் தாழ்த்தவேண்டு
மென்று ஆசியரும், அவற்றை உயர்த்தவேண்டுமென்று ஐரோப்பிய
ரும் கூறுகிறார்கள். ஞானியும் பக்தனும் துறவு நிலையையும் யோ
கியும் கர்மியும் புத்தி பலத்தையும் விருத்திசெய்ய வேண்டுமென்
றும் கருதுகின்றனர்.

கீழ்நாட்டாருக்கு நிர்விஷயமாய் ஆத்மா முன்னேறுவதென்
பது ஆத்மபரித்யாகமாகும். மேல்நாட்டாருக்கோ நன்மையே
யாகும். முன்னவர்க்கோ மனிதரது உயர்தரமான ஸாத்யங்களில்
உத்ஸாகத்தைக் காட்டி வெற்றியடைவதாகும். பின்னவர்க்கோ
அதிசயமானவற்றிலேயே உத்ஸாஹத்தைக்காட்டி, அதனால் உலக
வாழ்க்கையின் தினசரி அநுபவநிலையில் முன்னேற்றங்கொண்டு நிற்
பதாகும். முன்னவரது அபிப்பிராயமானது இதரர்களுடைய சுக
துக்கங்களில் அநுதாபங்காட்டுதலாகும். பின்னவரது அபிப்பிராய
மோ ஸ்வகாரியஸித்தியில் ஸாமர்த்தியம் காட்டுதலாகும். முன்ன
வரோ தன்மறுப்பினாலும் பொறுமையாலும் தமக்குற்ற இடரைநீக்
கிக்கொள்வர். பின்னவரோ தமது ஆதிக்கத்தாலேயே தமது இட
ரினைக் கடந்துசெல்வர். முன்னவர்க்கு உலகப்பொதுஜன வாழ்க்கை
யில் உயர்தரமான கதியையே விருத்திசெய்வதில் ஆசையும் அத
ற்கு அநுகுணமாக மனிதரிடத்தும் இதர ஜீவரிடத்தும் உண்மை
யான பொதுநோக்குடையவராயிருப்பதில் ஆசையும், பின்னவர்க்குச்
சுயநன்மையிலும் அதனையநுசரித்ததானபடி ஜீவரிடத்தில் கருணை

யுடைமையில் ஆசையும் பெருகிநிற்கும். முன்னவர்க்கு யாவரிடமும் உறவாடும் நிலைமையில் நினைவும், பின்னவர்க்குச் சுயநன்மையிலும் தனது சரித்திரத்தைப் பெருமைபடுத்திக் காட்டிக்கொள்ளுதலினுமே நினைவும் பிரதான பாகங்களாகி நிற்கின்றன. ஆகையினாலேயே கீழ்நாட்டாரினது உள்ளத்தின் நினைவைப்பற்றியும் மேல்நாட்டாரினது செய்கையைப் பற்றியும் சரித்திரங்களில் அடிக்கடி கவனிக்கும்படி யாகிறது.

கீழ்நாட்டார் பெருமை கருணை சீலம் இவற்றைச் சம்பாதிக்க முயல்கிறார்கள். மேல்நாட்டார் உக்கிரம் தனிமை தேஹசுத்தம் இவற்றையே பெற முயல்கிறார்கள். கீழ்நாட்டாரின் சாஸ்திரங்களும் இலக்கியங்களும் சூசகங்களாகவும், மேல்நாட்டாரின் சாஸ்திரங்களும் இலக்கியங்களும் வெளிப்படையாகவும் விளக்கமாகவும் இருக்கின்றன. கீழ்நாட்டார் அநுமானகாரியங்களையும் யதார்த்தங்களாகவும் மேல்நாட்டார் யதார்த்த காரியங்களையும் அஸாத்யமாகவும் காட்டமுயல்கிறார்கள். கீழ்நாட்டாருக்குக் கபடமின்மையும் ஆத்மசுத்தமும் முக்யமான இயற்கைக் குணங்களாகவும், மேல்நாட்டாருக்கு விசேஷபோகம் தேஹசுத்தம் ஆரோக்யம் என்னும் இவையே இயற்கைக் குணங்களாகவும் இருக்கின்றன.

கீழ்நாட்டு நிபந்தனையெல்லாம் இணங்குந்தன்மையுடையனவாகவும் உ[illegible]தியுடையனவாகவும் இருக்கின்றன. அதனால் அவை சமயா[illegible]லும உயிர்வாழ்க்கைக்குயர்வான கருத்துக்களிலும் வேரூ[illegible]ியிருக்கின்றன. மேல்நாட்டுநிபந்தனையோ இணக்கங்கொ[illegible]னவாகவும் மாறுபடக் கூடியனவாகவும் இருக்கின்றன. கீழ்நாட்டான் இதராது கொள்கைகளையும் கிரமமாகத் தன்னுடன் சேர்த்துக்கொள்ளும் தன்மையினால் வெற்றியடைகிறான். மேல்நாட்டானோ தன்னைச் சூழ்ந்துள்ளாரிடத்திற் பலமான பற்றுடைமையினால் வெற்றி மார்க்கத்தில் நுழைகிறான். இதனாலேயே மேல்நாட்டார் கீழ்நாட்டாரை ஆளும் நிறைமையில் உறுதிகொண்டிருக்கிறார்கள்.

படிப்பிலும் கீழ்நாட்டாருக்கும் மேல்நாட்டாருக்கும் சில வித்யாஸங்கள் காணக்கிடைக்கலாகும். கீழைநாட்டில் உபாத்தியாயர்க்கும் மாணவர்க்கும் பரஸ்பரம் ப்ரீதியும் நேர்த்தியான கூட்டுறவும் காணப்படுகின்றன. அவற்றால் மரியாதையும் வணக்கமும் காணப்படுகின்றன. இம்மாதிரிப் பழக்கத்தாலே அநுதாபசித்தம் விருத்தியாக்கப் படுகின்றது. மேல்நாட்டு உபாத்தியாயரிடத்தும் மாணவரிடத்தும் கண்டிப்பும் ஒழுங்குமே காணப்படுகின்றன. குணதோஷ விசாரணைக்குரிய ஊறுபுத்தியே எல்லாவற்றிலும் உபயோகிக்கப் படுகின்றது. கீழ்நாட்டு உபாத்தியாயர் ஸாதாரணமாக எல்லாவற்றிற்கும் ஸமாதான சித்தத்தையே கொள்கிறார். மேல்நாட்டு உபாத்தியாயர் விவாதத்துடனே தானிற்கிறார். இயற்கையறிவை எவ்வளவுதூரம் விருத்திசெய்யக்கூடுமோ அவ்வளவுதூரம் கீழ்நாட்டான் விருத்திசெய்து கொள்ளப் பிரயத்தனப்படுகிறான். முன்னவன் தனது ஆத்மா பக்குவமடைவதற்குக்காத்திருந்து உயிர் வாழ்க்கையிற் சில த்யாகங்களையும் செய்கிறான். பின்னவன் உயிர் வாழ்க்கையிலேயே தனது ஆத்மாவையும் நுழைத்து உழல்கின்றான். முன்னவன் தான்கருதும் பொருள்களிலுற்ற பிரதானமான தத்துவங்களையுணர்கிறான். ஆனால் அவ்வொன்றினது. தனித்ததெய்விகமானமாறுபாடுகளைக்குறித்துக் கொள்வதில் தோற்றுப் போகிறான். பின்னவன் பொருள்களின் முக்யாதாரமான காரணங்களைக் குறித்துக்கொண்டு அவற்றின் தனிமையின் தெய்விகமுமான குணம்சங்களை விவரிக்கிறான்.

கீழ்நாட்டாரின் ஆத்ம தர்மமானது த்யானத்தையும் உபாஸனையையுமே பற்றியிருக்கிறது. மேல்நாட்டாரின் ஆத்ம தர்மமே ஏகாக்ரதையிலும் ஸ்வதாத்பர்யத்திலுமே நிலைத்திருக்கிறது. முன்னவர் சலனமற்ற தன்மையைப் பழகுகிறார். பின்னவர் ஆண்மையை மாத்திரம் பழக்குகிறார். முன்னவர் உபதேசத்தாலேயே கற்றுக் கொள்கிறார், பின்னவர் தமது தீர்மானத்தினாலேயே கற்றுக் கொள்கிறார். முன்னவர் தமது உறுதியைக் கைக்கொண்டு அதனையநுபவத்திற் கொண்டுவர முயல்கிறார்; பின்னவர் தாம் பற்றியுள்ளதையே யுறுதியாகக் கொள்கிறார். முன்னவர் உலகத்துக்குச்

சாட்சியாக இருக்கிறார். பின்னவர் நடனாக இருக்கிறார். ஒவ்வொன்றும் நல்ல பயன் தருவதே. எந்தத் தத்துவசாஸ்திரியும், "எது உயர்ந்தது?" "எது தாழ்ந்தது?" என்று கணிப்பதற்குப்புகார் என்று எண்ணுகிறோம். ஏனெனில், சிநேகாஷ்ணங்கட்கு ஏற்பக் குணங்கள் அமைகின்றனவாகலின் என்க. கடவுளால் ஏற்படுத்தப் பெற்ற நியதியைத் துணைப்பற்றியே ஒவ்வொரு ஆத்மாவும் முன்னேற்றமடையத் தொடங்கி யிருக்கிறது. அவரது கோட்பாட்டையும் சட்டத்தையும் முற்றும்உணர்ந்தவர் அன்றோ இவற்றுக்கு ஒரு குறைகூறவேண்டும். அத்தகையர் இல்லையென்றே சொல்லலாகும்.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

மகன்றந்தைக்காற்றுமுதவி.

இவ்வாக்கியம், தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரால் அருளிச்செய்யப்பட்ட திருக்குறளிற் புதல்வர்ப்பேறு என்னும் அதிகாரத்தின்கண் உள்ளதாகும். இதற்குப் பரிமேலழகியார் "கல்வியுடையனாக்கிய தந்தைக்கு மகன்செய்யுங்கைம்மாறாவது" என்று உரை யெழுதியுள்ளார். கைம்மாறு என்பதற்குப் பிரதியுபகாரம் என்பது பொருள். இப்பொழுது யான் இவ்வியாசம் எழுதத்துணிந்ததன் நோக்கம், "கல்வியுடையனாக்கிய" எனஎதற்காக வருவித்துச் சேர்த்துக்கொண்டிருக்கலாம். பிரதியுபகாரம் என்ற பொருள்தரக்கூடிய கைம்மாறென்னுஞ் சொல்லை உதவியென்னும் பதத்திற்கு உரையாக எதைநோக்கி எழுதியிருக்கலாம் என்பனவற்றை முக்கியமாகக் கொண்டு அவற்றினின்றும் சிலவிஷயங்களை யெழுதலா மென்பதே.

உதவி யென்னும் பதத்திற்குப் பிரதியுபகாரம் என்றுபொருள் தரக்கூடிய கைம்மாறு என்பதை உரையாக எழுதியுள்ளமைபால் முன்பே பிதாவானவர் புத்திரனுக்கு யாதேனும் ஓர்உபகாரத்தைச் செய்திருத்தல்வேண்டுமென்றும், அதற்குப் பிரதியாகப் புத்திரன்

செய்யும் உபகாரமென்றும், பொருள் தோன்றலாம். இனி, பிதா புத்திரனுக்குச் செய்த உபகாரம் யாதாயிருக்கலாம் என்பதையும், அதற்குப் பிரதியாகப் புத்திரன்செய்யவேண்டிய உபகாரம் யாது என்பதையும் நாம் யோஜிக்கவேண்டும். "தந்தை மகற்காற்று நன்றி யவையத்து, முந்தியிருப்பச் செயல்" என்று நம் திருவள்ளுவ நாயனார் தந்துள்ள ஆணையை மேற்கொண்ட உத்தமத் தந்தைமார் தங்களுடைய புத்திரர்களைப் படித்தோர்களது சபையினிடத்திலே அவரினும் மேம்பட்டிருக்குமாறு கல்வி கற்பித்தே யிருப்பர். இத் துணிவுகொண்டே புத்திரன்பொருட்டுக்கட்டளையிட்டுக் கூறியதூம் இப்பொழுது எடுத்துக்கொண்ட விஷயசத்தின் பெயருமாகிய "மகன்றந்தைக் காற்றுமுதவி" என்ற குறளடிக்கு நம் பரிமேலழகியார் "கல்வியுடையனாக்கிய தந்தைக்கு மகன்செய்யுங் கைம்மாறாவது" என்று உரைவரைந்துள்ளார். நிறைந்தசெல்வமுடையவனாக்குதல் முதலிய வேறுநலன்களைச்செய்திருத்தல் கூடாதா? கல்வியுடையனாகத்தான் ஆக்கியிருத்தல்வேண்டுமா? என்று ஆட்சேபம் நிகழலாம். அச்செல்வமுதலியனவெல்லாம் துன்பத்தைத் தரத் தக்கனவாதலாலும் கல்வியே எப்பொழுதும் இன்பத்தைத்தரத்தக்கதாதலாலும் கல்வியுடையனாக்குதலையே பெரியோர்கள் பெரிதெனக் கருதியுள்ளார்கள். அரசனைக்காட்டிலும் செல்வச்சிறப்புடையான் ஒருவனும் உலகத்தில்லையன்றோ? அங்ஙனமாக, அத்தகைய அரசனுக்கும் கற்றோனுக்குமுள்ள தாரதம்மியத்தைத் தெள்ளிதிற் கற்பித்துக் கல்வியுடையோரது பெருமையை விளக்குகின்ற கீழ் வரும் இரண்டுபாடல்களும் அறியத்தக்கன.

"மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்— மன்னற்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு"

"பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றொவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண்"

இவற்றாற் கல்வியுடையான் எங்கேசென்றாலும் அவனுக்குமேன்மையே கிடைக்கும் என்றும், ஆகலால் அவனைத் துன்பம் வந்தணுகா தென்றும், செல்வமுடையவனுகிய அரசன் தன்தேசத்தை விட்டுப் பிறதேசத்துக்குச் செல்லுவானுயின், அங்குள்ளோர்கள் அவனைத் தெரிந்திராராதலாலும், தெரிந்தாலும்அவர்களும் செல்வமுடையவராயிருப்பின், நம்மைப்போல இவனுமொருவன்என்றுமதியாராதலாலும் செல்வமுடையரல்லாதார் மதிக்குமதிப்பை அவ்வரசன்தேடாணுதலாலும், வேறுவகைகளால் அவர்கள் தெரிந்துகொள்ளக்கூடிய காரணங்கள் அவனிடத்தில் இல்லாமையாலும், அவனுக்கு அச்செல்வம் பயப்பது துன்பமேயாமென்றும் நாம்விரிந்துப் பொருள் கொள்ளக்கிடக்கிறது. ஆகையால், அரசனாயிருப்பினும் தன் புத்திரனைக் கல்வியுடையனுக்குதலைக் காட்டிலும் செல்வமுடையவனுக்குதலில் மேன்மையில்லை யென்று குறிப்பாகத் தோன்றுதலால், ஏனையோர்களும் தங்களுடையபுத்திரர்களைக் கல்வியுடையராக்க வேண்டுமென்பது சொல்லாதேயமையும்.

பெண் கொள்ளப்போமிடத்தும் அப்பெண்களின் தந்தைமார் இப்பிள்ளை கல்வியிறுற் பரந்த ஞானமுடையவனு இருக்கின்றானு? என்று கவனிப்பதே பெருவழக்கம். இதனை நாலாட்சியிலும் காணலாம். “கல்வியினுற் குறைபா ஞான, பலம்வேண்டு மென்றிருப்பார் தந்தைமார்” “பெண்ணுதவுங் காலைப் பிதா விரும்பும் வித்தையே” என்பனவற்றைக் காண்க. உலகத்திற் றங்களுடைய புத்திரர்களுக்குக் கல்யாணஞ்செய்வித்துக் களித்திருத்தலை விரும்பாதார் பெரும்பாலும் இரார். இதனைக் “கல்யாணமுடித்துக் காணேனு” “இவன் கழுத்தில் மாலைவிழுந்தபிறகாவது சாக மாட்டேனு” “சடங்குமுடித்துச் சாகேனு” என்ற வழக்குகள் வற்புறுத்தும். இவற்றாற் கல்யாணஞ் செய்வித்தல் காரணமாக வாவதுயாவரும் தங்களுடைய புத்திரர்களைக் கல்வியுடையராக்கியே யிருப்பார்களென்றும், கல்வியுடையராக்காதார் கல்வியு[illegible]ரக்க வேண்டுமென்றும் தெளிக. இன்னும் “புருஷ[illegible] [illegible]ாம தெடுத்தபேர் மெய்ஞ்ஞானபோதத்தை யடைய[illegible] [illegible]ற

விடத்தில் மெய்ஞ்ஞானபோதத்தையடைவது கல்வியறிவாலென்று கொண்டு கல்விப்பெருமையைக் காண்க. "பழுதில் தவங்கள் மிகப்புரிந்தும் பயந்த மைந்தர் தமையவர்க்குக், குழுமு மவையின் முந்திருப்ப வறிவு கொளுத்தல் வேண்டுமால்" என்று பெரியோர் கள் தங்கள் நூல்களில், நாயனார்கூறிய "அவையத்து முந்தி யிருப் பச்செயல்" என்றதன்கருத்தை உள்ளது உள்ளவாறே போற்றி எடுத்தாண்டிருக்கிறார்கள். இதனாலும் கல்வியுடையராகுதலின் பெருமை விளங்கும். இவற்றையெல்லாம் யோசித்து மேலோ ராசாரத்தை யநுசரித்த பெரியோர்கள் தங்கள்புத்திரர்களை மேலோரவையின் முந்திருக்குமாறு கல்வியுடையராக்கியேயிருப் பார்களென்று நாம் துணியவேண்டும்.

இனி இத்தகைய கல்வியுடையனுக்கியதந்தைக்கு மகன் செய்யும் பிரதியுபகாரம் யாதென்று நாம் யோசிக்குமிடத்துத் தன் னுடைய கல்வியறிவையும் ஒழுக்கத்தையும் பார்த்தவர்கள் இத் தகைய புத்திரனைப் பெறுவதற்கு இவனுடைய தந்தை எத்தகைய தவத்தைச் செய்திருப்பான் என்று சொல்லும்படியான சொல்லை உலகத்திலே உண்டாக்குதலாம். இவற்றையெல்லாம் உள்ளடக்கியே நாயனார்,

> "மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
> யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

என்று சுருக்கிக் கூறியுள்ளார்.

இத்தகைய உதவியைத் தம் தந்தைமார்க்குச் செய்து சிறப்புற் றமைக்கு ஸ்ரீ ராமபிரானும் தருமபுத்திரனும் பெருஞ்சான்றவர். இவ்விருவர் சரித்திர விசேடங்களையும் இராமாயணத்தையும் பாரதத் தையும் படித்தறிந்தோர்களும் கேட்டறிந்தோர்களும் நன்குதெரிந் திருத்தல் கூடும். படித்தறியாதோரும் கேட்டறியாதோரும் படித் தும் கேட்டும் அறிந்துகொள்ளலாம்.

S. ஆழ்வாரையங்கார்,
உதவியுபாத்தியாயர்,
க. வி. கலாசாலை ஜோசர்.

ஐரோப்பிய யுத்தத்தில் யார் ஜயம்பெறுவார்?

நமது நண்பர்கள் ஒவ்வொருவரும் இப்பெரிய யுத்தம் சீக்கிரம் முடிவடையவேண்டுமென்றுபிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்களென்பது உண்மையான விஷயம். இதைக்குறித்து பம்பாயில்பிரசுரமாகும் டைம்ஸ்ஆப்இந்தியா என்னும் பத்திரிகையில் ஒரு வேடிக்கைத் துணுக்கு காணப்படுகிறது. பலர் படித்துத் தெரிந்துகொள்ளுவதற்காகவே கீழேகுறிப்பிடுகிறேன்.

நமது ஜார்ஜ் சக்கிரவர்த்தி இங்கிலாந்து அரசர் பிறந்த	ஹூ	1865
இராஜ்யபாரத்தை வகித்த	ஹூ	1910
அரசாண்டுவரும் காலம்		7
நடப்பு வயது		52
		3834

பிரசிடெண்ட் வில்சன் பிறந்த	ஹூ	1856
இராஜ்யபாரத்தை ஒத்துக்கொண்ட வருஷம்		1912
அரசாண்டு கொண்டு வரும்காலம்		5
நடப்பு வயது		61
		3834

பிரசிடெண்ட் பயன்கேர் பிறந்த	ஹூ	1860
இராஜ்யத்திற்கு வந்த	ஹூ	1913
அரசாண்டுகொண்டு வரும் காலம்		4
நடப்பு வயது		57
		3834

இடலிஅரசர் பிறந்த	௵	1869
இராஜ்யத்திற்கு வந்த	௵	1900
அரசாண்டு கொண்டுவரும் காலம்		17
நடப்பு வயது		48
		3834

ருஷ்ய சக்கிரவர்த்தி பிறந்த	௵	1868
ராஜ்ய பாரத்தை வகித்த	௵	1894
அரசாண்டு கொண்டுவரும் காலம்		23
நடப்பு வயது		49
		3834

பெல்ஜியம் அரசர் பிறந்த	௵	1879
ராஜ்யத்திற்கு வந்த	௵	1912
அரசாண்டு கொண்டுவரும் காலம்		5
நடப்பு வயது		38
		3834

ஜப்பான் சக்ரவர்த்தி பிறந்த	௵	1879
ராஜ்யபாரத்தை வஹித்த	௵	1912
அரசாண்டு கொண்டுவரும் காலம்		5
நடப்பு வயது		38
		3834

ஸெர்விய ராஜா பிறந்த	௵	1844
ராஜ்யத்திற்கு வந்த	௵	1903
அரசாண்டு கொண்டுவரும் காலம்		14
நடப்பு வயது		73
		3834

மாண்டிநேக்ரோ அரசர் பிறந்த	௵ 1841
ராஜ்யத்திற்கு வந்த	௵ 1910
அரசாண்டு கொண்டுவரும் காலம்	7
நடப்பு வயது	76
	3834

3834 இரண்டால் வகுத்தால் வரும் ஈவு 1917. என் இரண்டால் வகுக்கவேண்டும் என்ற சந்தேகம் சிலருக்கு உற்பவிக்கலாம். அதற்குக்காரணமாவது:— நமது நேசக்கக்ஷிபார் ஒருபக்கமும் ஜெர்மன்கக்ஷியார் மற்றோர் புறமும் இருப்பதால்தான். குறிப்பு:— நேசக்கக்ஷிபார்களின் பிறந்த வருஷம் அரசாக்ஷிக்கு வந்த வருஷம் அரசாண்டு கொண்டுவரும் வருஷம் நடப்புவருஷம் எல்லாம் சரிபாகவே வருவதன் நிமித்தம் நம் நேசக்கக்ஷிபார்களுக்கே கட்டாயமாய் ஜயம் உண்டாகுமென்பது உள்ளங்கைநெல்லிக்கனிபோல் விளங்குகின்றது.

R. ராஜகோபால்ராவ்

சுதேசமித்திரன் பிரதிநிதி.

அதிசய விஷயங்கள்.

1. தூக்கணாங்குருவி:—இந்தப்பக்ஷி நாளொன்றுக்கு 6000 ஈக்களை விழுங்கும்.

2. ஒருமுறையில் இரண்டு கன்றுக்குட்டிகள்:—தஞ்சை ஜில்லா பாபநாசம் தாலூகா பூண்டிக்கிராமத்தில் கொடிக்கால் தெருவில் இருக்கும் பேரசாமிப்பிள்ளை என்பவர் வீட்டில் ஒருபசுமாடு ஒரே முறையில் இரண்டு கன்றுக்குட்டி போட்டுச் சவுக்கியமாய்ப் பாலுக் கறந்து வருகிறது.

3. பேசும்பூனை:—பாம்பபாணம் சிவன்கோவில் வடக்குவீதியில் காசி என்பவன் வீட்டில் ஓர்பூனை இருக்கிறதாகவும், அது எவர்கள் எக்மாதிரி பேசினார்களோ அதேமாதிரியாகத் திருப்பிப்பேசினதாகவும் சொல்கிறார்கள்.

இந்துநேசன்.

உ

சிவமயம்.

சுலக்ஷணை.

—(:✲:)—

உலகை மயக்கு முருவமார் பெண்கள்
திலகஞ் சுலக்ஷணை தேவி—யிலகவடன்
காதை நவீனவழி காசினியிற் சொல்லநா
மாதை மனதே மதி.

வயோதிகன் வதுவை.

—:(o):—

நீண்டு அடர்ந்த சோலைகளாலும், சண்பகம் மந்தாரம் பாரிஜாதம் மனோரஞ்சிதம் இருவாட்சி ரோஜா மல்லிகை முல்லை முதலான மரஞ் செடி கொடிகளோடு கூடிய நந்தவனங்களாலும், களங்கமற்ற பளிங்கேபோல் தன் அடிப்பாகத்துள்ள பொருள்களை விளக்கக்கூடிய நீர் நிறைந்ததும், தென்னை கமுகு மா பலா வாழை முதலிய விருக்ஷங்கள் சூழப்பெற்றதுமான தடாகங்களாலும், கடலோ எனக் கண்டோர் அதிசயிக்கும் கருநீலநிறம் வாய்ந்த அலைகள் இரைந்து ஆர்ப்பரிக்கும் அகழியாலும், கைதேர்ந்த சிற்பிகளால் நவநவமான நாஞ்சில்கள் அமைக்கப்பெற்ற கோட்டைச்சுவராலும் சுற்றிலும் அலங்கரிக்கப்பட்டு நடுவே நாற்புறமும் நான்கு கோபுர வாயில்களையும் ஆஸ்தான நிலையங்களையும் அந்தப்புரமாளிகைகளையும் ஆலோசனைஸ்தானங்களையும் பற்பல நிலவறைகளையும் தன்னிடத்தே அமையப்பெற்ற புவனாலயத்து அரண்மனையின் பொற்சிகரங்களின்மேல், அனலஹுல ஆடிமீ கூஉ காலை ஆறுமணிக்கு ஆகாயத்தில் பரமபுருஷனான மஹாவிஷ்ணுவின் சரீர காந்தியை நிகர்த்த நீர்கொண்டு இருண்ட மேகங்களின் மேல் விளங்குகின்ற வானவில்லினிடையில் உதயமாகிற சூரியனது கிரணங்கள் பிரகாசித்தன.

மேற்கூறிய அரண்மனையானது சுமார் நானூறு வருஷங்களுக்குமுன் கட்டப்பட்டது. இந்த அரண்மனையின் பெரும்பாகம் உபயோகப் படுத்தப்படாமல் சாத்தப் பட்டிருக்கிறது. யாராவது விருந்தினர் வந்தால் மாத்திரம் சாத்தப் பட்டிருக்கு மிடங்கள் திறந்து காட்டப்படும். அரண்மனையின் பின்பாகத்தில் உபயோகமில்லாதிருக்கும் இடத்தில் உள்ள ஒரு பெரிய சுரங்கத்தில் அவ்வரண்மனையின் சொந்தக் காரர்களுடைய முன்னோர்களின் சவப்பெட்டிகள் வைக்கப் பட்டிருக்கின்றன. சலவைக் கல்லாற் செய்யப்பட்ட சிலை யொன்று அங்கு இருக்கின்றது. அரண்மனைக்கும் அதைச் சார்ந்த தோட்டத்திற்கும் பின்னால் பெரிய நதியொன்று ஓடிக்கொண்டிருக்கின்றது.

நம்முடைய கதையாரம்பத்தில் இந்தப் புராதனமான அரண்மனையின் சொந்தக் காரராயிருந்த ஜமீந்தாரின் பெயர் மானவன். அவருக்கு சுவேதவதி என்னும் பட்டணத்திலும் ஒரு அரண்மனை உண்டு. சுவேதவதி புவனாலயத்திற்கு நூறு மைலுக்கு அப்பாலுள்ள பட்டணம். புவனாலயம் ஜமீந்தார் பெரும்பாலும் சுவேதவதியிலுள்ள அரண்மனையிலேயே வசித்து வந்தார். இவருக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கும். இவருடைய மனைவி இளமையிலே இறந்துவிட்டபடியால் இவர் தனியாய் வசித்து வந்தார். தமக்குப் பிள்ளைகள் இல்லாததனால் இவர் தம்முடைய தம்பி மகனாகிய துஷிதன் என்பவனைச் செல்வமாய் வளர்த்தார். துஷிதனுடைய தாய்தந்தையர் அவனுடைய சிறுபிராயத்திலேயே இறந்து விட்டனர். அவனுக்கு வயது வந்தபின், அவன் தன் பெரியதகப்பனார் மேற்பார்வையில்லாமல் தன்னிஷ்டப்படி திரியலானான். மானவனும் தம் சகோதரன் புத்திரனைக் கவனித்துப்பாராமல் அவனுக்கு வேண்டிய பணத்தை மாத்திரம் கொடுத்துவந்தார். துஷிதன் கெட்ட சினேகிதர்களுடன் கூடி மனம்போனபடியெல்லாம் திரிந்து சூதாடியாகவும் பெருங்குடியனாகவும் ஆனான். அவன் தன் மிதமிஞ்சிய செலவிற்கு ஜமீந்தார் கொடுக்கும் பணம் போதாமல், மானவன்

இறந்த பிறகு அவனுடைய ஆஸ்தியெல்லாம் தன்னைச் சேரப் போகிறதென்று சொல்லி ஏராளமான தொகையைக் கடன்வாங்கிச் செலவு செய்தான்.

துஷிதனுடைய நிலைமை தெரிந்தபோது, மிகவும் கோபம் கொண்டு அவனுக்குத்தன் ஆஸ்தி சேராமலிருக்க வழி தேடவேண்டுமென்று, மானவன் தீர்மானித்துக் கொண்டார். இந்தத் தீர்மானத்துடன் அவர் சுவேதவதியிலிருந்து புவனலயத்திற்குச் சென்றார். அங்கே அவருடைய குடியானவனொருவனுக்கு சுலக்ஷணு என்னும் பெயருடைய அழகுவாய்ந்த புத்திரி ஒருத்தி இருந்தாள். சுலக்ஷணு பதினறு வயதுள்ள பெண். ஜமீந்தார் சுலக்ஷணுவைக் கல்யாணம் செய்து கொள்ள உத்தேசித்திருப்பதாகச்சொன்னர், அவளுடைய தாய்தந்தையர்கள் ஜமீந்தாரின் வயதைப் பாராமல் அவருடைய ஆஸ்தியையும் அந்தஸ்தையும் பார்த்துப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்க ஒத்துக் கொண்டார்கள். கல்யாணமும் ஒரு சுபதினத்தில் மங்களமாய் நிறைவேறிற்று. இதை வாசிக்கும் நேயர்களே! இந்தக் கல்யாண தம்பதிகள் வயதால் மிகுந்த தாரதம்மியம் உடையவர்களென நீங்கள் நினைக்கலாம். விதவா விவாகம் கூடாதென்ற கட்டுப்பாட்டையுடைய பிராமணர் முதலிய ஜாதியாருள்ளும் இதனினும் ஏற்றத் தாழ்வான பிராயமுள்ள மணமகனும் மணமகளும் காணப்படுகிறார்களென்பது உங்களுக்குத் தெரிந்த விஷயமே.

தன்னுடைய பெரிய தகப்பனாரின் கல்யாணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டபோது துஷிதன் "கிழவன் கலியாணம் செய்து கொண்டாலென்ன? அவனுக்குச் சந்ததி உண்டாக மாட்டாது. ஆகையால் அவன் இறந்த பிறகு அவனுடைய அளவிறந்த சொத்தும் ஜமீந்தார் என்ற பட்டமும் நம்மைத்தான் சேரும்" என்று தனக்குள் நினைத்துக் கொண்டான்.

கல்யாணம் நடந்து ஒரு வருஷமானதும் சுலக்ஷணுவிற்கு விமலா என்ற ஒரு பெண்குழந்தை பிறந்தது. விமலா பிறந்தஇரண்டு

வருஷங்கட்கெல்லாம் அசிரா என்ற மற்றொரு பெண் குழந்தை உற்பவித்தது. பின்னும் இரண்டு வருஷம் சென்று மதிமான் என்ற ஓர் ஆண் குழந்தையைச் சுலக்ஷணு பெற்றாள். அக்குழந்தைக்குத் தோளில் கிளிமூக்கு மாங்காய் போன்ற மச்சமொன்றிருந்தது. அந்த மச்சத்தைப் பார்த்தவர்கள், சுலக்ஷணு கர்ப்பமாயிருந்த போது மாம்பழத்தின்மேல் ஆசைப்பட்டிருக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டார்கள்.

மானவனுக்கு ஆண்குழந்தை பிறந்த செய்தியைக் கேட்ட துஷிதன் மனதில் கலக்கம் உண்டாயிற்று. அவனுக்குக் கடன் கொடுப்பவர்களும் கொடுக்கமாட்டோமென்றார்கள். ஆகையால் துஷிதன் எப்படியாவது மானவனுடைய ஆண்குழந்தையைத் தொலைக்க வழிதேடினன். இதற்காக வீரசிங்கம் என்ற பக்காத் திருடனைக் கண்டு அவன் மூலமாய் ஏற்பாடுகள் செய்தான். அத்திருடனுக்குச் சுமார் இருபத்துமூன்று வயதிருக்கும். ஐந்நூறு ரூபாய் கொடுத்தால் மானவனுடைய ஆண்குழந்தையைத் திருடிக் கொண்டுவந்து கொன்று விடுவதாக அவன் துஷிதனிடம் சொன்னன். அதற்குச் சம்மதித்தவனாய்த் துஷிதன் வீரசிங்கத்திற்கு இருநூறு ரூபாய் முன்பணமாகக் கொடுத்தான்.

வீரசிங்கம் புவனலயத்திற்குப்போய்ச் சிலநாட்கள்வரை ஜமீந்தாரின் அரண்மனையைச் சுற்றித்திரிந்துகொண்டிருந்தான். ஒருநாள் ஒருவேலைக்காரி பிறந்துமூன்றுமாதமான மதிமான்என்னும்குழந்தையைக் காற்றுக்காக வெளியே கொண்டு போனள். ஒரு மரத்தடியில் பதுங்கிக்கொண்டிருந்த வீரசிங்கம் திடீரென்றுவெளிப்பட்டு, வேலைக்காரியின்கையிலிருந்தகுழந்தையைப் பிடுங்கிக்கொண்டுகாட்டுக்குள் நுழைந்துவிட்டான். அக்குழந்தையின்கதிஎன்னயிற்றென்பதை இப்பொழுது சொல்ல வேண்டிய அவசியமில்லை. வீரசிங்கம் குழந்தையின் மேல்வஸ்திரங்களைக் கொண்டுபோய்க்காட்டி, தான் அதைக் கொன்று விட்டதாய்ச்சொல்லி துஷிதனிடமிருந்து பாக்கி மூந்நூறு ரூபாயையும் பெற்றுக் கொண்டான். துஷிதன் தன்மேல் சந்தேகம் வராதபடி சுவேதவதியிலேயே வசித்துவந்தான்.

வீரசிங்கம் பிள்ளையைப் பறித்துக்கொண்டு ஓட்டமெடுத்தவுடன், வேலைக்காரி அலறிக்கொண்டு அரண்மனைக்குப்போய் நடந்த சமாசாரத்தைச்சொன்னுள். அரண்மனையில் பெருங்கூக்குரலுண்டாயிற்று. ஜமீந்தாரும் அவர் மனைவி சுலக்ஷணுவும் மிகவும் கொடிய துக்கத்தை யடைந்தார்கள். பலதிசைகளிலும் பற்பல ஆட்கள் குழந்தையைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக அனுப்பப்பட்டார்கள். தேடப்போனவர்களெல்லாம் குழந்தையைக் காணுமல் திரும்பிவிட்டார்கள். சுலக்ஷணு நல்ல தைரியமான மனதையுடையவளாதலால் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு புருஷனுக்கும் தேறுதல் கூறி, அவரைப்பார்த்துப் பின்வருமாறு சொன்னுள்:- "துஷிதன்தான் நம்முடைய குழந்தையை ஆள்வைத்துத் திருடியிருக்கவேண்டும். அவன் குழந்தையைக் கொன்றிருக்கமாட்டான். தங்களிடத்தில் ஏதாவது பணம் பறிக்கலாமென்று அதை மறைத்து வைத்திருப்பான். நான் எல்லாவற்றிற்கும் சுவேதவதிக்குப்போய் விசாரிக்கிறேன். நீங்கள் என்னுடன் கூடவரவேண்டாம். நான் என்னைப் புவனலயம் ஜமீந்தாரிணி என்று தெரிவித்துக் கொள்ளாமல் ஒரு சாதாரண ஸ்திரீயைப் போலிருந்து விசாரித்தாற்றான் துப்புத்தெரியும்." மானவன் அதற்குச் சம்மதிக்க சுலக்ஷணு புவனலயத்திலிருந்து புறப்பட்டுச் சுவேதவதி போய்ச் சேர்ந்தாள்.

சேர்ந்து பத்துப்பதினைந்து தினங்களான பிறகு பிள்ளை இருக்கிற இடம் தெரிகிறதாகவும், தான் அதை உயிருடன் பார்த்ததாகவும், இன்னும் சிலதினங்கள் சென்று தான் பிள்ளையைத் திருப்பிக்கொண்டு வரமுடியுமென்றும் சுலக்ஷணு ஜமீந்தாருக்கு எழுதினுள். கிழப்பிராயத்தில் அருமையாகப்பெற்ற ஆண்குழந்தையைக் கள்ளர் கைப்பற்றின துக்கத்தினுல் மனமுடைந்து நோயுற்று வருந்திய மானவன், குழந்தை உயிரோடிருக்கிறுன் என்று எழுதியிருந்த மனைவியின் கடிதத்தைப் பார்த்ததனுல் உண்டாகிய மிதமிஞ்சிய சந்தோஷத்தால், அதிக வியாதியை யடைந்தான். மிதமிஞ்சிய சந்தோஷம் மனமாறுட்டத்தையும் மரணத்தையுங்கூட உண்டு

பண்ணுமென்பதை, சிலநாட்களுக்குமுன் நடந்த பம்பாய் லாட்டரியில் பெரும்பரிசு கிடைத்த ஒரு சாமானியனுக்கு ஏற்பட்ட எல்லையற்ற சந்தோஷம் சித்தப்பிரமையை உண்டுபண்ணியதும், அமெரிக்காவில் பிச்சையெடுத்து ஜீவனம் செய்துவந்த ஒரு ஸ்திரீக்கு லாட்டரியில் கிடைத்த பெரும்பரிசினால் உண்டாகிய அளவுகடந்த சந்தோஷம் மரணத்தைவிளைவித்ததும், நன்குவிளக்குகின்றன. இது நிற்க, வியாதிநாளுக்குநாள் அதிகப்பட்டு மானவன் இறந்துபோனார்.

இச்செய்தியைக் கேட்ட துஷிதன் தன் பெரியதகப்பனார் இறந்துவிட்டபடியால் தான் புவனாலயம் ஜமீந்தார் ஆகிவிட்டதாய் எண்ணிக்கொண்டு புவனாபத்திலிருக்கும் அரண்மனைக்கு வந்தான். புருஷனிறந்த செய்தியைக் கேட்ட சுலக்ஷணாவும் அதேசமயத்தில் புவனாலயத்திற்கு வந்தாள். சுலக்ஷணாவைப் பார்த்து துஷிதன் சொல்லுகிறான், "நீ ஐந்தாறு வருஷத்திற்குமுன் ஒரு சாதாரணக் குடியானவன் மகளாயிருந்தாய். இப்பொழுது நீ மறுபடியும் அந்த நிலைமைக்கு வந்துவிட்டாய். நான் அப்பொழுது ஜமீனுக்கு வாரிசாயிருந்தேன். இப்பொழுது ஜமீந்தாராகி விட்டேன்."

சுலக்ஷணா, "நீ அப்பொழுது இருந்தபடியே இப்பொழுதும் இருக்கிறாய். என்னுடைய காணாமற்போன கண்மணியாகிய மதிமான் அகப்பட்டுவிட்டான். அவன்தான் இப்பொழுது ஜமீந்தார்" என்று சொல்லிக் குழந்தையை எடுத்துக் கொண்டுவந்து அதன் தோளிலிருந்த கிளிமூக்கு மாங்காய்போன்ற மச்சத்தைக் காட்டினாள். குழந்தையையும் அதன்தோளிலிருந்தமச்சத்தையும் பார்த்தவுடன் துஷிதன் பிரமித்துப்போனான். அவனுடைய எண்ணங்களெல்லாம் வீணாயின.

தன்னுடைய பரிதாபகரமான நிலைமையைச் சுலக்ஷணாவிற்குத் தெரிவித்து, தன்னிடத்தில் இரக்கங்காட்டும்படியாகத் துஷிதன் அவளைப் பிரார்த்தித்தான், அவளும் அவனுக்கு இரங்கியதாகச்சொல்லி அன்று இரவு பத்துமணிக்குவந்தால் அரண்மனையிலுள்ள நிலவறைகளொன்றில் பதினாயிரம் ரூபாய் ஒளித்துவைக்கப்பட்டிருப்பதாகவும், அதிற் பாதியை அவனுக்குக் கொடுப்பதாகவும் சொன்னாள்.

அவன் அப்பணத்தை வாங்கிக்கொண்டு தூரதேசத்திற்கு ஓடிப் போய்விட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாள். அதற்குச்சம் மதித்துத் துஷிதன் இரவு பத்துமணிக்கு வந்தான். அரண்மனையி லுள்ள நிலவறைகள் அதற்குப்பின்னால் ஓடின ஆற்றிற்குக் கீழே தோண்டப்பட்டிருந்தன. சுலக்ஷணு தன் அந்தரங்கத்தாதி கமலினி என்பவளைச் சுரங்கவாயிலில் வைத்துவிட்டுத் துஷிதனை உள்ளே கூட்டிக்கொண்டு சென்றாள்.

இது நிற்க, வீரசிங்கம் துஷிதனிடமிருந்து வாங்கின ரூபாய் ஐந்நூறும் செலவழிந்துவிட்டபடியால், மறுபடியும் துஷிதனிடத் திற்குப் போனால் அவன் ஏதாவது வேலை ஏவிக் கூலிகொடுப்பான் என்று நினைத்து அவனைத்தேடினான். அவன் புவனாலயத்திற்குப் போயிருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கே போய்விசாரித்தான். புவ னாலயத்திலிருந்து துஷிதன் திடீரென்று திரும்பிப்போய்விட்டதாக வும், மானவனுடைய காணாமற்போன குழந்தை அகப்பட்டுவிட்ட தாகவும் அவன் காதிற்கு எட்டிற்று.

அவ்வளவு தூரம் வந்துவிட்டுச் சும்மா திரும்பக்கூடாதென்று எண்ணித் தன்னைப்போன்ற திருடர்கள் சிலரைச்சேர்த்துக்கொண்டு ஒருநாளிரவில் ஜமீனரண்மனைக்குள் புகுந்தான். ஏதோ சத்தப்பட்ட படியால் திருடர்களென்று வேலைக்காரர்கள் அரண்மனையில் அங்கு மிங்கும் தேடவாரம்பித்தார்கள். வீரசிங்கமும் அவன்கூட வந்தவர் களும் இருட்டாயிருந்த சுரங்கமொன்றில் ஒளிந்துகொண்டார்கள். வேலைக்காரர்கள் தேடி முடிந்ததும் வீரசிங்கம் ஒரு விளக்கைப் பற்றவைத்தான். சுரங்கத்தில் ஒருவழி தோன்றிற்று. அந்த வழி யாய்ப் போய்ப்பார்க்க ஒரு நிலவறையில் தண்ணீர் நிரம்பியிருந்தது. அதில் ஒரு மனித சரீரம் மிதப்பதைக்கண்டு வீரசிங்கம் சமீபத்தில் போய்ப்பார்க்க, அது துஷிதன் பிரேதமென்று கண்டான். பிறகு அவனும் மற்றத் திருடர்களும் சேர்ந்து அப்பிரேதத்தை வெளியே தூக்கிக்கொண்டுபோய், அதைப் புவனாலயத்திற்கு அச்சமயம் வந்தி ருந்த ஒருவைத்தியனிடத்தில் விற்றுவிட்டார்கள். வைத்தியஆராய்ச் சியின் பொருட்டு அவன் அப்பிரேதத்தை விலைக்கு வாங்கினான்.

வ. வி. நடேசன்செட்டி.

(தொடரும்). ஆத்தங்குடி.

ஸ்வாமி விவேகாநந்தர்.

"தர்மத்துக்குத் தாழ்வும் அதர்மத்துக்கு வாழ்வும் உண்டாகுங்காலத்து நான் அவதரித்து, துஷ்டர்களைச் சிக்ஷித்து, சிஷ்டர்களைப் பரிபாலித்துத் தர்மத்தை விலைநிறுத்துகிறேன்" என்று ஸ்ரீகீதையில் ஸ்ரீ கண்ணபிரான் அருளிச்செய்திருக்கிற வண்ணமே, நமது ஸ்வாமிகளுடைய அவதாரத்தையும் கொள்ளவேண்டியிருக்கிறது. நமது பாரதகண்டத்தில் அவ்வப்போது நேரும் சில விபரீத மாறுபாடுகளை யுத்தேசித்துப் பகவான் ஆசாரிய ரூபங்களாகவும் அரசரூபங்களாகவும் வெளித்தோன்றித் தமது திருவிளையாடல்களைச் செவ்வனே நடத்திச் சென்றுளாரேனும், அவரது அவதார ரூபங்கள் யாவும் மறைந்துவிட்டனவாக நாம் கொள்ளாமல், இன்றும் நமது ஒவ்வொருவர் உள்ளத்திலும் அவ்வுருவங்கள் நின்றுநிலவுவனவாகக்கொண்டு அநுபவித்துவருகிறோம் என்பது உண்மையேயாகும். அன்னமே நமதுஸ்வாமிகளும் அவதரித்துத்தமது திருவிளையாடல்களைச்செய்துவிட்டு மறைந்துளாரேனும், நாம் அவரை மறைந்துள்ளவராகக் கொள்ளாமல், நம்மனோர் கருத்துக்களில் இருத்திமகிழ்கிறோம். அவரது விஜயங்களைப் புகழ்கிறோம். அவரது உபதேசங்களை யுணர்கிறோம். அவரது உருவத்தைத் தரிசிக்கிறோம். அவர்காட்டிய வழியில் நடக்கிறோம். அவர்இட்டுள்ள கட்டளைக்குக் கீழ்ப்படிகிறோம். அவர் வரைந்துள்ள கோட்டிற்கு உட்பட்டிருக்கிறோம். ஆதலினால் அவர் இன்றும் புகழுடம்புடன் இப்பூமியில் விளங்குகிறார் என்பதே உண்மை. நேயர்களே! நமது ஸ்வாமிகளது உபந்யாஸ உபதேசங்களால் நாம்மாத்திரமன்றி நமது பிற்சந்ததியாரும் நன்னோக்குடையராவார் என்பதில் யாதும் சந்தேகமில்லை. இவர்களைப்போல் அநேக மஹான்கள் அவதரித்து அருள் செய்திருக்கிறார்கள். நமது பாரதகண்டந்தவிர வேறு கண்டங்கள் மஹான்களுக்கு அவதாரஸ்தலங்களாக ஏற்பட்டிருக்க உணர்கின்றிலோம். நமது ஆசியாகண்டம் தவிர வேறொரு கண்டம் தேசிகர்களின் அவதாரங்கட்குத் தேர்ந்தகண்டமாகத் தெரிந்தெடுக்கக் காண்

கின்றிலோம். இதுசரித்திரவுண்மை. மஹான்களெல்லாம் அவதரிக்கிறது உலகத்தினரது தர்மத்தை உயர்த்துவதற்கென்றேயெனச் சரித்திரம் குறிக்கின்றது. அவர்கள் தமது அவதாரதேசத்தினர்க்கு அவசியம் வேண்டியதாகியிருக்கும் காரியங்களைப் பூர்த்திசெய்து அவர்களை ஸமபலமுடையவராக்குவதற்கென்றே அவதரிக்கிறார்களெனச்சரித்திரம் ஓதுகின்றது. இதுவே அவதாரத்தின் உண்மையுமாகும். உதாரணமாக ஸ்ரீராமபிரானுடைய அவதார ரஹஸ்யத்தை எடுத்துக்கொள்வோம். அந்தக்காலமும் அந்தக்காலத்திலிருந்த நிலைமையுமே ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியினது அவதாரத்தை வேண்டி நின்றன என்பது கொள்ளக்கிடக்கின்றது.

அக்காலங்கள், ஸாதுக்களின் தர்மங்கள் ஏற்றத்தையடையப் பெறுமல், தேசத்தில் கலகமும் கலக்கமும் மிகுதிப்பட்டிருந்தமையால், ஆசாரங்களும் அநுஷ்டானங்களும் மாறுபடும் நிலைமையுண்டாயிருந்ததுண்மையென்று ஸ்ரீ ராமாயணம் எடுத்துக் காட்டும். இராவணன் என்னும் கொடிய அரசனுல் இவ்விதக் கலக்கங்கள் உண்டாயிருந்தனவென்று அது கூறுகிறது. அப்போதுதான் லோகமித்திரராகிய விசுவாமித்ரமுனிவர் துணிந்தெழுந்து தீர்க்காலோசனையுடன் தேடித்திரிந்து, அஸத்பாவங்களையெல்லாம் ஒழிக்கும் ஸத்சக்தியுடையவனுகிய ஸ்ரீ ராமபிரானது அவதார ரஹஸ்யத்தையுணர்ந்துகொண்டு அயோத்திக்குவந்து அந்த வள்ளலாகிய சுந்தரவில்லியை அழைத்தேகினுர். இந்தத் தேவதூதராகிய விச்வாமித்திரரே தர்மதேவதைக்குத் தயவுள்ள தாயாவார். இவரது நன்முயற்சியில்லாவிடின் தர்மமே சீர்குலைந்திருக்கும் என்று சொல்லத் தட்டில்லை.

இதனைப்போலவே, இக்காலத்திலும் நமது மதாசாராநுஷ்டானங்கட்குத் தாழ்வுநேரும் ஸந்தர்ப்பம் கிட்டவே, நமது ஸ்வாமியும் அழைக்கப்பட்டார். நமது தற்கால நாகரிகமானது படித்த வகுப்பினர் என்று கர்வித்துள்ளவர்களிற் பலரைத் தங்களது பூர்விக ஆசாராநுஷ்டானங்களை மறக்கும்படிக்கும் அவசியமில்லாத சில மேல்நாட்டு அநுஷ்டானங்களைக் கைப்பற்றும்படிக்கும் செய்து

கொண்டிருக்கிறது. இந்த ஸமயத்திற்றானே ஒரு தேவதூதன் தெய்வாம்சமும் தெய்வசக்தியுமுடைய ஒரு மஹானை வெளிப்படுத்தவேண்டும். அப்படியே நமது தற்கால தேவதூதராகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர், பல காலநிஷ்டையின் பலனாக, நரேந்திரன் என்னும் பெயருடைய நமது விவேகாநந்த ஸ்வாமியை வெளிக்காட்டினார். ஒளிக்கு ஏற்றினார். ஸ்ரீ ராமபிரான் விசுவாமித்ர மஹரிஷியினது பிரஸாதங்களாகிய பல அஸ்திரங்களால் பரிஷ்கரிக்கப் பெற்றதுபோலவே, நமது ஸ்வாமியும், ஸ்ரீபரமஹம்ஸ தேவரால் பரிஷ்கரிக்கப்பெற்று, இப்புதிய உலகத்திற்கு ஒரு பரமாசார்யராகக் கிளம்பி, தற்காலத்துத் தேவைகளையும் நன்கு தெரிவித்து அதற்கேற்ப ஹிந்துமத வுண்மைகளையும் எடுத்துக்காட்டி, பாழ்ங்கிணற்றில் விழ விருந்தபலரைக் கரையில் உறுதியாக நிறுத்தினார்கள்.

அவர்களது உபதேசவுண்மைகள் யாவும் நூதனமல்லவெனும், பிராசின அமுதமேபு நிபபாத்திரத்தில் வார்க்கப்பெற்று விநியோகிக்கப்பெற்றனவாக உள்ளன. அவர்களது உபதேசங்கள், ஒவ்வொரு மனிதனுக்கும் தற்காப்பு ஆத்மதத்வ ரஹஸ்யம் ஏகாக்ரதை தன்னலங்கோராமை பரோபகாரம் ஆத்மமுன்னேற்றம் இவற்றை வற்புறுத்தக் கூடியனவாக விளங்குகின்றன. ஆத்மநிஷ்டையுடன் கூடிய வாழ்க்கையே ஒருவனைப் பரோபகாரத்திலும் ஆத்ம முன்னேற்றத்திலும் புகுவித்து உதவிசெய்யும் என்று அவரது உபதேசங்கள் விளக்குகின்றன. ஆகாயத்தில் முன்னேற விருப்பமுடைய ஒரு பறவைக்கு, அதனது இரண்டுசிறகுகளுமே ஸமபலத்துடன் உழைக்கவேண்டுவது போலவே, முன்னேற்றத்தை விரும்பிய ஒரு ஜீவனுக்கும் அவனது பரோபகார சிந்தையாகிய லௌகிக தர்மமும் ஆத்மோபகார அநுபவமாகிய வைதிக சிந்தையுமே உதவுகின்றனவென்று அவர்கள் குறிக்கிறார்கள்.

அவர்கள் இவைபோன்ற உண்மைகளை நம்மவர்க்கேயன்றி ஏனையோர்க்கும் உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்கி, அவர்களினும் பலரை நல்வழிக்கு அழைத்து வந்திருக்கிறார்கள். அவரது

உபதேசங்களின் உண்மைகள் நமது மாணவர்கட்கு நன்கு போதிக்கப்பெறின், அம்மாணவர் லௌகிக வைதிகங்களாகிய இரண்டுவித மான விருத்தியிலும் விருத்தியடைந்து வருவார்களென்று கருதுகிறோம்.

பத்திராதிபர்.

புதுக்கோட்டைராஜ்யம்.

மாட்சிமை தங்கிய மஹாராஜா அவர்களாகிய ஸ்ரீ பிருஹதம்பாள்தாஸ ராஜ ஸ்ரீ மார்த்தாண்டபைரவத்தொண்டமான் பஹதூர் ஜி. ஸி. ஐ. இ. அவர்கள் தங்களது 11 வது வயதிலேயே 1886-ஆ ஜூலை மாதத்திலே பட்டத்துக்கு வந்தார்கள். அப்போது இந்த ராஜ்யமானது திவானாகவிருந்த ஸர் சேஷையா சாஸ்திரியார் அவர்களதுமேல்பார்வையிலிருந்து வந்து நல்லசீர்திருத்தத்தைப் பெற்றிருக்கிறது. ஸர் சேஷையா சாஸ்திரிகள் மந்திரிஸ்தானத்துக்குவந்த வருஷம் 1878. 1894 வருஷத்தில் மகாராஜா அவர்கள் ராஜாங்க நிர்வாஹத்தை ஏற்றுக்கொண்டபோது சென்னைக் கவர்னர் துரையாகிய லார்ட் வென்லக் என்பவர் சொன்னதாவது:—" மஹாராஜ! இந்த ஸமஸ்தானம் சுமார் 20 வருஷங்கட்குமுன் தாழ்ந்த நிலைமையி லிருந்துகொண்டு இருந்தது. ஜனங்கள் எப்பொழுதும் வியாதியினல் பீடிக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனல் தற்கால நிலைமையோ அதிகயாறுபாட்டையடைந்திருக்கிறது. எப்பக்கங்களிலும் உலகவாழ்க்கைக்கு ஏற்றஸாதனங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரிவும் நன்கு அமைக்கப்பெற்று நன்றாகக் கவனம் செலுத்தப் பெற்றுவருகிறது. தெருக்களும் வசதிகளும் சுத்தமாக்கப் பெற்றிருக்கின்றன. வரிவசூல்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ராஜதானிப் பட்டணமும் தற்கால ராஜதானிப் பட்டணங்களைப்போல அழகாகவும் வாச யோக்கியமாகவும் திருத்தியமைக்கப் பெற்றிருக்கிறது. இவை யெல்லாம் நமது ஸர் சேஷையாசாஸ்திரிகளது நன்முயற்சியாலேயேயாக்கப்

பெற்றிருக்கின்றன. இவர்களே அழிந்து ஆழ்ந்து போக இருந்த இந்த ராஜ்யத்தை இவ்விதமான தக்க நிலைமைக்குக் கொண்டுவந்தவர்கள் " என்பதாம்.

சுமார் 22 வருஷங்கட்கு முன்னே இவ்வசனங்கள் மஹாராஜா அவர்கட்குச் சொல்லப்பெற்றன. ஆனால் தற்காலத்திலோ இன்னும் அதிகமான செழிப்பும் செல்வமும் அழகும் அமைப்பும் சீரும் சிறப்பும் பொருந்தி விளங்குகின்றது என்பது சொல்லாமலே விளங்கக்கூடியது.

1894-வது வருஷத்தில் வருஷவரும்படியானது சுமார் $8\frac{1}{2}$ லக்ஷம். 1912-வது வருஷத்தில் அதற்கு இரட்டிப்பாக 17 லக்ஷமாயிற்று. 1913-வது வருஷத்தில் $18\frac{1}{2}$ லக்ஷமாக இருந்தது. 1894-வது வருஷத்தில் ஸ்டேட் இருப்பு 3 லக்ஷமாக இருந்தது. 1913-வது வருஷத்தில் $27\frac{1}{2}$ லக்ஷமாயிற்று. இவையெல்லாம் அரசாங்க முறை நன்கு நடைபெற்று வரும் விதத்தையே வற்புறுத்திக்காட்டுகின்றன. தெருக்களும் ஜலவஸதிகளும் குடியிருப்பு வஸதிகளும் முன்னினும் மேன்மையாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. குடிகளும் தொழின் முறைகளும் அதிகரித்துக் கொண்டுவருகின்றன. நாகரிகமும் விருத்தியடைந்து ஜனங்கள் படிப்பில் மிக்க ஊக்கம் காட்டி வருகின்றனர். எனவே, பலவிதங்களினும் இந்தஸம்ஸ்தானமானது புரோவிருத்தியை யடைந்து கொண்டு வருகிறது.

(இந்த வியாஸத்தினுடைய தொடர்ச்சிகள் மாதந்தோறும் வெளியாகி வந்துகொண்டிருக்கும்.)

பத்திராதிபர்.

சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்.

பலவான்குடி மணிவாசக சங்கம்

ஏழாவதாண்டு நிறைவு.

பிங்களவருஷம் ஆவணிமீ 14உ புதன்கிழமை பிற்பகல் அக்கிராஸனாதிபதிகளாக இருந்து சபையைநடத்த ஒப்புக்கொண்டு விஜயஞ்செய்திருந்த ஸ்ரீமான் பி. வி. மாணிக்கநாயக்கர் அவர்களையும் ஸ்ரீமான் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களையும் அவர்கள் இறங்கியிருந்த விடுதியிலிருந்து, மேளவாத்தியங்களுடன், சபைக்கு நகரத்தார் அழைத்து வந்தார்கள். பிறகு, கடவுள் வாழ்த்துக் கூறப்பட்ட பின் ஸ்ரீமான் நாயக்கர்அவர்களை அக்கிராஸனத்தமர்ந்து சபையை நடத்திவைக்கும்படி பிரேரேபிக்க, அவர்களும் அக்கிராஸனத்தமர்ந்தார்கள். பின்னர் ஸ்ரீமான் மு. மு. வீர. வீரப்பசெட்டியார் அவர்களால் வந்தனோபசாரமும், சி. வி. வித்தியாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ வீ. குமாரவேலையரவர்களால் அறிக்கைப் பத்திரமும் வாசிக்கப்பெற்றன.

அக்கிராஸனாதிபதி நாயக்கர் அவர்கள் எழுந்து, அக்கிராசனத்தமர வேண்டியவர்களினது லக்ஷணங்களைச் செவ்வனே கூறித் தாம் இதற்குத் தகாதவராக இருப்பதாய் அவையடக்கமாகக் கூறியும், நமது தேசத்திற் சைவம்ஓங்கியிருந்த போது தேசம்வாழ்ந்தும், அதுமங்கியிருந்தபோது தேசம் தாழ்ந்தும் இருந்ததென்றும், இத்தமாதிரியான ஸபைகள் ஏற்பட்டுச் சைவம் தழைக்க ஆரம்பித்திருப்பதால் தேசமும் செழித்திருக்க ஆரம்பித்திருக்கிறதென்றும், நமது தாய்ப்பாஷையான தமிழானது யோகசாஸ்திர தத்வங்களை யநுசரித்த அக்ஷரவகைகளையும் ஸ்வரவகைகளையும் பெற்றிருக்கிறதென்றும், ஒருதேசம் பொருள் நிலைமையில் உயரவேண்டின் அத்தேசத்து விளைபொருள்கள் வெளித்தேசங்கட்குச் சென்று திரும்பாமல், அந்தத்தேசத்திலேயே செய்பொருள்களாக மாற்றப்பட்டுப் பணமாக்கப்படவேண்டுமென்றும், அத்தேசத்தவர் கூலிகளாக வெளித்தேசங்கட்குப் போகப்படாதென்றும், அதற்கு அத்தேசத்திலேயே கைத்தொழில்கள் ஆதரிக்கப்படல் வேண்டுமென்றும், முடிவாக நமது நகர வணிகப்பிரபுக்கள் தமதுபொருள்களை வெளித்தேசங்களிலிருந்து கொண்டுவந்து இந்தத்தேசத்திலேயே ஏழைகட்கும் தொழிலாளிகட்கும் உபயோகமாகும்பொருட்டுக் கோவில் குளம் மடம் ஸபை கலாசாலை ஆகிய உதவிகளைத்

செய்து தருவது தேசமுன்னேற்றத்துக்கும் ஆத்மமுன்னேற்றத்துக்கும் ஸாதகமாக இருக்கிறதென்றும், இத்தொழில்கள் அவர்களது உத்தமக்குடிப்பிறப்பையும் பாரம்பராப்ராப்தமான பெருந்தன்மையையும் காட்டுகின்றதென்றும் கூறிவீற்றிருந்தார்கள்.

பிறகு, தேறியமாணவர்கட்குப் பரிசுகள் அக்கிராஸநாதிபதியால் அளிக்கப்பெற்றன. பின்னர் "இன்சொல்" என்னும் விஷயத்தை சி. வி. மாணவன் வெ. கணேசன் என்பவன் மிக இனித்தசொற்களாற் பேசி ஸபையை இன்புறுத்தினன். பிறகு "கற்பு" "கற்பின்மாட்சி" என்னும் இரண்டு ஒத்தவிஷயங்களை முறையே மு. மீனாட்சி, சொ. வள்ளியம்மை என்னும் பெயரிய சி. வி. மாணவிகளிருவரும் கம்பீரமாகவும் அழகாகவும் அநுபவ முறைபோதும்பேசிச் சபையை உத்ஸாகப்படுத்தினார்கள்.

பிறகு, கோநகர்க்கலாசாலைத் தலைமையாசிரியராகிய ஸ்ரீ பண்டித அ. கோபாலையரவர்கள், "ஒற்றுமை" என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு பலமுறைகளுடன் அழகாக விரித்துரைத்து, நமது தேசம் முன்னர் ஒற்றுமையுடனிருந்ததாலேயே செழித்திருந்ததென்றும், அந்த ஒற்றுமை ஜாதிக்கலப்பினாலும் யாவரும் சேர்ந்த பந்திபோஜன விவாஹாதிமுறைகளாலும் ஒற்றுமைப்பட்டிருக்கவில்லையென்றும், மன ஒற்றுமையினாலேயே அன்பும் அருளும் முளைத்திருந்து கூட்டுறவு கொள்ளப்பெற்றுச் செழித்தோங்கியதென்றும் கூறியும் ஸ்ரீராமபிரான், பாண்டவர், போலக், காந்தியிவர்களது சரித்திரங்களை எடுத்துக் காட்டியும் மகிழ்வித்தார்கள். பிறது, திரிசிரபுரம் ஸ்ரீமான் மு நடேசமுதலியாரவர்கள் எழுந்து "சைவம்" என்னும் அரிய விஷயத்தைக் கைக்கொண்டு சிவபரத்வம் சைவத்தின் ஏற்றம் சைவர்களின் நன்மனப்போக்கு இவற்றை விரித்துக் கடல்மடைதிறந்ததெனக் கம்பீரமாகக் கூறிஅமர்ந்தனர். பிறது அக்கிராஸநாதிபதியவர்கள் இவ்விஷயங்கட்குத் தக்கமுகவுரை கூறிச் சபையை ஆனந்திப்பித்தார்கள். அநுஷ்டானத்தின் பின்னர், இரவு 7-30 மணிக்கு அங்குவிஜயம் செய்திருந்த மகிபாலன்பட்டி வித்வான் ஸ்ரீமான் மு. கதிரேசச்செட்டியார் அவர்கள், "பாட்டும் உரையும்" என்னும் அருமையான விஷயத்தைப் பண்டைய புலவர்களது செய்யுள்களின் உதாரணமுகங்களாலும் அவற்றின் உள்ளுறை நயம் இவற்றின் விரித்துரைகளாலும் தமது இயற்கையான இனிய வினயவசனங்களால் எடுத்துப் பரக்கவோதிச் சபையிலுள்ளோரையும் அக்கிராசநாதிபதியையும் மகிழ்வித்தார்கள். பின்னர், தலைவர் எழுந்து செட்டியார் அவர்களது உபந்நியாஸத்தின் வியப்புகளை நன்கு காட்டி இவர்களே பண்டைய நூல்களின் உரையாசிரியராக இருக்

கத் தகுதியானவர்கள் என்று கூறியும், தாம் தமிழ்ச்சொற்களின் எழுத்துக் களின் ஒலிமாட்சிமை யாராயும் தொழிலிற் புகுந்திருப்பதற்கிசையச் செட்டியாரவர்கள் எடுத்துபகரித்தபொருண்மாட்சியாராய்ச்சி ஊக்கத்தைக் கொடுத்திருக்கிறதென்றும், எழுத்துக்கள் ஆணவம் மலம் ஜீவன் என்றும் பெயராற் பகுக்கப் படுகின்றன வென்றும், இவை முறையே வல்லினம் மெல்லினம் இடையினமாமென்றும் செய்யுள்களில் இவ்வெழுத்துக்களின் தாரதம்மியக் கூட்டுறவினாலேயே அருளிலும் தாரதம்மியப் படுகின்றன வென்றும், ஜீவ எழுத்துக்கள் மிகுதியுள்ள செய்யுட்களடங்கிய நூல்களே ஆத்மஸங்கர்சன நூல்களென்றும், ஜீவஎழுத்துக்கள் பெரியபுராணத்தில் 100-க்கு 40 வீதமும் கம்பராமாயணத்தில் 100-க்கு 14 வீதமும் இருக்கின்றனவென்றும், ஆனால் கம்பராமாயணத்தின் நாகபாசப்படலத்தில் ஜீவஎழுத்துக்கள் 100-க்கு 60 வீதம் கலந்திருப்பதால், அதனுள் அருட்செய்யுளாகிய 26-ம் அருள்பெற்று விளங்கின வென்றும் தமது அருமையான ஆராய்ச்சியின் ஒருபகுதியிற் சிறிது பாகத்தை யாவர்க்கும் விளங்க எடுத்துரைத்தார்கள். இடையிடையே ஒரு பிராமணச் சிறுவன் ஹார்மோனியத்துடன் இன்னிசையாகப் பாடிச் சபையோரை மகிழ்விக்கஅன்றையஸபை ஆனந்தகரமாகநிறைவேறியது.

மறுநாட்காலையில் தேவகோட்டை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்களால் இனிமையான இசையுடன் தமிழ்மறையோதப்பெற்றுச் சபை ஆரம்பமாயிற்று. ஸ்ரீமான் மு. வெங்கடசாமி நாட்டார் அவர்கள் சபையார் வேண்டுகோட்படி அக்கிராஸனத்தமர்ந்தார்கள். ஸ்ரீ ராம. கும. சு. சுப்பிரமணியஞ்செட்டியாரவர்களின் குமாரன் சிரஞ்சீவி குமரப்பசெட்டியாரால் வந்தனோபசாரம் வாசித்து அளிக்கப்பெற்றது. பிறகு சி வி. மாணவிகள் செ. நாச்சியாள் என்பாளும் நா. சீதை என்பாளும் முறையே "கொல்லாமை" "காரைக்காலம்மை சரிதம்" என்னும் அரியபெரிய விஷயங்களை நல்லுரைகளாற் செவ்வனே சொல்லி யாவரையும் மகிழ்வித்தார்கள். பின்னர் அக்கிராஸனாதிபதியவர்கள் எழுந்து இவ்விரண்டு விஷயங்கட்கும் தக்க முகவுரை கூறி பபின் உபந்யசிக்கப் பெறும் விஷயம் "தமிழெழுத்துக்களின் ஒலிமாட்சி." யென்றும், உபந்யாசகர் தக்க ஆராய்ச்சியும் ஆங்கிலமுறையும் தமிழபிமானமும உடைய நமது மாணிக்கநாயக்கரவர்களேயாவாரென்றும் உண்மையையெடுத்துரைத்து உபந்யாசகரை உபந்யஸிக்கும்படி வேண்டினார்கள்.

பிறகு, ஸ்ரீமான் நாயக்கரவர்கள் எழுந்து சுவர சிருஷ்டியிலுள்ள புழுமுதற் புமானவரையிலுள்ள ஜீவகோடிகள் கருப்பையில் தங்கியிருக்கும் போது ஓங்காரவொலியைப்பெற்றுக் கழுத்தையடைந்த விடத்தில் 5 மடிப்புக்களையும் பெற்றிருப்பதனாலேயே பிரணவத்துடன் கூடிய பஞ்சாட்சர வடிவுங்

டாகி அந்த 5 மடிப்புக்களில் முறையே ஒவ்வொன்று மறைந்து ஒவ்வொரு கர்மேந்திரியம் ஜநிப்பதால் ஈச்வரஸ்ருஷ்டியான ஜீவன் ஓங்கார உருவத்தை யடைகிறனென்றும், சர்வக்ஞத்வத்தை யடைந்த தக்ஷிணாமூர்த்தியினது சின் முத்திரையுடன் கூடியாஸனத்தமர்ந்த உருவம் ஓங்காரரூபத்தைக்காட்டுகிறதென்றும், இந்தவுரு. பண்டைக்கால வழக்கிற்பட்ட மெய்ப்புள்ளியைத் தலையிலுடைய ஓகாரமேயென்றும்,. இதனைத் "தொல்லை வடிவின வெல்லா வெழுத்து மாண்டு, எய்து மெகர ஒகர மெய்ப்புள்ளி" என்னும் சூத்திரம் வற்புறுத்துகிறதென்றும், இந்தப்புள்ளியுடன்கூடிய ஓகாரத்தில் தக்ஷிணாமூர்த்தியின் தொங்கவிட்ட திருவடியின் ஸ்தானத்திற்கமைந்துள்ள கோட்டுருவப் பகுதியை எடுத்துத் தலைப்புறமாகத் திருப்பினால் அது ஊர்த்துவ நோக்குடைய அகாரமாகிறதென்றும், இந்த அகாரத்தில் மேலும் கீழுமாக உகாரமகாரப் பகுதிகள் கூடாகிக் கிடப்பதால் ஓங்காரம கெடாமல் மாத்திரை யுருவத்தைக்காட்டி நின்றதென்றும், பின்னரும் ஆஸனஸ்த தக்ஷிணாமூர்த்தியுருவ ஓங்காரத்துச்சிரசு சின்முத்திரை அபயஹஸ்தம் இவற்றின் தானத்தில் அமைந்துள்ள மெய்ப்புள்ளி ஒகரவளைவின் இரண்டு முனையிலுமுள்ள புள்ளிவடிவுகளாகிய மூன்றும் முப்புள்ளியான ஆய்தவெழுத்தென்றும், இந்த எழுத்துப்புள்ளிகள் முறையே ஞானசக்தி இச்சாசக்தி க்ரியாசக்தியாகிய மூன்றருட்சக்திகளையும் காட்டும் முக்கண்களுருவமே யாமென்றும், இது யோகிகளாலேயே அறியப்படுமென்றும், "ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி" என்னும் சூத்திரம் இதனைவற்புறுத்தி, இது தனக்கென ஒரு ஒலிபெறாது தனித்துநின்ற மூச்சுக்காற்று நிலையென்றும், யோகசாஸ்த்ர விதிப்படி உஷ்ணப்ரதேசத்தாளர் மூச்சை அதிகம் செலவுசெய்யக் கட்டாதபடியாலேயே தமிழறிஞர் மூச்சிலே யகாரமாகிய ஆய்தவெழுத்தொலியைப்பிற தொனிகளுடன் கலந்துச்சரிக்கவிட வில்லையென்றும், அதனாலேயே பாஷைநாடின்னியத்தையும் சிரம உச்சாரணத்தையும் காட்டாமல் தமிழினிபல்தோன்ற மென்மையாகவும் இனிமையாகவும் உச்சரிக்கப்படுகிறதென்றும், வல்லினவொலியுடன் பின்னும் முன்னுமாக முறையே ஆய்தவொலியை ஒரொருமுறை ஈரொரு முறையாகச்சேர்த்து உச்சரிப்பதனாலேயே ஆரியத்தின் வர்க்கங்களின் முன்னாம் மெழுத்துக்களும் உச்சரிக்கப் படுகின்றனவென்றும், ஆய்தம் முன்னாஞ் சேர்ந்த சகரமும் ழகரமும் லகரமும் முறையே ஷகர க்ஷகாரஸகாரங்களாகிய ஆரியவொலிகள் உண்டாகிறனவென்றும், மெல்லொலி இடையொலிகளுடன் ஆய்தவொலி முன்னும்பின்னுமாகச்சேரும் முயற்சியால் இந்துஸ்தான் அரபியாதிய பாஷையொலிகளும் ஆய்தவொலி முன்கூட்டிய பகரவொலியே இங்கிலீஷ் முதலிய பாஷைகளின் F. A. என்று மொலியென்றும். எனவே,

தமிழ்ப்பாஷையின் பலவகை யொலிகளுடன் ஆய்தவொலியை முன்னும் பின்னும் கூட்டுவதாற் பிற பாஷைகளனைத்திலுடைய ஒலிகளெல்லாம் யாதொரு சிரமமின்றி உச்சரிக்கப்படுகின்றன வென்றும் இதனாலேயே தமிழ் ஒழிந்த பிற பாஷைக்காரர் ஆய்தவொலியை யதிகம் கூட்டுகிறார்களென்றும், அதற்குக் காரணம் குளிரின் ஆதிக்கமேயென்றும், குளிரேற்றத்தின் முறைப்படியே வழங்கப்படும் பாஷைகளும் முறைப்படியே ஆய்தவொலியை யதிகரித்துச் சரிக்கப்பெறுவதை யாராய்ந்துணரலாமென்றும், உலகில் ஈசனது உருமாட்சி அருண்மாட்சி சொன்மாட்சி பொருண்மாட்சியுடன்கூடிய எல்லாப்பாஷையொலிகளையும் தன்னுள் அடக்கியுள்ள ஒருபாஷையை ஆராய்ந்தறிவிக்கும் மேதாவி சொல்லப்புகுந்தாரானால் இந்தத்தமிழ் எழுத்துக்களின் ஒலிகளையும் உருவங்களையுமல்லாத வொன்றை அமைக்க இயலார் என்று தாம் எண்ணுகிறதாகவுங்கூறி உதாரணங்களாகக் கரும்புப்பலகையில் எழுதித்தெரிவித்தும், ஆய்தவொலிகலந்த தமிழொலி அக்ஷரங்களாற் பலவேறு பாஷைப்பாட்டுக்களை யெழுதிக்காட்டியும், அவற்றை யுபந்யாஸம் கேட்கவந்தவர்களைக்கொண்டு படிப்பித்துக்காட்டியும் அமைதியுடன் உட்கார்ந்தார்கள். இந்த இரண்டரை மணி நேரங்களும் சபை யாதொருபேச்சுமின்றி விம்மிதமடைந்து இருந்தது. பிறகு தலைவரெழுந்து பிரஸங்கியாரினது ஆராய்ச்சித்திறத்தையும் அவர்க்கிருந்த பிற பாஷை வல்லபத்தையும் உத்தியோகத்துக்கேற்ற பெருந்தன்மை விநயமாதிய வற்றையும் எடுத்துவியந்து ஓதி இன்னாரது ஆராய்ச்சிமுறைக்கு ஏற்ற ஆக்கம் ஊக்கம் வாழ்நாள் இவற்றையதிகரித்துக்கொடுக்கும்படி எல்லாம்வல்ல இறைவனைவேண்டியும் அமர்ந்தார்கள்.

பின்னர் வித்வான் மு கதிரேசச்செட்டியார் எழுந்து அவர்களது பிரஸங்கத்தில் தாங்கள் ஆழ்ந்திடந்த தன்மையையும், தாம் இடையிடையே கேட்டுவந்த கேள்விகட்கும் மனங்கோணாது முகங்கோட்டாது விரைந்து விடையளித்த பிரஸங்கியாரது மனத்தெளிவையும் ஆராய்ச்சித் துணிவையும் பற்றிப் பாக்க உபந்யாஸம்செய்து வீற்றிருந்தார்கள். மற்றும் பலர் புகழ்ந்தார்கள். கடவுள்வாழ்த்துடன் காலைச்சபை நிறைவேறியது.

மாலை 3½-மணிக்கு ஸபைகூடப்பெற்று, தேவகோட்டை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்களால் தேவாரம் ஓதப்பெற்று ஸ்ரீமான் நாயக்கரவர்களது தலைமையின்கீழ்ப் பின்வரும் உபந்யாஸங்கள் நடைபெற்றன. முதலில் நாயக்கர் அவர்கள் எழுந்து, இச்சபையிற் பூரணமுயற்சி காட்டிவரும் ஸ்ரீமான் ராம.
[illegible]

னைப்பற்றியும் விசனித்துப்பேசியமர்க் கண்டனூர் ஸ்ரீ செ. அரு. சித. இராமநாதன்செட்டியாரவர்கள் எழுந்து "அன்பு" என்னும்விஷயத்தை யெடுத்துக்கொண்டு, அதனைப் பாசஅன்பு பசுஅன்பு பதிஅன்பெனப் பாகுபாடுசெய்துகொண்டு ஒவ்வொருபகுதியினையும் உதாரணவாயிலாக நன்குவிளக்கித் தமது இயற்கையான குரலுடனும் அமைதியுடனும் உபந்யசித்தமர்ந்தார்கள். பிறகு "பெண்கல்வி" என்னும் ஸம்பாஷணையை சி. வி. மாணவிகள் சிவரத்தினமும் கு. மீனாட்சியும் உருக்கமும் உண்மையும் தோன்றப்படி பேசினார்கள். பிறகு "மூர்த்திநாயனார் சரித்திரம்," "மாணவர்கடமை" என்னும் விஷயங்களை முறையே சி. வி. மாணவர்கள் கு. இலக்ஷ்மணன், மு. கருணையாண்டயன் என்னும் இரண்டு சிறுவர்களும் அழகாக உபந்யசித்தார்கள். பின்னர்க் குன்றக்குடி ஸதாசிவப்பிரமம் என்பவர்கள் "சண்டேசுரர்சரித்திரத்" தைத் தமது ஆற்றலுக்கும் பத்திக்கும் ஏற்ப வெகு அழகாகவும் விரிவாகவும் எடுத்துச் சொல்லிச் சென்றார்கள்.

அநுஷ்டானத்துக்குப் பிறகு சொக்கலிங்கப்புதூர் மா. வி. வித்தியாசாலைத் தலைமையாசிரியர் எழுந்து "மெய்ப்பொருள் நாயனார் சரித்திரத்தைச்" சேக்கிழார்சுவாமிகளது செய்யுட்களிற் சிலவற்றை ஆதாரமாகக்கொண்டு இனிமையும் நயமும் உட்பொருளும் தோன்ற அநுபவமுறையா யுபந்யசித்தார்கள். பிறகு காரைக்குடிக்கம்பராமாயணப்பிரசாரகர் M· V. கோவிந்தராஜய்யங்காரவர்கள் கம்பராமாயணத்தில் "பாதுகா பட்டாபிஷேகத்தைச்" சுருக்கி யுபந்யசித்தார்கள். பின்னர்த் திரிசிரபுரம் வித்வான் ஸ்ரீ மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் "சேக்கிழாரும் செந்தமிழும்" என்னும் விஷயத்தைத் தமதுகல்வி ஆற்றலுக்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்ப எடுத்துச் சில சொற்களாற் பல விரிந்தபொருள்களை நயநலங்களுடன் பொருந்தக்காட்டிச் சுருங்கச்சொல்லி விளங்கவைத் தானந்தக்கடலில் ஆழ்த்தியேற்றினார்கள்.

பின்னர்ப் புலிசைஞானியார் மாணவர்கழகத்துக் காரியதரிசி ஸ்ரீ ம. ரா. குமாரசாமிப்பிள்ளை யவர்கள் எழுந்து "புண்ணியம்" என்னும் விஷயத்தை வியாஜமாக எடுத்துக்கொண்டு உடலின் நிலையின்மை, உயிரின்ஏற்றம் ஆத்மதத்வம் ஈச்வரதத்வம் இவைகள் விளங்கும்படியும் தேவாலயத்திருப்பணிகளின் உயர்வும் அதனிற் பன்மடங்குயர்ந்த ஆத்மாலயத் திருப்பணியாகிய இம்மாதிரியான கலாசாலைகளும் புத்தகசாலைகளும் சபைகளும் ஆகிய இவற்றின் அவசியமும் எடுத்துக்காட்டி, இவற்றைத் தேவாலயத்திருப்பணிகளுடன் ஒப்புக்கூட்டி விரித்துரைத்து அதிவேகமாகவும் மிக கம்பீரமாகவும் பண்டிதர் வியக்கவும் பாமரர் பிரமிக்கவும் கலாசாலை முதலியவற்றில் வெறுப்புக்காட்டுவோர்க்கு

விருப்பையூட்டியும் விருப்புடையார்க்கு உற்சாகத்தைக்கூட்டியும் 10½-மணிக்கே எழுந்துசெல்ல உத்தேசித்தவர்களையும் 12-மணிவரை நாழிகை தெரியாமலிருக்க உட்காரச்செய்தும் மிகவும் அழுத்தமாக இன்பக்குரலுடன் உபந்யாஸமழை பொழிந்தார்கள்.

பிறகு தலைவரெழுந்து பண்டிதர் ஒவ்வொருவர்க்கும் பொழுது நெருக்கக்கூடாதிருந்த குறையிருந்ததேனும் அருமைப் பிரஸங்கங்களாக இனிமையுடன் சொல்லப்பட்ட அவற்றின் விஷயங்களை ஸ்தாலீபுலாக நியாயப்படிஎடுத்துக்காட்டி, பண்டிதர்களையும் சபையோர்களையும் பெரியோர்களையும் ஈசுவரனையும் வியந்தும் வாழ்த்தியும் வணங்கியும் போற்றியும் தமதுஇயற்கை விநயம்தோன்ற அமர்ந்தனர்.

பிறகு நகரத்தார்க்குப் பிரதிநிதியாக ஸ்ரீ குமாரவீரையாவர்கள் தலைவர்கட்கும்பண்டிதர்கட்கும் வார்த்தாமாலையுடன் புஷ்பமாலைகளும் அணிவித்துச் சபையோர்க்கும் வணக்கம்கூறியும் நம்மாங்கில அரசர்க்கே இப்பெரியசண்டையில் ஜயமுண்டாகப் பிரார்த்தித்தும் ஈசுவரவணக்கம் கூறினார்கள். சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்றுச் சபை மங்களகரமாக நிறைவேறியது.

பிறகு நகரத்தார் மேளவாத்தியத்துடன் தலைவர்களை விடுதிக்குஅழைத்துச் சென்று மங்களகரமாகச் சேர்ப்பித்தார்கள்.

கண்டேகளித்தோன.

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின்
எட்டாம்வருடபூர்த்திக்கொண்டாட்டம்.

இச்சன்மார்க்க சபையின் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் வழக்கப்படி சித்திரைமாதம் நடைபெறவேண்டியது சில சபையன்பர்களின் கருத்துப்படி இவ்வாவணிமாதம் உ௰௩உ (7 9-17)ல் நடைபெற்றது. இவ்வருஷோத்ஸவத்திற்கு அக்கிராசனம் வகிக்க வருவதாகப் புதுக்கோட்டை மஹாராஜா காலேஜ் ஸீனியர் லெக்சரர் ஸ்ரீ N. தியாகராஜையரவர்கள் M. A. L. T. முன்னரே யங்கீகரித்திருந்தனர். அங்கீகரித்திருந்தும் தாம்வருவதற்கு ஒருதடை நேர்ந்துவிட்டதாக ஆவணிமீ உ௰உஉ தெரிவித்தார்கள். இங்ஙனம் ஸ்ரீ. தியாகராஜையரவர்கள் வரக்கூடாமையைச் சபையார் முதலேயுணர்ந்து வேறு செய்யக்கடவது ஒன்றுந்தோன்றாமையால் உபந்யாசம்செய்வதாக ஒப்புக்கொண்டபடி வந்திருந்த புதுக்கோட்டை மஹாராஜா அவர்கள் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ டி. வி. ஸ்ரீநிவாஸையங்காரவர்களை அக்கிராசனராக இருக்கவேண்டுமென்று விரும்பியபடி அவர்கள் தலைமையேற்றுச் சபையைச் சிறப்புறநடத்தினார்கள்.

முதலில் வலையபட்டி விநாயகவித்தியாசாலைத் தமிழாசிரியர் ஸ்ரீ. திரு. இராமசாமி ஐயங்காரவர்கள் இனிய இசையுடன் கடவுள்வாழ்த்தாகத் தேவாராதி அருட்பாக்களை ஓதினார்கள். அக்கிராசனாதிபதியவர்களுக்கு வந்தனோபசாரம் கூறியவுடன் காரியதரிசியால் எட்டாம் ஆண்டு அறிக்கைப்பத்திரம் படிக்கப் பட்டது. தலைவரவர்கள் முன்னுரையாகத் தமிழ்ப்பாஷையைப் பற்றிப்பேசிய வுடன் பிரமஸ்ரீ திரு. இராமசாமி ஐயங்காரவர்கள் பொறுமையென்னும் விஷயத்தைப்பற்றி நீண்டநேரம் உபந்யாசம் செய்தார்கள். அது சபையிலுள்ள வர்க்கு மிக்க குதூகலத்தை யுண்டாக்கியது. ஸ்ரீ கணேசர் செந்தமிழ்க்கலாசாலை மாணவருட் சிலர் கல்வி செய்ந்நன்றியறிதல் பெரியாரைத் துணைக்கோடல் முதலிய விஷயங்களைப்பற்றிச் சம்பாஷணை ரூபமாகவும் தனிமையாகவும் பிர சங்கம் செய்தார்கள். அவற்றைக்கேட்ட சபையோர்கள் அம்மாணாக்கர்கள் பயின்ற முறையிற்றவறாது விஷயத்தை எடுத்துக்கூறிய வாக்கின் திறமை யைப்பற்றி வியந்தார்கள். பின்னர், புதுக்கோட்டையைச்சார்ந்த வெள்ளனூர் ஸ்ரீ வைத்தியநாதையரவர்கள் "வாரணம்பொருத மார்பும்" என்னும் முதற் குறிப்புடைய கம்பராமாயணச் செய்யுளுக்குத் தாம்தெரிந்துகொண்டவிரிவுரை யைக் கூறினார்கள். அதன்பின்னர் நாட்டுக்கோட்டைநகரத்தார்களாகிய தனவை சியமக்கள்வதிதரும் இந்நாடெங்கும் கல்லூரிகளுஞ்சங்கங்களும் கவின்பெற்றில ங்குதற்குக்காரணபூதரும் கற்றவர்க்கிருநையுடைக் கற்பகம்போல்பவரும் ஆகிய மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீலஸ்ரீ கதிரேசச்செட்டியாரவர்கள் திருவாச கத்தில் "நானாரடி யணைவானொரு நாய்க்குத்தவிசிட்டு" என்னும்முதற்குறிப் புடைய திருப்பாசுரத்தைக்கூறி அத்திருப்பாட்டினிரண்டாமடியிலுள்ள புகு தான், கலந்தான், பிரியான் என்னும் வினைச்சொற்களிலமைந்து கிடந்த நுண் பொருணலங்களை ஸ்ரீ மணிவாசகப்பெருமான் பிறண்டுந் திருவாய்மலர்ந்தரு ளிய திருப்பாசுரங்களின் கருத்துக்களோடொப்பிட்டுக்காட்டி, யாவரும் களிபெரு வகைக் கடலுளாழ்ந்தின்புறும்வண்ணம் செய்தார்கள். பின்னர் அக்கிராசனாதி பதியவர்கள் தமிழரின்பூர்வீக நாகரிகம் என்றவிஷயத்தைப் பற்றிப் பேசி நடந்த உபந்யாசங்களைப்பற்றிய அபிப்பிராயங்களையும் கூறினார்கள். சபையாரால் வந்தனம் கூறப்பெற்றது. அக்கிராசனாதிபதியவர்கள் உபந்யாசகர் முதலி யோர்க்கு ஆரசந்தனதாம்பூலாதிகள் வழங்கப் பெற்றன. இப்பொழுது நடை பெறும் ஐரோப்பிய மஹாயுத்தத்தில் மாட்சிமைதங்கிய ஐந்தாம்ஜார்ஜ் சக்கர வர்த்திக்கு வெற்றியுண்டாக வேண்டுமென்று கடவுட்பிரார்த்தனை செய்யப் பட்டது. புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மஹாராஜா அவர்களுக்குவாழ்த் துக்கூறி அவர்கள் உருவப்படத்திற்குப் பூமாலை சாத்தப் பெற்றது. இரவு ஒன்பது மணிக்குக் கடவுள் வாழ்த்துடன் சபைநிறைவேறியது.

கண்டுகேளித்தோன்.

உ

கணபதி துணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—திருக்குறள்.

தொகுதி 9	பிங்கள ஹூ புரட்டாசிமீ October 1917.	பகுதி 9.

கல்வியும் தேசாபிமானமும்.

இதுவரையில் நமது பாநுவிற் கல்விவிஷயமாக எழுதப்பெற்றுவந்தவையும், இதற்கு முன் ஸஞ்சிகையிற் குறித்துள்ள "போல்பூர் பிரமசரிய ஆசிரமம்" என்னும் விஷயமும், தத்தம் தேசாசாரங்கட்குத் தக மாணவர்கள் கற்பிக்கப்பெறல் வேண்டுமென்பதையே வற்புறுத்தின்றன. இனி இந்த ஸஞ்சிகையிற் "கல்வியும் தேசாபிமானமும்" என்று எடுத்துக்கொண்டு, தேசமுன்னேற்றத்தைக்கோரி மாணவர்களைப் பயிற்றும் முறையைப் பற்றிச் சிறிது ஆராய்வாம்.

மாணவர்கள், கல்லூரியிற் பயிலுங்காலமுதலே, தேசாபிமானப்பால் ஊட்டப்பெற்றுவந்தால்தான் "பிரம்பேணி பாரந்தாங்கும்" என்றபடி மனிதரானபிறகு ஸ்வதந்த்ரத்தைவழிக்கவேண்டியவிடங்களில் அதிற்பிழையாது உறுதியாக நிற்பார்கள். தேசாபிமானப் பாலைச் சிறிது சிறிதாகவேனும் அருந்திவரவேண்டுவ தவசியம். அந்தத் தேசாபிமானப்பாலும் பூர்விகாசாரங்களைக் கைசோரவிடாது நவீனமுறைகளில் நன்மையானவைகளுள் அவசியம் வேண்டியவற்றைச் சேர்த்துக்கொண்டு ஊட்டப்பெறல்வேண்டும். அப்படி

யானவழியிற் போதிக்க உபாத்தியாயர்களும் நன்கு ஆலோசித்துப் பயிலல்வேண்டும். உபாத்தியாயர்களுக்கே, அவ்வழியில் ஆர்வமும் உழைப்பும் அபிமானமும் இருந்தால் அல்லாமல், இவ்வழி நடந்தேறாது. ஒருகால் போதிக்கப்பெறினும் மாணவர் நெஞ்சில் நன்கு பதியாது. இதனால் உபாத்தியாயர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டியவர்களாகவே ஆகிறார்கள். ஆத்மபரித்யாகமும் மனோபலமும் தேசாபிமானமும் தேசபக்தசரித்திரங்களிற்றேர்ச்சியும் மனோற்சாகமுமுடையவர்களே இத்தகைய உத்யோகங்கட்கு ஏற்றவராவார்கள். இவற்றுடன் அவர்கட்கு, ஒரு உபாத்தியாயர்க்கு அவசியம் அமைய வேண்டியனவாகிய கோபமின்மை பட்சபாதமின்மை அலக்ஷியமின்மை நாஸ்திக்யமின்மை அநாசாரமின்மை இவ்வைந்தும் உறுதியான வேருடன் ஊன்றியமைந்திருக்கவேண்டும். இப்படியமைந்தால், நமது தேசம் பின்னர்ச் சிறிதுகாலத்தில் இப்போதிருக்கும் பழிப்புக்கடலிலிருந்து கரைபேறும்.

நமது தேசம், இப்போது ஒரு திடரென்ற மாறுதலையடையக் கூடிய மார்க்கத்திற் போய்க்கொண்டிருக்கிறது. அதற்கு ஏற்றபடி இப்போதுமுதலே நமது மாணவர்களை ஆயத்தப்படுத்திக்கொண்டு வந்தாலல்லாமல், நமது தேசம் நாம் உத்தேசித்திருக்கும் மாறுதலில் நிலைபெறாது. நமது உத்தேசமாறுதலும், நமது தேசம் தனது காலிலேயே நின்று நடைபெறவேண்டு மென்பதான நிர்மானத்தி லிருக்கவேண்டும். நாமே விதைத்து நாமேபயிராக்கி நாமே அவற்றினின்றும் நமக்கு அவசியமானவற்றையுண்டாக்கி எவ்விஷயத்திலும் தற்காப்புடனிருந்து நமது தேசாசார சரித்திரங்களைப் போஷிப்பித்துக்கொண்டு ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்பதே நமது உத்தேசமாகவேண்டும். ஆனால் இப்போது நமது மாணவர்கள் பழகிவரும் வழியோ நமது தேசத்துக்குத் தகுதியற்றதாகஇருக்கிறது. இப்படியே நிலைத்துவிட்டாரானால், நம்தேசத்திலோ இதர தேசத்திலோ இதரருக்கு ஊழியம்செய்யப்போவதற்குத் தலைப்பட்டு நிற்பார்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை. அப்போது நம்மேல் மற்றவர் ஆரோபித்துவைத்துள்ள "அடிமைப்பட்டம்" இன்னும் உறுதியடையும்.

இப்போதிருக்கும் பெரியோர்களிற் பெரும்பாலாரும் நாம் முன்சொன்ன வழியிலேயே நின்றிருக்கிறார்களாதலால், அவர்களது குணங்களைப்படைத்துள்ள மாணவர்களையும் அவ்வழியே வளரவிட்டோமானால், நமது உத்தேசம் ஒருகாலும் கைசேராது. ஒவ்வொருமாணவனும் தனக்குற்ற குணத்துடனேயே எதிர்கால இந்தியாவை நடத்தப்போகிறான்; ஆதலால், அவனது குணங்களைச் சீர்ப்படுத்தினால் எதிர்கால இந்தியாவும் சீர்பெறும்.

இப்போதிருக்கும் இந்தியமாணவர்களின் சமுதாய குணங்களைக் கவனித்தோமானால், எதிர்கால இந்தியாவும் எவ்விதமாக அமையக்காத்திருக்கின்றது என்பதனை யூகித்தலாகும். ஆக, எதிர்கால இந்தியாவை எவ்விதம் அமைக்கவேண்டுமென்று கருதுகிறோமோ, அவ்வித அமைப்புக்கேற்ப நமது தற்போதைய மாணவர்களைப் பயிற்றிவருவதே சால்புடைத்தாகும். எதிர்கால இந்தியா, பிறதுணையைப் பெரிதும்பெறாமல் தானேநிற்கும்படியமைக்கவேண்டுமானால், நமது மாணவருக்கு நமது தேசாசார தேசாபிமானங்களுடன் பயிற்றப்பெறவேண்டியதவசியமேயாகும். இச்சிறுபோழ்திலேயே தேசாபிமானம் போதிக்கப்பெறாவிடில், அம்மாணவனுக்கு இந்தப் பிறப்பில் அந்த அபிமானம் ஊன்றி நிலைபெறாதென்பது திண்ணமேயாகும். பலகால அடிமைப்பழக்கத்தினால், மாணவர்க்குத் தேசாபிமானவழியில் ஒருவிதமான நடுக்கம் தோன்றியிருந்தது என்றாலும், இப்போதிருக்கும் உத்வேகத்தினால் அந்நடுக்கம் குறைந்துகொண்டு வருகிறது. ஆகையினால் இதுவேசமயம், நமது மாணவரது கண்களைத் திறந்துவிடுவதற்கு என்று எண்ணுகிறோம். தாமதித்தோமானால், தாமதத்துக்குத்தக்ககாலம் பின்னாலும் முன்னேற்றத்திலும் நீட்டித்துக்கொள்ளப்பெறும். நமது ராஜாங்கத்தாரும் தற்காலமுண்டாகப்போகும் மாறுதலுக்கு ஏற்ற சாதகங்களையும் செய்து தந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது நமது மாணவரை அம்முறையிற் பயிற்றாமற்போனால், நமது தேசாபிமானிகள் முயன்று செய்து கொண்டுவரும் பெரிய சீர்திருத்தம் கைகூடிவரும்போது, அதனை வஹிக்கத்தக்கவர்களைத் தேடவேண்டியபடியாய்விடும். எந்த நாடும் அந்த நாட்டு ஜனங்களாலேயே முன்னேறியிருக்கிறதாகச் சரித்தி

ரங்கள் முறையிடுகின்றனவேயன்றி, மற்றொருநாட்டாரால் முன்னுக்குவந்திருப்பதாகக் காணப்பெற்றிலோம். எனினும், நமக்கு இப்போது பிறநாட்டாரும் நமது தேசமுன்னேற்றத்திற் சாதகவழியைக் காட்டிவருகிறார்கள். ஆகையினால் இதுவே சமயமென்றும் சொல்லும்படியிருக்கிறது.

நமது இளைஞரும் தற்காலம் நடந்துகொண்டுவரும் உத்யோகங்களால், தமது தேசம் இப்போதிருக்கும் நிலையையும் இனி அது அடையக்காத்திருக்கும் நிலையையும் நன்றாய் அறிந்தேயிருக்கிறார்கள். தேசம் தனது கால்களாலேயே நின்று தீரவேண்டும் என்னும் செழிப்பான பயிர்க்குப் புழுக்களும் விட்டில்களுமாகப் பலர் புறப்பட்டிருந்தபோதிலும், வானும் காற்றும் வளர்ப்போனும் பாக்குபெற அமைந்திருக்கும்போது அற்பாயுளுடைய புழுககளாலும் எங்கும் நிலைத்திராத விட்டில்களாலும் ஏற்படும் தீங்குகள் நீக்கப்பெறும் என்பதிற் சந்தேகமில்லை. மாணவர்களிலேனும் மனிதத்தன்மையை யடைந்தவர்களிலேனும் தேசவுண்மையை யறியாதவர் இருப்பாராயின், அவர்கட்குப் பல முறையும் போதிக்கவேண்டுவதவசியமேயாகும். ஒரு அரச குமாரன் தனது அறியாப்பருவந்தொடங்கி ஒரு தாழ்ந்தவன்வீட்டில் வளர்க்கப் பெற்றுவரும்போது அவனது இயற்கைக்கு அநுகுணமான ஆற்றல் அவனுக்கு அமைந்திருந்தாலும், அவன் தானாகவாவது, மற்றொருவராலாவது தனது உண்மையை அறிந்துகொண்டாலல்லாமல், ஏற்றத்தை யடையமாட்டான். அவனுடைய இயற்கைக் குணங்களையும் அவனது தேக அமைப்புக்களையும் அவனது சொத்துப் பற்றுக்களையும் அவனது வம்சஸ்தர் குணம் குறிபாற்றல்களையும் எடுத்து அடிக்கடி உபந்யசிக்கவேண்டும்.

மாணவர்கட்கும் பள்ளிக்கூடப்பாடங்களில், சுதேச இயற்கையமைப்பு, சுதேச ராஜ்யங்கள், சுதேச பூர்வ சரித்திரம், சுதேச ஆசாரங்கள், சுதேசப் பெண்மணிகளின் சரித்திரங்கள், சுதேசராஜ சரித்திரங்கள், அவர்களது வீரங்கள் முதலியவற்றைச் சுதேச முறையிலேயே போதிக்கவேண்டும். இடையிடையே முற்கால தற்கால வித்தியாலயமுறைகளையும் அவையுண்டான காரணங்களை

யும் அக்காரணங்கள் தீர்க்கப்படவேண்டிய முறைகளையும் பசுமரத்தாணியெனப் பதியவைக்கவேண்டும்.

தற்போது நடக்கிற யுத்தத்தில், இங்கிலீஷ் சர்வகலாசாலைகள் தமது மாணவர்களையனுப்பித் தேசத்துக்கு உழைக்கும்படியாகச் செய்துகொண்டிருக்கின்றன. அம்மாணவர்கள் தமது தேசத்தின் பெருமையையும் தமது முன்னோர்களின் பெருமையையும் அறிந்துகொள்ளும்படி கற்பிக்கப்பட்டிருந்ததனாலன்றோ தேசாபிமானமும் ராஜாபிமானமுங்கொண்டு முனைந்து யுத்தம் செய்கிறார்கள்! சில் வாழ்நாட் பல்பிணிச் சிற்றுயிர்களுக்குத் தாம் எடுத்துக்கொண்ட தேஹங்களாலடையவேண்டிய பயன் தேசாபிமானத்தில் இதனைக் காட்டிலும் வேறுண்டோ? நமது இந்திய மாணவர்கட்கோ தமது தேச உடையையும் நடையையும் உண்டியையும் மாற்றிக்கொள்வதற்கும் தேசநன்மையை முற்றும் மறப்பதற்கும் எந்தவிதத்திலேனும் வயிற்றுச்சோற்றுக்கு உழைப்பதற்குமே பழக்கங்கள் செய்து கொடுக்கப்பெறுகின்றன.

பாலியவயதிலேயே ஞாபகம்வந்ததுமுதல் தேசமுன்னேற்றத்தின்வழிகளைச் சீராகக் கற்றுத்தெரிந்துகொண்டாலல்லவா, தமது தேஹமும் மனமும் நன்றாய் வேலைசெய்யும் யௌவனகாலங்களில், தக்கவுதவிகளைச்செய்ய முன்வருவார்கள்! அன்றியும் தற்போதைய பெரியயுத்தத்தில் ஏகாதிபத்தியத்துக்குத் தக்க உதவியைச்செய்யும் விஷயத்தில் நமது மாணவர்களையனுப்புவதற்கு யோசனையே பிறக்கமாட்டாதிருப்பதற்குக் காரணம், மாணவர்கள் அவ்விஷயத்தில் ஊற்றங்கொள்ளத்தகுந்த பழக்கம்பெறாததேயன்றி வேறென்ன? தவிரவும், நமது ஏகாதிபத்தியம் சௌக்கியமாக வாழவேண்டுமென்றாலும், இந்தியாவினுடைய நல்வாழ்வையன்றோ கருதவேண்டியிருக்கிறது! ஏனெனில் இந்தியாவில்லையெனின், ஏகாதிபத்தியத்துக்கு யாதொரு சிறப்புமில்லையென்பது யாரும் அறிந்தவிஷயமே. ஆகையினால் இந்தியா சுயேச்சையை அடைந்தாலல்லாமல் ஏகாதிபத்தியம் சுயேச்சையையனுபவிக்கமுடியாதென்றே துணிவாகச் சொல்லலாம்.

அன்றியும், தற்காலம் இந்தியமாணவர்க்குண்டாயிருக்கும் நற்காலம்போல வேறெந்நாட்டுமாணவர்க்கும் உண்டாகவில்லை

யென்றே சொல்லலாம். ராஜாபிமானமும் தேசாபிமானமும் ஒருமிக்கக் காட்டத்தகுந்தது இக்காலமே ஆம். இவ்விரண்டுங்கலந்து ஒன்றாகக் கொள்ளப்பட இருக்காமல், தற்போது தேசத்துக்காகத் தேசவுழைப்பிலும் அரசர்க்காக யுத்தவுழைப்பிலும் தமது உதவியைச் செய்துதரத்தக்க காலம் ஏற்பட்டிருக்கிறது. இதுவன்றி நமது அபிமானத்தைக்காட்டுவதற்குத்தக்கதான வேறுசமயம் ஏது? இச்சமயமல்லாமல் வேறு எச்சமயத்தில் அரசாங்கத்தார் நம்மிடத்திலிருந்து உயர்ந்த உதவியை எதிர்பார்க்கப்போகிறார்கள்.

ஒரு உண்மையான மனிதன் தனது தேசத்துக்காவது தனது ஜனங்களுக்காவது தனது அரசனுக்காவது வேண்டிய சமயங்களில் தனது உடல் பொருள் ஆவிகளுள் ஒன்றையேனும் எல்லாவற்றையுமேனும் தியாகம்செய்து உதவியைச்செய்ய முன் வாராமற்போனால் அவனது பிறப்பின்பயன்றான் யாது? அவனுடைய ஆத்மா கடமையைச் செய்துவிட்டதாக முடியுமா? கடமையைச் செய்யாவிட்டாற் பிறப்பின் முடிவை யடைந்தவனாவனோ? தேகபலத்தைத் தியாகம் செய்துதவுவோர்களும் மனோபலத்தை த்யாகம் செய்துதவுவோர்களும் உண்டென்று கொண்டாலும், இருவர்க்கும் இரண்டினும் பழக்க மிருக்கவேண்டுவ தவசியமே. அவரவரது இயற்கைக்கு ஏற்றபடி இரண்டில் ஒன்று பிரதானியத்தை யடைந்திருந்தபோதினும், மற்றொன்றும் அதற்கு உதவியாயிருக்கவேண்டிய தவசியமேயாகும். ஆகையினால், தனது தேசத்துக்காவது தேச ஜனங்கட்காவது அரசனுக்காவது தான் தனது கடமையைச் செய்யவேண்டுமென்று என்றுகிற ஒரு மாணவன் தனது தேசத்தைப்பற்றியாவது தனது தேசஜனங்களைப் பற்றியாவது தனது அரசர்களைப் பற்றியாவது தெரிந்துகொள்ளாதிருக்கும்வரையில் உழைப்பில் உயர்வனோ? அவனை யுழைப்பிற் செலுத்தினபோதிலும் விலங்கொத்திருப்பனேயன்றி வேறென்ன பயனும்? அதனால், உள்ளத்திற் பதியும்படி. மேற்சொன்னவை கற்பிக்கப்பெறல்வேண்டுமாயின், கல்லூரியில் மாணவனாயிருக்கும் காலமே தக்கதாகும். ஆகையினால், தேசாபிமானம் ஜனாபிமானம் ராஜாபிமானம் இவற்றிற் பழகும்படி தேச சரித்திரங்களையும் தேச ராஜசரித்திரங்களையும் தேச வீர சரித்திரங்களையும் சுதேச முறையிலேயே கற்பித்தல் வேண்டுமென்று இன்னொருமுறை வற்புறுத்துகிறோம்.

பத்திராதிபர்.

பம்பாய் ஜீவகாருண்ய பண்டு.

309, ஷராப் பஜார், பம்பாய். 2.

ஹானரெரி மானேஜர் லல்லுபாய் குலாப்சண்ட் ஜாவெரி
அவர்களிடமிருந்துவந்த கடிதம்.

மாட்சிமைதங்கிய தார் ராஜா
ஸாஹேப் அவர்கட்கு.

மாட்சிமைதங்கிய மஹாராஜா!

பம்பாய் ஜீவகாருண்யபண்டிற்குச் சம்பந்தப்பட்ட சங்கத்தார்களும் வேலைக்காரர்களும் அபிமானிகளுமான கீழ்க் கையொப்பமிட்டிருக்கும் நாங்கள், கீழ்க்குறிப்பிட்டிருக்கும் விஷயங்களைத்தங்களது அன்பும் அபிமானமும் பொருந்திய மாட்சிமை தங்கிய ஆலோசனைக்கு மனுப்பண்ணிக் கொள்கிறோம்.

தங்களது பெருமைதங்கிய அரசாட்சியின்கீழே தங்கியிருக்கும் மனிதகோடிகள், அமைதியையும் ஆனந்தத்தையும் நீதியையும் எப்போதும் பெற்றுச் சுகமாக வாழ்ந்திருக்க, மற்ற எளிமையும் பேசாமையும் உதவியற்றுமிருக்கிற எருது காளைக்கன்று ஆடு முதலிய பிராணிகள் தசரா முதலிய உத்ஸவகாலங்களில் அழிக்கப்பெற்று வருந்துவதுடன், தங்கள் குடிகளிலேயே பெருந்தன்மைவாய்ந்தவர்கட்கும் அதிருப்தியையும் வருத்தத்தையும் கொடுத்துக்கொண்டிருக்கிறதாக அறிகிறோம்.

இந்த வழக்கம் மிகவும் கொடுமையும் மதசம்பந்த மில்லாததுமானதென்று இந்துமத போதகர்கள் பலமுறையும் பல இடங்களிலும் சொல்லியிருக்கிறார்களென்றும், அதையநுசரித்தே சுமார் 200 இரக்கமுள்ள சுதேசராஜாக்கள் இந்தக்கெட்டவழக்கத்தை அறவே நிறுத்திவிட்டார்களென்றும் மாட்சிமைதங்கிய தாங்கள் அறிந்திருக்கலாம். பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியஸ்வாமிகள், கோஸ்வாமி மஹாராஜா அவர்கள் முதலிய ஸாதுக்களுடையவும் மற்றுமுள்ள பண்டிதபோதகர்களுடையவும் அபிப்பிராயத்துக்கிணங்கவும் பட்சபாதமில்லாமல் எல்லாவித ஜீவகோடிகளையும் ஒருமனதுடன்படைத்துள்ள கருணையேயுருவமான எல்லாம்வல்லஇறைவனது நியாயங்கட்கும் இணங்கவும் இவ்வழக்கம் மிகுந்த கொடூரமான தொன்றென்றுதள்ளப்பட்டிருக்கிறதென்றும் மாட்சிமைதங்கியதாங்கள் அறிந்திருக்கலாமாதலால், கருணையுடைய தாங்களும் இவ்வழக்கம் தகுதியற்றதென்றே என்றுவீர்களென்றும் நிச்சயமாக நம்புகிறோம்.

எங்களுடைய விநயத்துடன்கூடிய மனுவுக்கிரங்கி, மாட்சிமை தங்கிய பரோடா கைக்வார் அவர்களும் தங்களது ப்ராந்தியங்களில்

நவராத்திரி தசரா முதலிய காலங்களிலும் இந்தவிதமான பிராணி வதைபை எக்காரணம்பற்றியேனும் செய்யக்கூடாதென்று விலக்கி யிருக்கிறார்கள். அதேபோலவே,மாட்சிமைதங்கிய ஜுனாகாட் நவாப் ஸாஹெப் அவர்களும் பவாநகர், வெங்கனர், பான்ஸ்டா, தாம்பூர் முதலிய சுதேச மஹாராஜாக்களும், கொண்டால், மோர்வி, ராஜ் கோட், லிம்ப்டி, வாத்வான், லாக்தார்முதலிய அநேக மாகாணங் களின் தாகூர் ஸாஹெப் அவர்களும தசராக்காலங்களில் இந்தப் பிராணிவதை செய்யப்படாதென்று தடுத்திருக்கின்றார்கள்.

மாட்சிமைதங்கிய தாங்களும் எங்களுடைய வினயபூர்வகமான இந்தமனுவைக்கண்ணியத்துடன் அங்கீகரித்து, மனிதராகியநமக்கு உழுதொழிலுக்கு உழைப்பாளிகளாகவும், பால் தயிர் வெண்ணெய் நெய்முதலிய உத்தம போஜன பதார்த்தங்களைச் சலிக்காமல் அளிப் பதில் வள்ளன்மையுடையவைகளாகவும் இருந்து தீங்கென்பதை ஒருபோதும் நினையாத மஹோபகாரிகளான எளியபிராணிகளை எவ் விதத்திலும் வதைசெய்யப்படாதென்று தங்களுடைய எல்லாமாகா ணங்கட்கும் ஒருபொதுவான தாக்கீது பிறப்பிக்கும்படியும் அந்தத் தாக்கீதை எந்தச்சமயத்தும் எந்தக்காரணத்தைமுன்னிட்டும் ரத்து செய்யாமலிருக்கும்படியும் மிகவும் வணக்கத்துடன் வேண்டிக் கொள்கிறோம்.

தங்கட்கு யாங்கள்கொடுத்துள்ள இந்தச்சிரமத்தையும் மன்னி த்து எங்களையும் பலத்துடன் கூடினவர்களாகும்படி கவுரவிப்பீர்க ளென்றும் நம்புகிறோம்.

தங்களுக்குக் கீழ்ப்படிதலுள்ள ஊழியர்கள்:

1. பாலசந்த்ரக்ருஷ்ண (Sir, Kt., L. M., J.P.)

2. *B. G.* ஹார்னிமான் (Editor. பாம்பே க்ரானிகல்)

3. நரோத்தம மோரார்ஜிகோகுலதாஸ், (J. P, E-X Sheriff, City of Bombay.

4. மதுராதாஸ் விசான்ஜி கிம்ஜி.

5. வாஸான்ஜி ட்ரிகாம்ஜி.மூல்ஜி, (Sir, Kt., J. P.)

6. பாலகங்காதர திலகர்.

7. லலுபாய் ஸாமல்தாஸ் மேடா, (C. I. E, Member, Bombay Legislative Council.)

8. ஜீவன்லால் பாளலால், (President, the jain Association of India & jeweller to H. H. The Nizam)

முதலிய 41 பெயர்கள்

பத்திராதிபர்.

மதுரைத் தமிழ்ச்சங்க வரலாறு.

"என்றுமுள தென்றமிழியம்பியிசை கொண்டான்" என்று
கம்பநாடர் கூறியவண்ணம் அகத்தியம் என்னும் இலக்கணநூலைச்
செய்து தமிழ்முனியெனச் சிறப்புப்பெயரைப்பெற்ற அகத்தியமுனி
வர்காலந்தொடங்கிப் பல வித்துவான்களாலும் சேர சோழ பாண்
டியரென்னுந் தமிழ்மூவேந்தர்களாலும் வளர்க்கப்பெற்ற நமது தாய்
மொழியாகிய தமிழ் அவ்வரசர்காலத்திற்குப் பின்னர்ச் செந்தமிழ்
நாட்டுப் பெரும்பகுதியை அரசாட்சிபெற்ற சேதுவேந்தராலும்
அவர் வமிசத்தினராலும் இன்றளவும் வளர்க்கப்பெறுதல் உலகறிந்த
விஷயம். இச்சேதுவேந்தர்களுள் ஒருவராயும் வரையாதுகொடுக்கும்
வள்ளலாயும் விளங்கிய ஸ்ரீமது முத்துவிஜயரகுநாதபாஸ்கரசேது
பதியவர்கள் காலத்தில் அம்மன்னர்க்குப் பெரியதகப்பனார் குமார
ரும் ஈவிரக்கம், பச்சாத்தாபம், இன்சொல், கல்வி, கேள்வி, அறி
வுடைமை, தமிழபிமானம் முதலிய நற்குணங்கள் பல பொருந்திய
வரும், பாலவனத்தம் ஜமீந்தாருமாகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்
துரைத்தேவரவர்களால் முன்சங்கமிருந்த இடமாகிய மதுரையின்
கண்ணே ஸ்தாபிக்கப்பெற்றுத் தமிழ்வளர்ச்சிக் காதாரமாய்விளங்கு
கின்ற மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்வரலாற்றைச் சுருக்கமாகவரை
கின்றேன்.

இச்சங்கஸ்தாபகராகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத்தேவர்
தமிழறிஞர்க்குப் பெரும்பொருளுதவிச் செந்தமிழ்ப்பெருநூல்கள்
வெளிப்படுவித்தவரும், புலவர்குழாத்துள் வீற்றிருந்து தமிழாராய்
தலையே பேரின்பமாகக்கருதியவரும், நாடெல்லாம் புகழ்பெற்ற
இராஜ்யதந்திரநிபுணருமாகிய இராமநாதபுரம் ஸ்ரீமான் பொன்னுச்
சாமித்தேவரவர்களுக்கு இளையகுமாரராக அக்ஷய௵ பங்குனிமீ
௯உ (1867௵ மார்ச்சுமீ 21உ) ஜனனமானார். உக்கிரபாண்டிய
னென்பது இவரது இயற்பெயர். இவர் உரியவயதிலே அக்ஷராப்
பியாசஞ்செய்யப்பெற்றுத் தமிழிலும் ஆங்கிலத்திலும் தேர்ச்சி
யடைந்து, காளைப்பருவத்தில் தமக்குரிய பூஸ்திதியை ஒப்புக்கொ
ண்டு பாலவனத்தம் ஜமீந்தார் என்னும் பட்டம்பெற்று, இராமநாத

புரத்திலே சோமசுந்தரவிலாசம் எனப் பெயரியதொரு ராஜமாளிகை நிருமித்து, அதிலே வீற்றிருந்து தமிழாராயத்தொடங்கினர். இவ் வாராய்ச்சியினாலே இவர்க்குத் தமிழிலே பூரண ஞானமும், அதனை வளர்க்கவேண்டுமென்னுமாசையும். வித்துவான்களிடத்து மதிப்பும் உண்டாயின. ஆனால், அதுவோ இவ்வுலகத்தார் பலகாரணங்களா லும் தம்மருமைத் தாய்மொழியாகிய தமிழைக் கைவிடுங்காலமா யிருந்தது.

இப்படியிருக்கையில், சென்னைமாகாணக் கூட்டம் ஒருமுறை மதுரைமாநகரிற் கூடிற்று. அதற்கு விஜயஞ்செய்திருந்த அறிஞர் பலரையும் ஒருங்குகூட்டி, ஒருபேரவைதொகுத்து 'எவ்வாற்றாற் றமிழை வளர்க்கலாம்' என ஆராய்ந்து தேர்ந்து பிலவஞு வை காசிமீ' மகவ (24—5—1901) மதுரை சேதுபதி ஹைஸ்கூலைச் சேர்ந்ததொரு கட்டிடத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தை ஸ்தாபித் தார். அப்பொழுது இவருக்கு வயது 34. அதுமுதல் இம்மஹான் தம் உடல் பொருள் ஆவியென்னும் மூன்றையும் இத்தமிழ்ச்சங்கத் திற்கே தத்தம்பண்ணி அல்லும் பகலும் உழைப்பாராயினர். அதன் பலனாக ஒரு வித்துவக்கழகமும், 25-மாணவர்களுக்கு உண்டி உடை முதலியன கொடுத்து உயர்தரச் செந்தமிழ்க்கல்வி கற்பிக்கத்தக்க கல்லூரி ஒன்றும், புத்தகசாலை ஒன்றும் 4-மாசத்திற்குள் ஏற்பட் டன. ஒருவருஷம் சென்றவுடன் (29—8—1902-ல்) தமிழபிவிருத் திக்கு வேண்டிய நூல்கள் பலவும், ஒரு மாதாந்தரத் தமிழ்ப்பத்திரி கையும் அச்சேறி வெளிவரும்பொருட்டு அச்சுக்கூடம் ஒன்று நிறு வப்பெற்றது. அதன்பின்னர், சுபகிருதுஞு கார்த்திகைமீ' தொடங்கி மாதந்தோறும் செந்தமிழ் என்னும் பெயருடன் சிறந்த தமிழ்ப் பத்திரிகை வெளிவரலாயிற்று. அன்றியும், ஆங்கில கலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷை, தனித்தமிழ்ப்பரீக்ஷை என இருவகைப் பரீக்ஷை கள் வருடந்தோறும் நடத்துவதென்ற தீர்மானமும் ஆயிற்று.

இவ்வாறமைப்பெற்ற தமிழ்ச்சங்கத்தின்செலவுக்காக மாட்சி பொருந்திய பாஸ்கரசேதுபதியவர்கள் தமது சமஸ்தான தரும மகமைநிதியிலிருந்தும் தேவஸ்தானநிதியிலிருந்துமாக மாதமொன்

திற்கு ஐந்நூற்றைம்பதுரூபாய்வீதம் என்றுங்கொடுத்துவரச் சாஸனம் அளித்து அவ்வாறே உதவலானார்கள். அப்பொருளுதவி கொண்டு நடைபெற்றமையால், சங்கத்தின் பிரதான அங்கமாகிய கலாசாலை 'சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை' எனப் பெயர்பெற்றது திருவனந்தபுரம், பரோடா, தர்பங்கா, மைசூர், கொச்சி முதலிய சமஸ்தானாதிபதிகளும் சங்கத்திற்காகச் சிறிது பொருளுதவிசெய்தார்கள். தமிழ்நாட்டிலுள்ள ஜமீந்தார்கள் பலரும், பிரபுக்களிற் சிலரும் தங்களுக்கிஷ்டமான மூலதனமும், மாதச்சந்தாத்தொகையும் கொடுத்துதவ முன்வந்தார்கள். தனித்தமிழரசாகிய மாட்சிமைதங்கிய H. H. புதுக்கோட்டை மஹாராஜா அவர்கள் ரூ 5000 நன்கொடையளித்ததுமன்றி 1904ளு அக்டோபர்மீ முதல் இச்சங்கமுள்ளளவும் மாதச்சந்தா ரூ 50 உதவிவருவதாகச் சாஸனமளித்து அவ்வாறே யுதவிவருகிறார்கள். இவ்வுபகாரநிதியினின்றும் சங்கத்தார் வருஷந்தோறும் நடத்திவரும் சங்கப்பரிக்ஷைகளில் முதன்மைபெறத்தேறும் மாணாக்கர்களுக்குப் புதுக்கோட்டை மஹாராஜா அவர்கள்பெயரால் தோடாமுதலிய பரிசுகள் அளிக்கப்பெறுகின்றன.

இங்ஙனம்திரவியசகாயம்பெற்று நடந்துவருதற்கிடையே மஹோபகாரியாகிய கனம் பாஸ்கரசேதுபதி மன்னரவர்கள் சோபகிருதுளு மார்கழிமாசத்திற் சிவபதமடைந்தார்கள். அடையவே அச்சமயம் இளவரசர் மைனராயிருந்தமையால் மேற்படி சமஸ்தானத்திலிருந்து சங்கத்திற்குக் கொடுத்துவந்த தொகைக்கு மைனர் வியாச்சியமேற்பட்டால் தமது சொந்தத்திலிருந்து ஈடுசெய்வதாக ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவரவர்கள் எழுதிக்கொடுத்ததின்மேல், மேற்படி தொகையில் ஒருபாகம் மாத்திரம் அச்சமஸ்தானமேற்பார்ப்பவர்களாற் கொடுக்கப்பட்டுவந்தது. இதனிடையே 1908ளுல் இத்தமிழ்ச்சங்கம் இந்தியா கவர்ன்மெண்டின் 1860ம்ளுத்து 21-வது சட்டத்தின்படி பொதுத்தருமஸ்தாபனங்களில் ஒன்றாகப் பதிவு செய்யப்பெற்று இதன் காரியநிருவாகத்தின் பொருட்டுப் பதினொருவ ரடங்கிய நிருவாகசபை ஒன்றும் ஸ்தாபிக்கப் பெற்றது.

இவ்வண்ணம் நிகழ்கையில் இளவரசராயிருந்த ஸ்ரீமது ராஜ ராஜேச்வர முத்துராமலிங்க சேதுபதி 1910 ஞு பட்டத்திற்கு வந்தார். இவர் தமிழிலே நல்லஞானமும் அதனைவளர்க்கவேண்டுமென்னு மவாவும் உடையராயிருந்தும் எக்காரணத்தாலோ, தமது ஸம்ஸ்தானத்திலிருந்து கொடுத்துவந்த தொகையை நிறுத்திக்கொண்டது மன்றி, அதற்குமுன்னே ஸம்ஸ்தானத்திலிருந்து சங்கத்திற்குக்கொடுக்கப்பட்டுள்ள தொகைகளெல்லாம் திரும்பத் தமக்குக்கிடைக்கவேண்டுமென்று வியாச்சியமுந் தொடர்ந்தார். தொடரவே சங்கத்தலைவரின் நண்பர்களிற் பலரும், "பெருஞ்செலவுக்கிடமாயிருக்கிற கலாசாலையை நிறுத்திவிடவேண்டும்" என்று யோசனைசொல்ல ஆரம்பித்தார்கள்; ஆனால், கலாசாலையே சங்கத்திற்குப்பிரதானம் என்பது தலைவரின் அபிப்பிராயமாதலால், ஈசனைநம்பி அதனை ஒருவாறு நடத்திவந்தார்.

இஃது இங்ஙனமிருக்க ஆண்டிபட்டிஜமீந்தாரும் தமிழ்வளர்க்க வந்த வள்ளலுமாகி விளங்குகின்ற, ஸ்ரீமான். சா. ராம. மு. சித. பெத்தாச்சிசெட்டியாரவர்கள் 1911ஞு மேமீ் நடந்தேறிய பத்தாவது வருஷக்கூட்டத்திற்கு விஜயஞ்செய்து, அங்கே திரவியசகாய விஷயமாகச் சபையார்க்குச் சங்கத்தலைவர்கூறிய குறிப்புமொழிகளையும், அத்தலைவரின் ஆப்தரும் சங்கத்துக் கௌரவகாரியதரிசியாயின்றளவும் நிருவகித்துவருகிற மஹோபகாரியுமாகிய ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள் எடுத்துரைத்த வெளிப்படைமொழிகளையுங்கேட்டு மனமுருகி உடனே நன்கொடை ரூ 1000 கொடுத்ததுமன்றி அதுமுதற் கலாசாலையின் செலவுக்காக மாதச்சந்தா ரூ 50 கொடுப்பதாகவும்* வாக்களித்தார்கள். காலத்தினாற் செய்த இப்பெருநன்றியைச் சங்கத்தலைவர் அன்புடன் ஏற்று, அவ்வுபகாரியைப் பார்த்து "அன்பார்ந்த பெத்தாச்சி! நீரே இனி இச்சங்கத்திற்குப் பெற்றாச்சி" என்று மனமாரமொழிந்து வாழ்த்திச்

---

* வாக்களித்த அளவில்நில்லாமல் இப்பெருந்தகையாளர் மீ1க்கு ரூ 50 வீதம் ஒருவருஷத்திற்குள்ள ரூ 600-ம் முன்பணமாகக்கொடுத்துவருவது உலகம்பாராட்டத்தக்கது.

சின்னாள் வசித்துவிட்டு விரோதிகிருதுவருஷம் கார்த்திகைமீ ௰௯உ (2—12—1911) இவ்வுலகவாழ்வை நீத்து என்றுமழியாச் சிவபத மடைந்தார். அவைபவே (சேதுபதிமன்னரவர்கள் 'அக்கிராசனாதி பத்தியம் வகிக்கமாட்டோ' மென்றுமறுத்துவிட்டதனால்) அச்சமயம் உபஅக்கிராசனாதிபதியாயிருந்தவரும் மதுரைப் பிரபல வக்கீல்களுள் ஒருவருமான ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள் அக்கிராசனாதிபதியாகவும், ஸ்ரீமான் பெத்தாச்சிசெட்டியாரவர்கள் உப அக்கிராசனாதிபதியாகவும் அமர்ந்தார்கள். இதன்பின்னர், சங்கத்து நிர்வாகசபையார்கூடிச் 'சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை' என்றதை மாற்றித் 'தமிழ்ச்சங்கக்கலாசாலை' எனக் கலாசாலைக்குப்பெயரமைத்தார்கள். இங்ஙனம் இரண்டுவருஷம் செல்வதற்குள் பிரமாதீசவருஷம் கார்த்திகைமீ ௨௪உ (24—11—1913) P. S. சுப்பிரமணியஐயரவர்களுடைய காலமும் ஆகிவிட்டது.

அதன்பின்னர் மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் இராஜா ஸ்ரீமத் முத்துவிஜயரகுநாத ராஜராஜேச்வர சேதுபதியாகிய முத்துராமலிங்க சேதுபதியர்வகள் நண்பர்களுடைய வேண்டுகோட்கிரங்கி, முன் தொடர்ந்திருந்த வியாச்சியத்தை நிறுத்திக்கொண்டு பிரமாதீசவருஷம் கார்த்திகைமீ ௨௰௨உ (12—12—1913) மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் சாசுவத அக்கிராசனாதிபதியாகி, அதுகாறும் சங்ககாரியங்களிற் கண்ணுங்கருத்துமாயிருந்துவந்த சாசுவத உப அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியாரவர்களையும், காரியதரிசி ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாசஐயங்காரவர்களையும் ஸ்ரீமத் மஹாமஹோபாத்தியாய வே. சாமிநாதையரவர்களையும் உள்ளிட்ட நிருவாக சபையங்கத்தினர் பதினொருவருடனுங்கூடித் தமிழை வளர்க்க முன்வந்தருளினார்கள். அதிலிருந்து சங்ககாரியங்களெல்லாம் நன்கு நடைபெற்றுவருகின்றன. எனினும் கலாசாலைக்காரியம் மட்டும் நன்கு கவனிக்கப்படாமலிருந்துவருகின்றது. முன்னெல்லாம் பாலபண்டிதவகுப்பு, பண்டிதவகுப்புகளிலும் பிள்ளைகள் படித்து முதன்மையாகத்தேறிப் பரிசுபெற்றிருக்க, சென்றவருஷத்திற் பிரவேச பண்டிதபரீக்ஷையில் மட்டும் ஐவர் இரண்டாவது

வகுப்பிற்றேறியிருப்பது விசனிக்கத்தக்கதா யிருக்கிறது. மேற்பரீக்ஷைகளுக்குப் பிள்ளைகளேயில்லை. இதற்குக்காரணம் பலவிருக்கலாமேனும், போதியவளவு உபாத்தியாயர்களின்மையே முகற்காரணமாம். இக்கலாசாலையில் உபாத்தியாயர்களுக்கு ஏற்படுத்தியிருக்குஞ் சம்பளம் மிகக்குறைவானதென்றே சொல்லலாம். தக்கசம்பளங்கொடுத்து வேண்டிய உபாத்தியாயர்களை நியமிக்கவேண்டும். பிள்ளைகளுக்குப் போஷணைத்திரவியம் உரியகாலத்தில் உதவப்பெறுமை இரண்டாவதுகாரணமாம். கலாசாலையே தமிழ்ச்சங்கத்திற்குப் பெருமையுண்டுபண்ணுவதாகும். இதிற்படித்தோர்களுக்கு வேலைகிடைக்குமோ கிடைக்காதோ வென்று ஆதிகாலத்திலிருந்த சந்தேகம்நீங்கிவிட்டது. இதில் இதுகாறும்படித்துத்தேறியவர்கள் எல்லாரும் தக்கவேலைகளிலமர்ந்து சுகத்தைவாழ்த்திக்கொண்டு கௌரவமாக வசித்துவருகிறார்களென்பது 1917ஸ் ஆகஸ்டுமீ 24-உவெளியான மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினாறும்வருடத்திய அறிக்கைப்பத்திரத்தினால் அறியக்கிடக்கின்றது. ஆகவே கலாசாலையைநன்குநடத்தின்றச் சங்கத்தார்க்குப் புகழும் புண்ணியமும் கிடைக்குமென்பது நிச்சயம். அக்கிராசனாதிபதியாகிய மாட்சிமைபொருந்திய சேதுமன்னரவர்களும் ஏனைய கனதனவான்களும் நினைத்தால் இஃதொரு பெரியகாரியமன்று. இவர்களெல்லோரும் இனிக் கிருபைகூர்ந்து ஆதரிப்பார்களென்றே நம்புகிறேன். அக்கிராசனாதிபதியவர்கள் கிருபைகூர்ந்து, தம்பிதா அளித்துவந்த தொகைமுழுவதையும் தாமும்அளிக்கமுன்வந்து பிதிருவாக்கியபரிபாலனஞ்செய்தால், கலாசாலை நன்குநடைபெறுதற்கு அதுவே போதியதாகும்.

இப்பொழுது சங்கக்கட்டிடத்திற்காகவும் மூலதனத்திற்காகவும் தொகைகள் சேர்க்கப்பெறுகின்றன. இவ்விஷயத்தில் உப அக்கிராசனாதிபதியவர்களும் காரியதரிசியவர்களும் எடுத்துக்கொண்டிருக்குஞ் சிரத்தை அபரிமிதமானது. அதனால், நகரவைசிய ஸ்ரீமாங்

கள் மனமுவந்து பொருளுதவிவருகிறார்கள். இத்தகைபாரனைவர்க்கும் ஈசன் திருவருள் பெருகுவதாக. மதுரைத்தமிழ்ச்சங்கமும் அதன் சிரம்போல விளங்குகின்ற கலாசாலையும் புத்தகசாலைமுதலிய மற்றையங்கங்களும் நீடூழிவாழ்க.

இங்ஙனம்,
மதுரைத்தமிழ்ச்சங்கமாணவருளொருவனாகிய
அ. கோபாலையன்.

விநோதக் கூற்று.

———:(o):———

கன்னியொடு பாலன் கலந்து சுகித்தனனாய்
ஒன்றிரண்டு மூன்று புதல்வனனே—நன்மகவைக்
கண்டாயோ ஈதும் கலிகாலக் காட்சியோ
உண்டாய மெய்ப்பொருளே ஓர். (1)

ஓராணும் பெண்ணும் உகந்து சுகித்தனராய்ப்
பேராணே பெண்ணே பிறப்பிப்பார்—தோராயோ
பெண்ணோடு பெண்ணுக் கொருபிறப்புப் பேருலகில்
உண்டான தென்னே உணர். (2)

எண்ணி விரல்வைத் திளம்பெண் படித்திடுதல்
கண்கூடாய் யாவருமே கண்டறிந்தோம்—மண்ணிடையே
மங்கை யதுபோல வாசிப்பள் பார்த்தனையேல்
எங்கறிந்தாய் நீதான் இசை. (3)

குறிப்பு:—மேலே கண்ட வெண்பாக்கள் படிப்பதற்கு விநோதமுடையதும் உண்மைப்பொருள் உடையதும் ஆகும்.

1. கோபாலன், கன்னி என்னும் பெயருடைய தம்பதிகள் மூன்று குழந்தைகளுடன் இருக்கும் சம்பவத்தைப் பற்றியது.

2. மாது, என்னும் பெயருடையான் தன்மனைவியுடன் சுகமாயிருந்து ஒரு குழந்தையை அடைந்த சம்பவத்தைப் பற்றியது.

3. பக்குவமடைந்த ஒருபெண் ஹார்மோனியம் வாசிக்கும் சம்பவத்தைப்பற்றியது.

அழகு

கல்விக் கழகு கசடற வேமொழிதல்
சொல்லுக் கழகு சொலின்வாய்மை—இல்லுக்
கழகாகும் கற்புடையாள் அன்பர்க் கழகு
பழகாத தேவஞ்சம் பார். (1)

பார்த்திபர்க்குச் செங்கோன்மை பார்க்கி னழகாகும்
கீர்த்திக் கழகு கொடையே—சீர்த்திபெறும்
செல்வர்க் கழகு செழுங்கிளையைத் தாங்கிடுதல்
எல்லவர்க்கும் கல்வி அழகே. (2)

வசாதிருத்தல் இனத்திற் கழகாகும்
ஆசானுக் கன்பே அழகாகும்—கூசாமை
வேசிக் கழகாகும் வேண்டாமை யேயழகாம்
யோசிப்போர்க் கென்றே உணர். (3)

உணர்வோர்க் கழகாகும் உண்மைவழிச் சேறல்
குணத்தோர்க் கழகின்சொற் கூறல்—மணத்திற்
கழகு சுமங்கலியே ஆய்தற் கழகு
கிழவோரை அண்டியவர்க் கேட்பு. (கேட்பு-கேள்வி) (4)

கேட்புக் கழகு கெடுதி நினையாமை
பாட்டுக் கழகு பகரிசையே—நாட்டகத்
தன்மைக் கழகு தவறாமை சாட்சிகளுக்
கன்மையுரை யாமை அழகு. (5)

A. R. ஸ்ரீநிவாஸமுதலியார்

ஆனைமலை.

சுலோசனை.

(307-ம் பக்கத் தொடர்ச்சி.)

கூத்துக்கொட்டகை.

முந்தின அத்தியாயத்திற் சொல்லிய விஷயங்கள் நடந்து பத்தொன்பது வருஷங்களாயின. இந்தஅத்தியாயத்தைச் சுவேதவதி நகரத்திலுள்ள ஒரு விஸ்தாரமான கூத்துக்கொட்டகையில் துவக்குகிறோம். அக்கொட்டகையில் ஜனங்கள் அதிக நெருக்கமாகக் கூடியிருந்தார்கள். அவர்களுள் அனேக ஜமீந்தார்களும் பிரபுக்களும் தங்கள் குடும்பங்களுடன் காணப்பட்டார்கள். அவர்கள் வைரம் சிவப்பு முதலிய நவரத்தினங்களாலாகிய விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்திருந்தார்கள். கூத்துமேடையில் வேடதாரிகள் (Actors) நாடகமாடினார்கள். ஆக்டர்களிற் பெரும்பாலர் ஸ்திரீகள். ஆகையாற்றான் அந்தநாடகத்திற்கு அவ்வளவு ஜனக்கூட்டம் வந்திருந்தது.

ஆதிகாலத்தில் அரிச்சந்திரபுராணம் ராமாயணம் முதலிய புண்ணிய சரிதைகளை, ஜனங்கள் காதினாற் கேட்பது மாத்திரம் போதாதென்று, அவைகளை நாடக ரூபமாகக் கண்ணாலும் பார்த்து நற்கதியைஅடையும்படி அரிச்சந்திர நாடகம் ராமநாடகம் முதலியவற்றைப் பெரியோர்கள் ஏற்படுத்தினார்கள். அத்தகைய உயர்வான நாடகங்களும் தற்காலத்தில் விடபுருஷர்களும் நன்னடக்கையில்லாதவர்களுமே பார்க்கும்படி ஆகிவிட்டன. அவைகளில் யோக்கியதையுள்ள மனிதர்களும் மானமுள்ள ஸ்திரீகளும் கேட்கத்தகாதவார்த்தைகள் உபயோகிக்கப் படுகின்றன. எந்தநாடகத்தில் லக்ஷணமான ஸ்திரீகள் அதிகமாய்ச் சேர்ந்திருக்கிறார்களோ அதற்குத்தான் வரும்படியும் அதிகம்.

இது இவ்வாறாக, நாம் கதையைத் தொடங்குவோம். நாடகசாலையின் ஒருபக்கத்தில் நான்கு ஸ்திரீகள் இருந்தனர். அவர்கள் உயர்குலத்தைச் சேர்ந்தவர்களென்பதை அவர்களுடைய ஆடையாபரணங்களும் முகவசீகரமும் விளக்கிக்கொண்டிருந்தன. அவர்களுள் ஒருத்தியின்பெயர் அம்புஜம். அவளுக்குச்சுமார் பதினெட்டு வயதிருக்கும். நால்வரிலும் அவள்தான் அதிகலக்ஷணமாயிருந்தாள்.

மற்றைய மூவரும் அவளுடைய தோழிகள். அம்புஜத்திற்குக் கலியாணமாகவில்லை. ஆனால் அவளுக்கு ஒரு கணவன் நிச்சயிக்கப்பட்டிருந்தான். அவன்தான் மதிமானாகிய புவனாலயம் ஜமீந்தார். அவனைப்பற்றிப் பின்பு பேசுவோம். அம்புஜத்திற்குச் சூடாமணி என்ற சகோதரனொருவனுண்டு. அவனுக்குச் சுமார் இருபத்தைந்து வயதிருக்கும், அவன் கெட்ட சிநேகிதர்களுடன் கூடிக் கெட்டுப்போனான். சூதாட்டம், கட்குடி முதலிய துர்வழக்கங்களை உடையவனாயும் விடபுருஷனாயுமிருந்தான். அவனுக்கும் விவாகமாகவில்லை அம்புஜமும் சூடாமணியும் தாய்தந்தையற்றவர்கள், ஆஸ்தியும் நாஸ்திதான், அவர்களுடைய அத்தை அவர்களுடன் வசித்துவந்தாள். தூரதேசத்திலிருந்த அவர்களது பெரியதகப்பனாராகிய ஜமீந்தாரொருவர் அவர்களுக்குச் செலவிற்குப் பணம் அனுப்பிவந்தார். அவர்பெயர் விக்கிரமவர்மா. அவருக்கு வருஷத்திற்கு அறுபதினாயிரம் ரூபாய் வருமானமுள்ள கிராமங்களிருந்தன. அவருக்குப் பெண்சாதி பிள்ளைகள் இல்லாதபடியால், அவருடைய ஆஸ்தியெல்லாம், அவருக்குப் பிறகு சூடாமணியைச் சேரவேண்டியதாயிருந்தது.

அம்புஜத்திற்கு நிச்சயிக்கப்பட்ட கணவனாகிய புவனாலயம் ஜமீந்தாரான மதிமானுக்கு இப்பொழுது வயது பத்தொன்பது. அவன் அதிக அழகுடையவனாகவாவது கல்வியுடையவனாகவாவது இருக்கவில்லை. தான் ஒரு ஜமீந்தார் என்பதனாலும் தனக்கு ஏராளமான ஆஸ்தி இருக்கிறது என்பதனாலும், அவன் வீண்பெருமையும் படாடோபமும் உள்ளவனாயிருந்தான். அவனுடைய இருபத்தோராவது வயதில் ஆஸ்தியெல்லாம் அவன் ஆர்டரு (Order) க்கு வருவதென்று ஒயில் (Will) எழுதப்பட்டிருந்தது. ஆகையால் அவனுடைய இருபத்தோராவது வயதில் அவன் அம்புஜத்தைக் கலியாணம்பண்ணிக்கொள்வதென்று நிச்சயிக்கப்பட்டிருந்தது. அம்புஜத்தின் சகோதரன் சூடாமணியும் மதிமானும் நல்ல சிநேகிதர்கள்.

அம்புஜம் நாடகசாலைக்குத் தனியாய் வரவில்லை. தன் சகோதரன் சூடாமணியுடனும், தனக்குக் கணவனாக நிச்சயிக்கப்பட்டிருக்

கும் மதிமானேடும் வந்தாள். அவர்களிருவரும் அம்புஜத்தைத் தோழிகளோடு விட்டுவிட்டு நாடகக்கணிகைகள் இருக்குமிடத்திற்குச் சென்றார்கள். ஒருமணிநேரம் கழித்து அவர்கள் மறுபடியும் அவளிருக்குமிடத்திற்கு வந்தார்கள்.

மதிமான், "அம்புஜம்! நாங்கள் இந்நேரம் உன்னை விட்டுப் பிரிந்து சென்றிருந்ததால் உனக்கு வருத்தமுண்டாயிருக்கலாம்."

அம்புஜம், "என்னுடைய சிநேகிதைகளுடன் நான்சந்தோஷமாய்க் காலத்தைக் கழித்தேன். ஆகையால் நீங்கள் போனதனால் வருத்தமொன்றுமில்லை."

சூடாமணி தன் தங்கையினிடத்தில் இரகசியமாய்ச் சொல்லுகிறான். "நீ மதிமானிடத்திற் பிரியமாய் நடந்து கொள்ளவேண்டும். இல்லாவிடில் ஒருவேளை அவன் உன்னைக் கலியாணம்செய்துகொள்ள மாட்டான்."

அம்புஜம் மதிமானுக்குக் கேட்காமற் சூடாமணியிடத்திற் சொல்லுகிறாள்:— "தாங்கள் என்னை என்னிஷ்டப்படி விடுவதாயிருந்தால், மதிமானை மணக்க எனக்கு மனமில்லை."

சூடாமணி பதிற்சொல்வதற்குமுன் மதிமான் சொல்லுகிறான். "ஆஹா! நாடகம் எவ்வளவு நேர்த்தியாயிருக்கிறது. என்சகோதரிகளுக்கும் என் தாய்க்கும் அதிருஷ்டமில்லை."

அம்புஜம், "உங்களுடைய தாயாரும் சகோதரிகளும் ஏன் இன்று நாடகத்திற்கு வரவில்லை?"

மதிமான், "என் தாய்க்கு நாடகங்களில் பிரீதி இல்லையாம். விமலாவிற்கு உடம்பு சௌக்கியமில்லை. அசிதா அவர்களுக்குத் துணையாயிருக்கிறாள். மேலும் இன்று காலையில் எனக்கும் என் தாய்க்கும் கொஞ்சம் சச்சரவுஏற்பட்டது. என் நடத்தையைப்பற்றி அவள் எனக்குப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தாள். அவள் என் தகப்பனுரைக் கலியாணம்பண்ணிக்கொள்வதற்குமுன் ஒரு சாதாரணக் குடியானவன்மகள்தானே என்று நான் அவளுக்கு ஞாபகப் படுத்தினபோது என் தாய்க்குச் சொல்லமுடியாத கோபம் வந்துவிட்டது."

அம்புஜம், "தாயாருடன் இவ்விதமாகச் சச்சரவுசெய்தல் அழகாகுமா?"

மதிமான், "இல்லாவிட்டால் அவள் அடங்கமாட்டாள்."

இவர்கள் இவ்வாறு சம்பாஷணை செய்துகொண்டிருக்கையில் அப்பக்கம் வாலிபனொருவன் போய்க்கொண்டிருந்தான். அவன்பெயர் சிந்தாமணி. அவன் அயல்நாட்டிலிருந்துவந்தவன். சித்திரவேலையில் நல்ல சாமர்த்தியவான். சுவேதவதி நகரத்திலிருக்கும் பிரபுக்களின் குடும்பங்களிலுள்ள ஸ்திரீகளுக்குச் சித்திரமெழுதக் கற்றுக்கொடுத்து அதனால் வரும் ஊதியத்தைக்கொண்டு பிழைத்து வந்தான். அவன் இலக்ஷணமான உருவமுடையவன். சற்குண சம்பன்னன். அவனுடைய வயது நிச்சயமாய் இத்தனை என்று சொல்ல முடியாது. பத்தொன்பதற்குமேல் இருபத்தொன்றிற்குள் இருக்குமென்று அவன் முகத்தைப்பார்த்தவர்கள் சொல்லக்கூடும்.

சிந்தாமணி எதிரே செல்வதைக்கண்ட மதிமான் அம்புஜத்தைப் பார்த்து, "அதோ போகிறானே சிந்தாமணி. அவனிடத்தில் தானே நீ சித்திரம் எழுதக் கற்றுக் கொள்ளுகிறாய்?" என்று கேட்டான். அம்புஜம் சிந்தாமணியைப் பார்த்ததும், முகந்துடைப்பவள் போலக் கைத்துண்டினால் முகத்தை மூடிக்கொண்டு சொல்லுகிறாள். "ஆம்; சிந்தாமணியிடத்திற்றானே தங்களுடைய சகோதரிகளும் சித்திரமெழுதக் கற்றுக் கொள்கிறார்கள்?"

சிந்தாமணி அப்பாற் சென்றதும், சுமார் ஐம்பது வயதுள்ள மனிதனொருவன் அங்கு வந்து சூடாமணியைப் பார்த்து, "ஐயா தாங்கள்தானே சூடாமணிப்பிரபு என்பவர்? நான் தூரதேசத்திலிருக்கும் தங்களுடைய பெரியதகப்பனாரகிய விக்கிரமவர்மாவினுடைய சினேகிதன். அவரிடத்திலிருந்து தங்களுக்கும் அம்புஜத்திற்கும் தங்கள் அத்தை நீலாம்பாளுக்கும் கடிதங்கள் வாங்கி வந்திருக்கிறேன்," என்று சொல்லிக் கடிதங்களைச் சூடாமணியிடத்திலும் அம்புஜத்தினிடத்திலும் கொடுத்தான்.

கடிதங்களைப் பிரித்துப் பார்த்தபொழுது அவைகளில், கடிதங்கொண்டுவருபவன் தன்னுடைய சினேகிதனென்றும், அவன்பெயர்

கங்காதரன் என்றும், அவன் வியாபாரம்செய்து பொருள் தேடி, பிறகு அத்தொழிலை விட்டுவிட்டவனென்றும் விக்கிரமவர்மா எழுதியிருந்தார். மேலும் கங்காதரனை அவர்களுடைய சினேகிதனைகப் பாவித்து நடத்த வேண்டுமென்றும் எழுதப்பட்டிருந்தது. கங்காதரன் அங்குக் கூடியிருந்த பிரபுக்களையும் ஜமீந்தார்களையும்போல் உயர்ந்த வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் தரித்திருக்கவில்லை. அவன் ஒரு சாதாரண மனிதனைப்போல் உடுத்தியிருந்தான்.

சூடாமணி, "நம்முடைய பெரியதகப்பனுருக்கு எப்பேர்ப்பட்ட சினேகிதன் அகப்பட்டான். இவனுடன் நாம் எப்படிச்சினேகிப்பது?"

மதிமான், "கங்காதரன்! பேஷ்! பேர் வெகுநன்றாயிருக்கிறது. சூடாமணி! வண்ணுக்தி தன் கழுதை இறந்ததும் 'கங்காதரா மாண்டாயோ, கங்காதரா மாண்டாயோ' என்று கூவியழுதகதை உனக்கு ஞாபகமிருக்கிறதா?"

அம்புஜம், "தாங்கள் இவ்வாறு கங்காதரனைக் கேலிசெய்யக் கூடாது. அவர் எப்படியிருந்தாலும் எங்கள் பெரியதகப்பனுரின் நண்பரல்லவா? அவரை மரியாதையாகவே நடத்தவேண்டும்."

சூடாமணி, "ஆனுல், சரி. கங்காதரா! நீ இவ்வூரில் எங்கே தங்கியிருக்கிறுப்?" கங்காதரன் தான்குடியிருக்கும் வீட்டின் நம்பரையும் வீதியின்பெயரையும் சொன்னுன்.

கங்காதரன் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, நாடகம் பார்ப்பவர்களெல்லோரும் கைகொட்டினுர்கள். அதற்குக் காரணமென்ன? கூத்துமேடையில் ரூபவதியான ஒரு ஸ்திரீ பார்ப்பவர்கள் மனம் சந்தோஷமடையும்படி வெகுநன்றுப் 'ஆக்ட்' செய்தாள். சற்றுநேரம் சென்றதும் கூத்தும் முடிந்தது. கூத்துப்பார்க்க வந்தவர்களில், சிலர் மோட்டார் (Motor car) வண்டிகளிலும், சிலர் நான்கு குதிரைகள் பூட்டிய வண்டிகளிலும், சிலர் இரண்டு குதிரைகளாலிழுக்கப்பட்ட இரதங்களிலும், சிலர் டாக்கார்ட்களிலும், சிலர் ஜட்காக்களிலும், சிலர் துவிசக்கரவண்டி (Bicycles) களிலும், சிலர் பெட்டிவண்டிகளிலும், சிலர் ஒற்றைமாட்டு வண்டிகளிலுமாக, தம்

கள் தங்கள் தரத்திற்கேற்ற வாகனுதிகளிலும், மற்றையோர் கால்நடையாயும் தங்களுடைய வீடுகளை நோக்கிச் சென்றார்கள்.

சிநேகிதர்கள்.

மறுநாட்காலை பத்துமணிக்குச் சூடாமணியின் படுக்கையறைக் கதவை அவனுடைய வேலைக்காரனுகிய கருப்பன் என்பவன் தட்டினான். சூடாமணி அப்பொழுதுதான் நித்திரை நீங்கி எழுந்து உட்கார்ந்துகொண்டு கருப்பனைப்பார்த்து, "ஏன்டா, இவ்வளவு சீக்கிரமாய் என்னை எழுப்புகிறாய்? நான் ஒருமணிநேரங்கூடத் தூங்கவில்லையே," என்று சொன்னான். பிறகு அவன் தனக்கு ஏதாவது கடிதங்கள் வந்திருக்கின்றனவா என்று கேட்டான். கருப்பன் சில கடிதங்களைக் கொடுக்க, சூடாமணி அவைகளைப் படுக்கையிலுட்கார்ந்துகொண்டே பிரித்துப் பார்த்தான். பார்த்துவிட்டுச் "சதாகாலமும் இந்தக் கடன்காரர்களுடைய தொந்தரவுதான் பெரிய தொந்தரவாயிருக்கிறது" என்று சொன்னான். சற்றுநேரம் சென்றபிறகு அங்கு மதிமானும் வந்து சேர்ந்தான். இருவரும் ஒன்றாய் உட்கார்ந்து காலைப்போசனம் அருந்தினார்கள். போசனமானபிறகு இருவரும் உயர்ந்த சீமைச் சாராயங்களைக் குடித்துக்கொண்டே சம்பாஷணைசெய்தார்கள்,

மதிமான், "இன்றுதினம் சமாசாரப் பத்திரிகையைப் பார்த்தாயா? பத்திரிகைகளிலெல்லாம் நேற்று நாடகத்தில் ஆக்ட்செய்த பாலாமணியைப் பற்றித்தான் எழுதப்பட்டிருக்கிறது."

சூடாமணி, "ஆம், அவள் எவ்வளவு நன்றாய் ஆக்ட் செய்தாள். அவளைப்போல் அழகுவாய்ந்த நாடகக்கணிகைகளை நான் எங்கும் பார்த்ததில்லை."

மதிமான், "எனக்கு அவளிடத்தில் அதிக விருப்பமுண்டாயிருக்கிறது. அவளை எப்படியாவது நான் அடையவேண்டும். நீதான் எனக்கு இந்த விஷயத்தில் உதவி செய்யவேண்டும்."

சூடாமணி, "மதிமானே, நீ எனக்கு நல்ல உத்தியோகம் கொடுத்தாய். தனக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கும் புருஷன் தாசிவீடு செல்வதற்குத் தன் சகோதரனே ஒத்தாசைசெய்கிறனென்று அம் புஜத்திற்குத் தெரியவந்தால் அவள் என்ன சொல்லுவாள்?"

மதிமான், "இந்தச் சமாசாரம் உன் சகோதரிக்குத் தெரிய வேண்டாம். மேலும் விவாகம் நடைபெற இன்னும் வருடமிரண்டு செல்லவேண்டுமே. அதுவரை நான் சந்நியாசியாகவா இருக்கிறது?"

சூடாமணி, "நான் வேடிக்கையாகச் சொன்னேன். உனக்கு வேண்டிய உதவி என்னாலானமட்டும் பிரயாசைப்பட்டுச் செய்கி றேன். என்னுடைய வேலைக்காரனாகிய கருப்பன் மிகவும் தந்திர சாலி. அவனை விட்டுப் பாலாமணி எங்கே வசிக்கிறளென்று தெரிந்துகொண்டுவரச்சொல்லுகிறேன். எனக்கும் உன்னால் ஒரு உதவி ஆகவேண்டியிருக்கிறது."

மதிமான், "பணத்தைத்தவிர மற்ற உதவி என்னவென்றாலும் நான் முழுமனதுடன் செய்வேன். பணவிஷயத்தில் நானும் அதிகக் கஷ்டப்படுகிறேன். என்னுடைய 'கார்டியன்கள்'(Guardians)பணம் கொடுக்கமாட்டோமென்கிறார்கள். அவர்கள் வருஷாந்தரம் கொடுக் கும் பணமும் செலவழிந்துபோய்விட்டது."

சூடாமணி, "நான் முன்னமேயே உனக்கு ஐயாயிரம் ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. இன்னமும் கேட்பது அழகில்லை. ஆயினும் எனக்கு முடையாயிருக்கிறது. உன்னிடத்திலும் பணம் இல்லை. இதற்கு என்ன செய்யலாம்?"

மதிமான், "எனக்கு ஒரு யுக்தி தோன்றுகிறது. கங்காதரன் பணக்காரனாயிருக்கவேண்டும். அவன் வியாபாரியாயிருந்தவனென்று விக்கிரமவர்மா எழுதியிருக்கிறாரல்லவா? ஆகையால் அவனிடத்தி லிருந்து ஏதாவது பணம் பிடுங்கலாம்."

சூடாமணி, "இது நல்லயோசனைதான். கடிதமெழுதி அவனை இன்றுசாயந்தரம் விருந்திற்கு அழைக்கிறேன். நல்ல சாப்

பாடுபோட்டு உயர்ந்த சிமைச்சாமாயங்களையும் கொடுத்தால் அவன் மயங்கி நமக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்துவிடுவான்," என்று சொல்லிவிட்டுப் பின்வருமாறு ஒரு கடிதம் வரைந்தான்.

ராஜவீதி.

திங்கட்கிழமை பகல்.

பிரியமான கங்காதர!

நீ தயவு செய்து இன்றுதினம் என் வீட்டிற்கு விருந்துண்ண மாலை ஆறரைமணிக்கு வந்துசேரவேண்டியது. என்னுடைய நேசன் மதிமானைத் தவிர வேறொருவரும் நம்முடன் இருக்கமாட்டார்கள்.

விசுவாசமுள்ள,

சூடாமணி.

இக்கடிதத்தை மதிமானுக்குக் காட்டிவிட்டு, ஒரு வேலைக்காரன் வசம் கங்காதரனிருக்கு மிடத்திற்கு அனுப்பினான்.

சாயந்தரம் ஆறரைமணிக்குச் சூடாமணியும் மதிமானும், முன்னவனுடைய வீட்டின் மேல்மாடியில் இருந்து பேசிக்கொண்டிருக்கையில் வீட்டுவாசலில் ஒரு ஜட்காவண்டி வந்துநின்றது. கங்காதரன் வண்டியிலிருந்து இறங்கி வண்டிக்காரனுக்கு வாடகையைக் கொடுத்தான். வண்டிக்காரனாகிய அப்துல்காதர் என்பவன் இன்னும் அரையணாக் கொடுக்க வேண்டுமென்றான். கங்காதரன் தான் கொடுத்ததுதான் சரியானவாடகையென்றான். அப்துல்காதர் கிடேனென்று சொல்லக் கங்காதரன் கொடேனென்று சொல்ல இருவருக்கும் பெரியவாக்குவாதம் ஏற்பட்டது.

அப்துல்காதர், "என்னங்கோ எஜமான்! பேசின வாடகை கொடுக்காமெ என்னு இப்டி கொடுக்றிங்கோ."

கங்காதரன், "நான் பேசினபடிதான் கொடுத்திருக்கிறேன். ஏது நீ வண்டிக்காரப்பயல்களின் போக்கிரித் தனத்தைக் காண்பிக்கிறாப்போலிருக்கிறதே."

அப்துல் "என்னுபா போக்கிரித்தனம் காமிக்கிறங்கோ. நீங்கோ இந்தஊருக்கு புச்சிபோலிக்குதே காட்டுப்புறத்திலேந்துவந்திங்லோ சும்மா கதேபண்ணாமே காஸ்குடுத்துட்டு அப்பாலேபோங்கோ."

கங்காதரன், "நான் என்ன வாடகை பேசினேன்?"

அப்துல், "நாலரையணா பேசிபோட்டு நாலணா கொடுத்திருக்கிங்கோ, அடே நீங்கோ பேசினது வயா என்னா?"

கங்கா, "இனிமேல் ஜாஸ்தி பேசினால் செருப்பாலே அடிப்பேன். இங்கே வரக் குருடன்கூட நாலணாவிற்குமேலே வாட..."

அப்துல், "அடபேலே; நம்ப [illegible] போனா [illegible]னேன், நீ நம்கு போடா வாடா செருப்பாலே அடி[illegible]டி இங்கே வர்த்தாது நாலணாதுமேலே குருடன்[illegible] மாட்டான் சொல்லே. பேமானிமன்ஸா, நம்மோ பட்ணம் [illegible]கா ஈஸ்துப் போராம்பார் குப்பைவண்டி அதிலேபோயி நாலணாரு எது"

கங்கா, "பேசாமற் போய்விடு. நீ இங்கே ஏதாவது அக்கிரமமாய்ப்பேசினாற் போலீஸ்காரனைக் கூப்பிட்டு அரெஸ்டு (Arrest) செய்யச் சொல்லுவேன்."

அப்துல், "அரேக்பாரே. அரையணாகு கொடுக்க விதியில்லே ஆக்கு பாத்தா கொடக்கூலிக்கு வேட்டி சட்டை வாங்கிப் போட்டா வந்தாப்போலீக்குது போல்ஸ்காரன்கி என்னாத்துக்கு கூப்பிடரே. நம்மோ நவாப்ஸான்னா உன்கி தெரியாது. அரே து பாக்சோத் சல்-சல்.

இதற்குள் ஜனங்கள் வந்து கூட ஆரம்பிக்க, கங்காதரன் வீட்டிற்குள் [illegible]விட்டான். அப்துல்காதர் [illegible] [illegible] [illegible]

கங்காதரன், "[illegible] வண்டிக்காரர்கள் [illegible]ரிகளாயிருக்கிறார்கள்" (தொடரும்)

வ. வி. நடேசன்செட்டி.
ஆத்தங்குடி.

 44

சிவகாருணியம்.

:(o):

சிவகாருணியம் என்பது சீவன் காருணியம் என்னும் இரு மொழியாலாகிய தொடர்மொழி. சீவர்களிடத்திற் செயற்பாலதாகிய காருணியமெனப் பொருள்படும். சீவன், ஆன்மா, பிராணி என்பனவும், காருணியம், கருணை, தயை, இரக்கம் என்பனவும் ஒருபொருள் குறித்தனவாம். இவ்விரண்டினுள், சீவனாகிய ஆன்மாவைப்பற்றி ஆராய்ந்துகொண்டு பின்னர்ச் சீவர்களிடத்திற் செய்ய வேண்டிய காருணியத்தைப்பற்றி ஆராய்வாம்.

ஆன்மாக்கள், நித்தியமாய் வியாபகமாய்ச் சரீரந்தோறும் வெவ்வேறாய் எண்ணிறந்தபலவாய் இருவினைப்பயனாகிய இன்பதுன்பங்களை நுகர்தற்பொருட்டுப் பற்பல பிறவிகள்தோறும் பிறந்திறந்துழலுஞ் சிற்றறிவுஞ் சிறுதொழிலும் உடையனவாயிருக்கும். இன்னும் நித்தியமாய் ஒன்றாய்ப் பிறப்பிறப்பில்லாமற் கருணையே யுருவமாகவுடைய பரமான்மாவாகிய முழுமுதற்கடவுளைத் தலைவனாகவும் உள்ளன.

நாமெல்லோரும் மேற்கூறிய ஆன்மாக்களே. பசு பக்ஷி முதலிய பிராணிகளும் ஆன்மாக்களே. ஆன்மாக்கள் இயற்கையில் மேனோக்கிய அறிவையுடையன. "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய், வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச், செல்லாநின்ற இத் தாவரசங்கமத்து, ளெல்லாப்பிறப்பும்பிறந்திளைத்தேன்" எனப் பெரியாருரைப்படி நாம் எண்ணிறந்த பிறவிகளிற்செய்த புண்ணியமிகுதியால் இவ்வரிய மனிதயாக்கையையடையப்பெற்று ஆன்மாவின் இயற்கை மேனோக்கத்தையும் அடையப்பெற்றுள்ளோம்.

இங்ஙனம் உயர்ந்தபதவிக்கு வந்திருக்கின்ற நாம் மிருகாதிகளைப்போற் கீழ்நோக்கத்திற் செல்லாது நமதுதன்மைத்தன்மையினையும் கடவுட் டன்மையினையும் இவற்றை யறியவொட்டாமற்றடுக்

கின்ற பாசத்தின் றன்மையினையும் (பசுபதிபாசலக்ஷணங்களை) உள்ளவாறறிந்து பசுபதியின் பெருங்கருணையைப் பெறுதல்வேண்டும்.

இறைவன் எல்லோரிடத்திலும் ஒருதன்மைத்தாகவைத்திருக்கின்ற நிரந்தர கருணையையுடையவர். நாம் நம்மைப் பிணித்துநிற்கின்ற பாசத்தடையால் மனமாதிய வேறுபட்டு, சிலவற்றைத் துன்பமெனவும், சிலவற்றை யின்பமெனவுங்கருதி வெறுப்புவப்பினையடைகின்றோம். இவற்றால் ஒருதன்மைத்தாகிய ஆன்மாக்களிடத்தில் வேறுபாடுற்று நன்மை தீமைகளைச் செய்கின்றோம்.

இங்ஙனஞ்செய்யும் இருவினையுள்ளளவும் பிறப்பிறப்பென்னுந் துன்பத்தினின்றும் நீங்கியுய்தல் எங்ஙனங்கூடும்! "பிறந்தோருறுவது பெருகிய துன்பம், பிறவாருறுவது பெரும்பேரின்பம், பற்றின்வருவது முன்னது பின்னது, அற்றோருறுவ தறிக" என்னும் ஆன்றோர்வாக்கும் இதனை வலியுறுத்துகின்றதே. இவற்றிற்குக் காரணமாகிய பாசத்தடை நீங்கவேண்டுமாயின் அவ்விறைவனது கருணையே இன்றியமையாத காரணமாகும். இதனைக் கருதித்தான் "அவனருளாலே யவன்றாள்வணங்கி" எனவுங் கட்டளையிட்டனர்.

இவற்றையெல்லாம் உண்மையெனக் கருதும் ஆஸ்திகராகிய நாம் இறைவனருளைப்பெறுதலும், அதனைப் பெறுதற்கேற்ற வழியைத்தேடுதலும் முக்கியமாதலின் இறைவனருளைப்பெறுதற்குச் சிவகாருணியமே ஏற்றவழியாகும்.

எங்ஙனமெனில், "வயிரமாதியும் மபன்வினையிரும்பும், செயிரறுபொன்னைச் செம்மைசெய்பாணியுந், தமக்கமை கருவியுந் தாமாம்" எனவும், 'இரும்பினி நம்மிடை போழ்ப பெருஞ்சிறப்பின, னீருண்டார் நோல்வாய் பூசபதேரி, னரிய வரியவற்றாற் கொள்ப பெரிய, பெரியரா னெய்தப் படும்' எனவுங் கூறிய ஆன்றோர்வாக்கை நோக்குவோமாயின் வயிர முதலியவற்றைச் செப்பஞ் செய்வதற்கு வயிர முதலியனவே கருவியாதல்போல் இறைவன்கருணையைப் பெறுதற்கு அவ்விறைவனது உடைமைப்பொருளாகிய எல்லாப் பிராணிகளிடத்துங் கொள்ளுஞ் சிவகாருணியமே ஏற்றகருவியாகும்.

இனிக் காருண்யத்தைப்பற்றி யாராய்வாம். பிராணிகள் படுந் துன்பத்தைக்கண்டு மனஞ்சகியாது யாதொருதொடர்புமின்றி அத் துன்பத்தைநீக்க முயலும் மனநிகழ்ச்சியே காருணியமாகும். இத் தகைய காருணியமுடையோர் தன்னுடைய களங்கத்தைநீக்க முயலாது உலகிருளைநீக்கிக் குளிர்விக்கின்ற திங்களைப்போற் பிறர் துன்பத்தை நீக்குதலே முக்கியமாகக் கொண்டொழுகுவர். இதனைக் கருதாதவரன்றோ தம்முடலைவளர்த்தற்குப் பிறவுயிர்களின் உடலைச்சேதிக்குந்தீங்கைச் சிறிதுமெண்ணாது செய்யத்துணிகின்றனர்? இஃதென்ன அறியாமை! இதனைக்கருதித்தான் ஆன்கொலையென வாயாற்சொல்லவுங்கூசி 'ஆன்முலையறுத்தவறனிலோர்க்கும்' என மனநடுங்கிக் கூறுவாராயினர்.

கருணைசெய்யுங்கால்எல்லாப்பிராணிகளும்'இதனைப்பெறுவிடின் உடலோடுகூடிவாழும் வாழ்க்கையிலின்றும் அழிதல்கூடும் அதனை அப்பிராணிகளுக்குக் கொடுத்து அவ்வழிவைநீக்குதலே சிறந்த கருணையெனக் கோடல்வேண்டும். "உண்டிமுதற்றே யுணவின் பிண்டம், உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே, உணவெனப் படுவது நிலத்தொடுநீரே" என்றாங்கு எல்லாப்பிராணிகளும் உணவில்லாவிடின் உணவின் பிண்டமாகிய வுடலினின் றழிவடைதலின் உணவுகொடுத் துடலைப் பாதுகாத்தல்வேண்டும்.

சர்வான்மாக்களும் கடவுளின்றிருமேனிகள். ஆன்மநிலயமாகிய வுடம்புகளெல்லாம் கடவுளுக்கு ஆலயங்கள். ஆலயத்திருப்பணி செய்தல் உத்தமதருமமெனக் கூறும் வேதாகமங்கள் உணவினைக் கொடுத்த உடலைவளர்க்குந் தருமத்தைப் புகழ்ந்தேத்தாது விடுமோ? உலகம் போற்றுந்தருமமெல்லாம் உணவுகொடுத்தலிலடங்கும். ஆதலின் மனமிரங்கி நீரையுமுணவையும் ஏற்றார்க்கு மாற்றுதல் வேண்டும்.

இஃதிங்ஙனமிற்க; தம்மிடத்துவந்து ஒன்றைப் பெற்றுச் சென்றவர் மீட்டும் பிறர்பாற்சென்று இரந்து வருந்துதலின்றிச் சுகமெய்தக்கொடுத்தலே கொடையாளர் செய்கையாகும்.

அத்தகைத்திலின்றாய்வோமாயின், ஓரன்னசத்திரத்தில் நிரம்பவுண்டு சென்றவரும் அற்றைப் பிற்பகலிலேயே மற்றொரு சத்திரத்தை நாடவேண்டியிருக்கிறது. அல்லது ஆயுளளவும் அன்னங்கொடுப்பதாய்க் கொடிகட்டி னும்ஆன்மலாபத்தைபறியும் அறிவு வளர்ச்சி குன்றி உடல் வளர்ச்சிமாத்திரமாய்ப் பெரும்பயனின்றி, மலைகல்லி யெலிபிடித்தல்போலாகின்றது. அல்லாமலும் அநேகர் மடமையும் சோம்பலுமுடையவராய்த் தேசமுன்னேற்றத்திற்குத் தடையாய் முயற்சியின்றி விளர்களாகின்றனர். ஆகலின் உடல் வளர்ச்சியோடு அறிவுவளர்ச்சியையுங் கருதி அதற்கேற்ற கல்வியாகியவுணவையுங் கொடுத்துவருதற்கு முன்வரல்வேண்டும்.

அன்னசத்திரமென்றால் அதற்கடுத்துக் கலாசாலையுமிருத்தல் வேண்டும். கலாசாலையிற்கல்விபயிலும் மாணவர்களே பெரும்பாலும் அன்னம்புசிக்கும் அருந்துணையா யிருத்தல்வேண்டும். இங்ஙனஞ் செய்வதே பெருங்கருணையாவதோடு தேசநன்மைக்கும் ஏற்ற சாதகமாகும்.

இறைவன் கருணையைப்பெற விரும்புவோரெல்லாம் அன்னதானத்தோடு வித்தியாதானத்தையும் ஒன்றற்கொன்று அங்கமாகக்கொண்டு செய்துவருவாராயின் இறைவன் கருணையைப்பெற்று நித்தியவின்பத்தை யடைவார்களென்பது சரதம். இவ்வெண்ணம் நிறைவேற அவ்வண்ணலது அருளைப் போற்றுவோமாக. சுபம்!

இங்ஙனம்,

சண்முகநாதன்.

பலவான்குடி.

நாநாவிதக் குறிப்புகள்.

பர்மாவில் தேசபாஷையில் வைத்தியப்பள்ளிக்கூடம்:—பர்மா தேசத்து லெப்டினென்ட் கவர்னர் அங்கு ஆங்கிலந்தெரியாத இந்தியர்களுக்குத் தேசபாஷையில் வைத்தியக்கல்விபயிலுவதற்குப் பள்ளிக்கூடமொன்று ஸ்தாபிக்க ஏற்பாடுசெய்ய ஒரு கமிட்டியை ஸ்தா

பித்திருக்கிறார். அக்கமிட்டியானது, அநுபவபூர்வமாய்க்கல்விகற்பிக்க வேண்டிய சௌகரியங்களைப் பற்றியும், பள்ளிக்கூடத்தில் எத்தனை மாணவர்கள் சேர்த்துக்கொள்ளக்கூடுமென்பதைப் பற்றியும், இதற்காக நேரிடும் பணச்செலவைப் பற்றியும் நிர்வாகத்தைப் பற்றியும் இவ்வளவு காலம் பயிற்சிசெய்யப்படவேண்டுமென்பதைப்பற்றியும் ஆராய்ச்சிசெய்து விஷயங்களை அறிவிக்கும். இம்மாதிரிப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்க உத்தேசித்திருப்பது மேனாட்டு வைத்திய சாஸ்திரத்தை ஏழைஜனங்கள் அறிந்துகொள்ளும் பொருட்டேயாம்.

ரணங்களை ஆற்றுவதிற் சர்க்கரையின் உபயோகம்;—ரணங்களை ஆற்றுவதிற் சர்க்கரையின் உபயோகத்தைப்பற்றிப் பின்வரும் குறிப்பு வைத்தியகலாநிதியிற் காணப்படுகின்றது:—வியாதிகளுடையவும், அவற்றின் சிகிச்சைகளுடையவும் தத்வங்களை ஆராய்ச்சிசெய்வதற்கென்று ஏற்பட்டுள்ள 'ஸொஸைடி ஆப் பாதலாஜிகல்ஸயன்ஸ்' என்னும் சங்கத்தில், டாக்டர் விஹாஸட் என்பவர் தாம் அநேக ஸமயங்களில் மிருகங்களுக்குச் சஸ்திரசிகிச்சை செய்கையில், அவற்றின் ரணங்களை உப்புநீராற் கழுவி அப்பாற் சர்க்கரையை அந்த ரணங்களின் மேல் தூவி அவற்றை ஆற்றியதாகக் கண்டுபிடித்ததாய்ச் சிலவிவரங்களைக் கூறினார். சர்க்கரையைத்தூவிவருகையிற் சிலநாட்களுக்கெல்லாம் ரணம் விரைவாக ஆறிவருவதைக்காணலாம். இதே சிகிச்சையை மனிதருக்கும் சீழ்பிடிக்கும் ரணங்களிற் செய்து பார்க்கவேண்டுமென்று டாக்டர் கிரோலேட் என்பவர் வற்புறுத்திக் கூறினார். அவ்விதமே மனிதருக்கும் இதை உபயோகித்துப் பார்த்ததில் நன்றாகப் பிரயோஜனப்படுவதாகத் தெரியவந்தது. சர்க்கரைக்குப் பூயாபகம் (Aaisultle) என்கிற குணம் விசேஷமாய் உண்டென்பது வெகுகாலத்திற்குமுன்னே நம்மவர்க்குத் தெரிந்து அவ்வாறுசெய்வது வழக்கத்தில் இருந்துவந்ததென்பதைமட்டும் கவனிக்கவேண்டும். சிலநாட்களுக்குமுன்பு மேனாட்டுவைத்தியர்கள் சர்க்கரையை அயோடோபாரத்துடனாவது நாப்தலீயினுடனாவது கலந்து ரணங்களுக்கு உபயோகிக்கலாமென்று கண்டார்கள். முன்பு டாக்டர் G மாக்னஸ் என்பவர் பரீக்ஷார்த்தமாகச் சர்க்கரையை ரணங்களில் உபயோகித்து நற்குணம் கண்டிருக்கிறார்.

கற்பூரம்:—உலகத்தில் எங்கும் உபயோகிக்கப்படும் கற்பூரமானது ஜப்பான்தேசத்தில் தான் உற்பத்தியாகின்றது, அங்கு 1916-17-ம் வருஷத்தில் 20,000 மணங்கு கற்பூரமும். 40000 மணங்கு கற்பூரக்தைலமும் உற்பத்தியாயினவென்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தக் கற்பூரமரங்கள் ஜப்பானைச்சேர்ந்த பர்மோசாத்தீவில்தான் மிகுதியாக வளர்கின்றன. ஜப்பானைவிட அங்குக் கற்பூரம் அதிகமாக உற்பத்தியாகின்றது.

இங்கிலீஷ் கப்பலில் இந்தியருக்கு உத்யோகம்:—கல்கத்தாவாசியாகிய சுரேந்த்ரநாதமஸூம்தார் என்பவர், "மர்ச்செண்ட் ப்ரின்ஸ்" என்ற கப்பலுக்கு 4-வது இன்சினியராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று சமாசாரம் எட்டுகின்றது. இங்கிலீஷ்கப்பலில் இந்தியருக்கு உத்தியோகம் கிடைத்தது இதுதான் முதல்தடவையாகும்.

சுருட்டுப்பிடிப்பது கெட்டவழக்கம்:—சுருட்டுப்பிடிக்கும்வழக்கமானது நமதுநாட்டில் வெகுவிரைவாய்ப் பரவிக்கொண்டுவருகின்றது. இதைத் தடுப்பதற்கு இராஜாங்கத்தாரால் பலத்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படாவிட்டாலும், ஆங்காங்குப் போதச்சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டுவது அவசியமாகும். கல்கத்தாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இத்தகைபசங்கத்தாரின் கூட்டமொன்றில் தலைமைவகித்த டாக்டர் C. ஸர்க்கார் எம். டி. என்பவர் சுருட்டுப்பிடிப்பதன் கெடுதல்களைப் பற்றிப் பேசுகையில், "அது நமது ஞாபகசக்தியை ஒழித்துவிடுகின்றதென்றும், தேக சௌக்கியத்தையும் மனோசக்தியையும் கெடுக்கின்றதென்றும். இதனால் வரும் நோய்களைத் தீர்க்கத்தக்க மருந்துகளே இல்லையென்றும் குறிப்பிட்டார்.

இலவசக்கல்வி:—கல்விபவிவிருத்திவிஷயத்தில் சுதேச சமஸ்தானங்கள் மிகவும்முற்போக்கடைந்துவருகின்றன, கோலாப்பூர்ச் சமஸ்தானத்தில் ஆரம்பக்கல்வியானது இலவசமாயும் கட்டாயமாயும் செய்யப்பட்டிருக்கின்றது. இதன்செலவுக்காக மகாராஜா அவர்கள் இவ்வருஷம் ஒரு லட்சம் ரூபாய் அதிகம் உத்தரவுசெய்திருக்கிறார்கள். இதைப்போலவே இன்னும்சில ஸமஸ்தானங்களு

னும் ஆரம்பக்கல்வியானது கட்டாயமாயும் இலவசமாயும் ஆக்கப்பட்டிருக்கின்றது. இவ்விதமே பிரிட்டிஷ் இந்தியாவிலும் அநுசரிக்கப்பட்டால் மிகுந்த நன்மையுண்டாகும்.

உலகத்தில் உயர்ந்தவன்:—அமெரிக்காவில் பிலடல்பியா என்னும் ஊரிற்பிறந்த ருக் என்பவன் உலகத்திலிருக்கும் பிள்ளைகளுக்கெல்லாம் உயரமாயும் கனமாயும் இருக்கின்றானாம். அவனது உயரம் 6 அடி 7 அங்குலம்: எடை 192 ராத்தல். அவனுக்கு வயது 15 தான் ஆகின்றதாம். இந்தச் சிறுவயதில் இவ்வளவு உயரமும் கனமுமிருப்பது ஆச்சரியமே.

ஜனோபகாரி.

மதிப்புரை.

மனோரஞ்சனி:—இப்பெயர்புனைந்த மாதாந்தப் பத்திரிகையொன்று வரப்பெற்றோம். இப்பத்திரிகை காரைக்குடியினின்றும் வெளியாகிறது. இதற்கு நாளிது பிங்கள ஹூ ஆடிமீ ஸஞ்சிகையே முதல் ஸஞ்சிகையாக இருக்கிறது: இச்ஸஞ்சிகையில் அருமையான விஷயங்கள் தங்கபண்டிதர்களால் எழுதப்பெற்றிருக்கின்றன. அவற்றுள், செந்தமிழ்ப்பாஷையுந் தேவபாஷையே" என்னும் வியாஸம் மிகவும் பாராட்டத்தக்கது. இதனையெழுதினவர் த[illegible]ராகவும், அநுபவசாலியாகவும் உள்ளவர். தக்க பிரமாண[illegible]டு எழுதியிருக்கிறார். "மனோசக்தி" என்னும் வியாஸமும் படிப்போரது மனத்தைக்கவரும்சக்திவாய்ந்துள்ளதாகவே எழுதப் பெற்றிருக்கிறது. பெற்றோரைப்பேணல் என்னும்வியாஸம் எழுதியுள்ளார் தமது அநுபவமுறையைநன்கு காட்டியுள்ளார். மற்றோரும் இதனைப் பின்பற்றவேண்டியதேயாகும். இதன் வருடச் சந்தா ரூ. 2—0—0 வேண்டுவோர், மானேஜர், மனோரஞ்சனி ஆபிஸ், காரைக்குடி என்று எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.

வைத்தியக் கைம்முறை:—இது, சில அநுபவவைத்தியமுறைகள் அடங்கியுள்ள ஒருசிறு புத்தகம். முறைகளெல்லாம் நமது தேசவைத்தியமாகிய ஆயுர்வேதமுறையே. செய்பாகமும் நீங்கும்நோய்களும்விவரமாக எழுதப்பெற்றுள்ளன. இதன்விலை அணா இரண்டே. வேண்டுவோர் காரைக்குடிக் கம்பராமயணப்பிரசாரகர் M. V. கோவிந்தராஜையங்காருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

ஸ்ரீ பிரஹதம்பாள் ஸஹாயம்.

புதுக்கோட்டை ஸம்ஸ்தானம்.

பிங்கள ஹூ நவராத்திரி பண்டிகை.

1917-அக்டோபர்மீ 17உ க்கு, பிங்கள-ஹூ ஐப்பசிமீ 1உ புதன்கிழமை ஆரம்பமாகி நடக்கிற நவராத்திரி பண்டிகையின் கிரமம்:—

ஸ்ரீ அம்பாள் தரிசனம்.

மேற்படி தேதி உதயாதி 1-நாழிகைக்குமேல் 5-நாழிகைக்குள் துலா லக்னத்தில் மஹா-ள-ஸ்ரீ மஹாராஜா அவர்கள் ராமபாணகத்தி ஸஹிதம் தருப்புடங்காவுடன் ஸ்ரீ திருக்கோகர்ணம் கோவிலுக்குப்போய் ஸ்ரீபிரஹதம்பாள் தரிசனம்செய்துகொண்டு சடேஸவாரியுடன் ராஜவீதி ப்ரதக்ஷிணமாய் ஸவாரி விஜயம் செய்து அரண்மனை ரங்கவிலாசத்தில் இருக்கிற ஜபப்பிராமணாள் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்வார்கள்.

பூஜாரம்பம்.

மேற்படி தேதி உதயாதி 10¼-நாழிகைக்குமேல் 15-நாழிகைக்குள் தனுர் லக்னத்தில் ள-அரண்மனையில் நவராத்ரிமஹோத்ஸவத்திற்காக துர்க்கா,லக்ஷ்மீ, ஸரஸ்வதி, கும்பங்களுக்கும், இதர பிம்பங்களுக்கும் நேத்திரோன்மீலனமானபிறகு கடஸ்தாபன பூஜாரம்பம்செய்யப்படும். மேற்படிதேதி உதயாதி20¼ நாழிகைக்குமேல் 24-நாழிகைக்குள் கும்ப லக்னத்தில் பூரி ஆரம்பிக்கப்படும், அன்று ராத்திரியும் பூஜைநடக்கும்.

நித்தியப்படி இரண்டுவேளை பூஜை.

அக்டோபர்மீ	18உ	க்கு ஐப்பசிமீ	2உ வியாழக்கிழமை	2-ம் பண்டிகை.	[illegible]
”	19உ	”	3உ வெள்ளிக்கிழமை	3-ம் ”	
”	20உ	”	4உ சனிக்கிழமை	4-ம் ”	
”	21உ	”	5உ ஞாயிற்றுக்கிழமை	5-ம் ”	
”	22உ	”	6உ திங்கட்கிழமை	6-ம் ”	
”	23உ	”	7உ செவ்வாய்க்கிழமை	7-ம் ”	

ஸரஸ்வதிபூஜை.

அக்டோபர்மீ 24உ க்கு ஐப்பசிமீ 8உ புதன்கிழமை 8-ம் பண்டிகை உதயாதி 3¼-நாழிகைக்குமேல் 9-நாழிகைக்குள் விருச்சிக லக்னத்தில் ஆயுதசுத்திசெய்து ஸரஸ்வதிபூஜைசெய்யவும் முகூர்த்தம் உத்தமம்.

வித்வத் ஸம்பாவனே.

அக்டோபர்மீ 25உக்கு ஐப்பசிமீ 9உ வியாழக்கிழமை விஜயதசமி காலே 7-மணிக்குமேல் 9-மணிக்குள் வித்வத் ஸம்பாவனே கல்யாணக்கட்டில் நடக்கும்.

புனப்பூஜை. ஆயுத கிரஹணம்.

மேற்படி தேதி காலமே 9-நாழிகைக்குமேல் 13½-நாழிகைக்குள் தனுர் லக்னத்தில் மஹா-ரா-ரா-ஸ்ரீ மஹாராஜா அவர்கள் புனப்பூஜை வகையரா செய்துகொண்டு பெரிய பூரிக்கும் ஜப தக்ஷிணைக்கும் தத்தம் செய்துபோட்டு ஆயுதகிரஹணம் செய்வார்கள். அப்பால் உத்தியோகஸ்தர்கள் உத்தரவு பெற்றுக் கொள்ளுகிறது.

பெரியபூரி.

மேற்படி தேதி பகல் 22½-நாழிகைக்குமேல் 24-நாழிகைக்குள் கும்ப லக்னத்தில் பெரியபூரியும் ஆரம்பிவிக்கப்படும்.

விஜயதசமி அம்புபோட ஸன்னாஹ ஸவாரி.

மேற்படி தேதி உதயாதி 28½-நாழிகைக்குமேல் 33-நாழிகைக்குள் மேஷ லக்னத்தில் மஹா-ரா-ரா-ஸ்ரீ மஹாராஜா அவர்கள் ராமபாணசக்தி ஸஹிதம் ஸகல ஸன்னாஹத்துடன் ரா-திவான் அவர்கள் மற்ற எல்லா உத்தியோகஸ்தர்களுடன் ஸ்ரீ திருக்கோகர்ணத்திற்கு மேலராஜவீதி வழியாக அம்புபோட ஸவாரி விஜயம் செய்வார்கள். ஆசாரியார் தண்டியலில் வருவார். அரண்மனையிலிருந்து புறப்பட்டவுடன் 21 பீரங்கி வேட்டுகள் போடப்படும்.

உடன் ஸ்ரீஅம்பாள் தரிசனம்.

ஸ்ரீ திருக்கோகர்ணத்தில் வழக்கப்படி அம்புபோட்டவுடன் கோவிலுக்குப்போய் ஸ்ரீ பிரஹதம்பாள் தரிசனம் செய்துகொண்டு ஸகல ஸன்னாஹத்துடன் பெரிய ராஜவீதி பிரதக்ஷிணமாகத் திரும்ப அரண்மனைக்குள் வந்துசேருவார்கள்.

விஜயதசமி கர்னாடகதர்பார்.

பிரஹந்நாயகி விலாசத்தில் வந்தவுடன் 21 பீரங்கி வேட்டுகள் போடப்படும். கர்னாடகதர்பார் நடக்கும். மஹா-ரா-ரா-ஸ்ரீமஹாராஜா அவர்கள் காதியில் உட்கார்ந்தபிறகு எல்லா உத்தியோகஸ்தர்களும் நஜர்வைத்துக் கண்டுகொள்ளுவார்கள். தாஹஸீல்தாரி முதலிய ஸதஸ்யாள் தேங்காய்வைத்துக் கண்டுகொள்ளுவார்கள், உடனே சந்தனம், தாம்பூலம் கொடுக்கப்படும்.

தர்பார் ஆனவுடன் ஈ-திவானவர்களைத் துருப்பு வகையரா ஸன்னுஹத் துடன் ஜாகையில் கொண்டுபோய் விடுகிறது. ஈ-திவான் அவர்கள் ஜாகையில் பாரிகிரிகள் உத்தியோகஸ்தர்கள் வித்வாம்ஸாள் இவர்களுக்கு சந்தனம், தாம்பூலம் கொடுக்கப்படும். ஆசாரியாரையும் ஹரிக்காரருடன் திவட்டி ஸகிதம் ஜாகைக்கனுப்புகிறது.

ராமாயண பட்டாபிஷேகம்.

மஹா-ா-ா-ஸ்ரீ மஹாராஜா அவர்கள் பூஜாகிருஹம் வந்து ராமாயண பட்டாபிஷேகமான பிறகு அரண்மனைக்கு விஜயமாவார்கள்.

இராமநாதபுரம் ஸமஸ்தானம் ஹஜூர் ஆபீஸிலிருந்து அடியிற்கண்ட கடிதம் நமக்குக் கிடைத்திருக்கிறது—

விந்தியாபாநுப் பத்திராதிபர் அவர்கட்கு—

இவ்வருஷத்தில் நமது மிக்கமாட்சிமைபொருந்திய இந்தியா சக்ரவர்த்தியாரவர்கள் இப்போது நடந்துகொண்டிருக்கும் பெரும்யுத்தத்தில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும்படி நேரிட்டிருப்பதை யுத்தேசித்து வருஷந்தோறும் இராமநாதபுரத்தில் வெகுவிமரிசையாக நடத்தப்பெற்றுவரும் மஹாநவராத்ரிமஹோத்ஸவமும் அதன் பூர்வாங்கமான களியாட்டங்களும் இவ்வருஷத்தில் அதிகவிமரிசையாகநடைபெறுதென்றும், தெய்வபூஜைகளும் அவற்றிற்கின்றியமையாதவைதிககாரியங்களுமே உசிதமாகநடத்தப்பெறுமென்றும் தங்கள்பத்திரிகைவாயிலாக எல்லோருக்கும் தெரியவெளியாகும்படிக்கு மாட்சிமைதங்கிய சேதுபதிமகாராஜா அவர்கள் உத்தரவுப்படி தங்களைக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

(ஒப்பம்) asstd. Devan.

சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்.

கோநகர் ஞானசம்பந்த நற்சபை.

விநாயகசதுர்த்தி.

பிங்களஹு ஆவணிமீ ௨௨ (21-8-17) செவ்வாய்க்கிழமை, காலையில் விநாயகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகளும் கஞ்பகலில் அப்பெருமான் ஆகுவாகனத்தி லெழுந்தருளி வீதிவலம்வருதலும் இவற்றைத் தேரிசிக்க வந்தவர்க்கெல்லாம் விருந்தும் நடந்தன.

பின்னர் 5-மணிக்கு மதுரை வித்துவான் ஸ்ரீ கா. சுந்தரேசவரையரவர்கள், சர்வேசுவரன் தன்னை வணங்கும்பொருட்டாகவே யாவருக்கும் தநுகரண

புவனபோகங்களை அளித்திருக்கிறாரென்றும், ஆகையால் நாமெல்லோரும் அவரை வழிபடவேண்டுவது ஆவசியகம் என்றும், பூரண அதிகாரம் பெற்றவரும், பிரம விஷ்ணு உருத்திரேந்திராதிகளாலும் வணங்கத்தக்கவரும், தன்னை வழிபடுவார்க்கு எல்லாவித விக்கினங்களையும் நீக்கி எல்லாவித நன்மைகளையும் அளிக்கவல்லவரும் ஆகிய விநாயகக்கடவுளை வழிபடுதலே மிகவும் சிறந்ததென்றும், அவரை எல்லாத்தினங்களிலும் வழிபடலாமாயினும் விநாயக சதுர்த்தியாகிய இன்றுதினமே மேன்மையுடைத்தென்றும், மற்றும் பலவிதமாகவும் விநாயகப்பெருமானது பிரபாவங்களை விளக்கியுரைத்தார்கள்.

ஹாரசந்தனாதிகள் வழங்கப்பெற்று இரவு 8-மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

ஞானசம்பந்தன்.

—:(o):—

நாச்சியார்புரம்.

கும்பாபிஷேகம்:—இவ்வூரில் நகரப்பொதுவில் அமைக்கப்பெற்ற ஸ்ரீ நாச்சியாரம்மை திருக்கோயிற் கும்பாபிஷேகம் நிகழும் ஆவணிமீ 8உ வியாழக்கிழமை காலை 8-மணிக்கு வெகு விமரிசையாய் நடைபெற்றது. அக்காலத்து அவ்வம்பிகையின் மூலஸ்தானமாகிய காட்டுநாச்சியம்மை திருக்கோயிற் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. பக்கத்தூர்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் ஜபமுதலிய கைங்கர்யங்கட்காகவும் தரிசனார்த்தமாகவும் வந்திருந்த பிராமணோத்தமர்களும், வைசியர்களும், பிறரும் தக்கபடி அன்னபானாதிகளாலும், சந்தனபுஷ்ப தாம்பூல முதலியவைகளாலும், இனியமொழிகளாலும் உபசரிக்கப்பெற்றார்கள். அன்றிரவு சுமார் 1-மணிக்கு அம்பிகை தன்னைப் பஞ்சமரும் தரிசித்துய்யும்பொருட்டு வெளிப்புறப்பாடுகொண்டருளினள். அம்பிகையின் திருமேனியொளியாலும், தீபங்களின் ஒளியாலும் இரவு பகல்போல விளங்கிற்று. அம்பிகையின் சுந்தரவுருவத்தைத் தரிசித்த ஜனங்களெல்லாம் இம்மையிலேயே தெய்வத்தன்மை யெய்தியவர்கள்போல நோக்கிய கண்ணிமையாது நோக்கிக்கொண்டே பேரானந்தக் கடலிலாழ்ந்து பரவசமுற்று நின்றனர். வேதபாராயணமும், தேவாரபாராயணமும், வாணவேடிக்கைகளும் மிகஅழகாய் நடைபெற்றன. பின் அம்பிகை கோயிலின் தென்பாரிசத்திலுள்ள ஊருணியையும் திருக்கோயிலையும் வலமாக வுலாப்போந்து திருக்கோயிலுள் எழுந்தருளினள்.

செந்தமிழ்வாசகசாலை:—இதன்சபை நிகழும் ஆவணிமீ 9உ வெள்ளிக்கிழமை மாலை 4-மணிக்கு ஷை நாச்சியாரம்மை திருக்கோயிலில் கூட்டப்பெற்றது. அப்பொழுது நகரத்தார் வேண்டுகோட்படி அரியக்குடி ராமாயணம் ஸ்ரீமத்,

வரதாசார்ய ஸ்வாமிகள் அக்கிராசனம்வகித்தார்கள். மகிபாலன்பட்டி வித்வான ஸ்ரீமத் மு. கதிரேசச்செட்டியாரவர்களும், மற்றுஞ் சில வித்வான்களும் விஜயஞ்செய்தார்கள். சபையிற் சுமார் 400 பேர்கட்கு மேல் நிறைந்திருந்தார்கள். முதலில் அக்கிராசனரவர்கள் கடவுள்வாழ்த்தும், முகவுரையுங்கூறிக் "கற்பு" என்னும் விஷயத்தை எடுத்து விரிவாகவும் அழகாகவும் உபந்யசித்தார்கள். அதன்பின் இவ்வூர் ஸ்ரீ நாராயணையரவர்கள் "புலால் மறுத்தல்" என்னும் விஷயத்தை நன்கு உபந்யசித்தனர். அதன்பின் இவ்வூர் ஜயங்கொண்ட விநாயக வித்தியாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீமத் ரெ. இராமையங்காரவர்கள் "கல்வி" என்னும் விஷயத்தைப் பல பாகுபாடுகள் செய்துகொண்டு விளக்கமாகவும் விரிவாகவும் நன்கு உபந்யசித்தார்கள். அதன்பின் இருமொழிப்புலமையும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர்களான ஸ்ரீமத் மு. கதிரேசச் செட்டியாரவர்கள் பெரியபுராணத்தில் அப்பூதியடிகள் நாயனாரது திவ்விய சரித்திரத்தையெடுத்து அப்புராணத்தில் இலைமறைகாய்போலுள்ள பல அரியபெரிய விஷயங்களையும், மற்றை நாயன்மார்கள் சரித்திரங்களிலெல்லாம் ஜாதி முதலியவற்றை இன்னவென விளங்கக்கூறுமவர், இவ்விடத்தில் "தாண்டவம் புரியவல்ல தம்பிரானார்க்குத் தொண்டன்" என்றுமாத்திரம் கூறியதன் காரணத்தையும் பிறவற்றையும் விளக்கிக் கற்றவரேயன்றி மற்றவரும் மனத்திற்றேக்கிக்களிக்குமாறு "கன்னற் பாகையும்பாலையுந் தேனையுங் கைக்குமென்றிடமேலாஞ்" சொன்னயமும் பொருள்நயமும் புணர்த்தி யுபந்யசித்துப் பின்பு வாசகசாலை, வித்யாசாலைகளின் முன்னேற்றத்திற்குக் காரணமான சில விஷயங்களையுங் கூறினார்கள். பின் செந்தமிழ்வாசகசாலைக் காரியதரிசியாகிய ஸ்ரீ சு. வி. கா. காசியப்பசெட்டியாரவர்களால் மேற்படி வாசகசாலைக்குப் பணவுதவிசெய்துவருபவர்களின் அட்டவணை படிக்கப்பெற்றது. பின்பு இவ்வூர் அழகரையங்காரவர்கள் குமாரர் ஸ்ரீநிவாசையங்காரவர்கள் "பக்தி" என்னும் விஷயத்தைச் சுருக்கமாகக் கூறினார்கள். பின் அக்ராசனரவர்கள் மேற்படி விஷயங்களைப்பற்றி மிக அழகாக அபிப்ராயங்கூறவும், நகரத்தார் அபிப்ராயப்படி கலாசாலைத் தலைமையாசிரியர் ரெ. இராமையங்காரவர்கள் அக்கிராசனரவர்கட்கும், உபந்யாசகர்கட்கும் வந்தனோபசாரங்கூறிப் பூமாலை சூட்டவும், சங்கீதவித்வானொருவர் மங்கலவாழ்த்துக் கூறவும், அம்பிகைக்குத் தூபதீப நைவேத்ய முதலியன வழங்கவும் இரவு 8-மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

மகேஸ்வரபூஜை:—இக்கைங்கர்யம் ஆவணி௴ 12உ திங்கட்கிழமையன்று வெகுவிமரிசையாய் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான ஜனங்கட்கு அன்னம் அளிக்கப்பெற்றது. சுபம். சுபம். சுபம்.

இங்ஙனம்.
சொ. மு. செ. வி. மாணவர்,
நாச்சியாபுரம்.

கண்டனூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவர ரீடிங்ரூமின்

இரண்டாண்டு நிறைவு விழா.

1917ளு செப்டம்பர் ௴ 1உ மாலை 3-30 மணிக்கு ஸபையோரால் முன்னரே பிரார்த்திக்கப்பெற்று விஜயம் செய்திருந்த, காரைக்குடி மீனாட்சி சுந்தரேசுவர வித்தியாசாலை என்னும் ஆங்கிலத் தமிழ்ப்பாடசாலையின் தலைமையுபாத்தியாயர், பிரம்மஸ்ரீ S. G. சுப்பிரமணியஐயர் B. A. L. T. அவர்கள் ஸபாநாயகராக இருந்து ஸபையை நடத்திவைக்கத் தயைகூர்ந்து அவர்கட்கென்று ஏற்படுத்தியிருந்த விடுதியில் இருந்தார்கள்.

அவர்களை வரவேற்பதற்காக இச்சங்கத்தின் காரியதரிசி மிஸ்டர் தெ. அரு. சித. இராமநாதன்செட்டியார் அவர்களும், மற்றும் சபையின் அங்கத்தினர்களும் இதர கனவான்களும் வாத்யகோஷங்களுடன் சென்று சந்தன தாம்பூலாதிகள் வழங்கி அக்கிராசனாதிபதியவர்களை ஸபாமண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அவ்வூரிலும் பிறவூர்களிலுமுள்ள கனவான்களும் தனவான்களும் பிறருமாகச் சுமார் 500 பேர் வரை கூடியிருந்தனர். பிறகு அக்கிராஸனாதிபதியவர்கட்கு வந்தனோபசாரப்பத்திரமும், ஸபையின் அவ்வருஷம் படிக்கவேண்டிய அறிக்கைப்பத்திரமும் படிக்கப்பெற்றன. பின்னர் ஸபாநாயகர் எழுந்து முகவுரையாக ஒருஸபைக்கு நாயகராக வீற்றிருக்கவேண்டியவர்க்கு அமைந்திருக்கவேண்டிய இயற்கைக் குணங்களைத் தக்க பிரமாணங்களுடன் எடுத்தோதி வினயங்கூறிப் பிறகு, ஸபைநிகழ்ச்சிக் குறிப்பின்படியே "முக்திசாதனம்" என்னும் விஷயத்தை உபந்யஸிக்கும்படி வால்குடி பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளைப் பிரார்த்தித்துக்கொண்டார்கள். அவர்களும் தங்களது பரந்த அறிவிற்கும் பழகிய சாஸ்திரங்கட்கும் ஆசரித்த ஆசாரணைக்கும் ஏற்பக் கம்பீரமாகவும் உத்தேசக் கிரமமாகவும் தங்களது உபந்யாஸ விஷயமான முக்திசாதனத்துக்கு அவசிய ஸாதகங்களான புருஷார்த்த சதுஷ்டயங்களையும் கிரமமாக வ்யவஹரித்துக் கேட்போர் மனதில் நன்குபதியும்படியாக உபந்யாஸ மழை பொழிந்தார்கள். பிறகு அநுஷ்டானத்தின்பின் ஸபை 7-30க்குக் கூடிற்று.

ஸபாநாயகர் எழுந்து முகவுரையாகச் சிறிது பேசிவிட்டு, "வித்தைவிரும்பு" என்னும் விஷயத்தை யெடுத் துபந்யஸிக்கும்படியாக, கோநகர்க் கற்பகவிநாயக கலாசாலைத் தலைமையாசிரியர் பிரம்மஸ்ரீ பண்டித அ. கோபாலையரவர்களை வேண்டிக்கொண்டார்கள். அவர்களும், எழுந்து தாம் எடுத்துக்கொண்டுள்ள விஷயத்துக்கு ஏற்பத் தமிழ் மூதாட்டியார் தமது சூத்திரகதியில், "அறஞ் செய விரும்பு," "தானமது விரும்பு" "வித்தை விரும்பு" என்னும் மூன்று விதிச் சூத்திரங்களையும், "கொள்ளை விரும்பேல்," "சூது விரும்பேல்," "மீதூண் விரும்பேல்," என்னும் மூன்று விலக்குச் சூத்திரங்களையும் திரு

வாய்மலர்ந்திருப்பதையும், அவற்றுக்கு முறையேயுள்ள பொருத்தங்களையும் ஒற்றுமை நயந்தோன்ற எடுத்துக்கூறி, நமது தாய்ப்பாஷையின் சிறப்பும், அதைச் செவ்வனே கற்பிக்கவேண்டிய அவச்யத்தையும், கட்டாயப் பாடமாக வைக்கவேண்டிய விஷயங்களையும், எல்லாம் தேசபாஷைமூலம் கற்பிக்கப்பட வேண்டிய விதத்தையும், இவற்றினது அவசியத்தை அரசாங்கத்தாருக்குத்தெரிவிக்கும்படியாக ஒவ்வொரு ஊரிலிருந்தும் மஹஜர் அனுப்பப் பெறல் வேண்டுமென்பதையும் திருத்தமாகச்சொல்லி முடித்தார்கள்.

பிறகு "ஜீவகாருண்யம்" என்னும் விஷயத்தைக் கண்டனூர் ஸ்ரீமான் ராம. ப. கு. ப. இலட்சுமணன்செட்டியார் அவர்கள் எடுத்துக்கொண்டு புலான் மறுத்தலைப்பற்றி யாவர்மனதிலும் அழுந்தும்படியாகச் சொன்னார்கள். அக்கிராஸனாதிபதியவர்கள் தமது அபிப்பிராயங்களைச் சொல்ல அன்றையஸபை நிறைவேறியது.

இரண்டாவது நாள் (2 9-17) காலை 9½ மணிக்குச் சபை கூடிற்று. கடவுள்வாழ்த்து முடிந்தவுடன் ஸபாநாயகர் அவர்கள் முகவுரையாகச் சிலசொல்லி, "விபூதி மகத்வம்" என்னும் விஷயத்தை யுபந்யஸிக்கும்படி லால்குடி பிரம்மஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகளை வேண்டிக்கொண்டார்கள். அவர்களும் விபூதி மகத்வம் விபூதியின்விதங்கள் அதனைச் செய்யும்வகை பசுக்களின்பெருமை முதலியவற்றைக்கூறி ருத்திராக்ஷமகிமையையும் விரித்துரைந்தார்கள். பின் காரைக்குடி எஸ். எம். எஸ். ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் பொன்னுதுவார் அவர்கள் "திராவிடவேதப் பண்முறை" என்னும் விஷயத்தை யெடுத்துக்கொண்டு பண்வகைகளை விரித்து ஓதி அவற்றுக்கேற்பத் தேவாரதிருவாசகங்களிற் சில எடுத்துக்காட்டி யுபந்யஸித்தார்கள். பின்னர் அக்கிராஸனாதிபதி அபிப்பிராயம் சொல்லவே பகற் போஜனத்துக்காகச் சபைகலைந்தது.

பிற்பகல் 3-30 மணிக்கு மறுபடியும் ஸபைகூடிற்று. அக்கிராசனாதிபதியவர்கள், "சினமின்மை" என்னும் விஷயத்தை யுபந்யஸிக்கும்படி சொக்கலிங்கம்புத்தூர் மாணிக்கவாசக வித்தியாசாலைத் தலைமையாசிரியர் பிரம்மஸ்ரீ ரா. ராமமூர்த்தி ஐயரவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். அவர்களும் சினத்தினால் உண்டாகும் கேடுகளையும் சினமின்மையினாலுண்டாகும் பீடுகளையும் தக்க மேற்கோள்களுடன் இனியகுரலுடனும் சாந்தகுணத்துடனும் எடுத்தோதினார்கள். பின் "அடைந்தோர்ப் புரத்தல்" என்னும் விஷயத்தைக் காரைக்குடித்தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ சு. சிதம்பரமையர் அவர்கள் எடுத்துக் கொண்டு சரண்புகுந்தவர்களைக் கைவிடாது காப்பாற்றவேண்டுவது கடமையென்றும் இதையே பெருஞ்செயலாகப் பெரியோர் மதிக்கிறார்களென்றும்

கம்பராமாயணம் முதலியவற்றிலிருந்து மேற்கோள்காட்டி நன்றாக அநுபவ முறையாக உபந்யசித்தார்கள். பிறகு "கற்பு" என்னும் விஷயத்தைப்பற்றிக் கண்டனூர் ஸ்ரீமான் மு ராம. சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள் கற்பின் மகிமை அதையநுஷ்டித்தார் பெருமை இவற்றுக்கெல்லாம் தக்க மேற்கோளும் கதைகளும் சொல்லியும், கற்பு பெண்கட்கு மாத்திரமேயன்றி ஆண்கட்கும் அவசியமான தென்றும் விரிவாக உபந்யசித்தார்கள். பின்னர் அநுஷ்டானத்துக்காக ஸபைகலைந்து பிறகு 7-30 மணிக்குத் திரும்பவும்கூடிற்று. "அநுமத் ராவண ஸம்வாதம்" என்னும் விஷயத்தைக் காரைக்குடிக் கம்பராமாயணப்ரசாரகர் பிரம்மஸ்ரீ எம். வி. கோவிந்தராஜையங்கார் அவர்கள் கம்பராமாயணத்தை யாதாரமாகக்கொண்டு உபந்யஸித்தார்கள்.

பிறகு ஸபாநாயகர் அவர்கள் எழுந்து முடிவுரையாக நமது பாஷை, நமது பூர்விகர், அவர்களது ஆசாரங்கள், இவற்றைஎடுத்து விரித்துச் சொன்னதுடன் கல்வி தேசபாஷையின் மூலமே கற்பிக்கவேண்டுமென்பதையும், அதுவே இப்போது பத்திரிகைகளின் பேச்சுக்கள் என்றும், ஆரியத்தையும் ஆங்கிலத்தையும் ஆசாரத்துக்கும் ஜீவனத்துக்குமாகக் கற்பிக்க வேண்டுமென்றும், இந்நாட்டில் எங்கும் ஸபைகளும் கலாசாலைகளும் இன்னும் அதிகமாக ஏற்பட வேண்டுமென்றும், இவ்வூரிலும் இந்த ஸபையுடன் ஒருகலாசாலையும் நடைபெற வேண்டுவது அவச்யமென்றும் விரிவாகச் சொன்னார்கள்.

பிறகு, லால்குடி பிரம்மஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரியாரவர்கட்கு ஸபையோர்களால் தங்கத்தோடா அளிக்கப்பெற்றது. பின்னர், அக்கிராசநாதிபதி உபந்யாஸகர் முதலானவர்க்கு ஹாரசந்தன தாம்பூலாதிகள் காரியதரிசியவர்களால் வழங்கப்பெற்று ஸபையோருள்பட யாவர்க்கும் வந்தனோபசாரங்களும், ராஜவாழ்த்தும் ஆங்கிலமன்னர்க்கே ஜயமுண்டாக வேண்டுமென்ற ஈசுவரப் பிரார்த்தனையும் அடியிற்கண்ட தீர்மானங்களும் செய்யப்பெற்று மங்களகரமாக ஸபைநிறைவேறி வாத்யகோஷத்துடன் ஸபாநாயகரை ஸபையார் வீதியில் விட்டுவந்தார்கள்.

தீர்மானங்கள்.

1. கண்டனூர் நகரத்தார்கள் நமது ரோசக்கட்சியார்க்கே வெற்றிகிடைக்க வேண்டுமென்று கோருகின்றார்கள்.

2 பள்ளிக்கூடங்களில் தமிழ்ப்பாஷையையே பிரதானபாஷையாக ஏற்படுத்த வேண்டுமென்றும் கோருகின்றார்கள்.

கண்கேளித்தோன்.

உ

கணபதி துணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—திருக்குறள்.

தொகுதி	பிங்கள௵ ஐப்பசிமீ	பகுதி
9	November. 1917.	10.

மாணவர்க்கு

மதபோதனை அவசியமா?

நமது வித்யாபாநுவில் இதற்குமுந்திய சஞ்சிகைகளின் தலையங்கங்கள் மாணவர்க்குரித்தானகல்வியைப்பற்றியே பேசிவந்தன. அவைபோலவே இந்தத் தலையங்கமும், "மதக்கல்வி அவசியமா?" என்பதைப் பேசுகிறது.

நன்கு கற்றறிந்த பெருந்தகையாளருங்கூட "மாணவர்கட்கு மதபோதனை அவசியமன்று" என்று ஒருவாறாகச் சொல்லிவிடுகிறார்கள். ஆனால் இவர்கள், "மதவுணர்ச்சியே மாணவர்க்கு வேண்டா"மென்ற அபிப்பிராயத்துடன் சொன்னவர்கள் அல்லர் என்றும், மற்று, "மதபோதனை வேண்டாம்; அது அநுபவத்தில் வரவேண்டியது". என்று எண்ணியே சொன்னார்கள் என்றும் நினைக்கிறோம். "பரோபதேசத்தினும் ஸ்வாநுபூதியே மிகுந்தது".

என்னும் பழமொழியானது ஸ்வாநுபூதியினுடைய அவசியத்தை வற்புறுத்த எழுந்ததேயன்றிப் பரோபதேசம்வேண்டாமென்று குறிக்க எழுந்ததன்று. எவரெவர் சித்தாந்தமும் முதன்முதலில் அவரவர் மனத்தில் தோன்றித் தீர்க்காலோசனையில் வேரூன்றிப் பிறகே வெளியில் அநுபவத்துக்கு வருகிறது என்பது உண்மையன்றோ? அப்படி ஒவ்வொருவருடையகுணமும், முதலில்இச்சையாகத்தோன்றி யுணர்ச்சியாகப்பரிணமித்து விருப்பமாக வெளியிற் காட்டியே அநுபவமாக அலைகிறது.

முதன்முதலில் ஒருமாணவன் "மேலான குணத்தின்வழி நடப்பான்" என்று எதிர்பார்த்திருந்து ஏமாறுவதைக்காட்டிலும் அவனுக்கு நல்விருப்பங்களும் நற்செய்கைகளும் இன்னின்னவை எனப்பகுத்து அறிவிப்பது மேலானதாகும். உண்மையாக இந்த உபதேசத்தைக் கவனித்து வந்த ஒருமாணவன் ஒருகாலும் தீயவழியில் ஒழுகமாட்டான் என்பது திண்ணமேயாகும்; ஆகையினால் மதபோதனையும் மாணவர்க்குஅவசியமானதொன்றேயாகும். அறிவு இல்லாமல் அநுபவம் உறுதிபெறாது. அறிவும் மேலானவராற் பரிஷ்கரிக்கப்படல் வேண்டும். அந்தப்பரிஷ்காரம் மதபோதனை என்னும் கருவியாலல்லாமற் செய்யப்பெறுமா?

மற்றொருகேள்வியும் இந்தவிஷயத்தில் உண்டாகிறது. அது பின் வரும். "மதபோதனையை மாதந்தோறும் கேட்டிருந்தும் மார்க்கம் மாத்திரம் நன்மையிற் செல்லவில்லையே" என்கிறார்கள். "இடம்படமெய்ஞ்ஞானங்கற்பினும், அடங்காதார் என்றும் அடங்கார்" என்றும் சொல்லுகிறார்கள். இது உண்மையே யானாலும், அவர்கட்கு மெய்ஞ்ஞானநூலிற் பயிற்சிமாத்திரம் உண்டென்று கொள்ளலாமேயன்றி, அதனைத் துணையாகக்கொண்டு தமது குணத்தைச்சீர்திருத்திக்கொண்டார் என்று எண்ணுவதற்கு இடமில்லை. கணக்குப்பரிக்ஷையில் தேர்ச்சியடைந்த ஒருவர் கடைக்காரனிடத்தில் ஏமாந்துபோய்ப் பணத்தையிழந்திருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். இதுஅவருடைய கவனக்குறைவாலும் அநுபவக்குறை

வாலுமே நேர்ந்ததன்றிக் கணக்கையவர்க்குக் கற்றுக்கொடுத்ததால் நேர்ந்ததன்று. ஆயின் மதபோதனையைப் பெற்ற ஒரு மாணவன் அதனை யநுபவத்துக்குக் கொண்டுவாராததனாலேயே "மதபோதனை மாணவர்க்குப் பயன் தராது" என்று தீர்மானித்து விடுவோமானால், தற்காலக் கல்விமுறையில் நடைபெறும் அநுபவத்துக்கு வரப்பெறாத பாடங்களை ஏன் இன்னும் வற்புறுத்தி வைக்கிறார்கள் என்னும் ஒருகேள்வி கேட்கப்பெறல் வேண்டும். சுகாதார நூலை நன்றாய்ப்படித்து ஏனையோர்க்கும் உபதேசித்து வருகின்ற ஒரு வைத்திய நிபுணரே, "சுருட்டுப்பிடித்தலையும் கள்ளைக்குடித்தலையும் நிறுத்தமுடியவில்லை" யென்று சொல்லுதலை நாம் பன்முறையும் கேட்டிருக்கிறோமன்றோ? சுகாதாரமுறைக்குச்சொல்லுவதொன்றும் செய்வதொன்றுமாக இருக்கலாமென்று நாம் தீர்மானித்துவிடல்முடியுமா? அப்படியே சிலர், எத்தனை மெய்ஞ்ஞானங் கற்பினும் அடங்காதாராகவே; இருக்கிறார்கள்; அவர்நிமித்தம் போதனைமேற் குறைகூற லழகன்றாம்.

இன்னொரு கேள்வியும் இவ்விஷயத்திற் கேட்கப்படுகிறதுண்டு. அது பின் வரும் "மதபோதனை பிறமதநிந்தைக்குக் காரணமாகிறதே" என்பதேயாம். இது ஒரு தடுக்கமுடியாத கேள்வியேயாகும்; எனினும் இந்தக்கேள்வியைத் தீர்க்கமாயாலோசித்தோமானால் வியப்பும் விசனமும் தோன்றுது. தேசாபிமானம்போன்ற பொது விஷயங்களில் இப்போது நமது ஜனத்தலைவர்கள் ஒருமித்து வேலை செய்வதுபோல ஒருமித்தமனமுடன் புதும்பழக்கங்களைக்கொண்டார்களானால் ஒருபோதும் பிறநிந்தையாகிலும் பிறமதநிந்தையாகிலும் நிகழ்வதற்கு இடமுண்டாகாது என்று எண்ணுகிறோம். அவ்விதமான பொதுநோக்கிற்பழக்கப்படுத்தாததனாலேயேஎவ்விதமான வித்யாஸமும் முன்வந்து தோன்றித் துன்புறுத்துகின்றது. இன்னும் இந்தவிஷயத்தில் ஆழ்ந்துநின்று ஆலோசித்தோமானால், உலகத்தில் ஒவ்வொரு உயர்ந்தமதமும் தனக்குள், பல சிறுமதக் கொள்கைகளை யுடையதாக இருக்கின்றது என்றும், அந்த மதாபிமானிகள் பொதுவிஷயங்களிற் கலகத்தையாவது கலக்கத்தையாவது செய்தார்களென்று சொல்வதற்கு இடமில்லையென்றும் புலப்படும்.

பொதுநோக்கிற் பழகாதசிலரே கலகக்காரர்களாக இருக்கின்றார்கள். இதற்குஉதாரணமாகக் கிறிஸ்துமதம் மகம்மதியமதம் இந்துமதம் முதலிய பெரியமதங்களைபாராய்ந்தால் இந்த உண்மைதெரியலாகும். ஆனால் அவற்றின் உண்மதங்களெல்லாம் பொதுமதங்களின் உயர்ந்த கொள்கைகளில் ஒத்திருப்பதனாற் பிறமதநிந்தைக்குக் காரணமே யில்லை. அன்றியும் மேற்சொன்ன மூன்று பெரிய மதங்களுங்கூட 'கடவுள்ஒருவர் உண்டு; அவரேஉலகத்துக்கு ஒருதலைவர்; அவர்எங்கும்நிறைந்தவர்; அவர் எல்லாம் அறிந்தவர்; அவர் என்றும் உள்ளவர்; அவரே நம்மைக்காக்கிறார்' என்னும் பொதுக்கொள்கைகளில் ஒத்தே இருக்கின்றன; ஆகலால் எந்தமதத்தையும் ஆழ்ந்து அநுபவித்தாற் பிறமதநிந்தை நிகழ்வதற்குக் காரணமே யுண்டாகாது என்று உறுதியாகச் சொல்லலாகும். ஆழ்ந்துபடித்து அநுபவத்திற் கொண்டுவராதவர்களே சிறுகலகங்களைச் செய்து பெருங்கலக்கங்களை யடைகிறார்கள். அவர்களாலேயே நமது இந்துமதத்தில் அத்வைத த்வைத விரோதங்களும் சைவ வைஷ்ணவ விரோதங்களும் வடகலை தென்கலை விரோதங்களும் உண்டாக்கப்பட்டு உலாவுகின்றன. கற்றுஅறிந்து அநுபவநெறியில் நிற்கும் பெரியோர் அவற்றுள் தலையிடார்கள். இப்போது பிராமணர் பிராமணரல்லாதவர் என்னும் அற்பப்பிரிவினை, நமது தென்னிந்திய மாகாணத்தை என்னபாடு படுத்துகின்றது பாருங்கள். இந்தப் பெருங் கலக்கமானது ஆழ்ந்துயோசித்துப் பொதுநோக்கில் நுழையாத சில அற்பமதிகளுடைய சிறுகலகமேயன்றி வேறன்று என்று உண்மையாக விளங்கிக்கொண்டிருக்கின்றதல்லவா? அதுபோலவேதான் பெருமதங்களில் தோன்றும் சிறுகலகங்களுமாகும் என்று எண்ணுகிறோம். ஒருவானவில்லிற் பலநிறங்கள் இருந்தபோதிலும் காண்பார்க்கு அழகைக்கொடுக்கும் விஷயத்தில் ஒத்தேயுழைக்கின்றன. அவ்வாறே ஜனத்தலைவர்களும் நிறத்திலும் குலத்திலும் படிப்பிலும் பணத்திலும் வேறுபட்டிருந்தபோதிலும் மனத்தில் ஒற்றுமைப்பட்டுத் தேசப் பொதுநன்மையில் ஒத்துழைத்துவருகின்றார்களன்றோ? அவ்விதமே எந்தமதத்தினரும் தமதுபொதுக்கொள்கைகளில் மிக

வும்பழகினூர்களாகிற் கலகம்ஒருபோதும் நிகழாது என்று எண்ணுகிறோம். உண்மையை விசாரித்தால் மதக்கலகக்காரர்கள் அவரதுமதத்தையும் நன்கறிந்து அநுபவநெறியில் நின்றார்களென்று நிச்சயிக்க முடியாதவர்களாகவும், வெறும் வேஷக் காரர்களாகவுமே இருக்கிறார்களென்றும் எண்ணுகிறோம். ஆகையினால் மாணவர்க்கு மதப்பொதுக் கொள்கைகளுடன் பிற கொள்கைகளையும் சிறு சிறு போதனைகளிற் காட்டிவரவேண்டுவது அவசியமேயாகும்.

இன்னொரு கேள்வியும் இவ்விஷயத்தில் தடையாகவந்து முன் நிற்கின்றது. அது யாதெனில், "மதபோதனைகள் ஆத்மமுன்னேற்றத்துக்கு ஒருகால் வழிகாட்டியாகலாமேயன்றி உலகமுன்னேற்றத்துக்குத் தடையாகின்றனவே, என்பதுதான்" "மதபோதனையே இந்தியாவின் தாழ்ந்த ஸ்திதிக்குக் காரணமாகிறது" என்று தேவதூதர்கள் தங்கள் காதில் ஓதிப்போனதாகச் சில பெரியவர்கள் சொல்லுகிறார்கள்: இந்தியாவில், மதமே உருவாக இருந்தகாலத்திற்றான் உயர்ந்தஸ்திதியில் இருந்ததென்று இந்தியசரித்திரம் முறையிடுகின்றது. இந்தியா வீழ்வதற்கு அதர்மமே காரணமென்று இந்திய சரித்திரப்படிப் பாளியொவ்வொருவனும் அறிந்துகொள்வான் என்பதிற் சந்தேஹமுண்டோ? அதர்மவழியில் நின்றவன் தாழ்வனேயல்லாமல் தர்மவழியில் நின்றவன் ஒருகாலும் தாழ்வடையான் என்பது திண்ணமான உண்மையன்றோ? மதக்கொள்கைகளின் பொதுநோக்கங்களில் தேசத்தார் பழகியிருந்த காலத்தில் தேசம் செழித்தும் அது தவறினகாலம் முதல் தேசம் பழித்தற்கு இடமாகியும் வந்திருக்கிறதென்று உறுதியாகச்சொல்லலாகும். மதப்பொதுக் கொள்கைகளிற் பழகாமல் லௌகிக நூல்களில் மட்டும் பழகிவந்தால் ஆத்மா உத்தமதர்மத்தில் நிலைபெறாமல் ஸ்வயநன்மையிலேயே லேசுன்றிநிற்கும். தனது நன்மையை மாத்திரம் நாடின ஒருவன்றான் எப்போதும் கலகக்காரனுகின்றான் என்பது உண்மை. இதற்கு இப்போது நடக்கும் பெரியயுத்தமே உதாரணமாக நிற்கின்றது. அமைதியும் ஒழுக்குமே, உயர்ந்த ஆத்மதர்மம். இத்தர்மம் மதப்பொதுக்கொள்கைகளிலே நிலைத்

திருக்கின்றது. அந்த மதப்படிப்பில்லாமற் போனால் மதப்போதக் கொள்கைகளிற் பழக்கம்வராது. அதுவராததாக, உத்தமகர்மத்தில் ஆத்மா பிரவேசியாது. அப்போதுதான் ஸ்வபாபம் முனைத்து நிற்கும். இந்த ஸ்வபாலமே கலகத்துக்கும் கலக்கத்துக்கும் காரணமாகிறது. ஆதலால், உலகமுன்னேற்றத்துக்கும் மதப்படிப்பே துணையாகிறது என்றும் எண்ணுகிறோம். உலகத்துக்குச் சட்டம் எழுதிக் கொடுத்தவராகிய மநு!! கவான், தர்மத்துடனேதான் பொருளீட்டவேண்டுமென்றும் தர்மத்துடனேதான் காமச்சுவையில் நுழையவேண்டுமென்றும் தெரிவிப்பாராகவே அர்த்தகாமங்கட்கு முன்னிலையாகத் தர்மத்தை வைத்தெழுதியிருப்பதை நன்கறியலாதும். தர்மமார்க்கத்திற்றவறிய காலத்திற்றான் பொருளீட்டலிலும் காமச்சுவையிலும் கலக்கங்கள் உண்டாகின்றன வென்பதை நாமெல்லோரும் கண்கூடாகக் கண்டுவருகின்றோம்.

இன்னும் சிலர் பின்வரும் கேள்விகளையும் கேட்கிறார்கள்; அவை:—"தற்கால வித்யா இலாகா முறைப்படி இப்போதே மாணவர்க்குப் பாடவகைகள் அதிகப்பட்டிருக்கின்றன. அவற்றுடன் மதபோதனையையும் எதற்காகச் சேர்க்கவேண்டும்? மதபோதனையால் வரக்கூடிய லாபமென்ன? என்னும் இவைகளேயாதும். நமது கண்ணுக்கு எட்டாத ஸஹாராபாலைவனத்தைப்போன்ற பலவற்றைப் போதிக்கும் பூகோளசாஸ்திரப்பயிற்சியைக்காட்டிலும் மதப்படிப்புத் தாழ்ந்ததாகிவிடுமா? கிரேக்கருடைய சரித்திரம் முதலான அவசியமில்லாதவருடையசரித்திரங்களைப்படிப்பதைக்காட்டிலும் நமது ஆத்ம சரித்திரத்திரத்தைத்தெரிந்துகொள்ளுதல் தாழ்ந்ததாகிவிடுமா? இன்றசோறு அழிவதெப்படி? அது ரத்தமாவதேன்? அதன் பிரயோஜன மென்ன? என்று ஒரு நொடியில் அழியுமியல்புடைய தேஹத்தின் தத்வங்களைப்படிப்பதிலும் ஆத்மதத்வத்தையறிய முயல்வது அறியாமையாகுமா? நீரைப்பிரித்து அதனுள் ஜலவாயுவும் பிராணவாயுவும் ஏன்கலந்தன? அவைபிரிந்தால் என்னவாகும் என்னும் பூத ஆராய்ச்சியைச் செய்வதைக்காட்டிலும் பூதாதிதமான ஆத்ம ஆராய்ச்சியைச் செய்வது மதிப்புக்குறைவான

காரியமாகுமா? வெகுமுக்யமான மனோதத்வ சாஸ்திரத்தைப் பாடவகையிலிருந்து எடுத்துவிட்டதனால் களித்துள்ளவர்கள் ஆத்ம தத்வ சாஸ்திரத்தையமைக்க இஷ்டப்படுவார்களா? இஷ்டப்பட மாட்டார்கள் தாம்.

ஆத்மதத்வ சாஸ்திரவுணர்ச்சியாற் கர்மங்களும், கர்மா தொடங்கியுள்ள காலமும், அவை நமக்குக்கொடுத்துவரும் பயன்களாகிய சுகதுக்கங்களும் வெகு தெளிவாக அறிவிக்கப்பெற்று மனது சுக துக்கங்களில் விருப்பும் வெறுப்பும் ஒழிந்து சமாதானமடைய வழி யேற்படும்; அப்போது தமது கடமை இன்னவென்று ஆத்மாக்கள் உணருவார்கள். அப்போது பொதுநோக்குத் தலைப்படும். அதன்பயனாகத் தேசத்திற் கூட்டுறவும் நன்மையும் உண்டாகும். இந்தத்தத்துவ உணர்ச்சியால் எத்தனையோ உயிர்கள் பாவங்களினின்றும் ரக்ஷிக்கப்பெற்றிருக்கின்றன. எத்தனையோ ரஹஸ்யங்கள் விளக்கப்பெறுகின்றன.

மற்றும் அழியும் தன்மையுடைய ஏனைய லௌகிக சாஸ்திரங்களைப் படிப்பதைக்காட்டிலும் தேகதத்வமும் ஆத்மதத்வமும் அவசியம் உணர்ந்துகொள்ளத்தக்கனவாக இருக்க, அவ்விரண்டும் தான் கவனிக்கப்பெறாமல் இருக்கின்றன. அவற்றிலும் ஆத்மதத்வமோ அறவே கவனிக்கப்பெறாதநிலையிலிருக்கிறது. இதை நினைக்கும் போது, "ஆகாயத்தில் உள்ள நக்ஷத்திரங்களையெல்லாம் கணித்துக்கொண்டும் அவற்றின் நிலையைக் கவனித்துக்கொண்டும் சென்ற ஒரு வானசாஸ்திரி தனது காலின்கீழுள்ள பெரும்பள்ளத்தைக் கவனியாது தவறிக் குழியில் விழுந்த கதையொன்று நினைவுக்கு வருகின்றது.

நமது ஜீவியகாலத்தில் அவசியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியதும் இந்தமனிதப் பிறவி யொன்றினாலேயே அடையக்கூடியதுமான அவசியப்பயனாகிய ஆத்மதத்வவுணர்ச்சியை மாணவர்க்குப் பயிற்றுவிக்க முன் வாராதிருப்பது ஒரு விசனகரமான செயலேயாகும். இந்த உயர்ந்த பிறவியினால் நாம் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியவைகள், "நாம் யார்? நமக்கும் கடவுளுக்கும் உண்டான

சம்பந்தமென்ன? அந்த ஸம்பந்தத்தை வேறுபடுத்திய விரோதியாவது யாது? இந்தவிரோதியை நீக்கும் உபாயம் என்ன? அந்த உபாயத்தினால் அடையக்கூடிய பயன்யாது? அதற்கு ஏற்ற பக்குவநிலைகள் எவை?'' என்னும் இவைபோன்ற தத்வங்களின் உணர்ச்சியே. அதுவே ஆத்மதத்வவுணர்ச்சியாகும். இவற்றைப் போதிப்பதே மதப்படிப்பு என்று வழங்கப்பெறும். இதனைப்படிப்பவரே ஆஸ்திகரென்று அழைக்கப்பெறுவர். ஆஸ்திகமதம் நிலையாக வூன்றியுள்ள தேசத்திற் பிறந்து வளரும் நமதுமாணவர்களையெவரும் நாஸ்திகர்கள் ஆக்குவிக்கப் பிரியப்படார் என்று எண்ணுகிறோம்.

ஆகையினால் மனிதப் பிறவியின் மாண்பினை நன்றாக அறிந்துள்ள மாட்சிமையுடையோர்களே! ஆஸ்திகமதத்தில் அன்பு கொண்டொழுகும் அறிவிற் சிறந்தோர்களே! ஆசாரியமஹான்கள் அவதரித்து அறிவை விசாலப்படுத்தியுள்ள உத்தமதேசத்தில் உதித்துள்ள புண்ணியபிதாக்களே! உடலுயிர்களின் ஒற்றுமைவேற்றுமைகளை ஒருங்கே புணர்ந்து உபாத்திமைத்தொழிலில் உறுதி பெற்றவர்களே! தேசப்பொது நன்மையானது தேசக் கூட்டுறவாலும், அக்கூட்டுறவானது பாஷாபிமானத்தாலும், அந்த அபிமானம் மதாபிமானத்தாலும், அதுவும் மததத்வவுணர்ச்சியாலும், அந்தவுணர்ச்சியானது மதபோதனையாலுமே நிலைபெறுகின்றனவென்பதை நன்கு அறிவீர்களாகையால், அதற்கு அவசியமாக உங்களால் ஆகவேண்டிய கடமையைச் செலுத்தத் தவறமாட்டீர்களென்று எண்ணுகிறோம்.

ராஜாங்க அமைப்பானது கூட்டுறவினாலும், கூட்டுறவானது பாஷாபிமானத்தாலும், பாஷாபிமானம் மதவுணர்ச்சியாலும், மதவுணர்ச்சி மதபோதனையாலுமே உயர்ந்தேறுகின்றன. இவை ஒன்றற்கொன்று ஸோபானங்களேயன்றி வேறல்ல. ஒன்றைவிட்டு ஒன்று எப்போதும் பிரிந்திருக்கமாட்டாதென்பது பெரியோரது கொள்கையுமாகும்.

பத்திராதிபர்.

பழமையும் புதுமையும்.

உலகத்திலே பழமை புதுமை யென்பன காலத்தின் முன் பின்னை யனுசரித்து நிகழுங்காரியங்களைக் குறிப்பிடுகின்றன. காலமோ இடைவிடாமற் சென்றுகொண்டே யிருக்கின்றது. காலகதியிலே ஒருசமயத்தில் ஒரு புதியகாரியந் தோன்றுவதும், அச்சமயம் அதனைப் பார்த்தவர்கள் ஆச்சரியப் படுவதும், அது பழக்கத்திற்கு வந்தபிறகு பழையதாகி ஆச்சரியம்நீங்குவதும் இயற்கையே. இவற்றிற்குஉதாரணமாக ரெயில், தந்திமுதலியவற்றைக் கூறலாம். சுமார் 50வருஷங்களுக்குமுன்னே ரெயில் அபூர்வமா யேற்பட்டுப் பழக்கத்திற்குவந்தபொழுது ஜனங்கள் ஆச்சரியப்பட்டுஅதனைப் புதுமையாக நினைத்தார்கள். புகைக்கப்பல், தந்தி, யந்திரங்கள் முதலியனவும் அப்படியே கருதப்பட்டன. இக்காலத்தில் அவையெல்லாம் பழமையாகி ஆகாசவிமானம், நீர்மூழ்கிக் கப்பல், கம்பியில்லாத் தந்திமுதலியன தோன்றிச் சனங்களுக்கு ஆச்சரியத்தையுண்டாக்கி யிருக்கின்றன. இவை இப்பொழுது புதியனவாகவும் கருதப்படுகின்றன. இன்னுஞ் சிலகாலஞ்சென்றபிறகு இவையெல்லாம் பழையனவாகி வேறு புதியவைசில தோன்றவுங்கூடும். நூறுவருஷங்களுக்குமுன்னே இந்தியருக்கு மேற்சொல்லிய யாவும் புதியனவேயாம். 180 வருஷங்களுக்கு முன்னே ஸ்காட்லந்துதேசத்திற் பிறந்த ஜேம்ஸ் என்பவர் நீராவியந்திரத்தைக் கண்டுபிடிக்கும் வரை இவையெல்லாம் ஐரோப்பியருக்கும் புதியனவாகவே யிருந்தன. அப்பொழுது அவர்கள் நாகரிகாபிவிருத்தியடைந்திராமையானும் இரண்டாயிரம்வருஷத்திற்குமுற்பட்டவிருத்தாந்தமே அவர்களறியாமையானும், ஆயிரக் கணக்கான வருஷங்களின் முன்னே இயற்றப்பெற்று நமக்குக்கிடைத்து நாம் பரம்பரையாகஅனுபவித்து வருகிற ஸம்ஸ்கிருதகாவியமாகிய இராமாயணத்திலும், தமிழ்க்

காவியமாகிய சிந்தாமணியிலுங் கூறப்பட்டுள்ள புஷ்பகவிமானம், மயிற்பொறி முதலிய யாவும் பொய்யென்றும், அந்நூல்களிற்கூறிய விஷயங்களெல்லாம் கட்டுக்கதைகளென்றுங் கூறிப் பரிகசித்துவந்தார்கள். அவ்வாறு பரிகசித்துவந்த அவர்களும், ஆகாசவிமான முதலியன தோன்றியுள்ள இக்காலத்தில், நமதுகாவியங்களிற் கூறப்பட்டவை உண்மைதானென்று நம்புகிறார்கள்.

இராமாயணகாலத்திலேயிருந்த புஷ்பகவிமானம் முதலியன பிற்காலத்திலே யாதுகாரணத்தாலோ வழங்காமற்போயின. அது போல இப்பொழுது வழங்கும் ஆகாசவிமான முதலியனவும் பின் ஒருகாலத்தில் அதற்கு வேண்டிய உபகாரணங்களின்மை, தீயார் கைப்பட்டக்கால் அவையே திரிபுரம்போல உலகத்திற்குக் கேடு பயத்தல் முதலிய காரணங்களால் வழங்காமற்போகவும், அதன் பின் ஒருகாலத்துத் தோன்றவுங் கூடும். இவ்வாறாலோசிக்கும் பொழுது உலகத்திற் புதிது பழையதாதலும், பழையது மறைந்து கழிதலும், அவ்வாறு மறைந்தது மறுபடியும் புதிதாகத்தோன்றுதலுமாக மாறிமாறிவருதல் சகஜம் என்பது பெறப்படும். ஆனால், இச்சமயம் மேனாட்டார் நாகரிகத்தில் தேர்ச்சிபெற்றுவிட்டதனாலே நாமெல்லோரும் ஆச்சரியப்படத்தக்க அருமையானசெயல்களை அவர்கள் ஆராய்ச்சியின்வன்மையினால் செய்துகாட்டுகிறார்கள். அவ்வாராய்ச்சிக்குவேண்டிய சௌகரியங்களும் அவர்களுக்கு இலகுவாகக் கிடைக்கின்றன. நமக்கோ கிடைப்பதருமை. கிடைத்தால் நம்மவரும் முந்துவார்களென்பதுநிச்சயம். J. C. Bose முதலியவர்கள் இதற்குதாரணமாவார்கள்.

காலம் மாறிமாறி வருதலால் இந்தச் சூட்சுமத்தை யறிந்த நம்மவர் அவ்வக்காலத்தில் நடந்த சரித்திரங்களை யெல்லாம் வரிசையாக எழுதிவருவதிற் பெரும்பிரயோசனமில்லையென்று நினைத்து அலட்சியமாக விட்டுவிட்டார்கள். இக்கொள்கைபற்றியே நன்னூலாரும் சிறப்புப்பாயிரத்திலக்கணத்தில், “ காலங் களனே காரண மென்றிம், மூவகை யேற்றி மொழிநரு முளரே” என்று பாமு

மாகக் கூறினர். நம்முன்னோர் இவ்வாறு சாதாரணநிகழ்ச்சிகளை அசட்டை செய்துவிட்டார்களாயினும் காலத்தைக் கணக்கிடும் விஷயத்திற் பிரும்மகற்பம், பார்த்தம், கற்பம், மன்வந்தரம் முதலியனவாகக் கணக்கிட்டுவைத்து அது மறந்துவிடாதிருப்பதற்காகத் தினந்தோறும் நாம்செய்யும் சங்கற்பங்களிலும் சொல்லிவரவேண்டுமென்று விதித்திருக்கிறார்கள். இப்பழமையான சங்கற்பத்தின் பொருளையாராயாமல், புரோகிதர் பண்ணிவைத்தபடியே பண்ணிவரும் நம்மவர்சிலர்க்கு இதுவும் புதுமையாகத்தோன்றும். இவ்வளவு நீண்டகாலக்கணக்கும் அநுபவமும் இந்துக்களாகிய நமக்கேயுரியவை. இங்ஙனங்கூறியதனால், இவ்வுலகமெல்லாம் நாகரிகாபிவிருத்தியடையுமுன்னே நம் இந்துதேசம் நாகரிகமடைந்துவிளங்கிற்றென்பதும் பெறப்படும். இச்சமயம் இவ்விந்தியாவானது கல்வி, வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றிலே சிறிது தாழ்வுற்றிருப்பினும் கூடியசீக்கிரத்தில் ஈசன் கிருபையினாலே உயர்ச்சிபெறுமென்பது நிச்சயம். அதற்கு வேண்டியகுறிகளெல்லாங் காணப்படுகின்றன. தேசாபிமானிகள் இனி நமது தேசம் முன்னுக்குவரவேண்டிய காரியங்களையெல்லாம் செய்யத்தொடங்கிவிட்டார்கள்.

ஆனால், இவ்வபிமானிகளின் கொள்கைகள் மூன்று விதமாகப் பிரிவுபடுகின்றன. (1) வேதசாஸ்திரங்களையும், நமது மதாசாரங்களையும்விட்டு மேனாட்டு நாகரிகத்தையே கைப்பற்றிநடந்தாற்றான் நமது தேசம் முன்னுக்குவருமென்பது ஒருசாரார்கொள்கை. (2) நமது மதாசாரங்களையும் மேனாட்டாசாரங்களையுங் கலந்துகொண்டு நாம் அபிவிருத்தியடையவேண்டுமென்பது மற்றொருசாரார் கொள்கை. (3) இயன்ற அளவும் நமதுவேதசாஸ்திரங்களையும் மதாசாரங்களையும் பின்பற்றி நடந்துகொண்டு மேனாட்டுப் புதியசாஸ்திர ஆராய்ச்சியையும் பெற்று நாம் மேனிலையடையவேண்டுமென்பது மற்றோர்சாரார்கொள்கை. இவ்வாறு கொள்கைவேறுபடினும் தேசம் முன்னுக்குவரவேண்டுமென்னும் முக்கியமானவிஷயத்தில் யாவரும் ஓரேமனமுடையவர்களாயிருக்கிறார்களென்பது நிச்சயம்.

மேற்காட்டிய மூவகையாரில் முதல்வகையைச் சேர்ந்தோர் நமது சாஸ்திர மதாசாரங்களை யறியாதவர்களாகிய சிலரேயாவர். இவர்களே தென்னிந்தியாவிலுள்ளவர்களைப் பிராமணர்களென்றும், பிராமணரல்லாதவர்களென்றும் இரண்டு பிரிவாக்கிவிட முயலுபவர்கள். ஏனையோர் பெரும்பாலாராதலாலும், நமது சாஸ்திரங்களுடன் மேனாட்டுச் சாஸ்திரங்களையுங் கற்ற பெரியோராதலாலும், அவ்விருவகையாரும் இனி ஒன்று சேர்ந்துவிடக்கூடுமாதலாலும் முதல்வகையாரதுகொள்கை பயனற்றதாகிவிடுமென்பது நிச்சயம்.

இனி நமதுவேதசாஸ்திரங்களும் மதாசாரக்கொள்கைகளும் அவற்றிற்கு விரோதமா யிருந்த ஜைனர், புத்தர், மஹம்மதியர் முதலியவர்களின் ஆட்சிக்காலங்களிலேயுங்கூட அழியாமற் காக்கப் பெற்றிருத்தலால், எல்லாமதமும் ஸம்மதம் என்று சொல்லி அவற்றையெல்லாம் நாம் கைக்கொள்ளும்வண்ணம் நம்மிடம்விட்டிருக்கிற காருணிய பிரிட்டிஷ் கவர்ன்மென்டார்காலத்தில் அழியாமற் காக்கப்பெறுமென்பதும் நிச்சயம்.

தமிழரில் வருணாசிரமப்பாகுபாடு இல்லை என்பர் ஒருசாரார். அன்னார் பல்லாயிரம் வருஷங்களுக்குமுன்னே யியற்றப்பெற்றுத் தமிழரொழுக்கத்தைச் செவ்விதிற்புலப்படுத்திக்கொண்டு தமிழுக்கே முதனூலாய் விளங்குகின்ற தொல்காப்பியப் பொருளதிகாரத்தை உற்றுநோக்குவாராயின் வருணாசிரம தருமங்கள் பழமையானவை என்பதையும் தாம்கூறுங்கூற்றுக்களே புதியவை என்பதையும் அறியலாம். அங்ஙனஞ் செய்வார்களாக. நமதுவேதசாஸ்திரங்கள் ஒருகாலத்தும் அழியாதவை, ஆகலால்அவற்றிற் கூறப்படுந் தருமங்களும்அழியாதவையேயாம்.

ஆயினும் சிலகாலத்தில் தருமங்கள் குறைதலும் சிலகாலத்தில் வளர்தலுமுண்டு. இது குறையுங் காலமாயிருக்கின்றது. இனி நமது தருமத்திற்கு இச்சமயம் பாதுகாப்பில்லை. அதனாலேதான் பழமையான அதனைத் தள்ளிவிட்டுப் புதியதொன்றைக் கைப்பற்ற எண்ணுகின்றனர். இவ்வெண்ணத்தின்காரணமாகவே சாதிக்

கலப்பு ஸ்திரீசுவாதந்திரியம் முதலியவை பிரேரேபிக்கப்படுகின்றன. அவையாவும் பொருந்தாவென்பதனையும், நமது பழைய ஆஸ்திகக்கொள்கையுடனே கூடிய மேனாட்டுப் புதிய சாஸ்திரப்பயிற்சியே இனி நமக்குப் பொருந்தியதென்பதனையும் விளக்கிப் பின்னர் எழுதுவேன். வேதமும் அறமும் அநாதியாயுள்ளவை. அவையே மிகப் பழமையானவை. அவற்றிற்கு ஆக்கமும் அழிவுமில்லை. எத்தனை புதியன புகினும் பழைமைதருமம் எங்கேனும் ஒன்றியிருந்து பின்னர்ச் சமயம்நேரும்பொழுது விருத்தியாகிவிடும். ('தருமத்தை நிலைநிறுத்தற்பொருட்டு யுகங்கள்தோறும் நான் அவதரிக்கிறேன்') என்பது ஈசுவரன்வாக்கல்லவோ? அத்தகையார் வருவார். தருமமே ஜயம்பெறும்.

அ. கோபாலையன். க. வி. கலாசாலை.

ஸ்ரீ:

அறஞ்செய விரும்பு.

இது, அரும்பெரும்புலமை ஔவைப்பிராட்டியாரால் அருளிச்செய்யப்பட்ட ஆத்திசூடியென்னும் சிறுநூலின் முதற்கண்உள்ள ஓர் சிறுவாக்கியம். இதன்பொருள் அறம்-தருமத்தை, செய-செய்தற்கு, விரும்பு-நீவிரும்புவாயாக என்பதாம். அறமாவது பெரியோர்கள் எக்காரியங்களைச் செய்யலாம் என்று விதித்திருக்கின்றார்களோ அக்காரியங்களைச் செய்தலும் எக்காரியங்களைச் செய்யலாகாதென விலக்கி யிருக்கின்றார்களோ அக்காரியங்களைச் செய்யாதிருத்தலுமாகிய ஒழுக்கம். இதனை, "அவற்றுள், அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தனசெய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்" என்ற பரிமேலழகர் வாக்கிடத்தானும் அறிக. இவ்வாத்திசூடியிற் பின்வரும் நூற்றேழு வாக்கியங்களையும் நோக்குவோமாயின் விதித்தனசிலவும் விலக்கியன சிலவுமாகக் காணப்படும். எத்தனைவாக்கியங்கள் விதிக்கப்பட்டன, எத்தனைவாக்கியங்கள் விலக்கிக்கூறியன என்று கணக்கிட்டுப்பார்த்தால் (1) ஐயமிட்டுண் (2) ஒப்புரவொழுகு (3) ஔவியம்பேசேல் (4) சனிநீராடு (5) ஞயம்படவுரை (6) இணக்க

மறிந்திணங்கு (7) தந்தைதாய்ப்பேண் (8) பருவத்தேபயிர்செய் (9) இலவம்பஞ்சிற்றுயில் (10) இளமையிற்கல் (11) காப்பதுவிரதம் (12) கிழமைப்படவாழ் (13) கேள்விமுயல் (14) சக்கரநெறிநில் (15) சான்றோரினத்திரு (16) செய்வனதிருந்தச்செய் (17) சேரிடமறிந்துசேர் (18) தக்கோனெனத்திரி (19) தானமதுவிரும்பு (20) திருமாலுக்கடிமைசெய் (21) தூக்கிவினைசெய் (22) தேசத்தோடொத்துவாழ் (23) நன்மைகடைப்பிடி (24) நாடொப்பனசெய் (25) நூல்பலகல் (26) நெற்பயிர்விளை (27) நேர்படவொழுகு (28) பீடுபெறநில் (29) புகழ்ந்தாரைப்போற்றிவாழ் (30) பூமிதிருத்தியுண் (31) பெரியாரைத் துணைக்கொள் (32) மெல்லினல்லாடோள்சேர் (33) மேன்மக்கள் சொற்கேள் (34) மொழிவதறமொழி (35) வித்தைவிரும்பு (36) வீடுபெறநில் (37) உத்தமனாயிரு (38) ஊருடன்கூடிவாழ் (39) வைகறைத்துயிலெழு என்ற முப்பத்தொன்பதுவாக்கியங்கள் விதித்துக் கூறியனவும் ஏனைய அறுபத்தெட்டுவாக்கியங்கள் விலக்கிக் கூறியனவுமாகக் காணப்படுகின்றன. இவற்றுள்ளும் எதிர்மறையால் விதிவாக்கியங்கள் விலக்கையும் விலக்குவாக்கியங்கள் விதியையும் உணர்த்தக்கூடும். அவற்றை அறிவுடையோர் ஆங்காங்கு உய்த்துணர்க. பின்னுள்ள வாக்கியங்கள் விதித்தனவும் விலக்கியனவுமாகவே முதலில் இருப்பதாகிய அறஞ்செயவிரும்பு என்ற இவ்வாக்கியம் அவற்றை உள்ளடக்கித் தொகுத்துக்கூறியதோர் விதிவாக்கியமாகும். இஃதன்றியும் வாக்கியங்களை வைத்துள்ள வரிசைமுறையில் ஒன்றை ஒன்று விரும்பிச் சம்பந்தமுடையனவாகவே காணப்படுகின்றன. ஆகவே அறமென்றால் யாதோவெனச் சந்தேகிக்காது இந்நூலுக்குள்ளே ஔவைப்பிராட்டியார் எக்காரியங்களைச் செய் என விதித்திருக்கின்றாரோ அக்காரியங்களைச் செய்யவும் எக்காரியங்களைச் செய்யேல் என விலக்கியிருக்கின்றாரோ அக்காரியங்களைச் செய்யாதிருக்கவும் முயற்சிப்பதேயாமென்று அறிக. ஆயின், அறஞ்செய் என்று கூறினாலே அமையுமே? மேலும் விரும்பு என்று ஏன் ஒருசொற் சேர்த்துக்கொள்ளவேண்டுமெனின் அறங்களோ உடல்வன்மைகொண்டு செய்வன சிலவும், பொருள்வன்மைகொண்டு செய்வன சிலவும், மனவன்மைகொண்டு செய்வன சிலவுமாக இருக்

கின்றன. இவற்றுள் உடல்வன்மை பொருள்வன்மையென்ற இரண்டும் எல்லார்க்கும் மெய்துதல் அரிது. மனத்தினாலே விரும்புகலோ யாவருக்கும் வெகு சுலபம். உடல்வன்மை பொருள்வன்மை யென்ற இரண்டும் மனத்தின்வழிப்பட்டே நிகழ்வனவாம். மனமேயென்றால் அவற்றிற்கு முதன்மையுடைத்தாயிருக்கின்றது. மேலும் அவற்றைப்போலச் சிரமப்பட்டுச் சேகரித்துக்கொள்ளவேண்டியதாயில்லாமல் நம்மிடத்திலேயே உரிமைபெற்றிருக்கிறது? இவற்றை நோக்கியே ஔவைப்பிராட்டியார் மனத்தின் தொழிலாக விரும்பு என்ற சொல்லை உபயோகப்படுத்தியிருக்கலாமென்று தோன்றுகிறது. இதன்றியும் உலகத்தி லுதித்தவன்றைக்கே எவைஎவை தனக்கேற்ப நன்மைபயப்பனவாகத் தோன்றுகின்றனவோ அவற்றினிடத்துப் பற்றுவைப்பதே மனத்தினுடைய இயற்கையாக இருக்கின்றது. இதனுடன் நன்மை பயப்பனவற்றைத் தீமைபயப்பனவாகவும் தீமைபயப்பனவற்றை நன்மைபயப்பனவாகவுங் கருதிச் சுழல்கின்ற ஓர் திரிபெண்ணமும் மனத்தின்கண் இருந்துகொண்டேயிருக்கிறது. அறங்களின் பயன்களோ அளவிறந்தனவாக இருக்கின்றன. அவைகளெல்லாம் சாமானிய முடையனவல்ல. தீமைபயப்பனவுமல்ல. ஆகையால், தீமைபயப்பனவாகிய தோஷ கிருத்தியங்களைச்செய்து பொருள் முதலிய பிரயோசனங்களையடையலாமென்றுநினைக்காமல் இவற்றினும் மேலானபிரயோசனங்களைக் கொடுக்கத்தகுந்தவையும் பழிப்பில்லாதவையுமாகிய அறங்களிலே, உன்னிடத்திலேயே உரிமைபெற்றிருக்கின்ற மனத்தின்றொழிலாகிய விரும்புதலை நீகொள் என்று கூறியுள்ளதாகவும் தோன்றுகிறது. இவற்றைநோக்கியே ஆசிரியர் திருவள்ளுவநாயனாரும், "மனத்துக்கண் மாசில னாதலனைத்தற, னாகுல நீர பிற" என்று கூறினர். இதுவரையிலும் அறஞ்செயவிரும்பென்ற வாக்கிய விசேஷங்களைப்பற்றிஎழுதியவைகளின்தாற்பரியம்சுருக்கமாக,உடல்வன்மை முலியன பெற்றோர் அறங்களை மனப்பூர்வமாகச் செய்தே உய்க என்பதும், அவற்றைப் பெறாதோர் மனத்தினால்விரும்பியேனும் உய்க என்பதுமேயாம்

S. ஆழ்வாரையங்கார்,
உதவியுபாத்தியாயர், க. லி. கலாசாலை, கோரங்கர்.

நலம்.

காணாத பேசாமை காணில் நலமாகும்
வீணாகப் பேசாமை மேல்நலமாம்—ஆணாகப்
பெண்ணாக மற்றும் பிறப்பாகத் தீவினையைப்
பண்ணாமை மேநலமாம் பார். (1)
பார்த்தொருபாற் கோடாமை பார்க்கில் நலமாகும்
வார்த்தை நலமாம் வழுவாமை—கீர்த்திபெறும்
வேலை தவிராமை விள்ளின் மிகுநலமாம்
காலை யெழுதனலம் காண். (2)
காணிலெதிலுமெய் காணல் நலமாகும்
ஊணில் மிதமே உயர்நலமாம்—மாணில்
மகளின்மை பார்க்கில் மகாநலமாம் மாந்தர்க்
ககமின்மை நன்னலமே ஆம். (3)
ஆமாம் நலந்தான் அடக்க மனைவருக்கும்
தாமாகப் பேசாமை தான்நலமாம்—ஓமாதி
நற்கருமம் தன்னிலும் நல்லொழுக்க மேநலமாம்
குற்றம் அகற்றனலம் கொள். (4)
கொள்ளல் பயன்மொழியைக் கூறில் நலமாகும்
தள்ளல் ஒழுங்கல்ல தானலமாம்—பிள்ளைகளைத்
தண்டித்துக் கற்பித்தல் தான்நலமாம் சாதியோர்
கண்டித்துப் பேசல்நலம் காண். (5)

விநோதக் கூற்று.

என்னை புணர்வப்பா ஏலாங்கா னையன்றோ
கொன்னை நினைந்தனளே கூடுமோ—மன்மதன்
தன்படுக்கை தன்னையே தாலி யிழந்திட்டாள்
என்னவிபரீதமிதை எண். (1)
தெரிந்தோமே குஞ்சரந்தான் சீரின்றித் தன்மேற்
சொரிந்திடுமால் மண்ணெண்ணைச் சொல்லல்—அறிந்தோமே
தானன்றி ஓர்பானை தன்னினத்தின் மேற்சொரிதல்
நீநன் றறிந்தே நிகழ்த்து. (2)

குறிப்பு:—மேலே கண்டவெண்பாக்கள் படிப்பதற்கு விநோதமும் உண்மைப்பொருளுமுடையனவாம்.

1. தற்காலநாகரிகத்தை முன்னிட்டு ஒரு விதவையானவள் மதனப்பள்ளிக்குப் போகவிரும்பியதைப்பற்றிச்சொல்லியது. மன்மதன் படுக்கை=மதனப்பள்ளி.

2. குஞ்சரம் என்னும் பெயருடைய ஒருவர் தன் இனத்தாருக்கெல்லாம் கெடுதியைச்செய்து தான்மட்டும் அக்கெடுதலுக்கு உட்படாததைப்பற்றி வியந்துரைத்தது.

ஸ்ரீ. ஸ்ரீ. ஸ்ரீனிவாசமுதலியார், ஆனைமலை.

சுலக்ஷணு.

(345-ம் பக்கத் தொடர்ச்சி.)

மதிமான், "நாங்கள் வாடகைவண்டிகளில் ஏறுவதில்லை."

கங்காதரன், "நான் சரியாய்க் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து விட்டேன். இதுவரையும் என்னுடைய சிநேகிதன் மாமுண்டியின் வீட்டிலிருந்துவிட்டு வருகிறேன்."

மதிமான், "பிரபுக்கள் குடும்பங்களிலுள்ளவர்களுக்கு இந்தச் சாதாரண ஜனங்களுடைய பெயர்கள் ஆச்சரியத்தைக் கொடுக்கின்றன. மாமுண்டி! என்ன பெயர்?"

கங்காதரன், "நாங்களெல்லாம் சாதாரணஜனங்கள்தான். என் தகப்பனுர் பெயர் முனியாண்டி. அவர் சிலகாலம் சமையல்வேலையி லிருந்தார். என்னருமைத் தாயாராகிய முருகாயி என்பவர் கூலிக்கு நெற்குத்துதல் முதலிய சில்லறைவேலைகளைச் செய்வது வழக்கம். நான் முதலில் ஒரு கனவான் வீட்டில் மூன்றுரூபாய்ச் சம்பளத்திற்கு அமர்ந்தேன். பிறகு வியாபாரத்தொழிலை மேற்கொண்டு, என்னுடைய ஊக்கத்தினுலும், உழைப்பினுலும், கடவுளுடைய அனுக்கிரகத்தினுலும் லக்ஷக்கணக்கான பொருளைச் சம்பாதித்தேன்."

கங்காதரன் சொல்லியவற்றையெல்லாம் கேட்ட மதிமானும் சூடாமணியும் இவ்வளவு தாழ்ந்தகுலத்திலுதித்த ஒருவனை விருந்திற்கு அழைத்ததனுல், தங்கள்பெருமைக்குக் குறைவுவந்துவிட்டதாக எண்ணிக்கொண்டார்கள். ஆயினும், "காரியம் ஆகும்வரை கழுதையையும் காலைப்பிடி" என்றபடி சாசயத்தைக் கொடுத்தும் சாமர்த்தியமாய்ப் பேசியும் கங்காதரனிடத்திலிருந்து பணம்பறித்துவிடுவதென்று அவர்கள் தங்கள் மனதில் தீர்மானித்துக்கொண்டார்கள்.

கருப்பன் போசனம் பரிமாற மூவரும் சாப்பிட்டார்கள். உயர்ந்த சாராயவகைகள் கொண்டுவரப்பட்டன. மதிமானும் சூடா

மணியும் சாராயத்தைக் குடித்துக்கொண்டே கங்காதரனையும் குடிக்கும்படி உபசரித்தார்கள்.

சூடாமணி, "கங்காதரா! எவ்வளவு காலத்திற்கு நீ சுவேதவதியிலிருக்கப் போகிறாய்?"

கங்கா, "நான் இங்கேயே நிலபலங்களை வாங்கிக்கொண்டு குடியாயிருந்துவிடலாமென்று நினைக்கிறேன். என்னுடையவக்கீலிடத்தில் ஒரு கிராமம் பார்க்கச் சொல்லியிருக்கிறேன்."

சூடாமணி, "வக்கீல் நிலம்பார்க்கத் தகுந்தவனில்லை. அவன் தனக்கு வரும்படி கிடைக்கவேண்டுமென்று வம்புவழக்காயுள்ள நிலங்களைத்தான் வாங்குவான்."

கங்கா, "அப்படியானால் வேறு எவ்விதம் நிலம் வாங்குவது?"

சூடாமணி, "நீ என்னுடைய பெரியதகப்பனாரின் சினேகிதனல்லவா? ஆகையால் நான் உனக்காக நல்லகிராமமாய்ப்பார்க்கிறேன். உயர்ந்த சாராயங்கள் உன்னருகில் இருக்கின்றன. சங்கோசப்படாமற் சாப்பிடு."

கங்கா, "ஆம், இந்தச் சாராயங்கள் வெகு நேர்த்தியாயிருக்கின்றன."

மதிமான், "அவைகளைச் சாப்பிட்டால் ஒருவிதமான தீங்கும் உண்டாகமாட்டாது. எனக்கு நல்ல அனுபவமுண்டு. நான் எவ்வளவு குடித்தபோதிலும் அதனால் ஒருபோதும் தீங்கு விளைந்ததேயில்லை."

கங்கா, "பிரபுவே, தங்களுக்கு எத்தனை வயதாகிறது? முப்பத்தைந்திருக்குமா?"

மதிமான், "இல்லை. பத்தொன்பதுதான் ஆகிறது. வயது கொஞ்சமாகவிருந்த போதிலும் இந்த விஷயங்களில் எனக்கு அநுபோகமுண்டு."

கங்கா, "எனக்கு நிலம்வாங்கித் தருவதாகத் தாங்கள் சொன்னபடியால், நான் இவ்வூரிற் குடியிருக்கவேண்டுமானால் எவ்வாறு

இருக்கலாம்? என்னென்ன சௌகரியங்கள்வேண்டும் என்பதைப் பற்றிச் சொல்லுங்கள்." என்று குடிவெறிபிடித்தவன்போல் ஆடிக் கொண்டே சொன்னான். தங்கள் காரியம் சுலபமாய் நிறைவேறி விடுமென்று மதிமானும் சூடாமணியும் ஒருவரையொருவர் ஜாடையாய்ப் பார்த்துக் கொண்டார்கள். மதிமான், "உன்னுடைய நிலைமை என்ன? உனக்கு என்ன ஆஸ்தியிருக்கும்? இவைகளைப் பற்றி நீ எங்களுக்கு முதலிற்சொல்."

கங்கா, "என் பிள்ளைகளெல்லாம் பெரியவர்களாகிவிட்டார்கள். அவர்களைப் பிரித்துவிட்டுவிட்டேன். என் பெண்சாதியும் இறந்துபோனாள். என் சொந்தத்திற்கு இப்பொழுது பத்துலக்ஷரூபாய் ஆஸ்தியிருக்கிறது."

சூடாமணி, பத்துலக்ஷரூபாய் தனக்கு ஒருபெரியதொகையில்லை என்பதுபோற் பாவனைசெய்து சொல்லுகிறான்: "உன்னுடைய ஆஸ்தி அதிக அற்பமானதல்ல. நீ முதலில் ஒரு நல்ல கிராமமும் வீடும் வாங்கவேண்டும்."

மதிமான், "இரட்டைக் குதிரைப் பீட்டன் (Phaeton) ஒன்று வேண்டும். நான் நல்ல குதிரைகளும் சேர்த்தியான வண்டியும் வாங்கித்தருகிறேன்." சூடாமணி, "வண்டி ஓட்டுவதற்கு ஒரு வேலைக்காரனும் வீட்டுவேலைக்கு ஒரு ஆளும் வேண்டும். மேலும் பிரபுக்களைப்போலிருப்பதற்கு மற்றொன்றுவேண்டும்."

கங்கா, "அது என்ன?"

சூடாமணி, "ஒரு வைப்பாட்டி."

கங்கா, "அதையும் தாங்கள் எனக்காகச் சம்பாதிப்பீர்களா?" என்று அதிக வெறிகொண்டவன்போல் ஆடிக்கொண்டே சொன்னான்.

சூடாமணி, "அதற்கென்ன தடை? பிறகு ராஜாங்கத்திலிருந்து தாங்கள் ஒரு பட்டம் பெறவேண்டும்."

மதிமான், "கடைசியாகக் கங்காதரனுக்கு நல்ல பெண்ணைப் பார்த்துக் கலியாணம் செய்துவைக்கவேண்டும்."

கங்கா, "எனக்கு வயது ஐம்பது ஆகிறதே. யார் பெண் கொடுப்பார்கள்?"

சூடாமணி, "உனக்கு முப்பத்தைந்து வயதுதான் இருக்கும். அதற்கு மேலிருக்குமென்று ஒருவரும் மதிக்கமாட்டார்கள்."

கங்கா, "அப்படியென்றால் என்பெற்றோர்கள் எனக்குப் பொய்சொல்லியிருக்கவேண்டும். நாளைக்கு ஜாதகத்தைப் பார்க்கிறேன். நான் கலியாணம்செய்துகொள்ளுவதற்கு நீங்கள் ஒரு பெண் பார்க்கிறீர்களா?"

சூடாமணி, "பணக்காரனாகிய ஜமீந்தார் மகளொருத்தி இருக்கிறாள். ஜாகீர்தார் புத்திரி ஒருத்தி இருக்கிறாள். இவர்களில் ஒருத்தியை உனக்கு மணம் முடித்துவைக்கிறோம்."

கங்கா, "நான் உங்களுக்கு என்ன பிரதியுபகாரம் செய்யப் போகிறேன்?"

சூடாமணி, "தற்சமயத்திற் சிலதொந்தரவுகளாற் கொஞ்சம் பணமுடை ஏற்பட்டிருக்கிறது. ஐயாயிரரூபாய் கொடுத்தாயானால் ஒருமாதத்தில் திருப்பிக் கொடுத்துவிடுவேன்."

கங்கா, "எனக்கு நிலங்கள், குதிரைகள், வண்டிகள் முதலியவைகளும் வாங்கி, ஒரு பெண்சாதியும் வைப்பாட்டியும் திட்டம் செய்யப்போகிற உங்களுக்கு ஐயாயிரரூபாய் கடன் கொடுப்பது மிகவும் அற்பமான பிரதியுபகாரம். பேனாமைக்கூடு எடுங்கள் உடனே ஒரு செக் (Cheque) எழுதுகிறேன்." என்று சொல்லி ஐயாயிரரூபாய்க்கு ஒரு செக் எழுதிக்கொடுத்தான்.

சூடாமணி, "இவ்விஷயங்களைப் பற்றி ஒன்றும் விக்கிரமவர்மாவிற்கு எழுதவேண்டாம்."

கங்கா, "இவைகளில் ஏதேனும் குற்றமுண்டோ?"

சூடாமணி, "இல்லை, இல்லை. என் பெரியதகப்பன் ஒருமூடன். அவன் ஏதாவது குற்றமாக எண்ணிக்கொள்வான்."

கங்காதரன் குடிமயக்கத்திலிருப்பவன்போலவே தத்தித்தத்தி நடந்துசென்று ஒரு வண்டியிலேறி வீடுசென்றான்.

மறுநாள் சூடாமணியும் மதிமானும் ஒன்ருய் உட்கார்ந்து கொண்டிருக்கையிற் கங்காதரனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதிற் பின்வருமாறு எழுதியிருந்தது.

மச்சுவீதி.
செவ்வாய்க்கிழமை.

பிரியமான சூடாமணிப்பிரபுவே!

தாங்கள் நேற்றுச் சொன்ன விஷயங்களைப்பற்றி நன்ருய் யோசனை செய்தேன். நான் பிரபுக்களைப்போல் வசிக்கத் தகுந்தவனல்ல. என்னுடைய வக்கீல் எனக்குத் தகுதியான நிலம் வாங்கிக் கொடுப்பார் இரட்டைக்குதிரைப்பீட்டன்வைக்க நான் அவ்வளவு யோக்கியதை யுள்ளவனல்ல. எனக்காகத் தாங்கள் திட்டம் செய்யப்போகிறதாகச் சொன்ன வைப்பாட்டி எனக்கு வேண்டியதில்லை. தங்களைப்போன்ற என் சிநேகிதர்களுடைய உபயோகத்திற்காக வைப்பாட்டி வைத்துக்கொள்ள எனக்கு இஷ்டமில்லை. தாங்கள் பார்த்திருக்கிற பெண்களைத் தாங்களே கலியாணம் செய்து கொள்ளுங்கள்.

தங்கள் உண்மையுள்ள
கங்காதரன்.

இக்கடிதத்தைச் சிநேகிதரிருவரும் பார்த்தார்கள்.

சூடாமணி, "கிழவன் பலேபேர்வழி. நம்முடையமோசத்தை யெல்லாம் கண்டுகொண்டான்."

மதிமான், "அப்படியானல் அவன் ஏன் நமக்கு ஐயாயிரரூபாய் கடன் கொடுத்தான்?"

சூடாமணி, "தான்பணக்காரனென்று காட்டிக்கொள்வதற்காக இருக்கலாம். எப்படி இருந்தாலும் சரி. நமக்குப் பணம் கிடைத்து விட்டது. தாராளமாய்ச் செலவுசெய்யலாம்."

உயர் குடும்பத்தார் வீடுகளில் நடக்கும் சம்பவங்கள்.

சுலக்ஷணைவிற்கு இப்பொழுது வயது நாற்பதாயிற்று. அவளுக்குப் பாலியத்தில் இருந்த அழகு குறையவில்லை. நல்ல ஆடை

யாபரணங்களைத் தரித்துக்கொண்டு லக்ஷணமான ரூபத்துடன் இருந்தாள். அவள் தன் மகனாகிய மதிமான் தன்னிடம் வரும்படி ஒரு வேலைக்காரனிடம் சொல்லியனுப்பினாள். சிறிதுநேரத்தில் மதிமானும் தன் தாயினிடத்திற்கு வந்தான்.

சுலக்ஷணை, "அப்பா குமாரா! உன்னிடத்தில் நான் சிலவிஷயங்களைப் பற்றிப் பேசவேண்டும்."

மதிமான், "சொல்லவேண்டியவைகளைச்சொல்; கேட்கிறேன்."

சுலக்ஷணை, "நீ கொஞ்சகாலமாய் மிகவும் கெட்ட நடத்தையாய்த் திரிய ஆரம்பித்துவிட்டாய். மேலும்......................"

மதிமான், "இதைப்பற்றி எனக்கு அநேகந்தடவைகளிற் சொல்லியிருக்கிறாய். இதற்குத்தானா என்னைக் கூப்பிட்டாய்?"

சுலக்ஷணை, "பேசாமல் நான் சொல்வதைக்கேள். எப்படியாவது, வயது இருபத்தொன்று ஆவதற்குள், உன்னை நல்வழிக்குத் திருப்பிவிடுவதென்று நானும் உன் காரியஸ்தர்களும் தீர்மானித்திருக்கிறோம். நான் உனக்கு நயமாகவும் பயமாகவும் சொன்னேன். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை."

மதிமான், "நீ எனக்கு மனைவியாகநிச்சயித்திருக்கும் பெண்ணின் சகோதரனுடன்தானே நான் கூடியிருக்கிறேன்."

சுலக்ஷணை, "அம்புஜம் நல்லபெண். சூடாமணி அந்தப் போக்கிரி, பெருங்குடியன். இது எனக்கு முதலிலேயே தெரிந்திருந்தால் அவன் சகோதரியை உனக்கு மனைவியாக நிச்சயித்திருக்க மாட்டேன். ஆனால் இப்பொழுது வேண்டாமென்பது நன்றாயிருக்க மாட்டாது."

மதிமான், "மேலும் இப்பொழுது வேண்டாமென்பதற்கு என் சம்மதமும் வேண்டும். நான் அம்புஜத்தைக் காதலிக்கிறேன். நாளைக்குவேண்டுமென்றாலும் அவளைக் கலியாணஞ்செய்துகொள்ளத் தயாராயிருக்கிறேன். சொல்லவேண்டியவைகளைச் சீக்கிரம் சொல்லித்தொலை. எனக்குத் தலைவலியெடுக்கிறது."

சுலக்ஷணு, "உன் நடத்தை மிகவும் கெட்டுப்போய்விட்டது. உன்னுடைய கெட்ட நடத்தை பூரணவாய்த் தெரிந்தால், அம்புஜம் உன்னைக் கலியாணம்செய்துகொள்ளச் சம்மதிக்க மாட்டாள். அவள் இப்பொழுது அவளுடைய அத்தையின் சொல்லுக்குக் கீழ்ப் படிந்து நடக்கிறாள்."

மதிமான், "அவள் மறுக்கமாட்டாள். அவளுக்கு ஆஸ்தி கிடையாது. என்னை விரும்பாவிட்டாலும் என்னுடைய ஏராள மான ஆஸ்தியை அவள் விரும்பமாட்டாளா?"

சுலக்ஷணு, "அது இருக்கட்டும். நேற்று உன்னுடைய கார்டி யன்கள் இங்கேவந்தார்கள் நீ சுவேதவதியைவிட்டுப் போய்க்கொஞ்ச காலம் புவனலயத்திலிருக்கும் அரண்மனையில் வசிக்கவேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது."

மதிமான், "முடியாது. நான் ஒருபோதும் அங்கே போயிருக் கச் சம்மதிக்கமாட்டேன்."

சுலக்ஷணு, "அப்படி நீ சம்மதியாவிடில், உன்னைச் சர்க்கார் உத்தியோகத்தில் நியமித்து அயல்நாடுகளுக்கு அனுப்புவதென்று தீர்மானித்திருக்கிறோம்."

மதிமான், "நான் மாட்டேனென்றால்?"

சுலக்ஷணு, "ராஜாங்கத்தின் உத்தரவைக் கொஞ்சம் யோஜனை செய்தே மறுப்பாய். அத்துடன் பணம் ஒரு பைசாவும் உனக் குக் கொடுக்கப் படமாட்டாது."

மதிமான், "அதைப்பற்றிப் பின்னால் பார்த்துக்கொள்ளுவோம். பணம் வேண்டுமானால் கடன்வாங்கிக்கொள்ளுகிறேன்."

சுலக்ஷணு, "நீ, 'முற்ற நனைந்தாற்குக் குளிரில்லை முழுவதுங் கெட்டாற்கு வெட்கமில்லை' என்றபடி முழுவதுங் கெட்டுப்போ னாய். நீ குழந்தையாயிருந்தபொழுது நான் உனக்காக எவ்வளவு கஷ்டப்பட்டேன், நன்றி கெட்டவனே!"

மதிமான், "மறுபடியும் பழைய கதையை ஆரம்பித்துவிட் டாய். நான் குழந்தையாயிருந்தபோது யாரோ என்னைத் திருடி

விட்டார்களாம். நீ அவர்களிடமிருந்து என்னைத் திருப்பிக்கொண்டு வந்துவிட்டாயாம். எப்பொழுதும் இதைச்சொல்லி என்னை ஏசிக் கொண்டேயிருக்கிறன்."

சுலக்ஷணை, "அடே மதிமான், யோசித்துப் பேசு நான் உனக்காக அநுபவித்த கஷ்டங்கள் உனக்குத் தெரிந்திருந்தால் நீ என்னிடத்தில் இப்படி நடந்து கொள்ளுவாயா?" என்று சொல்லிக் கண்ணீருதிர்த்தாள்.

மதிமான், "அப்படியானல் நீ என் விஷயங்களில் தலையிட்டுக் கொள்ளாதே" என்று சொல்லி எழுந்துபோய்விட்டான்.

மதிமான் போனதும் சுலக்ஷணையின் தோற்றம் திடீரென்று மாறினது. அவளுடைய கண்கள் கோவைப்பழம்போற் சிவந்தன. உதடுகள் துடித்தன. பற்களை நெறநெறவென்று கடித்தாள். அவளுடைய முகத்தில் உக்கிரமான கோபக்குறிகள் தோன்றின. "நான் இந்த விஷப் பாம்பை என்னைக் கடிப்பதற்காகவா வளர்த்தேன்? இவனைச் சத்துருவாகப்பாவித்து விரோதிக்கிறேன்," என்று அவள் தானாகவே வாய்விட்டுச் சொல்லிக்கொண்டாள். அவள் இருந்த அறையின் ஒருபக்கத்துக் கதவு கொஞ்சமாகத் திறந்திருந்ததைப் பார்த்ததும், கோபத்தை அடக்கிக்கொண்டு அவள் அக்கதவை முழுவதும் திறந்தாள். அங்கு அவளுடைய புத்திரிகளிருவரும் ஒட்டுக்கேட்டுக்கொண்டிருந்தவர்களைப் போல நின்றுகொண்டிருந்தார்கள்.

சுலக்ஷணை, "எனக்கு அடங்காத மகனொருவனிருத்தல் போதாதா? என்னுடைய புத்திரிகளும் நான்பேசுவதை ஒட்டுக் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்."

"நாங்கள் ஒட்டுக் கேட்டோமா?" என்று விமலா மிகவும் கோபத்துடன் கூறினாள்.

(தொடரும்.)

வ. வி. நடேசன்செட்டி,
ஆத்தங்குடி.

உ

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர்:

———:(:)———

உலகியலை நிறுத்தும்பொருட்டுப் பகவான் மனிதவுருவத்தையே தமக்கு மேலான கருவியாகக்கொண்டிருக்கிறார். ஏனெனில், மனிதன் ஒருவனே கடவுளுடைய அம்சங்களைச் சிறிதாகவேனும் பெரிதாகவேனும் கொண்டுள்ளவனாகின்றான். இதனால், நாம் ஒரு உறுதியை ஊஹித்தறியலாகும்; என்னவெனில்:—ஒவ்வொரு மனிதனும் கடவுளுடைய தூதனாக இருந்து சிறிது சிறிதாகவேனும் தனது கடமையாக உயர்ந்துள்ள கடவுளின் தர்மபாகங்களைக் காட்டிச் செல்பவனாகின்றான் என்பது. இந்த அம்சங்களைத் தக்க துணையாகக்கொண்டே உலகம் ஆத்மதத்வத்திலும் முன்னேறிவருகிறது. மனிதர்களில் உயர்ந்தவர்கள் தாம் தமது கடமையாகச் செய்வாம்சங்களை நடத்திக்காட்டிச் செல்கிறார்கள்; அவர்களுள் தாழ்ந்தவர்களாகிய கெட்டவர்கள் என்ன ஏற்றத்தைக் கற்பிக்கமுடியுமெனின்:- அவர்களும் கடவுளின் விதிரூபமான அம்சங்களைக் காட்டமுடியாதவர்களாக இருப்பினும், நிஷேத (விலக்கு) ரூபமான அம்சங்களைக் காட்டி அவற்றினின்றும் ஒதுங்கிச்செல்லும்படி ஜீவர்களை எச்சரித்துச் செல்கின்றார்களென்றே ஊஹிக்கின்றோம்.

ஆகப் பெரியோராக அவதரித்துள்ள ஒவ்வொருவரும், கடவுளுடைய உலககர்மமாகிய பெருங்கட்டடத்திற்குச் சிறிதும் பெரிதுமான உதவிகளைச் செய்தவர்களாகவே யாகின்றார்கள் என்பதில் யாதொரு தட்டுப்பாடும் இராது. உலகசரித்திரங்களால் நாம் அறிந்துகொள்ளக்கூடும் தர்மங்கள் பலவற்றுள்ளும், மஹான்களது அவதாரநிகழ்ச்சியும், அந்நிகழ்ச்சியின்பின்னர் உலகம் அடைந்துவரும் விருத்திப்பகுதியுமே பிரதானமானவைகளாக இருக்கின்றன.

அந்த அவதாரங்கள் அரசகோலங்களாகவும் இருக்கலாம்; ஆசாரிய கோலங்களாகவும் இருக்கலாம். இவர்களால் மனிதர்ம

மும் ஆத்மதர்மமும் முன்னேறிவருகின்றன. இந்த அவதாரங்களின் பின்னரே தேசதர்மமும் மததர்மமும் ஒத்து உழைக்கின்றன.

நமது ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸதேவரும் இப்போது நாம் சொல்லிய அவதார புருஷர்களுள் ஒருவராவர். அவர்களிடத்தில் அடங்கியிருந்த உயர்ந்தசக்திகள் யாவரையும் வசப்படுத்திவிட்டன. அவர்மகா பரிசுத்த ஆத்மாவையும் அன்புருவமான சுத்த இருதயத்தையும் பெற்றிருந்தார். அவருடைய சரித்திரத்தை நன்குபடித்த அல்லது கேட்ட ஒவ்வொருவருக்கும் அவருடைய சக்திகளின் லேசமாவது தங்காமற்போகாது.

அவருடைய ஜீவியகாலமெல்லாம் சௌலப்யத்தையும் (சுலபத்தன்மை) ஸத்யத்தையும் அருளையும் போதித்து உலகினரை மதம் ஒழுக்கம் வினயம் என்பவற்றில் ஏற்றிச்செலுத்தவந்த தர்மஸூக்ஷ்மங்களாகவே இருந்தன. பகவத்பக்தியே இவ்வுருவமாக வந்ததோவென்று அவர்களைச் சொல்வதைப் பார்க்கிலும், பகவத்கருணையே யிவ்வுருவமாகப் பரிணமித்துவந்ததோ என்று சொல்வதே எமது துணிவாக இருக்கிறது.

சூரியனொளிபடாதவஸ்து இல்லையென்று சொல்லுவதுபோல, கடவுள் அருட்சக்தி நுழையாதபொருள் ஒன்றும் இல்லையென்றும், யாவும் பகவதம்சங்களைப் பெற்றனவேயென்றும், ஆதலால் எவற்றினிடத்தும் வெறுப்புக்கொள்ளல் கூடாதென்றும், அன்புபாராட்டுவதில் எவ்விதவித்யாஸமும் கருதப்படாதென்றும் அவர்கள் எவ்வகையிலும் நடந்து காட்டியிருக்கிறார்கள்.

நமது தேவர் தமது காலங்களில் தம்மைக் கிட்டிவந்து வினவின எம்மதத்தினர்க்கும் அவரவர் மதங்களிலிருந்தே உண்மைகளை உதாரணமாக எடுத்துக்காட்டி ஐயமொழித்துவந்ததனால் அவரிடத்தில் எம்மதத்தினரும் வைத்துள்ள பிரியமும் அவர்க்கு எம்மதத்திலும் இருந்த நம்பிக்கையும் நன்குபுலப்படுகின்றன. எல்லா மதத்தினர்க்கும் உயர்கதியுண்டென்று அவர் ஒத்துக்கொண்டிருக்

கிறார். அவர் கடவுளை எங்கும் தொழுதிருக்கிறார். ஒரு தாழ்ந்த மனிதனிடத்தும் தொழுதிருக்கிறார்; ஒரு உயர்ந்த மனிதனிடத்தும் தொழுதிருக்கிறார். வெளியிலும் தொழுதிருக்கிறார்; உள்ளிலும் தொழுதிருக்கிறார். கோயிலுக்கும் சென்று தொழுதிருக்கிறார்; கோரிக்கும் சென்று தொழுதிருக்கிறார்; சர்ச்சுக்கும் சென்று தொழுதிருக்கிறார். அவர் எங்கும் எப்போதும் கடவுளைப் பார்த்த வண்ணமாகவே இருந்ததனால், அவருடைய இருதயம் எப்போதும் மலர்ந்துகொண்டேயிருந்தது.

விருப்பும் வெறுப்புமில்லாத பெருஞ்செல்வத்தைக் கருவிலிருந்தே பெற்றுவந்திருந்ததனால்; பழிக்கும் பாபத்துக்கும் பெருமைக்கும் புகழுக்கும் காரணமான அற்பப் பொருட்செல்வத்தை யவர் நினைத்ததேயில்லை. மண்ணும் பொன்னும் துல்லியமானவையென்று உலகினர்க்குக் காட்டும்பொருட்டே அவர் இரண்டையும் எடுத்துப் பார்த்து ஒன்றற்கொன்று ஏற்றமில்லாமையைக் காட்டி எறிவதும் வழக்கமாம். பெண்ணுருவைக்கண்டால் உலகம்மாதாவாகிய சக்தியே யென்றும் ஆணுருவைக்கண்டால் லோகபிதாவாகிய சக்தனே யென்றும் அவர் வணங்குவராம்.

இவைபோன்ற பல அரிய பெரிய தர்மங்கள் அவரிடத்தில் நிலைத்திருந்தன. இவை உலகத்தில் யாவராலும் அல்லது பெரும் பாலாராலும், அல்லது ஞானிகளாலுங்கூட அடையப்பெறுதன. இவருடைய அவதாரத்தினால் அறிந்துகொண்ட ரஹஸ்யங்கள் பலவற்றுள்ளும் "எல்லாரும் ஸஹோதரர், எம்மதமும் ஸம்மதம்" என்னும் ரஹஸ்யங்கள் அவசியம் அநுபவத்திற் கொண்டுவரத்தக்கவைகள். இவ்விரண்டும் நமது தேசத்துக்கு இன்றியமையாதன. தேசமுன்னேற்றத்துக்கும் இவை காரணமானவை. நமது தேசத்தாரை இனியொருபோதும் நாஸ்திகராக்க முடியாது; ஆஸ்திக்யம் வேரூன்றி நிலைத்திருக்கிறபடியால், ஸஹோதரத்வமும் மதத்வேஷமின்மையும் நிலைத்துவிட்டால் தேசம் தேசமாவதற்கு நல்லவழி யேற்படும்.

பத்திராதிபர்.

உ

புதுக்கோட்டை ராஜ்யம்.

(312-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸர் சேஷையா சாஸ்திரிகளது மேல் விசாரணை.

ஸர் சேஷையா சாஸ்திரியார் அவர்கள் 1878—ம் வருஷத்தில் திவானாக வந்து 1894—ம் வருஷத்தில் விலகிக்கொண்டார்கள். ஆக 16 வருஷகாலங்கள் அதிகாரம் நடத்தியிருக்கிறார்கள். இந்தப் பதினாறு வருஷங்களின் முற்பாதி பழைய மஹாராஜாவுடனிருந்து வேலை பார்த்து வந்தார்கள். இப்பகுதிதான சாஸ்திரியாரவர்களும் தங்களது மேல்விசாரணையைச் செய்பவைத்துக் கொண்டது. இந்த முற்பகுதியில்தான் ராஜ்யத்திற்கு அநேக புதிதுபுதிதான நன்மைகள் உண்டாக்கப் பெற்றிருக்கின்றன. நல்ல அரசாட்சிமுறையும் அப்போதுதான் ஆரம்பிக்கப்பெற்றது.

முதன் முதல் வரிவசூலொழுக்கில் உள்ள குறைதான் சாஸ்திரிகளது கவனத்தை இழுத்தது. நீண்ட நிலப்பகுதிகள் அமானி நிலங்களாகக் காணப்பெற்றன. குடிகள் அந்த நிலங்களிற் சரியான கவனம் செலுத்தாதிருந்தார்கள். அந்நிலப்பகுதிகளால் அரசாங்கத்துக்கு யாதொருவிதமான சாதகமுமில்லாதிருந்தது. ஒவ்வொரு குடியானவனும் அந்நிலத்தைத் தனக்குஇஷ்டப்பட்டபோது உழுது பயிரிடுவதேயல்லாமல், அதனையே முதன்மையாகக் கொண்டு சார்ந்திருக்கவில்லை. அதனால நிலங்களும் தக்க விலையுள்ளனவாக மதிக்கப்பெறவில்லை. ஒவ்வொரு காலம் அவன் பயிரிட்டபோதெல்லாம் அதன் மாசூலைத் தனக்கும் ஸர்க்காருக்கும் சரிபங்கு செய்து கொள்வான். இம்முறை ஏற்பட்டுவிட்டதனால் சில சமயங்களிற் கிராமஉத்தியோகஸ்தர்களிடம் கலகம் செய்துகொண்டு மாசூலில் மோசம்செய்யவும் வழியிருந்தது.

இந்த ஒழுங்கு மிகவும் தவறானமார்க்கத்திலிருந்ததனால், அந்த நிலப்பகுதிகளின் பத்துவருஷத்து மாசூலைக் கணக்காகவைத்து

நிலவரி பணமாகவே ஏற்படுத்தப் பெற்றது. இப்படியான வரிவசூல முறையினால், முதன் முதலிற் குடிகளும் முழுமனதாக ஆரம்பித்தார்கள். ஏனெனில், யாரும் இதைச் சரிவரக் கவனியாதவர்களாக இருந்தனராய், இப்போது வரி பணமாகவே கட்டவேண்டியபடி நேர்ந்துவிட்டபடியாலும் ஜடிகட்டு ஆரம்பத்திற் கஷ்டமும் நஷ்டமுமேயிருந்தன; எனினும், இம்முறை அவர்கட்கு ஊக்கத்தை மூட்டி விட்டதனால், அவர்கள் உழைத்து நல்லபலனைக் கண்டு சிலவருஷங்களுக்குள்ளே சாஸ்திரிகளை வாழ்த்தவும் ஆரம்பித்தார்கள். வரிவசூலும் யாதொரு தடையும் ஒழுங்கீனமுமின்றி வசூலிக்கும் விஷயத்தில் மிகுந்த கவனமும் எடுத்துக் கொள்ளப் பெற்றது. பாய்ச்சலுக் கேற்ற குளம் முதலியன விரைவில பழுதுபார்க்கப் பெற்றன. திருச்சி, தஞ்சாவூர், மதுரை இவற்றுக்குப் போகும் பெருஞ்சாலைகள் சரியாகச் சுத்தம்செய்யப்பெற்றன; அதனால் அடுத்தஜில்லாக்களுக்கு ஏற்படாத சவுகரியமும் இச்சமஸ்தானத்துக்கு ஏற்பட ஆரம்பித்தது. அரசாங்க சேவகங்களெல்லாம ஒழுங்குபடுத்தப் பெற்றன. ராஜாங்க உத்யோகஸ்தர்கட்கு நீண்டகால நன்மைகள் தேடிக் கொடுக்கப் பெற்றன; அதனால் அரசாங்கத்தொழின்முறையும் உயர்த்தப்பெற்றது. யாதொரு வீண்செலவும் செய்யப்பெறாமற் செலவு ஒழுங்குபடுத்தப்பெற்று அரசாங்கம் சிக்கனமாகவும் அவசியச்செலவுள்ளதாகவும் செய்யப் பெற்றது. குற்றஞ் செய்யும் வழிகள் குறைக்கப் பெற்றன. நியாயங்கள் உடனுக்குடனே தீர்ப்புச்சொல்லப் பெற்றன. ஒரு செகண்டு க்ரேட் காலேஜ் ஸ்தாபிக்கப்பெற்று நன்றாக நடக்கப்பெற்றது. அதில் நலல சிறுவர்களைக் கற்பிக்கத் தொடங்கினர்; அதனும் புதுமுறையில மாணவர் தேறி அரசாங்கத் தொழின்முறைக்கு உபகாரிகளானார்கள். இப்படியாக நமது சாஸ்திரிகள் தாம் இம்முறையை ஆரம்பித்த ஆறாவதுவருஷத்தில், அரசாங்கத்தை, நன்றாக அரசாட்சிசெய்யப் பெற்றுவரும் இதரசுதேசராஜ்யங்களுடன் தோள்தட்டிக்கொண்டு நிற்கும்படி செய்துவிட்டார்கள். இந்தச் சீர்திருத்தமுறையும் முடிவுக்கு வந்துகொண்டிருந்தது.

நமது சாஸ்திரியார் அவர்களுடைய அரசாட்சியின் முற்பகுதியான எட்டுவருஷங்களும் அதிவேகமான சீர்திருத்த முறைகளிலே

யே கழிந்துவிட்டன. இப்படி இடைவிடாத உறுதியான மாறுபாடு களைசெய்து அரசாங்க முறையை ஒருமுழுங்குக்குக்கொண்டுவந்து நிறுத்தியபின்னர், நமது சாஸ்திரிகள், பிறபகுதியான தமது ஆளுகை முறையையும், அப்போது இராவசராக இருந்த தற்போதைய கனம் ராஜா அவர்களுடைய கோள்களிலேறியிருந் தாம் உதாசினராகவிருந்து தமது முறை தொடர்ந்து வருகிறதாவென்று பார்த்திருப்பவர் போல், தமதுதொழில் வேகத்தைத் தணித்துக்கொண்டிருந்தார் கள்; அதற்குத்தக்கபடியே முறையும் ஒழுங்காக நடைபெற்றுப் பல அவசியமான மாறுதல்களும் ஆக்கப்பெற்றன. இந்தமாறுதல்க ளெல்லாம் நமது அரசாது ராஜாங்கமுறைமின் முன்னேற்ற வருஷங்களிலேயே நடைபெற்றன அம்மாறுதல்களுக்குள் முதன்மை பெற்றவை:—இனும்செட்டில்மெண்ட், நகரநிர்மாணம், உயர்ந்த கட்டிடங்கள் இவைகளே.

இனும் செட்டில் மெண்ட்:—300,000 ஏகர் நிலங்கட்கு அதிக மாக இனும்பூமிகளாக இருந்து பெருமபாலும் வரிகட்டப் பெறா மலே இருந்தன. குடிப்படைக் காணிபாட்சிகள் வெகுநாட்களாக இருந்தனவேனும் அந்த இனும்தாரர்கள் அரசாங்க உத்யோகம் செய்வது நாமமாத்திரமேயாக இருந்தது. இம்மாதிரியாகவே இதர அலுவல் இனும்தாரர்களும் தங்களது நாமமாத்திரத்துக்குப் பூமி யை அநுபவித்துக்கொண்டிருந்தார்கள். பிராம்மணர்கட்கு விடப் பட்டிருந்த இனங்களிற் பிரமதாய இனும்தவிர மற்றவை பராதீனப் படக்கூடாதபடியும் அதையுடையவர்களும் யாதும் சொத்துப்பற் றில்லாதவர்களாகவும் இருந்தார்கள். இந்தப் பழமையானசொத்துக் களிற் கிடைக்கத்தக்க பொருள்களை அவர்கள் அசட்டை செய் திருந்ததுமாத்திரமன்றித் தங்களுடையவும், தங்கள் நிலங்களி னுடையவும் அயோக்யதையைச் சொல்லிக்கொண்டு மிருந்தார் கள். ஆகையினால், அவர்களுடையவும், அவர்களுடைய நிலங்களி னுடையவும், சர்க்காரினுடையவும் விருத்தியைக் கோரியே தகுந்த வரிமூலம் இனங்களை ஸ்வாதீனப் படுத்தவேண்டியது அவசியமாக இருந்தது. ஆனால் இந்த இனும்தாரர்களில் அநேகர் இம்முறையைப் பொறுக்கவில்லை; அவர்களிற் பெரும்பாலர் ஜனத்தலைவர்களாக இரு

ந்ததனாலும் மிகுந்த இனாம் பூமிகளை யுடையவர்களாக இருந்ததனாலும், அதிகச் செல்வாக்குடையவர்களாக இருந்ததனாலும் இவ்விடுதலைமுறையைத் தக்க பலத்துடன் தடுக்க ஆரம்பித்தார்கள். ஆகையினால், இப்போதிருந்து கார்யநிர்வாஹம்செய்கிற அதிகாரி நயம் பயம் இரண்டுவிதத்திலும் ஆளுந்திறமுடையவராக இருக்க வேண்டியிருந்தது; நமதுமந்திரியோ அவற்றில் மிகச்சிறந்திருந்தவராதலால், காரியங்களைச் செவ்வனேநடத்தும் திறமைவாய்ந்திருந்தார். இனாம் நிலங்களுக்கென்ற சட்டம் தனியே ஏற்படுத்தப் பெற்று, அது 1888-ம்வருஷம் அதிகாரத்துக்குவந்தது. சில ஜாகிர் தவிர மற்ற இனாம் நிலங்களெல்லாம் 1906-ம்வருஷத்துக்குள்ளேயே வரி வசூல்செய்யப்பெற்றன. ஒரு வருஷத்துக்கு ஒன்றரை லக்ஷம் ரூபாய்கள் கூடுதலாகவே வரிவசூல்செய்யப் பெற்றன. நமது சாஸ்திரிகள் நினைத்தவண்ணமே, இந்த இனாம்விடுதலைச்சட்டமானது மகாசாஸனமாகவே முடிந்தது. இதுவரையில் விலைபெறாமலிருந்த நிலங்களெல்லாம் ஆயிரக் கணக்கானரூபாய்விலைக்கு மதிக்கப் பெற்றன. நிலங்களினால், கணக்கற்ற கடனாளிகளாக இருந்தவர்களும் பணக்காரர்களானார்கள். இந்தமுறையைப் முன்னே தடுக்க முயன்றவர்களெல்லாரும் இப்போது " இந்த மஹாசாஸனத்தினாலேயே விடுதலை யடைந்தோம் " என்றார்கள்.

நகரநிர்மாணம்:—இனாம் செட்டில்மெண்டுக்கு அடுத்ததாக ராஜதானிப் பட்டணத்தை விருத்திசெய்யும் அம்சம், முன்னுக்கு வந்து நின்றது. பட்டணமானது, ஏற்கனவே நன்றாகவும், அழகாகவும் கட்டப்பெற்றதாக இருந்தாலும், தெருக்களிலும் சந்துகளிலுமுள்ள வீடுகளெல்லாம் ஆக்கிரமிக்கப் பெற்றும் ஒழுங்கீனமாகக் கட்டப்பெற்றும் " வல்லான் வகுத்ததே வாய்க்காலாகி " ச் சாக்கடைகள் அடைக்கப்பெற்றுத் தெருக்களும் சந்துகளும் சதுப்பு நிலங்களாக மாறி எப்போதும் நோய்க்கு இடங்கொடுத்துக்கொண்டே இருந்தன. வாரச்சந்தையானது நல்ல ரஸ்தாவில் வைக்கப்பெற்றுப் போக்குவரவு சாதனங்களைத் தடைசெய்துகொண்டிருந்தது. ஒடுங்கிய சந்துகளையுடையபறைச்சேரியானது டையமண்டு ஜுப்ளி

வளைவுக்கு வெகு அருகாமையிலிருந்து, அந்தப்பறையர்களுடைய அசுத்தமான வழக்கவொழுக்கங்களால் அந்தப் பட்டணத்துக்கே காலரா வைசூரி முதலிய கொடிய வியாதிகளை வருவித்துக்கொண்டிருந்தது. ராஜதானியின் பெரிய உத்தியோகசாலைகளெல்லாம் பல மூலைகளில் அங்கொன்று இங்கொன்றாக இருந்துகொண்டு சொந்தக் கட்டிடங்கள் இல்லாமலிருந்தன. காலேஜ் கட்டிடம் தாராளமான இடத்துடனில்லாமலும் விளையாட்டுத் தோட்டமில்லாமலுமிருந்தது. வைத்தியசாலைக் கட்டிடத்துக்கு இடம் பற்றாதபடியிருந்தமையால், ரணசிகித்ஸை முதலான விஸ்தார சிகிச்சைகள் நடைபெறுவதும், நோயாளிகள் படுத்துக்கொண்டிருக்கும்படியான சவுகரியம் பெறுவதும் மிகக்கஷ்டமாக இருந்தது. சிறைச்சாலையானது பட்டணத்துக்கு மத்தியில் இருந்துகொண்டிருந்தது.

ஆனால், இப்போது போய்ப்பார்த்தாலோ, இதற்கு 25 வருஷங்கட்குமுன் பார்த்துவந்தவர்களுக்கு இப்போதைய சீர்திருத்தமானது ஒரு இந்திரஜாலவித்தைப்பாகவே தோன்றுமென்றெண்ணுகிறேன். சாலைகளைத் தடுத்திருந்த வீடுகளெல்லாம் ஒழுங்குசெய்யப்பெற்றன. சந்துகள் அகற்றப்பெற்றன. புத்தம்புதுச் சாலைகள் திறந்துவிடப்பெற்றன. சமீபங்களிலும் சிறுசிறு குடியிருப்புகள் உண்டாக்கப்பெற்றன. சந்தைப்பேட்டையானது ஒரு அகன்றதோப்புக்கு மாற்றப்பெற்றுப் பெரியவியாபாரஸ்தலமாக மாறிற்று. பறைச்சேரி ஒழுங்கான தெருக்களில் அகன்ற இடங்களிற் கட்டப்பெற்றன. காலேஜ்கட்டிடம் உயர்த்திக் கட்டப்பெற்றுக் கோபுரங்களும் அமைக்கப்பெற்றன. உத்தியோகசாலைகளும் வைத்தியசாலையும் சரியான இடங்களில் அமைக்கப்பெற்றுப் பார்வைக்கு அழகைக் கொடுத்துக்கொண்டு நிற்கின்றன. ஒருபெரியகுளம் வெட்டப்பெற்றும் ஒழுங்காகக் கட்டப்பெற்றும் அந்நகரத்துக்குப் பலவருஷங்கட்கு உதவும்படியான நீரைச்சேமித்துவைத்துக்கொள்ளலாம்படி இருக்கிறது: நீர்க்குழாய்வசதிகளும் எங்கு பார்த்தாலும் ஏற்படுத்தப்பெற்றன. இந்த நல்ல நிலைமையிலேயே 1894-ம் வருஷத்துடன் நமது சாஸ்திரியார் மேற்பார்வை நிறைவேறியது.

பத்திராதிபர்.

வஞ்சிமாநகர்.

வஞ்சிமாநகர்:—இது, சங்கநூல்களிலும் பிறநூல்களிலும்சேரராஜதானியென்று கூறப்பட்ட "வஞ்சி" யென்பது, சோழராஜதானியாகிய "உறையூரை" யடுத்த கருவூரா? அல்லது மலைநாட்டுக் கொடுங்கோளூரா? என ஐயுற்றிருந்த தமிழ்மக்கள் பலரும், அவ் 'வஞ்சிநகர்' உறையூரையடுத்த கருவூரே; கொடுங்கோளூரன்று, எனத்தெளிவெய்தும்படி ஸேதுஸமஸ்தான வித்வான் ஸ்ரீமத் ராகவையங்காரவர்கள் பல்லாற்றானும் நன்குஆராய்ந்து மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று வெளிவரும் "செந்தமிழ்ப்பத்திரிகை" வாயிலாக வெளியிட்டதொரு சிறந்த ஆராய்ச்சி நூலாம்.

இந்நூலை முறையே படித்தவளவில், இவ்வாராய்ச்சிக்குப் பெருந்துணையாகக் கொள்ளப்பட்டன. பெரும்பாலும், 'சிலப்பதிகாரம்' 'மணிமேகலை' 'பதிற்றுப்பத்து' 'புறநானூறு' முதலிய சங்கநூல்களும், 'சூளாமணி' 'பேரூர்ப்புராணம்' 'கருவூர்ப்புராணம்' 'பழனிப்புராணம்,' 'விக்கிரமசோழனுலா' 'சங்கரசோழனுலா' 'பெரியபுராணம்' 'பிங்கலந்தை'முதலிய பிறநூல்களுமாமென விளங்குகின்றது. சாசனங்களும் ஆதாரவாகலாமேயெனின், சங்ககாலத்துச்சிலாசாசனங்களொன்றேனும் இதுகாறும் அகப்படாமையால் அங்ஙனம் ஆதாரவுகாட்ட இயலவில்லையெனவும்; கருவூர் அரங்கநாதப்பெருமான் கோயிலிற்கண்ட சிலாசாசனத்தில் "வஞ்சி......ஸ்ரீ வைஷ்ணவரோம்" என்றதொடர் காணப்படுவதாக ஸ்ரீமத். மு. இராகவையங்கார் அவர்கள், தாம் எழுதிவெளியிட்ட "சேரன் செங்குட்டுவன்" என்னும் நூலிற் குறித்திருப்பதை நோக்கின், கிடைத்தசாசனமும் கருவூரே வஞ்சியென்ற ஸ்ரீமத் ஐயங்காரவர்களின் கொள்கையையே ஆதரிக்கின்றதெனவும் புலப்படுகின்றது.

இனி, இந்நூலுட் கூறப்படும் விஷயங்கள் இத்துணையவென்று தொகுத்துக் கூறப்புகின், 'வஞ்சிமாநகர்' சோணாட்டையடுத்திருக்கவேண்டுமென்பதும், அவ்வஞ்சி கொல்லிமலையைச் சார்ந்துளதென்பதும்; அது. ஆன்பொருந்தம் என்றநதிக்கரையில் அமையப்பெற்றதென்பதும்; அவ்வான்பொருந்தம் காவிரியாற்றுடன் கலக்குமென்பதும்; ஆன்பொருந்தம், ஆன்பொருநை, பொருநை என்பன ஒருபொருட்சொற்கள் என்பதும்; 'ஆன்பொருநை' யென்றபெயர், மேல்கடல்நோக்கிச் செல்லும் 'பேராற்றிற்கு' யாண்டும் வழங்கப்படவில்லையென்பதும்; பழைய நூலாகிய 'சூளாமணியிலும், பிறநூல்களிலும் 'கரபுரம், என்றதுகருவூர்க்கன்றிக், கொடுங்கோளூர்க்கில்லை யென்பதும் வஞ்சிவேறு, மகோதைவேறு என்பதும்; கொங்குநாடுகுடபுலத்துள்ளதென்

பதும்; அது குடபுலம் என்றே வழங்கப்படுமென்றும்; அது குடபுலங்காவலர்ர் கிய சேரர்க்கேயுரியதென்பதும்; காமதேனுவின்சம்பந்தத்தால், ஆன்பொருநை, ஆனிலை, எனக் கருவூர்நதியும் கோயிலும் பெயர்பெற்றனவென்பதும், அதுபற்றி இந்நூலில் 'பொருநை' என்பனவெல்லாம் ஆன்பொருநையைக் குறிப்பனவாதலின் தாமிரபர்ணியைக்குறிக்காதென்பதும்; ஆடகமாட முதலியவற்றின் இயல்புஇன்னவென்பதும்;பிறபல்வேறு அரியவிஷயங்களுமாகும்.

மேலும், 'வஞ்சி, கருவூரே, என்ற கொள்கையை விரோதிப்பதாகப் பிறர் கூறும் ஆக்ஷேபணைகளுக்கு, ஆராய்ச்சியோடுபட்ட சமாதானங்கூறும் அழகும் இதில் வாய்ந்துளது.

இவற்றை இன்னும் விரிப்பிற் பெருகுமென்று ஒருவாறு சுருக்கிக் கூறினேன். இங்குக்கூறிய விஷயங்களின் அருமை பெருமைகள் படிப்போர் மனமிடம்பெறும்படி ஸ்ரீமத் ஐயங்காரவர்கள் எழுதியுள்ள இந்நூலைமுழுதும்படிப்பவர்க்கு நன்கு விளங்கும்.

ஆகையால், இத்தகைய பெருமுயற்சியிற் றலையிட்டு மிகவும் விரைவாக அரியபெரியநூல்களை யெல்லாம் ஆராய்ந்து தமிழுலகம் வியந்துகொண்டாடும்படி இவ்வாராய்ச்சியை வெளியிட்ட ஸ்ரீமத் ஐயங்காரவர்களின் இயற்கையறிவின் நுட்பத்தையும், கல்வியறிவின் விசாலத்தையும், நூலாராய்ச்சியின் திறத்தையும் உற்றுநோக்குவார் யாவராயினும், அவர்கள்மிகவும் அதிசயித்து ஸ்ரீமத் ஐயங்காரவர்களையும் அவர் வெளியிட்ட நூலையும் வியந்து கொண்டாடாமலிருக்க முடியாதென்பது எமது துணிபு.

ஆதலின், இத்தகைப்புலமைவாய்ந்த ஸ்ரீமத் ஐயங்காரவர்கள் இதுபோன்ற அரியவிருந்தினை தமிழ்மக்களுக்கு மென்மேலும் அளித்துக்கொண்டு நீடூழி வாழவும், இவ்வரிய விஷயத்தை யாராய்ந்து தரும்படி கட்டளையிட்டும், ஆராய்ந்து தந்தநூலை அச்சேற்றுவித்தும் தமிழுலகத்திற்குப் பேருதவிபுரிந்த, மஹாராஜஸ்ரீ பாஸ்கர சேதுபதிமஹாராஜாவர்களின் தமிழபிமானமும், தமிழ்ச்செங்கோலும், அவர்களின் சந்ததியும், ஆயுளும் நீடூழிகாலம் தழைத்தோங்கவும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

இவ்வாராய்ச்சி தமிழபிமானிகள் யாவரும் படித்தறியத்தக்கதொன்றாம். இது புத்தகவடிவமாகவும் வெளிவந்துள்ளது. இதன் விலை அணா-8 வேண்டுவோர் இந்நூலாசிரியர்க்கும், மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்கும் எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

இங்ஙனம்,

ஸ்ரீஹரையர், மதுரைத்தமிழ்ச்சங்கம் மதுரை.

சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்.

சுந்தரேசுவரர் ரீடிங்ரூம் அரிமழம்.

பிங்களஞு ஆவணிமீ ௰௨௨

இன்று சர்க்கார்ப் பள்ளிக்கூடத்தில் மாலை 4½ மணிக்குக் கானப்பேட்டை வித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரேச தீட்சிதரின் அக்கிராசனத்தின் கீழ், ஸ்டேட் ஸ்கூல்மாணவர்களாகிய P. L. அண்ணுமலை, சொக்கலிங்கம், கருந்தான். மாணிக்கம், காசி, வீரப்பன், ராமசாமி என்னும் வைசியச்சிறுவர்கள் முறையே (1) அக்ராசனுதிபதி அவர்களை வரவேற்றல் (2) கடவுளின் மகிமை (3) பழக்கம் (4) பொய் (5) கொலை (6) அன்னையும்பிதாவும் முன்னறி தெய்வம் (7) புலால்மறுத்தல் என்னும் விஷயங்களை நன்கு பிரசங்கித்தனர். பின்னர், இவ்வூர்க்கம்பராமாயணப்பிரசங்க பண்டிதர், வைத்தியநாதபிள்ளை அவர்கள் 'குகனுடையபக்தி' என்றவிஷயத்தை அனேகமேற்கோள்களுடன் மிக அருமையாகப் பிரசங்கித்தவுடன், அக்கிராசனுதிபதி அவர்களின் முடிவுரை கூறப்பட்டது; பிறகு சந்தனதாம்பூலாதிகள் வழங்கப்பெற்றுச் சபை 7-30மணிக்கு நிறைவேறிற்று.

இந்தச்சபை மாதந்தோறும் நடைபெறுவதற்கு இறைவன் திருவருளைப் பிரார்த்திக்கிறேம். இங்ஙனம்,

P. L. அண்ணுமலை, Secretory.

புதுவயல் ஞானப்பிரகாச சபை.

இறைவன் திருவருளால் இக்கழகத்தின் மூன்றும் வருடத்து மூன்றுவது மாதாந்தரக்கூட்டம் நாளிதுஞு ஆவணிமீ ௨௰௪௨ சனிக்கிழமை, மாலை 3மணிக்குக்கூடப்பெற்றது. கடவுள்வாழ்த்து ஆனவுடனே சபைக்காரியதரிசி ஸ்ரீமான் நடராஜபுரம் சோமசுந்தரம் செட்டியாரவர்கள் (லால்குடி) பிரம்மஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரியாரவர்களை முதற்பீடத்தமரவேண்டுமாய்ச் சபையோர்களுக்காகக் கேட்டுக்கொண்டனர் அதுபோல் சாஸ்திரிகளமர்ந்து சண்முகக்கடவுளின் பிரபாவவணக்கத்துடன் முகவுரை கூறியதும் 'கல்வியும் அதன்பயனும் என்றவிஷயத்தை ஞானப்பிரகாச கலாசாலை ஆசிரியர் பிரம்மஸ்ரீ G. K. நரசிங்கராவ் அவர்களும், "புலான்மறுத்தல்" என்ற விஷயத்தைக் கண்டனூர் ஸ்ரீமான் ராம கு. ப. இலட்சுமணன்செட்டியார் அவர்களும், "திருக்குறளின்பிரபாவம்" என்ற விஷயத்தை பண்டிதர் பிரம்மஸ்ரீ D வைத்தியநாதையர் அவர்களும், "கம்பரது மதம்" என்ற விஷயத்தைக் காரைக்குடிக் கம்பராமாயணப் பிரசாரகர் பிரம்மஸ்ரீ M. V. கோவிந்தராஜ ஐயங்காரவர்களும், "தத்துவார்த்தம்" என்றவிஷயத்தை ஸ்ரீமத் நாகலிங்கதேசிகரவர்களும்

தகுந்தமேற்கோள்களுடன் பிரசங்கமாரிபொழிந்தார்கள். பிரம்மஸ்ரீ தலைவரவர்கள் ஒவ்வொரு உபந்யாசங்களுக்கும் அவ்வப்போதே தகுந்த அபிப்பிராயங்கள் கூறி உபந்யாசகர்களையும் செவிச்செல்வமுடையோர்களையும் மகிழவைத்தார்கள். பிறகுயாவருக்கும் ஸ்ரீமான் காரியதரிசியவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெற்றும் தற்காலம்நடைபெறும் மஹாயுத்தத்தில் நமதுபிரிட்டிஷ்துரைத்தனத்தாருக்கும் நேசப்படைகளுக்கும் ஜெயம் உண்டாக வேணுமென்று எல்லாம்வல்ல இறைவனைப்பிரார்த்தித்தும் ஹாரசந்தன தாம்பூலாதிகள் வழங்கப் பெற்று இரவு சுமார் 9-30 மணிக்குச் சபைமங்களகரமாக நிறைவேறியது.

சபாபிமானி.

சோழநகர்.

"ஞானசம்பந்தநற்சபை"

இதன் மாதாந்தரக்கூட்டம் பிங்களஹூ புரட்டாசிமீ ௩௨ (20—9—17) வியாழக்கிழமை பிற்பகல் 5-மணிக்குக் கூடிற்று.

கலாசாலைமாணவன் திருஞானசம்பந்தனால் கடவுள்வாழ்த்துக் கூறப்பெற்றது. பின்பு சபையோர்வேண்டுகோளின்படி சொக்கலிங்கம்புத்தூர்த் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ ரெ. இராமமூர்த்தி ஐயரவர்கள் அக்கிராசனத்தமர்ந்து சங்கிரகமான முகவுரை கூறினார்கள்.

ஐந்து உபந்யாசங்கள் நடைபெற்றன.

அக்கிராசனாதிபதியவர்கள் ஷை விஷயங்களுக்கெல்லாம் தனித்தனி அழகாக அபிப்பிராயங் கூறினார்கள்.

யாவருக்கும் வந்தனோபசாரங்கூறப்பெற்று மங்கலவாழ்த்து நிகழ இரவு 8½ மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

ஞானசம்பந்தன்.

நாட்டரசன்கோட்டை,

வித்யாபரிபாலனசங்கம்,

(15—10—17)

14—10—17 மாலை 4 மணிக்கு ஷை சங்கத்தின் 6-வது உபந்யாஸம் நிகழ்ந்தது. அப்போது ஸ்ரீமாந் வீ. தாசமையங்காரவர்கள் அக்ராஸனம்வகித்தார்கள். ஸ்ரீமாந் ப்ரும்மஸ்ரீ இராமையங்கார் அவர்கள் "கம்பராமாயணம்!" என்றும் விஷயத்தை உபந்யஸித்தார்கள், ஷை சங்கத்தின் மாணவர்கள் ஸி. வி. கா. கணேசன் சி. வி. வெ. சிவசுப்பிரமணியன் இவர்கள் "நன்றி

மறவேல்" என்னும் விஷயத்தையும்; சி. வி. பெரி. இராமஸாமி, சி. வி. வே. மாணிக்கம் என்பவர்கள் 'கைவினைகாவேல்' என்னும் விஷயத்தையும் உபந்நியாஸித்தார்கள். பிறகு தேவகோட்டை "வைசிடசிவானந்த சபையிலிருந்து வந்த" சரித்திரதர்மம்" என்னும்வியாஸம் படிக்கப்பட்டது. அக்ராஸனாதிபதியவர்கள் உபந்யசித்த விஷயங்களையும் உபந்யாசகர்களையும் பற்றி தமது நல்லபிப்பிராயத்தை வெளிக்காட்டிப்பேசினார்கள். இரவு 8 மணியோடு சங்கம் சிறப்பாய் நிறைவெய்தியது.

காரியதரிசி.

பலவான்குடி மணிவசாதசங்கம்,

(30-10-17)

திருவருட்பேற்றால் இன்று நம் மணிவாசகசங்கத்தின் மாதக்கூட்டங் கூடிற்று. சித்திவிநாயக வித்தியாசாலைத் தலைமைபாசிரியர் ஸ்ரீ வீ. குமாரவீரைய்யாவர்கள் தலைமைவகிக்க, சி. வி. வித்தியாசாலை மாணவன் சு. வள்ளியப்பனால் சிவகாருணியமும், ஷெ வித்தியாசாலை மாணவி மு. மீனாட்சியால் கற்பும், பழ, சின்னம்மாளால் மங்கையர்க்கரசியார் சரித்திரமும், நா. சீதையால் காரைக்காலம்மையார் சரித்திரமும், முறையே உபந்நியசிக்கப்பெற்றன. முடிவில் தலைவரவர்கள் கல்விதானத்தோடுகூடிய அன்னதானமே சிறந்ததெனவும் அதுவே சிவகாருண்யமெனவும் அபிப்பிராயங் கூறினார்கள். ஸ்ரீ ராம. கு. ராம. இராமசாமிச் செட்டியாரவர்கள் கல்வியறிவோடு கூடிய அறிவேசுகானுபவத்திற்கும் உலகநன்மைக்கும் ஏற்றதெனத் தமதபிப்பிராயத்தைக் கூறி வந்தனோபசாரத்துடன் ஆரசந்தனாதிகள் வழங்கச்சங்கம் இனிது நடைபெற்றது.

பின்னரும் மற்றொருதனிக் கூட்டங்கூடிற்று. குன்றக்குடி ஸ்ரீ சதாசிவப்பிரமம் அவர்கள் தலைமை வகித்தார்கள். கோநகர் க. வி. கலாசாலைத்தலைமையுபாத்தியாயர் ஸ்ரீ பண்டித அ. கோபாலையரவர்கள் சபையார் வேண்டிக்கொள்ளத் தாமியற்றிய தமிழ்த்தெய்வமாலையென்னும் பிரபந்தத்தை அரங்கேற்றுவித்தார்கள். அதன்சொற்சுவை பொருட்சுவைகளை யறிந்து வந்த ஸ்ரீ ஆழ்வாரையங்காரவர்களும் ஸ்ரீ ராம. கு. ராம. இராமசாமிச்செட்டியாரவர்களும் சாத்துகவிகள் கூறினார்கள், இத்தகையநன்னிமித்தங்கள் நந்தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு ஏற்றசாதகமாகும் எனவியம்பினார் ஸ்ரீ வீ. குமாரவீரையநவர்கள் ஆரசந்தனாதிகள் வழங்க சங்கம் இனிதுநிறைவேறிற்று. சுபம்.

சண்முகநாதன்.

உள்ளூர் வர்த்தமானம்

—————:);(❁);(:—————

காலநிலை:—ஐப்பசி முதலிலிருந்து 20௨-வரை மழையில்லையாயினும் பயிர்களுக்குவேண்டிய ஜலசௌகரியம் இருந்ததனால் சாகுபடியெல்லாம் ஆகிவிட்டன. ௨௧௨ நல்லமழைபெய்தது. இன்னும் பெய்யும்.

சுந்தரவிலாச கிரகப்பிரவேசம்;—பார்த்தவர் இதற்கு நிகரான அழகுள்ள கட்டிடம் இந்நாட்டில் இல்லையென்று சொல்லும்படி இவ்வூர் ஸ்ரீமான் சு. ப. கு. சொக்கலிங்கஞ்செட்டியாரவர்களால் அமைக்கப்பெற்றிருக்கிற சுந்தரவிலாசமென்னும்பங்களாவில்ஐப்பசிமீ ௰௨௨ கிரகப்பிரவேசம்நிகழ்ந்தது. இதனை முன்னிட்டு இவ்வூரிலிருந்து மலைக்குடிப்பட்டிவரையிலுள்ள கிளைச்சாலை சீர் செய்யப்பெற்றுப் போக்குவரத்துக்கு மிகவும் வசதியாயிருக்கிறது. இது ஒரு பெரும்புண்ணியமாகும். கிரகப்பிரவேசதினத்திலும் அதற்கடுத்த இரண்டு தினங்களிலும் சங்கீதக்கச்சேரிகள் ஸத்கதாகாலக்ஷேபங்கள் முதலியவையும் விருந்துகளும் விமரிசையாக நடைபெற்றன, ௰௩௨ இராத்திரி கற்பகவிநாயகமூர்த்தி எழுந்தருளி வீதிவலம்வந்து பக்தர்களுக்கெல்லாம் காட்சிகொடுத்தருளினார். ஷை விநாயகமூர்த்தியின் திருவருளால் இவ்வூரில் அமைக்கப்பெற்று நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக விருத்தியாகிவருகிற கற்பகவிநாயககலாசாலைக்கு இக்கனவான் தக்கஉதவிசெய்ய உத்தேசித்திருப்பதாகக் கேட்டுச்சந்தோஷிக்கிறோம்.

கற்பகவிநாயககலாசாலை. இதில் இப்பொழுது 135 பிள்ளைகள்படித்து வருகிறார்கள். இவர்களில் அயலூர்களிலிருந்து வந்திருக்கிற ஏழைப்பிள்ளைகள் பத்துப்பேர்களுக்கு இவ்வூர் ஸ்ரீமாந் மெ. மு. வீட்டார் ஏற்படுத்தியிருக்கும் சாறுக்கள் மடத்தில் அன்னமளித்து ஆதரிக்கிறார்கள். அன்றியும், இவ்வூர் ஆச்சிமார்களிற் சிலபுண்ணியவதிகள் சேர்ந்து பிடியரிசிக் கலயம்போட்டு வருவிக்கிற அரிசியைக்கொண்டு ஒருபிள்ளையின் போஷணை நடைபெறுகிறது. இத்தகையபுண்ணிய சீலர்கள் யாவருக்கும் ஈசன் அருள் பெருகுக.

கஞ்சிமடம்:—இவ்வூர் ஸ்ரீமான்களாகிய கி. ந. ராம, முதலியசிலர்சேர்ந்து ஏற்படுத்தியிருக்கும் இத்தருமமும் செவ்வனே நடைபெறுகின்றது. இதில் வருகிற ஏழைபரதேசிகளுக்கெல்லாம் பழஞ்சோறு அளிக்கப் பெறுகிறது. இதற்குக்கட்டிடமும் தகுதியான இடத்தில் அழகாக அமைந்திருக்கிறது. இதுவும் நீடூழிவாழ்க.

* தமிழ்த்தெய்வமாலை.

பண்ணுஞ் சுபங்களி னுண்மக்கள் சில்லோர் பரத்தையரை
நண்ணும் படிக்கழைத் தாடையும் பொன்னு நயந்தளித்துக்
கண்ணுங் கருத்துங் களிப்பார் புலவரைக் காணவொட்டார்
தண்ணென் றொழுக்கம்பூண் டார்க்கிவை யாமோர் தமிழ்த்தெய்வமே (௧)

பாட்டும் பொருளு மறியாத மானிடர் பாவவழி
யீட்டும் பொருள்பரத் தைசவம்பு சூதுக ளென்னுமவை
மாட்டும் வழியிற் செலவாவ தன்றி வளம்படவுன்
றாட்டுங்க மாமலர் சார்செல வாமோர் தமிழ்த்தெய்வமே. (௨)

பொன்னை நினைந்துபோ யீகை யிலாரைப் பொருந்தியையா
உன்னை நிகர்ப்பவர் யார்மத னாகன்ற வுத்தமனே
யென்னை நயந்தளிப் பாயென் றுரையா தெலாந்தருமின்
றன்னை நயந்துரைக் கும்வர மீவாய் தமிழ்த்தெய்வமே. (௩)

பாண்டித் துரையினு மேலா விருந்துன் பணிபுரிவான்
வேண்டித் திகழ்மகா தேவ முருகப்ப வேளளித்தாய்
தூண்டிச் செயவினும் பல்லோர்ப் படைத்துத் துணைபுரிவாய்
தாண்டித் திரைபயி னீர்சூழ் புவியிற் றமிழ்த்தெய்வமே. (௪)

எடுக்குங் கரும மெதுவா யினுமதற் கிவ்வுலகி
லடுக்குந் தடைபல வென்பநா லோரஃ தறிந்தவருங்
கொடுக்குந் தகையார் பெரியருஞ் சேர்ந்துகை கோத்துநின்றார்
தடுக்குந் தடைதடுத் துன்னைப் புரப்பர் தமிழ்த்தெய்வமே. (௫)

மனத்தைப் பிறமொழி கற்பதிற் போக்கி மகிழ்மனித
ரினத்தைக் குறுகியீ தென்னைநஞ் செய்கை யெனவினவிற்
கனத்தைத் தருமிது காணுமென் பாரவர் காணமிகுந்
தனத்தைக் கனமுடன் றந்துபா லிப்பாய் தமிழ்த்தெய்வமே. (௬)

முன்னே யுனைப்பயில் சான்றோர்கள் செங்கோன் முறைசெலுத்து
மன்னே ருயர்ச்சி யமைச்சர் தொழிலுடன் மன்னிநின்று
சொன்னோர் செலுத்தினர் பின்னுமம் மேன்மை துலங்கவருள்
தன்னே ரிலாத தகையார்க் கிலங்கு தமிழ்த்தெய்வமே. (௭)

---

*இது, கோநகர் என்று வழங்கும் கோனூர்ப்பட்டிக் கற்பகவிநாயக கலாசாலை முதலுபாத்தியாயர் அ. கோபாலையர் பிங்கள௵ ஐப்பசி௴ ௨௨௳ இயற்றி ௨௪௳ பலவான்குடியிற்கூடிய மணிவாசகசங்கத்தில் அரங்கேற்றியது.

ஓங்கிச் செழித்தொரு காலத் திருந்திவ் வுலகிலுள்ளார்
வாங்கிப் படிக்குமவ் வாங்கிலத்தாலே வளமழிந்தின்
றேங்கித் தவிக்கின் றனரா தலினினி யேனுமுன்னைத்
தாங்கித் துதித்துத் தகைபெறு வார்காண் டமிழ்த்தெய்வமே. (௮)

இந்திர போகத்தை யெம்மொழி நல்கினு மென்பயனுன்
றந்திர மன்றோ மனத்திரு ணீக்கித் தகையளிக்கும்
வந்திர வின்மீன் பலசேர்ந் திலகினும் வானிருளைச்
சந்திர னன்றே துடைத்தின்பஞ் செய்யுந் தமிழ்த்தெய்வமே. (௯)

கன்ம மடுத்தடி யென்றூழ் வுறினுங் கனம்பெறினுந்
தன்ம மடுத்தியன் மார்க்கத்தி லேமனந் தங்கிடவும்
வன்ம மடித்தவர் மாட்டுந்தோன் றூதும் வரங்கொடுத்திச்
சன்ம மெடுத்த பலன்றந் தளிப்பாய் தமிழ்த்தெய்வமே. (௰)

சம்பூரணம்.

இந்நூ லரங்கேற்றிய காலத்து
அன்பர்கள் பாடிய சாத்துகவிகள்.

கோங்கர்-க. வி. கலாசாலை யுதவியுபாத்தியாயர் மஹா-ள-ள- ஸ்ரீ
ஆழ்வாரையங்காரவர்கள் பாடியது.

தன்னை நிகர்த்துத் தமிழ்த்தெய்வ மாலையுரைத்
தன்ன வரியபுக ழுற்றனனாற்—சொன்னயமார்
கோபால னென்றுங் குணவா னவன்வாழி
பூபாலர் போற்றப் புவி.

பலவான்குடி ஸ்ரீமான்
ராம. கு. ராம. இராமசாமிச்செட்டியாரவர்கள்
பாடியது.

கற்றவர்க ளென்றுங் களித்துப் புகழ்ந்தோத
நற்றமிழின் றெய்வ நயந்துகொளச்—சொற்பொருள்சேர்
மாலை தனைப்புனைந்தான் மாமறையோன் கோபாலன்
ஞாலமிசை வாழ்க நனி.

உ

கணபதிதுணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—திருக்குறள்.

தொகுதி 9 | பிங்கள௵ கார்த்திகை௴ December 1917. | பகுதி 11

ஜப்பான் தேசத்துக் கல்விமுறை.

ஜப்பான் தேசத்தில் மேனாட்டுமுறையாகப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்திப் படிப்பிக்க ஆரம்பித்தது, தற்காலத்து ஜப்பான் சக்கரவர்த்தி அரசாட்சிக்கு வந்தபிறகுதான். இது ஆரம்பித்துச் சுமார் 30-வருஷங்களாகின்றன. இதற்கு முற்காலங்களில, இந்தியப்படிப்பு முறைபோலவே, புரோகிதர்களாலேயே படிப்புச் சொல்லிக்கொடுக்கப்பட்டு வந்தது. சீனபாஷையைக்கற்பிப்பதுடன் புத்தமத சூத்திரங்களும் இதர மதவிஷயங்களும் கற்பிக்கப்பட்டுவந்தன. சிலகாலங்களில கன்ப்யூஷியஸ் புராணங்களும் ஜப்பானிய சரித்திரங்களும் பிரதானங்களாகவு மிருந்தன.

ஆரம்பப்படிப்பு முறையானது சீனபாஷையின் எழுத்துக்களையும் கணக்குகளையும் கற்பிக்கும் அளவிலேயே நின்றிருந்தது. கலைக்கும் வைத்யமும் சொல்லிக்கொடுக்கப்பட்ட சிலபள்ளிக்கூடங்கள் தவிர வேறுபள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. பிறதேசத்து ஆசாரங்களை அநுஷ்டிப்பது தோஷமாகவே எண்ணப்பட்டு வந்தது. கிறிஸ்து முதலிய இதரதேசத்து ஆசாரங்களிற் பழகினவர்களும் பிறதேசப்பிரயாணம் செய்தவர்களும் தண்டிக்கப்பட்டு வந்தார்களென்றும் தெரியவருகிறது.

இவை யெல்லாம் இப்போது மாறுபட்டு வந்திருக்கின்றன. 30 வருஷங்களுக்கு முன் மாறுபாட்டைக் கண்டித்துக் கொண்டிருந்தவர்களும் அவர்களது வமிசத்தார்களும் இப்போது நவீனமுறையை முன்னுக்குக் கொண்டுவருவதில் உத்ஸாகங்கொண்டு உழைத்து வருகிறார்கள். "கல்வியே கருந்தனம்." "கல்வியே சிற்றுயிர்க் குற்றதுணை" "கல்வி யழகே யழகு" என்றும் செவ்வனே தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஜப்பானிய வித்யா இலாகா அதிகாரிகள் ஜப்பானிய மாணவர்களின் மனதையெல்லாம் மேனாட்டார் மனம்போலத் திருப்பிவிடக் கூடிய முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். வித்யா சட்டத்தின் முதற்பிரசுரமானது மிக்காடோ அவர்களது கட்டளையாகவே இருந்தது. அது பின்வரும்:—

" உலக வாழ்க்கையின் நித்தியசரிமுதல் அரசாங்க உத்யோகஸ்தர்களாகவும் குடித்தனக்காரர்களாகவும் வியாபாரிகளாகவும் போர் வீரர்களாகவும் வைத்யர்களாகவும் இவை போன்ற மற்றும் வேறு தொழிலாளிகளாகவும் வரவேண்டிய பக்குவம் வரையில் பள்ளிக் கூடங்களிலேயே கற்பிக்கப்பெறல்வேண்டும். ஒரு சிறிய கிராமத்திலே ஒரு குடும்பமேனும், ஒரு குடும்பத்திலே ஒருவரேனும் படிப்பில்லாதவராக இருக்கவேபடாது. " என்பதாம்.

இதர தேசங்களில் அதாவது மேனாடுகளிற் படிப்பிக்கும் முறையெதுவோ அதனையே முதன் முதல் தங்கள்நாட்டுக்கும் முறையாக வேண்டுமென்று அரசாங்கத்தாரும் உத்தரவு செய்து விட்டார்கள். இதன்நிமித்தம் அமெரிக்காவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் போதகாசிரியர்கள் வருவிக்கப் பெற்றார்கள். ஜப்பானிய மாணவர்களும் மேனாடுகட்கு அனுப்பப்பெற்றார்கள். அதற்காகவென்றே, இதர பாஷைகளைக்கற்பிக்கும் பள்ளிக்கூடங்களும் அநேகம் ஏற்படுத்தப்பெற்றன. வியாபாரம் முதலிய அநுபவத் தொழில்களைக் கற்பிப்பதற்காகவேண்டிய சாஸ்திர சம்பந்தமான அவசியச் சாமான்கள் பள்ளிக்கூடங்களில் அமைத்தம் செய்யப்பெற்

றன. 1877—ம் வருஷத்தில் ராஜதானியாகிய டோக்கியோவில் இப்போதிருக்கும் ராஜாங்க ஸர்வகலாசங்கமானது இரண்டு கல்லூரிகளுடன் [காலேஜ்] ஆரம்பிக்கப்பெற்றது. ஆனால் வித்யாசட்டங்கள் அடிக்கடி மாற்றப்பட்டுக்கொண்டேவந்தன. அப்படியான மாறுபாடுகளின் கொள்கைகள் சில பின்வரும்:— “ ஆத்மகுணத்தை விருத்திசெய்தல், ராஜபக்தி தேசபக்தி இவற்றில் உத்வேகத்தை யுண்டுபண்ணுதல், அவசியத்தொழில்களில் உடனே நுழையக்கூடிய அறிவு ” இவைகளே. தேகம் தேசம் இவற்றின் ஒழுங்கையும் குணத்தையும் விருத்திசெய்யும்பொருட்டு ராணுவத்திற் பழக்கப்படும் மாதிரியான தேகப்பயிற்சியும் பள்ளிக்கூடங்களிலிருந்தே பழக்கம்செய்விக்கப்பட்டுவந்தன. ஒருகாலத்தில் வித்யாவிஷயமாகக் கூடிய ஒரு பெரிய கூட்டத்தில் மிகாடோ சக்கரவர்த்தி பேசியதிற் பின்வரும் சிலவிஷயங்கள் வற்புறுத்தப்பெற்றன: “ மாணவர்கள், தங்கள் படிப்பு விஷயங்களை நன்றாகக்கவனித்து அவற்றில் நன்றாகத்தேறிவந்து, தேசத்தில் நடைபெறவேண்டிய எந்தவிதமான அவசியத்தொழிலுக்கும் அரசாங்கத்தாரால் அழைக்கப்பட்டபோது ஆபத்தர்களாக இருக்கவேண்டியது. தங்களது யுக்தி புக்திகளைச் சீர்திருத்திக்கொள்ளும் முறையிலும் குணங்களை மணப்படுத்திக் கொள்ளும் முறையிலும் பின்வாங்கி யிருக்கப்படாது. மேற்கண்ட விஷயங்களில் அரசராவது அவரது குடிகளில் யாருமாவது குறுக்கிடக்கூடாது ” என்பதாம். இக்கருத்துகள் தெருத்தெருவாகப் பிரசுரம் செய்யப்பெற்றன. இதனால் போதகாசிரியர்களும் மாணவர்களும் தங்கள் தங்கள் கடமைகளைச்செலுத்திச் தேசத்தை முன்னுக்குக் கொண்டுவருவதில் முதன்மை பெற்றவர்களானார்கள்.

ஜப்பான்தேசத்தில் வித்யா இலாகாவைச்சீர்திருத்தவேண்டிய முயற்சிகள் அரசாங்கத்தாராலேயே அடிக்கடி கவனிக்கப்பெற்று வந்தன. வித்யா இலாகாவுக்கென்றே தனி மந்திரிஒருவர் ஏற்பாடு செய்யப்பெற்றார். படிப்பையும் படிப்பு முறையையும் அடிக்கடி கவனித்து விசாரித்துவருவதற்காக அவருக்கு ஒருஉதவிமந்திரியும்நிய

மிக்கப்பட்டுள்ளார். ஆரம்பப்படிப்பும் அவசியப்படிப்பும் இருப்பிகாமானஒழுங்குடன் நடைபெற்று வரும்படியான ஏற்பாடு நன்றாகச் செய்யப்பட்டிருக்கிறது. அதிலிருந்தே வியாபாரமுறை தொழில் முறைக்குவேண்டியஒழுங்குகள்ஆரம்பிக்கப்பெற்றன. உயர்தரமான அனுபவத் தொழில் முறைக்கும் சாஸ்திரப்படிப்புமுறைக்குமென்றே சர்வகலாசங்க மொன்றும் இருக்கிறது. இதனோடு உயர்தர வியாபாரமுறைகள் தொழில்முறைகள் இவற்றுக்கு வேண்டிய உயர்தரப்பள்ளிக் கூடங்களும் ஏற்பட்டிருக்கின்றன. உயர்தர உபாத்திமைப்பள்ளிக்கூடங்களும் சாதாரண உபாத்திமைப் பள்ளிக்கூடங்களும் ஏற்பட்டிருக்கின்றன. உயர்தரப்பெண்பாடசாலைகளும், சித்திரம் சங்கீதம் முதலியவற்றுக்குப் பாடசாலைகளும் ஏற்படுத்தப் பெற்றிருக்கின்றன. ஊமை குருடர் இவர்கட்கும் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 1895-ம் வருஷத்தில், மாகாணஜனங்களின் ஆதரவின்பேரிலும் தனியே ஒவ்வொருவர் பேரிலுமாகப் பள்ளிக்கூடங்கள் ஆயிரக்கணக்காக ஏற்பட்டு விட்டன. இவைகளில் ஜப்பான் சீனம் முதலிய பாஷைகளும், இங்கிலீஷ் ப்ரெஞ்சு ஜர்மன் ருஷியன் முதலிய அன்னியபாஷைகளும், சட்டம் வைத்யம் தத்வ வுணர்ச்சி மாலுமித்தொழில் கணக்குவைப்பு வியாபாரம் அரசாங்கமுறை முதலிய தொழில்முறைகளும் கற்பிக்கப்படுகின்றன. இவைகளில் ராஜதானியாகிய டோகியோவில் இருக்கும் பள்ளிக்கூடங்களில்ஆயிரத்துக்குமேல் மாணவர்கள்படித்துவருகிறார்கள். கீழ்க் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையானது அந்நாட்டில் நடைபெற்றுவரும் கல்விமுறையின் பலத்தை நன்றாக விவரித்துக் காட்டும் என்று எண்ணுகிறேன்.

கீழ்த்தரப்பாடசாலைகள்		26, 631.
இவற்றுள் ஆண்கள்		2,435,223
பெண்கள்		1,235,122
	ஆக மொத்தம்	3,670,345

மாணவர்கள் படித்து வருகிறார்கள்.

தொழில்பயிலும் மாணவர்க்குரிய பள்ளிக்கூடங்கள்	10	மாணவர்	1117.
தொழிலுக்குரிய சாஸ்திரப் பள்ளிக்கூடங்கள்	97	,,	14,836.
இவைகட்கு உதவிப்பள்ளிக்கூடங்கள்	55	,,	3,327.
உயர்தரப்பள்ளிக்கூடங்கள்	6	,,	4,10[illegible].
நடுத்தரப்பள்ளிக்கூடங்கள்	96	,,	30,871.
உபாத்திமைப் பள்ளிக்கூடங்கள்	49	,,	7,734.
உயர்தரப்பெண்பள்ளிக்கூடங்கள்	15	,,	2897.
தாவரசாஸ்திரப்பாடசாலைகள்	219	,,	17,428.
ஸர்வகலாசாலைகள்	2	,,	1,620.
தனிப்பள்ளிக்கூடங்கள்	1,263	,,	61,948.

கீழ்த்தரப்பாடசாலைத் தொகையில் 3,976 பள்ளிக்கூடங்கள் தையல் கைத்தொழில் விவசாயம் வியாபாரம் முதலியவற்றைச் சொல்லிக்கொடுக்கின்றன. ஒழுங்காகவும் நடத்தப்பெற்றுவருகின்றன. அவைகளிலிருந்து நடுத்தர உயர்தரப் பள்ளிக்கூடங்களிற் போய்ச் சேரும்படியும் மாணவர்கள் கற்பிக்கப்படுகிறார்கள். மாணவர்கட்கும் பொதுஜனங்கட்கும் படிப்பில் ஆசையையும் விருத்தியையும் கொடுத்துதவுவதற்காக வேண்டியே நிறைந்த அவசியமான புஸ்தகங்களுடன் கூடிய புஸ்தகசாலைகளும் அநேகம்ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

டோகியோ கல்விச்சங்கம் என்னும் ஒருசங்கம் ராஜாங்கத்தாரால் ஸ்தாபிக்கப்பட்டு, விசேஷமாகப் பொதுஜனப்படிப்பைவிருத்தி செய்து கொண்டுவருகிறது. அங்கே வயதுசென்றவர்களும் படிப்பில் முதிர்ந்தவர்களும் உலகஅநுபவமுடையவர்களுமானவர்களே அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பலசமயங்களிலும் கூட்டங்கள் கூட்டி உபந்யாஸங்கள் செய்துவருகிறார்கள்.

வித்யா இலாகா மந்திரியின் மேற்பார்வையில் இருக்கும் இந்தப் பள்ளிக்கூடங்கள், பொதுஜன மாணவர்கட்காக ஏற்பட்டிருப்பன தவிர. பிரபுக்களுக்காகவும் மேன்மக்களுக்காகவுமென்றே பள்ளிக்

கூடங்கள் ஏற்படுத்தப்பெற்று ராஜகுடும்பத்தாராலேயே மேற்பார்வை செய்யப்பெற்று வருகின்றன. ஒருராணுவக் கல்லூரியும் ஒருராணுவச்சங்கமும், யுத்தாப்பியாசிகட்காக ராணுவக்கீழ்த்தரக் கலாசாலைகளும் படைவகுப்புமுறைக்காகக் கலாசாலைகளும் ஏற்படுத்தப்பெற்று ராணுவ இலாகா மந்திரியின் மேற்பார்வையில் நடத்தப் பெற்றுவருகின்றன. ஒருமாலுமிக்கல்லூரியும் மாலுமிச்சங்கமும் மாலுமிவைத்தியக்கல்லூரியும் இவற்றுக்கு உதவியான கீழ்த்தரப் பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தப்பெற்றுக் கப்பல்இலாகா மந்திரியால் மேற்பார்க்கப்பட்டு வருகின்றன.

இப்படி அறிவுவளர்ச்சிக்காகவும் தேசாபிமானத்துக்காகவும் ராஜபக்திக்காகவும் உத்யோகங்களை யுண்டுபண்ணிவிட அரசாங்கத்தாரும் இதரபிரபுக்களும் தலைவர்களும் தங்களது கடமைஇவைகள் தாமென்று ஊக்கங்காட்டி வருகின்றார்கள், அவற்றுக்காகப் பொருள் முதலியவற்றைத் தியாகமும் செய்துவருகிறார்கள்.

இனி, ஜப்பானை நோக்க நம்மிந்தியா எத்தனை விஷயங்களிற் குறைவடைந்திருக்கிறது என்பதைச் சற்று ஆலோசிப்போமாக:—

1. ஜப்பான்தேசத்தில் ஆரம்பப்படிப்புமுறையானது 14-வது வயது வரையிலும் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது.

2. பெரும்பாலான ஆரம்பப்பள்ளிக்கூடங்களில் தொழில்கள் அநுபவத்தில் வரும்படி பயிற்றப்பட்டு வருகின்றன. அவைகள்:- கைத்தொழில் விவசாயம் வியாபாரம் என்பன.

3. ஜனத்தொகையின் அளவை உத்தேசிக்கும்போது இந்தியாவைக் காட்டிலும் ஜப்பானில் தொழிற்கல்விச்சாலைகளும் வியாபாரக்கல்விச்சாலைகளும் அதிகரித்திருக்கின்றன.

4. உபர்தரத்தொழின்முறைகளும் வியாபார முறைகளும் பிரதானங்களாகப் பயிற்றப்பட்டு வருகின்றன.

5. டோகியோவில் நடைபெற்றுவரும் வியாபாரக் கல்விச்சாலையில் இங்லிஷ் ஜர்மன் ப்ரெஞ்சு ஸ்பானிஷ் சீனம் ருஷியா முத

விய பாஷைகளிலும் போதிக்கிறார்கள். இதனால் ஜப்பானிய மாண வர் அவ்வெல்லா நாடுகளிலும்சென்று வியாபாரம் நடத்திக்கொண்டு வர அநுகூலம் கிடைக்கிறது.

6. சர்வகலாசாலைகளிலும் கூட அநுபவரஸாயன சாஸ்திரம் கட்டிடவேலை சுரங்கவேலை முதலிய தொழில்கள் அநுபவமுறை யாகவே கற்பிக்கப்பெறுகின்றன. இதனால் மாணவர்கள் பள்ளிக் கூடத்தைவிட்டு வெளிவந்தவுடனேயே அவ்வத் தொழில்களில் நுழைந்து உத்யோகங்களை வகிக்கத்தக்கவர்களாகிறார்கள்.

7. எல்லாப்பள்ளிக்கூடப் பிள்ளைகளும் போர்வீரர்க்குரிய சட்டைகளுடனேபள்ளிக்கூடங்கட்குச்சென்றுவர ஏற்பாடுசெய்திரு க்கிறார்கள். ஆண்பிள்ளைகளெல்லாரும் ராணுவப்பயிற்சியில் அப்ய சிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

8. யாதொரு வேறுபாடுமின்றியே மாணவர்க்கு ஒழுக்க முறை கற்பிக்கப்பட்டுவருகின்றது.

9. மாணவர்கள்எப்போதும் எங்கும் சந்தோஷகரமாகவேநட த்தப் பெறுகிறார்கள். இதன்றி, நடத்தை ராஜபக்தி தேசபக்தி மனிதர் கூட்டுறவு இவற்றில் நன்றாகவும் திருப்திகரமாகவும் ஒழுங் காகவும் கட்டாயமாகவும் கற்பிக்கப்பெற்று வருகிறார்கள்.

10. பெண்கல்வி நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகி றது. ஜப்பானில் 1,500,000 பெண்கள் கல்விபயின்றுவருகிறார்கள். இந்தியாவிலோ 400,000 பெண்கள்தாம் படித்து வருகிறார்கள்.

மாணவர்க்குரிய சௌகரியங்கள்.

ஏழைமாணவர்கட்குப் பள்ளிக்கூடங்களில் வேண்டிய சௌகரி யங்கள் செய்துகொடுக்கிறார்கள். ஒவ்வொரு மாணவனுடைய சாப் பாட்டுச் செலவு மாதத்துக்கு இந்திய நாணயத்தில் ரூ. 7 அல்லது 9-க்கு அதிகப்படுவதில்லை. ஒருமாணவனை ஒருசாதாரணப் பள்ளிக் கூடத்திருந்து கல்விபயிற்றச் சகலவிதச்செலவும் சேர்ந்து ரூபாய் 9 அல்லது 15 க்கு அதிகப்படுவதில்லை. ஒருஉத்தரப் பள்ளிக் கூடத்திலேயோ அது ரூபாய் 14 அல்லது 20 க்கு அதிகப்படுவ தில்லை. டோகியோ அரசாங்கத்துக் கல்விச்சாலையிலோஅது ரூபாய்

16 அல்லது 22க்கு அதிகப்படுவதில்லை. இந்தச் செலவு சாப்பாடு குடியிருப்பறை புஸ்தகங்கள் மற்றும் இதரசில்லரைச் செலவுகளும் சேர்ந்ததுமேயாகும். ஆடையின் செலவு அவரவர்களைச் சேர்ந்தது. இந்தியாவிலோ இச்செலவுகள் பள்ளிக்கூடச் சம்பளத்தைத்தான் எட்டிநிற்கின்றன. அதிலும் சர்வகலாசங்கப்பரீக்ஷைகளிற் படிக்கும் மாணவர்க்கு, அச்சம்பளச் செலவும் இத்தொகைக்கு அதிகப்படுகிறது.

டோகியோ, கியோடோ என்னும் இப்பட்டணங்களிலுள்ள சர்வகலாசங்கங்களிற் படிக்கும் படிப்பிக்கும் மாணவரும் உபாத்தியாயர்களும் யாதொருவிதமான புஸ்தகமும் விலைக்கு வாங்கவேண்டியது அவசியமேயில்லை. போதகாசிரியர்கள் புஸ்தகசாலைகளிலிருந்து தேவையான புஸ்தகங்களைத் தருவித்துக்கொண்டு மாணவர்களைக் குறிப்பெழுதிக் கொள்ளும்படி செய்கிறார்கள். அந்தச் சர்வகலாசங்கமானது, சிற்சில சமயங்களில் மாணவர்களைத் தொழிற்சாலைகட்கும் உத்தியோகசாலைகட்கும் அழைத்துச்சென்று நேரிற் பார்த்து வரும் அநுபவஞானத்தையும் கற்பிக்கிறது. மாணவர்கள் பள்ளிக்கூடத்தை விட்டு நின்றவுடன் சோம்பேறிகளாகச் சிறிதுநாட்களும் இருப்பதில்லை. அவர்கட்கு உடனே உத்தியோகம் கொடுக்கப்படுகின்றன. சர்வகலாசங்கங்களில் அநுபவமுறையாகவே தொழிற்கல்வியும் விவசாயக்கல்வியும் வியாபாரக் கல்வியும் கற்பிக்கப்பெற்று மாணவர்கள் வெளிவந்துகொண்டிருப்பதால், அத்தகையவர்களையே எல்லா உத்தியோகசாலைகளும் விவசாயசாலைகளும் வியாபாரசாலைகளும் விரும்பி நாடுகின்றன. சில புத்திநுட்பமுள்ள மாணவர்க்கு அவர்கள் தங்கள் படிப்புமுறையை நிறுத்துவதற்கு முன்னமேயே சாலைகளில் உத்தியோகங்கள் அமைத்துவைக்கப் பெறுகின்றன. அந்தத்தேசத்தில் தேசாபிமானம் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருக்கிறது பாருங்கள்.

போதகாசிரியர்கள்.

உபாத்தியாயர்களும் உபந்யாசகர்களும் தேசாபிமான நோக்கத்துடன் ஸ்வல்ப சம்பளத்திற்கே உழைத்து வருகிறார்கள். தங்க

ளைப்போன்ற தேர்ச்சியுடையவர்கள் வெவ்வேறு முறைகளைப் பின்பற்றி வருவாய்மிக்குடையராக விளங்கினபோதிலும்தாங்கள் அதற்கு விருப்பேனும் அவரிடத்தில் வெறுப்பேனும் கொள்ளாமல் தேச ஊழியத்தையே கோரினவர்களாக உழைத்து வருகிறார்கள். அரசாங்கத்தில் உத்தியோகத்துக்கு என்று இவர்களையழைத்தபோதிலும் தேசவூழியத்தை விட்டுப்பிரிய அவர்கள் இஷ்டப்படுவதில்லை. இது எவ்வளவு மேலான நினைவு பாருங்கள். இவர்களுடைய லௌகிக நினைவுகள் எல்லாம் ஐரோப்பிய நினைவே. வீட்டுக்குப்புறமான இடங்களிற் சஞ்சரிக்கும்போதெல்லாம் ஐரோப்பிய உடையேகொண்டவர்களேனும் வீட்டில் இருக்கும்போது தேசவுடையே கொண்டிருக்கிறார்கள். வீட்டில் ஐரோப்பியர்களைப்போலக் கட்டு முட்டுச் சாமான்களும் அவற்றுக்குவேண்டிய செலவுகளும் அமையப்பெறாதவரேனும் வீடுகள் சுத்தமாகவும் அழகாகவும் சுதேச ஆசாரத்தைக் காண்பிக்கக் கூடியனவாகவும் ஒழுங்காகவும் வைக்கப்பட்டிருக்கின்றன. டோகியோ சர்வகலாசங்கத்தில் உபந்யாசகர்கட்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 150 முதல் 250 வரையும், சங்கநிர்வாஹகர்கட்கு ரூபாய் 200 முதல் 300 வரையும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உபாத்தியாயர்களுக்கும் இதற்கு ஏற்றபடியே தருகிறார்கள். சாதாரணப்பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கட்குச் சம்பளம் மிகக் குறைவாகத்தான் கொடுக்கப்படுகின்றது. சாதாரண ஆரம்பப் பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் தொகை மொத்தத்தில் 47,000 இருக்கின்றதேனும் இவர்களில் 2000 பெயர்கள் மாதமொன்றுக்கு ரூபாய் 15-க்கும் குறைந்தவர்களாகவும், 5000 பெயர்கள் ரூபாய் 8-க்குக் குறைந்தவர்களாகவும் இருக்கிறார்கள். கல்விமந்திரியும்கூடத் தமது அத்தனை கல்வித்திறத்திலும் தேசாபிமான நோக்கத்தை முன்னிட்டு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 150-க்குமேல் வாங்கப் பிரியப்படவில்லை.

ஜப்பானியர்களை உலக அநுபவத்தில் உயர்ந்து நடந்துவருபவர் என்று சொல்வதற்கு யாதொரு தடையுமில்லை. லௌகிகத்திற் சிறந்த முன்னேற்றத்தை யடையவேண்டிய எவ்வித முயற்சியும் அங்கே தேடப்பெற்றுவருகின்றன. அந்நாடு மேனாட்டுமுறையை யநுசரித்துத் தொழின்முறைகளில் முன்னேறிவருகின்றது.

நம்பிக்தியரே, மேனாட்டு அரசாங்கத்தைப் பெற்றிருந்தபோதிலும் தொழின்முறை முதலிய லௌகிகங்களிற் பின்னிறங்கி யிருக்கிறார்கள். நாகரிகத்திற் சிறந்தவர்களென்று கர்விக்கும் ஆங்கிலர்களை நமக்கு எவ்விதத்திலும் தலைவராக இருந்தும் நம்மவர்கள் தற்கால நாகரிகத்தில் முன்னேறிவரக் காணோம். அடிமைத்தனமே யுலக மெங்கும் இருக்கிறதென்று உபர்பலித்துவரும் அவர்களை நமக்குத் தலைவர்களாக அமைபப்பெற்றிருந்தும் நம்மவர்களுடைய அடிமைத் தனம் நீங்காதிருப்பதுடன் விருத்தி யடைந்துகொண்டும் வருகின்றது. அடிமைத்தனம் நீங்க வேண்டிய வழியில் முயன்றால் அது கலக்கத்தை யுண்டுபண்ணிவிடுகிறது. லௌகிகப்பிரவிருத்தியில் முன்னேறவேண்டுமானால், தற்காலத்துக்கு ஏற்றபடி சில மேனாட்டு முறைகளையும் அங்கீகரிக்கவேண்டுவது அவசியம் தான். பாரலௌகிகத்தில் மேனாட்டுமுறை நமக்குக் கொஞ்சமேனும் உதவியற்றது தான். அதன்விருத்திக்கு அதன் உதவியை நாம் ஒருகாலும் நாட வேண்டுவதில்லை. ஆனால் அதன் முறைகள் ஒருதேசத்தைச் செல் வத்தை வளர்ப்பதற்கேற்ற வழிகளைக் காட்டுகின்றன. நமதுநாட்க ளில் நடந்தேறும் ஒவ்வொரு நாளையின் பழக்கமும் விதியினாலோ அன்றி மதியினாலோ இதனையே வற்புறுத்திச் செல்லுகின்றது. நமது ராஜாங்கத் தலைவர்கள் அம்முயற்சியில் நம்மைச் செலுத்த வரவில்லையே என்ற எண்ணத்துடன் சோம்பியிராமல் நமது தேசத்தலைவர்களை முற்கொண்டேனும் முன்னேற வேண்டும். தற் காலப்பழக்கங்களைச் சற்றும் கவனியாதிருப்பது நமது முன்னேற் றத்துக் கென்று நமக்குக் கடவுள் கொடுத்த காலத்தைத் தவற விட் டதேயாகும். யுக்தியும் முயற்சியுமே தேசமுன்னேற்றத்துக்கு முக்கிய உதவிகளாகும். இவ்விரண்டும் அவ்வக்கால நாகரிகத்தைப் பின்பற்றியே வழக்கங்கொள்கின்றன. காலநாகரிகத்துக்கு ஏற்ப அவசிய விஷயங்களில் நாம் நமது மனதைச் செலுத்தாவிடில் யுக்தி யும் முயற்சியும் உதவாது நின்றுவிடும். நோக்கும் பொதுநினைவு மே தேசாபிமானத்தை வளர்க்கும். தேசாபிமானம் வளரப்பெறாத ஜனங்களையுடைய எந்தத்தேசமும் எக்காலத்தும் சிறப்படைந்துள்ளதாக எத்தேசசரித்திரமும் நமக்குச் சொல்லின்றிலது.

பெருமைதங்கிய கர்சன் பிரபு அவர்கள் ஒருசமயம் தமது நீண்ட பிரசங்கத்தின் மத்தியிற் கீழ்வரும் வாக்கியத்தைச்சொல்லி நம்மை ஊக்கியிருக்கிறார்கள்.

"ஒருதேச முன்னேற்றமானது இயற்கையாகவோ கடவுளின் சங்கற்பத்தினாலோ நடந்தேற மாட்டாது; அவ்விரண்டும் நமது இஷ்டத்தையும் கையையுமே எதிர்பார்த்து நிற்கின்றன."

பத்திராதிபர்.

தஞ்சை ஜில்லாச் சிறுவர்கள்.

சென்ற ஐப்பசிமீ ௰௮வ சனிக்கிழமையன்று நடந்த நாகபட்டினம் விடாரிகிளப்பின் 4-வது வருஷாந்தக் கொண்டாட்டத்திற் கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜ் பிரின்சிபால் மிஸ்டர் ஸ்ட்ராதாம் 'தஞ்சை ஜில்லாச் சிறுவர்கள்' என்ற விஷயத்தைப்பற்றி அருமையான ஓர் உபந்யாசம் செய்தார். அதன் சாராம்சம் பின் வருமாறு:—

பொதுவாய் இந்தியாவைப்பற்றிப் பேசாமல் தஞ்சை ஜில்லாவைக் குறித்துமட்டும் நான் இன்று பேசுவதற்கு ஒரு முக்கியமான காரணமுண்டு. பரீட்சைகளிலாகட்டும், படிப்பிலாகட்டும் தஞ்சை ஜில்லாச் சிறுவர்களே விசேஷ பிராபல்யம் அடைந்து வருகிறார்கள். அவர்களுக்கு அபார புத்தியும் உண்டென்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் மேனாட்டுச் சிறுவர்களோடு அன்னாரை ஒப்பிட்டுப் பேசுமிடத்து அவர்களிடத்திற் சில ஊழல்களிருக்கின்றனவென்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். இதர மாகாணச் சிறுவர்களிடத்திற் காணப்படாத சில கெடுதல்களும் தஞ்சை ஜில்லாச் சிறுவர்களிடத்திற் பொதுவாய்க் காணப்படும். தேகஸ்திதி சம்பந்தப்பட்டவரையில் தஞ்சை ஜில்லாச் சிறுவர்கள் வெகு மோசமென்றே சொல்லவேண்டும். அவர்கள் தேகம் குன்றிப்போய்க் கிடப்பதைப் பிரத்தியட்சத்தில் அறிந்துகொள்ளலாம். பிறிதொருகாலத்தில் ஒழுங்கான

பிரஜைகளாயிருப்பது சாத்தியமாகும்படி பால்யத்தில் அவர்களுக்குப் பயிற்சிசெய்விக்க யாரும் சிரத்தையெடுத்துக்கொள்வதில்லை. அவர்களுடைய தேகநிலை குன்றிப்போயிருப்பதற்குப் பல காரணங்களிருக்கின்றன. முதலாவது தேகப்பயிற்சியைப்பற்றி அவர்கள் கவலையெடுத்துக்கொள்வதேயில்லை. தேகாப்பியாசத்தை மேனாட்டாரின் ஊழல்களில் ஒன்றாய்ப் பாவித்து அவர்கள் சும்மாவிருந்துவிடுகிறார்களோவென்று நினைக்கவேண்டியிருக்கிறது. இரண்டாவது பள்ளிக்கூடத்திற் படிக்கும்போது தேகாப்பியாசத்திற்கு இடங்கொடுக்கும்படியான விளையாட்டுகளை இங்கிலாந்திற் செய்துவருவதுபோற் பாடசாலைகளிற் கட்டாயமாய் வைப்பதில்லை இஷ்டப்பட்டசிலரே இங்கு விளையாட்டுகளிற் கலந்துகொள்ளுகிறார்கள். மூன்றாவது காரணம் என்னவென்றால் இங்குள்ள சிறுவர்கள் வெகுபால்யத்திற் பள்ளிக்கு அனுப்பப்பட்டு அன்னிய பாஷைப் புத்தகங்களை அளவுக்கு மிஞ்சிச் சொல்லிவைக்கப்படுகிறார்கள். அவர்களுடைய தேகஸ்திதி கெட்டுப்போயிருப்பதற்கு மற்றும் சில காரணங்கள் இருக்கின்றன. சுகாதார வசதிகளில்லாத இடங்களிலேயே அன்னோர் பெரும்பாலும் பள்ளிக்கூடங்களிலும் வீடுகளிலும் படித்துக் காலத்தைப் போக்குகிறார்கள். அதன் பலனாக இரத்தாசய நோய்களுக்கும் கண் நோய், க்ஷயரோகம் முதலானவைகளுக்கும் கடைசியில் ஆளாகிறார்கள். இது நிற்க, பரீக்ஷை நெருங்கிவிடுமே என்ற மனோவியாதியால் சதாகாலமும் பீடிக்கப்படுகிறார்கள். இவைகளையெல்லாம் நிவர்த்திக்க வித்தியா இலாகா அதிகாரிகள் மாணவருக்கு விளையாட்டுகளைக் கட்டாயமாக வைக்கவேண்டும். பள்ளிக்கூடத்துக்கு வெளியில் மாணவர்களின் நடத்தையையும் போக்குவரத்தையும் பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் கவனித்துவரவேண்டும். வித்தியாநிபுணர்களாய்ப்போக இஷ்டமுள்ளவரைத் தவிர்த்து இதர மாணவர்களை அன்னியபாஷைப் புத்தகங்கள் அளவுக்கு மிஞ்சிப் படிக்கும்படி யூனிவர்ஸிட்டியார் பலவந்தம்பண்ணக்கூடாது. எந்தத் தொழில்களுக்குப்போக விரும்பினாலும் அதற்குப் பிரத்தியேகமான படிப்புத்திட்டத்தை யூனிவர்ஸிட்டியார் ஏற்படுத்திப் பின்

ளைகளை வதைக்கிறார்கள். எப்படியாயினும் அப்பரீக்ஷைகளில் தேறி விடவேண்டுமென்ற ஆசைகொண்டு சிறுவர்கள் உடம்பைக்கூடக் கவனியாமல் உழைத்துத் தேய்ந்துபோகிறார்கள். பால்யத்திற் சிறுவர்கள் பிற்கால வாழ்வுக்கேற்ற சாதனங்களைத் தேடிக்கொள்வதில்லையென்பதையும் இங்குக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. சமூகசேவகம், பொதுவாழ்வின் பொறுப்பு இவ்விஷயங்களின் வாசனைகூடப் பிள்ளைகளுக்குத் தெரியாதபடி படிப்புச்சொல்லிவைக்கப்படுகிறது. மேனாட்டு யூனிவர்ஸிடிகளைப்போல் மகசம்பர்கமான படிப்பு இங்குக் கட்டாயமாய்ச் சொல்லிவைக்கப்படுகிறதில்லை. மேனாட்டுக் கல்விமுறைகளை அனுசரிக்காவது ஹிந்துமத சம்பந்தமான பாடங்களைப் பள்ளிகளிற் கட்டாயப்படுத்தவேண்டும். மதப்படிப்பு இல்லாமல் எப்போதும் பொதுப்படிப்புக் கூடாது. சிறுவர்களுக்குச் சுயமாய் நினைக்க வல்லமை உண்டாகும்படி இங்குக் கல்வி போதிக்கப்படவில்லை. ராஜீயவாசனையே கூடாதென்று ஆக்ஞாபிக்கப்பட்டிருப்பது அவர்களுடைய துரதிர்ஷ்டவசமென்றே சொல்லவேண்டும். பரீக்ஷையின் நிமித்தம் நெட்டுருப்போடுவதே அவர்களுக்கு இயற்கையாய்ப்போய்விட்டது. மேனாட்டுச்சிறுவர்கள் 46-வயதுவரையில் யௌவனத்துக்குரிய சகல உபகரணங்களும் நிரம்பப் படைத்திருக்க இங்குள்ள சிறுவர்களுக்கு 23-வயதானதும் உற்சாகமென்பதே பறந்தோடிப்போகிறது. அதன் பலனாகவே பிற்கால வாழ்வும் அநேகமாய்த் திருப்திகரமாயிருப்பதில்லை. குமாஸ்தா வேலைக்குப் பெரும்பாலர் ஆவல்கொண்டு ஓடுகிறார்கள். சிறுவர்களுக்குப் பற்பல துறைகளைக் காட்டி அவற்றில் ஏதேனுமொன்றில் இறங்கும்படிசெய்வது பெற்றோர்களின் கடமைமாத்திரமல்ல. ஜனத்தலைவர்களின் கடமையுமாகும். ஐரோப்பிய யூனிவர்ஸிடிகள் இது விஷயத்தில் வழிகாட்டிகளாக இருக்கின்றன. அற்ப உத்தியோகங்களில் அமர்ந்து சிறுவர்களின் மூளை வீணே கெட்டுப்போவதை இங்குத்தான் சகஜமாய்க் காணலாம். கல்கத்தாவிலுள்ள என். ஆர். ஐயர் கம்பெனியையும், கணிதமேதாவி மிஸ்டர் ராமாநுஜத்தையும் ஏன் பின்பற்றி நடக்கக்கூடாது? யூனிவர்ஸிடிப்பயிற்சிபெற்று இவர்

கள் முன்னுக்குவந்திருக்கிறார்கள்? இது நிற்க; பால்ய விவாகத்தால் எண்ணிறந்த இடைஞ்சல்கள் சிறுவர்களின் வழியில் தடை கல்லாய் நிற்கின்றன. சிறுவர்களுக்குக் குடும்பப் பொறுப்பே கூடாது. கல்வி முறையும் வேரோடு மாற்றப்படவேண்டும். பெற்றோர்களும் ஜனத் தலைவர்களும் புராதனக்கொள்கைகளைப் பிடிவாதமாய் அனுசரித்து வரும் வழக்கம் ஒழிபட்டுப்போகவேண்டும். ஜீவனோபாயத்துக் கென்றே படிப்புச்சொல்லிவைக்கப்படுவதாகஎண்ணிச் சிறுவர்களைப் பள்ளிக்கு அனுப்புவது கூடாது. பல வியாதியுள்ள பிள்ளைகளை நான் காலேஜிற் சேர்த்துக்கொள்ள மறுதலித்திருக்கிறேன். ஒவ் வொரு கல்வி ஸ்தாபனத்திற்கும் வைத்திய ஆலோசனைசொல்ல ஒருவர் நியமிக்கப்படவேண்டும். நானும் இதே ஏற்பாட்டை அனு சரிக்கவாரம்பித்திருக்கிறேன். என்னை உங்களுடைய நண்பராகப் பாவித்து நான் சொல்வதை ஏற்றுக்கொள்ளவேண்டும். இப்போ துள்ள உபாத்தியாயர்களுக்குத் தேவையானவளவு சம்பளங்கொடுக் கப்படவில்லையென்பது பிரசித்தம். பரிசாரகத்தொழில் அதனைவிட மேலானதென்று ஒரு சமயம் நினைக்கும்படியாயிருக்கிறது. இச்சந் தர்ப்பத்தில் நல்ல உபாத்தியாயர்கள் கிடைக்கவில்லையென்று சொல் லிக்காட்டுவதில் அர்த்தமேயில்லை. இப்பிரசினைகளையெல்லாம் பொது ஜனங்கள் நன்றாய்ப்பார்த்துத் தக்கது செய்வார்களாக.

சுதேசமித்திரன்.
6—11—17.

உ

காளிம்பன்.

தொண்டைமண்டலசதகம்.

இடஞ்சூழ் காரிகை யாப்பிற் குதாரண மென்றுகொண்டு
விடஞ்சூழ் முரவென் றெழுவாயிற் றோற்றி வெகுகமழ்வேய்
கடஞ்சூழ் கரடக் கடாக்களிற் றுனிபற் காளிம்பன்மேல்
வடஞ்சூழ் தெனச்சொன்ன பாமாலையுந் தொண்டை மண்டலமே.

பொழிப்புரை

தமிழ் நிலம் முழுதும்பரவிய, „ காரிகை ” யென்னும் யாப் பிலக்கணத்தில் உதாரணமாக எடுத்தாளப்பெற்ற “ விடஞ்சூழ ”

வென (முற்பகுதியின் முதலடி) முதலாகக்கொண்டும், "வடஞ் சூழெனப்" (பிற்பகுதியின் முதலாகவர) பாமாலை பெற்றவனும், சிறந்த திருவேங்கடமென்னும் மலைசூழப்பெற்ற (இராஜதானிக்கு இறைவனும்) கடாக்களிற்றினைப் போன்றவனும், விளங்கிய புகழை யுடையவனுமான "காளிம்பன்" தொண்டைமண்டலத்திலுள்ளவன்.

வரலாறு.

இப்பிரபுவைப்பற்றிய விவரமொன்றும் தெரிவதற்கான சாதனமொன்றும் காணப்படவில்லை. தமிழ்நாவலர்சரிதையில், இவன் கம்பருக்குதவிய பசுக்கொடையைப்பற்றிய ஒரு குறிப்புமட்டுமே காணப்படுகிறது. இவனைப்பற்றிய மற்றைய விவரங்கள் தெரியும் வரை கீழ்க்குறிக்கப்படும் வரலாறே சிறந்ததெனக் கொள்ளவேண்டும். இவன் சிறந்தபிரபுவும், கொடையாளியும், சிற்றரசனாகவும் விளங்கியிருக்கவேண்டுமென மேற்கூறிய சதகச்செய்யுளாலும், அதன் * மேற்கோட்பாடலாலும் ஊகிக்கஇடமிருக்கிறது. இவ்வளவே அச்செய்யுள்களால் உணரத்தக்கவை. இனி அச்சிறு குறிப்பு அடியில் வருமாறு:—

கம்பர், தொண்டை நாட்டிலிருந்தபோது, சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலியாரை மணம்புரிந்ததும், திருவிளக்குத் தொண்டு செய்த கலியநாயனார் ஜன்மஸ்தலமும், முற்றத்துறந்த பட்டினத்தடிகள் முத்திபடைந்ததுமான பலசிறப்புடைய சென்னைக்குவடக்கு 5 மைலிலுள்ள திருவொற்றியூரில், "சதுரானனன் † மடத்திலிருந்த "வல்லி" யென்னும் பெயர்கொண்ட கணிகைபொருத்திபாற் காதல்கொண்டு அவள் உபபோகத்தின்பொருட்டு எருமைகள்

---

* விடஞ்சு ழரவி னிடைநுடங்க வில்வா ள்விசி விரையார்வேங்
கடஞ்சூழ் நாடன் காளிம்பன் கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சூழ் கொங்கை மலைதாங்கம் வருத்த லீல மலர்தாங்கா
நடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா மென்னுந் தன்மைத் தன்னுமையே.

† மூன்றாம் ராஜராஜசோழன் தொண்டைநாட்டிலுள்ள திருவொற்றியூர் உற்சவமொன்றுக்குச் சென்றிருந்தபோது சைவமதாசாரியராகிய சதுரானன பண்டிதரும், வாகீசபண்டிதரும், உடனிருந்தனர் என்று ஒரு சாஸனங்கூறுகிறது, (Ep. Rep Of 1911—14) கம்பர் பாராட்டிக் காதல்கொண்ட வல்லி யென்பவள் வசித்திருந்தமடம் இச்சதுரானன பண்டிதருடையது போலும்.

பெற்றவரைப் 1 புழற்கோட்டத்துக் 2 திருவேங்கடமென்னும் ஊரில் 3 நிரைக்கூட்டங்களுக்குத் தலைவனும், சிறந்த தியாகியுமாயிருந்த காளிம்பன்பாற் சென்று அவனை அரிய இனிய செய்யுட்பாக்களாற் புகழ்ந்துபாடக் காளிம்பன் பெரிதும் களித்துக் கம்பர் தகுதிக்கேற்ப நிரம்பப்பாடிசுரந்த கன்றுகளோடுகூடிய ஆயிரம் எருமைகளைப் பரிசாகக்கொடுத்தனன் என்ப. இவ்விஷயம் மேற்சுட்டிய "தமிழ்நாவலர்சரிதை"யில், "கம்பர் வல்லிவீட்டிற்கு எருமை வாங்கிவரப் போய்க் காளிம்பன் நிரைமேய்ப்பானைக் கண்டு அவன் மேற்பாட்டுச்சொல்ல, அவன் ஈன்றஎருமை ஆயிரங்கொடுத்தவெண்பா" என்னுந் தலைக்குறிப்பில்,

> புக்க 4 விடைதழுவிக் கோடுழுத புண்ணெல்லாந்
> திக்கிலுபர் காளிம்பன் 5 தென்புழன்மா—னக்கணமே
> 6 தோழ்வேது கொண்டிலளேற் 7 சுந்தரப்பொற் றேரன்றனுக்கு
> வாழ்வேது கண்டிலமே மற்று (82.

எனக் காணப்படுவதும் இதனை வலியுறுத்தும்.

இங்ஙனம்,

சி. கு. நாராயணசாமி முதலியார்,

கோயமுத்தூர்.

---

1 இது தொண்டைநாட்டுள்ள 24 கோட்டங்களுள் ஒன்று.

2 Modern Tirupathi North Arcot

3 பசுமந்தை.

4 விடைதழுவிக்கோடுழுதபுண்—இடையர் முறைப்படி ஏறுதழுவுதலால் உண்டானபுண்.

5 தென்புழன்மான்—தெற்கிலுள்ள புழற்கோட்டத்துப்பெண்.

6 தோழ்வேது—காளிம்பன் களங்கிண்டியவருத்தம் தீருமாறு அவனது மனைவி அவன்தோட்கு வேதுஊட்டினலன்றி அவன் வாழ்க்கை இன்புடைத்தன்று.

7 சுந்தரப்பொற்றேரன்றல்=காளிம்பன்.

உ

சுலக்ஷணை.

(384-ம் பக்கத் தொடர்ச்சி.)

"அம்மா கோபித்துக் கொள்ளாதேயுங்கள்'" என்றாள் அசிதா விமலாவும் அசிதாவும் சொன்ன மறுமொழியிலிருந்து அவர்களுடைய குணாகுணங்களை வாசகர்கள் அறிந்து கொள்ளலாம்.

சுலக்ஷணை, "எதற்காக ஒட்டுக் கேட்டீர்கள்? சரியான பதில் சொல்லுங்கள்"

அசிதா, "சித்திரம் எழுதுவதற்கு ஒருபடம் எடுத்துக் கொண்டுபோக நாங்கள் இங்கு வந்தோம். அடுத்த அறையில் உரத்த சத்தம் கேட்டது. மதிமானுடைய குரலென்றும் தெரியவந்தது. ஆகையால் நாங்கள் என்ன சம்பாஷணை நடக்கிறதென்று கேட்டுக் கொண்டிருந்தோம்,"

சுலக்ஷணை, "விமலா! நீ ஏன் ஒன்றும் சொல்லாமல் தூரத்திற் போய் நிற்கிறாய்?"

விமலா, "ஏனெனில், இந்த அற்பக் குற்றத்திற்கும் பிரமாதமாய்க் கண்டிப்பதாக எனக்குத் தோன்றுகிறது."

சுலக்ஷணை, "கீழ்ப்படிதலில்லாத பிள்ளைகளையுடைய தாயைப் போல் துரதிஷ்டமுள்ளவர்கள் ஒருவருமில்லை. அசிதா! நீ செய்த தவறுக்காக வருந்தப்படுகிறாய். அது நல்ல பிள்ளைக் குணம். விமலா! நீ உன்னுடைய அடங்காச்சகோதரனைப் போலிருக்கிறாய். நான் உன் தாய் என்பதையும் இந்த வீட்டிற்கு எஜமாட்டி என்பதையும் யோசித்து, நீ என்னிடத்தில் மரியாதையாகவே நடந்துகொள்."

விமலா, "நீங்கள் பேசுவதைப் பார்த்தால் நான் ஏதோ அபராதக்குற்றம் செய்துவிட்டேனென்று நினைக்க வேண்டியதாயிருக்கிறது."

இந்தச் சமயத்தில் ஐம்பது வயதுள்ள ஒரு ஸ்திரீ விரைவாக ஓடிவந்து சுலக்ஷணாவைப் பார்த்துச் சொல்லுகிறாள், "என்னால் பொறுக்க முடியாது. நான் இனிமேற் சும்மா இருக்கமாட்டேன் அந்தப் பயல் என்ன பாடுபடுத்துகிறான்?"

சுலக்ஷணா, "கமலினி, ஏன் இவ்வாறுபேசுகிறாய்? சாந்தமாய்ப்பேசு. ஒருவரும் உன்னை அலக்ஷியமாய் நடக்காதபடி நான் பார்த்துக் கொள்ளுவேன் என்பது உனக்குத் தெரியாதா"

கமலினி, "எப்பொழுதும் அவன் இவ்விதமாகவே நடந்து கொள்ளுகிறான். நான் தங்களுடைய அந்தரங்கக்காதி என்பதனாலும், இந்த வீட்டில் வெகுகாலமாய் இருக்கிறேன் என்பதனாலும், மதிமான் என்னை வெறுக்கிறான். எப்பொழுதும் உதாசீனமாய்ப் பேசுகிறான். மாடிப்படியில் அவன் எதிரே வரும்பொழுது என்னால் சீக்கிரம் ஒதுங்க முடியவில்லை. அதற்காக என்னை அவன் 'கிழட்டுப் பிணம்' என்று வைதான். என்னை அவன் மரியாதையாய் நடத்தும்படி அவனுக்குப் போதிக்கிறேன். அந்த நாய்க் குட்டியைச் சும்மா விடுகிறதில்லை."

சுலக்ஷணா, "கவனித்துப் பேசு புவனாலயம் ஜமீந்தாரை இப்படியா பேசுகிறது?"

விமலா, "நான் ஒரு அற்பக்குற்றம் செய்ததற்காக சற்றுமுன் தாங்கள் எவ்வளவு கடுமையாய்க் கோபித்துக் கொண்டீர்கள். இப்பொழுது ஒரு வேலைக்காரி என்ன பேச்சுப் பேசுகிறாள். கேட்டுக் கொண்டுதானே இருக்கிறீர்கள்."

கமலினி, "வேலைக்காரியா? ஆம், வேலைக்காரிதான். நெஞ்சு அஞ்சாமல் இவ்விதமாய் நீ என்னைப்பற்றிப் பேசுகிறாயா? உன்னுடைய சகோதரன் நாய்ப் பயலாயிருப்பது போல நீயும் வீணான உன்மத்தம் பிடித்த சிறுக்கி."

சுலக்ஷணா, "கமலினி! உன் பேச்சை நிறுத்து. விமலா' அசிதா, நீங்களிருவரும் போங்கள். நான் கமலினியுடன் தனியாய்ப் பேசவேண்டும்."

விமலா, "அம்மா, உடனே வேலைக்காரர்களைக் கூப்பிட்டு இவளைக் கல்தாக்கொடுத்து வெளியேதள்ளும்படி செய்யாவிட்டால்—"

சுலக்ஷணு. "போதும், நிறுத்து. நான் சொன்னபடி இந்த இடத்தை விட்டுப்போ."

விமலாவும் அசிதாவும் போனபிற்பாடு சுலக்ஷணுவும் கமலினியும் என்ன பேசினார்களென்பதை நாம் இங்குச்சொல்லத் தயாராயில்லை.

குடிலை.

மேலே சொன்ன சம்பவங்கள் நடந்து இரண்டு தினங்களாயின. மதிமான் தன் சினேகிதன் சூடாமணியின் வீட்டிற்குப்போய், பாலாமணி வசிக்குமிடம் தெரிந்து விட்டதா என்று அவனைக்கேட்டான். சூடாமணி, தன் வேலைக்காரன் பாலாமணி குடியிருக்குமிடத்தைக் கண்டு பிடித்து விட்டானென்று சொல்லி, அவளிருக்கும் தெருவையும் வீட்டின் நம்பரையும் தெரிவித்தான். மறுநாள் மதிமான் பாலாமணி வீட்டிற்கு எவ்விதம் போவதென்று யோசிக்கலானான். நேரே அவள் வீட்டிற்குப் போதல் கூடாதென்று நினைத்துப் பின் வருமாறு அவன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்:— "மாறுவேஷத்துடன் போய் அவளைச் சந்தித்துச் சிலநாட்களுக்குள் சம்மதிக்கச் செய்யவேண்டும்."

பாலாமணியின் வீடு கால்நடையில் தூரமிருந்தபடியால் ஒரு வாடகை வண்டியிலேறிக் கொண்டு அவள் வீட்டிற்குக் கால்மைல் தூரத்திற்கப்பால் போய் இறங்கினான். அங்கு ஒரு குடிசை இருந்தது. அது மிகவும் பழமையானதும் இடிந்ததுமாயிருந்தது. மதிமான் அந்தக்குடிசையின் கதவைத் தட்டினான். ஒருஸ்திரீ உள்ளே இருந்து கதவைத்திறந்தாள். அவளுக்குச் சுமார் நாற்பத்தைந்து வயதிருக்கும். அவளுடைய தலைமயிர் லேசாய் வெளுத்திருந்தது. அவளுடைய முகம் பார்ப்பதற்கு விகாரமாயிருந்தது. அவள் அழுக்குப்பிடித்த கந்தல்களை உடுத்தியிருந்தாள். தெலுங்கத் திறந்ததும், மதிமானைச்சற்றுநேரம் உற்றுநோக்கினாள்.

மதிமான், "நான் இந்தப் பக்கத்தில் உலாவிக் கொண்டிருந்தேன். மிகவும் களைப்படைந்திருக்கிறேன். சற்றுநேரம் இந்தக்குடிசையில் இளைப்பாற இடங்கிடைக்குமா?"

ஸ்திரீ, "அதோ இருக்கிறதே ஹோட்டல் (Hotel) அதிற் போய்த் தங்கலாமே."

மதிமான், "அது இன்னும் அரைமயில் தூரமிருக்கிறது. அவ்வளவு தூரங்கூட என்னால் நடக்கமுடியாது. மேலும் அங்கே வேலைக்காரர்கள் முதலிய சாமான்ய ஜனங்கள் தங்குகிறார்கள்."

ஸ்திரீ, "நீ ஏதோ காரியமாய் வந்திருக்கிறாய் போலிருக்கிறது. அப்படியானால் உள்ளேவா," என்று, சற்றுநேரம் அவனைக் கூர்மையாய்ப் பார்த்து விட்டுச் சொன்னாள்.

மதிமானும் அந்தஸ்திரீயும்உள்ளே போனார்கள். அந்தக்குடிசையில் அனேக பாகங்கள் உடைந்து கிடந்தன. கீழேஇரண்டு அறையும் மேலே இரண்டு அறையும் அதிலிருந்தன. அந்தஸ்திரீயைத்தவிர வேறொருவரும் அங்கே இல்லை. அவளும் மதிமானும் போய் நுழைந்த முந்தர் அறையில் கிழிந்த கோரம்பாயொன்று விரிக்கப்பட்டிருந்தது. உடைந்த நாற்காலி யொன்று அங்கே கிடந்தது.

ஸ்திரீ, "இந்த இடத்தைப் பார்த்தாயா? இதில் நீ தாராளமாய் இளைப்பாறலாம். நீ வந்த காரியத்தைப்பற்றி உனக்கு இஷ்டமான பேச்சு சொல்லலாம்.

மதிமான், "நான் ஏதோ காரியமாய் வந்திருக்கிறேனென்று நீ அறிந்து கொண்டாய். எனக்குச் சில சங்கதிகள் தெரிய வேண்டியிருக்கிறது. நீ அவைகளை எனக்குச் சொல்லவேண்டும்," என்று சொல்லி, ஒரு பணப்பையை எடுத்து அதிலிருந்து ஒரு ரூபாயை அவள் கையில் கொடுத்தான். அவள் ஒரு ரூபாயை அற்பமாய் நினைப்பவள் போல் மிகவும் அலக்ஷியமாய் வாங்கிக்கொண்டு, "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

மதிமான், "இந்தத் தெருவில் 225-வது வீட்டில் வசிக்கிறது யார்?"

ஸ்திரீ, "எனக்கு அவள் பெயர் தெரியாது. அவள் ஒரு பாலிய மாது."

மதிமான், "மிகவும் அழகாயிருக்கிறாளல்லவா?"

ஸ்திரீ, "ஆம், நான் அவளை இரண்டொரு தடவைகளில் பார்த்திருக்கிறேன். மிகவும் அழகாய்த்தானிருக்கிறாள்."

மதிமான், "அவள் யார்? என்ன தொழிலையுடையவள் என்பது உனக்குத் தெரியுமா?"

ஸ்திரீ, "தெரியாது."

"அப்படியானால் நான் வேறு யாரையாவதுவிசாரித்துக் கொள்ளுகிறேன்" என்று சொல்லி விட்டு மதிமான் எழுந்திருந்தான்

ஸ்திரீ "நில்! நான் உனக்கு வேண்டியவற்றையெல்லாம் விசாரித்து நாளைக்குச் சொல்லுகிறேன். மேலும் நீ யோசித்திருக்கும் காரியத்திற்கும் ஒத்தாசை செய்வேன்."

மதிமான், "நான் யோசித்திருக்கும் காரியம் உனக்குளெப்படித் தெரிந்தது?"

ஸ்திரீ, "என்னை முட்டாளென்று நினைத்தாய்? உன்னைப்போன்ற வாலிபர்கள் அழகுள்ள ஸ்திரீகளைப்பற்றி எதற்காக விசாரிப்பார்கள்?"

மதிமான், "சரி, நீ காரியத்தைத் தெரிந்து கொண்டாய். அவளுக்கு எத்தனை வேலைபாட்கள் இருக்கிறார்கள் என்றும், அவள் எப்பொழுதாவது தனியே வெளியே போகிறாளாவென்றும், அவளுடைய தாதி லஞ்சம் வாங்கக் கூடியவளா என்றும், நீ விசாரிக்க வேண்டும்."

ஸ்திரீ, "அவளைப் பற்றிய சமாசாரம் முழுவதும் உனக்குத் தெரிய வேண்டும்."

மதிமான், "இந்த விஷயத்திற் கொஞ்சம் வேடிக்கை இருக்க வேண்டும். நான் மாறுவேஷம் போட்டுக் கொள்வதற்குச் சில தாழ்ந்த உடைகள் வேண்டும்."

ஸ்திரீ, "நாளைக்கு அவசியமான உடைகளைக் கடையில் வாங்கிவருகிறேன்."

மதிமான், "நான் இங்கே ஒருவாரம் பத்துநாள் தங்கவேண்டுமானால் எங்கே தங்கலாம்?"

ஸ்திரீ, "இஷ்டமானால் இந்தக் குடிசையிலேயே தங்கலாம். நாளைக்கு நான் டவுனுக்கு (town)ப் போகும்பொழுது இரண்டு மூன்று புதுப்பாய்களும் தலையணைகளும் போர்வைகளும் உனக்காக வாங்கிக் கொண்டு வருகிறேன்."

தாழ்ந்த உடைகளும் மற்றைய சாமான்களையும் வாங்குவதற்கு மதிமான் இருபது ரூபாயை அந்த ஸ்திரீயினிடத்தில் கொடுத்தான்.

மதிமான், "எப்பொழுது நீ எனக்கு இந்தச் சமாசாரங்களைத் தெரிவிக்க முடியும்?"

ஸ்திரீ, "நாளைச் சாயங்காலம் அஸ்தமனமானதும் வந்தால், நான் விசாரித்தறிந்ததைத் தெரிவிப்பேன்."

அப்படியே ஆகட்டும் என்று சொல்லி விட்டு மதிமான் ஒரு வாடகை வண்டியிலேறி வீடு சென்றான்.

இனி நாம் அந்தக் குடிசையிலிருந்த ஸ்திரீயைப் பற்றி விசாரிப்போம். அவள் பெயர் காளியாயி. அவள் திருட்டுத் தொழிலால் ஜீவனம் செய்து வந்தாள். அற்பக் களவுகளை அவள் தனியே செய்வாள். பெரிய திருட்டுக்களாயிருந்தால், அவளுடைய கூட்டாளிகளான ஆண்திருடர்களைக் கூடச் சேர்த்துக் கொள்ளுவாள். மதிமான் போனபிறகு காளியாயி தன் குடிசையை விட்டுப் புறப்பட்டு ஒரு மைல் தூரத்திற்கப்பாலுள்ள ஒரு கள்ளுக் கடைக்குப் போனாள். இன்னும் சில இடங்களில் நாம இக்கடையைப் பற்றிச் சொல்ல வேண்டியிருப்பதால், இங்கு இதைப் பற்றிச் சற்று விஸ்தரிப்போம்.

இந்தக் கடையின் சொந்தக்காரன் பெயர் பேயாண்டி. அவன்

மனைவியின் பெயர் பேய்ச்சியாயி ஆனால் அது மருவி, அவள் வழக்கத்தில் பேச்சி என்று அழைக்கப்பட்டாள். அவர்களிருவரும் கள்ளுச்சாராயங்கள் விற்பதோடு சில்லறை வியாபாரங்களும் செய்து வந்தார்கள். கள்ளுண்பவர்களுக்கு மாம்சம் சமைத்து விற்றல், பலசிற்றுண்டிகளைச் செய்து விற்றல் முதலானவைகளும் அவர்களுடைய தொழில்களாயிருந்தன. இக்கடைக்கு பேயாண்டி திருட்டு நகைகளைச் சொற்ப விலைக்கு வாங்குவான். தம்பதிகளிருவரும் வயது சென்றவர்கள். அவர்களுடைய வயது ஐம்பதுக்கு மேல் அறுபதுக்குள் இருக்கும்.

பேயாண்டி கடைக்கு வருபவர்கள் பெரும்பாலும் திருடர்களாகவே இருப்பார்கள் காளியாயி அங்கு போன சமயத்தில் பேர் போன திருடனான வீரசிங்கமும் அங்கே இருந்தான். அவனுக்கு இப்பொழுது வயது நாற்பத்து மூன்று. காளியாயி தானும் வீரசிங்கமும் சிலவிஷயங்கள் தனியாய்ப் பேசவேண்டுமென்று பேயாண்டியினிடம் சொன்னாள். அவன் அவர்களிருவரையும் ஒரு தனியறையில் கொண்டு போய் விட்டான். கொஞ்சம் கள்ளும், மாம்சமும், சிற்றுண்டிகளும் அவர்கள் முன் வைக்கப்பட்டன. பேயாண்டி அவர்களைத் தனியாய் விட்டுவிட்டுப் போய்விட்டான்.

வீரசிங்கம், "எதற்காகநீ இங்கு வந்தாய்?"

காளியாயி, "ஒரு விஷயத்தைப் பற்றி உன்னிடம் பேசுவதற்காகத்தான்."

இருவரும் அரைமணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு காளியாயி தன் வீட்டிற்குத் திரும்பினாள். வீரசிங்கம் கள்ளுக்கடையிலிருந்த தன் சிநேகிதர்களுடன் வந்து உட்கார்ந்தான்.

மறுபடியும் குடிசை

மறுநாள் சாயந்தரம் எட்டுமணிக்கு மதிமான் காளியாயியின் குடிசையின் கதவைத் தட்டினான். உடனே கதவு திறக்கப்பட்டது முதல் நாள் பேசிக் கொண்டிருந்த அறைக்குள் காளியாயியும் மதி

மானும் சென்றார்கள். அந்த அறையில் ஒரு கல்விளக்கு மினுக்கு மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. அந்த விளக்கில் கொஞ்சம் விளக்கெண்ணெய் ஊற்றப்பட்டு, இலவம் பஞ்சினால் திரிக்கப் பட்ட திரியொன்று போடப்பட்டிருந்தது. கல் விளக்கின் மங்கலான வெளிச்சத்தில், இருவரும் பேசவாரம்பித்தார்கள்.

மதிமான், "என்ன சமாசாரம்?"

காளியாயி, "எல்லாம் நல்ல சமாசாரந்தான். நேற்றுமாலை அவளுடைய வேலைக்காரியுடன் பேசினேன். அவள் லஞ்சம் வாங்கிக் கொள்வதில் மிகவும் ஆசையுள்ளவளாயிருக்கிறாள். தன்னுடைய எஜமாட்டி ஒரு நாடகக்கணிகை என்று அவள் சொன்னாள்-"

மதிமான், "ஆம், அது வாஸ்தவந்தான்: அவள் தன்னுடைய எஜமாட்டியைப் பற்றி இன்னும் என்ன சொன்னாள்?"

காளியாயி, "அவள் எப்பொழுதும் தனியாய்த் தானிருக்கிறாளாம். நாடகத்தைச் சேர்ந்த சிலர்தான் அவள்வீட்டிற்கு வருவது வழக்கமாம். மேலும் அவள் அதிகாலையில் ஆறுமணிக்கு உலாத்தச் செல்கிறாளாம்—"

மதிமான், "நல்ல காரியமாயிற்று. நாளைக்கு அவள் போகுமிடத்திற்கு நானும் போகிறேன். மாறுவேஷம் போடுவதற்கு உடைகள் தயாராயிருக்கின்றனவா?"

"அதோ இருக்கிறது" என்று சொல்லி, காளியாயி ஒரு சிறு முட்டையைக் காட்டினாள்.

மதிமான், "நான் இராத்திரிக்கு சமீபத்திலிருக்கும் ஹோட்டலில் தங்கியிருந்து, காலையில் எழுந்துவந்து மாறுவேஷம் போட்டுக் கொள்ளுகிறேன்."

(தொடரும்.)

வ. வி. நடேசன்செட்டி,
ஆத்தங்குடி.

ஸ்ரீ:

புதுக்கோட்டை ராஜ்யம்.

(392-ஆம் பக்கத்தொடர்ச்சி)

1894-ஞு நவம்பர் மாதத்தில் நமது மஹாராஜா அவர்கள் ராஜ்ய மேற்பார்வையை ஒப்புக்கொண்டு ஆள ஆரம்பித்தார்கள். இற்றைக்கு இருபத்தொரு வருஷங்களாகப் புதுக்கோட்டை ராஜ்யம் நல்லமேம்பாட்டை அடைந்திருக்கிறது; அது பின்வரும்.

1899-வருஷத்தில் மஹாராஜா அவர்கள், ராஜ்ய நிர்வாஹத்துக்கு உதவியாக, ஒரு மந்திரியும் ஆலோசனைக் காரருமாகக் கூடியுள்ள ஒரு ஆலோசனை ஸபையை ஏற்படுத்திக் கொண்டார்கள். இந்தஸபை பத்துவருஷகாலங்கள் நடந்தேறிவந்தது. 1909-ம் வருஷத்தில் இந்த ஸபையானது அக்கால மாறுபாட்டுக்குத் தகுந்தபடி சில மாறுபாடுகளையும் அடைந்தது. தர்பாரானது, மாகாணத்துக் கென்று நியமிக்கப்பட்டுள்ள சிவிலியன் ஸூப்பரின்டென்டென்ட் அவர்களும், மந்திரியும் நியாயாதிபதித் தலைவருமாகிய இவர்களுடன் கூடியே ராஜ்ய நிர்வாஹத்தைச் செய்துவர ஆரம்பித்தது. இன்னும் அந்த முறையே நடந்துவருகின்றது. இம்முறையான ஆளுகையில் ராஜ்யமானது பல சீர் திருத்தங்களைப் பலவகையாலும் பெற்றிருக்கின்றது.

வரவுசெலவு இலாகா:–1886-ம் வருஷத்தில் ராஜ்யத்தின் மொத்தவரும்படியானது ரூ8,95,142 ஆக இருந்தது. 1911-1912-ல் வரிவசூல் மாத்திரம் ரூ17,05,287 ஆகப் பெருகிவந்தது. இந்தக் காலத்திற் பல சமயங்களில் அவசியமாகச் செய்யவேண்டிய பலவகையான நன்மைகளின் பொருட்டுச் செலவு செய்ததுபோக வரிவசூலானது முன்னதற்கும் இரண்டுமடங்காக ஏறியிருக்கிறது. 1892-ம் வருஷத்தில் ஒருவேலிக்கு வருஷவாரி ரூ60-க்கு மேல் மன்னிக்கப்பட்டுவந்தது. 1908-ம் வருஷத்திலிருந்து வரியின் சில வகைகளில் சுமார் ரூ30,000 வரையில் மன்னிப்புச் செய்யப்பட்

டது. 1912-ம் வருஷத்தில் மஹாராஜா அவர்கள், மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியவர்கட்கு டில்லியில் நடந்தேறிய மகுடாபிஷேகத்தின் ஞாபகார்த்தமாகத் தமது ராஜ்யத்திலுள்ள நெசவு வேலைக்காரர்கட்கு ஏற்பட்டிருந்த வரிகளை நிரந்தரமாகத் தள்ளிவிட்டார்கள். ஆக இக்காலத்து அளவில் வரிகளின் மன்னிப்பாக ரூ50,000 வரையிற் சென்றிருக்கிறதென்றே சொல்லலாம்.

மொத்த வரும்படிப் பெருக்கமாகிய ரூபாய் எட்டரைலக்ஷத்தில் நிலவரி மூன்றரைலக்ஷமும், மற்றக்கடமையில் மூன்றரைலக்ஷமும், காட்டிலாகாவில் அரைலக்ஷமும், பத்திரப்பதிவு, சுங்கம், வாரச் சந்திகளின் வரி ஆகிய இவற்றில் அரைலக்ஷமும் கூடியிருக்கின்றன. நிலவரியின் வரும்படியில் ஒன்றரைலக்ஷ ரூபாய்கள், விடுநிலவரியிலிருந்தும், இனும் நிலங்களின்மேல் ஏற்படுத்தியுள்ள சிறுவரியிலிருந்தும், புதிதாகச் சேர்க்கப்பெற்ற நிலங்களின் வரியிலிருந்தும் வசூலிக்கப்பெறுகின்றன. பாக்கியான வரிவசூல்களெல்லாம் ஆங்கில அரசாங்கத்தின் முறையைப்பற்றியேதான் வசூலிக்கப்பெறுகின்றன. இந்தவரிகளும் ஜனங்களின் அமைதியான சௌகரியத்திலிருந்தேதான் வசூலிக்கப் பெறுகின்றன.

1886-ம் வருஷத்து முடிவிற் கணக்கு முடித்துப் பார்க்கும்போது, கவர்ன்மெண்ட் ஸெக்யூரடியாக ரூபாய் 5,00,000 மும், ரொக்கஇருப்பாக ரூபாய் 3,00,000 முந்தாமிருந்தன. இதன்பெருந்தொகையும் மற்றும் இருந்த சேமதனத்தின் பெருந் தொகையும், மாகாணத்திற் கட்டப்பட்டிருக்கிற உயர்ந்த கட்டிடங்கட்குச் செலவிட்டதுபோக, 1894-ம் வருஷத்தில் ஸர் சேஷையா சாஸ்திரியாரவர்கள் விலகிக் கொள்வதற்குச் சில மாதங்கட்கு முன்பாகக்கஜானாவிற் பாக்கியிருந்தது ரூபாய் 3,00,00 தான். சாஸ்திரிகள் விலகிக்கொண்ட பின் நான்கு வருஷங்களாகச் செலவை ஒருவகைப்படுத்த முயன்று வந்தவகையில், 1899-ம் வருஷம் மஹாராஜா அவர்களால் ஏற்படுத்தப்பெற்ற புதிய ஆலோசனை ஸபையால் ஒருவாறான திட்டத்துக்குவந்து சேர்ந்தது. பிறகு பத்துவருஷங்களாக அந்த

ஆலோசனை சபையானது மிகக் கவனத்துடன் வேலைசெய்துவந்து, வேந்தருக்கும் மாந்தருக்கும் ஒத்த நன்மையைத் தேடிவந்தது. பிறகு நான்கு வருஷங்கட்குள் நிலவரியில் அதிக வரும்படி கிடைக்கத் தகுந்த ஏற்பாடுகள் தோன்றின. அதனால் 1912-ம் வருஷம் ஜூலை மாதத்து முடிவில் 23,50,000 ரூபாய் ரொக்க இருப்பாகக் காணப்பட்டது. செலவும் அதிகரித்துத்தான் செய்யப் பெற்றது. ஸ்டேட் உத்தியோகஸ்தர்கட்கு ஆங்கில ராஜாங்கத்துக்கு ஒத்தபடியான சம்பளமே பெரும்பாலும் ஏற்பட்டுவிட்டது.

தொழில் இலாகா:—இத்தனிலைமையில் மாகாணத்தில் தொழிலிலும் வியாபாரத்திலும் அபிவிருத்தியைக் காட்டவேண்டுமென்ற ஒரு நோக்கம்பிறந்தது; ஆனால் அதற்குக்கஷ்டங்கள் அநேகம் இருந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவின் மற்றமாகாணங்களைக்காட்டிலும் இந்தச் சென்னை மாகாணத்தில் தொழிலபிவிருத்தியைக்காட்டத்தக்க ஸாதனங்கள் அதிகப்படவில்லையென்று மிஸ்டர் ஆல்ப்ரட் சாட்டர்டன் உத்தேசித்தபடியே இந்த ஸம்ஸ்தானத்திலும் தற்கால முறைப்படி தொழிலைப்பெருக்கிக் கொண்டுவருவதற்கான ஸாதனங்கள் குறைவாகவே இருக்கின்றன. மாகாணத்திற் பெரும்பாலும் விவசாயமே நிறைந்திருக்கின்றது. ஸமஸ்தானத்திலிருந்து சிறுபான்மையான பொருள்களே ஏற்றுமதிக்குத் தக்கவைகளாக இருக்கின்றன. ஸமஸ்தானத்தின் பலஇடங்களிலும் காந்தத்தின் தன்மையுள்ள தாதுப்பொருள்கள் அதிகமிருப்பதாகக் காணப்படுகின்றன; என்றாலும், அவைகள் ஒரு இருப்புப்பாதையின் ஸாதனம் ஏற்படும் வரையில் உழைப்புக்குத்தகுந்த பலன் கொடுப்பவைகளாகக்கருதப்படவில்லை. ஸமஸ்தானத்தின் ஒரு சிற்றூராகிய திருவப்பூரிற் செழித்திருந்த கைத்தறித்தொழிலானது, தற்காலம் ஆங்கில தேசத்தின் யந்திரத் தறித்தொழிலுக்கு முன் நிற்கமாட்டாமல் அடங்கி யிருக்கிறது. ஆயினும் அந்தத்தொழில் வினைவினாலும் பலவகையான ஜனங்கள் நன்மை அடைந்து வருகிறார்கள். தர்பார் அவர்கள் இந்தத்தொழிலைப் பெருக்கி ஜனங்கட்கு மிகுதியும் நன்மை செய்துவரப் பிரயத்தனம்செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஒரு நெசவுக்கல்விச்சாலை ஏற்படுத்தப்பெற்றுச் சிலவருஷங்கள் நன்ருக நடத்தப்பட்டு வந்து, சில கைக்கோளர் வகுப்புப்பிள்ளைகளும் உபகாரச்சம்பளத்துடன் தற்காலமுறைப்படியான நெசவுத்தொழிலைக்கற்றிருக்கிறார்கள். மஹாராஜா அவர்களுடைய பெயரால் ஸ்ரீ மார்த்தாண்ட தொழிற்கல்விச்சாலை என்று பெயரிடப்பட்ட ஒரு சாலையும் பல வருடங்களாக நிலைத்து மாணவர்க்குப்போதித்து வந்தது. இது மராமத்து இலாகா தொழிற்சாலையுடன் சம்பந்தப்பட்டிருந்து, தச்சுத்தொழில் தையற்றொழில் சித்திரத்தொழில் கருமான்றொழில் இவற்றைக் கற்பித்திருக்கிறது. இந்த நகரத்திற் காண்பிக்கப்பெறும் வருஷாந்தப் பொருட்காட்சிக்காலத்தில் நெசவுத் தொழிலிற் கைத்தறியையுபயோகப்படுத்தும்முறையும் பாவோட்டும் முறையும் அநுபவசித்தமாக மாணவர்க்குச் செய்து காண்பிக்கப்பெறுகின்றன. இந்தப்பொருட்காட்சியிற் பலவகையான காட்சிகள் காட்டப் பெறுகின்றன:——

விவசாயம், கைத்தொழில், கல்விமுறை, சித்திரவித்தை முதலியனவும், வேறு பல ஸம்ஸ்தானங்களிலிருந்தும் இந்தியாவின் வேறு இடங்களிலிருந்தும் வரும் வேறு பல காட்சிப்பொருள்களும் வைக்கப்படுகின்றன. இந்தப் பொருட்காட்சிச் சபையும், விவசாயச்சங்கமும், பிராணிவர்க்கக்காட்சியும், வருஷாந்தரம் நடக்கும் ஆடுமாடுகளின் காட்சியும், இவைபோன்ற இன்னும் சிலசாலைகளும் மஹாராஜா அவர்களால் நன்ருசப் பராமரிக்கப்பெற்று வருகின்றன. இந்தப் பொருட்காட்சியைப்பற்றிச் சமீபத்தில் டைம்ஸ் ஆப் இந்தியா பேப்பரில் எழுதப்பட்டிருந்ததின் சுருக்கத்தை இங்குச்சொல்லாமலிருக்கமுடியவில்லை. "சென்னை ராஜதானியின் புதுக்கோட்டை ஸமஸ்தானத்திற் சமீப காலத்தில் நடந்தேறிய பொருட்காட்சியானது மற்ற ஸமஸ்தானக்காட்சிகளினும் சிறப்புற்று விளங்கியிருந்தது. கைத்தொழில் விவசாயம் இவற்றின்காட்சிகள் மிகவும் வியத்தக்கனவாயிருந்தன. ஏற்கனவே இந்தமாகாணத்திற் குழந்தைகட்குப் படிப்புவகை அதிகரித்திருந்தது. இப்போது ஸமஸ்தானம், கல்விச்சங்கத்தாருடைய தருந்தநவனத்தினுல் மாணவர்கள் தம்

தொகையிலும் தொழிலிலும் அதிகப்பெருக்கத்தைக் காட்டியிருக்கின்றது. நிலவரியும் வரிவசூல்களும் சமீபத்தில் அதிகப்பட்டு ஸமஸ்தானத்துக்குச் செல்வப்பெருக்கைத் தந்துகொண்டிருக்கின்றன. ஒரு உயர்தரக் காலேஜும், ஒரு பெண்மக்கள் பள்ளிக்கூடமும், ஒரு கைத்தொழிற்சாலையும் ராஜதானி நகரத்தில் உண்டாக்கப் பட்டிருக்கின்றன."

இருப்புப்பாதை:—இந்த முறைகளெல்லாம் அவ்வம்முறையிலாகவேண்டிய கல்விப் பெருக்கத்தைக் காட்டியுள்ளனவேனும், அவைகள் பலனளிக்கப் போதுமான சௌகரியங்கள் இன்னும் அநுபவமுறையில் ஏற்படுத்தப்படாத ஒரு குறையிருக்கிறது. இவைகளிலிருந்துண்டாகும் பயனைச் சீக்கிரம் சேருவோமானால், இந்த ஸமஸ்தானத்துக்குள் ஒரு இருப்புப் பாதையின் போக்கு வரவு அவசியம் ஏற்பாடாக வேண்டியிருக்கிறது. இது ஏற்படானால், இந்தமுறைகள் இன்னும் பெருகிவரும் என்பதற்கு யாதும் சந்தேகம் இராது. தர்பார் அவர்கள் தமது ஆதீன காலமாகிய இந்த இருபத்துமூன்று வருஷங்களாக இந்தஸமஸ்தானத்தில் ஒரு இருப்புப்பாதைச் சௌகரியத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு ஆங்கில அரசாங்கத்தாரிடம் கேட்டுக்கொண்டுவருகிறார்கள். இந்தக் கேள்வி ஏகாதிபத்தியத்தின் எல்லாஇந்தியப் போக்குவரவு ஸாதன சங்கத்தாரிடம் கலந்தே ஆலோசிக்க வேண்டியிருத்தலால் தாமதமாகிக் கொண்டுவருகிறது. கூடியசீக்கிரத்தில் இந்தக்குறையும் நிவிருத்தியாகிவிடும் என்று கருதப்படுகின்றது.

இந்த ஸமஸ்தானத்துப்பூமிகளெல்லாம் பெரும்பாலும் வானத்தை எதிர்பார்த்துள்ளனவாக இருத்தலால், சிலசமயங்களில் மழைக் குறைவால் உண்டானபஞ்சத்தை யநுசரித்து, ஒரு பஞ்ச நிவாரண பண்டும் இந்தச்ஸமஸ்தானத்தில் ஏற்படுத்தப்பட்டு அதற்கு மூலதனமும் சேகரிக்கப்பட்டிருக்கிறது. நீர்ப்பாய்ச்சலின் விஷயமாக நல்லஏற்பாடும் வெகு சீக்கிரத்தில் உண்டாகலாகும்.

பத்திராதிபர்.

கீழச்செவல்பட்டிக் கொலைக்கேஸ் தீர்ப்புகள்.

கொஞ்சகாலத்துக்குமுன் இராமநாதபுரம் ஜில்லாவைச்சேர்ந்த கீழச்செவல்பட்டியில் நடந்த கொலைக்கேஸின் விவரம் யாவரும் நன் கறிந்ததே. அந்தக் கேஸின் சம்பந்தமா யேற்பட்ட மதுரை செஷன் கோர்ட்டுத் தீர்ப்பும், சென்னை ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பும் கீழேகாட் டப்பட்டுள்ளன.

15-8-17-ல் மதுரை ஸெஷன்கோர்ட்டுத் தீர்ப்பு.

		வருஷம், தண்டனை.	ஷரா
1.	ராம சிவலிங்கம்	தூக்கு.	
2.	ஆ. கருணைக்கிளங்கு	24.	
3.	அ. சின்னவீரன்	5.	
4.	செ. காண்டாமிருகம்	7.	
5.	ஒ. கல்யாணி		விடுதலை.
6.	க. எச்சிக்கலைக் கல்யாணி	24.	
7.	க. கூனன் பழநி	7.	
8.	ந. பெரியாம்பிளை		விடுதலை.
9.	கா. நல்லகுட்டி		விடுதலை.
10.	சி. கருவாவிராமன்		விடுதலை.
11.	பெரி. தெக்குத்திராமன்		விடுதலை.
12.	ஒ. க. பழநி		விடுதலை.
13.	அள. வீரன்		விடுதலை.
14.	ராம. முத்துப்பாலன்		விடுதலை.
15.	பழ. சின்னகொண்டான் அண்ணாமலை		விடுதலை.
16.	சொ. சாமிநாதன்		விடுதலை.
17.	ராம. பெரியசாமி	தூக்கு.	

16-10-17ல் மதறாஸ் ஹைக்கோர்ட்டு அப்பீல்தீர்ப்பு:—

1.	க. கூனன்பழநி	7 வருடம்.
2.	செ. காண்டாமிருகம்	7 வருடம்.
3.	அ. சின்னவீரன்	2 வருடம்.
4.	ஆ. கருணைக்கிளங்கு	தீபாந்தரம்.
5.	க. எச்சிக்கலைக்கல்யாணி	தீபாந்தரம்.
6.	ராம. பெரியசாமி	தூக்கு.
7.	ராம. சிவலிங்கம்	தூக்கு.

மதுரையில் தூக்கு நாள் 20-11-17.

பிங்கள ௵ கார்த்திகை ௴ ௫௳.

கண்ணாடி செய்யும் முறை.

கண்ணாடி அல்லது பளிங்கு, சீனிகா ஆல்காலி என்னும் இரண்டுவஸ்துக்களும் அநேகமாக உஷ்ணத்தாற் கலந்து உண்டாகும் ஒருபொருள். கண்ணாடியின் முக்கியமான அம்சம் என்னவெனில்:. அது உருகியிருக்கும்போது வஜ்ரம்போல ஒட்டிக்கொள்ளும் ஒரு விதபுதுமையான குணத்தை யடைகிறது. அக்குணத்தினல் அது ஓர் குழையின் முனையைச்சுற்றித் திரண்டு ஒட்டிக்கொள்ளுகின்றது. குழையின் மற்றொருபக்கமாக ஊதினுல் உட்பக்கமாக விசாலித்ததுபோலாகிறது. அப்போது எந்தவுருவமாகவாவது அளவாகவாவது செய்துகொள்ளலாம். குளிர்ந்தபோது கடினமாய்விடுகிறது. உடைந்துபோகும் குணத்தையும் அடைகிறது. உஷ்ணமாயிருக்கும்போது எந்தப் பிரகாசமான அல்லது மழமழப்பான தோற்றத்தை அதில் உண்டாக்குகிறோமோ அத்தோற்றத்தை அது எப்போதும் உடைத்தாயிருக்கிறது. கண்ணாடிக்கு எந்த நிறத்தையாவது உண்டாக்கலாம். உருவங்களைப் பிரதிபலிக்கும்படியும் செய்யலாகும்; சிதோஷ்ணஸ்திதி அதிற் கேட்டை யுண்டுபண்ணுவதில்லை, காலக்கிரமத்தாலும் அவை அழிவதில்லை.

செய்யப்படும் கண்ணாடி தவிர ஒருவிதமான சுதேசக் கண்ணாடி, அக்கினி பர்வதங்களின்சமீபத்திற் சில வேளைகளிற் கண்டுபிடிக்கப்படுகின்றது. அக்கினி பர்வதத்தின் எரிபொருள்கள் குளிர்ந்தபோது கண்ணாடியாகிறதென்று சொல்லுகிறார்கள். இந்தக் கண்ணாடியை ரஸாயன பரிசோதனைசெய்ததில் அலுமினியம் இரும்பு பொடாஷ் அல்லது சோடா முதலியவற்றின் எரிந்த கிட்டமெனக் கண்டுபிடித்தார்கள். இது, முதன்முதல் எத்யோபியாதேசத்தில் ஆப்ஸிடியாஸ் என்பவராற் கண்டுபிடிக்கப்பெற்றது என்று யாத்திரைக்காரரும் பேர்போன பூர்விகசரித்திரக்காரருமான ப்ளினி என்பவர் சொல்லுகிறார்.

பூர்விக சரித்திரக்காரர்கள் இந்தியாவிற் டளிக்குச்சாமான்கள் ஏராளமாக இருந்ததாகச் சொல்லுகிறார்கள். எகிப்தில் கண்ணாடித் தொழில் ஆச்சரியமான விருத்தியை அடைந்திருந்து, அக்காலத்தில் கண்ணாடியால் அநேக உருக்கள் உண்டாக்கியிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. அவைகள் பூமியிற் புதைக்கப் பெற்றிருந்து இப்போது வெளியில் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற் சில அதில் தொழிற்றிறமையையும், பூரணத்தையும் காட்டி நிற்கின்றன. அவ்வேலைப்பாடுகளிற் சில இக்காலத்திலும் கூட மீறப்படாமல் இருக்கின்றன. தொழில்.

வைத்தியக்குறிப்புகள்.

மலபந்தத்திற்குப் பழச்சாறு.

மலபந்தத்தினால் சிசுக்களுக்கு அநேகவிதமான வியாதிகள் வருவது ஸஹஜம். வாந்தியாவது, வயிற்றுப் பொருமல், பசியின்மை, மந்தக்கட்டி, இசிவு முதலியவைகளாவது உண்டாவதற்குப் பெரும்பாலும் மலபந்தமே காரணமாகின்றது. இதைப் போக்குவதற்குத் தீக்ஷண வீர்யமுள்ள பேதி மருந்துகளைச் சிறு குழந்தைகட்குக் கொடுப்பது விவேகக் குறைவென்றே சொல்லவேண்டும். ஒருமாதம் முதல் 3-வது மாதம் வரையில் தினந்தோறும் கமலாக்கிச்சிலியின் சாற்றை இரண்டொரு தேக்கரண்டி யளவு குழந்தைக்குக் கொடுத்தால் மலபந்தம் உண்டாவதில்லை. பசியும் நன்றாய் உண்டாகி உணவும் ஜீர்ணமாகும். இரண்டாவது அல்லது மூன்றாவது மாதம் முதற்கொண்டு அத்திப் பழச்சாறு, அல்லது கமலாக்கிச்சிலியின் சாறு 2-முதல் 4 தேக்கரண்டி அளவு விதம் கொடுத்து வரலாம். அத்திப் பழச்சாறு குழந்தைகட்கு மிக்க உபயோககரமான நிர்பய ஔஷதமாகும். Family Doctor.

பற்களைச் சுத்தம்செய்ய அடுப்புக்கரி.

கொஞ்சம் சுத்தமான அடுப்புக்கரியை நன்றாகப் பொடிசெய்து அதைக்கொண்டு பல்துலக்கினாற் பற்கள் வெண்மையாகக் காணப்படுவதுடன், அவற்றின் துர்நாற்றமும் விலகும்.

வைத்தியகலாநிதி.

செந்தமிழ்ச்சிறப்பு.

இது, மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் உதவிக் காரியதரிசியும், ஆங்கிலம், தமிழ் என்னும் உபயபாஷா பண்டிதரும் ஆகிய N. V. சுந்தரராஜஐயரவர்கள் B. A., L. T. இயற்றியச்சிட்டுள்ள ஒரு அருமையான நூல். இந்நூல் 117 நேரிசை வெண்பாக்களாலாகியது. செய்யுள்களெல்லாம் இனிய ஓசையும், பொருளாழமும் உடையவையாயிருக்கின்றன. ஆசிரியர் முதலில் விநாயகர், திருமால், சிவபெருமான், முருகக்கடவுள், அங்கயற்கண்ணம்மை, கலைமகள், தமிழ்த்தெய்வம் என்னும் எழுவரையுந் துதித்துக்கொண்டு நூலைத்தொடங்கி, ஆங்கிலம் கற்றோர் தமிழை அநாதரவுசெய்யலாகாதென வற்புறுத்தியதன் பின்னர்ச் செந்தமிழின்சிறப்பையும், அதனையாதரித்துவரும் சேதுமன்னர் முதலியவர்களின் சிறப்பையும், வித்துவான்களின் சிறப்பையும் கூறியிருக்கின்றார். ஒவ்வொரு மனிதனுக்கும் தேசாபிமானமும், பாஷாபிமானமும் வேண்டுமென்பது இவ்வாசிரியரின் கொள்கையாகும்.

இந்நூல் செந்தமிழ் 15-ந் தொகுதி 1, 2-பகுதிகளில் முன்னே பிரசுரிக்கப்பெற்றிருப்பினும், நண்பர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி ஐயரவர்கள் இதனைத் தனிப் புத்தகரூபமாகவும் இப்பொழுது அச்சிடுகின்றார்கள். ஆதலால், கூடிய சீக்கிரத்தில் தக்க வித்துவான்களின் மதிப்புரைகளுடனும், சாத்துகவிகளுடனும் வெளிவரும்.

அ. கோபாலையன்.

மேன்மை.

சாதிக் கிழிதொழிலைச் செய்யாமை தான்மேன்மை
ஞாதிக்கு மேன்மை நடுநிலைமை—ஓதின்
மடவார்க் கடக்கம் மகாமேன்மை மாந்தர்க்
கடாமை விடல்மேன்மை யாம். (1)

ஆமேதான் மேன்மை அறிவாளர் சொற்கேட்டல்
நாமேதான் வேந்தன் நமக்கென்னப்—பூமேலே
சொலலாமை மேன்மை துயர்பிறருக் காக்காமை
எல்லா விதத்தும் மேன்மை யென். (2)

எண்ணிப் பிறர்கடக்க யாம்நடத்த லேமேன்மை
கண்ணிற்கு மேன்மை கருணையே—மண்ணிடையே
வெஃகாமை மேன்மை விரும்பும் படியெல்லாம்
அஃகாமை மேன்மை பரம். (3)

அறமார் நினைவே அனைவோர்க்கும் மேன்மை
திறமார் மதியுடையோர் சேர்க்கை—புறகாடித்
தேர்ந்துகொளல் மேன்மை தெரிந்து மின்சொல்லே
ஓர்ந்துரைத்தல் மேன்மை யுணர். (4)

ஸ்ரீ. தி. ஸ்ரீநிவாசமுதலியார்,

20—11—17. ஆனைமலை

சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்.

கோநகர்.

"ஞானசம்பந்தநற்சபை"

இதன் மாதாந்தரக்கூட்டம் பிங்களஞு ஐப்பசிமீ ௩௨ (19—10—17) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4½ மணிக்குக் கூடிற்று. சபையோர்வேண்டு கோட்கிணங்கி க. வி. கலாசாலைத் தலைமையாசிரியர் பிரம்மஸ்ரீ அ. கோபாலையரவர்கள் தலைமைவகித்தார்கள். கலாசாலைமாணவர்களாற் கடவுள் வாழ்த்துக் கூறப்பெற்றது.

பின்பு க. வி. கலாசாலை உதவியுபாத்தியாயர் ஸ்ரீ G. இராமஸ்வாமி ஐயங்காரவர்களாலும், ஷை கலாசாலை மாணவர் திருநீலகண்டம் என்பவராலும், ஷை கலாசாலை மாணவன் திருஞானசம்பந்தனென்பவனாலும், ஷை கலாசாலை உதவித்தமிழாசிரியர் ஸ்ரீ S ஆழ்வாரையங்காரவர்களாலும் முறையே 'கல்வி' 'ஆறுவதுசினம்' 'இளையான்குடி மாறநாயனர் சரித்திரம்' 'தமிழ்க்கவிகளின் நயங்கள்' என்னு மிவைகள் உபந்யஸிக்கப் பெற்றன.

பின்பு, தலைவரவர்கள் ஒவ்வொரு விஷயத்திற்கும் விரிந்த அபிப்பிராயங் கூறி யாவரையும் மகிழ்வித்தார்கள். கலாசாலைமாணவன் சு. மு. பழநியப்பனால் யாவருக்கும் புஷ்பசந்தனுதிகள் வழங்கப்பெற்று இரவு 8 மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

ஞானசம்பந்தன்.

மேலைச்சிவபுரி.

சன்மார்க்க சபை.

இவ்வூரின்கண்ணுள்ள சன்மார்க்க சபையின் ஐப்பசிமாதக் கூட்டம் இருமொழிப் புலமையு மொருங்கமையப் பெற்ற வித்வான் ஸ்ரீமான் கதிரேசச் செட்டியாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் 26-10-13-ல் நடைபெறு மென்று பிரகடனஞ் செய்திருந்தார்கள். ஸ்ரீ ௵ ஸ்ரீ கதிரேசச்செட்டியாரவர்கள் சில அசௌகரியங்களால் வரக்கூடாமையைத் தெரிவித்தபடியால், சன்மார்க்க சபையி னோரங்கமாகிய கணேசர்செந்தமிழ்க்கலாசாலைத் தலைமைப் போதகாசிரியர் ஸ்ரீமத் கந்தசாமியாரவர்கள் அக்கிராசனம் வகிக்க, 3 மணிக்குச் சபை கூடிற்று. ஷை சபைக் காரியதரிசிகளிலொருவராகிய ஸ்ரீமாந் குமரப்ப செட்டியாரவர்கள், பாரதம் அருச்சுனன் தவநிலைச்சருக்கத்திற் சிற்சில செய்யுள்களிலமைந்துகிடந்த சித்தாந்தசாத்திர நுண்பொருணலங்களை யாவரும் வியக்கும் வண்ணங் கூறி முடித்தார்கள். பின்னர்ச் சன்மார்க்கசபைக் கணே

சர் செந்தமிழ்க் கலாசாலையிற் பண்டித பரீட்சைக்குக் கல்வி பயிலும், மாணவர் அரங்கராமானுஜ தாஸரவர்கள் 'தருமம்' என்னும் விஷயத்தைப் பல பாகுபாடு செய்துகொண்டு மிக அழகாகப் பேசி முடித்தார்கள். பின்னர்ச் சன்மார்க்க சபையி னங்கமாகிய கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் எப்பொழுதும் ஒரு மாணவர் உண்டியுறையுள் முதலியன பெற்றுக் கல்வி பயிலவேண்டுமென்று மகிபாலன்பட்டி எ. மு. ப. நடராஜச்செட்டியாரவர்கள் ஆயிரந்திருநூறு ரூபா நன்கொடையாக அளித்த பெருநன்றியை ஷெ சபைக்காரியதரிசி குமரப்பசெட்டியாரவர்கள் வியந்து பேசியதோடு எம் நாட்டில் வதிதரும் தன வைசிய மக்கள் இப்பெருந்தகையாளரைப் போல ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாணவர்கட்கு உண்டியுடை முதலியவற்றிற்குப் பொருளுதவி செய்வாராயின் நந்தமிழ்மொழி பண்டைக் காலத்தைப்போலச் சீரும் சிறப்புமெய்தித் திகழ் தருமென்று பேசி முடித்தார்கள்.

பின்னர்ச் சன்மார்க்கசபை நிரந்தர அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமாந் அண்ணாமலைசெட்டியாரவர்கள், 'சன்மார்க்கசபை அபிவிருத்தி கருதி நன் கொடையாகப் பெருந்தொகை கொடுத்துதவிய ஸ்ரீமான் நடராஜச்செட்டியா ரவர்கட்கு யானும் சன்மார்க்க சபையாரும் நன்றிபாராட்டுவதோடு, இவர்கள் இன்னும் இத்தகைய தருமங்களை நம்நாட்டிற் செய்துவர எல்லாம் வல்ல பரமே சுரனை வந்தித்துச் சிந்தித்து வணங்குகின்றேன்' எனக்கூறி முடித்தார்கள். பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள்எழுந்து ஒவ்வொரு பிரசங்கங்களுக்கும் முடிவுரை கூறிச் சன்மார்க்கசபைக் கல்லூரியிற் கல்விபயிலும் மாணவர் செலவிற்கு மூலதனமாகப் பெருந்தொகையை நன்கொடையாக உதவிய ஸ்ரீமாந் நடராஜ செட்டியாரவர்கள் வள்ளற்றன்மையைப் புகழ்ந்து பேசியதோடு, இக்காலத்திற் கேற்றதருமம் கல்வி யபிவிருத்திசெய்தலேயாமென்றும், இங்ஙனமே ஒவ்வொரு தனவைசியமக்களுந் தம்மாலியன்ற பொருளுதவி செய்யின், 'பலதுளி பெருவெள்ள' மென்னும் பழமொழிபோலப் பலமாணவர்கள் உயர்தரக் கல்வி கற்றற் கேதுவாகுமென்றும், இதனால் நந்தேயம் ஐரோப்பா முதலிய தேயங் களைப் போலக் கல்வி வளம்பெற்று முன்னேற்ற மடையுமென்றுங் கூறி முடித்தார்கள். பின்னர்க் கடவுள்வாழ்த்துக் கூற மாலை ஆறுமணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

காரியதரிசி.

சன்மார்க்கசபை,

மேலைச்சிவபுரி.

இந்திரகுலாதிபர்சங்கத்தின் 5-வது வருஷ மகோத்ஸவம்.

(4—11—17)

இவ்வருட மகோத்ஸவம் தஞ்சைஜில்லா அம்மாபேட்டை பங்களாத் தோட்டத்தில், பூண்டி ஸ்ரீமான் ராவ்பகதூர் வி. அப்பாசாமி வாண்டையார் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் அவர்களது முதற் குமாரர் ஸ்ரீமான் வீ. அ. வீரையா வாண்டையார் அவர்களது நன்முயற்சியால் மிக்க விமரிசையாக நடைபெற்றது. இந்திர குலத்தவராய புதுக்கோட்டை பிரின்ஸ் ஸ்ரீமான் கிருஷ்ணசாமிதுரைராஜா அவர்களும், பாப்பாநாடு ஜமீன்தார்-கண்டர்கோட்டை ஜமீன்தார்-நெடுவாசல் ஜமீன்தார் முதலிய ஜமீன்தார்களும், உக்கடை ராவ்பகதூர் ஸ்ரீமான் அண்ணுசாமித்தேவர் அவர்கள்- அரித்துவாரமங்கலம் ஸ்ரீமான் வா. கோபாலஸ்வாமி ரகுநாத ராஜாளியார் அவர்கள் முதலிய மிராசுதார்களும், இன்னும் பல ஜில்லாக்களிலுள்ள இந்திரகுலத்துப் பிரமுகர்களும், மற்றும் சபை அபிமானிகளும், ஜனாநுகூலன், நிலலோசனி, கமலாசனி இம்மூன்று பத்திராதிபர்களும், மெயில் ரிப்போர்ட்டரும், ஹிந்து, டைம்ஸ், நியூஇந்தியா, செந்தமிழ்ச்செல்வி, வித்யாபாநு முதலியபேபர்களின் காரஸ்பாண்டெண்டுகளும், ஆக 10000-த்திற்கு மேற்பட்ட ஜனங்கள் வந்து நிறைந்திருந்தனர். திருவாரூர் ஸ்ரீமத் சுப்பையா தேசிகர் அவர்களால் தமிழ்வேத பாராயணமும் ராஜவாழ்த்தும் இசைக்கருவியுடன் ஓதப்பெற்றன. வந்தனோபசாரப்பத்திரமும், அறிக்கைப்பத்திரமும் "இந்திரகுலத்தவரும் அக்குலத்தவர் கடமையும்" என்ற வியாஸமும் இந்திரகுலாதிபர் சங்கத்தலைவரும், தாபகருமான ஸ்ரீமான் வா. கோபாலஸ்வாமி ரகுநாதராஜாளியார் அவர்களால வாசிக்கப்பெற்றன.

அவற்றின்சாராம்சம்வருமாறு:-இந்திரகுலமெனின்:-இந்திரன்வழிவந்தகுலம் இந்திரனைவழிபடுங்குலம், இந்திரனது நிறமுடைக்குலம், இந்திரனது (ஆகண்டலன்)தொழிலுடைக்குலம் க்ஷத்திரிய குலம், தலைமைக்குலம் என அறுவகையாகப் பொருள்படும். இவ்வாறும் சோழருக்கும் அவன் வழியினராகிய கள்வருக்கும் பொருந்தும். இந்திரகுலமென்பதும் கள்வர்மரபென்பதும் ஒருபொருள்குறித்த இருதொடர்மொழிகள். அவற்றுள், ஒன்று ஆரியம்; மற்றொன்று தமிழ். இந்திரனது வழித்தோன்றல் சோழனென்பது புராணேதிகாசங்களிற் பிரசித்தம். கலிகாலப் பெருவளவன் என்னும் சோழன் இந்திரனது அவதாரம்

என்று பிரம்மாண்ட புராணத்துள்ள தென்காஞ்சிப்புராணம் 2-வது காண்டம் நகரேற்றுப் படலத்திற் கூறப்பட்டிருக்கின்றது. அசனுலேயே ஒட்டக்கூத்தரியற்றிய குலோத்துங்கசோழன்பிள்ளைத்தமிழில் "புரந்தர குலதர" என அவனைவிளித்திருக்கிறது. அவன் இந்திரவழிபாடுசெய்தமை சிலப்பதிகார முதலிய நூல்களிற் காணலாம். மால் (கருமை) என்னும் பெயர் சோழனுக்கும் இந்திரனுக்கும் நிறம்பற்றிவந்தது.

ஆகண்டலன் (இந்திரன்) போலப் பகைவரைக் களைபவன், க்ஷத்திரியன் தலைவன், என்பன கலிங்கத்துப்பரணி, மூவருலா முதலியவற்றிற் படிக்கப்பட்டிருக்கின்றன. டாக்டர் பர்னல் பேலியாக் வாயிலும், மிஸ்டர் வெங்கசாமி ராவ் டிஸ்டிரிக்கட்டு மானியூவிலும் சோழனைக் கள்வரெனவே கூறுகின்றனர், சிலாசாசனங்களும் அதனை ஆதரிக்கின்றன. சோழன் வழியினர் காஞ்சியையாண்ட தொண்டைமானென்று மணிமேகலையாதி நூல்களும், அத்தொண்டைமான் வழியினர் புதுக்கோட்டை யாசரென்று இங்கிலிஷ் சரித்திரங்களும் கூறுகின்றன. அவர் கள்வரென்பது யாவருமறிந்த தொன்று. தாழ்ந்தவர்முதல் உயர்ந்தவர்வரையில் என்பதைக் குறிக்கும், தோட்டிமுதல் தொண்டமான் வரையில் என்ற தமிழ்நாட்டுப் பழமொழியும் இங்குக் குறிக்கத்தகுந்தது, "களவனென் கிளவி கரியோ னெனப" எனத் திவாகரரும், 'கள்வனென் கிளவி கரியனடுச் சொல்வோன்' எனப் பிங்கலரும் 'கள்ள விழைவுயப் புல்லப் பொருவக்,கள்ள மதிப்ப வெல்ல வீழ,வென்றுங் கெட்டே பயனிலேயுவமம், எனத் தொல்காப்பியனாரும் கூறலாலும், இத்தநூற்றுக்கள்வன்பதிற் களைதல்காரணமாகநாட்டுக்கள்வன்என்னும்பெயர்வழக்குண்மையாலும், கள்வன்என்னும்பதத்திற்குக் கருநிறமுடையோன்,நடுச்சொல்வோன்,கீழ்ப்படியச்செய்பவன், களைபவன் என்னும் அர்த்தங்கள் உள்ளன. "கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான், மழபுலம் வணக்கிய மாவண் புல்லி" யெனச் சங்கவிலக்கியமாகிய அகநானூறு முதலியவற்றிற் புகழ்ந்தோதப்பெற்ற புல்லி முதலாய நல்லரசர்பலர் இக்குலத்திற்றோன்றிப் பார்புரந்து பகைவரைக்களைந்தும், அரசுரிமையில்லார் நாட்டின்தலைமைவகித்து நடுச்சொல்லியும் வந்தகாரணத்தால், நாராயணப் பேரரசுமக்கள், உலகுடையார், களந்தவென்றார், நாட்டாண்மைக்காரர், அம்பலகாரர் முதலியபட்டங்கள் அவர்களுக்கு இன்றும் வழங்கிவருகின்றன. உயர்ந்தாரிழிந்தாராம் எச்சாதியரேனும் பிறரை வஞ்சித்துப் பொருள் கவர்வரேல், அவரையும் கள்வர் என்பது வழக்காகலான், திருட்டுத் தொழில் பற்றி வழங்கும் கள்வர் என்னும் அப்பெயர் சாதிப்பெயராகாது. கொல்லர் என்னுஞ் சொல் கொலைசெய்பவரெனப் பொருள்படுமாயினும் ஜாதியைக் குறிக்குமிடத்துக் கொற்றொழிலுடையார் எனவே பொருள்படுதலும், மறவர்

என்னுஞ் சொல் பாவிகள்எனப் பொருள்படுமேனும் ஜாதியைக் குறிக்குமிடத்து வீரரெனவே பொருள்பயத்தலும், யாதாமொன்றைப் பார்ப்போர் எனப் பொருள்படுமேனும் ஜாதியைக் குறிக்குமிடத்துப் பார்ப்பார் என்னும் சொல் வேதத்தைப் பார்ப்பார் என்று பொருள்பயத்தலும் காண்கின்றோம்; ஆதலால், கள்வர் என்னுஞ் சொல்லுக்கு ஜாதியைக் குறிக்குமிடத்துக் களைதற்றொழிலுடையார் எனப் பொருள் கோடலே பொருத்தமுடைத்தாம். அவர்கள் வேதப்பிரதிபாத்தியமான தெய்வங்களாய விஷ்ணுவைக் காத்தற்றொழிலுடைமையிற் காந்தா னென்றும், அவரது திருத்தேவியர்களாகிய இலக்குமியைப் பொன்னி யென்றும், பின்னைப் பிராட்டியைச் சின்னி யென்றும், சிவனைத் திரிபுர மெரித்தலால் தீந்தா னென்றும், பார்வதியைக் கருநிறமுடைமையின் அங்காளி யென்றும், அவ்வம்மையின் கணவராகிய நடராஜனைக் கூத்த னென்றும், தினைப்புனங்காத்த வள்ளியைக் காத்தாயி யென்றும், அவள் கணவனாகிய சுப்பிரமணியனைக் காத்தவன்ராய னென்றும், கிருஷ்ணனைக் கறுப்ப னென்றும், பலராமனை நிறம்பற்றி வெள்ளைய னென்றும் தமிழ்ச் சொற்களால் வழங்குகிறார்கள். அத்தெய்வங்கட்குச் சைவம், வாமமென்னு மிருவகை வைதிக வழிபாட்டிற் பாற்பொங்கல் முதலிய சைவ வழிபாடும், கண்ணப்ப னொப்பதோர் அடியாரை முன்னடியான் என்ற பெயரால் பிரதிட்டித்து அவர்களுக்கு உவப்பாகப் பலியாதி வாமபூஜையும் செய்துவருகிறார்கள். ஜனத்தொகையில் மிகுத்த இவர்கள் தமிழ்நாடெங்கும் பரந்து வாழ்ந்துவருகிறார்களெனினும், இவர்களில் நூற்றுக்கு எழுவரே தமிழ்படித்தவராகவும், ஆயிரத்துக்கு ஒருவரே ஆங்கிலங்கற்றவராகவும் ஜனகணிதத்திற் கணக்கிடப்பட்டிருக்கிறார்கள். இவர்களிற் பாலர் வகுப்பிற் படிக்கும்பிள்ளைகளும் படிக்கத் தெரிந்தவர்களாகக் கணக்கிடப்பெற்றிருக்கிறார்களெனில், இவர்கள் படிப்பில் எவ்வளவு பின்னடைந்தவர்களென்பதும், எவரும் முன்னேற்றமடைவதற்குக் கல்வியே காரணமென்பதும், மற்றவர்கள் முன்னிற்பதும் அதனாலென்பதும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றதல்லவா? ஆகையாற் கல்வி யபிவிருத்திக்காக இக்குலாதிபர் அறப்பள்ளி அறக்கூழ்ச்சாலையுடன் அமைக்கப்படவேண்டுமென்றும், அதற்காக மகா ஜனங்களிடத்தும், அரசாங்கத்தாரிடத்தும் பொருளுதவி பெறவேண்டுமென்றும், பின்னும் அவர்களது அபிவிருத்தியைக்குறித்த பலமார்க்கங்களையும் விரிவாயெடுத்துரைத்தனர். உடனே கலைதெரி கழகத்திற்காக ரூ 5000-த்துக்கும் வருடச்சந்தா ரூ 150-க்கும் கையொப்பம் வாங்கப்பெற்றது. கலைதெரிகழக நிர்வாகசபைக்குப் பதினறுவர் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். பிரின்ஸ் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி துரைராஜா அவர்களும், பூண்டி ஸ்ரீமான் ராவ்பகதூர் வீ. அப்பாசாமி

வாண்டையாரவர்களும், கண்டர்கோட்டை ஜமீன்தார் ஸ்ரீமான் ராஜகோபால பண்டாரத்தார் அவர்களும் ஷெ சங்கத்தின் கௌரவத் தலைவர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

இந்திரகுலாதிபர் குறைகளைப்பற்றிக் கனம் இந்தியாமந்திரியவர்களுக்கும், கனம் இராஜப் பிரதிநிதியவர்களுக்கும் எழுதியமனுவை விவரித்து யாவரும் அங்கீகரித்தவுடன், பிரின்ஸ் ஸ்ரீமான் கிருஷ்ணசாமிதுரைராஜா அவர்கள், பாப்பாநாடு ஜமீன்தார் ஸ்ரீமான் ராய்பகதூர் சுவாமிநாதவிஜயத்தேவரவர்கள், பூண்டி ஸ்ரீமான் ராவ்பகதூர் வீ. அப்பாசாமி வாண்டையார் அவர்கள், உக்கடை ஸ்ரீமான் ராவ்பகதூர் அண்ணாசாமித்தேவரவர்கள், அரித்துவாரமங்கலம், ஸ்ரீமான் வா. கோபாலஸ்வாமிரகுநாத ராஜாளியார்அவர்கள் இவ்வைவர்களும், நேரிற் கொடுப்பதற்கு டெபுடேஷன் கமிட்டி மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். நம்மவரின் ஒற்றுமை என்றவிஷயம் நாகை நீலலோசனிப் பத்திராதிபர் ஸ்ரீமான் ஜி. சதாசிவம்பிள்ளையவர்களாலும், இந்திரதலாதிபர் சங்கமும் அங்கத்தினர் ஊக்கமும் என்றவிஷயம் ஸ்ரீமான் P. வல்லான் தேவரவர்களாலும், இந்திரதலமுங் கல்வியுமென்றவிஷயம் M. கோவிந்தராஜ நாட்டார் அவர்களாலும், கேள்வி யென்றவிஷயம் ஸ்ரீமான் மு. தெண்டாயுதபாணிக்காடவ ராயரவர்களாலும், பள்ளிக்கூடங்கள் என்றவிஷயம் ஸ்ரீமான் மு. வேங்கடசாமி நாட்டாரவர்களாலும் வியாசங்களாக வாசிக்கப்பெற்றன. நம்சக்ரவர்த்தியவர்களுக்கும் நேசதேச அரசர்களுக்கும் ஜயமுண்டாகும்படிக்கும் நீண்டஆயுளைக்கொடுக்கும்படிக்கும்பிரார்த்தித்துச் சபாநாயகரவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வந்தனங்கூறித் தமிழ்வேத பாராயணஞ்செய்து சபைகலைந்தது.

G. வாசுதேவநாயடு,

முச்சாலைக்காரியதரிசி,

ஸ்ரீ கோபாலசுவாமிமடம்,

அரித்துவாரமங்கலம்.

நாட்டரசன் கோட்டை,

வித்யாபரிபாலனசங்கம்.

பிங்களஹூ ஐப்பசிமீ 30உ (15-11-17) மாலை 5-மணிக்குச் சிவகெங்கை வக்கீல் பிரம்மஸ்ரீ P. S. இராமசாமி ஐயரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்

சிவகெங்கை சமயவேதம் பிரம்மஸ்ரீ " சங்கரசாஸ்திரிகள் " " தர்மம் " என்ற விஷயத்தை உபந்யஸித்தார்கள். பிறகு ஸ்ரீ உ. வே. இராமையங்காரவர்கள் ஸ்ரீமான் உ. வே ஸீதாராமையங்காரவர்கள், ஸ்ரீ மான் சுப. வெள்ளைவாரணம் பிள்ளையவர்கள் ஆகிய மூவரும் மேற்கண்ட உபந்யாஸத்தைபனுசரித்தே உபந்யஸித்தார்கள். பிறகு " ஆறுவதுசினம் " என்ற விஷயத்தை சிவி. லெ சிவ சுப்பிரமணியன் சிவி. பெரி. ராமஸாமி என்ற மாணவர்கள் நன்கு உபந்யஸித்தார்கள். பிறகு அக்கிராசநாதிபதியவர்கள் உபந்யஸித்த விஷயத்தையும் உபந்யாஸகர்களையும் புகழ்ந்தும் மாணவர்கள் இம்மாதிரி உபந்யஸிப்பது வித்தை முன்னேற்றமடையும் வழியென்றும் தமது நல்லபிப்பிராயத்தை வெளியிட்டுப் பேசினார்கள். இரவு 9-மணியோடு சங்கம் சிறப்பாய் நிகழ்ந்தது.

தேவகோட்டை.

ஞானசம்பந்த நற்சபை.

இதன் மாதாந்தரக்கூட்டம் நிகழும், பிங்கள௵ கார்த்திகை௴ ௩௨ (18-11-17) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4½-மணிக்குக் கூடிற்று. சபையோர் வேண்டுகோளின்படி, காரைக்குடி, கம்பராமாயணப் பிரசாரகர் ஸ்ரீ மோ. வெ. கோவிந்தராஜ ஐயங்காரவர்கள் அக்கிராசனத்து வீற்றிருந்து முகவுரை கூறிய பின்னர்,

(1) பலவான்குடி, சித்திவிநாயக வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ வி. குமாரவீரையரவர்களால், 'காலத்தின் அருமை' என்னும் விஷயமும்,

(2) ஷெ ஊர் ஸ்ரீமான் ராம. ரு. ராம. ராமசாமிச்செட்டியாரவர்களால் 'மனிதப்பிறப்பின்பயன்' என்னும் விஷயமும்,

(3) சொக்கலிங்கம் புத்தூர், மாணிக்கவாசக வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ செ. இராமமூர்த்தி ஐயரவர்களால் 'இயல்வதுகரவேல்' என்னும் விஷயமும், வெகு அழகாகவும், கேட்போர் மகிழும் வண்ணமும் உபந்யசிக்கப் பெற்றன.

அக்கிராசநாதிபதி அவர்கள் ஒவ்வொரு உபந்யாசத்தினின்றும் ஸாராம்சங்களை யெடுத்துரைத்து முடிவுரையுங் கூறினார்கள். யாவருக்கும் வந்தனோபசாரமும், ஹாரசந்தன தாம்பூலாதிகளும் வழங்கப்பெற்று மங்கலவாழ்த்து நிகழ இரவு 8½-மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

சம்பந்தன்.

உ
கணபதிதுணை.
வித்யாபாநு
"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—திருக்குறள்.

தொகுதி 9	பிங்களஷு மார்கழிமீ January. 1918.	பகுதி 12

ஆங்கிலப்பாதிரிகளின் ஆதிக்யமும்

ஆங்கிலக் கல்விமுறையின் ஸ்தாபனமும்.

உலகத்தின் நவீன சரித்திரங்களில் 1498ஷு மேமீ 20உ ஒரு குறிப்பிடத்தகுந்த நாளாகும். இந்தத்தினத்தில் தான் வாஸ்கோடிகாமா என்னும் போர்த்துகேசிய வியாபாரத்தலைவன், ஐரோப்பாவிலிருந்து கடல்மார்க்கமாக நெடுநாள்பயணஞ்செய்து கள்ளிக்கோட்டைக்குச்சமீபத்தில் வந்து இறங்கினான். 1505வருஷத்தில் ஒரு போர்த்துகேசிய பிரதிநிதி அங்கு ஸ்தாபிக்கப்பெற்றார். சில வருஷங்களுக்குள் போர்த்துகேசியர்கள் இந்தியாவின் மேற்குக் கடற்கரை யோரங்களில் தங்களது பூர்ணமான ஆதிக்யத்தைநாட்டி அங்கு கோவா என்னும் ஒரு தலைநகரையும் ஏற்படுத்திக்கொண்டார்கள். அடுத்த முப்பது வருஷங்களுள் வங்காளத்திலும் வந்து குடியேறிவிட்டார்கள். இப்படி அவர்கள் வியாபாரிகளாகவும் அதிகாரிகளாகவும் இந்தியாவில் ஆதிக்யம் பெற்றபிறகு தங்களது பிரதிநிதியாகிய காஸ்ட்ரோ என்பவரின் மூலமாக ஒரு மதபோதனை ஸபையையும் ஏற்படுத்தினார்கள்.

அதுவரையில் இங்குவந்து தங்கியிருந்த போர்த்துகேசியப் பாதிரிமார்க ளெல்லோரும்! தங்கள் வகுப்பினருக்குமட்டுமே உப

தேசம்செய்யும் முறையில் அடக்கியிருந்தார்கள். ஆனால் முன் குறிக்கப்பெற்ற காஸ்ட்ரோவுக்கு மிகவும் நட்பினரான S. பிரான் ஸிஸ்க் ஸேவியர் என்பவரது பெருமுயற்சியாற் பாதிரிகளுடைய மதோபதேசப் பெருக்கமானது இந்துக்களுக்குள்ளும் பரவத் தலைப்பட்டது. மலையாளக்கரையும் மதுரைஜில்லாவின் தென்பாகங் களும் அவர்களது உபதேசத்துக்குக் கிழடங்கிகின்றன. போர்த்து கேசியர் தமது மதக்கொள்கைகளுடன் தமது பாஷையையும் பர வச்செய்தார்கள். அதற்காகவென்றே ஒரு அச்சியந்திரசாலையை யும் ஏற்படுத்திக் கொண்டார்கள். தங்களது மதக்கொள்கைப்படி வணக்கம் செய்யத்தக்க ஒருகோயிலை ஸ்தாபித்ததாகிய பெருங்காரி யத்துடன் நில்லாமல் ஸம்ஸ்க்ருதம் தமிழ் மலையாளம் சிரியம் முத லிய பாஷைகளையும் பயின்றுவரத் தலைப்பட்டார்கள். கடைசியிற் குறிக்கப்பட்ட சிரியம் என்னும் பாஷையானது மலையாளக்கரையில் அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற சிரியன் கோவிலாரால் பேசப்பட்டு வருவதொன்று. அந்தக்கோயில் அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்று ஆறுவது நூற்றாண்டு முதல் இன்னும் அங்கு நிலவிவருகின்றது. மேற் குறிக்கப்பெற்ற பாஷைகளில் தங்களது மதக்கொள்கைகளையும் அச்சடித்துப் பரவச்செய்தனர். இந்தக் கோயிலையொட்டி ஆங் காங்குப் பல சிறுகோயில்களும் மதஸங்கங்களும் விரைவில் ஸ்தாபிக் கப்பெற்றன. ஒவ்வொரு ஸங்கத்துக்கும் தலைவராக ஒவ்வொரு பாதிரி நியமிக்கப்பெற்றார். ஒவ்வொருஸங்கத்தின் அநுஸரணையின் பேரிலும் ஒவ்வொரு தர்மபாடசாலையும் ஸ்தாபிக்கப்பெற்றது. இந் தச் சிறு பாடசாலைகள் தவிரப் பெரிய பள்ளித்தானங்களும் ஏற்ப டுத்தப்பெற்றன.

1580-ம் வருஷத்தில் ஸ்பெயின் தேசத்தினரும் போர்த்துகல் தேசத்தினரும் மிகவும் உறவாடி ஒரு அரசாங்கமாக ஆளும் முயற் சியில் முந்தினபோது அப்போதிருந்து வந்தவரான பிலிப் என்பவர் பிறமதத்வேஷத்தை மிகுதியும் காட்டிவந்த படியால் போர்த்து கேசியரது ஆதிக்யம் அதிக விரைவிற் குறையத் தலைப்பட்டது. முதன் முதல் டச்சுக்காரர்களால் அவர்களது வியாபாரமுறை தடைப்பட்டது. என்றாலும் டச்சுக்காரர்களும் வெகுநாள் தங்க

ளது ஆதிக்யத்தைக் காட்டமுடியவில்லை. ஏனெனில், அவர்கள் ஆரம்பமுதல் ஆங்கிலேயர்களுடன் வாதிக்கும்படி நேர்ந்தது. ஸ்பானியர்களை ஆங்கிலர்கள் 1588-ம் வருஷத்தில் தோல்வியடையச் செய்ததிலிருந்து, ஆங்கிலர்க்குக் கடலில் நீண்ட ஆதிக்யம் கிடைத்தது. அதனால் அவர்கள் ஒருராஜ்யஸ்தாபனத்தைச்செய்வதற்கும் அடிகோலினார்கள்.

1600-ம் வருஷம் டிசம்பர்மீ 31உ-யில் எலிஜபத் மஹாராணியார் தமது அரசாட்சிமுறைக்கு ஒரு பெரும் எடுத்துக்காட்டான ஈஸ்ட் இந்தியா கம்பேனி என்னும் ஒரு வியாபாரச் சங்கத்தை நியமித்து அதனைத் தூண்டிவிட்டார்கள். அந்தக்கம்பெனி இந்தியாவுக்கு வந்தேறிய சிலவருஷங்களுக்குள்ளாகவே இந்தியாவின் மேற்குக்கரை கிழக்குக்கரை வடக்கிந்தியா முதலிய இடங்களில் தங்களது பண்டசாலைகளை ஸ்தாபித்து வியாபாரத் தேர்ச்சியும் பெற்றுத் தங்களது ஆதிக்யத்தையும் நாட்ட ஆரம்பித்தனர். 1640-ம் வருஷத்தில் சென்னையில் செண்ட் ஜார்ஜ்கோட்டையைக் கட்டினார்கள். இது 1653-ம் வருஷத்திற்குள் ஒரு இராஜதானியாகவும் செய்யப்பட்டது. 1687-ம் வருஷத்தில் பம்பாயிலும் இராஜதானியை ஏற்படுத்திக் கொண்டார்கள். மூன்றுவருஷகாலத்திற்குள் ஜாப் சார்ணக் என்பவரால் கல்கத்தாவும் கண்டுபிடிக்கப் பட்டது. பெரும்பாலும் இந்தக்காலத்திலேயே அந்தக் கம்பெனியார் தங்களுக்குற்ற ஆதிக்யத்தைக்கொண்டு இந்தியாவில் சக்ராதிபத்யத்தையும் ஸ்தாபிக்கத் தீர்மானித்து, அதற்கு முக்கியஸ்தானங்களாகச் சென்னை, பம்பாய், கல்கத்தா என்னும் மூன்று இடங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். இதுமுதல் அவர்களுடைய மதசம்பந்தமான முயற்சியும் உறுதிகொள்ளத் தலைப்பட்டது. இந்நாள் முதலே ஆங்கிலர்கள் தங்களது கல்விமுறையை இந்தியாவில் நிரந்தரமாக ஸ்தாபிக்க முயன்றார்கள். இதுவே நாம் எடுத்துக்கொண்ட வியாஸத்துக்கு அங்கமாகிறது.

போர்த்துகேசியர் மதத்தைப் ப்ரவச்செய்வதில் முழுநோக்குடையவர்கள். ஆங்கிலர்களோ வியாபாரத்தையே முதன்மையா

கக் கைக்கொண்டவர்கள். எனினும், சிற்சில மதபோதகர்களும் ஆங்கிலர்களிற் கிளம்பினார்கள்; ஆனால் அவர்கட்கு உத்தரவாதமான உதவிகள் தகுதியாக ஏற்படவில்லை; அதனால் அந்தமுறை மெதுவாகவே பெருகிவந்திருக்கிறது. 1612-ம் வருஷத்திற் போர்த்துகேசியரை ஸுவாலி என்னுமிடத்திற் கடற்சண்டையில் தோற்கடித்த பேஸ்ட் என்னும் தலைவர் ஸுராத் என்னும் துறைமுகத்தில் ஒரு பண்டசாலையை ஏற்படுத்திவிட்டு, அங்கிருந்த ஒரு இந்தியச் சிறுவனைக் கிறிஸ்தவனாக்கி, அந்தக்காலத்து அரசாயிருந்த முதலாவது ஜேம்ஸ் என்பவரது கட்டளையின்பேரில் அந்த இந்தியனுக்கு பீடர் என்னும் நாமகரணம் சாத்தி, அவனுக்குக் கம்பெனிச் செலவிற் படிப்பும் கற்பித்து அவன்மூலமாக நம்நாட்டாருக்குத் தங்களது மதக்கொள்கைகளைப் போதிக்க ஆரம்பித்தார். ஆனால் அது நிறைவேறாமற் போயிற்று.

1677-ம் வருஷத்தில் ராபர்ட் பாய்ல் என்பவரால் வேறொரு முறை ஆரம்பிக்கப்பெற்றது. கம்பெனி உத்யோகஸ்தர்களே பாதிரிமார்களாகக் கற்பிக்கப்பெற்றுச் சிலகாலம் உபதேசமுறை நடந்தேறிவந்தது. இந்தமுறையுங்கூட நின்றுபோகும்படி நேர்ந்தது. ஏனெனில், கம்பெனி உத்யோகஸ்தர்கள் எவ்வளவு செவ்வையாகக் கற்பிக்கப்பட்டு வந்தபோதிலும், அவர்களுக்கே மதக்கொள்கையிற் பிரியம் ஜனித்திராதிருந்ததினால், அவர்கள் உபதேசமுறையிற் கருத்துடன் உழைக்கவில்லை. கடைசி முறையானது கம்பெனி உத்யோகஸ்தராகிய மிஸ்டர் லிவிஸ் என்பவரால் செண்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து ஆரம்பிக்கப்பெற்று 1691-ம் வருஷத்திலிருந்து 1714-ம் வருஷம் வரையிற் செம்மையாக நடைபெற்றது. அந்த லிவிஸ் என்பவர் போர்த்துகேசிய பாஷையின் ஒரு திரிபாகச் சுதேசிகள் பேசிக்கொண்டிருந்த ஒரு பாஷையைக் கற்றுக்கொண்டு நாட்டு ஜனங்கட்குத் தமது மதக்கொள்கைகளைப் போதித்து வந்தார்.

[illegible] கம்பெனி உத்தியோகஸ்தர்களே, தங்கள் உத்தியோகத்தில் அமர்ந்தவர்களது குழந்தைகளைப் படிப்

பிக்கும் முறையிற் கவனஞ் செலுத்தினார்கள். இந்த முறையும் செண்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டது. 1673-ம் வருஷந் தொடங்கி ஸ்காட்லாந்து தேசத்து உபதேசகராகிய பிரிங்கில் என்பவரைக்கொண்டு கம்பெனி உத்யோகஸ்தர்களாகிய போர்த்துகேசிய யூரேஷியர்கட்கும், பிரிட்டிஷ் யூரேஷியர்கட்கும், இந்தியச் சிறுவர்கட்கும் கற்பித்து வந்தார்கள். இந்தப்பாடசாலை நாளுக்குநாள் விருத்தியடைந்து 1692-ம் வருஷத்திற் கம்பெனி அத்யக்ஷர்களாலேயே மேற்பார்வையும் செலுத்தப்படும்படியான நிபந்தனையையும் பெற்றது.

1698-ம் வருஷம், கிறிஸ்தவ அறிவை விருத்திசெய்யும் ஸங்கமென்றுபொருள் கொள்ளும் S. P. C. K. என்னும் கூட்டமானது லண்டன்மாநகரத்திலே ஸ்தாபிக்கப்பெற்றது. அந்தஸங்கத்தார், இந்தியாவிலும் போர்த்துகேசியச்சிறுவர்க்கும் மற்றைச்சிறுவர்க்குமாக ஒரு இலவசப்பாடசாலை ஏற்படுத்தும்விஷயமாக ஒரு ஏற்பாட்டைச்செய்துகொண்டு டேனிஷ் பாதிரிமார்கள் மூலமாக அதனை நிறைவேற்றத் தொடங்கினார்கள். இந்த டேனிஷ்காரர்களும் இதர ஐரோப்பியர்களைப்போலவே வியாபாரநிமித்தம் ஏழாவது நூற்றாண்டில் இந்தியாவிற்குள் வந்தேறினவர்களேயாவர். டென்மார்க்கிலும் இவர்கள் ஈஸ்ட்இந்திய கம்பெனி என்னும் ஒரு கூட்டத்தை யாரம்பித்து இந்தியாவில் தொழில்நடத்தி வந்தார்களாயினும், அவர்களது ஆட்டம்அதிகமாக ஓங்கியிருந்ததாகத்தெரியவில்லை. ஆனால் இந்த டேனிஷ் பாதிரிமார்களைக்கொண்டே தரங்கம்பாடியில் முதலில் ப்ராடெஸ்டென்ட் கிறிஸ்தவமதம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப்பாதிரிச் சங்கத்தாரைக்கொண்டே S. P. C. K. ஸங்கத்தார் தங்களது இலவசப்படிப்பு முறையை இந்தியாவிற் பரவச்செய்ய உத்தேசித்தார்கள். மிஸ்டர் லீவிஸ் என்பவரும் இதே அபிப்பிராயத்தை ஒப்புக்கொண்டவராகி, டேனிஷ் ஸங்கத்தாரிடம் இதனைப்பற்றிப்பேசினார். அதனையநுசரித்தே டேனிஷ்காரரும் இந்தியாவில் மதவிஷயத்தில் அதிக தீவிரத்துடன் உழைக்க வாரம்பித்தார்கள். இவர்கட்கு S. P. C. K. ஸங்கத்தார் பணவுதவி மிகுதியும் செய்துவந்தார்கள். இந்த

முறை முதலில் தரங்கம்பாடியிலும் பிறகு கடலூரிலுள்ள செயின்ட் டேவிட் கோட்டையிலும் சென்னையில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலும் முறையே ஆரம்பித்தார்கள். மிஸ்டர் லீவிஸ் என்பவர் மிஷன் சங்கத்தைச்சேராதவராகவும் கம்பெனியிலிருந்து சம்பளம்வாங்கிப் பிழைக்கும் ஒருவராகவும் இருந்தமையினால், தமது இலவசப் பள்ளிக்கூடத்தைத் தம்மிஷ்டப்படி நீடித்துநடத்தமுடியாமல் நிறுத்திவிட்டார்.

இச்சமயம் ஆங்கில ஈஸ்ட் இந்திய கம்பெனியின் ஸாதனத்தைப் புதுப்பிக்கும் முறை லண்டனில் பார்லிமெண்டில் விவாதிக்கப்பட்டது. அந்தவாதத்தின் இடையில், இந்தக் கம்பெனியானது இந்தியாவில் மதசம்பந்தமாக உழைத்திருக்கும் விஷயமும் விவாதத்துக்கு வந்தது. அப்போது 'சிலகாலமே இந்தியாவில் வியாபாரத்தைச் செய்துவந்த டச்சுக்காரர்கள் இலங்கையில் ஒரு காலேஜ் ஸ்தாபித்துக் கிறிஸ்தவக்கொள்கைகளைப் பரவச் செய்திருக்கிறார்கள், ஆங்கில ஈஸ்ட் இந்திய கம்பெனியார் அவ்வளவு நோக்கம் மதவிஷயத்தில் எடுத்துக்கொள்ளவில்லை' யென்று குறைகூறப்பட்டது. அதனால், 'கம்பெனி யுத்யோகஸ்தர்களும் இந்திய பாஷைகளைக் கற்றுக்கொண்டு தங்கள் கீழுள்ள இந்தியர்களிடம் தாராளமாகப்பேசித் தங்களது மதக்கொள்கைகளைப் பல சயமங்களிலும் அவர்களுக்குச் சொல்லிப்பரவச்செய்யவேண்டும்' என்னும் நிபந்தனையும்ஆங்கில ஈஸ்ட் இந்திய கம்பெனியின் புதியஸாதனத்தில் சேர்க்கப்பட்டது. இந்தநிபந்தனையை இந்தியாவில் நிறைவேற்றும்படியாக மிஸ்டர் ஸ்டீவன்ஸனுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த ஸ்டீவன்ஸன் என்பவர், மிஸ்டர் லீவிஸுக்குப் பிறகு இந்தியாவில் ஈஸ்ட் இந்திய கம்பெனியைச் சென்னையில் நடத்திவந்த அத்யக்ஷராவர். இவர் சென்னையில் இரண்டு கல்விச்சாலைகள் ஆரம்பிக்க எத்தனித்தார். ஒரு பாடசாலை, இந்தியாவிலுள்ள ஆங்கிலப் போர்வீரரின் சிறுவர்க்காகவும் மற்றொன்று சுதேசச் சிறுவர்க்காகவும் ஆரம்பிக்கப் பெற்றன. ஆங்கில கலாசாலையில் ஆங்கிலம் பிரதானமாகவும், சுதேச கலாசாலையிற்சுதேச பாஷை பிரதானமாகவும் கொள்ளப் பட்டன. ஆங்கில கலாசாலை

1715-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில், சென்ட்மேரி தர்மபாட்சாலை என்னும் நாமங்கொண்டு 18 மாணவர் 12 மாணவிபராகிய இவர்களுடன் ஆரம்பிக்கப் பெற்றது. மற்றொன்றாகிய சுதேசியபாடசாலையைப்பற்றிய விவரமொன்றும் சரிவரத் தெரியவில்லை. மூலதனம் மிகுதியும் இல்லாததால், மிஸ்டர் ஸ்டீவன்ஸன் இந்தியச் சிறுவர்களது கல்விமுறையை முற்றவும் டேனிஷ் சங்கத்தார்க்கேஒப்படைத்துவிட்டார். ஆதலால், அந்த டேனிஷ்சங்கத்தாரது முயற்சியாலேயே சென்னையில் வெள்ளைப்பட்டணத்தில் (White town.) ஒரு போர்த்துகேசியப்பள்ளிக்கூடமும், கறுப்புப்பட்டணத்தில் (Black town.) ஒருமலையாளப் பள்ளிக்கூடமும் கடலூரில் ஒருபள்ளிக்கூடமும் ஆரம்பிக்கப்பெற்று, தமிழும் போர்த்துகேசிய பாஷையும் போதிக்கப்பெற்று வந்தன.

டேனிஷ் சங்கத்தார் கல்வி விஷயத்தில் அதிக ஊக்கங்காட்டிப் பதினெட்டாம் நூற்றாண்டெல்லாம் சலிக்காத முயற்சியுடன் உழைத்து வந்தார்கள். அவர்கட்குக் கம்பெனி டைரக்டர்களாற் சிறுஉதவியும் லண்டன் S. P. C. K. சங்கத்தாராற் பேருதவியும் கிடைத்துக் கொண்டு வந்தன. S. P. C. K. சங்கத்தாரும் தாங்கள் தனிமையில், பெரிய ஜர்மன் பாதிரியான ஷிவார்ட்ஸ் என்பவரைத்துணையாகக்கொண்டு, ஒருசங்கத்தை நடத்திவந்தார்கள். இந்தப் பாதிரிதான் முதன்முதலில் திருச்சியிலும் தஞ்சாவூரிலும் பாதிரிப்பாடசாலைகளைத்தாபித்தார். தஞ்சையில் ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடமானது ஹைதர்ஆலியின் பணத்தைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. தஞ்சையில் அப்போது பிரிட்டிஷ் பிரதிநிதியாக இருந்த மிஸ்டர் ஸல்லிவன் என்பவர் அந்தஜர்மன் பாதிரிக்கு உடந்தையாயிருந்ததுமன்றிக் கல்விவிஷயத்திலும் மிக்க பிரியமுள்ளவரா யிருந்தபடியால் அந்தமுறைதஞ்சையிற் பலனடைந்தது.

இந்த ஸல்லிவன் என்பவர் தாம், கல்விமுறையில் திடீரென்ற ஒருபுதிய மாறுபாட்டை இந்தியாவில் ஆரம்பித்தவர். இவரது முறை யாவருக்கும் ஒரு படித்தாக ஆங்கிலக்கல்விமுறையை ஸ்தாபிக்க வேண்டுமென்பதேயாம். அப்போதுதான் ஆங்கிலரும் இந்தி

யரும் தாராளமாகச் சம்பாஷணைசெய்யமுடியுமென்பது அவரது அபிப்பிராயம். அவரது அபிப்பிராயமேயின்றுவரையில்நடந்தேறி வருகிறது. இவரது இந்த அபிப்பிராயத்துக்கு செண்ட்ஜார்ஜ் கோட்டையிலிருந்த கவர்னரும் ஆர்க்காட்டு நவாபும் தஞ்சைராசரும் மற்றச் சுதேசராஜாக்களும் ஒப்பம்கொடுத்தார்கள்; ஆகவே 1785-ம் வருஷத்தில் தஞ்சையிலும் ராமநாதபுரத்திலும் சிவகங்கையிலுமாக மூன்று ஆங்கிலகலாசாலைகள் ஏற்படுத்தப் பெற்றன. ஆனால் இராமநாதபுரம் சிவகெங்கையில் ஸ்தாபிக்கப் பெற்றவைகள் 1790-ம் வருஷத்தில் எக்காரணங்கொண்டோ மூடப்பட்டுப்போய்விட்டன. அதே வருஷத்தில் அந்தஜர்மன் பாதிரி கும்பகோணத்தில் ஒரு ஆங்கில கலாசாலையைத்திறந்து வைத்தார். இதேகாலத்தில் மிஷன் சங்கத்தாரால் சென்னையில் ஒரு ஆங்கிலகலாசாலை யாரம்பஞ்செய்யப்பெற்று, ஐரோப்பியர் யூரேஷியர் இந்தியர் ஆகியயாவர்க்கும் ஒருங்கே ஆங்கிலக்கல்வி முறை போதிக்கப்பெற்று வந்தது.

இவ்வாறே பலவிதமான முயற்சிகளைப் பாதிரிமார்கள் செய்த போதிலும் யூரேஷிய ஜனத்தொகை அதிகமாகப் பெருகவில்லை. 1715-ம் வருஷத்தில் செண்ட்மேரி காலேஜ் ஏற்பட்டு 75 வருஷங்கள் நடந்தும் ஈஸ்ட் இந்திய கம்பெனியார் இந்தக் கலாசாலையிலாவது வேறெந்தக்கலாசாலையிலாவது நேரான கவனத்தைச்செலுத்தாதவராகவே இருந்தார்கள். 1784-ம் வருஷத்தில் செண்ட்ஜார்ஜ் கோட்டைக்குக் கவர்னராக இருந்த லார்ட் காம்பெல் என்பவரது மனைவியான லேடிகாம்பெல் என்பவருக்கு இவ்விஷயத்திற் கவனம் தோன்றி யூரேஷியக் குழந்தைகட்குக் கல்வி கற்பிக்கப் பிரயத்தனப்படத் தொடங்கினர். 1787-ம் வருஷத்தில் அனாதைப் பெண்குழந்தைகட்கென்று ஒரு அனாதையாச்ரமத்தையும் ஏற்படுத்தினர். உடனே ஒரு ஆண் அனாதையாசிரமமும் ஏற்படலாயிற்று. இந்த இரண்டு சாலைகட்கும் கம்பெனியாரிடமிருந்து தக்கஉதவியும் கிடைத்துக் கொண்டிருந்தது. ராஜதானிக்கிறிஸ்தவப் புரோகிதராக இருந்த டாக்டர் பெல் என்பவர்

ஆன் அநாதையாசிரமத்துக்கு அத்யக்ஷராக நியமிக்கப் பெற்றார் இவர்க்கு இயற்கையாகவே கல்வி விஷயத்தில் ஒருவிதமான ஆசையும் ஜனித்திருந்தது. ஆகையாற் கல்வியை எங்கும்பரவச் செய்வது எப்படியென்று நன்கு ஆலோசித்து, கிராமங்கள்தோறும் ஒவ்வொரு தர்மபாடசாலையை யேற்படுத்துவதே தக்கவழியாகுமெனத் தீர்மானித்து, பிள்ளைகளுக்கு ஆகாரமேயன்றி உடைமுதலிய வேண்டிய சாதனங்களையும் கொடுத்துப் படிப்பிக்கவும் ஏற்பாடு செய்தார். இந்த முறையை முதல்முதல் இவர் தமது பாடசாலையிலேயே ஆரம்பித்தார்.

ஆடைமுதலியன மிகவும் ஸாதாரணமாகவும் எல்லார்க்கும் ஒரே விதமாகவும் அளிக்கப்பெற்றன. மாணவர்களுடைய எவ்வித மான பிழைகளும் ஒரு புத்தகத்தில் எழுதிவைக்கப்பெற்று வாரமொருமுறை பாடசாலைபக்ஷர்களால் விசாரிக்கப்பெற்று வந்தன. டாக்டர் பெல் என்பவர் மாணவ உபாத்தியாயஒழுங்கு என்னும் ஒரு புதுமுறையை யாரம்பித்தார். அது நன்றாய் நடந்தேறி இங்கிலாந்திலும் பரவ ஆரம்பித்தது. இங்கிலாந்தில் இந்தமுறைக்கு டாக்டர் பெல்முறை என்றும் மதராஸ் முறையென்றும் பெயர்வழங்கிவருகிறது. இம்முறையாவது என்னவென்றால், மேல்வகுப்பு மாணவர்களில் தேர்ச்சியுற்றவர்கள் கீழ்வகுப்பு மாணவர்க்குக் கல்வி போதிப்பதேயாகும். இந்தமுறை நம்மிந்திய நாட்டிற்குப் பழைமையாயினும் டாக்டர் பெல் இதனை யொழுங்குபடுத்தியமைத்தார். இம்முறையாற் பாடசாலைக்கு அதிக உபாத்தியார்கள் தேவையில்லாமையும் மாணவர்க்கு அறிவுவளர்ச்சியும் உண்டாவதற்குக் காரணமேற்பட்டது. மாணவர்கட்கு, படித்தல் எழுதல் கணிதம் கணக்குவைப்பு அளவுசாஸ்திரம் மாலுமிநூல் கிறிஸ்துமதக் கொள்கைகள் இவைகள் கற்பிக்கப்படலாயின. மாணவர்கள் சாலையை விட்டு வெளியேறினவுடன் யாதாமொரு உத்யோகத்தை நிர்வஹிக்கும் வண்ணம் பாடசாலையிலேயே சிலவியாபார முறைகளும் கற்பிக்கப்பட்டு வந்தன. இந்தமுறையானது நாளடைவில் விருத்தியாகிப் பலனளித்து மாணவர்கட்கும் பாடசாலை பதியர்கட்கும் கம்பெனியார்க்கும்பெரும்புகழீட்டித் தந்தது.

டாக்டர் பெல் என்பவருக்குப்பிறகு அந்த உத்தியோகத்துக்கு வந்துசேர்ந்த மிஸ்டர் கேர் என்பவர் அந்தப் பாடசாலையிலேயே

ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தப் பிரயத்தனப்பட்டார். கம்பெனியார் இவருடைய முயற்சிக்கு ஊக்கங்கொடுக்காதிருந்தும், இவர் தமது மனந்தளராமலிருந்து தமது சொந்தப்பணத்தைச் செலவு செய்தே அந்தப்பாடசாலையில் ஒரு அச்சியந்திரசாலையைஸ்தாபித்தனர். இந்த ஏற்பாடு மாணவர்கட்கு ஒரு தொழின் முயற்சியைக் காட்டிக்கொடுத்ததுடன் அந்தப்பாடசாலைக்குஒருவித வருவாய்க்கும் வழியாக இருந்தது. இந்த அச்சியந்திரசாலைதான் இப்போது சென்னையில் பிரசித்தியாயிருக்கிற லாரேன்ஸ் அஸைலம் பிரிண்டிங் பிரஸ் (The Lawrence Asylum Printing Press) என்பது. இது அரசாங்கத்துக்கு அச்சடித்துக் கொடுத்துவந்தது.

இந்தமுறையே சாதாரணமாக அந்தக்காலங்களில் பள்ளிக்கூட முறையாக அநுஷ்டிக்கப்பட்டு வந்தது. உதாரணமாக, புதுச்சேரிக்கு அருகிலுள்ள வீரபட்டணத்தில், பிரஞ்சுப்பாதிரியாகிய M. மாதன் என்பவரால் ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அந்த மாணவர்கள் இந்துக்களைப்போலவே சாதாரண உடையுடன் பாடசாலையிலேயே போஷிக்கப்பட்டுவந்தார்கள். ஒவ்வொரு மாணவனும் பள்ளிக்கூடத்தைச் சுற்றியிருக்கும் தோட்டங்கட்குத் தண்ணீர்வார்ப்பது முதலிய காரியங்களில் பழகிவந்ததுடன், வியாபாரம் தையல்வேலை செருப்புத்தைத்தல் தச்சுவேலை ரொட்டிசுடுதல் அச்சுவேலை முதலிய வேலைகளையும் கற்றுக் கொண்டிருந்தான்.

பம்பாயில் தர்மபாடசாலை யென்ற பெயருடைய ஒருபள்ளிக்கூடம் 1719-ம் வருஷத்தில் ரேவரண்ட் ரிச்சார்டு கோப் என்பவரால் ஏற்படுத்தப் பெற்றது. இந்தப்பள்ளிக்கூடமே பிற்காலத்தில் பைகல்லாவில் கல்விச்சங்கத்தார் பள்ளிக்கூடங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தது. 1790-ம் வருஷத்தில் பம்பாயில் போர்த்துகேசிய யூரேஷியக் கலாசாலை யென்பதொன்று ஏற்படுத்தப்பெற்று, இதற்குமுன் நம்மாற் குறிப்பிடப்பெற்ற மிஸ்டர் கோர் என்பவரது மேற்பார்வையில் இரண்டுவருஷ காலங்கள் நடந்துவந்தது. இவை தவிர அக்காலங்களில் பம்பாயில் வேறுபாதிரிப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருந்ததாகத் தெரியவில்லை. பம்பாய் ராஜதானியானது சென்னை மாகாணத்தைப்போல ப்ராடெஸ்டான்ட் கிறிஸ்தவர்களுக்கு அதிகமாக இடங்கொடுக்கவில்லை. ஏனெனில், அங்குள்ள மஹாராஷ்டிரர்கள் மிகவும் தந்திரமுள்ளவர்கள். ஈஸ்ட் இந்திய

கம்பெனியின் ஆரம்பகாலங்களில் வடக்கிந்தியாவிலுங்கூட பாதிரிமார்களின் முயற்சி பலமடையவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டுக்கு முன்னர், அக்பரது அரசாட்சிகாலத்தில் பேர்ணியர் என்பவரால் ஆக்ராவில் ஆரம்பிக்கப்பெற்ற ஜெஸுவிட் கலாசாலையொன்று தான் ஐரோப்பியகல்விச்சாலையாக இருந்தது. 1731-ம் வருஷத்தில் பிரிட்டிஷாருடைய ஆதரவின்பேரில் ஒரு தர்மபாடசாலை திறக்கப்பெற்று S. P. C. K. சங்கத்தாருடைய ஆதீனத்தின் கீழே நடந்துவந்தது. 1756-ம் வருஷத்தில் அதிக துரதிர்ஷ்ட வசத்தால் மிகுந்த க்ஷீணதிசைக்குவந்து 1758-ம் வருஷத்தில் மதராஸிலிருந்து இங்கேகாரியத்துக்கென்றே ராபர்ட்கிளைவ் என்பவரால் அழைத்துக்கொண்டுவரப்பெற்ற கேர்ணண்டர் என்னும் பாதிரியால் நல்லநிலைமைக்குக் கொண்டுவரப்பெற்றது.

1787-ம் வருஷத்தில் பெண்களும் சிலர் அந்தப்பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். பிறகும் அந்தக்கலாசாலைக்கு அழிவு வரும்போலிருந்தது; ஆனால், 1789-ம் வருஷத்தில் கவர்னர் ஜனரலின் தலைமையின் கீழ் ஒரு கிறிஸ்தவக்கூட்டம் கூட்டப்பெற்று அந்தப்பாடசாலையை நடத்துவதற்கென்றே, பங்காளத்துத் தர்மபாடசாலைச்சங்க மென்றமோர் சங்கம் ஏற்படுத்தப்பெற்று, கவர்னர் ஜனரலவர்களே அதற்கு போஷகராகவும் நியமிக்கப்பெற்றார். அந்தக் காலத்தில் கல்கத்தாவிலும் மற்ற இடங்களிலும் அநேக இதர பள்ளிக்கூடங்களும் நிலவியிருந்தன. அவற்றுட்சில, உறுதிபெற்ற கல்விமுறையால் நடத்தப்பட்டுவந்தன. மற்றும் சில ஆரம்பித்தவருடைய சிலகாலப் பிழைப்பினிமித்தமே யாரம்பிக்கப்பட்டு நின்றதாகவும் இருந்தன. பெண்பள்ளிககூடங்களும் சில இருந்தன. டிஞஜ்பூரில் 1794-ம் வருஷத்தில் மிஸ்டர் கேரி என்பவரால் ஒரு பாதிரிப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பெற்றது.

வங்காள ராஜாங்கத்தாரும் கல்வியை யபிவிருத்திக்குக் கொண்டுவரவேண்டுமென்ற நோக்கத்துடனே இரண்டு கல்விச்சாலைகளை ஏற்படுத்தினார்கள். முதலாவது வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பெற்றுப் பெரும்பாலும் அவரது ஆதரவினாலேயே நடைபெற்றுவந்தது. இரண்டாவது அதேவருஷமாகிய 1794-ம் வருஷத்தில் காசியில் ஆரம்பிக்கப்பெற்ற காலேஜாகும். 1784-ம் வருஷத்தில் ஸர்வில்லியம் ஜோன்ஸ் என்பவரால், வங்காள

ளத்து ஆசியச்சங்கமென்ற ஒருசங்கமும் ஏற்படுத்தப்பெற்றது.

சகோதரர்களே! 1498-ம் வருஷம் முதற்கொண்டு இதுவரையிலும் நடந்தேறிவந்திருக்கிற ஆங்கிலக் கல்விமுறையால், நமது நாட்டுக்கல்விமுறை அறவே யொழிந்து தேசாபிமானம் பாஷாபிமானம் மதாபிமானம் என்னும் இவை கலக்கத்தையடைந்திருப்பதைத்தான் பலனாகக்கண்டிருக்கிறோம். ஏதோ சிற்சிலருக்குச் சோற்றுக்கும் துணிக்கும்மாத்திரம் சம்பாதித்துக்கொள்ள ஒருவழிகாட்டியாக இருந்ததாயினும் அவரது ஆண்மையை அறவே யொழித்து அடிமைத்தன்மையை ஆபரணமாக்கிக் கொடுத்திருக்கிறது. அவர்களால் நாட்டுக்காயினும் பாஷைக்காயினும் மதத்துக்காயினும் ஆகவேண்டியபலன் ஆகியிருக்கிறதாக எண்ண இடமில்லை. ஏனெனில், இவ்வாங்கிலமுறை நமது நாட்டுமதம் சரித்திரம் பாஷையிவற்றைத் துணையாகக்கொண்டு போதிக்கவில்லை. ஆகையால் நாம் இதுகாறும் பன்னிரண்டுமாதச் சஞ்சிகைகளிலும் வற்புறுத்தியுள்ளபடியாகவோ, அதனையநுசரித்தபடியாகவோ கல்விமுறையானது ஆங்கிலமுறையினின்றும் இந்திய முறைக்கு மாற்றப்பட்டு மாணவர்கள் செலுத்தப்படுவார்களானால் தேசமும் பாஷையும் மதமும் சீர்குலையாதிருப்பதுடன் விருத்தியையும் நாடும் என்று துணிகிறோம். புத்திமான்களும் அநுபவசாலிகளுமான பெரியோர்கள், தமக்குச் செல்வத்தினாலும் செல்வாக்கினாலும் ஆதிக்யம்பெற்ற இடங்களில், இந்தியக்கல்விமுறையைப் பரவச்செய்ய முயன்றார்களாயின், தேசக்கடமையைச் செய்தவராக ஆவார்கள். ஒருநாடானது தனதுபாஷையையும் மதத்தையும் பற்றுக்கோடாகக் கொள்ளாமல் முன்னேறமுடியாது. தேசம் முன்னேறுவதாவது தேசஜனங்கள் முன்னேற்றமடைவது. தேசஜனங்கள் தமது மதம் பாஷை யிவற்றையறியாதவரையில் தேசசரித்திரங்கள் கவனிக்கப்பெறாமல் கழியும். அவை கழியவே பூர்வமன்னருடைய ராஜ்யதந்திரம் வீரம் ஒழுக்கங்களும் பூர்வீகப் பெரியோரது ஆசார அநுஷ்டானங்களும் நம்மவரது மனதில் பதியா. இந்தப் பதியாத்தன்மைதான் ஒருதேசத்தை க்ஷீணிக்கச் செய்கிறது. ஆதலால் தேசமுன்னேற்றத்தைக் கோருகிற பெரியோர்கள் தேசக்கல்விமுறையை மிகுதியும் கவனித்துநடத்தல் கடமையாகுமென்று பின்னும் வற்புறுத்துகிறோம். பத்திராதிபர்.

உ

சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்.

சொக்கலிங்கம்புத்தூர்

மணிவாசக மாணவர்சங்கம்.

இச்சங்கத்தின் கார்த்திகை மாதக்கூட்டம் பிங்கள ௵ கார்த்திகை ௴ ௰௩ ௳ செவ்வாய்க்கிழமைகாலை 9-மணிக்குக்கோநகர் கற்பகவிநாயக கலாசாலை தலைமை ஆசிரியர் பிர்ம்மஸ்ரீ பண்டித அ. கோபாலையரவர்கள் அக்கிராசனத்தின்கீழ்க் கூடிற்று. அஞ்ஞான்று அருமையான உபந்நியாசங்கள் 3 நடைபெற்றன.

மார்கழி மாதக்கூட்டம் மார்கழி௴ ௰௪ ௳ வெள்ளிக்கிழமை மாலை 3மணிக்கு பிர்ம்மஸ்ரீ வித்வான் ரெ. ராமமூர்த்திஐயரவர்கள் அக்கிராசனத்தின்கீழ்க்கூடிற்று. அஞ்ஞான்று ஸ்ரீ மாணிக்கவாசகவித்தியாசாலையின் மாணவர்களால் (8) எட்டு உபந்நியாசங்கள் நடைபெற்றன. இந்நகர் பிரம்மஸ்ரீ சு. இராமையங்கார் புல்லாங்குழலால் சபையோரைமகிழ்வித்தார். ஆத்தங்குடி ஜோசியம் ஐயங்காரவர்கள் இன்னிசைப்பாக்களை ஓதி இன்புறுவித்தார்கள். கடவுள்வாழ்த்தும் வந்தனோபசாரமும்கூற, சபை மங்களகரமாக நிறைவேறியது.

மணிவாசகன்

10-12-1917-ல் நடந்த ஆதனக்கோட்டை உபாத்தியாயர்சங்கத்தின் ஏழாவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்.

சங்கத்தின் மெம்பர்கள் 21 பேர்களுக்கு 19பேர்கள் ஆஜராயிருந்தார்கள்.

(1) சங்கம் காலை 9-மணிக்கு ஆரம்பம் செய்யப்பட்டு ஸ்கூல் மாணாக்கர்களால் தெய்வவணக்கம் தியானம் செய்யப்பட்டு கடவுள் ஸ்தோத்திரப்பாடல்கள் சுருதிலயத்துடன் பாடப்பட்டு ஒழுங்காய் அவரவர்கள் ஸ்தானங்களில் அமர்த்தப்பட்டார்கள்.

(2) அக்காலத்தில் இவ்விழாவுக்கென்று பலவித அலங்காரத்துடன் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் ஸ்ரீவித்யாரூபிணியாகிய ஸரஸ்வதிபடத்தின் ஸந்நிதானத்தில் அமையப்பெற்ற ஆஸனங்களில் விஜயம் செய்து உட்கார்ந்த கனவான்களில் காம்பக்குடிரேஞ்சுஸ்கூல்டிப்டி.இன்ஸ்பெக்டர் மகா-ா-ஸ்ரீ சேஷய்யர் அவர்கள் ஆலங்குடி, பிரிட்டிஷ ரிடையர்டு தாசில்தார் மகா-ா-ா-ஸ்ரீ K. S. ராமச்சந்திரய்யர் அவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி பிரேரேபனை செய்ய அண்டக்குளம் ஸ்டேட்ஸ்கூல் ஹெட்டீச்சர் B. L. வெங்கிடராமையர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு மற்ற மெம்பர்களுடைய கரகோஷங்களுடன் அய்யர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

(3) உடனே அய்யர் அவர்கள் முகவுரையாகச்சிலவார்த்தைகள் சொல்லியபின்னர், கடவுள் வணக்கம் ஆதனக்கோட்டை ஸ்டேட் ஸ்கூல் 2-வது உதவி உபாத்தியாயர் சுப்பிரமணியபிள்ளையவர்களால் சுருக்கமாகப்பாடப் பட்டது. பிறகு இச்சங்கத்தின் செக்ரடரி A. S. பஞ்சாபகேசசாஸ்திரியால் சென்ற 1916ஞு டிசம்பர்மீ முதல் 1917 டிசம்பர்மீ வரையில் இச்சங்கம் செய்திருக்கும் வேலையைப்பற்றிச் சுருக்கமான ரிபோர்ட்டும் வரவு செலவு கணக்குகளும் படித்துக் காட்டப்பட்டன.

(4) ஆதனக்கோட்டை ஸ்டேட் ஸ்கூல் 4வது வகுப்புப் பிள்ளைகளுள் R. மாரிமுத்து என்பவனால் பாலர் வகுப்புக்கு "இடம் (Spaw work) கணக்கு" கோணம் என்பதிலிருந்து ஆரம்பித்து முக்கோணம், நாற்கோணம் என்பவைகளைப் பலவஸ்துகளைக்கொண்டு காட்டி மாதிரிப்பாடமாகப்போதிக்கப்பட்டது. பிறகு அதேவகுப்பு G. நடேசன் என்பவனால்அதே வகுப்புக்கு "நிறங்கள்" என்னும் பாடமானது பலவிதமான நிறங்களைத் தண்ணீரில் கரைத்தும் கலந்தும் காட்டி முக்கியமான நிறங்களையும் கலப்பு நிறங்களையும் வித்யாசப்படுத்திக்காட்டி மாதிரிப்பாடமாக போதிக்கப் பட்டது.

(5) இந்தநிறசம்பந்தமானபாடத்தை யநுசரித்து அக்கிராசனாதிபதியவர்கள் தங்களுடன் கொணர்ந்த சிலபடங்களைக்காட்டி மனிதர்களுடைய எண்ணங்களுக்கும்ரூபங்கள் நிறங்கள் உண்டென்றும் இன்னின்னகுணங்களை யடையும்போது இன்னின்ன ரூபங்கள் நிறங்களையடைகிறதென்றும் உலகத்தின் கண்ணுள்ள ஜீவவர்க்கம் மூலவர்க்கம் தாதுவர்க்கம் எல்லாவற்றிற்கும் உயிர்உண்டு என்பது நம்இந்தியாதேசத்தில் வங்காளத்து மகானாகிய J, C Bose என்பவரால் மின்சாரசக்தியைக்கொண்டு எடுத்துக்காட்டப்படுகிறதென்றும் அது ஸம்பந்தமான அரிய பெரிய விஷயங்களையும் கேட்போர் பார்ப்போர் மனதைக் கவரும்படி உருக்கமாய் எடுத்துச் சொன்னார்கள்.

(6) பிறகு நான்காவது வகுப்பு M. ராமையா என்பவனால் ஐம்புலன்களில் சுவைஎன்னும்விஷயத்தைப்பற்றி பாலர்வகுப்புக்குப் பலவிதசரக்குகளைச் சுவைக்கச்செய்து அறுசுவைகளையும்வித்யாசப்படுத்திக்காட்டி மாதிரிப்பாடமாக போதிக்கப் பட்டது. உடனே மணி 12 ஆகியபடியால் எல்லோரும் உண்டியருந்தவேண்டியகாலமாகியதென்று அக்கிராசனாதிபதியவர்கள் சந்தோஷமாய் எல்லோருக்கும் உத்தரவளித்து மறுபடி 2 மணிக்குவந்துகூடும்படி கேட்டுக்கொண்டார்கள்.

(7) மாலை 2மணிக்கு ஸ்கூல் ஸுப்பரிண்டெண்டெண்ட் மகா-ா-ா-ஸ்ரீ B. V. சங்கரராமேசுவரஅய்யர் அவர்கள் விஜயம் செய்ய அக்கிராசனாதிபதியவர்களால் கனவான்களுடைய ஸந்தோஷமான கரகோஷங்களுடன்மறுபடியும்

அக்கிராசனம் வகிக்கப்பட்ட, இவ்வூர் ரிடையர்டு ஸால்டுஇன்ஸ்பெக்டர் மகா-ா-ா-ஸ்ரீ K. S. கிருஷ்ணசாமி அய்யர்அவர்கள் இச்சமஸ்தானம் மைனர் இர்ரிகேஷண் ஸூபர்வைசர் மகா-ா-ா-ஸ்ரீ T. G. ராமச்சந்திரய்யர்அவர்கள் ஆலங்குடிதாலூகா மைனர் இரிகேஷண் ஓவர்சியர் மகா-ா-ா-ஸ்ரீ ஸ்ரீநிவாஸய்யங்கார்அவர்கள் இவ்வூர் போலீஸ் ஸ்டேஷன் ஹவுஸ் ஆபீஸர் ஸ்ரீ ரெங்கசாமிநாயுடு அவர்கள் இவ்வூர்கிராம உத்தியோகஸ்தர்கள் மகாஜனங்கள் மிராசுதார்கள் குடிகள் எல்லோரும் அவரவர்கட்கு ஏற்பட்ட இடங்களில் அமர்ந்தபின்னர், நான்காவது வகுப்பு மாணாக்கனுகிய K. முத்தய்யனால் பாலர் வகுப்புக்குப்படத்தைப்பார்த்துக் கதைசொல்லுதல் என்பதற்கு "காக்கையும் நரியும்" என்னும் பாடத்தைக் கரும்பலகையில் நான்குபிரிவுகளாகத் தானே சித்திரப்படங்கள் போட்டுக்காட்டி மாதிரிப்பாடமாகப் போதிக்கப்பட்டது.

(8) அதேகதை 3வது வகுப்புச் சிறுமி B. பாலாம்பாள் என்பவளால் அபிநயப்பாட்டுடன்பாலர்வகுப்புக்குப்போதிக்கும் முறையை மாதிரிப்பாடமாக போதித்துக் காட்டப்பட்டபிறகு ஷை வகுப்பு S மதுராம்பாள் என்னும்சிறுமியால் அதேபாலர்வகுப்புக்கு, கதைசொல்லுதல் எப்படி என்பதைப்பற்றி மாதிரிப்பாடமாக "வேப்பமரமும் நாணலும்" என்னும் கதை "தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய்" என்னும் நீதிக்கிணங்கப்போதித்துக் காட்டப்பட்டதன் மேல், ஸ்ரீ ஸ்கூல்குப்பரிண்டெண்டெண்டவர்களால் குழந்தைகளுச்குக் கதை சொல்வதில பெரியவர்களுக்கு ஸமஞ்சஸமில்லாதிருந்தாலும் அதை ஸமஞ்சஸப்படுத்திக் குழந்தைகளுக்குப் புகட்டும்படி உபாத்தியாயர்களாகிய மெம்பர்களுக்குப் பலதிருஷ்டாந்தங்களுடன் கூறப்பட்டது.

(9) 2வது வகுப்பு N. நாராயணசாமிஎன்பவன் பாலர்வகுப்புக்குப் பாட்டுடன் தேஹாப்பியாஸம் [Drill) செய்தலைப் பாடிக்காட்டி அப்படியே பிள்ளைகளைச் செய்யும்படி டிரில் நடத்திய பிறகு மகா-ா-ா-ஸ்ரீ குப்பரிண்டெண்டெண்டவர்கள் அதேபையனை மூச்சு அப்பியாஸம் (Breathing Exercise) நடத்தும்படிசொல்ல அவனால் அந்தஅப்யாஸங்களும் அவர்களுக்கு நடத்திக்காட்டப்பட்டது. பிறகு பிள்ளைகள் ஸால்யூட் செய்துபோனபிறகு பெண்குழந்தைகளால் கும்மிகோலாட்டம் முதலியவை போட்டுக் காட்டப்பட்டன.

(10) ஆலங்குடி கோவாபரேடிவ் கான்பரன்ஸில் புதுக்கோட்டை டவுன் பாங்கிகாரியதரிசி மகா-ா-ா-ஸ்ரீ G. சுந்தரேசய்யர்அவர்களால் "ஒருரூல்கோவாபரேடிவ் கிரெடிட்ஸொஸைட்டி பஞ்சாயத்துக்கு மீட்டிங்கில் நடக்கும்மாதிரியைக்காட்டி" எழுதப்பட்டு ஸொஸைட்டிகளுக்கு அனுப்பப்பட்ட புஸ்தகத்திலுள்ளபடி இவ்வூர் ஸ்டேட்ஸ்கூல் 4வது 3வது வகுப்பு பிள்ளைகளால் சம்பாஷணை செய்யப்பட்டு விஷயம் அக்கிராசனாதிபதியவர்களுக்கும் மற்றுமுள்ள கனவான்களுக்கும் அதிகஆனந்தத்தைவிளைவிக்க ஸ்ரீ குப்பரிண்டெண்டெண்டவர்களால் ஷைபையன்களுக்கு நீதித்தொகுதி யென்னும் புஸ்தகங்கள் பரிசளிக்கப்பட்டன.

(11) சங்கத்தின் செக்ரடரியால் "கல்வியறிவின்பயன்" என்னும் விஷயத்தைப்பற்றி உபந்யாஸம் செய்யப்பட்டு காளிதாஸன் என்னும் மகாகவி தன்னை வந்தடைந்த ஒன்றுமறியாத ஏழைப்பிராமணனைச் சொல்வவந்தனுகச் செய்தகதை கூறப்பட்ட பிறகு அதேவிஷயத்தை யனுசரித்து அண்டக்குளம் ஸ்டேட்ஸ்கூல் B. L. வெங்கிடராமையர் அவர்களால் கேட்போர் மனமுவக்க உபந்யாஸம் செய்யப்பட்டது.

(12) அக்கிராஸனாதிபதியவர்களின் முடிவுரை சுருக்கமாயினும் அநேக விஷயங்களை அடக்கிவைத்திருக்கும் சிறு வாக்கியங்களாக விஷயங்கள் எடுத்துச் சொல்லப்பட்டுக்கேட்போர் மனதை உருகும்படி செய்தது, ஐயாவர்கள் சொல்லியபடியே செய்யவேணுமென்னும் ஊக்கத்தைமெம்பர்களுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் உண்டுபண்ணியதென்பதை மறுக்கமுடியாது.

(13) பிறகு சுப்பிரமணியபிள்ளையவர்களாலும் மாந்தாங்குடி டீச்சர் ராமசாமி வெட்டுவான் அவர்களாலும் ஹார்மோனியம் சுருதியுடன் தெய்வவணக்கப்பாட்டுகள் பாடப்பெற்றக்குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கப்பாலுள்ள வெளியில் பலவிதவிளையாட்டுகள் (Sports) விளையாடிய பின்னர் சுமார் 5 மணிக்கு அவர்களைக்கொணர்ந்து ஒழுங்காய் நிறுத்தப்பட்டு H. M. சக்கரவர்த்தியாரவர்கள் H. H. மகாராஜா அவர்கள்வாழ்த்துப் பாட்டுகள் மங்களப்பாட்டுகளுடன் வந்திருந்தவர்களனைவருக்கும் சந்தனதாம்பூலாதிகள் வழங்கிய பிறகு சேர்மன் அவர்களுக்கும் மற்றும் சபையிலமர்ந்திருந்த கனவான்களுக்கும் வந்தனங்களளிக்கப்பட்டு கரகோஷங்களுடன் சபை கலைந்தது.

சுபம்.

ஆதனக்கோட்டை
10—12—17

A. S. Panchapagesa Sasthri.
Secretary.

உ

ஸ்ரீ காநகர்.

ஞானசம்பந்தநற்சபை.

இதன் மாதாந்தரக் கூட்டம் நிகழும் பிங்களஷூ மார்கழிமீ ௩௨ (17—12—17) திங்கட்கிழமை பிற்பகல் 4½ மணிக்குச் சொக்கலிங்கம்புத்தூர் மாணிக்கவாசக வித்தியாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ ரெ. இராமமூர்த்திபிள்ளையவர்கள் அக்கிராசனத்தின்கீழ்க் கூடிற்று. கடவுள்வாழ்த்துக்கூறப்பெற்றவுடன்,—

(1) பலவான்குடி சி வீ. வித்தியாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ வீ· குமாரவீரையாவர்கள் "ஈவது விலக்கேல்" என்னும் விஷயத்தை மிகவும் விரிவாகவும் அழகாகவும் உபந்யசித்தார்கள்.

(2) காரைக்குடி கம்பராமாயணப்பிரசாரகர் ஸ்ரீ M· V. கோவிந்தராஜையங்காரவர்கள் கம்பராமாயணம் கடவுள் வணக்கம் உலகம் யாவையும் என்ற பாட்டிலுள்ள தத்வார்த்தங்களை வடமொழி தென்மொழி மேற்கோள் கொண்டு விளக்கிப்பரக்க வுபந்யசித்தார்கள்.

பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் ஷை உபந்யாசங்களிலுள்ள விசேஷங்களை விளக்கிவிரிவாக அபிப்பிராயங் கூறினார்கள். யாவருக்கும் வந்தனோபசாரஞ்செய்யப் பெற்று மங்களவாழ்த்து நிகழ இரவு 8½ மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று. க. வி. கலாசாலையில் வாசித்த காரைக்குடி அள. ராம. திருநாவுக்கரசு, சபை கலாசாலை முதலியவற்றை வாழ்த்தி ஒருவாழ்த்துப்பாக்கூறினான்.

சம்பந்தன்.

சல்கூஷணை.

(424-ம் பக்கத் தொடர்ச்சி)

காளியாயி, "ஹோட்டலில் இந்த உடையோடு இரவில் தங்கி, காலையில் மாறுவேஷம் போட்டுக்கொண்டால், ஹோட்டலில் உன்னைப் பார்த்தவர்கள் உன்னுடைய மாறுவேஷத்தைக் கண்டுகொள்வார்கள்."

மதிமான், "ஆம், அது பிசகுதான். நேற்றுத் தீர்மானித்தபடி நான் இங்கேயே இரவைக் கழிக்கிறேன்."

மதிமான் சாராயம் இருக்கிறதா என்று கேட்க, அவள் அன்று புதிதாய்க் கடையில் வாங்கிவந்த இரண்டுபோத்தல் (Bottle)களைக் கொடுத்தாள். இரண்டு போத்தல் சாராயத்தையும் அவன் குடித்த பிறகு, படுக்கைக்குப்போகவேண்டுமென்றான்.

"காளியாயி இதுவரையும் நீ யாரென்றும், உன் பெயர் இன்னதென்றும் எனக்குத் தெரிவிக்கவில்லையே."

மதிமான், "நான்யாரென்பதை நீ அறிந்துகொள்வதனாற் பாதகமில்லை. நீ அதை ஒருவரிடமும் வெளியிடமாட்டாய் என்று எனக்குத் தெரியும். நான் புவனாலயம் ஜமீந்தார். என் பெயர் மதிமான்"

காளியாயி, "அவளுடைய தாதிக்கு முதலில் ஏதாவது முன்பணம் கொடுக்க வேண்டும்."

மதிமான் மடியிலிருந்து ஒருபணப்பையை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, "இந்தப் பத்துரூபாய் நோட்டைஅவளிடம் கொடு—வேண்டாம்—நோட்டு வேண்டாம். ரூபாயாகவே கொடுத்துவிடு". என்று சொல்லி, முதலில் எடுத்த நோட்டைப் பைக்குள் வைத்துவிட்டு, சலசலவென்று சப்திக்கும்படி பத்து ரூபாயை எடுத்து எண்ணி அவளிடம் கொடுத்தான்.

"நாளை அதிகாலையில் தாதியினிடம் இந்தரூபாயைக்கொடுத்து விடுகிறேன்" என்று சொல்லி, காளியாயி மதிமானை மேல்வீட்டி லிருந்த அறையொன்றிற் கொண்டுபோய்விட்டு, அங்கு நித்திரை செய்யச்சொன்னாள். அவ்வறையின் ஒரு பக்கத்திற் கனதியாக வைக்கோல் பரப்பப்பட்டு, அதன்மேல் ஒருபாய் விரிக்கப்பட்டிருந் தது. பாயும், தலையணைகளும், போர்வையும் புதியனவாயிருந்தன. மதிமான் தன்னுடைய மாளிகையிலிருக்கும் படுக்கையறையையும் இதையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது, அவனுக்கு இந்த அறையில் நித்திரை செய்வது மிகவும் கஷ்டமாகத் தோன்றிற்று. ஆயினும் பாலாமணியை அடைவதற்குச் சிறிது கஷ்டப்படத்தான்வேண்டு மென்று எண்ணிக்கொண்டு அந்தப் பாயிற் படுத்து அயர்ந்து நித்தி ரைசெய்தான்.

நடுச்சாமவேளையிற் காளியாயி வீட்டைவிட்டுப் புறப்பட்டு மெதுவாய் வெளியே சென்றாள். கொஞ்சதூரம் சென்றதும் ஒரு மனிதன் புதர்களிலிருந்து வெளியே வந்து அவளெதிரே நின்றான்.

" என்ன காளி, எல்லாம் சரியாயிருக்கிறதா ? " என்று அங் கே தோன்றினவனாகிய வீரசிங்கம் கேட்டான்.

காளி, " ஆம், எல்லாம் சரியாயிருக்கிறது. இப்பொழுது தான் மேலேபோய் மெதுவாய்ப் பார்த்துவிட்டு வந்தேன். அவன் குறட்டை விட்டுத் தூங்குகிறான். "

வீரசிங்கம், " சிரமத்திற்குத் தகுந்த லாபம் கிடைக்குமா ? "

காளி, " உன் பங்கிற்குக் குறைந்தது இருநூறு ரூபாய் கிடைக்கும். "

வீரசிங்கம், " நிச்சயம் கிடைக்குமா ? "

காளி, " அவன் அணிந்திருக்கும் நகைகளைப் பேயாண்டி நூறு ரூபாய்க்கு வாங்கிக்கொள்ளுவான். கடையில் விற்றால் மூந் நூறு ரூபாய்க்கு விற்கலாம். ஒருகடியாரமும் தங்கச்சங்கிலியும்

வயிர மோதிரங்களும் இருக்கின்றன. அவனுடைய பணப்பையைப் பார்த்தேன். ஒரு பக்கத்தில் நோட்டுக்களும் மற்றொரு பக்கத்தில் ரூபாய்களும் இருக்கின்றன. அதில், குறைந்தது மூந்நூறு ரூட-யிருக்கும். ”

வீரசிங்கம், “ சிரமத்திற்குத் தகுந்த கூலி கிடைக்கும்போலிருக்கிறது. என்னிடத்திற் கைத்துப்பாக்கியும் கத்தியும் இருக்கின்றன; புதைகுழி தோண்டுவதற்கு மண்வெட்டி இருக்கிறதா ? ”

காளி, “ நான் அதைமறந்துவிடவில்லை. அது குடிசையிலிருக்கிறது. இன்றைக்கு மற்றைய சாமான்களை வாங்கிக்கொண்டு வந்தபோது அதையும் வாங்கிவந்தேன். கனமாய் வைக்கோல் பரப்பி அதன்மேல் அவனுக்குப் படுக்கை போட்டிருக்கிறேன் ”

வீரசிங்கம், “ எனக்கு விளங்குகிறது. இரத்தக்கறை தரையிற் படாதபடி வைக்கோலைப்பரப்பினுய்போலும், ஆனுல் அவன்யார் ? ”

காளி, “ அவன் ஜமீந்தாராயிருந்தால் மாட்டேனென்பாயோ?”

வீரசிங்கம், “ ஜமீந்தாராயிருந்தால் எனக்கென்ன ? ”

காளி, “ அப்படியானுற் சொல்லுகிறேன். அவன் புவனலயம் ஜமீந்தார். ”

“ புவனலயம் ஜமீந்தாரா? ” என்று அவன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

காளி, “ ஆம், புவனலயம் ஜமீந்தார்தான். நீ ஏன் புவனலயம் ஜமீந்தார் என்றதும் அவ்வளவு ஆச்சர்யப்பட்டாய்? ”

வீரசிங்கம், “ நான் புவனலயம் ஜமீந்தார் குடும்பத்திற் சில காரியம் செய்திருக்கிறேன். துஷிதன் என்பவன் என்னை அமர்த்தினுன். அது நடந்து இப்பொழுது பத்தொன்பது இருபதுவருஷங்களாகின்றன. ”

பிறகு இருவரும் குடிசைக்குள் நுழைந்தார்கள். நுழைந்தவுடன் காளியாயி ஓசைப்படாமற், கதவைச் சாத்தினுள். உள்ளே ஆகாரங்களும் சாராயமும் இருந்தன. உடனே வீரசிங்கம் உட்கார்ந்து வயிறு நிறையச்சாப்பிட்டு, சாராயத்தைக் குடித்தான்.

காளி, 'நேரமாகிவிட்டது. இனிமேல் தாமதிக்கக்கூடாது. பொழுது விடிவதற்குள், பிணத்தை மறைத்துவிடவேண்டும்' என்று சொல்லிவிட்டுக் கையில் ஒரு ஈட்டியை எடுத்துக்கொண்டாள்.

காளியாயி. இடது கையில் எரிகிற மெழுகுவர்த்தியை எடுத்துக்கொண்டும், வலதுகையில் ஈட்டியைப் பிடித்துக்கொண்டும், மெதுவாய் அறையைவிட்டு வெளியேவந்து படிகளில்ஏறினாள். அவள் பின்னால் வீரசிங்கம் சென்றான். இருவரும் சற்றுநேரம் மதிமான் தூங்கும் அறைக்கதவருகில் நின்று கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். குறட்டைவிடும் சப்தத்தைத் தவிர வேறொருசப்தமும் கேட்கவில்லை. ஆகையால் அவன் அயர்ந்து நித்திரைசெய்வதாய் அவர்கள் நிர்மானித்துக்கொண்டார்கள். காளியாயி மெதுவாய்க் கதவைத் திறக்கவும் இருவரும் உள்ளே நுழைந்தார்கள். அவள் கையில் வைத்திருந்த மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தால், மதிமான் அயர்ந்து தூங்குவது அவர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் தங்களுடைய கொலைத்தொழிலை ஆரம்பிக்கப்போகும் சமயத்தில் காளியாயி உரத்த சப்தமாய்க் கூச்சலிட்டாள். அந்தக் கூச்சல் ஆச்சரியத்தினாலும் பயங்கரத்தினாலும் உண்டானதுபோலிருந்தது. திடீரென்று உண்டான மனக்குழப்பத்தினால், அவள்மெழுகுவர்த்தியைக் கீழேபோட்டுவிட, அது அணைந்துபோய் அறை முழுவதும் இருள் நிறைந்தது.

அவள் போட்ட கூச்சலினாலும், மெழுகுவர்த்தி விழுந்த சப்தத்தினாலும் மதிமான் விழித்துக் கொண்டு, "திருடர்கள்! திருடர்கள்! கொலை! கொலை!" என்று கத்தினான்.

காளியாயி உடனே மனக்குழப்பம் நீங்கி வீரசிங்கத்தின் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு 'இந்த அறையை விட்டு வெளியேபோ' என்று இரகசியமாய்ச் சொன்னாள். வீரசிங்கம் நடந்தகாரியங்களால் ஆச்சரியத்தை அடைந்தான். என்னசெய்கிறதென்று அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் காளியாயி சொன்னதற்கு ஏதாவது தகுந்த காரணமிருக்கவேண்டுமென்று நினைத்து அவள் சொன்னபடி அறையை விட்டு வெளியே போனான். அவள்

போனதும் காளியாயி படீரென்று கதவைச் சாத்தினாள். பிறகு கத்திக்கொண்டிருந்த மதிமானிடத்திற்கு விரைந்து வந்து, "கத்தாதே, ஒன்றுமில்லை" என்று சொன்னாள்.

மதிமான், "ஏதோ சப்தம் கேட்டதே அது என்ன? என்னை ஒன்றும் செய்யாதே. என்னுடைய பணப்பையை வேண்டுமானால் எடுத்துக்கொள். ஆனால்-ஆனால்-" என்று சரீரமெல்லாம் நடுங்கிக் கொண்டு, சொல்லி முடிப்பதற்குள், காளியாயி சொல்லுகிறாள், "நீ பயப்படவேண்டியதில்லை. நான் உனக்குத்தீங்குசெய்யமாட்டேன். எனக்கு உன்னுடைய பணப்பை வேண்டாம்."

"ஆனால் என்னநடந்தது? நீ இங்கு என்ன செய்கிறாயென்று சொல், அந்தச்சப்தம் கேட்டதே, அது என்ன? உன்கையில் ஏதோ பிரகாசித்துக்கொண்டிருந்ததைப் பார்த்தேனல்லவா?" என்று மதிமான் இன்னும் நடுங்கிக்கொண்டே சொன்னான்.

காளியாயி ஈட்டியை மறைத்துவிட்டுச் சொல்லுகிறாள், "இல்லை அது ஒன்றுமில்லை. நான் மெழுகுவர்த்தியைக் கீழேபோட்டுவிட்டேன். யாரோ ஒருகுடிகாரன் வீட்டிற்குள் நுழைந்தான். இந்த வீட்டிலிருந்து நீ உடனே வெளியே போகவேண்டும். என்னை ஒன்றும் கேட்கக்கூடாது. தாமதிக்காமல் நான் சொல்லுகிறபடி செய். நான் வெளியேபோய்விட்டுச் சிலநிமிஷங்களுக்குள் திரும்புவேன். அதற்குள் நீஇந்தவீட்டை விட்டுப்போகத் தயாராயிருக்க வேண்டும்."

அவள் உடனே கீழே இறங்கி வீரசிங்கத்தினிடம் போனாள். அவன், அவள் திடீரென்று கூச்சலிட்டதற்கும் கொலையை நிறுத்தினதற்கும் காரணம் தெரிந்து கொள்ள, ஆவலாயிருந்தான். காளியாயி விளக்கை ஏற்றிவிட்டு உறுதியான குரலுடன் சொல்லுகிறாள், "நீஇங்கேயே உட்கார்ந்திரு. நடந்தவைகளைப்பற்றி உனக்கு விளங்கச் சொல்லுகிறேன். ஆனால் இப்பொழுது சொல்லமுடியாது. அவன் வீட்டைவிட்டுப் பத்திரமாய் வெளியே போனபிற்பாடுதான் சொல்லுவேன்,—"

வீரசிங்கம், "என்ன! அவன் நம்மை விட்டுத் தப்பியோட வேண்டுமென்கிறாயா?"

காளி, "ஆம், என்னை உனக்கு நன்றாய்த் தெரியும். நான் செய்வனவெல்லாம் கெடுதலாயிருக்க மாட்டாவென்பதும் உனக்குத் தெரியும்,"

வீரசிங்கம், "ஒருவேளை நீ செய்கிறது நன்மைக்காக இருக்கலாம். ஆனால் அது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது."

காளி, "இருந்தபோதிலும் அதுதான் என்னிஷ்டம். நான் நாலைந்து நிமிஷங்களில் திரும்பி வருவேன். அதுவரை சாராயத்தைக் குடித்துக்கொண்டிரு," என்று சொல்லிவிட்டு விளக்கை எடுத்துக்கொண்டு மதிமானிடத்திற்குச் சென்றாள். அவன் வெளியே போவதற்குத் தயாராயிருந்தான். காளியாயி சற்றுநேரம் அவனைக் கவனமாய்ப் பார்த்தாள்.

காளி, "இங்கே நடந்தவிஷயங்கள் உனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கலாம். அவைகளைப்பற்றி ஒருவார்த்தைகூட நான் உனக்குச் சொல்லமாட்டேன். ஆனால் ஒரு விஷயம் சொல்லுகிறேன். 255 நி-ர் வீட்டிலிருப்பவனைப்பற்றியும் அவன் தாதியைப் பற்றியும் நான் சொன்னதெல்லாம் முழுப்பொய்."

மதிமான், "இது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது,"

காளி "இன்னும் ஒருமணிநேரம் 'நின்றாலும்' இவைகளைப் பற்றி ஒருவார்த்தைகூட நான் உனக்குச் சொல்லப்போகிறதில்லை. ஆகையால் உடனே வெளியேபோ."

மதிமான், இனிமேல் நிற்பதிற் பிரயோஜனமில்லை என்று காளியாயியின்பின் சென்றான். அவள் குடிசையின் கதவைத்திறக்க மதிமான் வெளியே போனான். கதவைச் சாத்திவிட்டு அவள் வீரசிங்கத்தினிடம் போனாள். காளியாயியையும் வீரசிங்கத்தையும் குடிசையில் விட்டுவிட்டு, நாம் மதிமானுடன்போவோம்.

அவன் வெளியேறினதும், தன்னுடைய மாளிகைக்குப் போகலாம் என்று யோஜித்தான். இரவு மணி ஒன்றுஆனபடியால் வாடகை வண்டி கிடைக்கவில்லை. மெதுவாய் நடந்து போய்க்கொண்டிருந்தான். 255 நி-ர் வீட்டருகிற் சென்றதும் சற்றுத் தாமதித்தான் அந்தவீட்டின்கதவு திறக்கப்பட்டு, ஒருஸ்திரீ வெளியே வந்தாள். அவள் வேலைக்காரியைப்போலிருந்தாள்.

மதிமான். " இந்நேரத்தில் உனக்கு வெளியில் என்ன வேலை? "

ஸ்திரீ, ' நடுச்சாமவேளையில் இங்கு நீ என்ன செய்கிறாய்? நீ யார்? இந்நேரத்தில் உன்னை இங்குக் கண்டதும் நான் பயந்து போனேனே. '

மதிமான், " நான் புவனாலயம் ஜமீந்தார். இங்கு ஒரு காரியமாய் வந்தேன். இந்தப் பத்துரூபாய் நோட்டை வைத்துக்கொள், " என்றுசொல்லி நோட்டைக்கொடுத்தான். அவள் அதைச் சந்தோஷமாய் வாங்கிக்கொண்டு, என்னகாரியமென்று கேட்டாள். மதிமான், " உன் எஜமானி எப்படிப்பட்டவள்? நான் அவளை நாடகக் கொட்டகையிற் கண்டேன். மிகவும் ஆசைகொண்டேன். அவள் எனக்கு இசைவாளா? நான் ஏராளமான ஆஸ்தியை உடையவன். "

ஸ்திரீ, ' என்னுடைய எஜமானி இன்னும் சற்று நேரத்தில் நாடகத்திலிருந்து வருவாள். அதற்காகத்தான் நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதுவரையும் தாங்கள் கொஞ்சதூரத்துக் கப்பாற் போயிருக்கவேண்டும். எஜமானி வந்ததும் கேட்டுச் சொல்லுகிறேன். '

அப்படியே மதிமான் கொஞ்சதூரத்திற் போயிருந்தான். பாலாமணியும் சற்றுநேரத்தில் வந்தாள். வேலைக்காரி நாலைந்து நிமிஷம்வரை அவளுடன் பேசிக்கொண்டிருந்தாள். பாலாமணி உள்ளேபோனபிற்பாடு, மதிமான் வேலைக்காரியினிடம்போய், என்ன சமாசாரம் என்று ஆவலாய்க் கேட்டான். அவள் அவனை உள்ளே

அழைத்துக்கொண்டுபோய் ஒரு அறையில் உட்கார வைத்தாள். சில நிமிஷங்களானதும் பாலாமணியும் அந்த அறைக்கு வந்தாள்.—

பத்தொன்பது வருஷங்களுக்கு முன்.

காளியாயியும் வீரசிங்கமும் என்ன செய்கிறார்களென்று பார்ப்போம். காளியாயி தன் நடத்தையின் காரணத்தை வீரசிங்கத்திற்குத்தெரிவிப்பதில்லை என்று நிர்மானித்துக்கொண்டாள். ஆகையால் அவனுக்கு ஏதாவது சமாதானம் சொல்லி அவனிடத்திலிருந்து சில விஷயங்களை அறியவிரும்பினாள்.

காளி, 'சாராயம் நன்றாயிருக்கிறதா ?'

வீரசிங்கம், 'இந்தச் சாராயத்திற்காகவா நான் இங்குவந்தேன்? இன்றைக்கு நான் அடையவிருந்த இருநூறு ரூபாயை இழந்து போகும்படி செய்து விட்டாயே.'

காளி, 'உனக்கு என்னைச் சில வருஷங்களாகத் தெரியும், நான் உன்னை எப்பொழுதாவது ஏமாற்றியிருக்கிறேனா?'

வீரசிங்கம், 'நாமிருவரும் சிலகாரியங்களைச் சேர்ந்து செய்திருக்கிறோம் அவைகளில் நீ யோக்யமாகவே நடந்திருக்கிறாய்.'

காளி, "இன்று நீ அடையவிருந்த ரூபாய் இருநூறையும், நான் உனக்கு நாளை இரவு ஒன்பதுமணிக்குப் பேயாண்டி கடையிற் கொண்டுவந்து கொடுக்கிறேன்."

வீரசிங்கம், "அப்படியானால் சரி. உன் காரியமெல்லாம் விநோதமாயிருக்கின்றன. நீ எதற்காக அவனைத் தப்பவிட்டாய்?"

(தொடரும்.)

வ. வி. நடேசன்செட்டி,
ஆத்தங்குடி.

அவதார சமயம்.

மேகங்கள் கறுக்க மழை பெய்கிறது. உணவைக் கொள்ள உடலும் வளருகிறது. தேனுண்டாகத் தேனீயும் ஓடிவருகிறது. கர்ப்பமுண்டாகக் குழந்தையும் வருகிறது. ஆகையால் நிகழ்காலத்தைக்கொண்டு நாம் ஒருவாறு எதிர்காலத்தையும் நிர்மானிக்கலாம்.

அன்பர்களே! தற்சமயம் உலகம் இருக்கும் நிலைமையை நாம் கவனிப்போம், அந்தோ! உரிமைக்கு உள்ள அதிகாரம் குறைந்திருக்கிறது. பெருமையுள்ள கர்வமென்பது உலாவி வருகிறது. பலமுள்ளவனே சொந்தக்காரனெனத் தெரிகிறது. சுலபநியாயம் என்பது சுழன்று வெளியே ஓடிக்கொண்டிருக்கிறது. பலனைக்கருதி, தம் சுயபலனைக் கருதித் தலை காலாகிறது; கால் தலையாகிறது; கருணை மறைகிறது; சிறுமை பெருகிவருகிறது; பலபல இடங்களில் இரத்தம் சிந்துகிறது; உடல்கள் வெட்டுண்டு சாகின்றன; யுத்தம் பெரிதாகிறது. யுக்தம் வெறுப்புறுகிறது.

இம்மட்டோ! மதம், நமது மதம், ஆரியமதம், இந்துமதம், வரவர க்ஷீணித்துவருகிறது. தத்துவ விசாரணை போலியாராய்ச்சியில் அமிழ்கிறது. அவரவரே பரமாத்மா என்ற ஆரம்பமும் வருகிறது. பெரியோர் உண்டோ என்ற சந்தேகமும் உண்டாகிறது. கடவுளைக்கண்டோர் யாரோ? என்ற வினவும் வெளிவருகிறது. நாகரீகம் மேலாடுகிறது. நவநீதம் புளகாங்கத்தை உண்டாக்குகிறது. சுவதந்தரீயம் பெண்பாலாரிடத்தும் மேலாடுகிறது. பெண்பேச்சே பெரும் பேச்சாகிறது. அதை யொட்டியே ஆண்பேச்சும் அமைகிறது. தர்மம் என்றவார்த்தைக்குப் பொருள் தெரிய வியாக்கியானம் வேண்டியதாயிருக்கிறது. தேவஇரகசியமும் தேவசபையும் உண்டோவெனத் தோன்றுகிறது. உண்டெனக்காணும் சிலரிற் பலரும் அரியஹிம்சைக்கு ஆளாக அவற்றை உபயோகப்படுத்துகின்றனர். "கடவுளைத் தியானஞ்செய், நன்மையும் மேன்மையும் நல்ல பலமும் உண்டாகும்" என்று ஒருவருக்குச் சொன்னால், அவர் அப்படியே கொஞ்சகாலஞ் செய்து, கர்வம் என்னும் கொடு

மைக்காளாகி, "எனக்கு விரோதியாகிய இன்னாரின்னார் துன்பமுற என் தியானபலம் முழுவதும் அர்ப்பணித்தேன்." என்றகோலத்தில் நுழைகிறார்.

இதையுந்தவிரப் பிறமததூஷணையே பார்க்குமிடமெங்கும்பரவுகிறது. சொல்லுவதற்கும் செய்வதற்கும் எட்டவில்லை, ஆகையால் தேசமும் தத்தளிக்கிறது.

இக்காரணங்களாற் சைவபக்தியும் (மங்கள) இராஜயோகமும் (உத்தம) இருக்குமிடந் தெரியவில்லை. நிற்க, ஒற்றுமை அற்றிருக்கிறது; நமது நாட்டைப் பற்றுதல் உற்றிருக்கிறது. என் செய்யலாம்!

இத்தகைய கோலம் நமக்குத் தெரிவிக்கும் விஷயம் என்ன? இத்தகைய வேஷத்திற்கு முடிவுயாது? யாரால்?

ஒரு குடும்பத்தைக் காப்பாற்ற எப்படி ஒரு தலைவர் இருக்கிறாரோ, அப்படியே சிருஷ்டி என்று சொல்லக்கூடிய இப்பெரியகுடும்பத்தைக் காப்பாற்ற ஸர்வ வல்லமையுள்ள ஈசுவரன் ஒருவன் இருக்கிறான். " அவனன்றியோரணுவும் அசையாது " அவனை விவரிக்கவும் நம்மா லியலாது. கருணைக் கடலென்பது அப்பரம தயாந்தரங்க மூர்த்தியையே. இரக்கம் பிறப்பது அவரிடத்திருந்தே. எவரெவர்க்கு எதுஎது வேண்டியதோ, அவரவர்க்கு அதையதைத் தந்திடும் தாதா அவரே. எவரெவர் எந்தஎந்த உருவத்திற்கூவுகின்றனரோ, அவரவர்க்கு அந்தந்த உருவத்தில் தரிசனந்தருபவர் அவரே. பாரபக்ஷம் என்பது அற்றவர் அப்பரமசிவமே. ஆனாலும் பக்தர்க்குச் சொல்லும்படியெல்லாந் தொண்டுழியஞ் செய்யும்அன்பு நிலையும் அவரே;

அப்படிப்பட்ட சுயஞ்சோதிப் பிரகாசர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியாக அவதரித்துத் திருலீலைசெய்த காலத்தில் அர்ஜுனனுக்கு அரியஉபதேசஞ் செய்யுஞ் சமயத்தில் " ஓ! அர்ஜுனா துஷ்டஸம்ஹாரத்தை முன்னிட்டும் சிஷ்டபரிபாலனத்தை முன்னிட்டும் மதஸ்தாபனத்தை முன்னிட்டும் நான் அடிக்கடி அவதாரமானேன்;

அவதாரமா யிருக்கிறேன்; அவதாரமாவேன்" என்று திருவாய் மலர்ந்தருளியிருப்பது நினைவுக்கு வருகிறது. "கடவுள் மறுபடியும் அவதாரமாகப் போகிறார். அஞ்சேல்" என்று மகான் விவேகாநந்தர் அங்கே அருளியிருப்பதும் நினைவுக்கு வருகிறது. இன்னும் பல ஞானிகளுக் யோகிகளும் பக்தர்களும் அங்கங்கே பல காரணங்களை முன்னிட்டு அவதாரக்குறியை ஆர்ப்பரித்துப் பேசியும் எழுதி வைத்தும் இருக்கின்றனர்.

ஆனபடியால், துணைவர்களே! தற்சமயம் அக்கருணைக்கடல் அவதரிக்கப் போகிறார். அல்லது இப்பொழுது அவதரித்து வளர்ந்து வருகிறார். இனி அவதரித்தாலும் அல்லது இப்பொழுதே அவதரித்திருப்பினும் அவர் வெளிவரும் பருவமொன்று குறிப்பிட்டுஏற்பட்டிருக்கவேண்டுமன்றோ. அவ்விஷயம் தற்சமயம் இருக்கும் அவருடைய பக்தகோடிகளிற் சிலருக்கேனுந் தெரியாம லிருக்கமாட்டாது. அது அவர் வெளிவரும் அப்பொழுது நம்மெல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரியவருமன்றோ! உலகுக்கும் முக்கியமான நம்மிந்தியாவுக்கும்அமைதியையும் சமாதானத்தையும் உண்டாக்கிப் பக்தியைப் பெருக்கி, அருளைப்பெருக்க ஆனந்தமூர்த்தி வெளிவருகிறார். எல்லாமதங்களும் கிளைகளெனத் துலங்கும் இந்துமதவிருக்ஷத்தின் கனியைக்காட்ட நித்தியானந்தர் வெளிவருகிறார். உள்ளபடியுள்ள உண்மை யிதுவென்று உள்ளத்தில் உற்பவிக்கச் செய்து அருளைக்காட்டப் பரமஹம்ஸதயாந்தரங்கமூர்த்தி பரிபூரணமாக வெளிவருகிறார். ஞானமென்னும் விவேகத்தைப் பக்தகோடிகளெல்லாரும்பெற்று நல்லவழி உய்யும்வண்ணம் நன்னயகாம் விவேகானந்தமயமூர்த்தி விளக்கமான வழியில் வெளிவர வருகிறார்.

இந்தச் சமயத்திற்கு முன்னும்பின்னும் நடுவிலும் இச்சமயத்திலும், நடக்க நிற்கும் அவரது வெளிவருகையின் அறிகுறியெனவோ அருளின் விசேஷமெனவோ, அரியகருணையின் பெருக்கெனவோ அவரது அருமையான பக்தர்கள் முகமாக அவர் ஆவிர்ப்பவமாகிறார்; அவருடைய அம்சம் வெளிவருகிறது.

ஆகவே, இது அவதார சமயம். நல்ல சமயம், நமது அன்பும் மறையும் சமயம்; தேசம் இனி விருத்தியையும் கூடிய சீக்கிரத்தில் அமைதியையும் அடையத் தக்கவழியில் உழைக்கத் தலைவருடன் ஒத்துவேலைபார்க்க உரிய சமயம்; நாம்மெய்ம்மறந்து ஆனந்தக்கூத் தாடத் தக்க தருணம்.

என்வே குவலயத்தோரே! கூவுகின்றேன்!! கூடவாருங்கள்!!! ஓடிவாருங்கள்!!!!

டி. வி. வேங்கடராகவலு ஐயர்,
உபாத்தியாயர், மாடல் ஸெக்ஷன்,
புதுக்கோட்டை.

உ

பள்ளிக்கூடத் தோட்டமும்

அதன் பிரயோஜனமும்.

நண்பர்களே!

சிறுகுழந்தைகளிடம் நூதனமாய் ஒருகாகிதப்பெட்டி அல்லது ஒரு பொம்மை முதலானவற்றைக் கொணர்ந்து வைத்தால் அதை எடுத்து ஆட்டிப்பார்ப்பதையும், அதற்குள் என்ன இருக்கிறது என்று தெரிந்துகொள்ளுமாறு, பிய்ப்பதற்கு முயலுவதையும் நாம் அடிக்கடி பார்த்திருக்கிறோம். இதனாலேயே சிறுபிள்ளைகளுக்கு ஆராய்ந்தறியும் சக்தி இயற்கையாகவே அமைந்துள்ளதென்று தெரிகிறது.

ஆகையாற் சிறுவர்கட்கு எவ்விஷயத்தைப் போதிப்பதானாலும் எழுத்து மூலமாயும், சொற்கள் மூலமாயும் போதிப்பதினும் ஒவ்வொன்றையும் நேரிற்பார்த்துத்தெரிந்துகொள்ளும்படி பழக்குவோமானால், இவ்வாறு தெரிந்துகொள்ளக் கூடிய விஷயம் எப்போதும் ஞாபகமிருக்கலாம். மேலும் பிள்ளைகளும் ஆவலுடன் கவனிப்பார்கள்.

சிறுவர்கள் கல்வி பயிலும்போதே, பாடசாலைத் தொழில்களுடன் தோட்டவேலையையும் சேர்த்துச்செய்துவருவது சிலாக்கியமாகையால், ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பெரிதாக இல்லாவிடினும், சிறிதாகவாவது ஒருபள்ளிக்கூடத்தோட்டம் அவசியம் இருத்தல்வேண்டும். இத்தோட்டத்தின் உதவியினால் தாவரவர்க்கத்தைப் பற்றியஒவ்வொரு பாடத்தையும் உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குப் போதிக்கும்போது, பிள்ளைகளைத் தோட்டத்திற்கு அழைத்துப் போய் அவைகளை நேரிற் காண்பித்துப் போதிப்பது மிகவும்சிறந்த வழியாகும். இத்துடன் இயற்கைப் பாடங்களிற் கற்றுக்கொள்ளக்கூடிய விஷயங்களை நேரிற் பரிசீலனைசெய்து தெரிந்துகொள்ளவும் இடந்தரும்.

இஃது இவ்வாறிருக்க நமது பட்டினங்களி லிருக்கும் பள்ளிக்கூடத்துப்பிள்ளைகளுக்குச் சாதாரணமாய்நெற்பயிர் எப்படிவிளைகின்றதென்றும், எம்மாதிரியிருக்கிறதென்றும் தெரிய அவகாசமிராது. இதற்காகஅம்மாணுக்கர்களைக் கிராமாந்தரஸ்கூலுக்குஅனுப்புகிறதா? இவ்விதமான குறையை நமது பள்ளித்தோட்டத்தைக்கொண்டு ஒருவாறு நீக்கலாம். அதாவது நமது பள்ளித்தோட்டத்தில் ஒரு பாகத்திற் (கிணறு இருந்தால் அதன் சமீபத்திற்) கொஞ்சம் நெல்லை விதைத்துப் பிள்ளைகளை அதைக் கவனிக்கச் செய்து, நாளுக்குநாள் உண்டாகும் மாறுதல்களைக் காட்டி அதை ஒருபுஸ்தகத்தில் தேதிவாரியாகக் குறித்துவரச் செய்தால், பிறகு நெற்பயிரைப் பற்றின அறிவு கூடுமானவரை பிள்ளைகளுக்கு நன்கு ஏற்பட்டு விடும்.

மேலும், பள்ளித்தோட்டத்தில் வேலைசெய்து வருவதனால் ஸ்தாவரங்களின் இயற்கை யமைப்பும் பூசாரத்தின் தன்மைகளும் எருவின் உபயோகமும் பிள்ளைகளுக்குப் பிரத்யக்ஷமாய்த் தெரியும். இதுவுமன்றிப் பயிர்களைப் பாதுகாக்கவும், செழுமைபெற வளர்க்கவும் பால்யம் முதலாகவே பயிலுவதற்கு இடந்தருகிறது.

இக்கருத்துக்கொண்டே மேல்நாட்டார் ஒவ்வொருபாடசாலையிலும் பள்ளிக்கூடத்தோட்டம் ஒன்று ஏற்படுத்தி யிருக்கிறார்கள்

என்று தெரிகிறது. இதையநுசரித்து நமது விவசாய இலாகா அதிகாரிகளும், எலிமெண்டரிபாடசாலையின் சேர்க்கையாய் ஒரு தோட்டம் (School Garden) ஏற்படுத்தி விவசாய ஸம்பந்தமான படிப்பைப் போதிக்கவேண்டும் என்று உரைக்கிறார்கள்.

இவைகளை ஆராயுமளவில், நம்முடையபாடசாலையின் பக்கத்திலுள்ள சொற்பஇடத்திலாவது சிறியதோட்டம் ஒன்று ஏற்படுத்தி, அதில், நமது ஸ்கூலில் வழங்கிவரும் பாடப்புத்தகங்களில் வரக்கூடிய (ஸ்தாவரசம்பந்தமான) பயிர்களையும், அந்தந்தக்கிராமங்களில் விசேஷமாய்ப் பயிரிடக் கூடிய ஸ்தாவரங்களையும், பயிர் செய்து, பிள்ளைகளை ஸரிவரக் கவனிக்கச் செய்து, விளையும் மாதிரிகளையும் அவைகளுக்குச் செய்யப்படும் வேலைகளையும் குறித்துவரச் செய்வோமானால், பாடங்கள்நடத்துவதில், பிள்ளைகள் பாடசம்பந்தமான விஷயங்களை நன்கு அறிந்துகொள்ள ஸாதகமாகும். மேலும் இவ்வாறு அடையக்கூடிய அறிவானது மறவாமல் நிலைபெற்றதாக இருக்கவும் கூடும்.

Kaikurichy
1—11—17

G. Narayanaswamy Ayer,
Headmastar,
S. E. School.

உ

மதிப்புரைகள்.

தர்மவித்யா ஞாநோதய சங்கம்:—

இராமநாதபுரம் ஜில்லா தேவகோட்டையில் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கும் இந்தச் சங்கத்தின் ஆதரவின்மேல் நடந்தேறிவரும் "வைசியமித்திரன் பெண்பாடசாலையின் முதல்வருஷ அறிக்கைப் பத்திரம்" ஒன்று நமக்குக் கிடைத்தது. இந்தப் பெண்பாடசாலை 1915வரு அக்டோபர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பெற்றதென்றும், இதனையொட்டியே செந்தில்ராஜன் பெண்பாடசாலை என்று பெயருடைய பெண்பாடசாலை யொன்றும் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கிற

தென்றும், ஷண்முகநாதபுரத்திலும் ஒரு பெண்பாடசாலை யேற்படப் போகிறதென்றும், இவற்றின் காரியதரிசிகள் தக்கவர்களாக அமைக்கப்பெற்றுத் தக்க பிரபுக்களாலும் ஆதரிக்கப்பெற்று வருவதால் நாள்டைவில் விருத்தியடைந்துவரு மென்றும் நம்புகிறோம். இந்த வைசியமித்திரன் பெண் பாடசாலையில் ஆரம்பமுதல் சென்ற டிசம்பர்மீ முடியச் சேர்ந்த குழந்தைகளின் மொத்தசங்கியை 145 ஆகும். இதில் வைசியப் பெண்கள் 68, பிராமணப் பெண்கள் 66, இதரஜாதிப் பெண்கள் 11 என்றும், தற்காலம் இருக்கும் மொத்த சங்கியை 57 என்றும், இதில் பாலர் வகுப்பிலிருந்து மூன்றுவது வகுப்புவரை நடந்து வருகின்றன வென்றும் தெரிகிறது. இதனை நடத்திவரும் தர்மவித்யா ஞானோதய சங்கத்தின் நோக்கமாவது-தனவைசியர்களாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஸ்திரமாக வசிக்குமிடங்களிலும் இதன் கமிட்டி மெம்பர்கள் யுக்தமெனத் தீர்மானிக்கும் மற்ற இடங்களிலும் சிறுவர் சிறுமிகளுக்கு இலவசமாகக் கல்வி பயிற்றுவிப்பதும் இந்தநோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வேண்டிய காரியங்களைச் செய்வதுமாகும். இச்சங்கத்திற்கு "வைசியமித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் சித. ராமநாதன்செட்டியாரவர்கள் ஆனரரி காரியதரிசியாக இருந்து சங்கத்தின் காரியங்களை நிர்வகித்து வருவார். சங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய செலவுகளுக்காகக் கீழ்க்கண்டவிதமாய்ப் பணம் சேகரிக்கப்பெறும்:—இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தனவைசியர்கள் செய்துவரும் லேவாதேவி வர்த்தகஸ்தானங்களிலும் தொழிற்சாலைகளிலும் மற்றும் அபிமானஸ்தர்களிடத்திலும் உண்டிப் பெட்டிகள் வைத்து அவற்றில் ஒவ்வொரு விலாஸதாரும் தினசரி காலணா வீதமோ அதிகமாகவோ போட்டுவந்து வருஷத்திற்கொருமுறை அந்த உண்டிப் பெட்டிகளிற் சேரும் தொகையையும், யாரும் நன்கொடை கொடுக்கும் தொகைகளையும் சங்கத்தின் காரியதரிசி பேருக்கு அனுப்பிவர வேண்டியதென்று ஏற்பாடுசெய்யப் பெறும். மேற்கண்ட விதமாய்ச் சேரும் மொத்தத்தொகையில் நான்கிலொருபங்கைச் சங்கத்தின் மூலதனத்திற்கென்று கமிட்டி மெம்பர்களால் தீர்மானிக்கப்பெறும் இடங்களில் வட்டிக்குப்போட்டு

வைத்துப் பாக்கித் தொகையைக் கமிட்டி மெம்பர்களால் அங்கீ கரிக்கப்பெறும் வேறு இடத்திற் கொடுத்துவைத்துக் கமிட்டி மெம் பர்கள் நிர்மானிக்கிறபடி சங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் படியான மார்க்கங்களிற் செலவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பெற் றிருக்கிறது. எனவே இச்சங்கம் நன்னோக்கங்களுடன் ஆரம்பிக்க பெற்றுத் தக்க பிரபுக்களாலும் ஆதரிக்கப்பெற்றும் வருவதால் நன் ருய் நடைபெற்று உயர்ந்தேறும் என்று உறுதியாக எண்ணுகிறோம். எல்லாம் வல்ல இறைவனும் அருள்புரிக.

தமிழர்நேசன்—இப்பெயர்கொண்டபத்திரிகையொன்று கிடைக் கப் பெற்றோம். இது தக்க பிரமுகர்களும் ஜனத்தலைவர்களும் ஆனவர்களால் ஆரம்பிக்கப் பெற்று, இதனை நடத்தவும் தமிழர்க் குரிய நன்மையைத் தேடவும் "தமிழர் கல்விச்சங்கம்" என்ற ஒரு சங்கம் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறது. இச்சங்கமும் சென்னை மாநகரில் ஸ்தாபிக்கப்பெற்றுப் பத்திரிகையும் அங்கிருந்தே வெளி யாகியும் வருகின்றது. இச்சங்கத்துக்கு மேலதிகாரிகளாகக் கனம் ஜஸ்டிஸ் சதாசிவையர், கனம் ராமநாதபுரம் ராஜாஅவர்கள், கனம் ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள், திவான்பகதூர் ஸ்வாமிக்கண்ணுபிள்ளை, ராவ் பகதூர் பவாநந்தம்பிள்ளை, மிஸ்டர். கே. பி. ராமநாதன் எம். ஏ, மிஸ்டர் டி. வி. கோபாலசாமிமுதலியார், மிஸ்டர் டி. ஆர். வெங்கட ராமசாஸ்திரிகள், சுதேசமித்திரன் ஆசிரியர்முதலியவர்கள் ஏற்பட் டிருக்கிறார்கள். தமிழிலும் தமிழ்நாட்டிலும் அபிமானமுள்ளவர்கள் இச்சங்கத்திற் சேர்ந்து இதனை வலியுறுத்திவரவேண்டுவது அவசி யமே. சங்கத்தின் பங்கொன்றுக்கு 50 ரூபாய் மதிப்பேற்பட்டிருக் கிறதாயினும் சேரும்போது 10 ரூபாய்கொடுத்தாற் போதுமானது. பாக்கித்தொகையின் அவசியம் உடனே ஏற்படமாட்டாதுஎன்று சங் கஸ்தாபகர்கள் நினைக்கிறார்களென்றும் தெரியவருகிறது. பத்திரிகை யின் முதல் ஸஞ்சிகையாகிய ஆவணிமீ ஸஞ்சிகையில், "பிரகிருதி யில் மனிதனுடைய ஸ்தானம்" எனபதைப்பற்றி மிஸ்டர் ஏகாம் பரநாதன் எம். ஏயும், "ரஸாயனசாஸ்திரத்" தைப்பற்றி மிஸ்டர் வீரராகவையர் எம், ஏயும், "பதார்த்தகுணஜிசபங்க" ளைப்பற்றி மிஸ்டர் அநந்தபத்மநாபராவ் எம். ஏ. எல். டி. யும், 'வைசூரி'யைப்

பற்றி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் எம். பி யும், 'ஐரோப்பா கண்டத்தின் பழைய சரித்திரம்' என்பதைப்பற்றி மிஸ்டர் டி. எஸ். சுப்பிரமணியஐயர் எம். ஏயும், 'சுவாதிசரிதை யை' மிஸ்டர் அ. மாதவையாவும், 'மாடுகளை விருத்திபாக்கி வளர்ப்பது' என்பதைப்பற்றி மிஸ்டர் சுப்பிரமணியமுதலியாரும், 'அரிச்சந்திரன்' கதையை நாடகரூபமாக ராவ்பகதூர் பவாநந்தம்பிள்ளை அவர்களும் நன்ருகவும் விளக்கமாகவும் எளியநடையில் எழுதியிருக்கிறார்கள். இருபாலரும் படித்து அறிந்துகொள்ளத் தக்கதே. 88 பக்கங்களும் சித்திரப்படங்களும் கொண்டுள்ளது. இப்பத்திரிகைக்கு வருஷ சந்தா மூன்றே ரூபாய்தான். வேண்டுவோர் காரியதரிசி மூலம் பெறலாம்.

தொழில்;—இதனது ஐப்பசி மாதத்து ஸஞ்சிகை வரப்பெற்ருேம். இதனுள் வழக்கம்போலப் பலதொழின்முறைகள் விவரிக்கப் பெற்றிருக்கின்றன. 'இரும்பு ஸம்ஹதகதொழிலின் சரித்திரம்' 'தேங்கா யெண்ணெயிலிருந்து வெண்ணெயுண்டாக்கல்' என்னும் விஷயங்கள் நன்ருகவும் அநுபவ முறையாகவும் எழுதப் பெற்றிருக்கின்றன.

கமலாஸனி:—இதனது ஐப்பசிமாதத்து ஸஞ்சிகையாகிய இதனுள் பல அரியவிஷயங்கள் எழுதப்பெற்றிருக்கின்றன. "காவிரிப் பூம்பட்டின சரித்திரம்" நல்லஆராய்ச்சியுடன் எழுதப் பெற்றிருக்கிறது.

பிரஜாநுகூலன்:—இதனது நவம்பர் மாதத்து ஸஞ்சிகையுள் இதனது பத்திராதிபர் மனோதத்வ முன்னேற்றத்துக்கு வேண்டிய குறிப்புகளை எழுதியிருப்பதுடன், தாம் திராவிடாபிமானியின் சம்பந்தத்திலிருந்து விலகிக்கொண்டுள்ள விஷயத்தையும் குறித்திருக்கிறார்.

பூரணசந்திரோதயம்:—இதனது ஐப்பசி மாதத்துச் சஞ்சிகை வரப் பெற்ருேம். இதனுள் பல அரியவிஷயங்கள் தக்கவர்களால் எழுதப் பெற்றிருக்கின்றன. "பிரபஞ்சவித்யை" என்னும் அரிய விஷயம் நன்ருக எழுதப்பட்டு வருகிறது.

கொசுகு கொல்லி:—இது ஒரு சூர்ணம். இந்தப் பொடியை யுபயோகித்தால் கொசுக்கள் நாளடைவில்வராமல் ஒழிகின்றன.

இதனை யநுபவத்தில் கண்டோம். இந்தப்பொடியில் பூச்சிகளைக் கொல்லும் பலமருந்துச்சரக்குகளும் வாசனைச்சாமான்களும்சேர்ந்திருக்கின்றன. இதன் புகையினால் நிறைந்துள்ள இடம் சுவாஸனையாலும் நிறைந்திருக்கும். ஒரு இருப்புச்சட்டியில் நெருப்புத் தழல்கொண்டு கொசுஉள்ளவிடத்தில் வைத்துப்பொடியைத் தூவி விட்டால் உள்ளகொசுக்கள் அழிவதுடன் வெளிக்கொசுக்களும் வாரா. அறைகளும் அடிக்கடி சுத்தப்படுத்தப்படல் நலமேயாகும். இதன்விலை பொட்டணம் ஒன்றுக்கு அணா 8. வேண்டுவோர் R. R. கோபாலராவ் ஜர்னலிஸ்ட் காரைக்குடி என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீ:

பலவகைக் குறிப்புகள்.

திருநெல்வேலிஜில்லா பாளையங்கோட்டையில் உள்ள சி. எம். எஸ். குருட்டுப்பெண்களின் பள்ளிக்கூடத்துக்காக ஒரு வைத்தியசாலை கட்டிக்கொள்ளும்பொருட்டு அரசாங்கத்தார் 28—9—17-ல் ரூ 4190-வரையில் ஸாங்ஷன் செய்திருக்கிறார்கள்.

சித்தூரிலுள்ள உபாத்தியாயினிபள்ளிக்கூடமாகிய அமெரிக்கன் ஆர்க்காட்டு மிஷன் ட்ரெயினிங் ஸ்கூலைப் பெரிதாகக் கட்டிக்கொள்ளும்பொருட்டு அரசாங்கத்தார் 6—10—17-ல் ரூ 6445— ஸாங்ஷன் செய்திருக்கிறார்கள்.

மதுரையில் பசுமலை அமெரிக்கன்மிஷன் ஹைஸ்கூலுக்கு ஒரு குளமும் கக்கூசும் கட்டிக்கொள்வதற்கென்று அரசாங்கத்தாரால் 22—10—17-ல் கட்டிடச் செலவில் பாதிக்கு மேற்படாமலும் ரூ 4185-க்கு மேற்படாமலும் இருக்கும் தொகை ஸாங்ஷன் செய்யப்பெற்றிருக்கிறது.

உ

விடுகதை விநா.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

அஞ்செழுத்தா லொருபெயரா மதனிடையா மக்கரங்க ளகன்றால் வெற்பாம்
பிஞ்சுமுன்மூன் றெழுத்தின்றேல் விரிதலொடு முதலிரண்டும் விரவக் காணில்
வஞ்சியா வொளிபரப்பு மிரத்தினமா மீற்றிரண் டெழுத்து நீங்கின்
வஞ்சியர்க ளிடைக்கணிந்து மிதனைத் தெளிவுபெற வரையீர் மன்றே.

ப. மு. பழநியப்பன்
க. வி. கலாசாலை மாணவன்
கோனாபட்டு.